அப்பம் வடை தயிர்சாதம்

CPL 665142

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்

701/09
39

முதற் பதிப்பு : டிசம்பர், 2001
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு 2004
முன்றாம் பதிப்பு : ஆக்ஸ்ட் 2008
உரிமை : ஆசிரியருக்கு ©
665142

APPAM VADAI THAYIR SADHAM
894.8113
BAL

By : Balakumaran

First Edition : December, 2001
Third Edition : August 2008

வெளியீடு : விசா பப்ளிகேஷன்ஸ்

No. of Pages : 368

Paper used : 11.6 N.S Book Print

விலை ரூ. 115.00

Available at :
THIRUMANGAL NILAYAM
New No.16, Old No.15,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017.
Phone : 24342899 / 24327696

கிடைக்குமிடம் :
திருமகள் நிலையம்
புதிய எண்.16, பழைய எண்.55,
வெங்கட் நாராயணா ரோடு,
தி.நகர், சென்னை - 17.
போன் : 24342899, 24327696

Laser Typeset By : Sivaa Graphics, Chennai-26. Ph : 4730810

Printer at : Saguntala Process . 94447 26964.

5 - FEB 2009
CHENNAI

அப்பம் வடை தயிர் சாதம்

1

ஜெயிக்கப் போகிறோம் என்கிற உணர்வே மிகச் சந்தோஷமாக இருந்தது. கீழே இருந்து குரல்கள் 'மேலே போ, போ...' என்று உற்சாகமூட்டின. இன்னும் பத்தே எட்டில் சுபத்ரா உச்சியைத் தொட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் வழுக்குமரத்தை இறுக்கக் கட்டிக் கொண்டிருந்தாள்.

வழுக்குமரம் முழுவதும் எண்ணெயும் பஞ்சாமிர்தமும் நிரவிக் கிடந்தன. தேன் வாசனையும், பழவாசனையும் தூக்கலாக இருந்தன. ஒரு வாழைப்பழம் நசுங்கி, வழுக்குமரத்தில் வழுக்கி சுபத்ராவுக்கு அருகே இருந்தது.

மறுபடியும் கீழே இருந்து மேலே போகச் சொல்லி உற்சாகக் குரல்கள் எழுந்தன. சுபத்ரா கீழே பார்த்தாள். வெகு ஆழத்தில் வெறும் தலைகளாய்ப் பல நூறு பேர் இருந்தார்கள். அப்பாவின் "விடாதே, போ" என்ற குரல் தெளிவாகக் கேட்டது.

சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு, மறுபடியும் கால்களால் வழுக்குமரத்தை இறுக்கிக்கொண்டு, கைகளால் கட்டிக் கொண்டு மார்பு உராயும் வண்ணம் தழுவிக்கொண்டு வழுக்குமரத்தில் ஏறினாள். ஏறியது வரை வழுக்குமரத்தில் அவ்வளவு எண்ணெய் இல்லை. உச்சியில் எண்ணெய்ச் சட்டியை வைத்துக் கவிழ்த்திருப்பார்கள் போலிருக்கிறது.

மேலே போகப் போக, எண்ணெய் அதிகம் இருந்தது. வாழைப்பழக் கூழ் நிறைய இருந்தது.

நகர்ந்தாள். வழுக்கியது. மறுபடியும் பழைய இடத்துக்கே வந்தாள். இந்த முறை இன்னும் இறுக்கிக் கட்டிக்கொண்டு அசைத்து மேலே ஏறினாள். உடம்பு முழுவதும் வழுக்குமரம் பட்டது. வழுக்குமரத்தின் எல்லா இடத்திலும் உடம்பு நகர்ந்து இறுகிக் கொண்டது. சுபத்ரா உதடு கடித்து, மேலும் வழுக்குமரத்தில் ஏறினாள். இன்னும் நகர்ந்தாள்.

வாய்க்கும் வழுக்குமரத்துக்கும் நடுவே எண்ணெய் சலசலவென்று நகர்ந்தது. இரண்டங்குல ஆழத்துக்கு வழுக்குமரத்தின் பிசின் தோள் வழியாகவும் புஜத்தின் வழியாகவும் வழிந்தது.

திடீரென்று சுபத்ரா குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டாள். உடுத்தியிருக்கிறோமோ, இல்லையோ என்று யோசித்தாள். உடையே காணோம். உடையே இல்லாமல் ஏறிக் கொண்டிருப்பதாய்ப் பட்டது.

"ஐயய்யோ... கீழே இருப்பவர்களுக்கு எல்லாம் தெரியுமே..." என்று கவலைப்பட்டாள். வழுக்கு மரத்தி லிருந்து சட்டென்று நாலடி கீழே இறங்கினாள்.

கீழே உள்ளவர்கள் 'ஓ'வென்று கூச்சலிட்டார்கள். பயத்தில் அலறினார்கள். இறுக்கி, இறுக்கி மிகக் கெட்டியா கப் பிடித்துக்கொண்டு சுபத்ரா வழுக்கலை நிறுத்தினாள்.

உடுத்திக்கொண்டாலென்ன, உடுத்திக் கொள்ளாம லிருந்தாலென்ன...? மானத்தோடு இருந்தாலென்ன, மானம் கெட்டுப் போனாலென்ன...? உச்சிக்குப் போக வேண்டும்- எப்பாடுபட்டாவது... எப்பாடுபட்டாவது உச்சியைத் தொட்டு, அங்கிருக்கிற மூட்டையைப் பறித்து எடுக்க வேண்டும். இறுக்கி, இறுக்கி இறுக்கி... சுபத்ரா கட்டித் தழுவியபடி பற்றிப் பிணைந்தபடி, வழுக்குமரத்தை இறுக்கியபடி, முகத்தை உரசியபடி, நெஞ்சு தேய்ந்தபடி,

5 - FEB 20

வயிறு ஒட்டியபடி, இடுப்பு பின்னியபடி வழுக்குமரத்தின் மீது ஏறினாள். இன்னும் ஒரு அடி பளிச்சென்று உடம்பு பலம் சேர்த்து எகிறினாள். உச்சியிலிருக்கிற வளையத்தைப் பற்றிக் கொண்டாள். வளையத்தில் ஏதோ மூட்டை இருந்தது. பிடித்து இழுத்து அறுத்துக் கீழே போட்டாள்.

வெற்றி... வெற்றி... வெற்றி என்று அப்பா கூச்சலிடுவது தெரிந்தது. சுபத்ரா சந்தோஷமானாள். அந்த வழுக்கு மரத்துக்கு முத்தம் கொடுத்தாள். 'என்னை இவ்வளவு தூரம் மேலே ஏற அனுமதித்தாயே, உனக்கு நன்றி' என்று தன் முகவாயை அந்த வழுக்குமரத்தின் உச்சியில் வைத்துக் கொண்டாள். கட்டித் தழுவியபடி இளைப்பாறினாள். மெல்லத் தளரவிட்டாள். வழுக்கு மரத்திலிருந்து மெல்ல வழுக்கிக் கொண்டு கீழிறங்கினாள்.

அந்த நழுவலில் மனம் நனவுக்குத் திரும்பியது. கனவும் இல்லாமல், நனவும் இல்லாமல் ஒரு இடத்தில் படுத் திருப்பது புரிந்தது. வழுக்குமரத்தை அணைத்துக் கொண்டிருந்த உணர்வு இன்னும் நெஞ்சில், வயிற்றில், இடையில், தொடையில், முழங்காலில் இருந்தது.

எப்படிப் பின்னிக்கொண்டிருந்தோம்...? இந்த வழுக்கு மரத்தை ஆபாசமாகத் தழுவியபடி ஏறினோம். நாம் உடுத்திக்கொண்டிருந்தோமோ, இல்லையா என யோசித்தாள். தடவிப் பார்த்தாள். உடை இருந்தது.

நல்லவேளை... உடுத்திக் கொண்டிருந்தோம் என்று நினைத்தாள். நெஞ்சு முழுவதும் வழுக்குமரத்தின் அழுத்தம் பரவிக் கிடந்தது. அவள் நெஞ்சையும் தடவிக் கொண்டாள். கன்னத்தை நீவிக்கொண்டாள். சட்டென்று நனவு இன்னும் அதிகமாகியது.

"ஏய்... எல்லாம்... கனவா...?" என்று வாய்விட்டுச் சொன்னாள். எழுந்து உட்கார்ந்தாள். அப்போதும் வழுக்குமரத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் உணர்வு தொடைகளில் இருந்தது.

"இது என்ன கனவு...? புத்தியைவிட்டுக் கனவு போக மாட்டேனென்கிறதே... என்ன சொல்கிறது இது...?" என்று யோசித்தாள்.

டார்ச்லைட்டை எடுத்து வெங்கடாசலபதி படத்தின் மீது அடித்தாள்.

"கேசவா, நாராயணா, மாதவா, மதுசூதனா..." என்று சுவாமியை விளித்தாள். திரும்பிக் கடிகாரம் பக்கம் டார்ச்சைத் திருப்பினாள்.

மணி மூன்றேகால். இது சுக்கிரன் உதிக்கும் நேரம். போய் பால்கனியில் நின்று, சென்னை நகரைப் பார்க்கலாமா...?

வேண்டாம். வாய் கொப்பளிக்கும் மருந்தைக் கொண்டு வாய் கொப்பளித்துச் சரிசெய்து கொள்வோம். வாய் கொழகொழப்பாக இருக்கிறது என்று நினைத்தபடி கீழே இறங்கினாள். பாத்ரூமுக்குள் நுழைந்தாள். வாய் கொப்பளித்தாள். முகம் கழுவிக் கொண்டாள். வயிறு லேசாகியது. ஈரக்கால்களோடு மறுபடியும் படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.

"இன்னிக்கு ஜேம்ஸ்பாண்டுக்கு பிறந்த நாள்... மணி மூணு இருபது. விடியும் வரை நண்பர்களோடு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருப்பேன்." என்று ஜேம்ஸ் பாண்ட் சொன்னார்.

இப்போதே இன்டர்நெட்டில் ஜேம்ஸ்பாண்டை அழைத்துப் பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னாலென்ன...? -உட்கார்ந்து கம்ப்யூட்டருக்கு உயிரூட்டினாள்.

கம்ப்யூட்டரின் சின்னத்திரை விரிந்தது. இன்டர்நெட்டுக் குள் நுழைந்தாள். "சிஸ் இண்டியா டாட் காம்" என்று டைப் செய்தாள். அந்த ஜன்னல் திறந்தது. அந்த ஜன்னலில் அரட்டை என்று போடப்பட்டிருந்த பகுதிக்குள்

நுழைந்தாள். சில விநாடிகளில் யார், யார் அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது.

முதல் பெயரே ஜேம்ஸ்பாண்ட் என்று இருந்தது. நிலா, ஸ்ரீவத்ஸன், மூர்த்தி, வீரப்பன், சூர்யா, பிரியங்கா, அனிதா என்று பல பேர் வரிசையாக இருந்தார்கள்.

"ஹாய் எவ்ரிபடி..." என்று எல்லோருக்கும் வணக்கம் சொன்னாள். ஜேம்ஸ்பாண்டைத் தனியே அழைத்தாள். ஜேம்ஸ்பாண்ட் இஸ்ரேலில் வேலை செய்பவர்.

"மனம் கனிந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள். இனிமையான, சந்துஷ்டியான, மகிழ்ச்சியான வருடமாக இது தொடர என் பிரார்த்தனைகள்." என்று அவருக்கு வாழ்த்துக்கள் சொன்னாள்.

தனியே அழைத்து அவள் வாழ்த்துக்கள் சொன்னது ஜேம்ஸ்பாண்டுக்கு நெகிழ்ந்து விட்டது போலும். "இந்த அர்த்தராத்திரியில் எனக்காக எழுந்திருந்து வாழ்த்துக்கள் சொல்கிறாயே... இந்த அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்...? எவ்வளவு வருடமாக உன்னோடு பேசிக்கொண்டிருக்கிறேன். உன்னைப் பார்த்ததில்லை. இங்கே பேசுகிற யாரையும் நேரே சந்திக்க வேண்டுமென்று நான் விருப்பப்பட்டதில்லை. ஆனால், இந்தியாவுக்கு வந்தால் உன்னைப் பார்க்க வேண்டும். உன்னுடன் பேச வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நீ நலமாக இருக்கவும், விரைவில் உனக்குத் திருமணமாகவும் எல்லாம் வல்ல இறைவனை நானும் பிரார்த்திக்கிறேன்." என்று நெகிழ்வாகப் பதில் சொல்ல, அவள் நன்றி தெரிவித்தாள்.

பேச்சு சட்டென்று திசை திரும்பியது.

"சுபத்ரா, நீ கே.கே. நகரில்தானே இருக்கிறாய்...?"

"ஆமாம் சார்..."

டைப் அடிப்பது ஆங்கிலத்தில் இருந்தாலும், வாக்கியங் களெல்லாம் தமிழில் இருந்தன.

"கே.கே. நகரில் உள்ள ஒரு பையனுக்கு பிட்ஸ்பார்க் ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்திருக்கிறது. ஷங்கர் மகாதேவன் என்று பெயர் போட்டிருக்கிறது. ஷங்கர் மகாதேவன் என்ற பெயரை, நீ எனக்கு ஏதோ சொல்லியதாக ஞாபகம்...?"

அவர் டைப் செய்ய, எதிரே திரையில் தெரிந்தது.

ஜேம்ஸ்பாண்ட் சொந்தப் பெயர் அல்ல. புனைப்பெயர். எதனாலேயோ இன்டர்நெட்டில் பேசுகிறவர்களெல்லாம் புனைப்பெயரிலேயே மறைவாகப் பேசுகிறார்கள். ஆனால், சுபத்ரா தன் பெயரை மறைத்துக் கொள்ளாமல்தான் பேசினாள். ஜேம்ஸ்பாண்டுக்குத் தன்னுடைய வீட்டு விலாசம் கூடக் கொடுத்திருந்தாள். டெலிபோன் நம்பர் தெரிவித்திருந்தாள்.

ஜேம்ஸ்பாண்ட் பெரிய படிப்பாளி போலிருக்கிறது. யூதர்களைப் பற்றியும், யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் உண்டான சண்டை பற்றியும் மிக விரிவாக அவளுக்கு இன்டர்நெட் மூலம் கற்றுக்கொடுத்தார். அந்த விஷயத்தை, அவர் சொல்கிற விதம் வைத்தே அவர் படிப்பும், ஞானமும் அவளுக்குத் தெரிந்தது.

ஜேம்ஸ்பாண்ட் மட்டுமில்லை... நிலா, ஸ்ரீவத்ஸன் எல்லோருமே நல்ல நண்பர்கள்.

அபுதாபி ஸ்ரீவத்ஸன் சென்னைக்கு வந்து, சுபத்ராவை அவர் தங்கை கல்யாணத்துக்கு அழைத்துவிட்டுப் போனார். தங்கை கல்யாணத்துக்கு சுபத்ரா போக, சுபத்ராவை வீட்டில் எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். எப்போது கல்யாணம் என்று அவர் வீட்டில் எல்லோரும் சுபத்ராவை விசாரித்தார்கள். ஸ்ரீவத்ஸனுக்குக் கல்யாணம் பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

உலகத்தின் எந்தப் பகுதியிலோ இருக்கிறவர்களெல்லாம் சொடுக்கு நேரத்தில் தொடர்பு கொள்ளும் அற்புதமான விஷயமாக இன்டர்நெட் இருக்கிறது.

"ஷங்கர் மகாதேவன் எனக்குத் தெரிந்த பையன்தான். என்ன வேண்டும் ஜே.பி.?" என்று சுபத்ரா கேட்டாள்.

"அந்த ஷங்கர் மகாதேவனுக்கு பிட்ஸ்பார்க்கில் உள்ள மருத்துவமனையில் வேலை கிடைத்திருக்கிறது. கம்ப்யூட்டர் புரோகிராமராகப் பதினோரு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஆறாவது இடம் ஷங்கர் மகாதேவனுக்கு. தென்னிந்தியாவில் இருந்து ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்."

"இந்த விஷயம் எப்படித் தெரியும் ஜே.பி..?" -சுபத்ரா வினவினாள்.

"இப்போதுதான் இந்த வேலைக்கு விண்ணப்பம் போட்டிருந்த பையன், என்னை அந்த ஜன்னல் திறந்து பார்க்கச் சொன்னான். நான் பார்த்தபோது இந்தத் தகவல் கிடைத்தது. அந்தப் பையனுக்கு வேலை கிடைக்கவில்லை. ஷங்கர் மகாதேவன், கே.கே.நகர் என்று போட்டிருந்ததால் உன் ஞாபகம் வந்தது..."

"அந்த ஜன்னலின் விலாசம் சொல்லுங்கள் ஜே.பி.." சுபத்ரா பரபரத்தாள். "விலாசம் குறித்துக் கொல்கிறேன் ஜே.பி..! நான் நாளை மறுபடியும் சந்திக்கிறேன். மறுபடியும் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.." என்று சொல்லிவிட்டு, அடுத்த ஜன்னலுக்குத் தாவினாள். திறந்தாள்.

பிட்ஸ்பார்க் மருத்துவமனை சின்னத் திரையில் விரிந்தது. அதில் 'செய்தி' என்ற இடத்தைத் தொட, அதில் ஒரு அறிக்கை வெளியாகியிருந்தது.

ஆறாவது இடத்தில் "ஷங்கர் மகாதேவன், இருநூற்று நாற்பத்து மூன்று, பன்னிரண்டாவது செக்டார், கே.கே. நகர்" என்று போடப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட

ஒவ்வொருவருக்கும் ஈ-மெயிலில் தனித்தனியாக உத்தி யோகத்துக்கான ஆர்டரும், விசாவும் அனுப்பப்பட்டிருப்ப தாகத் தெரிவித்திருந்தார்கள்.

கதவு திறந்து ஹாலுக்கு சுபத்ரா ஓடினாள். டெலிபோன் எடுத்து ஷங்கர் மகாதேவனைத் தொடர்பு கொள்ள முயற்சித்தாள்.

டெலிபோன் சரியாக வைக்கவில்லை போலிருக்கிறது. "தற்சமயம் உபயோகத்தில் இல்லை." என்று குரல் வந்தது. துண்டித்துவிட்டு, ஹாலில் படுத்திருந்த அப்பாவை மெல்ல உலுக்கி எழுப்பினாள்.

"என்னம்மா... என்ன ஆச்சு...?" -அப்பா திடுக்கிட்டு எழுந்தார்.

''ஷங்கருக்கு வேலை கிடைச்சிருக்குப்பா- பிட்ஸ்பார்க்ல..."

"எப்படித் தெரியும்...?"

"இன்டர்நெட்ல பார்த்தேம்ப்பா..."

"இத்தனை நேரம் இன்டர்நெட்லயா உட்கார்ந் திருந்தே...?

"இல்லைப்பா. என்னுடைய ஃப்ரெண்ட் ஜேம்ஸ் பாண்டுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லலாம்னு ஓப்பன் பண்ணினேன். ஜேம்ஸ்பாண்ட்தான் சொன்னார். 'கே.கே. நகர், ஷங்கர் மகாதேவனுக்கு வேலை கிடைச் சிருக்கு'ன்னு. அவர்கிட்ட விலாசம் கேட்டு, அந்த விண்டோ ஓப்பன் பண்ணினேன். ஷங்கருக்கு வேலை கிடைச்சது தெரிந்தது. ஈ-மெயில்ல ஆர்டர் அனுப்பிச் சிருக்கா அவா. ஷங்கர் வீட்டுக்கு ட்ரை பண்ணேன். போன் சரியா வைக்கலை போலிருக்கு."

"இப்போ என்ன செய்யணுங்கறே...?"

"வாப்பா... கொஞ்சம் போய் ஷங்கர்கிட்ட சொல்லிட்டு வந்துடலாம்..."

"கார்த்தால பார்த்துக்கலாமேம்மா..."

"நல்ல விஷயம்ப்பா... உடனே சொன்னா நன்னா இருக்குமில்லையா...? எடுத்தவுடனே நாப்பத்தஞ்சாயிரம் ரூபா சம்பளம்ப்பா. வீட்டுல அவா அப்பாவும், அம்மாவும் ரொம்ப சந்தோஷப்படுவா..."

"உடனே போகணும்கறயா...?"

"ஒரு அஞ்சு நிமிஷத்துல ரெடி ஆயிடமாட்டியா...?" -அவள் கெஞ்சினாள்.

அப்பா எழுந்திருந்தார். தள்ளாடினார். வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டார்.

சுபத்ரா சுடிதாருக்கு மாறித் தலையை ஒற்றைப் பின்னலாய்ப் பின்னி, முகத்தைத் துடைத்துக் கொண்டு நெற்றிக்கு இட்டுக்கொண்டு, மேலே லேசாய் பாடி ஸ்ப்ரேயைப் பரப்பிக் கொண்டு வாசலுக்கு ஓடினாள். ஸ்கூட்டரைத் தயாராக வைத்தாள். துப்பட்டாவை உதறி மேலே நன்கு போர்த்திக்கொண்டாள்.

அப்பா வெளியே வந்தார். இருவரும் நான்கு தெரு தள்ளியிருக்கிற ஷங்கர் வீட்டுக்குப் போனார்கள். வண்டியை ஸ்டாண்ட் போட்டு, "ஷங்கர்" என்று குரல் கொடுத்தாள். ஹார்ன் அடித்தாள்.

தெருவில் குரல் பெரிதாய் எதிரொலித்தது. இன்னும் இரண்டு முறை கூவினாள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் விழித்துக் கொள்வார்கள் என்று பட்டது. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு எப்போது தெரிய வேண்டுமோ அப்போது தெரியலாம். இப்போது தெரிய வேண்டாம். எனவே, ஷங்கரை மட்டும்... ஷங்கர் வீட்டில் உள்ளவர் களை மட்டும் அழைப்பது நல்லது என்று பட்டது.

வீட்டில் தோட்டக் கதவு பூட்டியிருந்தது. யோசித்தாள்.

எகிறி உள்ளே குதித்தாள்.

தெருவோடு போகிற கூர்க்கா ஒருவன் நின்று பார்த்தான். "என்ன...?" என்று அப்பாவைக் கேட்டான்.

"ஒரு செய்தி சொல்லணும். அதுக்காக வந்திருக்கோம்..."

"நல்ல செய்தியா, கெ ட செய்தியா...?" இந்தியில் கேட்டான்.

"நல்ல செய்தி..." என்று அப்பா சொன்னார்.

"அப்படியானால் நானும் இருக்கட்டுமா...?" என்று கூர்க்கா வாசலில் நின்றான்.

அப்பா கவலையோடு உள்ளே குதிக்கிற மகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுபத்ரா உள்ளே போனாள். மணிக்குமிழியை அழுத்தினாள்.

உள்ளே மணி ஒலிப்பது கேட்டது.

"யாரது...?" -ஒரு கிழவியின் குரல் எதிரொலித்தது.

மறுபடியும் மணிக்குமிழியை அழுத்த, இந்த முறை "யாரது...?" என்ற குரல் ஆங்குரலாக இருந்தது. உள்ளே அறைக்கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

ஷங்கர் மாடியில்தான் தூங்கிக் கொண்டிருப்பான். ஆனால், மாடி அமைதியாக இருந்தது.

ஷங்கரின் அப்பா கதவு திறந்து வந்தார். "யாரு...?" இன்னும் தூக்கக் கலக்கத்தோடு கேட்டார்.

"நான்தான் சுபத்ரா..."

"சுபத்ராவா... என்ன இந்த வேளையில்..."

"அப்பாவும் வந்திருக்கார்..." -சுபத்ரா எச்சரிக்கையாகப் பேசினாள்.

"என்ன சமாச்சாரம்...?" -அவர் பரபரத்தார்.

"ஒண்ணுமில்லே... பயப்படாதிங்கோ. ஷங்கருக்கு பிட்ஸ்பார்க் ஆஸ்பத்திரியில வேலை கிடைச்சிருக்கு. இப்போதான் அந்த விண்டோ திறந்து பார்த்தேன். பார்த்தவுடனே உங்களுக்கு போன் பண்ண ட்ரை பண்ணேன். போன் சரியா வைக்கலை போலிருக்கு. அதனால நேரா வந்து சொல்றேன்..."

"கடவுளே... இதுக்காக இந்த நேரத்துல ஓடிவரணுமா...? உன் அப்பாவையும் தொந்தரவு பண்ணணுமா...?"

அவர் கதவு திறந்தார். வேகமாக ஓடிப்போய்த் தோட்டக்கதவு திறந்து, சங்கிலியை உருவினார். கதவு திறந்து அப்பாவை வரவேற்றார்.

அப்பாவும் பெண்ணும் உள்ளுக்குள் போனார்கள்.

"யாரது...?" -ஒரு கிழவி எழுந்து நிற்க... ஷங்கரின் அப்பா, அவளுக்கு அருகே வந்தார்.

"ஷங்கருக்கு அமெரிக்காவுல வேலை கிடைச்சிருக்காம். இதை இந்தப் பொண்ணு சொல்ல வந்திருக்கு..."

"எந்தப் பொண்ணு...?"

"நம்மாத்துக்கு வருவாளே சுபத்ரா... அவ அப்பாவோட வந்திருக்கா..."

"என்னத்துக்கு ராத்திரியில வரணும்...?"

"ராத்திரிதானே செய்தி வந்திருக்கு. செய்தி வந்தவுடனே நேரா ஷங்கருக்கு சொல்லணும்னு வந்திருக்கா..." -என்று உரக்கச் சொல்ல, அவள் கைகுவித்து நெற்றிக்கு மேல் வைத்து சுபத்ராவை உற்றுப் பார்த்தாள்.

சுபத்ரா நாணத்தோடு கிழவி எதிரே நின்றாள். உனக்கு என்னடி அவ்வளவு அக்கறை என்பதுபோல் கிழவியின் பார்வை இருந்தது. ஆனால், சுபத்ரா அந்தப் பார்வையைவிட்டு விலகாமல் பதிலுக்கு ஆமாம்... எனக்கு அக்கறை இருக்கு அதனாலதான் என்பது போல் உறுதியாக நின்றாள்.

மாடியிலிருந்து ஷங்கரின் தம்பி இறங்கி வந்தான். விஷயம் கேட்டு மறுபடியும் மாடிக்கு ஓடினான். ஷங்கரின் அம்மா பின்பக்கம் போய்விட்டு, ஈரக்கால்களோடு உள்ளே வந்தாள்.

"ரொம்ப தாங்க்ஸ்..." என்று சுபத்ராவின் கைகளைப் பற்றிக் கொண்டாள். சுபத்ராவின் அப்பாவுக்கு வணக்கம் சொன்னாள்.

"நான்கூட கார்த்தால சொல்விக்கலாம்னேன். நல்ல நியூஸ்... என்னத்துக்குப்பா டிலே பண்ணனும். போய்ச் சொல்விடலாம்னு இவதான் சொன்னா. வந்து தோட்டக் கதவை அசைச்சுப் பார்த்தோம். யாரும் எழுந்திருக்கிற வழியா தெரியலை. அக்கம்பக்கத்துல இருக்கிறவா எழுந்துடுவாளோன்னு தோணித்து. அதனாலதான் தோட்டக் கதவைத் தாண்டி உள்ளே குதிச்சு உங்களைக் கூப்பிடும்படியா ஆயிடுத்து..." -சுபத்ராவின் அப்பா மன்னிப்புக் கேட்கும் குரலில் சொன்னார்.

"தப்பேயில்லை. ஷங்கர் இந்த வேலையை ரொம்ப எதிர்பார்த்துண்டிருந்தான். எங்களுக்கும் ரொம்ப ஆசையா இருந்தது. இந்த வேலை கிடைச்சு, அவன் கொஞ்சம் தலைதூக்கினான்னா, நாங்க இன்னும் செழிப்பாயிடுவோம்..." என்றாள் ஷங்கரின் அம்மா.

"ஆமா... எடுத்தவுடனே ஆயிரம் டாலர் ஸ்டைஃபண்டு சொன்னாளே... ஆறு மாசத்துல இன்னும் சம்பளம் ஜாஸ்தி ஆகுமாமே...?" என்றாள்.

"ஆமாம்... ஆயிரம் டாலர்னா நாப்பத்தஞ்சாயிரம் ரூபா. ஆரம்பத்துல கொஞ்சம் செலவு இருக்கும். போகப் போக அவ்வளவு செலவு இருக்காது. சம்பளமும் ஜாஸ்தி ஆகும்..." என்றாள் சுபத்ரா.

"தங்கறது போக்குவரத்து கஷ்டமோ...?"

"அதுவுமில்லை. பெரிய ஹால்ல கட்டில், டேபிள், பீரோ கொடுத்துடுவா. இவா தங்கிண்டு, எப்ப வேணாலும் வேலை பார்க்கலாம். தினமும் அந்த ஆஸ்பத்திரி ரிப்போர்ட்டை இவா தயார் பண்ணணும். அதுதவிர, ஷங்கருக்கு இது ரொம்ப தெரிஞ்ச வேலை. மெட்ராஸ்ல அவன் பண்ணிக்கிட்டிருந்த வேலை. டெக்னிக்கலா இந்த டேர்ம்ஸ் பத்தி அவனுக்கு ரொம்ப நன்னா தெரியும். பி.எஸ்ஸி. பயோகெமிஸ்ட்ரி படிச்சுட்டு, எம்.சி.ஏ. பண்ணதுக்குக் கைமேல் பலன் கிடைச்சது..." ஷங்கரின் அப்பா மிகுந்த சந்தோஷத்தோடு பேசினார்.

சுபத்ராவைப் பற்றி இழுத்து, அருகே உட்கார வைத்துக் கொண்டார்.

ஷங்கர் தூக்கக் கலக்கத்தோடு வந்தான்.

"ஹாய்..." என்று சுபத்ராவைப் பார்த்துக் கையசைத்தான்.

சைக்கிளில் அரைபெடல் அடித்து அலைந்த பையன்... கிரிக்கெட் பந்து பட்டு நெற்றி பொத்துப்போய் அலறிய பையன்... அக்காவின் கல்யாணத்தில் வேட்டி கட்டி முன்னும் பின்னும் அலைந்த பையன், சபரிமலைக்கு மாலை போட்டுக்கொண்ட நாற்பத்தாறு பேரைக் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போய் வந்த பையன்... இப்போது நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளத்துக்கு வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகிறான். இன்னும் நாலு வருடங்களில் இதுபோல் மூன்று மடங்கு சம்பாதிக்கப் போகிறான்.

சுபத்ராவின் அப்பா, அந்த ஷங்கர் மகாதேவனை வியப்போடு பார்த்தார்.

2

வருகிறாயா என்று கேட்டதற்கு, வருகிறேன் என்று தலையாட்டியது ஒரு சம்பிரதாயமே தவிர, உண்மையாக நிகழும் என்று சுபத்ரா எதிர்பார்க்கவில்லை. விடிகாலை வந்து தகவல் சொன்னதற்கு நன்றி சொல்லும் விதமாய், ஷங்கர் வீட்டிலிருந்து கேசரி வந்திருந்தது. சுடச் சுட குட மிளகாய் பஜ்ஜியும் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். ஷங்கர்தான் அவற்றையெல்லாம் எடுத்து வந்திருந்தான்.

"எதுக்குடா இதெல்லாம்...?" -சுபத்ராவின் அப்பா கேட்டார்.

"தெரியலை மாமா... எங்கம்மா ரொம்ப பர்ட்டிகுலரா சுபத்ராகிட்டயும், அவ அப்பாகிட்டயும் சொல்லிக் கொடுத்துட்டுவான்னு அனுப்பிச்சா. சுபத்ரா, சுபத்ரானு எங்க வீடு கொண்டாடறது மாமா. இப்போ நான் அமெரிக்கா போறது பெரிய விஷயமா இல்லை... இவ சுவரேறிக் குதிச்சா பாருங்க, அதுதான் வீட்ல இப்போ பேச்சா இருக்கு..." -சொல்லிவிட்டுச் சிரித்தான் ஷங்கர்.

"பிட்ஸ்பார்க் ஆஸ்பத்திரி, அமெரிக்கன் கான்சுலேட் ஜெனரலுக்கும் ஒரு காப்பி அனுப்பறது. அதனால, இந்த ஜெராக்ஸ் காப்பி வெச்சு அமெரிக்கன் கான்சுலேட்டுக்கு அனுப்பிச்சா, ஒரு குறிப்பிட்ட தேதிக்கு நம்மை போன் பண்ணி, வரச்சொல்லி கையில விசா கொடுத்துடுவாங்க. வாசல்ல க்யூல நிக்கறதெல்லாம் இல்லை..." என்றான்.

"பாஸ்போர்ட்லாம் வெச்சுண்டிருக்கியோன்னோ...?" -சுபத்ரா அப்பா கேட்டார்.

"சிங்கப்பூர் போயிட்டு வந்திருக்கேன் சார்... அங்கே ஒண்ணரை மாசம் வேலை செஞ்சிருக்கேன். அதனால, அமெரிக்கா போறது அவ்வளவு பரபரப்பா இல்லை..."

"எப்ப கிளம்பணும்...?"

"இருபது நாள்ல வந்து ஜாயின் பண்ணச் சொல்லியிருக்கான். விசா கிடைச்சதும் டிக்கெட் புக் பண்ணனும்..."

"டிக்கெட்டுக்கெல்லாம் ஆரம்பத்துல நாம காசை இழக்கணுமோ..."

"ஆமா... ஆனா, எதுவும் பிரச்னை இல்லை. இப்ப வேலை செய்கிற கம்பெனியில ரிசைன் பண்ணினாக்க, ஒரு வருஷத்து சேமிப்பு கையில கிடைக்கும்..."

"தெரியாத இடத்துக்குப் போறோம்னு கவலையா இருக்கா...?"

"இல்ல சார்... அதுவும் இல்ல... நிறைய பேர் போயிட்டு வந்து, நிறைய விஷயம் சொல்லி, அமெரிக்கா என்னமோ பார்த்த மாதிரியே இருக்கு. அதுவும் நியூயார்க், நியூஜெர்ஸி, பிட்ஸ்பர்க் இதெல்லாம் ரொம்பத் தெரிஞ்ச இடம் மாதிரி இருக்கு. நியூஜெர்ஸில நிறைய தமிழர்கள் இருக்கா. நியூயார்க்லயும் நிறையப் பேரைப் பார்த்துடலாம். பிட்ஸ்பர்க்ல அவ்வளவு இல்லை. இருந்தாலும், அந்த ஆஸ்பத்திரியிலேயே ஆறேழு பேர் இருக்கா. அதுல ரெண்டு பேர் கேரளா, நாலு பேர் தமிழ்நாடு. அதுவும் குறிப்பா சேலத்துலேர்ந்து ஒரு டாக்டர் போயிருக்கார். ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அவருக்கு அங்கே ரொம்ப மரியாதையாம். அவர் செலக்ட் பண்ணித்தான் நான் அங்கே போறேன்..."

"தங்கறதுக்கும், சாப்பிடறதுக்கும் சேலம் டாக்டரே இடம் கொடுப்பாரா...?"

"வேண்டாம் சார்... அது நன்னா இருக்காது. சுதந்திரமா இருக்க முடியாது. அவங்களுக்கும் கஷ்டம். சாப்பாடு

எதுவேணா சாப்பிடலாம். அதுக்கு நான் எப்பவோ தயாராயிட்டேன்..."

ஷங்கர் பேசுவதை சுபத்ராவின் குடும்பம் சுற்றி நின்று கேட்டுக் கொண்டிருந்தது.

"வேறு ஒண்ணுமே கிடைக்காது. மாமிசம்தான் அப்படின்னா என்ன பண்றது..?" -அம்மா முணுமுணுப்பாகப் பேசினாள்.

"சாப்பிட வேண்டியதுதான். அதே நேரத்துல மாமிசம் சாப்பிடறதுக்கு அலையவும் கூடாது. பிரட்டோ, பன்னோ, பிஸ்கட்டோ சாப்பிட்டுட்டு இருந்துடணும். சிங்கப்பூர்ல எனக்குச் சாப்பாட்டுப் பிரச்னை ஏற்படலை. ஆனா, அமெரிக்காவில சாதம் கிடைக்குமானு தெரியலை. இன்னும் இருபது நாள்ல சாதம், ரசம், குழம்பு பண்ணக் கத்துக்கப் போறேன். அங்க இருக்கற என் ஃப்ரெண்ட் ஒருத்தனோட போன்ல பேசினேன். எதுக்கும் யாரையும் நம்பிண்டு வராதே. எல்லாத்தையும் கத்துண்டு வா. நிறைய பொடி, ஊறுகாயெல்லாம் எடுத்துண்டு வான்னான். அதனால சமையல் மூட்டை கொஞ்சம் பெரிசா இருக்கும்..." பேசிக்கொண்டே திரும்பினான்.

"சுபத்ரா, இன்னிக்கு ராத்திரி நாங்க எல்லோரும் மாயவரம் போறோம். உன்னை வர்றியான்னு கேட்கச் சொன்னா..."

"எல்லோரும்னா..?" என்று கேட்டாள் சுபத்ரா.

"அப்பா, அம்மா, நான், பாட்டி, தம்பி எல்லோரும் போறோம். சுமோ ஏற்பாடு பண்ணியிருக்கு. நீயும் வர்றதா இருந்த வரலாம். ஸாரி, அவசியம் வரணும்..."

சுபத்ராவுக்கு உள்ளுக்குள் சந்தோஷம் பொங்கியது. அவள், அப்பாவின் முகத்தைப் பார்த்தாள். அப்பா, அம்மாவின் முகத்தைப் பார்த்தார்.

"அவசியமா ஷங்கர்..?" -அம்மா நிதானமாக அவனைப் பார்த்துக் கேட்டாள். "அவ கெட்டிக்காரி. அவளை அனுப்பறதுல எனக்கொண்ணும் ஆட்சேபணை இல்லை. உங்காத்துல ஏதும் தப்பா நினைச்சுக்கப் போறா..."

"வயசுக்கு வந்த பொண்ணை இன்னொருத்தரை நம்பி அனுப்பறாளே. இந்த வீடு எப்படிப்பட்டதா இருக்கும்..?னு எங்காத்துல நினைப்பாளோன்னு யோசிக்கிறேளா மாமி..? அந்த மாதிரி பயம் எதுவும் வேண்டாம். நான் ஏற்கனவே சுபத்ரா பத்திப் பூடகமா சொல்லிட்டேன்..."

சுபத்ரா திடுக்கிட்டாள்.

அப்பா லேசாக நிமிர்ந்து உட்கார்ந்தார். சுபத்ராவின் அம்மா விழிகள் விரிய அவளையே பார்த்தாள்.

"போய் ரெண்டு வருஷம் கழித்து என் கல்யாணம் பத்திப் பேசலாம். அப்படிப் பேசற பட்சத்தில் சுபத்ரா மாட்டேன்னு சொல்லிட்டா, மத்தவாளைப் பார்க்கலாம் அப்படின்னு சொல்லிட்டேன்..."

"என்ன சொன்னா...?" -அம்மா குரலில் பரபரப்பு இருந்தது.

"நல்ல குடும்பம், நல்ல பொண்ணு. கேட்கலாம், தப்பில்லைன்னு அப்பா சொன்னார்..."

"உங்கம்மா என்ன சொன்னா...?" -சுபத்ராவின் அம்மா அழுத்திக் கேட்டாள்.

" 'லவ்வா...?'னு கேட்டா. லவ் இல்லை. நல்ல ஃப்ரெண்ட்ஷிப்தான். ஒருவேளை, எனக்கு முன்னாடி என்னைவிட பெட்டர் வரன் வந்தா சுபத்ரா அவனைக் கல்யாணம் பண்ணிப்பா. எனக்காகக் காத்திருக்க மாட்டா அப்படின்னேன். எங்கம்மாவுக்கு நிம்மதியாயிடுத்து..."

"எதனால நிம்மதி..?" -சுபத்ரா முகத்தைக் கூர்மையாக வைத்துக் கொண்டாள்.

"என்னைக் கேட்காமல் கல்யாணம் பண்ணிண்டுட்டியா...? நான் பார்த்துச் சரின்னு சொல்ல வேண்டாமான்னு எல்லா அப்பா, அம்மாவுக்கும் இருக்கும். எனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்ற உரிமையைக் கொடுத்திருக்கா. இருந்தாலும், அவாளோட அப்ரூவல்ங்கறது ரொம்ப முக்கியமான விஷயம். அவாளுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்தா ரொம்ப சந்தோஷப்படுவா. நான் அந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கேன். அதனால சந்தோஷப்படறா. சரி, சரி... பண்ணிக்கோன்னு சொல்ற கடைசி வார்த்தை எங்கம்மாவோடதா இருக்கணும். இது நியாயம்தானே சார்...?"

"ரொம்ப நியாயம்..." -சுபத்ராவின் அப்பா சொல்ல, வீடு அமைதியாக இருந்தது.

"இவ்வளவு தூரம் கேட்டுட்டதாலதான் பயமா இருக்கு. 'என்னடா இது... பொண்ணை அனுப்பிச்சு மயக்கறாங்கற தப்பான எண்ணம் வந்துடக்கூடாது இல்லையா...' -சுபத்ராவின் அம்மா சொன்னாள்.

"மயக்கறது, மயங்கறது அப்படியெல்லாம் இல்லை. எங்க வீடு பத்தி இன்னும் தெளிவா தெரிஞ்சுக்கலாம். என்னைப் பத்தி அவளும் அவளைப் பத்தி நானும் நன்னா தெரிஞ்சுக்கலாம். புஞ்சைன்னு ஒரு கிராமம். எங்க பாட்டியுடைய ஊர். அங்கே போய் புஞ்சை முனீஸ்வரனுக்குப் பூஜை பண்ணிட்டு, மாயவரம் வந்து அப்பம், வடை, தயிர்சாதம் வித்துட்டு, உடனே வண்டி ஏறிடறோம். அநேகமாக ராத்திரியே ஊர் திரும்பிடுவோம்..."

"இதென்ன வேண்டுதல்...? எனக்குப் புரியலை..." -சுபத்ராவின் அம்மா ஒரு சிரிப்போடு சொல்ல, ஷங்கரும் சிரித்தான்.

"எனக்கே ஜாஸ்தி தெரியாது மாமி. இப்படிப் பரவலா, சின்னச் சின்னதா தெரியுமே தவிர, எனக்கும் அதிகம் தெரியாது மாமி. எங்கேர்ந்து இந்த வம்சம் ஆரம்பிச்சது,

எதுக்காக இந்த வேண்டுதல்னு தெரியாது. அப்பா போகும்போது சொல்றேனிருக்கார். ப்ளீஸ் சுபத்ராவை அனுப்புங்களேன். நான் ஜாக்கிரதையா திருப்பிக் கொண்டுவந்து விடறேன்."

இந்த முறை சுபத்ரா பளிச்சென்று முன்வந்தாள்.

"அப்பா, நான் போயிட்டு வரேம்ப்பா. நான் வில்லேஜ் எதுவும் பார்த்ததேயில்லைப்பா. எனக்குப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு."

சுபத்ரா அப்பா சில விநாடிகள் யோசித்தார். "சரி" என்று சொன்னார்.

"எனக்கு நானூறு ரூபா கொடுப்பா..."

"எதுக்கு...?"

"நல்ல செருப்பு வாங்கணும். என்கிட்ட எல்லாம் ஹீல்ஸாவே இருக்கு. கிராமத்துக்கு ஹீல்ஸ் செருப்பு போட்டுண்டு போறது நன்னா இருக்காது..."

"என் கூட வா, நான் வாங்கித்தரேன்..." -ஷங்கர் சொல்ல, அவர்கள் இரண்டு பேரும் கிளம்பினார்கள்.

ஷங்கரின் மோட்டார் சைக்கிளில் இரண்டு பக்கமும் சுபத்ரா கால் போட்டுக் கொண்டு ஏறிக்கொள்ள, அவள் அம்மா கவலையோடும், சிறிது சந்தோஷத்தோடும் மகளைப் பார்த்தாள்.

இவன்தானா... கடைசியில், இவன்தான் இவளுக்கா...? இனி, இந்தப்பிள்ளை உள்ளே வந்ததும் பாபரப்பாய் எழுந்து நிற்க வேண்டுமா...? இவள் அப்பாவையும், அம்மாவையும் பார்த்து மரியாதையாகப் பேச வேண்டுமா...? நினைத்த மாத்திரத்தில் அவளுக்குள் மெல்லிய பயம் ஒன்று அப்பிக்கொண்டது.

பகவானே, சகலமும் நல்லபடியாய் முடியவேண்டும் என்று பிரார்த்தனை எழுந்தது. சுபத்ராவின் அப்பா, தன்

சம்மதத்தை அவர்கள் வீட்டுக்கு போன் செய்து சொன்னார்- பேசினார்.

அவர்களுடைய முன்னோர்களை நினைத்து, விநோத மான நேர்த்திக் கடனுக்காக அவர்கள் போய்க் கொண் டிருக்கிறார்கள். மகன் தலையில் கூடை வைத்து அப்பம், வடை, தயிர்சாதம் என்று கூவி விற்க வேண்டுமாம். ஷங்கருக்கு முன்னால் ஐந்தாவது தலைமுறை, மாயவரம் ரயில்வே ஸ்டேஷனில் அப்பம், வடை, தயிர்சாதம் விற்பார்களாம். சமையல்காரக் குடும்பமா...? என்று கேட்டதற்கு இல்லை- வைதீகம் என்று சொன்னார்கள். அந்த ஒரே ஒரு தலைமுறைதான் சமையல். அதற்கு முன்னும் இல்லை, பின்னும் இல்லை என்றார்கள்.

ஆனால், 'அந்தச் சமையல்தான் திசை திருப்பியது. பல்லாயிரம் பேருக்கு இலவசமாக உணவு கொடுத்த தான தருமங்கள்தான் இப்போதும் எங்களை வாழவைத்துக் கொண்டு இருக்கிறது.' என்று பெருமையோடு குரல் தழுதழுக்கப் பேசுகிறார்கள்.

அவர்களோடு கூடப் போய், அந்தக் கிராமங்களை யெல்லாம் பார்க்க வேண்டும் என்கிற ஆசை சுபத்ராவின் பெற்றோரிடமும் வந்தது. ஆனால், வெளியே சொல்ல வில்லை.

'ரொம்ப இளிக்க வேண்டாம். ரொம்ப ஈஷ வேண்டாம். கையைப் பிண்ணிண்டு காலை இடிச்சுண்டு தோளை உரசிண்டு உட்கார வேண்டாம். ரெண்டடி தள்ளியே பழகு' என்று மகளிடம் காதோரம் சொல்ல, சுபத்ரா உற்றுப் பார்த்துவிட்டு சரி என்றாள்.

மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்தபோதும் கொஞ்சம் விலகித்தான் உட்கார்ந்திருந்தாள். ஆனால் தெரு தாண்டியதும் கட்டிக்கொள்வாள் என்று தோன்றியது. அப்படி ஒரு பரபரப்பு அந்த உடம்பில் இருந்தது. இது

சரியா, தவறா என்று தெரியவில்லை. ஆனால், தடுக்க முடியாது.

ஆறாவது மாடியில் அந்த ஓட்டல் இருந்தது. லிஃப்டில் ஏறியதும் ஷங்கரும், சுபத்ராவும் சட்டென்று ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். உதடு பொருத்தி, முத்தமிட்டுக் கொண்டார்கள். மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று முடிந்ததும் பிரிந்தார்கள். லிஃப்ட் கதவு திறந்தது. வெளியே யாருமில்லை.

சுபத்ரா வெளியே போக முயற்சித்த போது, ஷங்கர் தடுத்தான். திரும்பவும் லிஃப்டில் 'தரை' என்கிற குமிழை அழுத்தினான். கதவு மூடிக்கொண்டது. லிஃப்ட் கீழிறங்க ஆரம்பித்தது. மறுபடியும் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள். தரைதொட்டு மறுபடியும் ஆறாவது மாடி வந்தார்கள். மெல்ல அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு, சுபத்ரா ஓட்டலுக்குள் வந்தாள்.

"உங்க வீட்ல நான் வர்றதை தப்பா நினைச்சுக்க மாட்டாங்களே...?"

"நினைச்சா நினைச்சுட்டுப் போகட்டும்..."

"நோ... தப்பா நினைக்கக்கூடாது..." -சுபத்ரா தீர்மானமாகச் சொன்னாள்.

"நினைப்பை நாம எப்படித் தடுக்க முடியும்...?"

"நீ பேசிப் பேசித் தடுக்க முடியும். அவ சாதாரண பொம்மனாட்டி இல்ல, ரொம்பப் பெரியவோ, நம்மோட வர்றதுனாலயே அவளை சீப்பா எடை போடாதே. அவ படிப்பு இப்படி, அவா வீடு இப்படி, அவா வசதி இப்படினு நீதான் சொல்லணும். நான் என்னவோ உன் பின்னாடி அலையற மாதிரி, உன்னை மயக்கற மாதிரி ஒரு இமேஜ் உங்கம்மாவுக்கு வரவே கூடாது..."

"வந்தா என்னாகும்...?"

சுபத்ரா கோபமாக அவனைப் பார்த்து முறைத்தாள்.

"வந்தால், உனக்கும் எங்கம்மாவுக்கும் தகராறு வரும். அந்தத் தகராறு உன்னை, உன் வேலையைப் பாதிக்கும். முட்டாள்தனமா எந்தக் கேள்வியும் கேட்காதே..." -அதட்டலாகச் சொன்னாள்.

ஷங்கர் புரிந்தது என்று தலையாட்டினான். "இப்போ நான் என்ன செய்யணும்...?" என்று கேட்டான்.

"எத்தனை சவரன் நகை போடுவா...னு உங்கம்மா கேட்டா, நீ என்ன சொல்வே...?"

"தெரியாதுன்னு சொல்வேன்..."

"நோ அப்படிச் சொல்லக் கூடாது. குறைந்தபட்சம் அம்பது சவரன் போடுவான்னு சொல்லு..."

"நிஜமாவா...?"

"மேலேயே போடலாம். நான் வேணும்னே குறைச்சுச் சொல்றேன். எப்படிக் கல்யாணம் பண்ணித் தருவா...?னு உங்கம்மா கேட்பா. மூணு மூணரை ரூபாய்ல நன்னா, கிராண்டா பண்ணித் தருவானு பளிச்சுனு சொல்லு. தயங்காமச் சொல்லு..."

"ஏய்... உண்மையைத்தான் சொல்றியா...?"

"யெஸ் எங்க வீட்டுல அப்படித்தான் திட்டம். எங்கம்மா கிட்டகூட சொன்னேன் பார்... என்னைவிட நல்ல வரன் வந்தா, சுபத்ரா ரொம்ப சர்வசாதாரணமா அவனைக் கல்யாணம் பண்ணிப்பானு. இதேவிதமான எண்ணத்தை உங்க அம்மாவுக்கும் கொடுக்கணும். பிள்ளையைப் பேசி மயக்கிட்டா, ஆடி மயக்கிட்டா, பாடி மயக்கிட்டான்னு உங்கம்மா ஏதாவது சொன்னா, உங்கம்மாவும் காலி, நீயும் காலி." -சுபத்ரா கோபமாகக் கூவினாள்.

ஷங்கர் சிரித்தான்.

"இதெல்லாம் ஆரம்பகாலப் பயம். உனக்கும் எங்கம்மாவுக்கும் நல்ல நட்பு வந்த பிறகு, அவா என்ன சொன்னாலும் நீயும் கேட்டுப்ப... நீ என்ன சொன்னாலும் அம்மாவும் கேட்டுப்பா. எங்கம்மா அந்த டைப்" என்றான்.

"ச்சீ... ச்சீ... நான் உங்கம்மாவை ஒண்ணும் எதிரியா நினைக்கலை... நீங்க உங்க பரம்பரையை எப்படிப் பெரிய விஷயம்னு நினைக்கிறேளோ, அதே மாதிரி எனக்கும் இருக்கும், இல்லையா...? எங்கப்பாவோட உழைப்பு, எங்க தாத்தாவோட உழைப்பு, எங்க தாத்தாவோட மரியாதை... அதுவும் எனக்கு முக்கியம்னு படணும், இல்லையா...? அந்த மரியாதையை எனக்குக் கொடுத்தாப் போதும்..." என்றாள் சுபத்ரா.

-கேட்டுக் கொண்டிருந்த ஷங்கருக்கு இது என்ன விதமான காதல்...? இது காதல்தானா...? என்கிற கேள்வி வந்தது.

3

"எங்க தாத்தாவோட மரியாதை... அதுவும் உனக்கு முக்கியம்னு படணும் இல்லையா...? அந்த மரியாதையை எனக்குக் கொடுத்தா போதும்..." என்ற சுபத்ராவை இடைமறித்தான் ஷங்கர்.

"கொடுக்காம இருப்பாங்களா... என்ன உளர்றே...? மரியாதை தராம போயிடுவாங்களோங்கற கற்பனைல நிறைய யோசனை பண்ணி ஏகப்பட்ட காபந்தோட உள்ளே நுழையறோம். அப்படி உருவின கத்தியும் ஒரு பயமுமாய் உள்ள நுழையறபோது ஒரு கல்லைத் தூக்கிப் போட்டுப் பார்ப்போமேன்னு எல்லோருக்கும் தோணும். கத்தியைக் கீழே வெச்சுட்டு சந்தோஷமா வந்து உன்னை மாதிரி உண்டா அப்படீன்னு ஆரம்பி. பதிலுக்கு வெகு வேகமா எங்க வீட்டுலேயும் கொண்டாடுவா..." என்றான்.

ஷங்கர் சொல்வது நியாயமாக சுபத்ராவுக்குப் பட்டது. யோசித்தாள். ஆமாம் என்று தலையாட்டினாள். "நான் கொஞ்சம் கலவரப்பட்டுக் கத்திண்டிருக்கேனா...?" என்று ஷங்கரைக் கேட்டாள்.

ஷங்கர் அவள் முதுகைத் தடவினான். கைகளைக் கோத்துக்கொண்டான்.

"எல்லா பொம்மனாட்டிகளுக்குமே புகுந்தவீடு பத்திப் பயமிருக்கு. இது எங்க அக்காக்கு நான் சொல்லித் தந்தது. அவளுக்கு உடைச்சுக் கொடுத்தேன். உள்ளே நுழையும்போதே எதிரியா நினைக்காதே. நுழையறச்சயே எல்லோரையும் ஃப்ரெண்டா நினைச்சுக்கோ. எதிரியா இருக்கறவாகூட ஃப்ரெண்டா மாறலாம்.

இந்த மாதிரி எங்க அக்காவுக்கு நிறையச் சொல்லிக் கொடுத்தேன். நான் இந்த மாதிரி கத்துக் கொடுத்தேங் கறதை அவ புருஷன்கிட்ட சொல்ல, அத்திம்பேர் என்னைக் கைகுலுக்கி ரொம்பப் பாராட்டினார். அதனால் தான் ரொம்ப தைரியமா உனக்கும் இதைச் சொல்லித் தரேன். உனக்கு மரியாதை குறைஞ்சு போயிடும்கற பயத்தோட வராதே. அதிகமாகும்கற நினைப்போட வா. எங்க அப்பாவுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. நீ கதவேறிக் குதிச்சு வந்து, எனக்கு வேலை கிடைச் சிருக்குன்னு சொன்னதைப் பார்த்து ரொம்ப சந்தோஷம். இந்த மாதிரி பொம்மனாட்டி கூட இருந்துட்டா உலகத்தையே ஜெயிச்சுடலாம்டான்னார்..."

"உங்க அம்மா என்ன சொன்னா...?"

"ஒண்ணும் சொல்லலை..."

"அதான் பயமா இருக்கு..."

"ஏன் பயப்படற...? உன்னை ஒரு லூஸுன்னு அவ நினைச்சுக்கலாம். இதை ரெண்டு மாசத்துல, ஒரு வருஷத்துல, துடைச்சு எடுத்துற முடியும். பயப்படாதே..."

"இல்ல ஷங்கர்... எனக்கு வேற ஒரு பயமும் இருக்கு..."

"என்ன...?"

"நானு லூஸோன்னு எனக்கே தோண்றது..."

ஷங்கர் வாய்விட்டுச் சிரித்தான்.

"ஏன்... எதனால...?"

"இப்ப லிஃப்ட்ல போக வர முத்தம் கொடுத்துண்டிருக்கேனே... எங்க சான்ஸ் கிடைச்சாலும் பாய்ஞ்சு கட்டிக்கிறேனே... கொஞ்சம் அலையறனோன்னு எனக்கே தோண்றது..."

ஷங்கர் அவள் இடுப்பில் கைபோட்டு இறுக்கிக் கொண்டான்.

அவர்கள் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். சாப்பிட் டுக் கொண்டே பேசினார்கள். நாலாதிசையும் அலைந்தார் கள். நிறைய பொருட்கள் பார்த்துப் பார்த்து வாங்கினார் கள்.

"கோயிலுக்கெல்லாம் கூடப் போவேளா...?" சுபத்ரா கேட்டாள்.

"ஆமாம்..." அவன் பதில் சொன்னான்.

மயிலாப்பூர் கோயில் வாசலிலுள்ள கடைக்கு வெளியே அவனை நிற்கவைத்துவிட்டு உள்ளே போனாள். பெரிய மூட்டையோடு வெளியே வந்தாள்.

அன்று மாலை சுமோவில் ஷங்கர் மகாதேவனின் அம்மாவுக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். தாம்பரத் திலிருந்து செங்கல்பட்டுவரை கண்மூடித் தூங்கினாள். பிறகு திண்டிவனம் வரை பாட்டுகள் பாடினார்கள். அதன் பிறகு மௌனமாக அவரவர் அவரவர் வாழ்க்கையைப் பற்றி யோசித்துக் கொண்டு வந்தார்கள்.

பெரிய ஓட்டலில் இறங்கி, தோசையும், பாலும் சாப்பிட்டுத் தூங்கினார்கள். மறுநாள் காலை எழுந்து குளித்து, சுடிதார் உடுத்தி அகலமான துப்பட்டாவைப் போர்த்திக் கொண்டு வெளியே வந்தபோது சுபத்ரா தேவதை மாதிரி இருந்தாள்.

மறுபடி வண்டி ஏறினார்கள். பதினைந்து நிமிடங்களில் காரைவிட்டு இறங்கினார்கள்.

இதுதான்... இதுதான் எங்கள் வீடு. இதுதான் எங்கள் கிராமம்... தூசு நிறைந்த நிலைப்படிக்கு எதிரே ஷங்கரின் அப்பா நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். நிலைப்படியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். தலையில் தடவிக் கொண்டார். ஷங்கரின் அம்மா, ஷங்கரின் தம்பி எல்லோரும் வணங்கினார்கள். வாசல் கதவு திறந்து உள்ளே போனார்கள்.

எல்லோரும் உள்ளே போனதும் அந்த இடத்தில் சுபத்ராவும் குனிந்து வணங்கினாள். அந்த வீட்டுப் பெரியவர்களைத் தன்னை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

வீட்டுக்குள் நுழையும்போதே இரண்டு பக்கமும் திண்ணை. இடப்பக்கம் சிறிய திண்ணை. வலப்பக்கம் பெரிய திண்ணை. தேக்குமரத்தாலான நிலைப்படி. அலையும் நீரில் மலர்ந்த தாமரையில் லட்சுமி உட்கார்ந்திருக்க, இரண்டு பக்கமும் யானைகள். நான்கு கைகளுடன் லட்சுமி புன்னகை பூத்த வண்ணம் அமர்ந்திருந்தாள். அவளுக்கு இரண்டு பக்கமும் சூரியன், சந்திரன் என்று இரண்டு பேர் நின்றிருந்தார்கள்.

பக்கவாட்டுப் பக்கம் இரண்டு இலைகளுடன் பூக்களுடன் கூடிய கொடி படர்ந்திருக்கிறது. நிலைப்படி கறுப்பாக இருந்தது. மரமே கறுப்பா அல்லது தொட்டுத் தொட்டுக் கறுப்பாயிற்றா என்று புரியவில்லை.

நிலைப்படியைத் தாண்டியதும் ரேழி. ரேழியை ஒட்டி இருட்டான இடத்தில் ஒருவர் படுக்கிற திண்ணை.

அதைத் தாண்டி வராண்டா. அதற்குப் பிறகு திறந்தவெளி முற்றம். இடதுபக்கம் மிகப்பெரிய ஹால். ஹாலின் எதிரும்புதிரும் இரண்டு அறைகள். முதல் கூட்டு கடந்து போனவுடன் இன்னொரு திறந்தவெளி. இன்னொரு ஹால். அது தாண்டி சமையற்கூடம். சமையற்கூடத்தை ஒட்டினாற்போல் ஸ்டோர் ரூம். பின்பக்கம் ஓட்டுச் சரிவில் குளிக்கும் இடம். எதிரே விறகுகள் போட மூங்கில் பரண். அந்தக் கதவுகள் திறந்தால் கொல்லைப் பக்கம். கொல்லையில் சற்றுத் தூரத்தில் கிணற்றடி... துவைக்கிற கல். சற்றுத்தள்ளி பாத்ரூம். கழிப்பறை. அது தாண்டி வாழைமரம், கிச்சிலி, மாமரம், தென்னைகள். வேறுபக்கம் செம்பருத்தி, பவழமல்லி, நந்தியாவட்டை, விருட்சி என்று இருந்தன.

அப்போதைக்கு யாரோ ஒருவர் இருவர் மட்டும் வீட்டில் புழங்குவது தெரிந்தது.

"என் தம்பி இன்னும் இதை விக்காம கெட்டியா வெச்சுண்டு இருக்கான். மாயவரத்துல சலவைக்கல் போட்டு பெரிய வீடு இருக்கு. ஆனாலும் வாரத்துல ரெண்டு நாள், மூணு நாள் இங்க வந்து உட்கார்ந்துடுவான். புஞ்சையில எங்களுக்கு நிலமெல்லாம் இருக்கு..."

ஷங்கரின் பாட்டி முகம் முழுவதும் பிரகாசமாகப் பேசினாள்.

"உனக்கு ஒண்ணு சொல்லட்டுமா... இது எங்க வீடு. அதாவது மகாதேவன் அப்பா வீடு இல்லை. எங்கப்பாவோட வீடு. எங்க அப்பாவுக்கு அவர் அப்பா கொடுத்த வீடு. இப்போ என் தம்பி ஆண்டுண்டிருக்கான். ஆள்றது என்ன. வெறுமனே ஞாபகார்த்தமா வெச்சுண்டு இருக்கான். என்ன ஞாபகார்த்தமா, என்னத்த இந்த வீட்டைப் பெரிசா வெச்சுண்டிருக்கான்னு கேட்கறியா...?"

பாட்டி முகம் முழுவதும் பரவசமாக, மிகப்பெரிய செய்தியைச் சொல்கிற உற்சாகமாக சுபத்ராவின் முன்பு விழிகளை உருட்டிக்கொண்டு பேசினாள்.

"எனக்கு இங்கதான் கல்யாணம் ஆச்சு..." தலையை ஆட்டிக்கொண்டு விவரம் தெரிவித்தாள். பழைய நினைவுகளால் மனம் குழந்தையாக மாறிக் கொண்டிருப்பதை சுபத்ரா உற்றுக் கவனித்தாள்.

"இங்கதான் மகாதேவன் பிறந்தான். இங்கதான் மகாதேவன் தம்பியும், தங்கையும் பிறந்தா. மெட்ராஸ்ல மகாதேவனுக்கு இருப்பே கொள்ளாது. புஞ்சைக்குப் போலாமா, புஞ்சைக்குப் போலாமானு- அப்படி என்னடா இருக்கு புஞ்சையில-?னு மத்தவா கேட்பா- கன்னுக்குட்டி, தயிர்சாதம், கொல்லைப்புறம், கிச்சிலிமரம், அப்படின்னு நிறைய சொல்வான். மகாதேவனுக்கு இந்தக் கிணத்தடியும் துணிமாடமும் துவைக்கிற கல்லும் கொல்லைப்புறத்து மரங்களும் ரொம்பப் பிடிக்கும்.

எழுந்து கார்த்தால குளிக்க உட்கார்ந்தான்னா உடம்பு முழுக்க எண்ணெய் துடைச்சுவிடுவோம். பாட்டு, பாட்டு, பாட்டுன்னு ஒரு மணி நேரம் தனக்குத் தெரிஞ்ச அத்தனை பாட்டும் உட்கார்ந்துண்டும், நின்னுண்டும் பாடுவான். மகாதேவன் ரொம்ப சந்தோஷமான குழந்தையா இங்க இருந்தான். அதனாலதான் ரொம்பக் கெட்டிக்காரனா வளர்ந்தான்-"

பாட்டி சொல்ல, மகாதேவன் அருகே வந்தார்.

"பட்டணத்துல இருக்கற குழந்தைகளுக்குக் கிராமத்துல ஒரு வீடு இருக்கறது ஒரு பெரிய சௌகரியம். ரெண்டுவிதக் கலாசாரம், ரெண்டுவித மொழி தெரிந்த எல்லா குழந்தைகளும் கெட்டிக்காராளா இருப்பா. பத்து வயசு வரைக்கும் ஒரேயொரு மொழிதான் தெரியும்னா, அந்தக் குழந்தை கொஞ்சம் மக்கா இருக்கும். ஒரே மாதிரியான சூழ்நிலைதான் பதினைஞ்சு வயசு வரைக்கும்னா, அந்தக் குழந்தைக்கு நிறைய விஷயங்கள் போறாது. சம்மர் லீவுல புஞ்சைக்கு வரலாம், டிசம்பர் லீவுல கிராமத்துக்கு வரலாம். அப்படிங்கற நினைப்பே என்னை நன்னா படிக்க வெச்சுது. சந்தோஷமா மாற வெச்சுது..." என்று உற்சாகமாகச் சொல்விக்கொண்டு போனார் மகாதேவன்.

"பிரயாணம் பண்ணலாம். இங்க வந்துட்டோம்ங்கறதுனாலேயே சுத்தி இருக்கிற நிறைய கோயிலுக்கு மாமா கூட்டிண்டு போவா. டிரெய்ன்ல, பஸ்ஸுல, மோட்டார் கார்ல. நான் வயல் மட்டுமே பார்த்துண்டு மலங்க மலங்க முழிச்ச நாட்டுப்புறக் குழந்தையுமில்லே. வெறும் பஸ், கார், மோட்டார் சைக்கிள், காலேஜுன்னு வளர்ந்த பட்டணத்துப் பையனுமில்லை... நான் ரெண்டும் சேர்ந்த கலவை. பட்டணத்துப் பசங்களை நெல்லு காய்ச்சிமரம்னு சொல்லி ஏமாத்துவா... எங்களை அப்படி ஏமாத்த முடியாது.

"உழறது எப்போ, நாத்துப் பறிச்சு நடறது எப்போ, தண்ணி பாய்ச்சறது எப்போ, உரம் போடறது எப்போ, மேலே மருந்து தெளிக்கறது எப்போ, எப்போ கதிர் தலைசாய்க்கும், எப்போ தண்ணி நிறுத்தணும், எப்போ அறுவடை அறுத்து எங்க வரும், வந்த பிறகு என்ன ஆகும் எல்லாம் எங்களுக்குத் தெரியும். இந்தப் பெட்டிக்கு என்ன பேரு தெரியுமா...?" மகாதேவன், சுபத்ராவின் கைபற்றிக் கொண்டு கேட்டார்.

"தெரியலையே... ஏதாவது ரகசிய அறையா...?"

"இல்லை... இதுக்குப் பேரு குதிர். இது முழுக்க நெல்லு இருக்கும். கீழ இந்த வாசலைத் திறந்தா, நெல்லு குபுக்குனு வெளியே கொட்டும்..."

"எதுக்கு நெல்லு...?" சுபத்ரா அப்பாவியாகக் கேட்டாள்.

வீட்டில் எல்லோரும் சிரித்தார்கள்.

"சமைக்கறதுக்குத்தான்..."

"அரிசிதானே சமைப்பா...?"

"ஆமா. நெல்லுலேர்ந்துதானே அரிசி வருது..."

"ஏன் நெல்லு வாங்கி வெச்சுக்கணும்...? அரிசியாவே வாங்கி வெச்சுண்டா என்ன...? எங்க வீட்லேயும் ஒரு மூட்டை அரிசி வாங்கி டிரம்லதானே கொட்டிக்கறோம். அந்த மாதிரி கொட்டிண்டா என்ன...?"

"நெல்லு எங்களுக்கு விளையறதே... உங்களுக்கு விளையலையே..." என்றாள் பாட்டி.

"எனக்குப் புரியலை... உங்களுக்கு நெல்லு விளையட்டும். நெல்லைக் கொடுத்துட்டு அரிசி வாங்கிக்க வேண்டியது தானே...? என்னத்துக்கு நெல்லைக் கொண்டுபோய்க் குதிர்ல வெச்சுக்கறேள்..."

"அம்மாடியே... வெண்ணெய் கிடைச்சாக்கா நெய் வாங்குவாளா...? வெண்ணெயைக் காய்ச்சி நெய் எடுத்துக்குவா. அது மாதிரிதான் நெல்லு இருந்தா, அதை அப்பப்போ புழுக்கி அவிச்சு எடுத்து மெஷினுக்கு எடுத்துட்டுப் போய்க் கொண்டுவந்து அரை மூட்டை, ஒரு மூட்டை போட்டுக்குவோம். மறுபடியும் ஆகறபோது அனுப்புவோம். சாதம் ரொம்ப வாசனையா இருக்கும். வெறும் சாதத்தை அள்ளி அள்ளிச் சாப்பிடணும்னு தோணும். அரிசி நன்னாயிருந்து, அதுல நீரை விட்டுட்டுப் பழையதாக்கி, மறுநாள் கெட்டித் தயிரோட தொட்டுக் கறதுக்குப் பருப்புத் துவையலோ, வத்தக்குழம்போ, வெங்காயத்தொக்கோ அல்லது மூணுமோ பண்ணிக் கார்த்தால சாப்பிட்டா... சொல்றபோதே எனக்கு இறுகிறுன்னு வருது. சுபத்ரா, நீ சாப்பிட்டிருக்கியா...?" என்று கேட்டார் மகாதேவன்.

"இல்லை... பழையது சாப்பிட்டா தூக்கம் வரும் சொல்வா..."

"யெஸ்... ராத்திரி கொட்டக் கொட்ட முழிச்சிண்டு கார்த்தால ஏழேகால் மணிக்கு எழுந்திருக்கிறவாளுக்குத் தூக்கம் வரும். காலையில அஞ்சு மணிக்கு எழுந்து

பல்லைத் தேய்ச்சுட்டு, ஒரு டம்ப்ளர் நீராகாரம் குடிச்சுட்டு அப்படியே கொல்லைப்பக்கம் போய் உட்கார்ந்துட்டு கைகால் அலம்பிண்டு வந்து, திண்ணையில் உட்கார்ந்து சத்தம் போட்டு ஒரு மணி நேரம் ஆறுலேர்ந்து ஏழு வரைக்கும் படிச்சுட்டு, ஏழு மணிக்கு உருட்டி உருட்டி அம்மா கையில போட, மந்தாரை இலையில் இருக்கற பருப்புத் துவையலை விரல்ல வழிச்சுண்டு கையில சாதம் விழுந்தவுடனே, அந்த விரல்ல இருக்கறதை அப்படியே சாதத்துக்குள்ள அழுத்தி வாய்க்குள்ள போட்டுக்கறது ரொம்ப ருசி. பதினெஞ்சு பிடி சுலபமா சாப்பிடலாம்.

அப்புறமா தோள்ல துண்டைப் போட்டுண்டு வாய்க்கால் பக்கம் போகலாம். எங்க வயலை ஒட்டி வாய்க்கால் போகும். ஏகப்பட்ட கதை பேசிண்டு வாய்க்காலுக்குப் போவோம். குளிப்போம். நீந்துவோம். தண்ணியிலேயே ஊறிக் கிடப்போம். உடம்பெல்லாம் சோர்ந்து போற அளவுக்கு ஆட்டம் போடுவோம். விரலெல்லாம் அப்படியே பஞ்சு கலரா மாறியிருக்கும். அப்படியே கோயில் பக்கம் போய் முனீஸ்வரனை ஒரு தடவை சுத்தி நமஸ்காரம் பண்ணிட்டு, வீட்டுக்கு வந்து விளக்கேத்தி, நெத்தியில விபூதி இட்டுண்டு, ஸ்லோகம் சொல்விட்டு கொஞ்ச நேரம் காயத்ரி ஜபம் பண்ணிட்டு எல்லோரும் பேப்பர் படிப்போம்.

கிராமத்துலேயே எங்க மாமாதான் ஹிண்டு, தினமணி ரெண்டும் வாங்குவா. நாங்க தினமணி படிச்சுட்டுக் கிட்டத்தட்ட அதே செய்தி ஹிண்டுல வந்திருக்கான்னு பார்ப்போம். யாருக்கு இங்கிலீஷ் நன்னா தெரியறதோ, அவன் சத்தம் போட்டுப் படிப்பான். அவன் சத்தம் போட்டுப் படிக்கறபோதே, தமிழ்ல என்ன நியூஸ்னு தெரிஞ்சதுனால இங்கிலீஷ்ல என்ன படிக்கறான்கறது எங்களுக்குத் தெரியும். வார்த்தைகள் புதுசா இருந்தா, அது என்னான்னு கேட்போம். அதுக்கு அர்த்தம் மாமாவோ, மாமியோ அல்லது மாமாவோட பிள்ளையோ சொல்லித்

தருவா. நிறைய இங்கிலீஷ் வார்த்தை நான் புஞ்சை கிராமத்துலதான் தெரிஞ்சுண்டேன்..."

"அதுக்கப்புறம் மறுபடியும் சாப்பாடா...?" என்று கேட்டாள் சுபத்ரா.

"சாப்பாட்டுக்குப் பன்னெண்டு, பன்னெண்டரை ஆகும். அதுவரைக்கும் உனர் விஷயங்களை மத்தவா பேசிண்டு இருக்கறதை நாங்க கவனிச்சுண்டு இருப்போம். அல்லது புஸ்தகம் படிச்சுண்டிருப்போம். நான் கல்கியுடைய 'பொன்னியின் செல்வன்' இந்த வீட்லதான் படிச்சேன். காகிதத்தைக் கூழா அரைச்சு, அதுல கூர்மையா மூக்கு பண்ணிக் காயவெச்சு, அதை எடுத்து மாட்டிண்டு நான்தான் துப்பறியும் சாம்புன்னு இந்த இடத்துல வேஷம் போட்டிருக்கேன்.

மாமாவோட பொண்ணு பாட்டுப் பாடுவா, வீணை வாசிப்பா. இங்க உட்கார்ந்து கேட்போம். பாட்டு கத்துப்போம். சாப்பாடு நேரத்துக்கு பன்னெண்டரை ஆயிடும். சாம்பார், ரசம், கறி, கூட்டு, பொரியல்னு ஒரு விருந்து சாப்பாடு மாதிரி இருக்கும். ரெண்டுவித ஊறுகாய் இருக்கும். சாப்பிட்டு எழுந்தா திணறும். இலைக்கு நெய், கைக்கு நெய் அப்படின்னு சாப்பிடுவோம். உள்ளங்கை நிறைய அம்மா நெய் ஊத்துவா. உறிஞ்சு குடிப்போம். ஒன்றரை மணிக்குப் படுத்தா நாலு மணிக்கு எழுந்திருப் போம். எழுந்து மறுபடியும் குளிக்கப் போவோம். போற வழியிலேயே வயக்காட்டுப் பக்கம் உட்கார்ந்து கைகால் அலம்பிப்போம். இருட்டற வரைக்கும் தண்ணியில ஆட்டம். விளையாட்டு. திரும்பவும் முனீஸ்வரன் கோயில்ல ஒரு நமஸ்காரம். அங்கேயிருந்து வீட்டுக்கு வந்தா ஏதாவது பட்சணம் தருவா. பட்சணம் சாப்பிட்டு முடிச்சபிறகு கைகால் அலம்பிண்டு, விதவிதமா ஸ்லோகம் சொல்லணும். திருப்புகழ் சொல்லணும். தேவாரம் திருவாசகம் சொல்லணும். ஏழரை மணிக்குக் கதை நேரம் ஆரம்பம்..."

ஷங்கரின் அப்பா மகாதேவன் பேச்சில் காட்டிய விரைவு சுபத்ராவைத் திகைக்க வைத்தது.

"கதை நேரம்னா...?" அவள் விழி விரித்துக் கேட்டாள்.

4

கதை நேரம் பற்றி சுபத்ராவிடம் விளக்கினார் ஷங்கரின் அப்பா.

"மாமா கதை சொல்வார். ராமாயணம், மகாபாரதம், பாகவதம் ஏதாவது கதை சொல்வார்.

தெரு முழுக்க பிரமிச்சு கேட்டுண்டு இருக்கும். வயசானவர்கள்ளாம் வந்து உட்கார்ந்துப்பா. மாமா கொஞ்சம் உரத்த குரல்லயே சொல்வார். கிட்டத்தட்ட முப்பது, நாப்பது பேர் மாமா சொல்றதை ஹான்னு கேட்டுண்டு இருப்பா.

ராத்திரி ஒன்பது மணிக்கு இட்லி, தோசை இல்லை மோர் சாதம் சாப்பிடுவோம். அப்படியே கண்ணை சுழட்டிண்டு தூக்கம் வரும். ஒன்பதேகால், ஒன்பதரைக்கு தூக்கம். பத்து மணிக்கு கிராமத்துல நடமாட்டமே இருக்காது. பளிச்சுனு அமைதி ஆயிடும். சிலுசிலுசிலுன்னு காத்து அடிக்கும். ஆளுக்கொரு பாய். ஒரு தலைகாணி. போர்த்திக்கறத்துக்கு மெலிசா ஒரு போர்வை. பத்துப் பேர், பன்னண்டு பேர் லைனா படுத்துண்டு கிகிகின்னு பேசிண்டு அப்படியே தூங்கிடுவோம். மறுநாள் கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்திருப்போம். என்ன அற்புதமான வாழ்க்கை தெரியுமா சுபத்ரா..." -மகாதேவன் கண்கள் சொருகப் பேசினார்.

"இப்போ நீங்க பேசறதெல்லாம் உங்க அம்மா வீடு பத்தி இல்லையா. உங்க அப்பாவைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே..."

"அவர் ஒரு மாதிரி மெட்ராஸ்ல செட்டிலாயிட்டார். மாயவரம் டவுன்தான் ஊரு. அவரோட தாத்தா வாங்கின வீட்டை அவர் ஜாக்கிரதையா வச்சுருந்தார்."

"அவர்தான் சாப்பாடு வித்தவரா?"

"இல்லை... அவருக்கு அப்பா. அதாவது, என்னுடைய கொள்ளுத் தாத்தா."

"அவர் நினைவாதான் ஷங்கர் தயிர்சாதம் விக்கப் போறானா?"

"இல்லை, அவருடைய அப்பா நினைவா... அதாவது, என் தாத்தாவுக்குத் தாத்தா நினைவாக இது நடக்கறது."

"அவர் என்னவா இருந்தார்?"

"வைதீகம்."

"வைதீகம்னா என்ன?"

மகாதேவன் கண்களை மூடிக் கொண்டார்.

மிகச் சாதாரண விஷயம்கூட, சொற்றொடர்கூட இப்பொழுதுள்ள குழந்தைகளுக்குத் தெரியவில்லை என்பது அவருக்கு வலியைக் கொடுத்தது.

"புரோகிதம்னு சொல்வா."

"அதாவது, மந்திரமெல்லாம் சொல்றதா?" என்று கேட்டாள் சுபத்ரா.

"ஆமாம். அந்த மாதிரிதான். கல்யாணம் கார்த்திகையில வேதம் சொல்றது, அவசியமானா கல்யாண மந்திரங்கள் சொல்லி கல்யாணம் பண்ணி வைக்கறது, கிரகப் பிரவேசம் பண்றது, சீமந்தம், ஆயுஷ்ஹோமம் அந்த மாதிரியான விஷயங்கள் செய்யறது எல்லாம் பண்ணிட்டிருந்தார்."

"கோயில்ல நடக்கற ஹோமங்களுக்கும் போவாரா?"

"நிறைய போவார்."

"எதுக்காக அவரை நினைச்சுக்கறேள்?"

"அவர்தான் வைதீகத்தை நிறுத்திட்டு, ரயில்வே ஸ்டேஷன்ல தயிர்சாதம் விக்கலாம்னு முடிவு பண்ணவர்."

"எதனால அந்த முடிவு பண்ணார்?"

"வைதீகத்துக்கு யாரும் ஆதரவு தரலை. குடித்தனம் நடத்தணுமே. தர்ப்பணத்துக்கு நாலணா கொடுக்கறதுக்குக் கூட யோசனை பண்ணா. தர்ப்பணம் பண்ணி வைக்கறது உன் கடமை இல்லையா... இதுக்கு எதுக்கு காசு வாங்க றேன்னு கொடுக்கறவாகூட கொடுக்காம தட்டிக்கழிச்சா. எனக்கு இதைத் தவிர வேற ஒண்ணும் தொழில் தெரியாது. எனக்கு நிலமிருந்தாலும் விவசாயம் பண்றதுக்கு பலம் போறாது. தோப்பு கண்காணிக்கறதும், கறிகாய் பயிர் பண்றதும் என்னால ஆகாது. நான் அடுத்தபடியா என்ன தொழில் பண்ணலாம்னு தீவிரமா யோசனை... ரயில்வே ஸ்டேஷன்ல தயிர்சாதம் விக்கலாம்னு முடிவு பண்ணேன். வெறும் தயிர்சாதம் இல்லாத அப்பம், வடை, தயிர் சாதம்னு மூணும் விக்கலாம்னு தீர்மானம் பண்ணேன் அப்படின்னு டைரி எழுதி வச்சுருக்கார்."

"அப்படியா... அந்த டைரி எங்க இருக்கு?"

"நம்ம வீட்ல இருக்கு."

"ஏன் அப்பம், வடை, தயிர்சாதம்?"

சுபத்ரா தொடர்ந்து கேட்டாள்.

"அப்பம்கறது வெல்லத்துல செய்யற ஒரு தின்பண்டம். மெத்து மெத்துன்னு வயசானவாகூட சாப்பிடும்படியா இருக்கும். தித்திக்கும். ஆனா, சர்க்கரை மாதிரி சுள்ளுன்னு தித்திக்காது. நாலஞ்சு அப்பம் சாப்பிடலாம். வயித்துக்கு ஒண்ணும் கெடுதல் பண்ணாது. அடுத்தது மசால்வடை பருப்பு போட்டு, பாதியா அரைச்சு எண்ணெய்ல தட்டி

எடுத்திருப்பா. அதைவிட நல்ல பண்டம் தயிர்சாதம். பாலும் தயிரும் ஊத்திப் பிசைஞ்சு சூடா இருக்கும்போதே இளறி இஞ்சி, பச்சைமிளகாய் எல்லாம் நறுக்கிப் போட்டு, கடுகு தாளிச்சு, இலையில ஊறுகாய் மடிச்சு வச்சு கார்த்தால அஞ்சரை, ஆறு மணிக்கு எடுத்துண்டு போயிடுவார்."

"யாரு?"

"தாத்தாவுக்குத் தாத்தா, அவர் குழந்தைகள் எல்லாருமே."

சுபத்ரா வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

"கூடையில வாழையிலை போட்டு அது நிறைய நூத்துக்கணக்கா அப்பம். இன்னொரு வாழையிலை அதை மூடியிருக்கும். மந்தாரை இலையிலேயும் வாழைப்பட்டை இலையிலேயும் கட்டின தயிர்சாதம். தனியா டப்பால மசால்வடை ஒரு புள்ளை மசால்வடை டப்பாவைத் தூக்க, இன்னொருத்தர் அப்பக்கூடையைத் தூக்கிக்க, தயிர்சாதப் பொட்டலத்தை தலையில வச்சுண்டு அப்பம், வடை, தயிர்சாதம்னு விப்பா. இந்த மூணும் உடம்புக்கு கெடுதலே பண்ணாத விஷயங்கள். சில்லுனு தயிர்சாதம். நிறைய புரோட்டீன்கள் இருக்கற மசால்வடை. குளுக்கோஸ் கொடுக்கற வெல்ல அப்பம். ரெண்டு ரெண்டு பொட்டலம் வாங்கி ஒருத்தர் சாப்பிட்டாக்கா மாயவரத்துலேர்ந்து திருச்சிராப்பள்ளி போறவரைக்கும் திம்முன்னு இருக்கும். ஏன்... ராமநாதபுரம் வரைக்கும் கூட இதையே வச்சுண்டு சமாளிச்சுடலாம்."

"சமையல் பண்ணி இப்படித் தலையில சுமந்து விக்கறது கேவலம்னு அவர் நினைச்சாரா?"

"ஆமாம், வைதிகத்துக்கு வந்துட்டு செல்லுபடியாகாம தான் இப்படி அப்பம், வடை, தயிர்சாதம்னு விக்கறோம் அப்படின்னு ரொம்ப வேதனைப்பட்டார். வியாபாரம்

பண்ண வச்சுட்டியேம்மான்னு திருக்கடையூர் அபிராமியை செல்லமா கோச்சுப்பார்."

"ஏன், ஒருத்தர் வியாபாரம் பண்ணப்படாதா?"

"இல்லை. வேதம் தெரிஞ்சவன் வியாபாரம் பண்ணப்படாது. அவனுக்குச் சாப்பாட்டுக்கும் துணிக்கும் மத்த விஷயத்துக்கும் உலகம் ஆதரவு காட்டணும். இதுதான் நடைமுறை வழக்கம்.

வைதீகம் மாதிரி அடுத்தபடியான நல்ல சாத்வீகமான, யாரோடும் சண்டை போடத் தேவையில்லாத ஒரு விஷயம் என்ன அப்படின்னு கேட்டா அது சமையல் பண்றதுதான். சாப்பாடு விக்கறதுதான்னு தாத்தா தீர்மானம் பண்ணார். உழவு பண்றதைவிட, வேற ஏதாவது வியாபாரம் பண்றதைவிட, பள்ளிக்கூடத்துல பசங்களுக்கு இங்கிலீஷ் பாடம் சொல்லித் தர்றதைவிட, கணக்குப் பிள்ளையா கைகட்டி சேவகம் பண்றதைவிட இந்தத் தொழில் பண்ணா வீட்ல பசியும் இருக்காது... காசும் வரும்னு தீர்மானம் பண்ணார். பசியில செத்துடுவோம் போல இருக்குடா... வெறும் தயிர்சாதம் இருந்தாபோதும். நாம உயிர் வாழ்ந்துடலாம். நமக்குன்னு தயிர்சாதம் பண்ணிக்காத, விக்கறதுக்குன்னுன் தயிர்சாதம் பண்ணி மிஞ்சறத நாம் சாப்பிடலாமோன்னோனு ஆரம்பிச்சார்.

பசியைப் போக்கறதுக்கு ஆரம்பிச்ச வியாபாரம்தானே தவிர, பிரமாதமா பணக்காரர் ஆகறதுக்கு அந்த வியாபாரம் பண்ணலை. இந்த வியாபாரம் பண்ண வரைக்கும் அவர் பிரமாதமா பணக்காரராகவும் ஆகலை.

"அப்போ யார் பணக்காரர் ஆனா?"

"அவருடைய ரெண்டு பிள்ளைகளும் பணக்காரர் ஆயிட்டா."

"எப்படி?"

"இதே சமையல் தொழில்."

"அப்பம், வடை, தயிர்சாதமா?"

"இல்லை. ஓட்டல் சங்கரபவன் மாயவரத்துல ரொம்பப் பிரமாதமான விஷயம் அது."

"இப்ப ஏன் ஷங்கரை இதை வியாபாரம் பண்ண ணும்னு சொல்றேள்...?"

"நாங்க அங்கேயே நிக்கலைம்மா. படிப்படியா வளர்ந்துட்டோம். ஒவ்வொரு ஆளும் ஒவ்வொரு விதமா முன்னேறி வந்துட்டோம். நாலணா காசுக்கு தவிச்சவர் குடும்பத்துலேர்ந்து நாப்பது லட்சம், அம்பது லட்சம் சொத்து மதிப்புக்கு வந்துட்டோம். நாங்க இந்த இடத்துக்கு வர்றதுக்கு எங்களுக்கு ஆதாரமா இருந்தது அவர். அவர் வழிகாட்டிய இந்த அப்பம், வடை, தயிர்சாதம்... நாம என்ன உயரமா இருந்தாலும் என்ன படிச்சாலும் அடிப்படையில் எங்கேயிருந்து வரோம்னு நாம தெரிஞ்சுக் கணும்.

டேய் ஷங்கரா... அமெரிக்காவுக்குப் போயிட்டா, எல்லாம் தெரிஞ்சவனா நினைச்சுக்காத. நீ எங்கேர்ந்து வந்து இருக்க தெரியுமா... நீ அமெரிக்கா போகறதுக்கு யார் காரணம் தெரியுமா? உன் பரம்பரை எங்க ஆரம்பிச்சுது தெரியுமான்னு ஞாபகப்படுத்திக்கறதுக் காகத்தான் இன்னிக்கு அவன் அப்பம், வடை, தயிர்சாதம் விக்கப்போறான்" என்றார் மகாதேவன்.

அவர்கள் எல்லோரும் குளித்து, காபி குடித்து, டிபன் முடித்து மாயவரம் ஸ்டேஷனுக்குப் போனபோது அங்கே அப்பம், வடை, தயிர்சாதம் தயாராக இருந்தது.

அப்பா கூடையை மகாதேவன் தூக்கிக்கொள்ள, வடையை மகாதேவனின் அம்மா தூக்கிக்கொள்ள, தயிர் சாதக் கூடையை ஷங்கர் தூக்கிக் கொண்டான்.

மூன்று பேரும் கண்மூடி நின்றார்கள்.

'முதாக்கராத்த மோதஹம்' என்று பாடினார்கள்.

இன்ஜின் அருகே போனார்கள். அங்கிருந்து ஷங்கர் முன்னால் கூவிக் கொண்டு போனான்.

"அப்பம், வடை, தயிர்சாதம்..." அடி வயிற்றிலிருந்து உரக்கக் கத்தினான்.

யாரோ கைதட்டி அவனைக் கூப்பிட்டார்கள்.

பார்த்துக் கொண்டிருந்த சுபத்ராவின் கண்ணில் பளிச்சென்று ஜலம் தளும்பியது.

ஷங்கரின் அம்மா லேசான முரட்டுத்தனமுடையவள். அதட்டும் குணம் கொண்டவள். நான் சொல்வதைக்கேள் என்று அதிகாரம் காட்டுபவள். கழுத்தில் ஏழுபவுன் தாலிக் கொடியும், காதில் வைரத்தோடுமாய், மசால்வடை, டப்பாவைத் தூக்கிக்கொண்டு பிள்ளைக்குப் பின்னால் ஓடினாள்.

மகாதேவன் சற்றுப் பருமனானவர். வன்முறைக்குப் பழக்கப்படாத உடம்பு கொண்டவர். அரிவாளால் கிளை வெட்டவோ, சுத்தியல் எடுத்து ஆணி அடிக்கவோ பழக்க மில்லாதவர். அப்பா கூடை சின்னதாக இருந்தாலும் அதைத் தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு நடந்தார்.

கே.கே.நகரில் மகாதேவனுக்கு மிகப்பெரிய மரியாதை உண்டு. மத்திய கிழக்கு நாடுகளில் பல இடங்களில் வேலை செய்து, துபாயில் கடைசியாகத் தங்கிக் கொள்ளை கொள்ளையாய் சம்பாதித்தவர். அறுபது, எழுபது இளைஞர்கள் இவர் வேலை வாங்கிக் கொடுத்து உலகத்தில் பல பாகங்களில் பிரகாசமாக இருக்கிறார்கள். மலை யாளியோ, கன்னடனோ, தெலுங்கனோ அல்லது வட இந்தியனோ அவர் இருக்கும் பகுதியில் பிரச்னையில் மாட்டிக்கொண்டு தவித்தால் உடனடியாக உதவுவார்.

வீடு முழுக்க இறக்குமதி சாமான்கள். விதம் விதமாக சௌகரியங்கள். ஆனால், அவர் தோட்டத்து ஊஞ்சலில்

நாலு முழ வேட்டியும் மேல்துண்டுமாக உட்கார்ந்திருப் பார்.

"பிள்ளையார் கோயில் சுவரு பொத்துகிட்டு வருது. தூக்கி நிறுத்தணும் சாமி."

"தூக்கி நிறுத்தேன். எவ்னாவ ஆனது தரேன்."

"முழுசா ரெண்டு ரூபா ஆகும்றாங்க. அதைத் தவிர கும்பாபிஷேக செலவு."

"நான் ஒண்ணரை ரூபா தரேன். மிச்சத்தை கலெக்ட் பண்ணிக்கறேளா?"

வந்த நால்வரும் திகைத்துப்போய் நின்றார்கள்.

"அப்போ, கும்பாபிஷேக செலவு..."

வந்தவரில் ஒருவர் வேறு என்ன கேட்பது என்று தெரியாமல் கேட்டார்.

"என்கூட வேலை செய்துட்டு ஐரோப்பாவுல தனியா ஒருத்தன் கடை போட்டிருக்கான். அவன் வருமானத்துல ஒரு பகுதியை இந்த மாதிரி செலவு பண்றான். நான் கைகாட்டினா டக்குனு காசை இறக்கிடுவான்."

கங்கையும், யமுனையும், நர்மதையும், கிருஷ்ணாவும் பெரும் குடங்களில் கொண்டுவரப்பட்டு பிறகு காவிரி நீரோடு கலக்கப்பட்டு, மந்திர கோஷங்கள் முழங்க அதிர்வேட்டு சத்தத்துக்கிடையே குடமுழுக்கு விழா நடந்தது.

கடைசிவரை மகாதேவன் மேடை ஏறவில்லை. தன் பெயரைப் பொறித்துக் கொள்ளவில்லை.

"இந்தக் கோயில் எங்க இருக்குன்னே தெரியாத என் சிநேகிதன் கும்பாபிஷேக செலவுக்குன்னு ரெண்டு லட்ச ரூபா கொடுத்தான். எங்கேயும் தன் பெயர் வேண்டாம்னு எழுதியிருந்தான். ரெண்டு ரூபா கொடுத்த அவனே

வேண்டாங்கறபோது நான் போட்டுக்கலாமா. எனக்கு வாய்ப்பு கொடுத்தவங்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்றேன்."

மகாதேவன் நெடுசாண்கிடையாய் தரையில் விழ, தர்மகர்த்தாக்கள் பதறி சிதறி ஓடினார்கள்.

இப்போது அவர் அப்பம் விற்றுக் கொண்டு போனது விநோதமாக இருந்தது.

"உங்களைப் பாத்தா விக்கறவங்க மாதிரி தெரியலையே..." இரண்டு, மூன்று பேர் பின்வாங்க... மகாதேவன் கெஞ்சிக் கூத்தாடி அப்பம் விற்றார்.

"ஏங்க... தித்திப்பு இன்னும் ஒரு பத்து கொடுங்க." -ஒரு பேராசை ஓடிவந்து காசு கொடுத்தது. வாங்கிச் சென்றது.

"அப்பம், வடை, தயிர்சாதம்..."

ஷங்கர் குரல் தொலைவில் கேட்டது.

"முன்ன யார் வேணா, எதுவேணா ஸ்டேஷன்ல விக்கலாம்னு இருந்தது. இப்போ அடிக்கடி விக்க முடியாது. இப்ப லைசென்ஸ் வேணும். ஒரேயொரு நாள் ஒரேயொரு கூடைங்கறதால ஸ்டேஷன் மாஸ்டர் சரின்னு சொல்லி விட்டார்."

சுபத்ராவின் தோளைப் பிடித்துக் கொண்டு பாட்டி பேசினாள்.

"இந்தப் பிள்ளையார் கோயில் தாண்டி ஸ்டேஷன் சரிவுல இறங்கி ரெயில்வே ட்ராக் கடந்து வீட்டுக்கு திரும்புவார்."

"யாரு?"

"இந்த அப்பம், வடை, தயிர்சாதம் விக்க ஆரம்பிச்சவர்."

பாட்டி அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஒரு விளக்குக் கம்பம் காட்டினாள்.

"ஒருநாள் அப்படிப் போறச்சே இங்கேயே சுருண்டு உட்கார்ந்துட்டார். மூத்த பிள்ளை நெஞ்சுல சாய்ச்சு ஒருவாய் தண்ணி கொடுத்தான். சௌக்கியமா இருடா, நான் போறேன்னு சொல்லி அவன் கையை இறுக்கிப் பிடிச்சுண்டார். புள்ள அப்பா, அப்பான்னு கதறியிருக்கான்.

'மாயவரம் என்ன அழகு, எத்தனை பசுமை, மறுபடியும் இங்க பிறக்கணும். தினம்தினம் திருக்கடையூர் அபிராமி பார்க்கணும். திருமணஞ்சேரி கல்யாணசுந்தரரைப் பார்க்கணும். நிடூர்லியோ, ஆனதாண்டபுரத்துலயோ, மணல்மேடு கிராமத்துலயோ இன்னொரு தடவை பிறந்து மாயவரத்தை நன்னா அனுபவிக்கணும். கல்லு ஊனி ஒரு வருஷம் காரியம் பண்ணு போதும். அதுக்குப் பிறகு வேண்டாம். ஒரே வருஷம். மறுபடியும் நான் மாயவரத்துல பிறந்துடுவேன். சொல்லு, நமச்சிவாய வாழ்க சொல்லுன்னு கேட்டார்.

'நமச்சிவாய வாழ்க... நாதன் தாள் வாழ்க... இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க... கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க... ஆகமம் ஆகநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க... ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க...

அடுத்த லைன் பாடலை. பிராணன் போயிடுத்து. கண் வழியா உயிர் போயிடுத்து."

பாட்டி தரையில் உட்கார்ந்து அந்த விளக்குக் கம்பத்தைத் தடவினாள்.

சுபத்ரா அவளுக்கருகே மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கு அந்த வீட்டு மனிதர்களைப் பிடித்திருந்தது. அந்தக் குடும்பத்தில் ஒன்ற வேண்டும் என்ற ஆசை வந்தது.

"இந்த விஷயங்களெல்லாம் எழுதி வச்சுருக்கா பாட்டி?'

"எழுதணும்."

"ஆனா, நேர்ல பார்த்தது போல் சொல்றேளே... எப்படி?"

"ஒரு கதை மாதிரி எங்களுக்குள்ள நாங்களே சொல்லிண்டு வரோம்."

"இங்க விழுந்து இறந்தாரே... அவரு பேர் என்ன?"

"விஸ்வநாத சாஸ்திரிகள்."

சுபத்ரா மனதுக்குள் அவர் பெயரை எழுதிக்கொண்டாள். வெகுதொலைவில் அப்பம், வடை தயிர்சாதம் குரல் கேட்டது.

5

காவிரி நீரில் காலை வைத்ததும் சிலீரென்ற ஒரு உணர்வு உள்ளங்காலைத் தைத்து முழங்காலில் ஏறித் தொடைகளில் பரவி, இடுப்பில் தங்கி வயிற்றிலும் நெஞ்சிலும் சுழன்று பரவி தொண்டைக்குழியில் உட்கார்ந்து பிறகு உச்சியைத் தாக்கி மேலே பறந்தது.

காவிரியின் சில்லிப்பு உடம்பின் மேல் மட்டுமல்லாமல் உள்ளுக்குள்ளும் பரவுவதை சாம்பசிவ சாஸ்திரிகள் தெளிவாக உணர்ந்தார்.

இப்படிக் காவிரியில் கால் வைத்து மூன்று மாதம் ஆகிவிட்டது. கோடை முடிந்து நிறையப் பூக்கள் பூக்கும் காலத்தில் ரயிலேறி மதராஸ் பட்டினத்துக்குப் போய் அங்கு பல்வேறு இடங்களில் தங்கிப் பல்வேறு கோயில்களைத் தரிசனம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று, போதும் என்ற அலுப்போடு திரும்பவும் வண்டி பிடித்து சீர்காழியில் இறங்கி ஒவ்வொரு ஊராகத் தாண்டி காவிரிக்கரைக்கு வந்தாகிவிட்டது.

காவிரியை மார்போடு அணைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. போகும்போது வறண்டிருந்த காவிரி, இப்போது சிலுசிலுவென்று நடைபெயர்ந்து போகிறாள்.

திருச்சியில் அகன்று இருக்கிற காவிரி, தஞ்சை குடந்தையில் குறித்துக் கொண்டு வரும் காவிரி, மாயவரம் வந்ததும் நிதானமாகி விடுகிறாள்.

தமிழ்நாடுதான் காவிரியின் புகுந்தவீடு. புகுந்தவுடனே இருக்கிற கும்மாளங்கள் மாயவரம் வந்ததும் அடங்கிப் போய்விடுகிறது. இரண்டு, மூன்று குழந்தைகள் பெற்ற தடித்த பெண்மணிபோல, ஒரு நிதான வேகத்தில் அவள் நடந்துகொண்டு இருக்கிறாள்.

கிழக்கு நோக்கிப் போகும் நதிகளெல்லாம் புண்ணிய நதிகள். பூமியின் சுழற்சியோடு ஒடிப் பிரபஞ்ச சக்தியை உறிஞ்சியபடி அவை குளிக்கிற எல்லா ஜீவராசிகளுக் குள்ளும் ஒரு வினோத உணர்வை ஏற்படுத்துகின்றன.

காவிரியைத் தாண்டி எதிரே தெரிகிற செம்பனார் கோவில் ஊருக்குள் நுழைந்ததும் எல்லோரும் எழுந்து நின்று பார்ப்பார்கள். வாயார அழைப்பார்கள். 'எங்க... மதராஸா?' என்று கேட்பார்கள்.

'என்ன வாங்கிண்டு வந்தீர் மதராஸில் இருந்து..?' என்று விசாரிப்பார்கள்.

வீட்டுக்குள் போய் வெளியே வந்ததும் கும்பலாக வந்து மதராஸ் பற்றி கேட்பார்கள்.

நிறைய பிராமணர்களுக்கு மதராஸ் பிடித்துவிட்டது. மதராஸ்தான் வாழ்வதற்கு வசதியான இடம் என்று தெரிந்துவிட்டது. குடந்தையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் கும்பல் கும்பலாக அந்தணர்கள் போய்க் கோட்டையில் நின்று தங்கள் ஆங்கில அறிவை வெளிப்படுத்தி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சேவகம் செய்யச் சத்தியம் செய்து

கையெழுத்துப் போட்டுப் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய், இருபது ரூபாய் சம்பளத்தில் சேர்ந்து விடுகிறார்கள்.

கோட்டையில் உத்தியோகம் என்றால், திருவல்லிக் கேணியில் வீடு வைத்துக்கொள்கிறார்கள். மவுண்ட்ரோட்டில் வேலை என்றால் மயிலாப்பூரில் வீடு பார்த்துக் கொள்கிறார்கள்.

ஆனால் சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு கோட்டையில் வேலை கிடைக்காது. கோட்டையில் வேலை கிடைக்க வேண்டுமெனில், ஆங்கிலமும் தமிழும் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். கேள்வி கேட்டால் பதில் சொல்லப் புரிந்திருக்க வேண்டும்.

ஆங்கிலேயன் பேசும் ஆங்கிலத்தைப் புரிந்து கொண்டு அதற்கு மறுமொழி சொல்லத் திறமையிருக்க வேண்டும். திறமை இருந்தால் போதாது, அவனைப் பார்த்து கைகால் பதறாமல் நிதானமாக, சாமர்த்தியமாகப் பதில் சொல்லுகிற சூட்சுமம் இருக்க வேண்டும்.

வெள்ளைக்காரனைப் பார்த்தாலே பல பேருக்கு கை காலெல்லாம் ஆடிவிடுகிறது. ஏழை ஜனங்கள் வெள்ளை யர்கள் வந்தால் சிதறி அடித்துக் கொண்டு ஓடிவிடுகிறார் கள். எங்கேனும் தோப்பிலும் துறையிலும், ஆற்றங்கரை யிலும் பதுங்கிக் கொள்கிறார்கள்.

இந்த வெள்ளையர்களைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. செக்கச்செவேர் என்ற உதடும், கோதுமையை உடைத்த நிறமும், அந்த கோதுமையை உடைத்த நிறத்துக் குள்ளே மண் நிறத்துப் புள்ளிகளும், கன்னங்களில் சிவப்பும் வெயில் தாங்காமல் ஒரு பழுப்பும் கொண்டு ஒரு விசித்திரக் கலவையாய்த் தோற்றமளிக்கிறார்கள்.

கண்கள் நீலமாக இருக்கின்றன. தலைமுடி செம்பட்டை யாக தாமிரக் கம்பியாக இருக்கிறது.

மயிலாப்பூர் சம்ஸ்கிருத சபையில் தங்கியிருந்த போது சீனிவாச ஐயர் என்கிறவர் சாம்பசிவ சாஸ்திரிகளை வாரும் என்றும் ஜட்கா வண்டியில் கூட்டிக்கொண்டு போனார்.

மரங்களடர்ந்த அகன்ற மவுண்ட் ரோடு வழியாக ஜட்கா வண்டி போயிற்று.

எங்கே போகிறோம் என்று கடைசிவரை சொல்ல வில்லை. மவுண்ட்ரோட்டில் ஒரு பெரிய கம்பிக்கதவு தாண்டி உள்ளே போய் பல கட்டுக்காவல்கள் தாண்டிப் படியில் ஏறி ஒரு வராண்டாவில் காத்திருக்கச் சொல்லி விட்டு ஒரு வெள்ளைக்காரரை அழைத்து வந்தார்.

வெள்ளைக்காரருக்கும், சீனிவாச ஐயருக்கும் நாற்காலி கள் போட, சாம்பசிவ சாஸ்திரிக்கு பாய் விரித்தப்பட்டது. அந்தப் பாயில் சாம்பசிவ ஐயர் உட்கார்ந்ததும் அவருக்கு வியர்த்துக் கொட்டியது.

வெள்ளையன் ருத்ரம் கேட்க வேண்டுமாம். அதற்காக சாம்பசிவ சாஸ்திரிகளைக் கூட்டிக்கொண்டு வந்திருக் கிறார்.

சாம்பசிவ சாஸ்திரிகளுக்குப் பேசவே முடியவில்லை. நாக்கு ஒட்டிக்கொண்டு விட்டது. மோர் கொடுத்து உற்சாகப்படுத்தி, சற்று காலார வராண்டாக்களில் அழைத்துப் போய் "அவன் நம்முடைய கலாசாரத்தை தெரிந்து கொள்வதற்காக கேட்கிறான். இப்போது முழி பிதுங்கி விவரம் தெரியாதவராக நடந்து கொள்ளாதீர்கள். இந்தியக் கலாசாரம் உயர்வு என்று அவனுக்குச் சொன்னால் தான் நல்லது. அவனால் நமக்கு சில நல்ல காரியங்கள் ஆகவேண்டியிருக்கின்றன.

இங்கே காங்கிரஸ் கட்சி துவங்க நான் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. இது ஒரு கலாச்சாரக் கழகம் என்று சொல்லி நான் காங்கிரஸ் பற்றி பிரசாரம் செய்யப் போகிறேன். எதையும் கெடுத்துவிடாதீர்கள். நீங்கள் ருத்ரம்,

சமகம் சொல்வதில்தான் இது இருக்கிறது." என்று சொல்ல சாம்பசிவ சாஸ்திரிகள் மறுபடியும் பாய்க்கு வந்து ருத்ரமும், சமகமும் உரக்கச் சொன்னார்.

அவன் கண்மூடி கேட்டுக் கொண்டிருந்தான். முடிந்த பிறகு எழுந்து ஒரு ரூபாய் காசு கொடுத்தான். அவனுடைய மனைவி சார்பாக இன்னொரு ரூபாய் காசு கொடுத்தான். இரண்டையும் வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டு கைகூப்பி சாம்பசிவ சாஸ்திரிகள் விடைபெற்றார்.

படியிறங்கி சீனிவாச ஐயர் ஏற்பாடு செய்திருந்த ஜட்கா வண்டியில் மறுபடியும் மயிலாப்பூருக்கு வந்தார்.

சமஸ்கிருத சபையில் அவருக்காக மூன்று இளைஞர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

பம்பாயிலிருந்து வருகிறார்களாம். அவர்களுடைய சகோதரர்களை கலவரம் செய்தார்கள் என்று பூனாவி லுள்ள எரவாடா சிறையில் தூக்கிலிட்டார்களாம் வெள்ளைக்காரர்கள். தூக்கிலிடப்பட்டவர்களுக்கு உயிரோடு இருந்தபோதே இராமேஸ்வரம், கன்னியாகுமரி பார்க்க வேண்டும் என்று ஆசையாம்.

உயிரோடு இருந்த போது இராமேஸ்வரம் போக முடியவில்லையென்பதால், அவர்களுடைய அஸ்தியைத் தென்திசை புண்ணிய நதிகளிலெல்லாம் கரைத்துக் கொண்டு வருகிறார்களாம். காவிரி தீரத்துக்குப் போய் அங்கு அஸ்தியைக் கரைக்க வேண்டுமாம்.

பிறகு, அங்கிருந்து திருச்சிராப்பள்ளிக்கும், மதுரைக்கும் இராமேஸ்வரத்துக்கும், கன்னியாகுமரிக்கும் போக வேண்டுமாம்.

இரண்டு வெள்ளிப் பானைகளில் அஸ்திகளைக் கொண்டுவந்து அதைப் பட்டுத்துணி சுற்றி வைத்திருந் தார்கள். திருகுமூடி போட்டுக்கொண்டு வந்திருந்தார்கள்.

அப்படி அவர்களோடு பயணப்பட்டு பல்வேறு க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு காவிரியில் அந்த இரண்டு பேருக்கும் மனக்கேதம் தீர்க்கும்படியாக நீத்தார் கடன் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

சாம்பசிவ சாஸ்திரி, தான் தங்கியிருக்கும் அறைக்குப் போய் பெட்டியைத் திறந்து விபூதிடப்பாவுக்குள் புதைத்து வைத்திருக்கிற காசை எட்டி பார்த்தார்.

கிட்டத்தட்ட எழுபத்தொன்பது ரூபாய். ஒரு ரூபாயும் எட்டணாவுமாக இருந்தது. இப்போது அந்த வெள்ளைக் காரன் கொடுத்த இரண்டு ரூபாய் சேர்ந்தால் எண்பத் தோரு ரூபாய் ஆகிவிட்டது. இவர்கள் ரயிலுக்குச் செலவு செய்து பிண்டதானத்துக்கும் காசு கொடுத்தால் நூறு ரூபாய் எளிதாக வந்துவிடும். நூறு ரூபாய் இருந்து வீட்டுக்குப் போனால், அடுத்த மூன்று, நான்கு மாதத்துக்கு... ஏன், ஜாக்கிரதையாகச் செலவு செய்தால் ஆறு மாதத்துக்குக்கூடப் போதும்.

நீலாயதாட்சி சந்தோஷப்பட்டுவாள்.

மயிலாப்பூர் கபாலீஸ்வர் கோயிலில் ஆரம்பித்து சீர்காழியில் இறங்கி, அங்கிருந்த பல க்ஷேத்திரங்களைப் பார்த்துக் கொண்டு செம்பனார்கோவில் வந்து, அங்கிருந்து மாயவரத்துக்கு அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டுத் திரும்பி வந்துவிடலாம்.

அவர்கள் எல்லா இடங்களுக்குமாகச் சேர்ந்து முப்பது ரூபாய் தர ஒப்புக்கொண்டார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகள் சந்தோஷமானார்.

மறுநாள் காலை ஜலம் தளும்பி நிற்கும் மயிலாப்பூர் கோயிலில் பெரிய படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு, அவர்களை முன்னிருத்தி இரண்டு மராட்டிக்காரர் களுக்கும் தனித்தனியே நீத்தார் கடன் செய்து வைத்தார்.

தூக்கிவிடப்பட்ட ஒருவர் பெயர் ரானடே, இன்னொரு வர் பெயர் பாலகிருஷ்ணன்.

தூக்கில் தொங்கும்வரை 'ராம ராம கிருஷ்ண கிருஷ்ண' என்று கூவிக்கொண்டிருந்தவர்கள் 'போலோ பாரத மாதாகி ஜெய்' என்று கடைசியாகக் கத்தினார்கள்.

இது அகால மரணம். வெகு நிச்சயமாக அந்த உயிர்களுக்கு மரண தாகம் எடுக்கும்.

இப்போது வார்க்கிற நீர் அந்த மரணதாகத்தைக் குறைக்கும்.

இப்படி ஊர் ஊராகப் புண்ணிய நதிகளாகப் போவது அவர்களைச் சமனப்படுத்தும். மறுபடியும் இந்தப் புவியில் நல்லவிதமாகப் பிறக்க வைக்கும்.

அவர்கள் ஜெயிலில் இருந்தபோது தங்கள் சகோதரர் களை அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று சொல்லி தங்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு இந்தியா முழுவ தும் சுற்றுப்பயணம் செய்யும்படியும் சொல்லி அதற்கு தங்களுக்கு உண்டான சொத்தை அவர்களுக்கு எழுதியும் கொடுத்து விட்டார்கள்.

சொத்து வாங்கிய சகோதரர்கள் தங்களுடைய சகோதரர்களின் மனக்கேதம் தீர்ப்பதற்காக பல்வேறு ஊர்கள் போய் சென்னைக்கு வந்திருக்கிறார்கள்.

இதுவும் சீனுவாச ஐயர்தான் ஏற்பாடு செய்திருந்தார்.

'நான் நேரடியாக உங்களோடு சல்லாபித்தால், எனக்கு மேலே இருக்கிற வெள்ளைக்கார அதிகாரிகள் என்னைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பார்கள். எனவே, நான் சொல்கிற ஆளைப் போய்ப் பாருங்கள். நான் சொன்னேன் என்று சொல்லுங்கள். அவர் வெகு அழகாக சிரார்த்த காரியங்கள் செய்து வைப்பார். அவருக்கு மனம் குளிரும்படி தட்சிணை செய்யுங்கள்.' என்று சொன்னா ராம்.

665142
891.8113
BAL
CPL 665142
CHENNAI PUBLIC LIBRARY

அவர்கள் மராட்டியும் சமஸ்கிருதமும் கலந்து பேசியது சாம்பசிவ சாஸ்திரிகளுக்குப் புரிந்தது.

அதில் ஒரு மராட்டிக்காரன், தஞ்சையில் உள்ள குடும்பங்களோடு உறவு கொண்டவர். அவருக்குத் தட்டுத்தடுமாறி தமிழ் பேச வந்தது. நிதானமாகப் பேசுகிற தமிழ் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது.

கிழக்குப் பக்கம் முழுக்க மயிலாப்பூர் குளத்தில் தாமரைகள் பூத்திருக்க, அவர்கள் மேற்குப் பக்கம் உட்கார்ந்து கபாலீஸ்வரரை நினைத்துத் தியானம் செய்து, ரானடேவுக்கும் பாலகிருஷ்ணனுக்கும் நீத்தார் கடன் செய்தார்கள்.

எல்லாம் முடித்து ஐந்து நிமிடம் மௌனமாகக் கண்மூடி, கைகூப்பி உட்கார்ந்திருந்தார்கள்.

'வந்து இந்த நீரையும் உணவையும் எடுத்துக்கொண்டு பசியாறி, மனம் அமைதியாகி, இறையருள் பெற்று சத்தியத்தில் கலக்கும்படியாகப் பிரார்த்தனை செய்து கொள்கிறோம், என்று கண்களில் நீர்தளும்ப வேண்டிக் கொண்டார்கள்.

சாம்பசிவ சாஸ்திரி நிதானமாகச் செய்து வைத்ததை மனம்விட்டுப் பாராட்டினார்கள்.

"எது செய்தால் நல்லது, எந்தக் கோயிலில் செய்தால் உத்தமம், எந்த நீர்நிலையில் செய்தால் உசத்தி என்பதை நீங்கள் தீர்மானம் செய்யுங்கள். எங்களோடு நாளை காலை ரயில் வண்டி ஏறித் தஞ்சைத் தரணி நோக்கிப் பயணப்பட சித்தமாக இருங்கள்..." என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

மறுநாள் ஜட்கா வண்டியில் வந்து பெட்டி, படுக்கைகளை எடுத்து வைத்து, அவரை உட்கார வைத்து, இவர்கள் பின்னாலேயே நடந்து வந்தார்கள்.

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வண்டி ஏறி, சாம்பசிவ சாஸ்திரிகளுக்குப் படுப்பதற்கு இடம் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

ஏரவாடா ஜெயில், பூனா காங்கிரஸ், புதுடெல்லி காங்கிரஸ் என்று நிறைய அரசியல் பேசிக் கொண்டு வந்தார்கள். தாதாபாய் நௌரோஜியைக் பற்றி விவரித்தார்கள்.

சீர்காழியில் இறங்கி, கோயில் கோயிலாகப் பல நாட்கள் நகர்ந்து, பல இடங்களில் தங்கி நீத்தார் கடன் முடித்து, இப்போது செம்பனார் கோவில் வந்திருக்கிறார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு செம்பனார் கோவில்தான் கிராமம், பல தலைமுறைகளாக அதுதான் குடியிருப்பு. வைதீகம்தான் பரம்பரையான வேலை.

ஊருக்குப் போகும் முன் வடகரையிலேயே உட்கார்ந்து ரானடேவுக்கும், பாலகிருஷ்ணனுக்கும் மறுபடியும் அவர் நீத்தார் கடன் செய்தார்.

அவர்களில் ஒருவன் குளித்துவிட்டு, கள்ளிகளை வைத்துச் சோறு பொங்கினான். உருண்டையாக்கினான். எள்ளோடு கலந்து வாழை இலைகளில் படைத்து, மகாபுண்ணியமான காவிரி நதி தீரத்தில் உத்தமமான வேளையில் நீத்தார் கடன் திருவதாக உரக்கச் சொல்லி, கிழக்கு நோக்கி வணங்கினான்.

பசித்த காகங்கள் பாய்ந்து வந்து உருண்டைகளைக் கொத்தி எடுத்துக் கொண்டு போயின. நாய்கள் பாய்ந்தோடி வந்து சாப்பிட்டன. தொலைவிலிருந்து ஒரு மலட்டுப்பசு ஓடிவந்தது. இலையையும் இலையில் கொட்டிய சோற்று உருண்டைகளையும் நாக்கால் துழாவி அள்ளி விழுங்கியது.

அந்த மராட்டியர்கள் சந்தோஷமானார்கள். விம்மி விம்மி அழுதார்கள்.

"என் சகோதரன் வந்து அங்கீகரித்துவிட்டுப் போனான்..." என்று சாம்பசிவ சாஸ்திரிகளின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

சாம்பசிவம் திருக்கோளக்கா, வைத்தீஸ்வரன் கோவில், திருமுல்லை வாசல், ஆச்சாள்புரம், திருக்கருக்காவூர், திருப்பொன்கூர், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, மேலையூர் என்று பல ஊர்களில் கோயிலில் வழிபட வைத்தார்.

எதிர்ப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு காலணா, காலணா வாகப் பல காலணாக்கள் கொடுத்தார்கள்.

கொள்ளிடம் தாண்டி மணல்மேடு கிராமம் ஏறி, அங்கிருந்து திருக்குறுக்கை, ஆனதாண்டவபுரம், நந்தம், கொன்றாத்தூர், கீழ்ப்பெரும்பள்ளம், புஞ்ஜை, ஆக்கூர், நீடூர், மாயவரம் எல்லா இடங்களுக்கும் போய், பிறகு வண்டி பிடித்து காவிரிப்பூம்பட்டினம் போனார்கள்.

நதியும் கடலும் சந்திக்கிற இடத்தில் மறுபடியும் நீத்தார் கடன் செய்தார்கள். அங்கிருந்து செம்பனார்கோவில் வந்தார்கள்.

காவிரிக் கரையில் அமைதியாக உட்கார்ந்து மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கும்போது கிராமத்து ஆட்கள் யாரோ போய், சாம்பசிவ சாஸ்திரிகள் வந்துவிட்டார் என்று சொல்லியிருப்பார் போலிருக்கிறது.

பிள்ளை சதாசிவம் ஓடிவந்தான்.

ஆறு தாண்டி உடம்பெல்லாம் நனைந்து அப்பாவைப் பார்த்து "அப்பா..." என்று கூவினான். அவரைக் கிழக்குப் பக்கம் நிற்கவைத்து நமஸ்கரித்தான்.

"ஹமாரா போட்டா..." என்று மராட்டியர்களுக்கு சாம்பசிவ சாஸ்திரிகள், இருபது வயது சதாசிவனை அறிமுகப்படுத்தினார்.

வட்டக் குடுமியும் அகலமான மார்பும் குறுகிய இடுப்பும் இடுப்பில் ஒற்றைத் துண்டும் மேலே ஒரு சரத் துண்டுமாக இருக்கிற பிள்ளையைப் பார்த்து அவர்கள் கைகூப்பினார்கள்.

அவனும் பதிலுக்குக் கைகூப்பினான்.

6

அப்பாவின் சாமான்களை பிள்ளை தூக்கிக்கொள்ள, ஆறு கடந்து அவர்கள் எல்லோரும் செம்பனார்கோவில் அக்ரஹாரத்துக்குள் நுழைந்தார்கள்.

பெட்டியிலிருந்த விபூதி ஜாடியை எடுத்து சுவாமிக்கு எதிரே வைத்து நமஸ்கரித்து, பிள்ளையை உள்ளே கொண்டு போய் வைக்கச் சொன்னார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

பிள்ளை அந்த விபூதி டப்பாவை அப்படியே எடுத்துக் கொண்டு போய் உள்ளுக்குள் வைத்துக் கதவைப் பூட்டி விட்டு வந்தான்.

மனைவி நீலாயதாட்சி வந்து நமஸ்கரிக்க, அவளுக்கு மஞ்சளும், குங்குமமும், வெற்றிலையும், மயிலாப்பூரில் தானம் தந்த புடவையும் பரிசளித்தார். ஓலைக்கூடையைக் கையில் கொடுத்து, அதை உள்ளே எடுத்துக்கொண்டு போகச் சொன்னார்.

ஓலைக்கூடையில் தாமிரப் பாத்திரங்களும், ஒரு வெள்ளி டம்ளரும் நிறைய காலணாக்களும், ஓரணாக் களும் இருந்தன. சட்டை தைத்துக்கொள்ள, மல்துணி ஆறேழு கெஜம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

"மெட்ராஸ்லேர்ந்து ஏதோ கூடை கூடையா கொண்டு வந்திருக்கிறீரே -ஜமாயும்" என்று ஊர் படியேறி வந்து விசாரித்தது.

ஊர்க்காரர்களுக்கு விபூதி கொடுத்தார். மராட்டியர்களை அறிமுகப்படுத்தினார். மராட்டியர்கள் அந்த ஊரையும், அந்த ஜனங்களையும் திகைப்போடு பார்த்தார்கள்.

"வெள்ளைக்காரனைச் சுட்டுக்கொன்னு தூக்குல தொங்கினானே... அவாளுக்காக சிரார்த்தம் பண்றயா... வெள்ளைக்காரனுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும், தெரியுமா...?" உரத்துச் சில பேர் சொல்ல, சாம்பசிவ சாஸ்திரிகள் பதில் சொல்லாது உட்கார்ந்திருந்தார்.

"எதுக்காக வெள்ளைக்காரனைச் சுட்டுக் கொல்லணும்...? அவன் ஆள்றதுக்குன்னு பிறந்திருக்கான். நாம அவன் கீழ வேலை செய்யறதுக்குன்னு வந்திருக்கோம். எட்டு வருஷம் முன்னாடி இந்தியா முழுக்க வந்த பஞ்சத்தை வெள்ளைக்காரனா இருக்க கொண்டு சமாளிச்சான். இதே வேற ராஜாக்களா இருந்தா சந்தி சிரிச்சிருக்கும். ஏகமா ஜனங்கள் செத்துப்போயிருப்பா. மாயவரம், தஞ்சாவூர், கும்பகோணத்துக்கெல்லாம் அத்தனை பாதிப்பு இல்லை..." என்று ஊர்க்காரர்கள் சொல்ல, மராட்டியர்கள் கோபம் கொண்டு எங்கெல்லாம் என்னவிதமான பாதிப்பெல்லாம் இருந்தது, மக்கள் உப்பில்லாமல் எப்படிக் கீரை தின்றார்கள், எப்படி களிமண் உருண்டையைத் தின்று செத்துப்போனார்கள்.' என்று பல ஊர்களைப் பற்றி விவரித்தார்கள். அப்படி எல்லாம் ஊர்கள் இருக்கிறதென்பதே செம்பனார்கோவில் அக்ரஹாரத்து அந்தணர்களுக்கு தெரியவில்லை.

"உலகமாளும் வெள்ளைக்காராளுக்கு வேண்டாத வாளை சாம்பசிவ சாஸ்திரி கூட்டிண்டு வந்து வீட்ல உட்கார வெச்சிருக்கான்... இது நல்லதில்லை. நமக்கும் கெடுதல். நம்ம கிராமத்துக்கும் கெடுதல் அவங்கிட்ட சொல்லிடுங்க..." என்று உரக்க இரைந்தார்கள்.

ஆனால், மராட்டியர்கள் இரண்டு நாள் தங்கிவிட்டு, சிரமபரிகாரம் செய்து கொண்டு விடைபெற்றுக் கொண்டு தஞ்சையை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

செம்பனார்கோவிலிருந்து மாயவரம் வரை போய் அவர்களை அனுப்பிவிட்டு, சாம்பசிவ சாஸ்திரியும் அவர் மகன் சதாசிவமும் மறுபடி கிராமத்துக்கு வந்தார்கள்.

ஊருக்கு வந்து நான்காவது தினம்தான் சாம்பசிவ சாஸ்திரிக்கு வீட்டோடு உட்கார்ந்து அமைதியாக பேச முடிந்தது. அதுவரை அந்த விபூதி டப்பா திறக்கப்படாமல் இருந்தது. அவர் அதைக் கொண்டுவரச் சொல்லி, வீட்டுக் கதவைச் சாத்தி, கூடத்தில் துணி விரித்து, மொத்தமும் கொட்ட... நூத்துப்பதினாறு ரூபாய் காசு துடைத்து எடுக்கப்பட்டது.

வெள்ளி டம்ப்ளர் இரண்டும், தாமிர டம்ப்ளர் ஐந்தும், பஞ்சபாத்திரம் ஒன்றும், தாமிரச் சொம்பு ஒன்றும், லண்டனில் இருந்து இறக்குமதியான பேனாக் கத்திகள் மூன்றும், நோட்டுப் புத்தகம் ஒன்றும், காலி மதுப்புட்டியும், கட்டை பேனாவும், கண்ணாடி கோலிக் குண்டுகளும், பீங்கானில் செய்த அம்மணமான குழந்தை பொம்மையும், தங்கப் பூணூலும், வெள்ளிப்பூணூலும் ஓலைக் கூடையிலிருந்து வெளியே வந்தன.

"காசுக்கு ரொம்பச் சிரமப்பட்டியோ நீலாயதாட்சி..." அவர் கனிவோடு மனைவியைக் கேட்டார்.

"ஆறு ரூபா கடன் வாங்கியிருக்கேன். அதை மட்டும் அடைச்சுடணும்..." என்று அவள் சொல்ல, அவளுக்கு ஆறு ரூபாய் காசை எண்ணிக் கொடுத்தார்.

மகன் பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டானாம். சம்பளம் கட்ட முடியவில்லையாம். இருபது வயதுக்கு அவன் எட்டாவது படித்துக் கொண்டிருந்தான். ஆங்கிலப் பாடம் அறவே புரியவில்லை என்று சொன்னான். தமிழில் பல செய்யுள்கள் மனப்பாடம் செய்திருப்பதைச் சொல்லிக் காட்டினான்.

வேதபாடசாலைக்குப் போகவும் விருப்பமில்லை என்று சொன்னான். வெறுமே பல்வேறு ஊர்களுக்கு,

உற்சவங்களுக்குப் போய் வந்து கொண்டிருப்பதாகவும் அங்கங்கே விருந்துகளில் அமர்ந்து சாப்பிட்டு வந்ததாகவும் சொன்னான்.

மாப்பிள்ளை மகாமகத்துக்கு குடந்தை போயிருப்பதாகவும் அங்கே மாப்பிள்ளை பானகம் செய்து விற்கிற கடைகளைக் குத்தகைக்கு எடுத்திருப்பதாகவும் கோயிலுக்குக் காக கொடுத்திருப்பதாகவும் மூத்த பிள்ளை சதாசிவம் சொன்னான்.

அவர் பஞ்சாங்கம் பார்த்து, எப்போது மகாமகம் என்று புரிந்து கொண்டார். மூன்று நாட்களில் அவரும் அவர் மனைவியும் மூத்த பிள்ளையும் வீட்டைப் பூட்டிக்கொண்டு குடந்தைக்குப் பயணப்பட்டார்கள். காசை அதேபோல விபூதி டப்பாவில் போட்டு, மேலே விபூதி நிரப்பிப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்து, இறுகப் பிடித்துக்கொண்டு மாயவரம் ரயில்வே ஸ்டேஷன் நோக்கி மாட்டு வண்டியில் போனார்கள்.

"உனக்குத் தெரியுமா...? நூறு வருஷத்துக்கு முன்னாடி நாப்பத்துஞ்சு வருஷம் கோயில் பூட்டியிருந்தது. உள்ள முழுக்கக் கறையான் புத்து. கதவே திறக்க முடியலை. இடிச்சுத் திறந்ததா எங்க முன்னோர்கள் சொல்லியிருக்கா. இப்போ அப்படி எல்லாம் இல்லை. கோயில் திறந்திருக்கு. மூணு காலம் பூஜை நடக்கறது. உற்சவம், திருவிழா- இதோ, இந்த மகாமகம் எல்லாம் நடக்கறது.

என்ன ஒண்ணு- வெள்ளைக்காரங்க இட்ட போய் முன்னாடியே சொல்லிடணும். இந்த மாதிரி, இன்ன மாசம், இன்ன விசேஷம் நடக்கறதுன்னு. அவன் என்னன்னு கேட்பான். அவனுக்குக் கதை சொல்லணும். கதை நிஜமானு கேட்பான். ஆமான்னு சொல்லணும். அவன் சிரிச்சுட்டு சரி அப்படினு சொல்வான். அதுக்கு அனுமதி கொடுத்துட்டான்னு அர்த்தம். இதோட போறாதுடா... நீ மேற்கொண்டு ஏதாவது உதவி

செய்யணும்னு கைகூப்பிக் கேட்கணும். நான் மேல எழுதிக் கேட்கறேன்னுவான்.

மதராஸுக்கு இரண்டு, மூணு முழ நீளத்துக்கு இங்க விசேஷமாம்- இதுதான் காரணமாம் அப்படினு வரிஞ்ச வரிஞ்ச இங்கிலீஷில லெட்டர் எழுதி, அதுக்கு இவா உதவி கேட்கறா. அப்படினு அனுப்புவான். இங்கேர்ந்து அந்தக் கடுதாசி போய்ச் சேரப் பத்து நாளாகும். அங்க ஒரு பத்து நாள் இருக்கும். அங்கேயிருந்து பதில் வர, ஒரு பத்து நாளாகும்.

ஒரு மாசத்துல அங்கேயிருந்து பதில் வந்தவுடனே இங்கே சரி, என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்யறேன். ஆனா, எனக்கெதிரா ஒரு கோஷமும் போடப்படாது. அப்படிக் கோஷம் போடறவா இருந்தா உடனே நிறுத்திடுவேன் அப்படின்னு ஒரு நிபந்தனையோடு சொல்வான். நாங்க என்னத்துக்கு பிரபு உங்களை எதிர்க்கப் போகிறோம்...? நீங்க நல்லாயிருந்தாதான், நாங்க நல்லா இருக்க முடியும் அப்படின்னு சொல்வோம்.

'அப்படிச் சொல்லாத- இங்கிலாந்துல இருக்கிற எங்க ராஜா நல்லா இருந்தாதான், நாங்க நல்லா இருக்க முடியும். நாங்க நல்லா இருந்தாதான், நீங்க நல்லா இருக்க முடியும். நீங்க நல்லா இருந்தாத்தான்-' அப்படினு அவன் அடுக்கிண்டே போவான்.

எல்லோரும் வரிசையா நின்னு சட்டைமேல வேட்டியை இறுக்கிக் கட்டிண்டு, அதும்மேல கோட்டு போட்டுண்டு ராஜா ரொம்ப சௌக்கியமா இருக்கணும் அப்படினு பாட்டுப் பாடுவோம். இப்படிப் பாடினாலே அவனுக்குக் குளிர்ந்து போயிடும்.

இந்தக் கும்பகோணத்துல ஜனங்கள் ரொம்ப நல்ல மாதிரினு குறிப்பு எழுதி வெச்சுடுவான். உனரைச் சுத்தம் பண்றதுக்கு நூறு, குளத்தைச் சுத்தம் பண்றதுக்கு இருநூறு, கோயிலுக்கு வெள்ளையடிக்க அம்பது, வைதீகச் செலவுக்கு

நாற்பது, அன்னதானத்துக்கு ஐநூறு, தண்ணீர்ப்பந்தல் வைக்க இருநூறுன்னு காசை அள்ளிவிடுவான். பின்னாடி வரியா வாங்கிடுவான்றது ஒண்ணு இருக்கு. ஆனாலும் இப்படி கொடுக்கிற மனசு யாருக்கும் வரும்...?

இதுவே, இதுக்கு முன்னாடி ஆட்சி பண்ண நவாப் செய்வானா...? அவன் செய்வான்னு நாம நினைச்சுப் பார்த்திருப்போமா...? இப்படி விமரிசையா மகாமகம் நடக்கறதுன்னா, அது வெள்ளைக்காரன் கருணையாலதான், ஒண்ணு சொல்லிட்டேன்... யாராவது இங்கே காங்கிரஸ், கீங்கிரஸ்ன்னு பேசினேள்... ஒரே அறை, என் கையாலதான் சாவு..."

அந்த நகரசபைத் தலைவர் விலாவாரியாகத் திண்ணையில் உட்கார்ந்து பேச, எதிரே மற்றவர்கள் கைகட்டி அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"காங்கிரஸ் எங்கப்பா பேசறது...? அவாளே வந்து வெள்ளைக்காரனைத் துதி பாடிண்டுதானே இருக்கா..."

"இல்லை. அதுக்கு நடுவிலே யாரோ வெவ்வேறு விதமா பேசறதா எனக்குத் தகவல் வந்தது. பூனால, பாம்பேல, கல்கத்தாவுல, டெல்லியில வெள்ளைக்காரனுக்கு எதிரா குரல் கிளம்பி இருக்கு. தேவையில்லாத ரெண்டுங்கெட்டான் பசங்கள் வெள்ளைக்காரனைத் தூக்கிப் போட்டுட்டு, நாமே ஆட்சி பண்ணணும்னு ஆரம்பிச்சிருக்கா.

வெள்ளைக்காரன் சும்மாபோவானா...? போகும்போது மில் எடுத்துண்டு போயிட்டான். ரயில் எடுத்துண்டு போயிட்டான். அவனுக்கும் உண்டான கப்பல் எடுத்துண்டு போயிட்டான். வெச்சுண்டிருந்த துப்பாக்கி எல்லாம் எடுத்துண்டு போயிட்டான்னா என்ன பண்ணுவேள்...?

நீங்க ரயில் கண்டுபிடிப்பேளா...? உங்களால துப்பாக்கி கூடப் பழக முடியுமா...? வெறும் பட்டைக் கத்திதானே நீங்க... உங்களால எப்படி ஆட்சி பண்ண முடியும்...?

அவர் உரத்துக் கேட்க, பக்கத்தில் உள்ளவர்கள் "ஆமாம், ஆமாம்" என்று தலையசைத்தார்கள்.

"அர்ச்சுனன் நின்ன இடத்துலேர்ந்து ஆயிரம் பேரைப் பாணம் போட்டுக் கொன்னாங்கறதெல்லாம் கதை, மருந்தை கிடிச்சு உள்ளே குண்டு போட்டு டொப்புன்னு கடறான். எதிரில் இருக்கறவா பத்து பத்துப் பேரு செத்துப் போறா. மூஞ்சியைப் பொத்திண்டு 'ஐயோ'ன்னு பூமியில் விழறா.

இன்னும் பெரிய குழாய்ல மருந்தைக் கிடிச்சு, உருக்கின இரும்புக்குண்டை வெச்சுக் கோட்டையைப் பார்த்து நெருப்பு வைக்கிறான். டொம்னு வெடிக்கறது. குண்டு பறந்து வந்து, கோட்டைக் கதவுல இடிக்கறது. கோட்டைக் கதவு அப்பளம் மாதிரி விழறது. கப்பல் கப்பலா பீரங்கியைக் கொண்டுவந்து இறக்கி வெச்சிருக்கான். எல்லாக் கோட்டையிலும் பீரங்கி இருக்கு. பீரங்கிக்குச் சக்கரவண்டி இருக்கு. ஒரு சக்கரவண்டியை ரெட்டைக்குதிரை பூட்டி இழுத்துண்டு வரா. போன வருஷமே நாலு பீரங்கி கும்பகோணத்துக்கு வந்துடுத்து. தஞ்சாவூர்ல பதினஞ்சு பீரங்கி இருக்கு.

ஒவ்வொரு பீரங்கிக்கு பக்கத்துலேயும் பத்துப் பத்தா இரும்புக் குண்டை வெச்சுண்டிருக்கான். நாலு பக்கமும் நாலு பத்து நாப்பது உருண்டைகள் இருக்கு. எதிரிகள் வரான்னு தெரிஞ்சவுடனே, தபதபன்னு உள்ள ஓடிப்போய் மருந்து பீப்பாயைக் கொண்டுவந்து அள்ளி பீரங்கிக்குள்ளே போட்டு, மூங்கிலால உள்ளே போட்டுகிட்டிக்கறான்.

இரும்புக்குண்டை குழாய்க்குள்ள போட்டுடறான். திரியை வெச்சுத் திணிச்சு நெருப்பு வைக்கறான். நெருப்பு புஸ்புஸ்ன்னு எரிஞ்சு, உள்ளே போய் வெடிமருந்துல

பத்திக்கறது. கொஞ்ச நேரம் ஒரு சத்தமும் இல்லை. 'டமார்'னு வெடிச்சு, பீரங்கிவண்டி பின்னாடி ஓடிவர்றது.

புதுசா மதராஸ்லேர்ந்து வந்த பீரங்கியைப் பட்டீஸ்வரம் கொண்டு போய், அங்க சோழமேடுங்கற இடத்துல நிக்கவெச்சு, அங்க இருக்கற வெத்து மதில்கவருக்கு எதிரே பீரங்கி வண்டியை வெடிச்சு நெருப்புக் கொளுத்தி அடிச்சான்... அப்படியே பெரிய கோட்டைச் சுவர் தூள் தூளாயிடுத்து..."

"அந்தச் சுவரை இடிச்சுட்டானா...? அது இராஜராஜன் காலத்து மாளிகையில்லையோ...?"

"யார் மாளிகையா இருந்தா என்ன... வெள்ளைக்காரன் எதை வேணாலும் இடிப்பான். யாரும் ஒண்ணும் பண்ண முடியாது..."

"அதைப் பாதுகாப்பா வைக்கணும்னு இன்னொரு வெள்ளைக்காரனே சொல்லிண்டிருந்தான்யா..."

"அதெப்படி பாதுகாப்பா வைக்க முடியும்...? அது, மழையிலேயும் வெயில்லேயும் காய்ஞ்சு எப்போ விழுவோம்னு நினைச்சுண்டிருந்தது. எருமை இடிச்சாலே விழுந்துவிடும். பீரங்கிக்குத் தாக்குப் பிடிக்குமா...? மாத்தி மாத்தி நாலு பீரங்கி வெடிச்சவுடனே, மொத்தச் சோழ தேசத்துச் சுவரும் மண்ணா போயிடுத்துப் போ... அதைப் பார்த்தவுடனே, எனக்கு ஒரே அழுகை... அலறிட்டேன். நான் அலறி அழறதைப் பார்த்து, வெள்ளைக்காரன் வாய்விட்டுச் சிரிக்கிறான். இப்படிப்பட்டவாதான் நகர சபைக்குத் தலைவரா இருக்கணும்னு என்னைத் தட்டிக் கொடுக்கறான்..."

அவர் மறுபடியும் கண்ணில் ஜலம் வழியச் சொல்ல மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"என்னென்னவோ பண்ணி வெள்ளைக்காரனைக் கைக்குள்ள போட்டுண்டீர்..." என்று மற்றவரும் பாராட்டிச் சொல்ல, அவர் பெருமையோடு சிரித்தார்.

அரசாங்கம் கொடுத்த காசுகளை அவர்கள் பிள்ளையார்சுழி போட்டுக் கணக்கு எழுதிச் செலவழிக்கத் துவங்கினார்கள். மிகவும் சிக்கனமாகவும் அதே சமயம் எல்லாம் ஜனங்களுக்கும் உதவியாகவும் இருக்க வேண்டு மென்று சொன்னார்கள்.

"வெள்ளைக்காரன் சாதாரணமானவன் இல்லை. அதைத் தயவு செய்து புரிஞ்சுக்கோங்கோ. நம்மளவாளையே நம்ம பக்கத்துலேயே வேவுக்காரானா அவன் அனுப்பறான். இது எனக்கு நன்னா தெரியும். எனவே வேவுக்காராளுக்கு எதிர்லயே ஏதாவது பண்ணி மாட்டிக்காதே, வெள்ளைக்காரன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாம முழிக்காதே, தெள்ளத் தெளிவா, நாணயமா, சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இருங்கோ, சத்தியம், வெள்ளைக்காரன் ரெண்டும் ஒண்ணு...

வெள்ளைக்காரன் யாராவது வந்தாக்கா, அவனுக்கு முதல்ல இடம் போட்டு, நாற்காலி போட்டு, அவனுக்குக் குடிக்கறதுக்கு ஏதாவது கொடுத்துக் குஷிப்படுத்துங்கோ..."

நகரசபைத் தலைவர் பேசிக்கொண்டிருக்க, யாரோ தபதபவென்று ஓடிவந்தார்கள்.

"பெரியவா வரா... பெரியவா வரா..." என்று உரக்கக் கத்தினார்கள்.

அந்தக் கூட்டம் அப்படியே எழுந்து நின்றது. எங்கு வருகிறார்...? என்று கேட்டுக் கொண்டது.

அந்தத் திசை நோக்கி நூறு, நூற்று இருபது ஆண்கள் ஓடினார்கள். அப்படி ஆண்கள் ஓடுவதைப் பெண்கள் வியப்போடு பார்த்தார்கள்.

நூற்று இருபது ஆண்கள் கும்பகோணத்தின் எல்லைக்கு, காவிரியின் வடகரைக்கு ஓடியதே அன்று கும்பகோணம் முழுவதும் பெரும் பேச்சாக இருந்தது.

அவர்களோடு ஓடுவதா அல்லது உட்கார்ந்து தண்ணீர்ப் பந்தல் கட்டுவதா என்று யோசித்து, விஸ்வநாதன் தண்ணீர்ப் பந்தல் கட்டலாம் என்று முடிவு செய்தான்.

பந்தல் கட்டுகிற முதலியாரை அழைத்து, ஒரு ரூபாய் கொடுத்தான்.

வயசாளி முதலியார் பூமியைத் தொட்டு வணங்கிக் குழித்தோண்டினார். மாவிலையும் மஞ்சளும் தடவி, மாவிலை கட்டிய பந்தற்காலை அழுத்தி வைத்தார்.

"அமோகமா இருக்கணும். நிறைய சம்பாதிக்கணும்..." என்று அவனை வாழ்த்தினார்.

"என் கைராசி, எங்க கடை கட்டினாலும் அந்தக் கடை நல்லபடியா இருக்கும். கடை நல்லபடியா போச்சுன்னா, எனக்குக் கூட ஒரு ரூபா கொடுங்க..." என்று முதலியார் கேட்க, அவன் நான்கணா எடுத்து அப்போதே கொடுத்தான்.

முதலியார் சந்தோஷமானார்.

அந்தப் பாதையில் முப்பது அடிக்குப் பதினைந்து அடி மிகப்பெரிய பந்தல் போட்டு இறுகப் பின்னி, தனியாக ஒரு தடுப்புப் போட்டு சாமான்கள் வைக்க ஒரு அறை ஏற்படுத்தி, வந்த ஜனங்கள் அமர்ந்து கொள்ள செங்கல்லால் மண்மேடை கட்டி, அதைக் களிமண் பூசிக் கொடுத்தார்.

விஸ்வநாதனுக்குப் பந்தலைப் பார்த்ததும் மிகச் சந்தோஷமாகிவிட்டது.

விம்மி விம்மி அழுத அக்காவின் நினைவு வந்தது. தோளில் மூட்டையோடு பட்டணத்துக்குப் போய் ஏதாவது

காசு பார்த்துண்டுவரேன் என்று தளர்ந்து நடந்துபோன அத்திம்பேரின் ஞாபகம் வந்தது.

அதனால் அந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு 'சாம்பசிவம் தண்ணீர்ப் பந்தல்' என்று பெயர் எழுதி வைத்தான்.

ஒரு மடத்தைச் சார்ந்த பெரியவர், அவன் தண்ணீர்ப்பந்தல் இருந்த இடத்தை நோக்கித் திரும்பினார்.

தன்னுடைய பரிவாரத்துடன் அந்தத் தெருவில் இரண்டு புறமும் வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தார்.

அவனும், அவன் மனைவியும் பானகம் கரைத்த வெங்கலப்பானையை நிறுத்தி வைத்தார்கள். பெரிய கங்காளம் முழுவதும் சுத்தமான நீர் நிரப்பி வைத்தார்கள். மோருக்குத் தனியே ஒரு பானை போட்டு, அந்தப் பானையில், 'சிவமயம்' என்று எழுதி மேடை மீது நிறுத்தினார்கள்.

அந்தப் பெரியவர் தண்ணீர்ப் பந்தலிடம் நின்று திரும்பிப் பார்த்தார். புன்னகை செய்தார்.

அவனும், அவன் மனைவியும் ஓடிப்போய் வணங்கினார்கள். உள்ளே வரும்படி வேண்டினார்கள்.

அவர் உள்ளே காலடி எடுத்து வைத்தார்.

7

வாசலைப் பார்த்து தண்ணீர்ப் பந்தலுக்குள் விஸ்வநாதனும் பர்வதமும் அருகருகே நின்றிருந்தார்கள். விஸ்வநாதனைவிட பர்வதம் பதினான்கு வயது சிறியவள். அம்மாவின் தம்பியான சொந்த மாமாவை திருமணம் செய்து கொண்டிருந்தாள். இரண்டாம் மனைவியாக வாக்கப்பட்டாள். திருமணத்தின் போதே எல்லோரும்

கேலிசெய்தார்கள். எதையும் கேலி செய்யும் மனிதர்கள் இதற்கு வெகுண்டையாகப் பலதும் சொன்னார்கள்.

"உனக்கு ஒண்ணுமே தெரியாது. வெறும் பதிமூணு வயசுக் குட்டி. அவன் ஊரையே வித்துட்டு வந்தவன். அவனோட எப்படிக் குடித்தனம் பண்ணப் போற...?" என்று பயமுறுத்தினார்கள்.

அவள் அம்மா தைரியம் கொடுத்தாள்.

"எதற்குப் பயப்படுகிறாய்...? ஒன்றைப் புரிந்துகொள். அவன் என் தம்பி. நீ எங்கோ போய் எவரிடமோ அவஸ்தைப்படுவதைவிட, இங்கு இவனோடு இருப்பது உத்தமம். இவன் தணியாத தாகம் உள்ளவன். பிரேமைக்கு வசப்படுகிறவன். அதுவும் தவிர, நான் அழுதால் என் தம்பிக்குப் பொறுக்காது. அதனாலேயே நீ சீரும் சிறப்புமாக குடித்தனம் பண்ணலாம். ஆம்பளைக்கு வயதென்ன, சாமர்த்தியம்தான் இளமை. காசு சம்பாதித்தல்தான் அழகு. இதை என் தம்பி ஆவலாகச் செய்வான். அவனுக்குத் துணையாக இரு... போதும்.

அவனுக்கு முதலில் வாக்கப்பட்டவள் இப்படித் துணையாக இல்லை. அந்த சாமர்த்தியம் அவளுக்குப் போதவில்லை. அதையும் தவிர நோஞ்சான். அவனைச் சந்தோஷப்படுத்த இயலவில்லை. அதையும் தவிர முட்டாள். அவர்கள் வீட்டு மடிசஞ்சிகள் பேச்சைக் கேட்டுக்கொண்டு இந்த நேரம் ஆகாது, இப்போது ஆகாது என்று அசிங்கப்படுத்திவிட்டாள். அவன் அவளிடம் பேரவஸ்தைப்பட்டிருக்கிறான். எல்லாம் தெளிந்து நல்ல பெண்ணுக்காக ஏங்கி வந்திருக்கான். உன்னை நிச்சயம் நல்லபடி வைத்துக்கொள்வான். இது அவனே சொன்ன வார்த்தையாக உனக்குச் சொல்கிறேன்..." என்று சொன்னாள்.

விஸ்வநாதனுக்கு நான்கைந்து சகோதரிகள். அதில் மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து அவள்

இறந்துபோக, அடுத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து, இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டான்.

கும்பகோணம் வேதபாடசாலையில் படித்து, வைதீகம் தான் வாழ்க்கை என்று ஆரம்பித்தாலும் விஸ்வநாதனுக்கும் வைதிகத்தில் மட்டுமே மனம் போகவில்லை. சென்னைக்கு போய் ஆங்கிலம் பேசும் அந்தணர்களைப் பார்த்தவுடன் மூச்சடைத்துப் போயிற்று. மூன்று மணி நேரம் நதிப்பிரவாகமாக கோகலே ஹாலில் ஒருவர் பேசினார். வந்திருந்த நூற்று அறுபது பேரும் எழுந்து நின்று இதைவிடாது கைதட்டினார்கள். என்ன அற்புதமான பேச்சு என்று ஆங்கிலத்திலேயே குசலம் விசாரித்துக் கொண்டார்கள்.

'அடடா... எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம்.' என்று விஸ்வநாதனுக்கு உறைத்தது. அன்று இரவெல்லாம் மனம் புழுங்கினான்.

'சரி... இனி என்ன செய்வது...?' என்று யோசித்தான்.

'காசு சண்டாளம்... ரொம்ப கொண்டாடாதே.' என்று சில பெரியவர்கள் சொன்னது ஞாபகம் வந்தது.

'லக்ஷ்மிதேவி சுகம் அல்லவா... சௌக்கியமல்லவா... பாதுகாப்பல்லவா... இதைப் போய் எப்படி அவதூறாகப் பேசுவது...?' தொடர்ந்து யோசனை செய்தான்.

செல்வம் சேர்ப்பதிலும் கஷ்டம்... செல்வத்தைப் பாதுகாப்பதிலும் கஷ்டம். செல்வத்தைச் செலவழிப்பதிலும் துக்கம் என்று பகவத்கீதையில் கிருஷ்ணர் சொல்கிறார் அல்லவா...

உள்ளே ஒரு கேள்வி வந்தது.

சும்மா இருப்பதிலும்தான் துக்கம், துக்கம் எதிலில்லை? எப்போது மனிதனாகப் பிறந்துவிட்டோமோ, அப்போது துக்கத்தை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அந்தத்

துக்கத்தின் நடுவில் கிடைக்கிற சுகத்தைப் பணம் தரமுடியும்.

பிடித்துத் தொங்குகிற வேரை எலி அறுக்கட்டும். மேலே புலி உறுமட்டும், கீழே பாம்பு சீறட்டும். ஆயினும் நடுவே தேன் கூட்டிலிருந்து சொட்டுகிற தேன் நித்திக்கத்தானே செய்யும்? கசக்கச் செய்யுமா? இதுதானே வாழ்க்கை. இது புரிஞ்சி... இதை அனுபவி என்றுதானே அந்தக் கதை சொல்கிறது. நாக்கில் தேன் இருக்கும் போது பாம்பாவது, புலியாவது, எலி கடிக்கிற வேராவது...

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

இனி வைதீகம் மட்டுமே வாழ்க்கை என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. வேறு ஏதேனும் செய்ய வேண்டும். இனிமேல் இங்கிலீஷ் படித்து வேலைக்குப் போவது என்பது சாத்தியமே இல்லை. ஏதேனும் தொழில் செய்ய வேண்டும்.

என்ன தொழில் செய்யலாம்...? அரிசி வாங்கிப் பட்டணத்துக்குக் கொண்டு போய் விற்கலாமா...? மர வியாபாரம் நல்லதா...? பம்பாயிலிருந்து பட்டணத்துக்குத் துணி வருகிறது. பட்டணத்திலிருந்து கும்பகோணத்துக்கோ, மாயவரத்துக்கோ துணி மொத்த வியாபாரம் செய்து விடலாமா...? வணிகர்களிடம் பழைய நகைகள் இருக்கின்றன. அவற்றை இப்போது பட்டணத்திலுள்ள பிராமணர்கள் ஆசையாகக் கேட்கிறார்கள். நம்பிக்கையான முறையில் நடந்து கொண்டால் வணிகர்கள் பல்வேறு நகைகளைக் கையில் கொடுத்து அனுப்பிவிடுவார்கள். அதை ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு போய்ப் பட்டணத்தில் விற்கலாம். வைரம் பற்றிக் கற்றுக்கொள்ளலாம்.

ஒரு தேவகோட்டை செட்டியாரிடம் கல்லுகல்லாகக் காசுமாலையே நூற்றுநாற்பத்தேழு இருந்தது. "எல்லாம் பல்வேறு குடும்பங்கள் அடகு வைத்தது. கடனுக்குக் கையெழுத்துப் போட்டு விட்டு, இருபது காசுமாலை எடுத்துக் கொண்டு போ, அதைச் சாமர்த்தியமாகப்

பட்டணத்தில் விற்று லாபம் எடுத்துக்கொள். உண்டான அசலை எனக்குக் கொடு..." என்று செட்டியார் சொல்ல, கண் அகல விரித்து அவரைப் பார்த்தான் விஸ்வநாதன்.

"ஆமாம், ஆறு தலைமுறையாக இந்த நகைகள் எங்களிடம் இருக்கின்றன. உருக்குவதற்கும் மனசு வரவில்லை. பூட்டிப்பூட்டி வைத்து என்ன செய்வது...? நான் வேறு ஏதேனும் தொழில் தொடங்கலாம் என்று நினைக்கிறேன். அதற்குண்டான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

புத்தகமும், காகிதமும் நன்றாகப் போகும் என்று சொல்கிறார்கள். அதில் கொஞ்சம் காசு போடலாம். வெளி நாட்டிலிருந்து கப்பலில் பேப்பர் தருவிக்கலாம் என்றிருக்கிறேன்..." என்று சொன்னார் செட்டியார்.

"கண்ணாடி ஜாடிகள், பீங்கான் பொருட்கள், மருந்துகள் என்று என்னென்னமோ இங்கிலாந்திலிருந்து வருகின்றன. மதுவகைகளுக்குத் தனி கிராக்கி இருக்கிறது. அத்தனையுமே மொத்தமாக வாங்கிச் சில்லறையாக விற்றால் இன்னும் அதிகம் லாபம் கிடைக்கும்.

நான் விரைவில் பட்டணத்துக்குப் போய்விடுவேன். அதற்கு முன்பு இந்த நகைகளையெல்லாம் வெள்ளிப் பணமாக மாற்ற முயற்சி செய்கிறேன். வெள்ளிப்பணம் எடுத்துக்கொண்டு போக வசதி. டக்கென்று கைமாறும். நகைகளை வைத்துக்கொண்டு உரசி உரசித் தேய்படுகிறதைப் பார்க்கிற போது உயிர்போகிறது..." என்று சொன்னார்.

கும்பகோணத்தில் பாத்திர வியாபாரம் பிரசித்தமாகி வருகிறது. பித்தளைப் பாத்திரங்களுக்கு சயம் பூசி விற்கிறார்கள். வெங்கலப் பாத்திரங்கள் அமோகமாக விற்பனையாகின்றன. இவற்றை அள்ளிக்கொண்டு பட்டணத்துக்குக் கொண்டுபோய் விற்றாலும் கூட நல்ல வருமானம் கிடைக்கும். பட்டணத்திலிருந்து தகரப் பாத்திரங்கள் பம்பாய் கற்சட்டிகள், ஜாடிகள் கொண்டு

வந்து கும்பகோணத்தில் விற்கலாம். ஆனால் பேய் அலைச்சல். அதே சமயம் பித்தளை வியாபாரம் ஒரு நபர் வியாபாரம் அல்ல. குடும்ப வியாபாரம்.

கும்பகோணம் கடையை ஒருவர் கவனித்துக்கொள்ள வேண்டும். பட்டணத்தில் ஒருவர் கடை போட வேண்டும். குறுக்கும் நெடுக்குமாக ஒருவருக்கு ஒருவர் போய்வர வேண்டும். பெண்கள், ஆண்கள், கிழவர்கள், குழந்தைகள் என்று எல்லோரும் பாத்திரக் கடையில் வேலை செய்ய வேண்டும். குடம் அடிக்கிறவரும், தவலை அடிக்கிறவரும் கடைக்காரருக்குச் சொந்தக்காரராக இருந்துவிட்டால் இன்னும் சௌகரியமாக இருக்கும். இப்படித்தான் கும்பகோணத்தில் மூன்று, நான்கு பெரிய குடும்பங்கள் இருக்கின்றன. மாமன், மச்சான், மைத்துனன், பெரியப்பா, சித்தப்பா என்று பின்னிப் பிணைந்து பாத்திர வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அற்புதமாகக் கொடிகட்டிப் பறக்கின்றனர்.

குழந்தைகளை வளர்க்கும் போதே குடங்களுக்கு நடுவே உட்காரவைத்து, இதுதான் உன்தொழில் என்பதாக வளர்க்கிறார்கள். இதில் நிச்சயம் நல்ல எதிர்காலம் உண்டு என்று சொல்கிறார்கள்.

விஸ்வநாதனுக்கு அப்படிச் சொல்லப்படவில்லை. வைதீகத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று சொல்லப் படவேயில்லை. தன்னாலும் சொல்ல முடியவே இல்லை. மூத்தது பெண். அடுத்தது பிள்ளை மூத்தாளுக்கு மூன்று பையன்கள். அந்த மூன்று பேரையும் மூன்று உறவுக்காரர் கள் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். பெண்ணாக இருந்தால் கூட்டிக்கொண்டு போகமாட்டார்கள். முப்பத்து நாலு வயதில் நண்டும் சிண்டுமாய் குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. இவர்கள் எதிர்காலத்துக்கு என்ன உத்தரவாதம் கொடுத்து விட்டுப் போவது என்று புரியவில்லை.

வேதம் படி, காசு தானா வரும் என்று அப்பா சொன்னார். ஆனால் நாலணா காசுக்கு அத்திம்பேர் படுகிற அவஸ்தையைப் பார்க்கிறபோது கண்ணுல ரத்தம் வருகிறது. எங்கேயாவது கொள்ளையடித்துக் கொண்டு வந்து அந்த வீட்டில் கொட்டமாட்டோமா என்று ஆத்திரம் வருகிறது.

ஆனால், அக்கா நீலாயதாட்சி மகா பொறுமைசாலி. சமைக்க அரிசி இல்லை என்று கூட புருஷனிடம் சொல்லமாட்டாள். கையில் எதுவுமே இல்லாமல் வெளியே வந்து இன்னிக்கு என்ன சமைக்கட்டும் என்று கேட்பாள். அத்திம்பேர் மெய்மறந்து ஏதாவதொன்று செய் என்று வாய்திறந்து சொல்லும்போது அரிசி இல்லையே என்று மெல்ல இழுப்பாள். அப்போதுதான் அத்திம் பேருக்கு உறைக்கும். அவள் நிதானமாக வறுமையை வெளிப்படுத்தியதைக் கண்டு நெகிழ்ந்து போவார். ஏதாவது பண்ணுகிறேன்... ஏதாவது பண்ணுகிறேன் என்று எழுந்து பட்டணம் போனார். பட்டணம் போனபிறகு இங்கு வீடு பட்டபாட்டைச் சொல்லி மாளாது.

இந்தக் குடும்பம் மட்டுமல்ல... பல குடும்பங்கள் இப்படித்தான் இருக்கின்றன. அதே நேரம் கும்பகோணம் பாத்திரக்காரக் குடும்பமும், தேவகோட்டை செட்டியார் குடும்பமும் ஒற்றுமையாக, வளமையாக இருக்கின்றன. திரும்பத் திரும்ப அங்குதான் போய்க் காசுக்குக் கையேந்த வேண்டியிருக்கிறது. சில சமயம் இரு என்று அவர்கள் உட்காரவைக்கும் போது, நெஞ்சு பொங்குகிறது. வயிறு கலங்குகிறது.

'ஒரு நடை காரைக்குடிக்குப் போய்த் தகவல் சொல்லி விட்டு வாரீரா...?' என்று ஒரு வணிகர் தேவகோட்டையி லிருந்து காரைக்குடிக்குத் தகவல் சொல்ல உபயோகப் படுத்திக்கொண்டு ஒரு ரூபாய் காசு கொடுக்கிறபோது, இது சம்பாவனையா அல்லது கூலியா...? என்று கேள்வி வருகிறது. உதவிக்கு உதவி என்பது போல் அவர்கள்

சொல்ல, உள்ளே ஒரு குமுறல் ஏற்படுகிறது. நீ எனக்கெதற்கு உதவி... நான் உனக்கெதற்கு உதவி... நானே எனக்கு உதவி செய்து கொள்கிறேன் என்கிற ஆத்திரம் வருகிறது.

இனி வைதீகம் எடுபடாது. இங்கு கூட்டமாக வேதம் சொல்லிவிட்டு சம்பாவனைக்காகக் காத்திருப்பது என்பது முடியாது. ஏதோ ஒரு இடத்தில் இது வலியை ஏற்படுத்து கிறது. மாறாக, வேறு ஏதேனும் செய்து சம்பாதிக்க வேண்டும்.

'எனக்கு என் புருஷன் எப்படிச் சம்பாதிக்கறார்னு தெரியாது. வெறுமனே வீட்டு நிர்வாகம். அவர் அரிசி கொண்டுவந்தா சாதம் பண்ணி வைப்பேன். வாழைக்காய் கொண்டு வந்தா திருத்தி வைப்பேன் என்று சொல்கிற முட்டாள் மனைவி தனக்கு வேண்டாம். மூத்த மனைவி இறந்தது நிம்மதியாகப் போயிற்று. அவள் அப்படித்தான் இருந்தாள். தன் இடம்விட்டு ஒரு இழைகூட வெளியே வராதிருந்தாள். அடுத்தபடி யாரைத் திருமணம் செய்து கொள்வது என்று யோசித்தபோது, வயது வித்தியாசமாக இருப்பினும் அக்கா நீலாயதாட்சியின் மகள் பார்வதத்தை தானே போய் பெண் கேட்டு பல சத்தியங்கள் செய்து மணம் முடித்தாயிற்று.

பார்வதம் அவனைப் புரிந்துகொண்டது மிகச் சந்தோஷ மாக இருந்தது.

"நன்னா சம்பாதிக்கணும்னு ஆசைப்படறேள்... இதுல என்ன தப்பு...? உத்தியோகம் புருஷலட்சணம்..."

"எது உத்தியோகம்...?"

"எது காசு தருதோ, அதுதான் உத்தியோகம். இல்லாததுக்கு உத்தியோகம்னு பேர் உண்டா...?"

"எதுக்குக் காசு...?"

கேள்வி கேட்பான். உடனே அவள் பதில் சொல்வாள்.

"நாமும் நன்னாயிருந்து நம்மைச் சுத்தி இருக்கறவா நாலுபேரையும் நன்னா இருக்க வைக்கறதுக்குத்தான் காசு..."

பார்வதம் இரவு கட்டிப்பிடித்துக்கொண்டு பேசுகிற போது எழுந்து உட்கார்ந்து விளக்கேற்றி அவளைக் கொண்டாட ஆரம்பித்தான்.

பார்வதம் வெளிச்சத்தில் வெட்கப்பட்டாள். விளக்கின் திரியை இழுத்துவிட்டு மறுபடியும் கொண்டாடினான்.

பார்வதமும் விஸ்வநாதனும் யோசித்துச் செய்த முதல் முயற்சிதான் இந்தத் தண்ணீர்ப் பந்தல். காரை என்கிற கழுத்து ஒட்டிய ஒரு நகையைக் கழற்றிக் கொடுத்தாள். இதை விற்றுவிட்டு ஏதேனும் செய்யலாம் என்று சொன்னாள்.

தெலுங்கு செட்டியாரிடம் கொண்டு போய் காரை யைக் கொடுத்து அடமானம் வைத்து காசு வாங்கி வந்தான். 'எதற்கு...?' என்று செட்டியார் கேட்டதற்கு, 'தண்ணீர்ப் பந்தல் வைக்க' என்று சொன்னான்.

"உண்மையாகத் தண்ணீர்ப் பந்தல் வைக்கவா நீ காரையை விற்கிறாய்...?" என்று செட்டியார் கேட்க, "ஆமாம்." என்று விஸ்வநாதன் பதில் சொன்னான்.

"தண்ணீரை இலவசமாகத்தானே தருவாய்...?"

"எப்படித் தண்ணீரைக் காசுக்கு விற்க முடியும்...?"

"பிறகு எதற்கு உனக்கு இவ்வளவு காசு...?"

"பந்தல் போட்டு இளைப்பாறப் பலகைகள் போட்டு, விசிறிக்கொள்ள விசிறிகள் கொடுத்து, மிகப்பெரிய பானை கள் அடுக்கி, நீரைக் கொதிக்க வைத்து, ஆறவைத்துக் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இருக்கிறது..." என்று விஸ்வநாதன் சொல்ல, செட்டியார் நெகிழ்ந்துபோனார்.

"சரி... காரை என்னிடம் இருக்கட்டும் இந்தத் தண்ணீர்ப் பந்தல் செவ்வனே நடந்தால், காசு எதுவும் கொடுக்காமல் நீ காரையை வாங்கிக்கொண்டு போகலாம்..." என்று சொல்ல, சந்தோஷத்துடன் திரும்பி வந்து பார்வதத்திடம் விவரிக்க, பார்வதம் சந்தோஷத்தில் அவனைக் கட்டிக் கொண்டாள்.

"நல்ல சகுனமா இருக்கு, இல்லையா...?" என்று கொஞ்சினாள்.

பார்வதத்துக்கு வயசின் துடிப்பு. விஸ்வநாதனுக்கு அனுபவத்தின் முதிர்ச்சி. இரண்டுமே கைகோத்துக் கொண்டன.

நல்ல சகுனம் மட்டுமல்ல. பேரதிர்ஷ்டம் இதோ, பந்தல் வாசலில் வந்து நிற்கிறது. பெரியவர் வந்து இங்கு நின்றார் என்பதும் உள்ளே காலடி எடுத்து வைத்துவிட்டார் என்பதும் கும்பகோணத்துக்குத் தெரிந்தால், எவ்வளவு தொலைவிலிருந்தும் வந்து நின்று ஒரு சொம்புத் தண்ணீர் குடித்துவிட்டுத்தான் போவார்கள்.

"வரவேண்டும்... வரவேண்டும்..." பார்வதம் கைகூப்பினாள். விஸ்வநாதனும் கை கூப்பினான். குழந்தைகள் இரண்டும் அருகே வந்து உள்ளுக்குள் நின்று அவரைப் பார்த்துக் கைகூப்பின.

அவர் வந்து நான்கு பேரையும் பார்த்தார் மெல்ல வலக்காலை எடுத்து உள்ளே வைத்தார். 'ஹரி ஓம்' என்றார்.

மனசுக்கு உள்ளே அதிர்ந்தது.

"குடிக்கறத்துக்கு ஜலம் ஏற்பாடு பண்ணியிருக்கியாக்கும்..."

பெரியவர் கேட்க, ஆமென்று தலையசைத்தான். மற்றவர்கள் முன்னேறி உள்ளே வர, அவர் பின்னால் திரும்பி எதற்கு என்பது போல் பார்த்தார்.

எல்லோரும் பின்னடைந்தார்கள். பந்தலுக்கு வெளியே நின்றார்கள்.

"குடிக்கறதுக்கு வெறும் ஜலம் மட்டுமாக்கும்."

மறுபடியும் கேட்டார்.

"ஆத்துலேர்ந்து ஜலம் மொண்டு கொண்டுவந்து கொடுக்கலை. அதை நன்னா கொதிக்கவச்சு பெருஞ்சீரகம் துளசிச்சாறு, மிளகு, சுக்கு எல்லாம் தட்டிப்போட்டு, மிதமான சூட்டுலேயும், ஜில்லுங்கற மாதிரியும்தரேன். சுத்தி மண்சுவர் எழுப்பி, அது நடுவில பானையை வெச்சுருக்கேன். மண்ணைக் கலைச்சுப் பானையை எடுத்துச் சுத்தமா அலம்பிட்டு, மறுபடியும் கொதிக்க வெச்ச ஜலத்தை ஊத்தி, மண்ணு போட்டு மூடி வெச்சுடறேன். கார்த்தால ஊத்தினா, சாயந்தரத்துக்குள்ளே ஜலம் ஆறிப்போயிடறது. ராத்திரி சில்லுனு ஆயிடறது. மறுநாள் கார்த்தால குடிக்கறதுக்கு ரொம்ப குளுமையா இருக்கு. விடியகார்த்தால அஞ்சு மணி, ஆறு மணிக்கு ரெண்டு சொம்பு ஜலம் குடிச்சால் ஒரு வியாதியும் வராது. வயிறு சுத்தமாயிடும்..." என்றான் விஸ்வநாதன்.

"ஜலம் மட்டும்தானான்னு கேட்கறேன்..."

"நீர்மோரும் பானகமும் தரலாம்னு நினைக்கறேன்..." முதுகு வளைத்து, வாய் பொத்தி விஸ்வநாதன் பதில் சொன்னான். பார்வதம் பரவசமாக பெரியவரையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

"ஆஹா... தரலாமே... தொலைதூரத்துலேர்ந்து வர்றவாளுக்கு நீர்மோர் நன்னா இருக்கும். எலுமிச்சை, இஞ்சி நசுக்கிப்போட்டா, குடிக்கறதுக்கு இன்னும் இதமாகத்தான் இருக்கும்..."

"பெரியவா எப்படிச் சொல்றாளோ, அப்படியே செய்துடறேன்..."

"நீர் மோருக்குக் காசு வேண்டாமா...?"

"ஒரு செட்டியார்கிட்ட இவ கழுத்துக் காரையை அடமானம் வெச்சு காசு வாங்கிண்டு வந்திருக்கேன். பால் வாங்கித் தயிர்போட்டு, மோரா கலக்கிக் கொடுக்கணும், அதே மாதிரி வெல்லமும் கரும்புச்சாறும், தேனும், பானகத்துல கலக்கலாம்னு ஒரு எண்ணம்..."

"ஆஹா... அதுவும் இலவசமோ...?"

விஸ்வநாதன் மௌனமாக இருந்தான்.

"எப்படி இலவசமாக கொடுக்கறது... காரையை அடமானம் வெச்சுட்டு கொஞ்சமாக காசு வாங்கிக்கலாம். முடிஞ்சவா காசு கொடுங்கோனு சொல்லலாம். முடியாத வாளுக்குப் 'பரவாயில்லை... போய்விட்டு வாங்கோனு சொல்லிடலாம்..." என்றார் பெரியவர்.

"சரி அப்படியே பண்ணிடறேன்..."

"ஆனா... ரெண்டு குழந்தைகள் இருக்கே...?"

"ஆமா... இருக்கு"

"சுண்டல் மாதிரி ஏதாவது உனக்குப் பண்ணத் தெரியாதோ...?"

பர்வதத்தைப் பார்த்து கேட்டார் பெரியவர்.

"நன்னா பண்ணலாம்... பண்ணி சின்ன தொன்னையில வெச்சுத் தந்தா, காலணாக்கு இரண்டு தொன்னை வாங்கிக்க மாட்டாளோ...?"

அவன் தலையசைத்தான்.

"ஆஹா... நன்னாயிருக்கும்... ரெண்டு தொன்னை சுண்டல் ஒரு வாய் பானகம். கொஞ்சம் நீர்மோர். ச்சு... ச்சு... ச்சு... ச்சு... வர்றவன் ரொம்ப சந்தோஷமா கும்பகோணத்துக்குள்ள நுழைஞ்சு, சுவாமி பார்த்துட்டு ஊருக்குப் போயிடுவான்..."

"சுண்டல் பண்ணலாம்கறேளா...?" பர்வதம் கேட்டாள்.

"பண்ணேன்..."

பெரியவர், பர்வதத்தைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

8

பெரியவர் பந்தலுக்குள் இடதும் வலதும் நடந்தார். பேச்சுக்கு நடுவே அவர் உதடுகள் ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக்கு கொண்டிருந்தன.

"ரெண்டு சமையக்காரனை வெச்சு சர்க்கரைப் பொங்கல் பண்ணு. அதையும் மந்தாரை இலையில வெச்சுக்கொடு. அதுவும் நன்னாத்தானிருக்கும். காலணாவுக்கு எத்தனை சர்க்கரைப்பொங்கல் வரும்?"

பர்வதம் இரண்டு உள்ளங்கைகளையும் குவித்துக் காண்பித்தாள்.

"ஆஹா... நன்னா போடலாம். எதைச் செய்தாலும் சுத்தமா செய்யுங்கே. பயபக்தியோட பண்ணுங்கோ. வரவா நன்னாயிருக்கணும்னு பண்ணுங்கோ. அன்னக்குத்தம் இல்லாத பண்ணுங்கோ."

பெரியவர் கைதூக்கி ஆசீர்வதிக்கிறார்.

"உன் பேரென்ன?"

"விஸ்வநாதன். இவ பேரு பர்வதம். நமஸ்காரம் பண்ணிக்கறோம்." அவர்கள் குடும்பத்தோடு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள்.

பெரியவர் இரண்டு வெள்ளிக்காசுகள் எடுத்து அவர்களிடம் நீட்டினார். உடனே காரியஸ்தரைப் பார்த்து ஏதோ சொல்ல, ஒரு தங்கக் காசும் அவர் கைக்கு வந்தது. அதை நெஞ்சில் வைத்து மறுபடியும் விஸ்வநாதனிடம் கொடுத்தார்.

"இது மடத்தினுடைய ஆசீர்வாதம். யாருக்கும் இல்லேன்னு சொல்லாத, வேணுங்கறவா, வேண்டாத வானு பார்க்காத, ஜாதி வித்தியாசம் காண்பிக்காத அத்தனை உயிர்களுக்கும் கொடு. வெயில் கடுமையா இருக்கப் போறது. தாகத்துக்கு ஜனங்கள் தவிக்கக்கூடாது பாரு."

அவர் குரல் கம்ம, உணர்ச்சியோடு சொன்னார். அவர் சுருணை அந்தக் குடும்பத்தை அசைத்தது.

விஸ்வநாதனும் பர்வதமும் மறுபடியும் விழுந்து வணங்கினார்கள். அவர் சரட்டென்று வெளியேற, அவர் பின்னே வந்த பெரும் கூட்டம் தண்ணீர்ப் பந்தலை சுற்றிப் பார்த்துவிட்டு விஸ்வநாதன் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுப் போயிற்று.

விஸ்வநாதன் திகைத்துப்போய் அப்படியே தரையில் உட்கார்ந்தான்.

"ஏன்னா... வந்த பெரியவாளுக்கு ஒண்ணுமே கொடுக்காத அனுப்பிட்டோமே. ஒரு வாய் ஜலம் அவருக்கும் கொடுத்திருக்கலாமே. எல்லா உசிருக்கும் கொடுன்னார். அவருக்குக் கொடுக்க மறந்து போயிடுத்தே."

"அடியே... இதை முதல்லயே சொல்லப்படாதா?"

விஸ்வநாதன் பதறினான். டக்கென்று வெங்கலச் சொம்பை எடுத்துக் கொண்டான். தண்ணீர் நிரப்பினான். ஏலக்காய் பொடியைப் போட்டான். தபதபவென்று சொம்பைத் தூக்கிக் கொண்டு அவர் போகிற திசை நோக்கிப் போய் அந்தணர்களைத் தாண்டி அவரைச் சுற்றிக்கொண்டு எதிரே போய் வெங்கலப் பானையை ஏந்தினான்.

"என்ன?" அவர் கேட்டார்.

"உங்களுக்கு ஒரு வாய் ஜலம் கொடுக்க மறந்து போயிடுத்து... மன்னிச்சுக்கணும்."

குனிந்தபடியே ஜலத்தை ஏந்தி நின்றான்.

அவர் சிரித்தார். வெங்கலப் பாத்திரத்தைத் தொட்டார். "ஆச்சு." என்று சொன்னார்.

"ஒரு வாய் சாப்பிட்டேன்னா எனக்கு சந்தோஷமா இருக்கும்." என்று சொல்ல, உள்ளங்கையைக் குவித்து நீட்டினார். உள்ளங்கையில் நீரை விஸ்வநாதன் விட, ஒரேயோரு உத்திரணி ஜலம் குடித்தார்.

"நன்னா, வாசனையா இருக்கு. இப்படியே இருக்கட்டும்." என்று சொன்னார். விஸ்வநாதன் 'சரி' என்று தலையசைத்தான்.

அவரை விழுந்து வணங்கி சொம்பை தலையில் வைத்துக்கொண்டு திரும்பி வந்தான். அந்த சொம்பு ஜலத்தை பெரிய பானையில் விட்டான்.

இனிமேல் அது வெறும் தண்ணீரல்ல. பிரசாதம்.

அக்காவும், அத்திம்பேரும், மைத்துனனும் கும்ப கோணம் வந்து, வீடு தேடி, வீட்டில் ஆள் இல்லாமையால் பந்தலுக்கு வந்து நின்ற போது புருஷனும், மனைவியும் ஆரவாரமாக வரவேற்றார்கள். எல்லா கதையையும் விலாவாரியாக சந்தோஷத்துடன் கழுத்து நரம்பு புடைக்கச் சொன்னார்கள்.

"பகவானே... எங்களுக்கு நல்லகாலம் பொறந்துடுத்து." என்று பர்வதம் கைகூப்பி அழ, சாம்பசிவ சாஸ்திரிகளுக்குச் சந்தோஷம் வந்தது. பெரியவர் இருந்த திக்கை நோக்கி அவர் வணங்கினார்.

"மகாமகம் முடியறவரை நான் இருக்கட்டுமா... நான் இருக்கிறது உதவியா, இல்லை உபத்திரவமா?" என்று கேட்டார்.

"நன்னா இருக்கு போங்கோ..." புருஷனும், மனைவியும் மகிழ்ச்சியில் கூவினார்கள்.

"யாராவது ஆளை வேலைக்கு வைக்கணும், யாரை நம்பி வைக்கறதுன்னு நினைச்சுண்டிருக்கேன். சதாசிவம் வந்தது எவ்வளவு பெரிய சந்தோஷம் தெரியுமா? துணைக்கு நீங்க வேற இருக்கேள். மாமி, இருக்கா, நீங்க ஒரு வேலையும் செய்ய வேண்டாம். வெறுமனே வாசல்ல நின்னு வர்றவா, போறவாளைக் கவனிச்சுண்டிருந்தா போதும்."

"அதெப்படி உட்கார்ந்து கவனிக்க முடியும்? நானும் ஏதாவது பண்றேன்."

அவர்கள் சமையலறைக்குப் போய் அடுப்புகளைப் பார்த்துப் பாத்திரம் போதாது என்று முடிவு செய்து இன்னும் பாத்திரங்கள் வாடகைக்கு வாங்கி பெரியவர் சொன்னது போல விதம்விதமான சுண்டல் செய்யலாம் என்று தீர்மானித்தார்கள்.

"சுண்டல் மட்டும் போதுமா?" அக்காள் கவலையோடு கேட்டாள்.

"வேறென்ன பண்ணலாம்னு சொல்லுக்கா?"

"கடலைமாவு வாங்கிண்டு வா. காராசேவு பண்றேன். வாழைக்காய் வாங்கிண்டு வா. அதே கடலைமாவுல புரட்டிப்போட்டு பஜ்ஜி பண்ணிடறேன். ஆள் கிடைச்சா மாவாட்டித்தரச் சொல்லு. தோசை போடறேன்."

"எதுக்கு ஆளு? நான் மாவாட்டறேன்." சதாசிவம் முன்வந்தான்.

"நானும் கொஞ்சம் கைகொடுக்க முடியும்." சாம்பசிவ சாஸ்திரி வேட்டியை மடித்துக் கொண்டார்.

எதனாலேயோ ஈர்க்கப்பட்டவர்கள் போல அவர்கள் தண்ணீர்ப் பந்தல் வேலையில் இறங்கினார்கள். பெரிய தாம்பாளம் நிறைய சுண்டல் பார்த்ததும் அத்தனையும் செலவழிய வேண்டுமே என்ற பயம் ஏற்பட்டது.

ஆனால், மத்தியானம், போட்ட சுண்டல் இருட்டுவதற்குள் விற்றுத் தீர்ந்தது. 'சுண்டல் இல்லையா... சுண்டல் இல்லையா...' வந்து கேட்டுப் போனார்கள்.

'அப்பா கூட்டம் சாயப்போறது. நீ வெறும் ஒத்த தாம்பாளத்துக்குப் பண்ணிண்டு- நிறைய பண்ணேம்ப்பா-" ஒருவர் கடிந்துகொண்டு போனார்.

அன்றிரவு என்ன செய்யலாமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

"ரொம்பப் பெருசா இழுத்துவிட்டுண்டு அவஸ்தைப் பட்ப் போறோம் போ. அதே சமயம், இங்கே வந்து சுண்டல் இல்லேன்னா கோவிச்சுக்குவான். பண்ண ஆரம்பிச்சுட்டோம். பண்ணித்தான் ஆகணும். இல்லைன்னு சொல்லப்படாது. ஏதோ பத்துப் பேருக்குப் பண்ணலாம். புதினஞ்சு பேருக்குப் பண்ணலாம். இப்படி நூறு பேருக்கு சாப்பிடணும்னு பண்ணோம்னா அதுக்கு வேறு கரண்டி, வேறு பாத்திரம் இல்லையாடா... அதுக்கு வேறவிதமான சமையல்காரா. உன்னால ஆகாது." நீலாயதாட்சி தம்பியைக் கடிந்து கொண்டாள்.

"ஒரு சமையல்காரன் வேணும். அடிப்படையா மளிகை சாமான் கொண்டு வந்து வைக்கறது. ஊறப்போடறது, துருவிக் கொடுக்கறது மாதிரி சின்னச் சின்னதா வேலையெல்லாம் செய்துடலாம். பாணலிலே போட்டுப் பிரட்டறது நம்மால பண்ண முடியுமா?" என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

"நான் பண்றேன்ப்பா. என்னைப் பண்ணவிட மாட்டேங்கறேளே..." என்றான் சதாசிவம்.

"டேய்... இட்லிக்கு மாவு அரைப்பியா. சுண்டல் பிரட்டிப் போடுவியா. எவ்ளோடா பண்ணுவ?"

சாம்பசிவ சாஸ்திரிகள் தன் மகன் சதாசிவத்தை பார்த்துக் கேட்டார்.

"என்னால பண்ண முடியும்ப்பா."

"ஒரு நாள் பண்ணலாம். ரெண்டு நாள் பண்ணலாம். இனமும் பண்ண முடியாது சதாசிவா." விஸ்வநாதன் அவளைக் கட்டியணைத்துக் கொண்டான்.

குடும்பம் முழுவதும் அவனுக்குப் பக்கபலமாக வந்திருப்பதும், அதில் முழு ஈடுபாடு காட்டுவதும் அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. வாழ்க்கையில ஏதோவொரு நல்ல திருப்புமுனையில் நிற்கிறோம் என்று தோன்றியது.

"நான் சொல்றதைக் கேளுங்கோ... அவசரப்படாம நாமளே இன்னும் ஒரு நாளு நாளைக்கு தாக்குப்பிடிச்சு பார்ப்போம். முடியலைன்னா சமையக்காரனைக் கூப்பிடுவோம். நிறைய இழுத்துவிட்டுக்க வேண்டாம். நூறு பேருக்கு சுண்டல்... நூறு பேருக்கு தோசை."

"அப்போ சின்ன கல்லு போறாது. பெரிய கல்லு வேணும்."

"ஆமாம்."

"கோட்டை அடுப்பு வேணும்."

"ஆமாம்..."

"கோட்டை அடுப்பு உள்ள போட்டா எங்கே தூங்கறது?"

"நமக்கு படுக்கையறை மாதிரி தடுத்துக் கொடுத்திருக்காளே... அங்க கோட்டை அடுப்பு போட்டுடலாமா?"

"அப்போ எங்க தூங்குவ தெருவிலயா?"

"இல்லை. எதிர்ப்பக்க சந்துல ஒரு போர்ஷன் காலியா இருக்கு. அந்த வீட்டினுடைய சொந்தக்காரர் சுண்டல் வாங்கிண்டு வரும்போது சொன்னார். உங்களை சுத்தி ஒரே கூட்டம். அதனால அப்போ சொல்லலை. வா போகலாம்."

விஸ்வநாதன் மனைவியின் கையைப் பிடித்து இழுத்துப் போனாள். ஒரு மாடி போர்ஷன் முழுவதும் காலியாக குப்பையாக கிடந்தது.

பிள்ளைக்காகவும், மருமகளுக்காகவும் வைத்திருந்த போர்ஷனாம், அவர்கள் மெட்ராஸ் போய் வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு மெட்ராஸிலிருந்து வரவே இல்லையாம். அப்படியே குடிபெயர்ந்து விட்டார்களாம். இதை வேறு யாருக்கும் வாடகைக்கு விடவும் பயமாக இருக்கிறதாம். மகாமகம் முடிகிறவரையில் உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள் என்று அந்த அம்மாள் சொல்ல, விஸ்வநாதன் ஒரு ரூபாய் வெள்ளி நாணயம் கொடுத்தான்.

அந்த அம்மாள் முகம் மலர்ந்தாள்.

புதிய விளக்குமாறு வாங்கி வீடு முழுவதும் பெருக்கி ஒட்டடை அடித்து, உள்ளே கிடந்த கட்டைக் கும்புகளை கொல்லைப்புறத்தில் போட்டு பசுஞ்சாணியை வீடு முழுவதும் தெளித்து துணியால் புரட்டி எடுத்து சாம் பிராணிப் புகை போட்டு, சுவாமி படம் மாட்டி மறுநாளே குடியேறினார்கள்.

படுப்பதற்காக, புதிய பாய் தலையணைகள் வாங்கிக் கொண்டார்கள்.

அரிசி புடைக்கவும், கல் நீக்கவும் ஹாலைப் பயன்படுத்திக் கொண்டார்கள். மூட்டை மூட்டையாகப் பருப்பும், அரிசியும், வெல்லமும் வாங்கிப் போட்டார்கள்.

எண்ணெய்த் துணியில் நெருப்பு பிடித்துக் கொண்டது போல வியாபாரம் தகதகவென்று ஆரம்பித்தது. நாற்பது இட்லி வேகக்கூடிய அலுமினியப் பானையை வாங்கி வந்து, சட்னியும் சாம்பாரும் அதன் கூடவே பரிமாறி காலணாவுக்கு இரண்டு இட்லி என்று விற்றார்கள். உப்பு, உறைப்பு தூக்கலாக ஒரு சட்னியைத் தனியே தயார் செய்தார்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொத்ஸு போட்டார்கள்.

மகாமகம் நெருங்க நெருங்க கூட்டம் அதிகரித்தது. கடையில் எப்போதும் ஆட்கள் இருந்தனர். பண்டம் இல்லை என்று அடிக்கடி சொல்லவேண்டியதாயிற்று. இதுக்கு மேல முடியலை சுவாமி என்று புலம்பவேண்டி வந்தது.

அருகே வேறு சில கடைகள் ஆவலாக முளைத்தன. ஆயினும் இந்தக் கடைக்குத் தனி மவுசு இருந்தது.

'பொன் கலர்ல வர்ணம் அடிச்ச விமானம் மாதிரி ஒரு பந்தல் போட்டிருப்பான் அந்த ஓட்டலுக்குப் போ.' என்று சொன்னார்கள். தண்ணீர்ப் பந்தல் என்பதை மக்களே ஓட்டல் என்று மாற்றினார்கள்.

தெருவோரத்தில் போடப்பட்ட பெஞ்சுகளில் உட்கார்ந்து இட்லியும் சட்னியும் சாப்பிட்டனர்.

இரவு காசு எண்ணுவதற்கே அரை மணி நேரம் ஆயிற்று. பாதிக்கு மேல் நல்ல லாபம் வருகிறது என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

அடித்துப் போட்டது போல் தூக்கம் வந்தது. உழைப்பு அதிகமாதலால் அக்காள் நீலாயதாட்சி நடுவே முடியாமல் ஒரு நாள் படுத்துக் கொண்டாள். தவக்கும் ஒரு நாள் ஓய்விருந்தால் நன்றாக இருக்கும் என்று பார்வதம் சொன்னாள்.

சதாசிவம்தான் சற்றும் அசராமல் காலை நாலு மணியிலிருந்து இரவு பத்துமணி வரைக்கும் பிசாசாக உழைத்தான். இட்லிக்கு மாவரைத்தான். சட்னிக்கும் சாம்பாருக்கும் கலவை அரைத்தான். வடைக்கும் அரைத்தான். பாத்திரங்கள் தேய்த்தான். நீர் சேந்தினான். மெள்ள மெள்ள பாத்திரங்கள் தேய்ப்பதற்கும் நீர் சேந்துவதற்கும் ஆட்கள் ஏற்பாடு செய்ய, அவனுக்கு பஜ்ஜி போடுகிற வேலையும் வடை தட்டிக் கொடுக்கிற வேலையும் கற்றுக் கொடுக்கப்பட்டன.

மகாமகத்தன்று ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சாப்பிட்டிருப்பார்கள் என்று கணக்குத் தெரிந்தது.

"நான் கடையைப் பார்த்துக்கறேன். நீ போய் ஒரு முழுக்குப் போட்டு வா." விஸ்வநாதனை சாம்பசிவ சாஸ்திரிகள் விரட்டினார்.

மகாமக நேரத்துக்கு முன்பே போய் ஒரு முழுக்குப் போட்டுவிட்டுக் கையில் ஒரு சொம்பு ஜலமும் எடுத்துக் கொண்டு வந்து பந்தல் ஓரமாக வைத்தான். அதிர்வேட்டு வெடிக்கும்பொழுது. அதைத் தன் தலையிலும், தன் மனைவி தலையிலும் குழந்தைகள் தலையிலும் ஊற்றிக் கொள்வதென்று விஸ்வநாதன் முடிவு செய்தான்.

விஸ்வநாதன் வந்ததும் சாம்பசிவ சாஸ்திரிகள் மனைவியோடு குளத்துக்குப் போனார். நல்ல இடம் பார்த்து நின்று கொண்டார். போலீஸ்காரர்களும் தாசில்தாரும் அவருக்கு வழிவிட்டார்கள்.

"மாமா, இந்தப் பக்கம் வாங்கோ." என்று தாசில்தார் கூவ "யாரு புரியலையே?"

"நேத்து உங்க கடையில தோசை சாப்பிட்டேன். ஞாபகம் இல்லையா? ஏ க்ளாஸா கவனிச்சேனே… நான் கவனிக்க வேண்டாமா?"

"ஆமா, ஆமா… இருக்கு." என்று அவர் உரத்துக் கூறினார். ஆனால் உண்மையில் அவருக்கு ஞாபகமில்லை.

"இன்னும் ஆறேழு நாளைக்கு வேலை இருக்கும். என்னால வீட்டுக்குப் போயிட்டு வரமுடியலை. உங்க கடையிலதான் நான் தோசை வாங்கிண்டு வரச் சொல்லப் போறேன். எனக்காக கொஞ்சம் இட்லியும், தோசையும் ஸ்பெஷலா பண்ணிப் போடணும்." என்று உரிமையோட தாசில்தார் கேட்க, "நிச்சயம் பண்றேன். இதைவிட வேறென்ன எனக்கு வேலை." என்று சொல்லி அவர்

பெயரையும், முகத்தையும் மனதில் குறித்துக் கொண்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

புருஷனும், மனைவியும் புடவையை முடிந்து கொண்டார்கள். கிழக்குப் பார்த்து நின்றார்கள். "அடேயப்பா ஒட்டல் வெச்சா இத்தனை மரியாதையா?" நீலாயதாட்சி அவர் காதோரம் சொன்னாள். குளம் சுற்றி கூட்டம் நெரியத் துவங்கியது.

"ஆமாம்... விஸ்வநாதன், ரொம்ப கெட்டிக்காரத்தனமா வேலை பண்ணியிருக்கான்."

"ஆனா... வேலை தான் ரொம்ப சிரமமா இருக்கு. பார்வதம் பாருங்கோ... பாதியா இளைச்சு போயிட்டா"

"இன்னும் நாலு நாள்தானே. அப்புறம் சரியாய்ப் போயிடும். தூங்கித் தூங்கி எழுந்தா நிதானத்துக்கு வந்துடும்."

"இதுக்கப்புறமும் இதையே பண்ணலாம்னு நினைச்சுண்டிருக்கான் போல இருக்கே?"

"பண்ணட்டும் ஆனா, இத்தனை கூட்டம் வராது இல்லையா?"

சங்கு முழங்கியது. அதிர்வேட்டுகள் வெடித்தன. கொடி அசைக்கப்பட்டது.

"ஹரஹர மகாதேவ... ஜெயஜெய சங்கர..." புருஷனும் மனைவியும் குளத்தில் மூழ்கி எழுந்தார்கள்.

மூன்று முழுக்குகள் போட்டு முகம் துடைத்துக் கொண்டார்கள். தயாராக வைத்திருந்த குங்குமச்சிமிழை எடுத்து சிறிய கண்ணாடியில் முகம் பார்த்து நீலாயதாட்சி நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். வழக்கத்தை விட பெரியதாக இட்டுக்கொண்டாள்.

அவர் விபூதி சம்படத்தைப் பிரித்து நெற்றி முழுவதும் திருநீறு பூசினார். மனைவிக்கும் சிறிதளவு தலையில் தெளித்தார்.

புருஷனும் மனைவியும் ஈரம் சொட்டச் சொட்ட கரைக்கு ஏறியதைப் பார்த்து பல பேர் பரவசத்தோடு கை கூப்பினார்கள்.

'பார்வதி, பரமேஸ்வரன் போல இருக்கு' என்று சொன்னார்கள்.

'யாருய்யா அது?' என்று விசாரித்தார்கள்.

'சாப்பாட்டுக் கடை' என்று பதில் வந்தது.

தன் முகம், தன் தொழில், தன் எதிரே மெல்ல மாறிப் போவதை சாம்பசிவ சாஸ்திரிகள் உணர்ந்தார்.

பிற்பகல் நேரம் குளத்துப் பக்கம் கூட்டம் வடிந்து விட்டது. கோயிலில் சற்று கூட்டமிருந்தது.

பெரியவர் எங்கு தங்கியிருக்கிறார் என்று விசாரித்து தேங்காய், பழம், பூ சால்வை என்கிற மரியாதைகளோடு சாம்பசிவ சாஸ்திரிகள் மனைவியை அழைத்துக்கொண்டு போனார். தட்சிணையாகப் பத்து வெள்ளிக்காக கச்சைத் துணியில் முடிந்து வைத்திருந்தார். கொண்டுபோய் காலடியில் வைத்து நமஸ்கரித்தார்.

"என்ன... எந்த ஊரு?" பெரியவர் விசாரித்தார்.

"இவா அந்த சாப்பாட்டுக் கடைக்காரா. நீங்க ஊருக்கு வரும் போது உள்ள போயிட்டு வந்தேளே... அது இவாளுடைய இடம்தான்."

"அது தண்ணீர்ப் பந்தல் இல்லையோ..."

"பஜ்ஜியும் தோசையும் போடறா?"

"அப்படியா... இவாளை அங்கே பார்த்தாப்போல ஞாபகம் இல்லையே?"

"நீங்க வந்த போது நான் இல்லை. என் மச்சினன்தான் இருந்தான். மச்சினனுக்கே பொண்ணைக் கொடுத்திருக்கேன். பெரியவா வந்து ஆசீர்வாதம் பண்ணிட்டுப் போன வேளை... வியாபாரம் நன்னா ஆச்சு." என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"கூட்டம் இருந்தா எதுவேணாலும் விக்கும். நல்ல பொருளா விக்கணும்ங்கறதுதான் என்னுடைய கவலை. ரொம்ப நன்னாயிருக்கு. ரொம்ப நல்லபடியா பண்றா அப்படின்னுதான் நானும் கேள்விப்பட்டேன். இன்னமும கடை இருக்கா?"

"இன்னும் ஒரு ஆறேழுநாள் கடை வைக்கலாம்னு இருக்கோம்."

"இது என்ன?" துணி முடிப்புப் பார்த்துக் கேட்டார்.

"எங்களால முடிஞ்சது யத்கிஞ்சிதம்"

பெரியவர் வாய்விட்டுச் சிரித்தார்.

"ரெண்டு வெள்ளி கொடுத்தா பத்து வெள்ளி திரும்பி வருதா? இன்னும் தங்கம் பாக்கி இருக்காக்கும்"

கூட்டமும் சிரித்தது.

9

"உங்களுக்கு எந்தூரு?" -மடத்துப் பெரியவர் விசாரித்தார்.

"மாயவரம் பக்கம் செம்பொனார் கோவில்..." என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

"அங்க நல்ல வேதபாடசாலை ஒன்னு உண்டே....?"

"ஆமா, இரண்டு கனபாடிகள் நடத்திண்டுருந்தா..."

"இப்போ வேதபாடசாலை இருக்கா...?"

"இல்லையே... அவா பட்டணம் போயிட்டா..."

"நீங்க பட்டணம் போகலையோ...?"

"போனேனே. என்னால அங்க இருக்க முடியலை..."

"ஏன்...?"

"அந்த வேகம் எனக்குத் தாங்கலை..."

"என்ன வேகம்...?"

"தர்ப்பணமோ, ஹோமமோ, கிடுகிடுனு முடிக்கணும்னு சொல்றா. அவாளுக்கு இதைத் தவிர நிறைய ஜோலி இருக்கு. ஒரு பிரயோஜனமும் இல்லாத பேப்பர் படிக்க உட்கார்ந்துடறா. பேப்பர் படிச்ச பிறகுதான் வருவேன்னு சொல்றா. அவாளுக்காக காத்துண்டிருக்கும்படியா இருக்கு இன்னொரு வருத்தமான விஷயம்..."

"என்ன...?"

"நிறைய பேருக்கு பித்ருக்கள் யாருன்னே தெரியலை..."

"அப்படித்தான் ஆகும்..."

"மாத்ருவர்க்கம் என்ன கோத்ரம்னே தெரியலை..."

"புரியறது..."

"இப்படி எல்லாத்தையும் விட்டுட்டு, இங்கிலீஷையே கத்துண்டிருக்கறவாளோட பழகறத்துக்கு எனக்கு மனசு ஒப்பலை. திருவல்லிக்கேணியில் சின்ன இடம். ஒரு ஹால் ஒரு படுக்கறையறை. ஒரு சமையல்கட்டு. மாமி குறுக்குக்கும் நெடுக்கமா போயிண்டிருந்தா, அங்கேயேதான் பூஜை. தர்ப்பணத்துக்குக் கூப்டுட்டு மாமி மாம்பழக் கட்டா சுட்டிண்டிருக்காளே என்னன்னு கேட்டேன். ஆத்துல இல்லேன்னா. நான் சட்டுனு எழுந்து வந்துட்டேன்.

அதுக்குப் பெருசா கோவிச்சுண்டு நாயே பேயேன்னு திட்டினா."

பெரியவர் கவலையோடு உட்கார்ந்திருந்தார்.

"இவ்வளவு அனாசாரமா இருக்கற இடத்துல என்னால இருக்க முடியலை. யோசனை பண்ணிப் பார்த்தா அந்த மாமிக்கு உட்கார்றதுக்கு வேற இடமும் இல்லை. அந்த மூணு ரூம்தான். வாசல் திண்ணைன்னோ, கொல்லைப் புறம்னோ அங்கே இல்லை. அதுக்கே அவா ஏழு ரூபா வாடகை தரா. அவருக்கு இருவத்தாறு ரூபா சம்பளம். ஒரு வார்த்தைக்கூட சம்ஸ்கிருதம் தெரியலை. தப்பா சொல்லாதீங்கோ_ மந்திரம் பலிக்காதுன்னேன். பலிக்காட்டி உம்ம வேலையைப் பார்த்துட்டுப் போங்கோ அப்படின்னு எரிஞ்சு விழறா."

"அதனால பட்டணத்துலேர்ந்து நேரே இங்க வந்துட்டேளாக்கும்?" என்றார் பெரியவர்.

"ஆமாம்."

"ஆனா பூஜை புனஸ்காரங்கள் ஹோமயாகங்கள் எல்லாம் நன்னா நடக்கறதுன்னு சொல்றாளே... அது உண்மையா?"

"அதுவும் கும்பல் கும்பலா என்னமோ நடக்கறது. முண்டியடிச்சுண்டு ஹோமத்துகிட்ட எல்லோரும் வந்து நிக்கறா."

"எல்லோரும்னா..."

"எல்லோரும் தான். எல்லோரும் வரக்கூடாதுன்னு சொன்னாக்க சும்மா இரும் அப்படின்னு அதட்டல் வேற வர்றது."

"கொஞ்சம் கலப்பு ஆரம்பிச்சுடுத்தோ?"

"நெருக்கம் ஆரம்பிச்சுடுத்துன்னு நினைக்கறேன். கலப்பு பின்னாடி வரும்."

"இனிமேல் அப்படித்தான் இருக்கும். நாமதானே பட்டணத்துக்கு வேட்டியை மடிச்சுண்டு போனோம். பதினஞ்சு ரூபா சம்பளம் கொடுக்கறான்னு நாமதானே வெள்ளைக்காரனைப் பார்த்துப் போனோம். வெள்ளைக் காரனுக்கு யார் வந்தா என்ன? எல்லோருக்கும் வேலை. யார் படிச்சாளோ. அவாளுக்கெல்லாம் வேலை. நிர்வாகத்துல வெள்ளைக்காரன் கெட்டிக்காரன். யாரை எங்க தட்டி வைக்கணும். யாரை எங்க ஏத்தி வைக்கணும்னு அவனுக்குத் தெரியும். நம்மகிட்ட நிர்வாகத்தைக் கொடுத்துட்டு, மத்தவாகிட்ட ஊர் பாதுகாப்பைக் கொடுத்துடுவான். வரிவசூலிக்கறதைக் கொடுத்துடுவான், வரிவசூலிக்கறவரும் ஊர் பாதுகாக்கறவரும் நம்மளண்ட வந்து பேசாம இருக்க முடியுமா? நம்ம கூட உட்கார்ந்து விவகாரம் சொல்லாம இருக்க முடியுமா? விஷயங்கள் பரிமாறாம முடியுமா? அப்போ மணிக்கணக்கா, நாள் கணக்கா, மாசக்கணக்கா பேசிப் பழகித்தானே ஆகணும், நெருக்கம் வரத்தானே செய்யும். வேறு ஒருவர் சொல்ல அவரைப் பெரியவர் திரும்பிப் பார்த்தார்.

"சோழராஜாகிட்ட தேசத்தைப் பாதுகாக்கிறவன் நவாபுகிட்டேயும் தேசத்தைப் பாதுகாக்கிறவனா வெள்ளைக் காரன்கிட்டேயும் தேசத்தைப் பாதுகாக்கிறவனா இருக்கான். சோழராஜாகிட்ட வியாபாரம் பண்ணிண்டிருந்தவர்கள் பாண்டியன்கிட்டேயும், சரபோஜிகிட்டேயும், நவாபுகிட்டேயும், இப்போ பிரிட்ஷ்காரன்கிட்டேயும் வியாபாரம் பண்றவாளாவே இருக்கா. திசை மாறலை நாம மட்டும் திசை மாறிட்டோமே. இது ஏன்_ இதுதான் என் கேள்வி."

இன்னொருவர் தொடர்ந்து பேச, பெரியவர் அவரைத் திரும்பிப் பார்த்தார். பேசும் என்பது போல் அவர் முகபாவனை இருந்தது.

"இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்றேன்." சாம்பசிவ சாஸ்திரிகள் தொண்டையைச் செருமிக்கொண்டார். எல்லோரும் அவரைப் பார்த்தார்கள்.

"படை நடத்தறவா எல்லா ராஜாக்களுக்கும் வேணும். வரி வசூலிக்கிறது எல்லா ராஜாக்களுக்கும் வேணும். ஆனால் வேத விவகாரங்கள், ஹோம சமாசாரங்கள் எல்லா ராஜாக்களுக்கும் தேவையில்லை. சரபோஜி காலத்தோடு முடிஞ்சுபோச்சு, பிரிட்டிஷ்காரன் நீ ஒண்ணும் எனக்கு உபயோகமில்லை. எனக்கு உபயோகமா ஏதாவது பண்றதுக்கு வந்தால் நீ கிட்டக்க வா. கையில இருக்கற தர்ப்பைப்புல்லைத் தூக்கிப் போட்டுட்டு வா... இல்ல, வேறபக்கம் போய்டு அப்படின்னு சொல்லிட்டான். ஆனது ஆகட்டும்னு தர்ப்பைக்கட்டையை கீழ போட்டுட்டு பேனாக்கட்டையை எடுத்துண்டு எல்லாரும் கணக்கு எழுதறதுக்குப் போயிட்டா. சாப்பிடணுமே, பிழைக்கணுமே, குடும்பம் வளரணுமே, சந்ததி தொடரணுமே... வேற என்ன பண்ண முடியும்? சொல்லுங்கோ..."

"ஆக, இது அடிமைத்தொழில்." இன்னொருவர் குரல் கொடுத்தார்.

"இந்த அடிமைத்தொழிலுக்கு வந்து அறுநூறு வருஷ மாச்சு. இப்போ என்னமோ புதுசா கண்டுபிடிச்சா மாதிரி கத்தறேள்_" எதிர்ப்பக்கத்திலிருந்து வேறொரு அந்தணர் குரல் கொடுத்தார்.

"அடிமைத் தொழிலோ, அரசாங்கத் தொழிலோ... வெள்ளைக்காரன் மரியாதையா நடத்தறான். கெட்டிக் காரனா நடந்தா தட்டிக் கொடுக்கறான். அதனாலதான் இது சௌகரியமாக இருக்கு. மெட்ராஸ்ல இருக்கறவா அத்தனை பேர் கிட்டேயும் நல்ல காசு. நான் சொன்னனே அவருக்கு இருவத்தாறு ரூபா சம்பளம். ஏழு ரூபா வாடகை, பால், தயிர், அரிசிக்குப் பதினாலு ரூபா. மேற்கொண்டு போக்குவரத்துச் செலவுக்கு மூணு ரூபா. சப்ஜாடா

மிச்சத்தை அவர் சேர்த்து வைக்கிறார். ஆபீஸ் நேரம் போக மீதி நேரத்துல பசங்களுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கறார். அதுக்கு ஒரு மாசத்துக்கு ஒரு ரூபா வாங்கறார். பெரிய பொண்ணு கல்யாணத்துக்குப் பிடிப்பிடியா தங்கநகை சேர்த்து வெச்சிருக்கார். என்ன போச்சு. எது நஷ்டம்? ஆசாரமும் அனுஷ்டானமும், வேதமந்திரமும் காணாமப் போச்சு, அவருடைய பையனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது." என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"என்ன சொல்றேள்? அரசாங்க உத்தியோகத்துல இருக்கறவா பையனுக்கு எழுதப்படிக்கத் தெரியாதுன்னா சொல்றேள்?"

"நான் சொன்னது சம்ஸ்கிருதத்தை. இங்கிலீஷ் பொளந்து கட்டறான். தமிழ்கூட சரியா படிக்கத் தெரியலை. நய் வல் பர்னு கால் வாங்காத எழுதிண்டிருக்கான்."

கூட்டம் மெல்ல நகைத்தது.

பெரியவர் சிரிக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஆனால் மெட்ராஸுக்கு போய் அனுசரணையா நடந்தா வைதிகத்துக்கு நல்ல காசுன்னு பேசிக்கறா_ கர்த்தா என்ன பண்றான்னு கவலைப்படாமல் இருந்தால் நாலணா காசு நிச்சயம். ஹோமத்துக்கு போனா கையில அரிசி பருப்பு கொடுத்து ஒரு ரூபா வெள்ளிக்காசு பல இடங்கள்ல தரா."

"ஆனா_ அதே மாதிரி சந்துல குடி இருக்கணுமாக்கும்."

பெரியவர் சொல்ல, ஆமாம் என்று தலையசைத்தார்.

"எப்போ மாயவரம் போகப் போறேள்?"

சாம்பசிவ சாஸ்திரியைப் பார்த்துக் கேட்டார் பெரியவர்.

"ஊர்ல ஒண்ணுமில்லை. அதுக்குப் பதிலா இங்கயே இருந்துடலாம்னு பார்க்கறேன்."

"நிலம் நீச்சு இருக்கோல்லியோ?"

"இருக்கு. வித்துட்டு இந்தப் பக்கம் வந்து ஏதாவது தொழில் பண்ணலாமான்னு தோண்றது."

"எதாவது தொழில்னா?"

"இத்தனை நாள் பண்ணிட்டிருந்தோமே... இந்தச் சுண்டல், கைமுறுக்குன்னு பண்ணலாமோன்னு ஒரு எண்ணம். இட்லியும், தோசையும் வார்த்துப்போட்டுச் சம்பாதிக்கலாமான்னு ஒரு யோசனை. பெரியவாகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வரலாம்னுதான் நான் இங்க வந்தேன்."

"அப்போ வைதிகம்?"

பெரியவர் கேட்க, சாம்பசிவ சாஸ்திரி மௌனமாக இருந்தார்.

"உம்ம புள்ளைக்கு ஏதாவது தெரியுமா?"

"போனான். ஏறலை. ஆனா கடைல மொத்த அடிப்படை வேலைகளை அவன்தான் கவனிச்சுண்டான்."

"என்னது அடிப்படை வேலைகள்?"

"மாவாட்டறது, தண்ணீர் சேந்தறது. சுண்டல் பிரட்டிப் போடறது. பஜ்ஜி போடறது அத்தனையும் ராப்பகலா அவன்தான் பார்த்துண்டான்."

"வேலை பிடிச்சுப்போச்சாக்கும்?"

"ஆமாம் காசு வர்றதே... மரியாதை இருக்கே."

"ஆஹா– இதுக்கு மரியாதை கூட இருக்கோ."

"இருக்கு. கும்பகோணத்துக் குளத்துக்குப் போனதும் தனியா இறக்கிவிட்டு மாமா இங்க வாங்கோன்னு என்னையும் என் பொண்டாட்டியையும் இடுப்பு ஜலத்துல நிக்க வெச்சு, மொண்டு ஊத்திக்கிறதுக்குக் குடமும் கொடுத்தா, என்னடான்னு பேந்தப் பேந்த முழிச்சேன். உங்க கடையில நேத்தும் சாப்பிட்டேன். முந்தாநேத்தும் சாப்பிட்டேன். தோசை ஏ கிளாஸ் அப்படிங்கறான். அவன் சாப்பிட்டதே தெரியலை. ஆனா, அவனுக்கு என்னைத் தெரிஞ்சிருக்கு. தோசை வார்த்துப்போட்ட இவளை அவனுக்குத் தெரிஞ்சிருக்கு. மறுநாள் கடைக்கு வந்தா கூடுதலா கெட்டிச் சட்டினி போடணும்னு கேட்டுண்டான். சரின்னேன்."

பெரியவர் கன்னத்தில் கைவைத்தபடியே சாம்பசிவ சாஸ்திரிகளைப் பார்த்தார்.

"அப்போ, தொழில் மாறணும்னு முடிவு ஆயிடுத்தாக்கும்?"

"நீங்க என்ன சொல்றேளோ அதுப்படி செய்யறேன்."

"சோத்துக்கடை வேண்டாம்னு சொல்லிட்டா என்ன பண்ணுவேள்?"

"மறுபடியும் பட்டணத்துக்குப் போவேன். திருவல்லிக்கேணி சந்துல பொண்டாட்டியோட உட்கார்ந்து குடித்தனம் பண்ணி லொங்கு லொங்குன்னு அமாவாசை தர்ப்பணத்துக்கும், ஹோமத்துக்கும் ஓடி திரும்பவும் சந்துல வந்து அடங்கணும்."

பெரியவர் நிமிர்ந்து நாலாபுறமும் பார்த்தார். மறுபடியும் அமைதியானார்.

"சாப்பாட்டுக் கடையே வெச்சுடுங்கோ. கும்பகோணத்துல வேண்டாம். உங்க ஊர்கிட்டயே மாயவரத்துக்குப் பக்கமாகவே உங்க ஊர்லேர்ந்து பத்து நிமிஷ நடையில வர்ற இடமாவே பார்த்து வெச்சுடுங்கோ. நிலம்,

நீச்செல்லாம் விக்க வேண்டாம். குடியிருக்கற வீட்டை ஒருக்காலும் விக்கப்படாது. முன்னோர்கள் குடியிருந்த இடத்தைச் சரிபண்ணி சுத்தமா வெச்சுக்கணும். பட்டணத்துக்குப் போய் இங்க இருக்கற வீட்டைப் பாழடிக்கறதை விட இங்கேயே வேற தொழில் செய்யறது சரி. மாயவரத்துல வைதீகத்துக்குக் காசு வராதா?"

"வரும். இனிமே அது போறாது."

சாம்பசிவ சாஸ்திரி அடிக்குரலில் சொன்னார்.

"போறும், போறாது என்பது மனசைப் பொறுத்தது. மனசு நிறையக் கேட்க ஆரம்பிச்சுடுத்து. அதனாலதான் பிரச்னை. வெறுமனே பிச்சையெடுத்துச் சாப்பிண்டிருந்த பெரியவாளெல்லாம் நம்ம குலத்துல இருந்திருக்கா. இப்போ இல்லை. பட்டணத்துக்குப் போகறதுக்கு மாயவரத்துல இருக்கறது எத்தனையோ உத்தமம். பசங்களையும் பட்டணத்துக்கு அனுப்ப வேண்டாம். மாயவரத்துலயே இறுக்கமா ஆணி அடிச்சு வெச்சுடு. செய்வியா...?"

"நிச்சயம் செய்வேன். எம்புள்ளையை பட்டணத்துக்கு அனுப்ப மாட்டேன். போப்படாதுன்னே சொல்வேன்."

"சந்தோஷம்" முகம் மலர பெரியவர் அட்சதை எடுத்துக் கையில் கொடுத்தார். அவர்கள் அதை வாங்கிக் கொண்டு நமஸ்கரித்தார்கள்.

பந்தலுக்குத் திரும்பினார்கள். பேசியதைச் சொன்னார்கள்.

"கும்பகோணம் வேண்டாம்னுட்டாரா?" விஸ்வநாதன் விழி விரியக் கேட்டான்.

"ஆமாம்."

"எனக்கும் அதுதான் தோணித்து."

"ஏன்?"

"நாம இங்க கொடி கட்டினதைப் பார்த்துட்டு ஆறேழு குடும்பங்கள் மூலா மூலைக்குக் கடைபோட ஆரம்பிச்சுடுத்துகள். வீட்டையே ஒருத்தன் சாப்பாட்டுக் கடையா மாத்தணும்னு ஏற்பாடு பண்ணிண்டிருக்கான். மரபெஞ்சு வாங்கி போட்டுண்டிருக்கான். மாயவரத்துல இப்படி யாரும் கடை ஆரம்பிச்சிருக்க மாட்டா, நாம ஆரம்பிச்சா நன்னா ஓடும்." என்றான் விஸ்வநாதன்.

"அப்பா, இந்தப் பதினாலு நாள்ல லாபம் என்ன தெரியுமா? நூத்து நாற்பத்தேழு ரூபாய்." பெரிய தலையணையைப் போலுள்ள கெட்டியான பை ஒன்றை தூக்கமுடியாமல் மகள் தூக்கிக் காட்டினாள்.

சாம்பசிவ சாஸ்திரிகள் திகைத்துப் போனார். "அவ்வளவாடா.. அவ்வளவாடா..?" என்று மைத்துனனைப் பார்த்துக் கேட்டார்.

ஆமாம் என்று விஸ்வநாதன் கம்பீரமாய் புன்னகை செய்தான்.

"என்ன பண்ணப் போறே?" கவலையோடு மைத்துனனை சாம்பசிவ சாஸ்திரிகள் கேட்டார்.

"என் பங்கு நிலம் வித்து காசு போட்டு ஓட்டல் ஆரம்பிக்கப்போறேன். பெரியவா சொன்னது போல மாயவரத்துப் பக்கம் ஓட்டல் ஆரம்பிக்கப் போறேன். நல்ல கூட்ரோடா பார்த்து இதே மாதிரி பந்தல் போட்டு நல்ல உயரமா நின்னு சமைக்கிற மாதிரி கோட்டை அடுப்பு கட்டி ஏழு ஆள் போட்டுப் பெருசா பண்ணப் போறேன்."

சாம்பசிவ சாஸ்திரிகள் அவன் பேச்சுக்கு மௌனமாகத் தரையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"நீங்க ஒரு உதவி பண்ணனும்."

"என்ன?"

"உங்க சொத்துல இவன் பங்குன்னு இருக்கு மோன்னோ?" சதாசிவனை சுட்டிக் காண்பித்தான்.

"ஆமா... இருக்கு... என்ன?"

"அதை எனக்குக் கிரயம் பண்ணிக் கொடுங்கோ. காசா கொடுங்கோ. அதையும் தொழில்ல போடலாம். நிலத்தை விற்க வேண்டாம்னு சொன்னாளா?"

"வீட்டை நன்னா வெச்சுக்கணும்னு சொன்னா."

"நான் வீட்டை விக்கணும்னு சொல்லவே இல்லை. நாம குத்தகைக்கு விட்டு காசு பார்க்கறதுங்கறது இப் போதைக்கு முடியாது. இந்தத் தொழிலை வெச்சுனுட் டோம்னா அந்தத் தொழிலைப் பார்க்க முடியாது. அதனாலதான் சொல்றேன். குத்தகைக்கு விட்டு அவஸ்தைப் படறதைவிட வித்துட்டாக்க நல்லது."

"நாமளா வித்தா வாங்க மாட்டாண்டா. குத்தகையை மாத்தறேன்னு சொல்லுவோம். வாங்கிப்பான் எப்பாடு பட்டாவது வாங்கிப்பான். நாம சொன்ன விலைக்கு வாங்கிப்பான்."

அந்தக் குடும்பம் தோளில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு மகாமகத்தில் வாங்கிய இடுப்புயர கிருஷ்ணன் பொம்மையை எடுத்துக் கொண்டு புதிய துணிமணி மூட்டைகளுடன், பித்தளைப் பாத்திரங்களுடன், ரயில்வண்டி ஏறி மாயவரம் போய் இறங்கியது.

இறங்கிய நேரத்தில் எல்லோருக்கும் பசித்தது.

"திங்கறதுக்குன்னு புளியோதரையாவது பொட்டலம் கட்டிண்டு வரப்படாதா? இந்தப் புத்தி முன்னாடியே இருக்க வேண்டாமா...?"

விஸ்வநாதன் மனைவியைப் பார்த்துக் கத்தினான்.

"நான் கேட்டேன். 'என்னத்துக்கு பத்து வெச்சுண்டு அலையணும்'னு அம்மா சொல்லிட்டா."

பத்தாவது... பதினொண்ணாவது... இப்போ லோருக்கும் கொலைபசி. குழந்தைகளை பார்... ன்னு சொருகிக் கிடக்கறது. இத்தனை மூட்டையையும் ண்டியில ஏத்தி ஊருக்குள்ள போகப்போறமே... எப்படி டியும்? ஒரு ஆள் நகர்ந்தோம்னா லாவிண்டு யிடுவான்." என்று விஸ்வநாதன் மறுபடியும் கத்த, சிவன் ஊருக்குள் ஓடினான். பெரிய பாத்திரத்தில் ய்ச்சிய பால் வாங்கி வந்தான்.

"தயிர்சாதம் பண்ணச் சொல்லி இருக்கேன். இதைக் க்கண்டே இருங்கோ. மறுபடியும் போய் எடுத்துண்டு றேன்."

லை அவர்களிடம் கொடுத்து விட்டுத் திரும்பவும் ான். பத்துப்பட்டை தயிர்சாதம் கொண்டு வந்து யில் இறக்கினான்.

எங்கடா போயிட்டு வர்றே?"

வன் சொன்ன இடம் வெகு தூரத்தில் இருந்தது.

எப்படிடா அவ்வளரு தூரம் போனே?"

ஓடினேம்ப்பா..."

பிள்ளையை சாம்பசிவ சாஸ்திரி வியப்போடு பார்த்தார்.

ட்டுமஸ்தாய், கரளைக்கரளையாய், முகத்தில் ர்வை பொங்க கண்களில் ஒரு சிறிய வெறி இருக் ம்பம் பசிக்கக்கூடாது என்கிற அங்கலாய்ப்பே கிற ஒரு பிள்ளையைப் பார்க்க அவ மையாக ந்தது.

திரும்பி அவ விஸ்வநாதனைப் ன் கோபம் குறந்து புன்னகை

இவனை என்ட விட்டு க்கும் எனக்குரந்தக் ன்னான்.

10

அவர்கள் தயிர்சாதம் சாப்பிட்டுக் கொண்டிருக்கு
போது இன்னொரு பாஸஞ்சர் ரயில் வந்து நின்றத
கரிப்புகை படியாமல் இருக்க, அவர்கள் துண்டால் தயி
சாதத்தை மூடிக்கொண்டார்கள்.

கூட்டம் இறங்கி இடதும், வலதும் அல்லாடியது

குடித்தது போக ஒரு சொம்பில் பால் இருந்தது. அ
பாலைப் பார்த்து விட்டு ஒரு பெரியவர் அருகே வ

"குழந்தை கத்தறது... கொஞ்சம் பால் தருவேளா..."
பணிவாகக் கேட்டார்.

"ஆஹா... எடுத்துக்கோங்களேன்." என்ற சாம்ப
சாஸ்திரிகள், கால் சொம்புப் பாலை அவரிடம் நீட்டி

"தயிர்சாதம் எங்க கிடைக்கறது... பக்கத்துல யா
விக்கறாளா?"

"இல்லை சுவாமிகளே... ஊருக்குள்ளே போய் தொ
தூரம் போய் வாங்கிண்டு வந்தது..."

"இங்க எதுவும் கிடைக்காதா?"

"எதுவும் கிடைக்காது."

தொலைதூரம் எவ்வளவு தூரம் போகணும்?"

து நிமிஷம் ஓடினாத்தான் போக முடியும்."

டிரெயின் போயிடுமே."

."

து தன் வாயி விட்டுக் கொ
மாதிக் கொண்ட

"அம்மாவையும் அக்காவையும் கூட்டிண்டு போய் செம்பனார் கோவில்ல இறக்கிவிடு. பால் வியாபாரம் பண்றவாகிட்ட தயிர் கிடைக்குமான்னு கேளு. அதுக்குள்ள நாங்க ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்துட்டு வந்துடறோம். நம்மகிட்ட என்ன பாத்திரங்கள் இருக்கு... என்ன இன்னும் வாங்கணும் அப்படிங்கறத நீங்க ரெண்டு பொம்மனாட்டி களும் பாருங்கோ." என்று உத்தரவு கொடுத்துவிட்டு விஸ்வநாதன், சாம்பசிவ சாஸ்திரிகளோடு ஸ்டேஷன் மாஸ்டர் அறையை நோக்கி நடந்தான்.

சாம்பசிவ சாஸ்திரிகள் சுருக்குப்பையிலிருந்து விபூதி எடுத்து இன்னொரு முறை நெற்றியில் இட்டுக் கொண்டார்.

அவர் முகம் பொலிவாயிற்று.

அந்த அறைக்குள்ளே உரத்த குரலில் நாலைந்து பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஸ்டேஷன் மாஸ்டர் எதிரே இருந்த குடுமி வைத்த இளைஞர்களுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

சாம்பசிவ சாஸ்திரிகளும், விஸ்வநாதனும் வாசல்பக்கம் அவர் பார்க்காமல் நின்று கொண்டார்கள். பேசி முடிக்கட்டும்... உள்ளே நுழையலாம் என்று சாம்பசிவ சாஸ்திரிகள் சைகையில் சொல்ல, விஸ்வநாதன் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தான்.

"எப்பாடுபட்டாவது ஸ்கூல் ஃபைனல் முடிச்சுடு. இங்கிலீஷ் நன்னா பேசறதுக்கு கத்துக்கோ. ரயில்வேல நுழைத்தவுடனே முப்பத்து மூணு ரூபா சம்பளம். இலவசமா டிரஸ் கொடுத்துடறா. ஸ்டேஷன் மாஸ்டருக்குன்னு வியடவள்ளை வெளேர் உடுப்பு கொடுத்துடறா. அந்த உடுப்பை நன்னா வெச்சுக்கறதுக்கு சவுக்கார செலவு கொடுக்கறா. ரண்டு மாசம் டிரெயினிங் கொடுக்கறான். கொடுத்துட்டு பார்த்தாவது ஒரு இடத்துல போட்ருவான்.

இதுல ஒரேயொரு சிரமம்- எல்லாருக்கும் மாயவரம் கிடைக்காது. கும்பகோணம் கிடைக்காது. கடப்பா, கர்னூல்னு அங்கேயும் தூக்கிப் போடலாம். ரொம்ப வெட்டவெளியா இருக்கற ஒரு ஸ்டேஷன்லயும் உன்னைக் கொண்டுவந்து இறக்கலாம். எல்லாத்தையும் அனுசரிச்சுண்டுதான் அந்தக் காசுக்காக நீ வாழ்ந்தாகணும். மாயவரத்துலயாவது ஏதாவது செலவு இருக்கும். வாங்கித் திங்கணும்னு தோணும். வெறும் அத்வான காட்ல தூக்கிப் போட்டுட்டான்னா முப்பத்துமூணு ரூபாய்க்கு ஒரு செலவும் கிடையாது. நீ, உன் பொண்டாட்டி, ரயில்வே ஸ்டேஷன்னு ஆனந்தமா இருக்கலாம். ஆனால், அந்த ஆனந்தத்துக்குப் பழகிக்கணும்.

வடக்கேயிருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம் வரும். தெற்கேயிருந்து புளி, மஞ்சள் போகும். நம்மள பார்த்த வுடனே இந்தாங்கோ வெச்சுக்கோங்கோன்னு கால் மூட்டை, அரைமூட்டை தள்ளிடுவான். துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, அரிசி எல்லாமே கூட கிடைக்கும். பொண்டாட்டிக்கு துணிமணி தவிர வேறு ஒண்ணும் பெரிய செலவு கிடையாது.

என்னை மாதிரி மாயவரத்துலயே ஸ்டேஷன் மாஸ் டரா வந்துட்டம்னு வெச்சுக்கோ... உனக்கு மரியாதையே தனி. போறவா, வரவா அத்தனை பெரிய மனுஷாளும் உமக்கு நமஸ்காரம் பண்ணிட்டுதான் போவா. ஸ்டேஷன் மாஸ்டர்தான் ஸ்டேஷன்ல ராஜா. இது ஒரு குட்டி அரசாங்கம். நீ வெச்சதுதான் சட்டம். உனக்கு கீழே பத்து பேரு இருப்பா.

பயணிகள் தங்கறதுக்குன்னு பெரிய ரூம், கட்டில் எல்லாம் இருக்கும். வெள்ளைக்காரன் தங்கற நேரம் தவிர மத்த நேரங்கள்ல நாம உபயோகப்படுத்திக்கலாம். தேவகோட்டையிலேர்ந்து வியாபாரிகள் வருவா. அவாளுக்கு படுக்கறதுக்கு இடம் கொடுத்து, குடிக்கறதுக்கு தண்ணி கொடுத்து, சாப்பிடறதுக்கு பக்கத்துல

எங்கேயிருந்தாவது ஏற்பாடு பண்ணா போதும். ரொம்ப சந்தோஷம் ஆயிடுவா. ரெண்டு வெள்ளிக்காசு வெச்சுக் கோன்னு சொல்லிட்டுப் போயிடுவா.

வருஷத்துக்கு பதிமூணு நாள் லீவு. உதவி ஸ்டேஷன் மாஸ்டரை உனக்குப் பதிலா உட்கார வெச்சுட்டு நீ எங்காவது போயிட்டு வரலாம்.

எங்கெல்லாம் டிரெயின் போகிறதோ அங்கெல்லாம் போகலாம். ஒத்த தம்பிடி காசு கொடுக்க வேண்டாம். இது தனி வாழ்க்கை. தனி உலகம் சேர்ந்துடு. ரயில்வே பிரமாதமான விஷயம். ஒரு மாசம் பத்து ரூபாய் சேர்த்து அம்பத்தஞ்சு வயசுல ரிட்டயர் ஆகி சேர்த்த காசோட இந்தப் பக்கம் ஆடுதுறை, அந்தப் பக்கம் திருச்சிராப்பள்ளி எங்கேயாவது ஒரு கிராமத்துல வீடும், நிலமும் வாங்கிப் போட்டேன்னா பரம சந்தோஷமா சொச்ச காலத்தைக் கழிக்கலாம். உங்க பிள்ளைக்கும் ரயில்வேல நிச்சயம் வேலை உண்டு. இப்படி யாராவது வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருவாளா... வெள்ளைக்காரன் தரான். என்ன... அவனுக்கு நன்றியோட இருக்கணும். நன்றியோட இருக்கறது கஷ்டமா... அதானே எல்லா மனுஷாளும் அவசியம் பண்ண வேண்டியது..."

ஸ்டேஷன் மாஸ்டர் பெரிதாகப் பேச, எதிரே உள்ள இளைஞர்கள் கைகளைக் கட்டிக்கொண்டு அவர் சொல்வதையே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"குடுமியை எடுத்துடணுமா மாமா?"

ஒரு பையன் கேட்டான்.

"எடுத்துடேண்டா. வெச்சுண்டு என்ன பண்ணப் போற? வெச்சுண்டா டர்பன் கட்டிக்கணும். டர்பன் கட்டிண்டு நின்னா ஒரு மாதிரி வித்தியாசமாத்தான் இருக்கும். வெள்ளைக்காரன் முறைச்சுப் பார்ப்பான். அவனுக்கு டர்பன் கட்டின இந்தியர்களைப் பிடிக்காது. அதுவும்

அவனுடைய ரயில்வேயில டர்பன் கட்டி. வேலை செய்யறது அவ்வளவு இஷ்டம் இல்லை. வேண்டாம்னு சொல்ல மாட்டான். எடுத்துட்டா சந்தோஷப்படுவான்."

"குடுமி எடுக்கறது தப்பு இல்லையா மாமா...?"

"வெச்சுண்டு என்ன பண்ணப் போறயோ, அதை எடுத்துட்டு பண்ணேன். குடுமியில் என்ன இருக்கு சொல்லு. சந்தியாவந்தனம் பண்ணணும், காயத்ரி ஜபம் பண்ணணும், இதுதான் முக்கியம். கார்த்தால குளிச்சுட்டு ஸ்டேஷனுக்கு வந்துடு. இங்க உட்கார்ந்துண்டு ஜபம் பண்ணு. பாண்ட்டை மாட்டிக்கோ, சட்டையை போட்டுக்கோ. டைய கட்டிக்கோ. கையில கொடியை எடுத்துண்டு, வர டிரெயின், போற டிரெயின் ரெண்டுத்தையும் அனுப்பி வெச்சுடு. மறுபடியும் உட்கார்ந்துண்டு ராமாயணம் படி. யார் கேட்கறா. உனக்கு விளக்கு போட்டு, சுழல் விசிறி போட்டு இத்தனை வசதியோட எந்த இடம் கிடைக்கும்... இதுக்கு குடுமி எடுத்தாதான் என்ன?"

"எங்கப்பா 'நீ என்ன வேணாலும் பண்ணு. ஆனா குடுமியை எடுக்காத. காயத்ரி ஜபம் பண்ணினாலும் சரி, பண்ணாட்டாலும் சரி... குடுமியை வெச்சுண்டு பிராமணாளா இரு' அப்படின்னு சொல்லி இருக்கா. எனக்கு அதுதான் புரியமாட்டேங்கறது."

எதிரே இருந்த பையன் குழப்பத்தோடு பேசினான்.

சாம்பசிவ சாஸ்திரிகள் இதுதான் நேரம் என்று உள்ளே நுழைந்தார்.

ஸ்டேஷன் மாஸ்டர் எழுந்து நமஸ்கரித்தார்.

"நமஸ்காரம் சார். அம்பி... உங்கப்பாவுக்கு எப்படி வருமானம்? என்று கேட்டார்.

"வைதிகம் மாமா." அந்தப் பையன் பதில் சொன்னான்.

"உங்கப்பா ஒரு தர்ப்பணத்துக்கு என்ன வாங்கறார்?"

"என்ன கொடுக்கறாளோ அதை வாங்கறார் மாமா."

"குறைஞ்சபட்சம் என்ன கேட்பார்?"

"ஓரணா, ரெண்டனா கேட்பார் மாமா."

"வாங்கப்படாது. கொடுத்தாலும் வாங்கப்படாது. காசு வாங்காமல் வைதீகம் செய்யணும். அரிசியோ, பருப்போ, வாழைக்காயோ, காய்கறிகளோ வாங்கிக்கலாமே தவிர சொர்ணம் கொடுத்தாலும், காசு கொடுத்தாலும் வாங்கிக்கப்படாது. ஆனால் வாங்கறோம்... ஏன்? காய்கறியும், அரிசியும் டக்குன்னு கிடைக்கிறதில்லை. இதுக்கு சொர்ணம் கொடுக்கறேன்... காசு கொடுக்கறேன் இதுக்குப் போய் அரிசி வாங்கிக்கோங்கோன்னு ஒரு அனுசரணை. அந்த அனுசரணை என்ன ஆச்சு... ஒவ்வொரு காரியத்துக்கு ஒவ்வொரு காசு அப்படின்னு முடிஞ்சுது. ஒரு நாள் முழுக்க ஹோமத்துல உட்கார்ந்தா ஒரு ரூபா கொடு அப்படின்னு சட்டமா கேட்கறா. இதுதான் எல்லா இடத்துலேயும் நடக்கறது.

பட்டணத்துக்குப் போனேன்னாக்க அங்க எல்லாமே காசுதான். அரிசி, வாழைக்காய் முக்கியமே இல்லை. முடிஞ்சவாதான் தருவா. முடியாதாவா காசுதான் தருவா. காசை வாங்கிண்டு தான் வரணும்.

ஒவ்வொரு காலகட்டத்துலேயும் ஒவ்வொரு மாற்றங்களையும் நாம ஏத்துக்கணும். நீ குடுமியை எடுத்துட்டு ரயில்வே உத்தியோகத்துக்குப் போகறது தப்பேயில்லை. ரயில்வே உத்தியோகத்துக்குப் போகணும்னா குடுமியை எடுக்கறதுதான் நியாயம். அவா... ஸ்டேஷன் மாஸ்டர் சொன்ன மாதிரி இங்க உட்கார்ந்துண்டு சந்தியாவந்தனமோ, காயத்ரி ஜபமோ, ராமாயணம் படிக்கறதோ செய்யலாம். எல்லா நேரமுமா டிரெயின் போறது, வரது..."

தன் கட்சிக்கு ஒரு பெரியவர் வந்து பேசுவதைக் கேட்டு ஸ்டேஷன் மாஸ்டர் சந்தோஷமடைந்தார்.

சாஸ்திரிகளை உட்காரச் சொன்னார்.

சாம்பசிவ சாஸ்திரிகள் உட்காரவில்லை.

"சித்த... வெளிய இருக்கேளா..." அந்த இளைஞர்களை பார்த்துப் பணிவோடு கேட்டார்.

இளைஞர்கள் வெளியேறினார்கள்.

விஸ்வநாதன் உள்ளே நுழைந்தான்.

"எனக்கு செம்பனார்கோவில்." சாம்பசிவ சாஸ்திரிகள் ஆரம்பித்தார்.

"அப்படியா... என்ன சமாசாரம்?"

"இந்த ரயில்வே ஸ்டேஷன்ல தயிர் சாதம், வடை, அப்பம் விக்கலாம்னு என்னுடைய மாப்பிள்ளை கேட்கறான். ஒரே பொண்ணு. மச்சினனுக்கே கொடுத்துருக்கேன். அவனுக்கு பிழைக்கறதுக்கு ஒண்ணும் வழி இல்லை. வேற ஒண்ணும் வேலை தெரியலை. வைதீகத்துல ஈடுபாடு இல்லை. நன்னா சமைக்கறான். இந்த ஸ்டேஷன்ல கார்த்தாலேயும், சாயங்காலமும் இந்த மாதிரி விஷயங்களை வியாபாரம் பண்ணணும்னா நான் என்ன பண்ணணும்?"

என்ன செய்ய வேண்டுமென்று ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தெரியவில்லை. அப்படியேதும் சட்டம் இல்லை. குளிக்கவும், குடிக்கவும் குடிதண்ணீர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வண்டிமாடும், பீப்பாயும், ஆளும் அவருக்குத் தரப்பட்டிருக்கின்றன. பெருக்குவதற்கும், ஓட்டடை அடிப்பதற்கும், சுத்தம் செய்வதற்கும் ஆட்கள் தரப்பட்டிருக்கின்றன.

ஆனால், தயிர்சாதம் விற்பதற்கு தனக்கு அனுமதி உண்டா என்று தெரியவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர் யோசித்தார்.

அடிக்கடி அவர் மனைவி பிறந்தகம் போவதால் அவருக்கு சாப்பாடு ஒரு பிரச்சனையாக இருந்தது. தானே சமைத்து மூடிவைத்துவிட்டு பிறகு ஸ்டேஷனுக்கு வந்து வேலை செய்து விட்டு மறுபடியும் ஓடி அள்ளிப்போட்டு கொண்டு பத்துப்பாத்திரம் தேய்த்து விட்டு மறுபடியும் ஓடிவந்து ஸ்டேஷனுக்குள் வேலை செய்து... என்று ஒரு பெரிய அல்லாட்டம் இருந்தது.

சமையல்காரர்களை போட்ட போது அவர்கள் நான்கு, நாள் ஐந்து நாளுக்கு மேல் வேலை செய்யவில்லை. பெண் சமையல்காரர்களை வைத்துக்கொள்ள தயக்கமாக இருந்தது. ஊர் ஏதேனும் சொல்லுமோ என்ற கவலை வந்தது.

"எத்தனை மணிக்கு தயிர்சாதம் கொண்டு வருவேள்?"

"கார்த்தாலே அஞ்சரை மணிக்கு இங்க தயிர்சாதம் இருக்கும்."

"வேறென்ன?"

"தொட்டுக்கறதுக்கு மசால்வடை, தயிர்சாதமும் மசால்வடையும் நன்னா சேரும். கூடவே அப்பம் ரெண்டு அப்பம் தின்னுட்டு தயிர்சாதத்துக்கு மசால்வடை தொட்டுண்டு சாப்பிடலாம். கூடவே ஊறுகாயோ, வத்துக் கொழம்போ தொன்னையில கொடுக்கலாம்னு நினைச் சுண்டிருக்கேன்."

"எத்தனை பொட்டலம் கொண்டு வருவேள்?"

"அம்பதோ, அறுவதோ... எத்தனை போகறதுங்கிறதப் பார்த்து..."

"அப்புறம் சாயந்தரத்துக்கு..."

"சாயந்தரத்துக்கும் அதேதான். ஒரு அஞ்சு மணிக்கு ரெண்டு கூடை கொண்டு வந்துடுவேன். தெற்கேயிருந்து வடக்கே போற டிரெயினுக்கு சரியாக இருக்குமில்லையா?"

"கேட்க நன்னா இருக்கு. நான் மெட்ராஸ்ல கேட்டுட்டு இதைப் பத்தி சொல்றேன்."

"நாளான்னிக்கு நாள் நன்னா இருக்கு. அன்னிக்கே ஆரம்பிச்சுடலாமான்னு பார்க்கறேன்."

"எங்கேருந்து கொண்டு வருவேள்?"

"செம்பனார்கோவில்." சாம்பசிவ சாஸ்திரிகள் தயங்கிப் பேசினார்.

"செம்பனார் கோவில்லேர்ந்தா வரப்போறது..."

"இல்லை ஸ்டேஷன் பக்கத்துல எங்கேயாவது ஒரு வீடு எடுத்துண்டு அங்க தயிர்சாதம் பண்ணிக்கொண்டு வரணும்." விஸ்வநாதன் வேறுவிதமாக விளக்கினான்.

"ஸ்டேஷன் பக்கத்துலேன்னா...?"

"இந்தப் பக்கம் ரொம்ப கிட்டக்க..."

"ரொம்ப கிட்டக்கேன்னா...?"

"இந்த ஸ்டேஷன் ரூம்லேர்ந்து உரக்க விஸ்வநாதா அப்படின்னா- அவன் இங்க ஓடி வந்துடணும் அவ்வளவு கிட்டக்க." சாம்பசிவ சாஸ்திரிகள் சொல்ல, ஸ்டேஷன் மாஸ்டர் சிரித்தார்.

"சரி, நீங்க ஆரம்பிச்சுருங்கோ... ஆனா, தயிர்சாதம் புளிப்பில்லாத நேத்து சாப்பாடா இல்லாம இருக்கணும். மிஞ்சுத்துன்னா கீழ கொட்டிடணும். சாப்பாடுல ஏதாவது தப்பு நடந்துன்னா நிர்வாகம் உங்களை உண்டு இல்லைன்னு பண்ணிடும்."

"ஏன் தப்பு நடக்கப் போறது. எல்லாத்தையும் ரொம்ப கவனமா உங்களுக்குத் திருப்தி தர வண்ணம் பண்றோம்." என்று சாம்பசிவ சாஸ்திரிகள் கைகூப்பினார்.

பின்னர் இரண்டு பேரும் விடைபெற்று பரபரவென்று இளம்பிப் போனார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு இந்தத் திருப்பம் பயமாக இருந்தது. அமைதியாக, ஆனந்தமாக போய்க்கொண்டு இருந்த ஒரு வைதீக வாழ்க்கையை உதறிவிட்டு உருண்டு, புரளும் நதியில் விழுந்து கைகால் அசைத்து இடைவிடாது போராடுகின்ற ஒரு வாழ்க்கைக்கு மாறுகிறோமோ என்று கவலை வந்தது. இது சரியோ என்று தோன்றியது.

11

நான்கு மணிக்கு எழுந்து பின்பக்கம் போய்விட்டு வந்து பல் தேய்த்துவிட்டு, சுடவைத்த அரிசிக் கஞ்சியை பால் ஊற்றி ஒரு டம்ளர் குடித்துவிட்டு நாலரை மணிக்குத் திண்ணையில் உட்கார்ந்து மேலே துணியைப் போர்த்துக் கொண்டு ஜபம் செய்ய ஆரம்பித்தால் விடிந்து வெளிச்சம் பரவும் வரையில் எந்தக் கவலையுமில்லாமல் ஜபம் செய்து கொண்டிருக்கலாம். ஆறு மணிக்குப் பிறகு எங்கேனும் வெளியே இளம்ப தெருவில் இறங்கலாம். வெளியூருக்குப் போகும்போதே வழியில் கேணியிலோ, ஆற்றிலோ குளித்துவிட்டு விபூதி இட்டுக்கொண்டு போகலாம். வைதீகத்துக்குப் போய்விட்டு வெய்யில் உச்சிக்கு வருவதற்குமுன் வீட்டுக்குத் திரும்பிவிடலாம்.

வெளியே சாப்பிடாவிட்டால் வீட்டில் சாப்பிட்டு விட்டுக் கண்மூடி திண்ணையில் கண்ணயரலாம். மூன்று மணிக்கு எழுந்திருந்து மறுபடியும் மறுபடியும் சிறிது நேரம் ஜபம் செய்யலாம். ஊர்க்கதை பேசலாம். இருட்டப் போகும் நேரத்தில் கிணற்றடியில் நின்று குளித்துவிட்டு திருநீறு இட்டுக்கொண்டு கோயிலுக்குப் போய்விட்டு வந்து மறுபடியும் அந்திசாய்கிற நேரத்தில் சந்தியும் ஜபமும் செய்து உட்கார்ந்தால் மனம் பளிங்கு போலத் தெளிவாக இருக்கும். எந்தப் பிரச்சனை வந்தாலும் மனசு அதை எதிர்கொண்டு எடை போடத் தயாராக இருக்கும். எதுவும்

பிரச்னை இல்லை என்று மனம் பிரமாண்டமாக இடுப்பில் கை ஊன்றிப் பிரச்னைகளைப் பார்த்துச் சிரித்தபடி நிற்கும்.

கோபப்படுபவரைக் கண்டு மிகத் தெளிவாகச் சமாதானப்படுத்த மனம் முயற்சி செய்யும். சிறுபவர்களை இரண்டு வார்த்தைகளில் அமைதிப்படுத்தும்.

இதுதான் அந்தண லட்சணம். சாம்பசிவ சாஸ்திரி களுக்கு இது கையைவிட்டுப் போகப் போகிறது. இப்போது செம்பனார் கோவிலுக்கு ஓடுகிற விரைவே தப்பாக இருக் கிறது. அடிவயிறு வலிக்கிறது. கணுக்கால்கள் இடிக்கின்றன. இப்படி ஒவ்வொரு தடவையும் முன்னும் பின்னும் இதே வேகத்தோடு அலையப் போகிறோம்.

இந்த அலைச்சல் உடம்புக்கு நல்லதா? மனம் பக்குவப்படுமா? எனக்கு ஒன்றுமில்லை. அடுத்த தலைமுறை இதைத் தாங்குமா...? இல்லை, அலைச்சல் தாங்காமல் கூவத் தொடங்கிவிடுமா...?

ராமா... ஏன் இந்த மாற்றத்தை எங்களுக்கு விதைத்தாய்... அருமையான வைதீகத்திலிருந்து ஏன் எங்களைப் பிரித்தெடுக்கிறாய்?

நீ வைதீகம் செய்துகொண்டிரு. எந்தக் கவலையும் படாதே. மாதம் பத்து ரூபாய் உனக்கு நான் தருகிறேன் என்று எந்தப் பிரபுவாவது சொல்லக் கூடாதா? 'அரிசியும் பருப்பும் இறக்கி விடுகிறேன். ஊர் நன்மைக்காக வேதபாராயணம் செய்.' என்று யாராவது சொல்லக் கூடாதா? எங்கு நல்லது நடந்தாலும் எங்கு கெட்டது நடந்தாலும் அங்கு போய் அதற்குண்டான விஷயங்களைச் செய்வதே உன் பணி. அதற்குக் காசு வாங்காதே... காசு நான் தருகிறேன், என்று ஒரு அரசன் நம்மை காப்பாற்றக் கூடாதா...? பெரிய அன்னதானம் செய்யப் போகிறேன். அள்ளி அள்ளி எல்லோருக்கும் கொடு. எல்லோரும் நன்கு சாப்பிடுகிறார்களா என்று பார். சமையல் சரியாக ஆகியிருக்கிறதா. சமையல் சரியானபடி நடந்திருக்கிறதா

என்று கவனி. அன்னதானம் நடக்கும் முன்பும் அன்னதானம் நடந்த பின்பும் என்ன மந்திர சப்தங்கள் கேட்கப்பட வேண்டுமோ அதைச் செய். இன்னும் வேறெங்கு என்ன வகையான தானம் நடத்தலாம் என்பதை எனக்கு ஆலோசனை சொல், என்று யாரும் உத்தரவிடக் கூடாதா...? இப்படித்தானே இங்கு வாழ்க்கை நடந்து வந்தது. இன்று ஏன் இப்படி மாறிப்போயிற்று...?

காலையில் ஐந்தரை மணிக்குத் தயிர்சாதம் இருக்க வேண்டுமென்றால் விடியலில் மூன்று மணிக்கு எழுந் திருக்க வேண்டும். குளித்துவிட்டு வேலையில் இறங்க வேண்டும். ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒரு தட்டு கொடுத்து, சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பிறகு கூடையைத் தோளில் வைத்துக்கொண்டு கூவிக்கூவி விற்க வேண்டும். வந்த காசுக்கு அரிசி வாங்க வேண்டும். பருப்பு வாங்க வேண்டும். வெல்லம் வாங்க வேண்டும்.

விஸ்வநாதன் பைநிறைய காசு காட்டியதும் சரி என்று சொல்லிவிட்டேன். பதினைந்து நாளில் இத்தனை காசா...? என்று ஆடிப்போய்விட்டேன். மூன்று மாசமாய் காலணாவும் நாலணாவும் வாங்கி களைத்துப்போய், இத்தனை வேகமாகக் காசு கிடைக்கிறதே என்று மதிமயங்கி விட்டேன்.

இது சரியா...? நான் தவறு செய்கிறேனா...? என் குடும் பத்தைத் தவறான பாதைக்கு அழைத்துப் போகிறேனா...?

சாம்பசிவ சாஸ்திரிகள் உடம்பு குலுங்கி நடக்கும்போது, விஸ்வநாதன் வெகுதொலைவில் போய்விட்டிருந்தான். இனி பழைய முறைக்கு வாழ்க்கை திரும்பாது என்று அவருக்குத் தெரிந்து போயிற்று.

எல்லாமே அன்றிரவு எட்டு மணிக்குள் பகவான் ஆசீர்வாதம் போல மடமடவென்று நிறைவேறி, ஒரு நல்ல நிலைக்கு விஷயம் வந்துவிட்டது.

"அத்திம்பேர்... நீங்க வைதிகர் இல்லை, மஹான்... எந்த வேளையில இந்த விஷயத்தை ஆரம்பிச்சேன்னு தெரியலை... என்ன மனசோட, என்ன வாக்கோட ஆரம்பிச்சேன்னு தெரியலை... ஏதாவது வேண்டிண்டு, சங்கல்பம் பண்ணிண்டு இப்படி ஒரு கடை போடணும்னு வாயைத் திறந்து சொன்னேன்னும் தெரியலை. எங்க போய் நின்னாலும் கிடைக்கிறது... எது போய்க் கேட்டாலும் கிடைக்கறது..."

இரவு ஒன்பது மணிக்கு சாம்பசிவ சாஸ்திரிகளின் காலைப் பிடித்து விட்டுக்கொண்டே ஒவ்வொரு விரலாகச் சொடுக்கு எடுத்தான் மைத்துனன். அவரைச் சுற்றி அந்த வீட்டு அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டும், படுத்துக்கொண்டும் எதிர்காலம் பற்றி ஒரு கவலையோடு இருந்தார்கள். விஸ்வநாதனைத் தவிர, மற்ற எல்லோருக்கும் ஒரு கலக்கம் இருந்தது.

"எனக்குப் பயமில்லை அத்திம்பேர் கூட இருக்கார். இதனாலேயே பயமில்லை. என் மருமான் கூட இருக்கான். அதுவும் எனக்குப் பலம். எதுக்குப் பயப்படணும்...? கும்பகோணத்துல ஜனங்களோட பசி என்னன்னு எனக்கு நன்னா தெரிஞ்சுபோயிடுத்து. அந்நியமான இடத்துல சாப்பிடக்கூடாது அப்படிங்கற ஒரு தன்மை, அந்த ஒழுக்கம் மெல்ல மெல்ல அடைஞ்சுண்டு வரது. ஏதாவது திங்கறதுக்குக் கிடைக்காதான்னுதான் எல்லோருமே அலைஞ்சுண்டிருக்கா. ருசியா ஏதாவது பண்ணிப் போட்டா கடன் சொல்விட்டாவது தின்னுட்டுப் போறான். மறுபடியும் வந்து திங்கணுமே... அதனால போன தடவை வாங்கின கடனைக் கொடுத்துட்டுப் புதுசா ஒரு கடன் வெச்சுட்டுப் போறான். திங்கறதுக்குக் கடன் கொடுக்காதேன்னு சில பேர் சொன்னா. இல்லை... திங்கறதுக்குக் கடன் கொடுக்கலாம். ஒரு நாள் தின்னா போறுமா...?

உடுத்திண்டு ஆறு மாசம் கழிச்சு இன்னொரு உடுப்புக்கு வரலாம். திங்கறதுக்குத் தினம் தினம் இல்லே வரணும். அதனால திங்கக் கடன் கொடுத்தா தப்பாகாது. அதையும் தவிர, கடனுக்குத் தின்னிருக்கோம். காசைக் கொடுத்து தான் ஆகணும்னு அவருக்கும் ஒரு குற்ற உணர்வு இருக்கும். அதுக்கு மிஞ்சிக் காசைத் தரலேன்னா ஒழிஞ்சு போறான்... தானம்னு மனசைத் தேத்திண்டுடுவேன். அதனாலேயே தைரியமா கடன் தருவேன்..."

விஸ்வநாதன் தனக்குத்தானே பேசுவது போல் உரக்கப் பேச, அவனுடைய குடும்பத்தினர் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"வியாபாரத்தில் நஷ்டம்... அதுவும் சாப்பாட்டுக் கடையில் நஷ்டம் எப்படி வரும்...?"

"விக்கலேன்னா வரும். நூத்து நாப்பது மசால்வடை தட்டிப்போட்டு, அதுல இருபத்தஞ்சு மசால்வடை வித்தது மிச்சம் விக்கலை... நூலாயிடுத்து அப்படின்னா, அப்போ அது நாலு நாள் லாபத்துக்கு நஷ்டமாப்போயிடும். நாய்க்குக்கூடப் போடமுடியாத வடையைக் குழிதோண்டிப் புதைச்சுட்டு கண்ல ஜலத்தோட வரும்படியாயிடும். அப்படி ஒரு நிலைமை வராம இருந்தா, அது உசத்தி..."

"நூத்துநாப்பது மசால்வடை தட்டப்படாது..." அக்கா நீலாயதாட்சி உரக்கச் சொன்னாள்.

"ஆனா, பருப்பு ஆட்டி வைக்கணுமோன்னோ... ஆட்டி வெச்ச பருப்பை எங்க கொண்டுபோய் வெச்சுக்கறது...? வடையாத்தான் மாத்தணும். பருப்பை அரைக்கணும்னா, அதை ஊறப் போடணுமோன்னோ... ஊறப் போடறதைத் திருப்பி உலரவைக்க முடியுமா...? முடியாது இல்லையா... அதனால் ஊறப்போடறபோதே பகவானே, இது அத்தனையும் செலவாகணும்னு கவலையோட பண்ணணும். அந்த நஷ்டத்தைத் தாங்கும்படியா பண்ணணும்..."

விஸ்வநாதன் உரக்கச் சொன்னான்.

"அப்படி நஷ்டம் வராது விஸ்வநாதா..." எழுத்து சுவர் மீது சாம்பசிவ சாஸ்திரிகள் சாய்ந்து கொண்டார்.

"கார்த்தால மசால்வடை மத்தியானம் போகலேன்னா, லேசா இன்னொரு தடவை எண்ணெய்ல ஒருபிரட்டிப் பிரட்டி நறுக்கிக் குழம்புல போட்டுடலாம். ஒரு பருப்பு உருண்டைக் குழம்பு மாதிரி, தோசைக்குத் தொட்டுக்கற விஷயமா அது வந்துடும்... இப்படிப் பண்ணி நீ சாப்பிட்டிருக்கியோ...?"

"நீங்க சொல்லியிருக்கேள்... உங்கம்மா பண்ணுவான்னு சொல்லியிருக்கேள்."

"எனக்குத் தெரியாது... தெவசத்துக்கு நிறைய வடை பண்ணணும்னு அப்பா சொல்லுவா, அம்மாவும் பண்ணுவா, ஆனால், நாலு வடைக்குமேல பிராமணாளால சாப்பிட முடியாது. அந்த வடை குழந்தைகள் சாப்பிட்டும் மிஞ்சும். அப்படி மிஞ்சின வடையை மறுநாள் குழம்புல போட்டு என்னமோ பண்ணுவா, ரொம்ப நன்னாயிருக்கும்..."

"ஆனா... ஒரு ஓட்டல்ல அப்படிப் பண்ணலாமா...?"

"வேறவழி... பண்ணித்தான் ஆகணும்..."

"அன்னக்குத்தம் கூடாதுங்கறாளே...?"

"அன்னக்குத்தம்னா என்னடா... சாப்டுட்டு வயத்தால போகப்படாது. வாய்க்கு ருசியா பண்றது குத்தம்னு உனக்கு யார் சொன்னா...?"

"பழசைப் புரட்டிப்போட்டுப் புதுசா பண்றது குத்தமில்லையா...?"

"அப்படிப் பார்த்தா வியாபாரம் பண்ண முடியாது விஸ்வநாதா..."

"எனக்கு அப்படித்தான் பண்ணணும்னு ஆசை. இருந்தாலும், உங்களை ஒரு வார்த்தை கேட்டுக்கறேன்."

விஸ்வநாதன் சொல்ல. சட்டென்று சாம்பசிவ சாஸ்திரி விழித்துக் கொண்டார்.

நஷ்டம் வரக்கூடாது என்பதற்காகத்தானே முன்வந்து தவறான வழிகளைச் சொல்லித் தருகிறோமோ... ஆசாரம் மீறிப் பேசுகிறோமோ...? முதல் நாள் உணவை மறுநாள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சாத்திரங்கள் சொல்கின்றன. பழையது உண்ணலாகாது என்று பேசுகின்றன. மீந்த உணவை மறுபடி சமைக்கக்கூடாது என்று தெளிவாகக் கட்டளையிட்டிருக்கின்றன. ஆனால், அவ்விதம் செய்ய நேருகிறதே... என்ன செய்ய...? மறுபடியும் சரிந்து, துவண்டு படுத்துக்கொண்டார்.

ஒரு பிராமண வாழ்க்கை முற்றிலும் அழிந்துபோகப் போகிறது. இந்த ஆசாரக் குறைவினால் உடம்பும் மனதும் பாழ்படப் போகின்றன. பதற்றம் அதிகமாகப் போகிறது. தன்னுடைய வாழ்க்கை மட்டுமல்லாது தன்னுடைய குழந்தைகளின் வாழ்க்கையும், பேரன், பேத்திகளின் வாழ்க்கையும் இன்னும் வேறுவிதமாகப் போகிறது.

இந்தப் பாவத்தை எப்படிக் கலைப்பது என்று தெரியவில்லை. இது எதனால் சீராகும் என்பது புரியவில்லை.

நூத்துநாப்பது வடை தட்டி, அதில் இருபத்தைந்து வடை விற்று, மிச்சம் வடைகள் நூத்துப்பதினஞ்சும் மண் தோண்டிப் புதைக்க வேண்டுமென்றால், இது வியாபாரமா...? இத்தனை உழைப்பையும் மண்ணில் தோண்டி எப்படிப் புதைப்பது...? மாலையில் அதை எண்ணெயில் பிரட்டி, குழம்பில் நறுக்கிப் போட்டுக் குழம்பையும் இறுக்கக் காய்ச்சித் தோசைக்குத் தொட்டுக் கொள்ள புதிதாக ஒரு பெயர் சொல்லி அதைப் பரிமாறினால் போதும். கூட நாலு தோசை போகும். குழம்பு

வேகமாகச் செலவாகும். சட்னி குறைவாக அரைத்தால் போதும்.

ஆனால், இது அன்னக்குத்தமா, இல்லையா...? இது பாவமா அல்லது புண்ணியமா...? இது சரியா, இல்லை தவறா...? இது தவறெனில், எப்படிச் சரி செய்வது...?

சட்டென்று ஏதோ பொறிதட்ட எழுந்து உட்கார்ந்தார்

"விஸ்வநாதா, நீ ஒரு சின்ன உபகாரம் செய்ய வேண்டும்..."

"ஆஹா- அத்திம்பேர் உங்களுக்கு உபகாரம் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போகிறேன். என்ன உபகாரம் சொல்லுங்கள்...?"

விஸ்வநாதன் பணிவோடு கைகட்டிக் கொண்டான்.

"அன்னக்குத்தம் ஏற்பட்ட வாய்ப்பிருக்கிறது என்பது உனக்குத் தெரிகிறதா...?"

சாம்பசிவ சாஸ்திரிகள் மிகக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டார்.

"எப்படி...?" ஆவலோடு விஸ்வநாதன் கேட்டான்.

"எல்லா நாளும் குளித்துவிட்டுத்தான் சமைக்கப் போகிறாயா...?"

"என்ன கேள்வி- குளிக்காமல் அடுப்பேற்ற முடியுமா...?"

"சரி... ஏதோ ஒரு நாள் குளிக்காமல் அடுப்பேற்ற நேரிட்டால், என்ன செய்வாய்...?"

"அப்படி நேராது அத்திம்பேர்... யார் குளித்தார்களோ, அவரை விட்டு அடுப்பேற்றுவேன்..."

"நீ கூடமாட உதவி செய்வாயா?"

"இல்லை அத்திம்பேர்- குளித்தால் தான் பின்கட்டுக்கே வருவேன்..."

"இல்லை விஸ்வநாதா- சில சமயம் இது சறுக்கிவிடலாம். ஒரு இட்லியை ஒரு கூடையிலிருந்தே இன்னொரு கூடைக்கு மாற்றும்போது வலது கையால் மாற்றாமல் இடது கையாலும் மாற்றலாம். ஒரு உணவுப்பொருளை இடதுகையால் எடுத்துவைப்பது மிகத் தவறு என்று சாஸ்திரம் சொல்கிறது. நாம் அறியாமல் செய்கிற அந்தப் பாவத்தை செய்யப் போகிற பாவத்தை நாம் எப்படித் தீர்த்துக் கொள்ளப் போகிறோம்...?"

"புரியவில்லை அத்திம்பேர்."

"ஒரேயொரு சத்தியம் மட்டும் செய்துகொடு. காலை எழுந்ததும், ஆயிரத்தெட்டு காயத்ரி செய்துவிட்டு, அதற்குப் பிறகு கற்பூரவில்லையை அடுப்பில் போடுவேன் என்று சொல். ஆயிரத்தெட்டு காயத்ரி என்பது இருபத்தைந்து நிமிடம். எழுந்து குளித்துவிட்டு, அடுப்புக்குக் கீழே மனை போட்டுக்கொண்டு அந்த இடத்தில்... எங்கு வேலை செய்கிறாயோ அந்த இடத்தில் ஆயிரத்தெட்டு காயத்ரி செய்தால் அங்கு பாவங்கள் தாக்கப்படாமலும் இருக்கு மென்பது என்னுடைய அபிப்ராயம்.

அந்த நேரம் மனம் ஒருமைப்படும்... சமையல் விஷமற்ற தாகவும் எல்லோருக்கும் ஆரோக்கியம் தரக்கூடியதாகவும் இருக்கும். நம்முடைய சமையலறை இடையறாது காயத்ரி ஜபம் செய்யும் இடமாக மாறவேண்டும் என்பது என்னுடைய அபிப்ராயம்.

நீ ஆயிரத்தெட்டு செய். நான் காலையிலும், பிறப் பகலிலும், சாயந்திரமும் செய்கிறேன். முடிந்தால், சதா சிவனும் ஆயிரத்தெட்டு செய்யட்டும்.

அன்னலட்சுமி படம் ஒன்று மாட்டி, அதற்குக் கீழே அம்மன் விளக்கு ஒன்று ஏற்றிவைத்து, நிரந்தரமாக எல்லா நேரமும் அது எரியும்வண்ணம் செய்துவிடு. பேயோ, பிசாசு, பூதங்களோ உணவு வாசனை பார்த்து வரா திருக்கட்டும்."

"அப்படியெல்லாம் வருமா...?" -சதாசிவன் எழுந்து உட்கார்ந்து கேட்டான்.

"வரலாம்... பசி தீராத ஆவிகள் வெப்பமான உணவின் வாசனையை நுகர்ந்துகொண்டு அலையலாம். எனவே, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்தோறும் பூசணி பலி கொடுப்பதும் இட்லியைக் காக்கைக்குப் போடுவதும் சாதத்தை நெய்யும் பருப்பும் கலந்து கூரையில் இலையோடு வைப்பதும் முக்கியமானதாகக் கருத வேண்டும். இதையும் தவறாமல் செய்ய வேண்டும்..."

"செய்துவிடலாம்... ஆயிரத்தெட்டு காயத்ரிதான் செய்ய முடியுமா என்று தெரியவில்லை..."

"செய்துதான் ஆகவேண்டுமென்று உள்ளுக்குள்ளே சங்கல்பம் ஏற்படுத்திக் கொண்டால் நிச்சயம் செய்ய முடியும். போ... போய்த் **தூங்கு...**" என்று மைத்துனனுக்கு சாம்பசிவ சாஸ்திரிகள் கட்டளையிட்டார்.

மைத்துனனால் தூங்க முடியவில்லை. சாம்பசிவ சாஸ்திரிகளாலும் தூங்க முடியவில்லை. அந்த வீட்டில் எல்லோரும் பாதி உறக்கத்தில்தான் இருந்தார்கள்.

வெகுசீக்கிரம் வாழ்க்கைமுறை மாறும் என்பது தெரிந்தது. நல்லபடியாக முன்னேற வேண்டுமே என்ற கவலையோடு இருந்தார்கள்.

செம்பனார்கோவில் அமைதியான அக்ரஹாரம் விட்டு, மாயவரத்தின் பரபரப்புக்குள் மாட்டிக்கொள்ளப் போகிறோமோ என்று மனம் கலங்கினார்கள்.

மறுநாள் நல்ல நேரம் பார்த்து, எல்லாச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு மாயவரம் நோக்கிக் கிளம்பியது அந்தக் குடும்பம்.

இந்த முறை சாமான்கள் மாட்டுவண்டியில் போக, பெண்கள் அதில் ஒண்டிக்கொள்ள, ஆண்கள் பின்னே நடந்து போனார்கள்.

வானம் மந்தாரமாக இருந்தது. குளுமையான காற்று அடித்தது. அவர்கள் மாயவரத்தின் எல்லையைத் தொட்டபோது சாம்பசிவ சாஸ்திரிகள் வண்டியை நிறுத்தச் சொன்னார்.

குடும்பத்தினரை இறங்கச் சொன்னார்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து, மாயவரத்தின் எல்லையில் வைத்தார்கள். 'சுக்லாம் பரதரம்..." குட்டிக் கொண்டார்கள்.

"வேறுவித வாழ்க்கையை நோக்கி, வேறுவித வசதிகளை நோக்கி, வேறு திக்கில் நாங்கள் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பிள்ளையாரப்பா... எந்த இடத்தில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்தேனோ, எந்த இடத்தில் உன்னை வைத்து என் வாழ்க்கை ஜெயிக்க வேண்டும் என்று வேண்டுகிறேனோ, இங்கிருந்து நூறு தப்படிக்குள் ஏதேனும் ஒரு இடம் வாங்கி, அந்த இடத்தில் உனக்காக ஒரு கோயில் கட்டுவேன். இது சத்தியம்... இது சத்தியம்... இது சத்தியம்..." என்று சாம்பசிவ சாஸ்திரிகள் கைகூப்பி வேண்டிக் கொண்டார். "என் குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்து..." என்று கண்ணீர் உகுத்தார்.

வெகுதொலைவில் மயூரநாத கோயிலில் மணியடித்து, அந்தக் குடும்பத்தினரை வரவேற்றது.

தெற்கு சாலியத்தெருவின் ஆரம்பத்தில் ஒரு பெரிய வீட்டில், தடதடவென்று, ஓடினால் சில நிமிடங்களில் ரயில்வே லைனைத் தொட்டுவிடலாம் என்கிற தூரத்தில் குடியேறினார்கள்.

முன்னால் ஒரு வராண்டா. வராண்டாவை ஒட்டிய சிறிய திண்ணை. பிறகு ஒரு பெரிய ஹால் அதன் இடது புறம் ஒரு அறை. அதற்கு அடுத்த பக்கம் ஒரு ரேழி. பிறகு சமையல் அறை. சமயலறை தாண்டி கொல்லைப்புற சிமெண்ட்டுத்தளம். சிமெண்டுத்தளம் தாண்டி நெல்லியும், கிச்சிலியும், கொய்யாவும் இருக்கிற தோட்டம். மாடியில்

கிட்டத்தட்ட அதே பரப்பு. வெய்யில் அடிக்கிற இடத்தில் ஒரு திறந்தவெளி. கயிறு கட்டிக்கொள்ள வசதி என்று வீடு சௌகரியமாக இருந்தது.

மாடியில் பெட்டிகளைக் கொண்டு போய் வைத்தார்கள். பாத்திரங்களைக் கீழே அடுக்கினார்கள். கொல்லைப் புறத்தில் கோட்டை அடுப்பு கட்டினார்கள். ஊருக்குள்ளே போய் ஆள் கூட்டிக் கொண்டு வந்து தட்டுப்பந்தல் போட்டார்கள். களிமண்ணால் அடுப்பு மெழுகினார்கள். சாணி போட்டுத் தரை மெழுகினார்கள். கோலம் இட்டார்கள். வீட்டிலிருந்து கொண்டுவந்த பெரிய ஆட்டு உரலை சாக்குப்பையில் புரட்டிப்போட்டு, மாமனும் மருமகனும் கொண்டு வந்தார்கள். பூமியில் நட்டார்கள். இன்னும் இரண்டு உரல்கள் வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள்.

உரலுக்குச் சந்தனம், குங்குமம் இட்டார்கள். குழவிக்கு நல்லெண்ணெய் தடவினார்கள். ஊறவைத்த உளுந்தும் அரிசியும் போட்டு, மாலை நேரம் சதாசிவன் 'முருகா...' என்று உரக்கக்கூவி அரைக்கத் துவங்கினான்.

அவர்கள் வீட்டுச் சமையலுக்கான அடுப்பை நீலாயதாட்சி பற்றவைத்தாள். இடைவிடாது எல்லோரும் "நாராயண... நாராயண... நாராயண..." என்று ஜபித்தார்கள்.

12

"அப்பப்போ பால் தேவைப்படும்... கார்த்தால தயிர் வேணும்..." என்று நிறைய பால் வாங்கி வைத்திருந்தார்கள்.

பெரிய உருளியில் பாலைக் கொதிக்க வைத்தார்கள். பால் மணம் வீடு முழுவதும் பரவியது.

குழந்தைகள் இரண்டு பேரும் வாசலில் நின்று டிரெயின் போவதை, குதிரை வண்டி போவதை, சைக்கிள்

போவதை, எப்போதாவது கார் போவதை குதூகலத்துடன் பார்த்தார்கள்.

இரவு நேரம் வண்டியை அனுப்பிவிட்டு ஸ்டேஷன் மாஸ்டர் வேட்டியும் சட்டையும், விபூதியுமாய் வீட்டுக்குள் நுழைந்தார்.

"என்ன, செட்டில் ஆயிட்டேளா... நீங்க கேட்டபோது எனக்கு நம்பிக்கையே இல்லை. நான் சரின்னு சொன்ன உடனே தடதடன்னு வந்து உட்கார்ந்து வேலையை ஆரம்பிச்சுட்டீர். இப்பவும் இதுக்கு யாருடைய பர்மிஷனும் வாங்காம, நானா கொடுத்திருக்கேன். நாளைக்கு பார்த்துண்டு இதுபத்தி மெட்ராஸுக்கு எழுதலாம்னு இருக்கேன். முடிஞ்ச அளவில் இதை அதிகாரப்பூர்வமா பண்றதுக்குதான் ஆசை."

வராண்டாவில் திண்ணை இருக்கு. அதுக்கேத்தாப் போல மரபெஞ்சு பண்ணிப் போட்ருங்கோ. இங்கயும் ஏதாவது தோசையோ, இட்லியோ வரவா சாப்பிட்டு போகட்டும்." என்றார்.

"ஓட்டலா நடத்தற மாதிரி இப்போதைக்கு எண்ண மில்லை" என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"நடத்துங்களேன். எண்ணமில்லைன்னு சொல்வானேன். வந்து சாப்பிட்டா காசில்லையா... காசு வேண்டாம்னு யாராவது சொல்வாளா."

அன்று இரவு காசு வேண்டாம் என்று சாம்பசிவ சாஸ்திரிகள் சொல்ல நேர்ந்தது.

செம்பனார் கோவிலிலிருந்து கோடி வீட்டு அந்தணர் தன் தாய்க்கு சிரார்த்தம் வருவதாகவும், மறுநாள் காலை செம்பனார்கோவில் வரமுடியுமா என்றும் கேட்டார்.

"ஒவ்வொரு வருடமும் நீங்கள்தானே செய்து வைப்பீர் கள்... இந்த வருடமும் வரவேண்டும்." என்று கைகூப்பினார்.

"இல்லை... நான் வருவதற்கில்லை. எனக்கு இங்கே வேலை இருக்கிறது."

"எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். தயவு செய்து வரமாட்டேன் என்று சொல்ல வேண்டாம்."

"இல்லை ஐயா... எனக்குக் காசு வேண்டாம். நான் வைதீகத்தை விட்டு விட்டேன். என்னை வற்புறுத்தாதீர்கள். வேறு யாரேனும் வைதிகர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்." என்று சாம்பசிவ சாஸ்திரிகள் திருப்பி அனுப்பினார்.

வந்தவர் திரும்பிப் போவதைப் பார்க்கும் போது அடிவயிறு குழைந்தது. 'இது தவறு... இது தவறு' என்று உள்ளுக்குள் ஒரு பெரிய குரல் கேட்டது.

காசு வேண்டாம் என்று திருப்பி அனுப்பினேனா... அல்லது, வேறுவிதமாக எனக்குக் காசு வருகிறது, உன் காசு வேண்டாம் என்று திருப்பி அனுப்பினேனா.

எனக்கு இவன் காசு வேண்டாமென்றுதான் திருப்பி அனுப்பினேன். வேண்டுமென்றுதான் இவன் செய்கிற மரியாதையை திருப்பி அனுப்பினேன். உன் கால் அலம்பி சோறு போடப்போகிறேன் என்றாலும் இது எனக்குத் தேவையில்லை. எனக்கு வேறு விதமான உணவு, வேறு விதமான மரியாதை இருக்கிறது என்று நான் திசை திரும்பி விட்டேன்.

அப்பா... என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். தந்தையின் தந்தையே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். பித்ருக்களே என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் வராது போனால் மனம் நொந்திருக்கிற அந்த அந்தணனின் தாயே, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்.

இரவு நேரத்து பார்சல் வண்டி மாயவரம் ஸ்டேஷனிலிருந்து இளம்பியது. கூ... என்று கூவியது. பெரிய கரிப்புகையை இழுத்து அடித்தது. கரிப்புகை உச்சம்போய் மெல்ல அந்த வீட்டு வாசல் முழுவதும் பரவியது.

வெள்ளை அடித்தும் வீடு ஏன் கறுப்பாக இருக்கிறது என்பதை வாசனையால் சாம்பசிவ சாஸ்திரிகள் புரிந்து கொண்டார். இந்த வெள்ளை நிறத்தை விட்டுவிட்டு இந்த வீட்டுக்கு வேறு நிறம் அடிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

திண்ணை கட்டி, திண்ணைக்குக் கம்பி போட்டிருக்கிறது. இப்போது கண்ணாடியும் போட்டுவிட வேண்டும். இல்லையென்றால், கரிப்புகை வீட்டுக்குள் சாப்பிடுகிற இடத்திலெல்லாம் வந்துவிடும்.

திண்ணையில் இருப்பதை, திண்ணையில் உட்கார்ந்து சாப்பிடுவதை வெளியாட்கள் பார்க்காமல் இருப்பதும் நல்லது. தேய்ப்புக் கண்ணாடி சௌகரியமாக இருக்கும். உள்ளே இருப்பது தெரியாது. வெளிச்சம் வரும்.

'மாயூரம் மெஸ் உயர்தர பிராமணாள் சைவ சாப்பாடு ஓட்டல்' என்று சுண்ணாம்புக் கட்டியால் மரப்பலகையில் எழுதி அதை விஸ்வநாதன் கயிறு கட்டி மாட்டினான்.

அவன் மாட்டிய நேரம் கணக்கிட்டுப் பார்த்தார் சாம்பசிவ சாஸ்திரிகள். சுக்கிர ஹோரை என்பது தெரிந்தது. பெரிதாக புன்னகை செய்தார். 'சபாஷ்' என்றார்.

அவருக்கு சிரார்த்தம் செய்ய வந்து கேட்ட அந்தணரின் முகம் மறந்து போயிற்று.

உள்ளே அடுப்பு மூட்ட நீலாயதாட்சி அவரைப் பின்கட்டுக்கு வரும்படி அழைத்தாள். அங்கு கற்பூரக் கட்டியைக் கொளுத்தி சாம்பசிவ சாஸ்திரி கையால் அடுப்பு ஏற்றப் பட்டது.

'அக்னி தேவோ பவ' என்று அக்னியைக் கைகூப்பி வணங்கினார்கள். வளர்வாயாக என்று வாழ்த்தினார்கள். வாழ்த்துங்கள் என்று வணங்கினார்கள்.

பெரிய, கெட்டியான அலுமினியப் பானையை ஏற்றி அதில் அரிசி களைந்து போட்டார்கள். பெரிய வெங்கல

உருளியில் பாகு காய்ச்சினார்கள். மாவு போட்டுக கிண்டத் தயாரானார்கள். எலுமிச்சம் காயை நறுக்கி சிறிது வெந்நீரில் கொதிக்க வைத்து உப்பும் மிளகாய்ப் பொடியும் போட்டு சதாசிவன் கிளறத் துவங்கினான்.

இரவு அரைத்த பருப்பில் மடமடவென்று நீலாயதாட்சியும், பர்வதமும் வடைதட்ட ஆரம்பித்தார்கள். எண்ணெய் கொதிக்க ஆரம்பித்ததும் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு சரசரவென்று வடைகளைத் தட்டிப் போட்டு எடுத்தார்கள். விஸ்வநாதனும் வடை தட்டிப் போட்டான். மாவு விட்டு பாகில் கிளறும்போது வெல்ல வாசனை மூக்கைத் துக்கிற்று. மறுபடியும் குழிகுழியாய் எண்ணெயில் பொரித்து எடுக்கிறபோதும் அப்பத்தைக் கூடையில் போடுகிறபோதும் வாசனை மூக்கை நிமிண்டியது. இஞ்சியும், பச்சைமிளகாயும் நறுக்கி தனியே வைத்திருந்தார்கள்.

சாதம் வெந்ததும் இலையில் பரப்பினார்கள். புரட்டிப் போட்டார்கள். மெல்ல ஆறத் துவங்கியதும் ஈயம் பூசிய பெரிய பித்தளை தேக்சாவில் கொட்டி தயிர் ஊற்றி, பால் ஊற்றி, கைவிட்டுப் பிசையத் துவங்கினார்கள். நறுக்கி வைத்த இஞ்சியும், பச்சைமிளகாயும் போட்டார்கள். உளுத்தம் பருப்பு, கடுகும் போட்டு, கடுகு வெடித்ததும் தாளிதம் செய்ததை ஒரமாக எடுத்து வைத்துக் கொண்டார்கள்.

ஒரு தட்டில் இரண்டு கரண்டி தயிர்ச்சாதம் நான்கு அப்பமும் இரண்டு வடையும் கொண்டுபோய் வைத்தீஸ்வரன் படத்துக்கு முன்னால் வைத்து, வீடு முழுவதும் நமஸ்காரம் செய்தது.

லாந்தர் விளக்கை இழுத்து வைத்துக் கொண்டு, வாழை சருகில் மந்தாரை இலை வைத்துப் பெரிய அன்னக் கரண்டியால் அள்ளி அள்ளி விஸ்வநாதன் போட, மற்றவர்கள் பொட்டலம் கட்டினார்கள். கூடையில் போட்டார்கள்.

நூற்றுநாற்பது தயிர்சாதப் பொட்டலம், நூற்றிருபது மசால்வடை, இருநூற்றைம்பது வெல்ல அப்பம் என்று செய்து வீடு இறக்கியது.

நீலாயதாட்சியும், பர்வதமும் முகவாயில் கைவைத்து, உணவு வகைகளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏன் யாருமே எடுத்துச் சாப்பிட மாட்டேங்கறேள்...?"

சதாசிவன் கேட்டான்.

"நீ எடுத்துக்கோடா..." விஸ்வநாதன் அவனைப் பார்த்து அன்போடு சொன்னான்.

"இல்லை அத்திம்பேர். நீங்க எடுத்துக்கோங்கோ..." என்று சதாசிவன் வெட்கப்பட்டான்.

ஒரு பொட்டலம் எடுத்துப் பிரித்து சாம்பசிவ சாஸ்திரிக்கு விஸ்வநாதன் கொடுக்க, அவர் ஒரு உருண்டை தயிர்சாதம் வாயில் போட்டுக்கொண்டார். வடையைப் பிட்டு மென்று பார்த்தார். அப்பத்தை முகர்ந்து பார்த்து, மெல்ல வாயிலிட்டு சுவைத்து சாப்பிடத் துவங்கினார்.

'ஏ கிளாஸா இருக்குடா... ஒரு சின்னக் குறைகூட இல்லை. தாளிதம் பண்ணதை ஒட்டு மொத்தமா கலக்காம, ஒவ்வொரு பொட்டலத்துக்கும் தனித்தனியா தாளிதத்தை அடிக்கக் கத்துக்கணும். அப்போ இன்னும் நன்னா இருக்கும். இந்தப் பொட்டலத்துல உளுத்தம்பருப்போ, கடுகோ தெரியவே இல்லை பார்... ஏதோ பேருக்கு ஒட்டிண்டு இருக்கு..." எடுத்துக் காட்டினார். வீடு ஒப்புக் கொண்டது.

ஈயம் பூசிய ஒரு பித்தளை தாம்பாளத்தில் வீட்டுக் கென்று பொட்டலங்கள் எடுத்து வைத்துக்கொண்டு, மிச்சத்தைக் கூடையில் வைத்து வராண்டாவுக்குக் கொண்டு வந்தார்கள்.

சதாசிவம் ஓடிப்போய் கதம்பப் பூச்சரம் வி[illegible]ந்தான். கூடையில் அதைத் தொடங்கவிட்டார்க[illegible] அடுக்கில் சுற்றிக் கட்டினார்கள். அடுக்குக்கு விபூதியும் குங்குமமும் இட்டார்கள். விடியட்டும் என்று காத்திருந்தார்கள்.

விஸ்வநாதனும் சதாசிவனும் குளித்துவிட்டு வர, பெண்கள் சுருண்டு வாசற்பக்கத்து அறையில் படுத்து தூங்கினார்கள். சாம்பசிவ சாஸ்திரிகள் எல்லோருக்கும் முன் குளித்துவிட்டு, ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் நின்றுகொண்டார்.

மெல்ல விடிந்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் வந்ததும் சாம்பசிவ சாஸ்திரிகள் கைகாட்ட, விஸ்வநாதனும், சதாசிவனும் கூடையைத் தூக்கிக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் வைத்துப் பவ்யமாகக் கைகூப்பினார் கள்.

"அடி சக்கை ரெடியாயிடுத்தா...? கொடுங்கோ, பார்க்கலாம்..."

நான்கு அப்பம் எடுத்து இலையில் வைத்து அவர் கையில் சாம்பசிவ சாஸ்திரிகள் வைத்தார். மேலே மாசல் வடை வைத்தார். தயிர்சாதப் பொட்டலத்தை மேஜையின் மீது வைத்தார்.

"அடேங்கப்பா... மணக்கறதே கொப்பரை நறுக்கிப் போட்டிருக்கேளா..? விடைச்சுண்டு தெரியறது..."

ஒரு முழு அப்பத்தை வாயில் அதுக்கிக்கொண்டு சுவைக்க ஆரம்பித்தார். உமிழ்நீர் இனிப்போடு வாயெங்கும் பரவி, ஒரு சுகத்தை ஏற்படுத்தியது. மசால்வடையை உடைத்து வாயில் போட்டுக் கொண்டார். லேசான சூடு இருக்க, அந்தச் சுவையும் அற்புதமாக இருந்தது. தயிர் சாதத்தை சதாசிவன் பிரித்து வைக்க அதிலிருந்து இரண்டு விழுது வாயில் போட்டுக்கொண்டு மசால் வடையையும்

தொட்டுக்கொண்டு சாப்பிட... அவர் முகம் மிகப் பிரகாசமாக மலர்ந்தது.

"நிஜமா தினம் கார்த்தால இது கிடைக்கும்னா, நான் என் வீட்ல சாப்பிடவே மாட்டேன். ரொம்பப் பிரமாதமா இருக்கு ஓய்... எக்ஸலண்ட்"

விவரிக்க வார்த்தைகளே இல்லை என்று ஆங்கிலத்தில் பேசத் துவங்கினார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அந்தப் பிராமணர்கள் மூன்று பேரும் வியந்து அவரையே கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

எல்லாமும் பாராட்டு என்பது அவர்களுக்கு மொழி தெரியாமல் போனாலும் விஷயம் புரிந்தது. சந்தோஷப் பட்டார்கள்.

"சிக்னல் விழுந்துடுத்து... போங்கோ, போய் அந்தப் பக்கமா நின்னுண்டு தெற்கேர்ந்து வடக்கே நோக்கி வாங்கோ, எடுத்தவுடனே மூணாம் வகுப்பு, அப்புறம் இரண்டாம் வகுப்பு அப்புறம் முதல் வகுப்பு... அப்புறம் இரண்டாம் வகுப்பு, அப்புறும் மூணாம் வகுப்பு முதல் வகுப்பு... நின்னு நின்னு வித்துட்டு வரலாம். கவலையே படாதீங்கோ... நீங்க சரினு சொன்னதுக்குப் அப்புறம் தான் சிக்னலே போடப் போறேன்..." உரத்த குரலில் பேசினார்.

டிரெயின் உள்ளே வந்தது.

"வெறுமனே நின்னுண்டு இருக்காதீங்கப்பா... மாயவரம் ஸ்டேஷன்ல தயிர்சாதம் கிடைக்கும்னு ஜனங்களுக்கு தெரியாது. உரக்க கூவி, தயிர்சாதம் இருக்குனு சொல் லுங்கோ..."

"தயிர்சாதம் இருக்கு... தயிர்சாதம் இருக்கு..." சதாசிவன் கூவினான்.

விஸ்வநாதன் அப்படியில்லை என்று சொன்னான். ஆனால் எப்படியென்பது அவனுக்குத் தெரியவில்லை.

சாம்பசிவ சாஸ்திரிகள் 'என்ன செய்வது எப்படிக் கூவுவது..?' என்று தெரியாமல் விழித்தார். கூவ வெட்கப் பட்டார்.

"அப்பம்.. வடை.... தயிர்சாதம்... இப்படிக் கத்துங்கோ..."

ஸ்டேஷன் மாஸ்டர் உரத்த குரலில் சொல்லிக் காண்பிக்க, விஸ்வநாதன் கூடையை எடுத்துக்கொண்டு முன்னே போக.. பின்னால் சதாசிவன் ஓடினான்.

விஸ்வநாதன் உரத்த குரல் எடுத்து, "அப்பம்... வடை... தயிர்சாதம்... அப்பம்... வடை... தயிர்சாதம்..." என்று பிளிறலாகக் கூவ, கூட்டம் திரும்பிப் பார்த்தது.

'விக்கறதுக்கா..?' என்று கேட்டது. 'எவ்வளவு..?' என்று விசாரித்தது. 'காண்பிங்கோ, பார்க்கலாம்' என்று கூடையை இழுத்தது.

யாருக்கு கொடுத்தோம்..? யார் காசு கொடுத்தார்கள்..? யார் காசு கொடுக்கவில்லை...? எதுவும் புரியவில்லை. கூட்டம் மொய்த்துக் கொண்டது. நீட்டின கைகளிலெல் லாம் அப்பமும் வடையும் வைத்தது. பிறகு தயிர்சாதமும் கொடுத்தான். பதிலுக்கு காசு கொடுத்தார்களா என்று பார்க்காமல் வியாபாரம் ஆரம்பித்தான்.

"அத்திம்பேர், இவா காசு கொடுக்கலை..."

"ரொம்பக் கத்தவேண்டாம்டா... தானா கொடுக்கற போது பார்த்துக்குவோம்..."

"காசை எங்கே போடுவது என்று தெரியவில்லை. காசையும் கூடையிலேயே போட்டுக் கொண்டான். அதற்கொரு தனி டப்பா வேண்டுமென்று தெரியாமல் வந்தது சிரிப்பாகவும், வேதனையாகவும், தலையிலடித்துக் கொள்கிற முட்டாள்தனமாகவும் இருந்தது.

தொலைவிலிருந்து அவர்கள் படும் கஷ்டத்தை சாம்பசிவ சாஸ்திரிகள் பார்த்துக் கொண்டிருந்தார்.

"கொஞ்சம் இருங்கோ.. கொஞ்சம் இருங்கோ" என்று கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து அமைதிப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தார். அவர் குரலை யாரும் லட்சியம் செய்யவே இல்லை. அந்தக் காலை நேரத்திலும் வியர்வை ஒழுக, தலை கலைய நீட்டிய கைகளிலெல்லாம் அப்பமும் வடையும், தயிர்சாதமும், விஸ்வநாதனும், சதாசிவனும் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

கூடை காலியாயிற்று. கூடையில் காசுகள் இருந்தன.

"சாப்பிட்டவா யாராவது காசு கொடுக்கலேன்னா, தயவுசெய்து கொடுத்துருங்கோ.." விஸ்வநாதன் சொல்ல, சாம்பசிவ சாஸ்திரிகள் திகைத்துப் போனார்.

"காசு வாங்காமயா தயிர்சாதம் வித்தே..?" என்று சற்றுக் கோபத்தோடு கேட்டார்.

"கோபப்படாதீங்கோ... எனக்கு இன்னும் விக்கத் தெரியலை. கத்துக்கணும்.." என்று சொன்னான்.

சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு அவன் வேதனை புரிந்தது. அவரும் கைகூப்பினார்.

"யாராவது காசு கொடுக்காம வாங்கியிருந்தா தயவுசெய்து காசு கொடுத்துருங்கோ.." என்று சொல்லிக் கொண்டே ஒவ்வொரு பெட்டியாகப் போக, சில பேரே காசு கொடுத்தார்கள்.

தாடியும் தலைப்பாகையும் ஜிப்பாவும் கொண்ட ஒரு வடநாட்டு யாத்ரிகர், கம்பளியை நகர்த்திக் எகயிலுள்ள பொட்டலங்களை சாம்பசிவ சாஸ்திரிகளிடம் நீட்டினார்.

சாஸ்திரிகள் புரியாமல் திரும்பி விஸ்வநாதனைப் பார்த்தார்.

"காசு கொடுங்கோ.." என்று விஸ்வநாதன் யாத்ரிகரிடம் கைநீட்ட 'நய்' என்று இந்தியில் பதில் சொன்னார்.

அவராண்ட காசு இல்லை. மெட்ராஸ்லயே யாசகம் வாங்கிச் சாப்பிட்டார். இங்க நீங்க கொடுக்கறேள்னு தெரிஞ்சவுடனே கைநீட்டினார். கொடுத்தேன். வாங்கிண்டு வந்துட்டார். அவர் பிச்சைக்காரர்ப்பா..."

கூட்டத்தில் யாரோ சொல்ல, சாம்பசிவ சாஸ்திரிகள் அவரை உற்றுப் பார்த்தார்.

"வேண்டாம். காசு வேண்டாம். சாப்பிடுங்கோ." என்று அவர் பொட்டலத்தை வாங்கிப் பிரித்து அவரிடம் நீட்ட, அந்த வயோதிகருக்கு முகமெல்லாம் சிரிப்பாகியது.

இரண்டு விழுது தயிர்சாதம் சாப்பிட்டுவிட்டு, 'மிக நன்றாக இருக்கிறது' என்று முகத்தில் அபிநயித்துச் சொல்ல. சாம்பசிவ சாஸ்திரிகள் குனிந்து நமஸ்கரித்தார்.

"விஸ்வநாதா, இவர் காலைத்தொட்டு நமஸ்காரம் பண்ணு. பெரிய மனுஷர் போலத் தெரியறது..." என்று கட்டளையிட்டார்.

சதாசிவனும் விஸ்வநாதனும் அவரை நமஸ்கரித்தார்கள்.

விஸ்வநாதன் கூடையிலிருந்து நாலணா எடுத்து அவரிடம் நீட்டினான். அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பையில் போட்டுக் கொண்டார்.

மறுபடியும் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார்.

திரும்பி ஸ்டேஷன் மாஸ்டரை அவர்கள் பார்க்க ஸ்டேஷன் மாஸ்டர் 'கொடியை அசைக்கட்டுமா..?' என்று தொலைவிலிருந்து கேட்க, இவர்கள் தலையசைக்க... பச்சைக்கொடி வீசிப் பறந்தது.

டிரெயின் கூச்சலிட்டது. நகர்ந்தது.

எதிர்பக்கம் வீட்டுவாசலில் இருந்து பர்வதமும் நீலாயதாட்சியும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டருக்கு மறுபடியும் நன்றி

சொல்லிவிட்டு, மூவரும் வீட்டுக்குள் நுழைய. பெண்கள் ஆவலாகச் சுற்றிக் கொண்டார்கள். குழந்தைகள் எழுந்து பெரியவர்களையே பார்த்தன.

"காசில்லாம ஏழு, எட்டுப் பொட்டலம் போயிருக்கும் மத்தபடிக்கு எல்லாம் காசும் சரியாகத்தான் இருக்கு..."

"பத்துப் பொட்டலம் நாங்க எடுத்து வெச்சுண்டோம். அதைப் பார்த்தியா...?" நீலாயதாட்சி உரத்த குரலில் கேட்க, "அதைக் கழிச்சிட்டுத்தான் இந்தக் கணக்கைச் சொல்றேன்."

"சாயந்திரத்துக்கு என்ன பண்றது...?" பர்வதம் கேட்டாள்.

"இதேதான்" விஸ்வநாதன் சொன்னான்.

13

"அப்பா, நீ தயவு செய்து கஷ்டப்படாதே. தூரத்து லோர்ந்து உன்னைப் பார்க்கறதுக்கத்தான் பரிதாபமா இருக்கு. பழக்கமாயிடுத்துன்னா எப்படி விக்கறதுன்னு தெரிஞ்சு போயிடும்ப்பா. கூடையைக்கூட தூக்கிண்டு அலைய வேண்டாம். நான் ஒரு பக்கம், அத்திம்பேர் ஒரு பக்கம் கூடையைப் போட்டுண்டு நின்னோம்னா சரசரன்னு வியாபாரம் ஆயிடும். டிரெயன்லேர்ந்து இறங்கி வந்து வாங்கிப்பான். ஸ்டேஷன் மாஸ்டர்தான் காத்துண்டிருக்கேன்னு சொல்லி இருக்காரே. நாம சரின்னு சொல்ற வரைக்கும் கொடி அசைக்கமாட்டேன்னு சொன்னாரே, மாசம் பிறந்தா அவருக்கு ஏதாவது கொடுத்துடணும்ப்பா."

சதாசிவம் சொன்னான்.

"அவர் ஏதாவது கேட்டாராடா?"

"கேட்கலை, கேட்பார்."

"எப்படிச் சொல்ற?"

"நம்ம தயவுல ஒரு பிராமண குடும்பம் பிழைக்கறது... நன்னா பிஸினஸ் ஆகறது- அப்படின்னு பேசிண்டார். அந்தப் பேச்சுலேர்ந்து அவருக்கு ஏதாவது கொடுக்கணும்னு தோணித்து."

"கொடுத்துடறா- எதிர்க்க வேண்டாம்."

விஸ்வநாதன் சொன்னான்.

வீடு மறுபடியும் பாகு கிளறவும் வடைக்கு ஊறப்போடவும் ஆரம்பித்தது.

விஸ்வநாதனும் சதாசிவனும் பொட்டலம் பிரித்துச் சாப்பிட்டுவிட்டு கொல்லைப்புறத்திலுள்ள மரபெஞ்சில் கால்நீட்டிப் படுத்துத் தூங்கத் துவங்கினார்கள்.

பெண்கள் வீட்டைப் பெருக்கத் துவங்கினார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு உறக்கம் வரவில்லை. மஞ்சள் பிள்ளையார் வைத்த இடத்துக்குப் போய் அந்த நிலம் யாருடையது என்று விசாரிக்கலாம் என்று நகர்ந்தார்.

"யாரோடதுமில்லை. பொறம்போக்கு நிலம். தாசில்தார் ஆபிஸுக்குப் போய் பத்து ரூபா கட்டிப் பத்திரம் வாங்கி எனக்கு இந்த நிலத்தைக் கிரையம் பண்ணிக் கொடுங்கோன்னா கொடுத்துருவான். வருஷா வருஷம் மூணு ரூபா வரி கட்டணும்... அவ்ளோதான்."

"தாசில்தார் ஆபீஸ் எங்க இருக்கு?" சாம்பசிவ சாஸ்திரிகள் விசாரிக்க, அவருக்கு வழிகாட்டினார்கள்.

தாசில்சார் ஆபீஸ் வாசலில் உட்கார்ந்து யார் வருவது, யார் போவது என்று சற்றுநேரம் உற்றுப்பார்த்தார். யார் முக்கியமாக அலைகிறாரோ அவரைப் பார்த்துக் கும்பிட்டார்.

அவன் தலையில் ஒரு தலைப்பாகையும் குறுக்கே ஒரு மஞ்சள் பட்டையும் போட்டுக்கொண்டிருந்தான்.

"நீங்க இங்க டபேதாரா?"

"ஆமாம்... என்ன வேணும்?"

"தாசில்தாரைப் பார்க்கணும். பார்க்க முடியுமா? யார் தாசில்தார்?"

"ஐயர்தான். எனக்குப் பார்க்கணும்?"

"ஸ்டேஷன் ரோடுகிட்ட ஒரு நிலம் வாங்கணும்"

"அதுக்கு உதவி தாசில்தாரைத்தான் பார்க்கணும்."

"உதவி தாசில்தார் யாரு?"

"அவரும் ஐயர்தான். எந்தப் பக்கத்து நிலம்?"

"ஸ்டேஷன் ரோட்டை ஒட்டியிருக்கிற நிலம்."

"அது பொறம்போக்கு நிலமாச்சே. கிளார்க்க பார்த்தா போதுமே"

"கிளார்க் யாரு?"

"அவரும் ஐயர்தான். வாங்க... நீங்க எங்கேயிருந்து வர்றீங்க?"

"ஸ்டேஷன் ரோடு. தெற்கு சாலை தெருவில் வீடு..."

"பார்த்தது இல்லையே"

"நேத்துதான் குடிவந்தோம்."

"ஸ்டேஷன் ரோட்டுல வீடு கட்டப் போறீங்களா?"

"இல்லை... பிள்ளையார்கோயில் கட்டணும்"

"கோயில் கட்றதுன்னா பிரச்சனையே இல்லை. ரெண்டு ரூபா போதும். ஆனா அது வயலா இருக்கக் கூடாது."

"அது வயல் இல்லை. வெறும் முள் புதரா இருக்கு."

"அப்போ ஒரு ரூபா போதும். நிலம் கொடுத்துருவாங்க. எத்தனை குழி?"

"ஒன்றரை ஏக்கர் இருக்கும்னு நினைக்கிறேன்."

"இங்க விஸ்வேஸ்வரன்னு ஒரு கிளார்க் இருக்காரு... அவரைக் கூட்டிக்கிட்டுப் போங்க. டப்படப்புன்னு வேலை ஆயிடும்."

"ரொம்ப நன்றியப்பா. சந்தோஷமா சௌக்கியமா இருக்கணும்."

"சந்தோஷமா இருக்கணும்னா காசு வேணுங்களே."

"கொடுத்துடறேன்ப்பா."

இடுப்பிலிருந்து இரண்டு காலாணாக்கள் எடுத்து அந்த டபேதாரிடம் கொடுத்தார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"இதுல சந்தோஷம் வராதுங்களே"

இரண்டு காலணாக்களையும் வாங்கிக்கொண்டு ஒரணா நாணயம் கொடுத்தார். அவன் வாங்கிக் கொண்டு சலாம் வைத்தான்.

குமாஸ்தாவிடம் கூட்டிக்கொண்டு போனான்.

"உங்க பேர் என்ன?" குமாஸ்தா கேட்டார்.

"சாம்பசிவ சாஸ்திரிகள்."

"என்ன தொழில்?"

சாஸ்திரிகள் யோசித்தார்.

"ஓட்டல்"

"ஓட்டலா... எங்க?"

"தெற்குச் சாலியத் தெருவில... ஸ்டேஷனுக்கு எதிர்க்க ஸ்டேஷன்லையும் விக்கறோம்."

"என்ன விக்கறேள்"

"அப்பம், வடை, தயிர்சாதம்"

"எப்பத்திலேர்ந்து?"

"இன்னிக்கு கார்த்தாலேர்ந்து."

"இங்க ரெண்டு பொட்டலம் எடுத்துண்டு வரப் படாதா?"

"இப்பவே எடுத்துண்டு வரேன்."

சாம்பசிவ சாஸ்திரிகள் எழுந்திருக்க, அந்த குமாஸ்தா அவரைக் கையமர்த்தினார்.

"நாளைக்குக் கொண்டுவந்து கொடுங்கோ. எந்தப் பக்கத்து நிலம் வேண்டும். நீங்க சொல்ற இடம் மழை பெஞ்சால் அங்க தண்ணி தேங்குமே?"

"மண் அடிச்சு மேடாக்கிக்கலாம்."

"கோயில் கட்டறதுக்கா? இல்ல வேறு எதுக்காகவா?"

"கோயில் கட்டறதுக்காகத்தான் கேட்கறேன்."

"அப்போ மூணு ரூபா கொடுத்து மூணு ஏக்கரா வாங்கிக்கோங்க. எப்படி வாங்கறது, என்ன எழுதறதுன்னு நான்சொல்லித்தரேன். சாயந்தரம் போய் அந்த நிலத்தைப் பார்ப்போம். சாயந்தரமும் ஓட்டல்ல ஏதாவது டிபன் உண்டா?"

"உண்டு"

"என்ன?"

"அப்பம், வடை, தயிர்சாதம்தான். ராத்திரி வண்டிக்குப் போறவாளுக்குத் தரணுமோன்னோ?"

சாம்பசிவ சாஸ்திரிகள் சொல்ல பட்பட்டென்று அந்த மேஜையின் எல்லா அறைகளையும் மூடி சாவிக் கொத்தை கோட்டுப்பையில் போட்டுக் கொண்டார். உதவி தாசில்தாரிடம் போய் நின்றார்.

"தலைவலி மண்டையைப் பொளக்கறது. சார் உட்காரவே முடியலை. எங்க தூரத்து உறவுக்காரா ஒருத்தர் வந்திருக்கார். அவரோட நான் வெளிய கிளம்பறேன். மிச்ச வேலையை நாளைக்கு வந்து பண்ணிக்கறேன்."

எந்தப் பதிலும் எதிர்பார்க்காமல் வெளியே வந்தார்.

சாம்பசிவ சாஸ்திரிகள் அருகே வந்து நிற்க "வாங்கோ... போய் நிலம் பார்த்து அப்படியே உங்க வீட்டுக்கும் போயிடலாம்."

"என்ன திடீர்னு ஆச்சரியமா இருக்கே?"

"என்னமோ அப்பம், வடை, தயிர்சாதம் சாப்பிடணும்னு ஆசையா இருக்கு. பேர் கேட்டதுலேர்ந்தே திங்கணும்னு ஒரு எண்ணம் வந்துடுத்து. அதனால உடனே கிளம்பிட்டேன்."

சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு ஜெயிப்போம் என்கிற நம்பிக்கை அப்போதுதான் ஏற்பட்டது.

வந்த மனிதர் யார் என்று சாம்பசிவ சாஸ்திரிகள் வீட்டுக்குப் புரிந்துவிட்டது. அந்த தாசில்தார் ஆபீஸ் குமாஸ்தாவால் நிறைய உதவிகள் பெறலாம் என்பது வீட்டுப் பெண்களுக்கும் புரிந்துவிட்டது.

முகத்தில் ஒரு அதிகாரமும், ஆங்கிலப் பேச்சும் அதே நேரத்தில் உண்பதில் மிகப் பெரிய ஆசையும் அந்த மனிதருக்கு இருந்தது.

"ப்ளீஸ்... தயவு செய்து இலையில கொண்டுவராத... எனக்கு அது பிடிக்காது."

விஸ்வநாதனின் மனைவி பார்வதம் நான்கு அப்பங்களோடு வந்தபோது கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

பார்வதம் பயந்து போய் அப்பத்தோடு உள்ளே வந்து விட்டாள். சாம்பசிவ சாஸ்திரிகள் பின்னால் ஓடிவந்தார்.

"இவன் தனிப் பண்டாரம்... இப்படிக் கொண்டு வராதே." என்று சொல்லி ஒரு பாத்திரத்தில் ஆறு அப்பங்கள் போட்டு நான்கு வடைகள் போட்டு இலையில் மூடிக் கொண்டு வந்தார். அதை அப்படியே வாங்கிக் கொண்டு இலையைப் பிரித்துப் பார்த்து மடியில் அந்த மனிதர் வைத்துக் கொண்டார்.

"இங்க வா" என்று உள்ளே குரல் கொடுத்தார்.

பார்வதம் பயந்து வெளியே வந்தாள்.

"எனக்குச் சொந்த ஊர் கும்பகோணம். அங்கெல்லாம் இலையில இந்த மாதிரி பண்டங்களைத் தரமாட்டா. வீட்ல இருக்கற பெண்களெல்லாம் ஒண்ணா கலந்து இன்னிக்குச் சாயந்தரத்துக்கு என்ன திண்பண்டம் பண்ணலாம் அப்படின்னு பேசுவா. எந்திரத்துல கடலைமாவு அரைச்சு, சலிச்சு மறுபடியும் அரைச்சு அதுல பஜ்ஜி பண்ணணும்னு ரெண்டு ரெண்டரைக்கே ஆரம்பிப்பா. வாழைக்காய், வெங்காயம், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய் அப்படின்னு விதவிதமாக பஜ்ஜி பண்ணுவா. ஒரு கூடை சின்னதா பின்னி, அதுல பத்துப் பத்தா வெச்சுக் கொடுப்பா. வாழைக்காய் பஜ்ஜி பத்து, வெங்காய பஜ்ஜி பத்து அப்படின்னு ஒரு அறுபது எழுபது பஜ்ஜியாவது சாப்பிட்டுத்தான் நாங்க எழுந்திருப்போம். அதுவரைக்கும் பஜ்ஜி வந்துண்டே இருக்கும். இப்படிக் கூடையில் வெச்சு அந்தக் கூடையை மடியில வெச்சுத் திங்கற சுகமே தனி.

இலையில கொண்டுவந்து எல்லோரும் பார்க்கச் சாப்பிடக்கூடாது. கண்ணுபடும். அதனாலதான் இப்படி இலையை மூடிண்டு உள்ளுக்குள்ள கைவிட்டு அப்பத்தை

எடுத்து வாயில் போட்டுக்கணும்." என்று அவர் போட்டுக் காண்பிக்க, வீடு மெல்ல சிரித்தது.

"என்னடா தனிப்பண்டாரமா இருக்கானேன்னு யோசனையா இருக்கா? காசு சம்பாதிக்கிறோம்... என்னத்த பண்றது சொல்லு. அப்போவெல்லாம் காசு கிடையாது. காசு இல்லாததுனால தனியும் கிடையாது. இப்போ வெள்ளைக்காரன் காசைக் கொண்டு வந்து கொடுத்துட்டான். காசை வெச்சுண்டு என்ன பண்றது... எத்தனை மல்லு துணியும் லாங்கிளாத்தும் வாங்கறது. நான் ஒத்த சூபா, ஒத்த சூபாயா கொடுத்து நாப்பது ஏக்கர் வளைச்சுப் போட்டிருக்கேன். யாரை வெச்சு விவசாயம் பண்றது. ஒண்ணும் பண்ண முடியாது. தரிசா கிடக்கு நிலம். அதனால இப்படி ஏதாவது திங்கற பண்டமா வாங்கிச் சாப்பிடுவேன். ஆனா எங்கப்பால்லாம் வேற மாதிரி. வெளிய திங்கவே மாட்டார். திங்கக்கூடாதுன்னு ஒரு சங்கல்பம். இப்பத்தான் எல்லா ஆசாரமும் போயிடுத்து.

நீங்க பார்த்து வெச்சுருக்கற இடம் பள்ளம். கொஞ்சம் தண்ணி தங்கும். அதனால பரவாயில்லை. ரொம்ப நாளா தண்ணி தேங்கின இடம் நல்லது. நாம மேடு படுத்திண்டு ஒரு கிணறு தோண்டி விட்டோம்னாக்க காலாகாலத்துக்கும் ஜலம் இருக்கும். வெய்யில் நாள்லேயும் தண்ணி கஷ்டம் இருக்காது. மூணு ஏக்கரா இல்ல, அஞ்சு ஏக்கராவா வாங்கிப் போட்டுக்கோங்கோ. ரயில்வே லைன்லேர்ந்து நூறடி விட்டு ஒரு வேலி போட்டுக்கோங்கோ... அந்த வேலியிலேர்ந்து இந்தப் பக்கம் வரைக்கும் ரெண்டு ஏக்கர். அந்தப் பக்கமா ஒரு ரெண்டு ஏக்கர். இன்னும் துண்டமா அரை அரையா அஞ்சு ஏக்கர் அழகா வளைச்சுப் போட்டுடலாம். நான் ஆட்களைக் காமிக்கறேன். அவனைக் கொண்டு வந்து மண்ணடிக்கச் சொல்லுங்கோ. ஒரு வருஷம்... முடிஞ்ச போதெல்லாம் அவன் மண் அடிக்கூட்டும். தானா மேடு ஆயிடும். ஒவ்வொரு தடவையும் மண் அடிக்கற போது ஓரணா கொடுங்கோ... போதும்.

அம்மா... தயிர்சாதம் கொடு... தயிர்சாதத்தை இலையிலேயே கொண்டுவந்துடாத... ஒரு பாத்திரத்தில கொடு." என்று சொல்லி தயிர்சாதமும் தொட்டுக் கொள்ள எலுமிச்சம் ஊறுகாயும் எடுத்துத் தரையில் வைத்துக் கொண்டார்.

ஒரு காலை மடித்து ஒரு காலை நீட்டி வழித்து வழித்துச் சாப்பிட்டார். புறங்கையை நக்கினார். தள்ளாடி எழுந்திருந்தார். கையலம்பினார்.

சாம்பசிவ சாஸ்திரிகள் பார்த்து வைத்திருந்த நிலம் ஒரே வாரத்தில் அவர்களுக்குச் சொந்தமாகியது.

போகத்தில் உள்ள நாட்டம்போல் மனிதருக்கு உணவிலும் நாட்டம் எல்லையில்லாதது. தவிர்க்க முடியாதது. மிகுந்த மனோபலம் உடையவர்களுக்கே காமத்திலிருந்து விலகியிருக்க முடியும். உணவிலிருந்து தள்ளியிருக்க முடியும். பொன்நிறமாகவும், பளபளப்பாகவும் வாசனையோடு கூடிய அப்பத்தைப் பார்த்தபோது இது என்ன என்று தொட்டுப்பார்த்து அதன் மிருதுத் தன்மையை உணர்ந்து உடனே வாயில் போட்டுக்கொள்ள வேண்டுமென்று எச்சில் ஊறி பல பேர் தானாக எடுத்து விடுகிறார்கள்.

ரயில்வே ஸ்டேஷனில் சென்னைக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்த ஒரு ஆள் இதைப் பார்த்துவிட்டு துணி மூட்டையை பிரித்து உள்ளிருந்து ஒரு மண் உண்டியலை எடுத்து தரைமீது போட்டு உடைத்து காசை எடுத்து, அந்தக் காசுகளுக்கு இருபது அப்பம் வாங்கிக் கொண்டான்.

"என்ன... உண்டியலை உடைத்து விட்டீர்களே?" என்று கேட்டபோது, "அது திருப்பதி ஏழுமலையானுக்கு உண்டான உண்டி காசை மறுபடி போட்டுக்கொள்வேன் அப்பம் எங்கு போய் வாங்குவது?" என்று கேட்டான்.

மனிதர்களுடைய ருசியின் வேகத்தைப் பற்றி சாம்பசிவ சாஸ்திரிகள் நன்கு தெரிந்துகொண்டார். வேறு ஏதேனும் உணவு தயார் செய்யலாமா என்று யோசனை செய்தார்.

"பஜ்ஜி என்று சொன்னாரே" என்று பர்வதம் சொல்ல, நான்கு விதமான பஜ்ஜிகள் நூறு செய்து ஒரு தட்டில் பரப்பி சதாசிவன் ரயில்வே ஸ்டேஷனுக்கு கொண்டு போனான்.

நிமிட நேரத்தில் சகலமும் விற்றுப் போயிற்று. பஜ்ஜிக்குத் தொட்டுக்கொள்ள கெட்டிச்சட்டினியைத் தனியே கேட்டு வாங்கிக் கொண்டார்கள்.

"அடேங்கப்பா... தயிர் சாதத்தில் என்ன மணம். சாவடிக்கிறான் போ. ஒரு வேலையுமில்லை. இருந்தாலும் மாயவரம் போலாம்னு கும்பகோணத்துலேர்ந்து வண்டியைப் பிடிச்சு மாயவரம் போயி இத்த சாப்டுட்டு மறுவண்டி பிடிச்சுத் திரும்பி வந்து சேர்ந்தேன்."

பல பேர் சொல்லத் துவங்கினார்கள்.

"கல்கத்தா காங்கிரஸ் வருது. பிரமாதமான கூட்டம் வரும். கன்யாகுமரிலேருந்து ஜனமான ஜனம் வரும். வடக்கே போக இந்த மாயவரம் ஒரு சென்டர். இந்த மாயவரத்து வக்கீல்கள், தஞ்சாவூர் வக்கீல்கள் எல்லாம் சேர்ந்து மாயவரத்துல அசெம்பிள் ஆகி இங்கேயிருந்து அங்கவஸ்திரம் பறக்க விட்டுண்டு போகப்போறா. நீயும் அங்கவஸ்திரம் பறக்க விடு. ஸ்டேஷன்ல சாம்பசிவ சாஸ்திரிகள் அங்கவஸ்திரம் முழுக்கைச் சட்டை, தங்கபித்தான், டர்பனோட நிக்கட்டும். அங்கேயே டேபிள் போட்டு விதவிதமான பண்டங்கள் வித்து நன்னா சம்பாதிக்கலாம். ஒரு கோபால கிருஷ்ண கோகலே படம் வெச்சுக்கோ, பாரதமாதா படம் வெச்சுக்கோ." என்று சொல்ல, அங்கு பாரதமாதா படம் ஒன்று வைத்து கொடி ஒன்று நட்டு அதற்கு முன்னால் மரமேஜைகள் போட்டு அந்த மரமேஜைகளில் காசி அல்வாவும், கோதுமை அல்வாவும், பாதுஷாவும், காராசேவும், கார வேர்க்கடலையும் வைத்திருந்தார்.

அந்த டிசம்பர் மாதம் கதர்ச் சட்டைகளும் கதர் வேட்டிகளும் உடுத்தி மனிதர்கள் ஸ்டேஷன் முழுவதும் அலைந்தார்கள். வட இந்தியர்களைப் போல பைஜாமா- ஜிப்பா போட்டுக் கொண்டார்கள்.

தெற்கேயிருந்து சென்னைக்குப் போய் சென்னையிலிருந்து ரயில் மாறி கல்கத்தாவுக்குப் பயணப்பட்டார்கள். நூறு பேராய், இருநூறு பேராய் ஒரு பெட்டி முழுவதும் அடைத்துக் கொண்டு பயணம் செய்தார்கள். பெட்டியிலிருக்கிற நூறு பேருக்கும் சேர்த்து ஒரு மனிதரே காசு கொடுத்து மொத்த தின்பண்டங்களையும் வாங்கிப் போனார்.

செம்பனார் கோவிலிலிருந்தும், மாயவரத்திலிருந்தும், குடந்தையிலிருந்தும் சமையல் ஆட்களை வரவழைத்து அவர்களைப் பட்சணம் செய்யச் சொல்லி, அவை மீண்டும் மீண்டும் ஸ்டாலுக்கு வந்தன.

ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வாழ்க்கை நகர்ந்தது.

"இன்னும் இடம் வருது... வாங்கிப் போடறீரா?" குமாஸ்தா கேட்க, இப்போது குமாஸ்தாவின் மூலம் தாசில்தார் அறிமுகமானார்.

நூத்து நாற்பது ரூபாய்க்கு ஒண்ணே முக்கால் ஏக்கர். நல்ல மார்க்கெட் சந்தில் வாங்கினார்கள். கட்டடம் எழுப்புவதற்கு கொத்தனாரோடு பேசினார்கள். நிலத்தை செட்டியாரிடம் அடமானம் வைத்து ஆயிரத்து ஐநூறு ரூபாய், இரண்டு மாடி கட்டடம் கட்டித் தரச் சொல்லி முன்பணமாய் கொத்தனாருக்குக் கொடுத்தார்கள்.

நல்ல நாள் பார்த்து பூமி பூஜை போட்டார்கள். அந்தத் தீபாவளிக்கு உயர்ந்த ரக பட்டுப்புடவைகளை பர்வதமும், நீலாயதாட்சியும் வாங்கிக் கொண்டார்கள். குழந்தைகளுக்கு மூன்று விதமான உடுப்பு எடுத்தார்கள். புடவைகளுக்கு மூன்று விதமான உடுப்பு எடுத்தார்கள். புடவை கட்டிக்கொண்டு அக்கம்பக்கம் ஒரு மணி நேரம் சுற்றிவிட்டு மறுபடியும் புடவையை அவிழ்த்து முறுக்கி

பானையில் வைத்துவிட்டுப் பழைய துணியைக் கட்டிக் கொண்டு பட்சணம் செய்ய ஆரம்பித்தார்கள்.

தீபாவளிக்குத் தனியாக ஒரு பக்கம் பட்சண வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது.

கல்கத்தா காங்கிரஸுக்குப் போன கும்பல் அதே விதமாகத் திரும்பி வந்தது.

ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி கல்கத்தா காங்கிரஸ் எப்படி நடந்தது என்று விரிவுரையாற்றியது. டிரெயின் கிளம்பியதும் ஏறிப்போய் உட்கார்ந்து கொண்டது.

"சுதந்திரம் வாங்கறோம். ரொம்ப நிச்சயமா நமக்குச் சுதந்திரம் கிடைக்கப் போறது. இதுல எந்தச் சந்தேகமும் யாருக்கும் வேண்டாம். வெள்ளைக்காரன் நம்மளக் கண்டு பயப்பட ஆரம்பிச்சுட்டான். கல்கத்தா காங்கிரஸ்ல என்ன நடந்தது தெரியுமா... பொம்மனாட்டி எழுந்து நின்று உரக்கச் சத்தம்போட்டு மேடையில பேசறா. எங்கேயாவது நடக்குமா? இந்தியாவில பொம்மனாட்டி பேச ஆரம்பிச்சுட்டா ஓய்."

"யார் பொம்மனாட்டி... என்ன பேர்?"

"அவ பேர் காதம்பனி கங்குலி. அவ மேடையில ஏறி நின்னு தேங்க்ஸ் கிவிங் லெக்சர் கொடுத்தா... ரொம்ப நன்னா இருந்தது."

கலந்துகொண்டவர்கள் பற்றி பல செய்திகள் பல மக்களிடம் பரவின. சின்னச்சிறு பத்திரிகைகள் விநியோகம் செய்யப்பட்டன. காங்கிரஸ் என்பது என்ன என்று கட்டுரைகள் கையேடுகளாய் வந்தன. மக்கள் படிக்க ஆரம்பித்தார்கள். படித்தவர்கள், படிக்காதவர்களிடம் பேச ஆரம்பித்தார்கள். அப்படிப் பேசுகிற இடமாய் மாயவரம் ரயில்வே ஜங்ஷன் இருந்தது. பேசுகுக்கு நடுவே அவர் களுக்கு தீனி தேவைப்பட்டது. அந்தத் தீனியை சாம்பசிவ சாஸ்திரிகள் தயங்காது நல்ல முறையில் வழங்கினார்.

கட்டடம் வளர ஆரம்பித்தது.

"கிரகப் பிரவேசம் வெச்சுக்கலாமா?"

"மாசி மாதம் வெச்சுக்கறது நல்லதும்பாளே?"

"வெச்சுக்கலாம்."

சாம்பசிவ சாஸ்திரிகள் தேதி குறித்தார்.

ஸ்டேஷனுக்குச் சற்றுத் தள்ளி மாயவரம் நகரத்தின் நடுவே கீழே பெரிய ஹாலும் மேலே நான்கு அறைகள் கொண்ட வீடும் மிக அழகாகக் கட்டித்தரப்பட்டது. சிவப்பு சிமெண்ட் மழமழவென்று போடப்பட்டது. வெளியே சுதந்திரதேவியின் சிலை சிமெண்ட்டில் நிறுவப் பட்டது. கீழே வருடம் எழுதப்பட்டது. உச்சியில் விளக்கு போடப்பட்டது. பக்கத்தில் காமதேனுவும் யானையும் நிறுவப்பட்டன. இடப்பக்கம் லட்சுமி தேவியும் வலப்பக்கம் சரஸ்வதியும் அமரவைக்கப்பட்டார்கள். ஒரு முகப்பு இவ்வளவு அழகாக எந்த வீட்டிலும் இதுவரை அமைந்த தில்லை. ஒரு திரைச்சீலை அமைத்தது போல வீட்டுக்கு முன்பு துணி மடிப்பாய் செய்யப்பட்டது. அதற்குத் தனி வர்ணம் தரப்பட்டது. வெளியூர் ஆட்களெல்லாம் வந்து வீட்டைப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

"கெட்டிக்காரன்யா சாம்பசிவம். ஒரே வருஷம் காசு எடுத்துட்டான். அவனை அடிக்கறதுக்கு ஆளே இல்லை. அவன் என்ன பண்ணிப் போட்டாலும் விக்கறது." என்று லேசாய் பொறாமைப் பட்டார்கள்.

கண் திருஷ்டியெல்லாம் சேர்ந்தது. கிரகப்பிரவேசத் தன்று சுவாமி விவேகானந்தர் காலமானார். ஊர் துக்கம் அனுஷ்டித்தது.

அவர்கள் கிரகப் பிரவேசத்தைத் தள்ளி வைத்தார்கள்.

14

"ஏது இவ்வளவு காசு?"

செம்பனார்கோவில் அந்தணர்கள் சாம்பசிவ சாஸ்திரிகளைப் பார்த்துக் கேட்டார்கள்.

கடும் உழைப்பு என்கிற வாசகம் நெஞ்சுவரை வந்து விட்டது. ஆனால், சாம்பசிவ சாஸ்திரிகள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, "பகவான் போட்ட பிச்சை." என்று சொன்னார்.

அந்தனர்கள் அதை நம்ப மறுத்தார்கள்.

கடவுளாவது காசு கொடுக்கறதாவது என்று யோசித்தார்கள். எப்படி வந்திருக்கும் என்று ஆராய முற்பட்டார்கள்.

தெரிந்த நண்பர்களிடம் சாம்பசிவ சாஸ்திரிகள் மனம் விட்டுப் பேசினார்.

"இனிமே வெறுமனே திண்ணையில் உட்கார்ந்து பேசறது முடியாத காரியம். ஜபம் பண்றேன்னு எதிர் வீட்டை நோட்டம் பார்த்துண்டிருக்கறதெல்லாம் முடிஞ்சு போன விஷயம். இனி காசு சம்பாதிக்கணும்னா அது உடல் உழைப்போட, புத்தி உழைப்போட சம்பந்தப் பட்டதா இருக்கணும்.

நான் வந்துட்டேன்... நாலணா கொடு. நான் உட்காரப் போறேன்... நாலணா கொடு. நான் வேதம் சொல்றேன்... நாலணா கொடு. நான் திரும்பிப் போகணும்... ஒரு நாலணா கொடு அப்படின்னு கேட்டு வாங்கிண்டு இருந்த காலங்கள்லாம் இனிமே வராது. இனிமே தானமா காசு வாங்கறது அப்படிங்கறது மரியாதை குறைவாகவே போகப் போறது. தானமாக காசு வாங்கறானே அப்படின்னு நம்பள பார்த்து மத்த ஜனங்கள் எரியப்போறான். அதனால

அதுக்கு முன்னாடியே நம்ம வாழ்க்கைமுறையை மாத்திக்கறது நல்லது."

"மகாபாபிதான் ஓட்டல் வைப்பான். எப்படி... எப்படி... ஓட்டல் வைக்கறது."

"வேண்டாம். ஓட்டல் வைக்காதே... துணி வியாபாரம் பண்ணு. வெளிதேசத்துலேர்ந்து மலை மலையா துணி கொண்டுவந்து மெட்ராஸ்ல குவிச்சுருக்கான். போய் வாங்கிண்டு வந்து இங்க போட்டுடு. சட்டை போட்டுக்கற விஷயம் வந்துடுத்து. ஜிப்பா தச்சுக்க ஆரம்பிச்சுட்டான். வடஇந்தியாக்காரன் மாதிரி பைஜாமா தச்சுக்க ஆரம்பிச்சுட்டான். பைஜாமா ஜிப்பாவுக்கு இந்தத் துணி ரொம்ப சரியா வருது. பைஜாமா நல்ல உடை. வேஷ்டி மாதிரி ஒதுங்காது."

"வேற என்ன வியாபாரம் பண்ணலாம்?

"மருந்து. மருந்தும் வெளிநாட்டுலேர்ந்து வருது. வயித்து வலிக்கு, ஜுரத்துக்கு, கபத்துக்கு, காயத்துக்குன்னு வருது. வாசனை அத்தர், லாவண்டர்னு ஒண்ணு விக்கறான். அப்பா... மூக்கைத் துளைக்கிற ஒரு நெடி. இதெல்லாம் வாங்கி விக்கலாம். ஷோக்காளி ஆட்கள் அதிகமாயிட்டா."

சாம்பசிவ சாஸ்திரிகள் சொல்ல, செம்பனார்கோவில் அந்தணர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

"அதைவிட நல்ல விஷயம் ஓய்... ஸ்கூல் ஃபைனல் முடிச்சுட்டு நேரா உத்தியோகத்துக்குப் போயிடலாம். அஞ்சு இலக்க எண்ணிக்கை ஒரு பத்து போட்டு அதைக் கூட்டத் தெரியறதான்னு பார்க்கறான். கணக்கு வழக்கு வெச்சுக்கத் தெரியுதான்னு பார்க்கறான். டெஸ்ட்டுல பாஸ் ஆயிட்டாக்க வேலை கொடுத்துடறான். எடுத்தவுடனே பதினாறு ரூபா சம்பளம்.

ஊர் ஜனங்கள் வியாபாரத்துக்கு போறா, இந்த மாதிரி ஆபீஸுக்குப் போறா அப்படின்னா சோத்துக்கு என்ன

பண்றது. இந்த மாதிரி கடையைத்தான் நம்ப வேண்டியிருக்கு. அதனாலதான் ரயில்வே ஸ்டேஷன்ல ஒண்ணு ஆரம்பிச்ச மாதிரி மாயவரத்து உள்ளேயும் ஆரம்பிக்கலாம்னு பார்க்கறேன்.

எதிரே தாசில்தார் ஆபீஸ். இந்தப் பக்கம் மார்க்கெட். அந்தப் பக்கம் கோயில். நட்ட நடுவில் நம்ம கட்டடம் இருக்கு. கோயில் போறவா வந்து சாப்பிடுவா. மார்க்கெட்ல இருக்கற வியாபாரிகள் வந்து சாப்பிடுவா. தாசில்தார் ஆபீஸ்க்கும் கோர்ட்டுக்கு வரவாளும் சாப்பிடுவா. சரியான இடமா இருக்குன்றது என்னுடைய அபிப்பிராயம்.

இந்தப் பக்கம் இருக்கற ரயில்வே ஓட்டலை விஸ்வநாதனே வெச்சுக்கப் போறான். உள்ளுக்குள்ள இருக்கற அந்தக் கட்டடத்துக்கு சதாசிவன் போயிடப்போறான். இத்தனை நாள் இங்க வேலை செய்த பழக்கம் இருக்கு. கூடமாட ஒத்தாசைக்கு என் மச்சினன் இருக்கான். ஆரம்பத்துல ரெண்டு பேரும் சேர்ந்து கவனிச்சுண்டு உள்ளுக்குள்ள இருக்கற கடை நின்ன பிறகு சதாசிவனே தொடர்ந்து நடத்துவான்."

"எல்லாம் ரைட். வெரிகுட். மேலும் மேலும் நன்னா வரணும். சௌக்கியமா இருக்கணும். சதாசிவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கப்படாதா? மரியாதையா இருக்குமே."

"அதுக்கும் பார்த்துண்டுதான் இருக்கேன்."

"எதுக்குப் பார்க்கணும்?" பர்வதம் கேட்டாள். "எதுக்கு வெளியேபோய் பார்க்கணும்? எனக்குப் பொண்ணு இருக்காளே. நான் அவளை எங்க கொண்டுபோய் கொடுப்பேன்?" என்று உரக்கக் கத்தினாள்.

"என்னடி இது– அவன் தோள்ல வளர்ந்த பொண்ணு. அவளைப் போய் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறேன்னு சொல்ற."

சாம்பசிவ சாஸ்திரிகள் சொல்ல, பர்வதம் சிடுசிடுத்தாள்.

"இருக்கற வேலையெல்லாம் விட்டுட்டு என் பொண்ணுக்குன்னு நான் பிள்ளை பார்க்கறதுக்கு அலைய முடியுமா? நான் அடுப்படியைக் கவனிப்பேனா... மாப்பிள்ளை பார்க்கறதுக்குப் போவேனா... ஓட்டலை கவனிப்பேனா– கல்யாண வேலை பார்ப்பேனா– என்னால ஏதாவது ஒண்ணுதான் பண்ண முடியும். இந்த அவஸ்தையெல்லாம் படறதுக்குப் பதிலா இவளை சதாசிவனே கல்யாணம் பண்ணிக்கட்டும்."

"அவா ரெண்டு பேருக்கும் நடுவில பதிமூணு வருஷ வித்தியாசம்."

"அதனால என்ன... அவன்தானே அவளுக்கு முறையான பையன். அவனை விட்டுட்டு வெளிய போய் நான் எங்க தேடுவேன்? ஏன் அவனுக்குக் கொடுத்தா என்னன்னு வெளியில இருக்கறவா கேட்டா என்ன பதில் சொல்வேன்?"

"குழந்தைகளுக்குக் கஷ்டம்டி."

"ஒண்ணும் கஷ்டமில்லை. அவன் ஆம்பளை. இவ பொம்மனாட்டி. அவா சந்தோஷமா குடித்தனம் நடத்திப்பா."

"ஒன்பது வயசுதானே ஆறது குழந்தைக்கு."

"இதுதான் சரியான வயசு. கல்யாணத்துக்கு. இதுதான் அழகான வயசு. அருமையா பண்ணிடலாம். கையில காசு இருக்கு. பளிச்சுன்னு நாலு பேரைக் கூப்பிட்டுக் கல்யாணத்தைப் பண்ணுங்கோ."

இருபத்திரண்டு வயது சதாசிவனுக்கும் ஒன்பது வயது சங்கரிக்கும் திருமணம் நிச்சயமாகியது. ஓட்டல்காரர் வீட்டுக் கல்யாணம். மாயவரத்தில் எல்லோருக்கும்

சொல்லப்பட்டது. வெற்றிலை, பாக்கு, தேங்காய் வைத்து ஊரின் பெரிய மனிதர்களை அழைத்தார்கள்.

எந்தக் கட்டடத்தை அற்புதமாகக் கட்டி கலர் கலராக அலங்கரித்தார்களோ அந்தக் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் மிக விமரிசையாக சதாசிவன்- சங்கரி திருமணம் நடந்தது. கட்டடத்தின் வாசலிலும் கொல்லைப்புரத்திலும் பெரிய பந்தல் போட்டு அங்கு இருக்கிற தோட்டத்தைச் சரிசெய்து அங்கு சமையல் நடந்தது. சாப்பாடு பந்தி நடந்தது.

மாயவரமே திரண்டு வந்து சாப்பிட்டது.

எல்லா அந்தணர்களுக்கும் நான்கணா தட்சிணை தரப்பட்டது. எல்லா ரயில்வே ஊழியர்களுக்கும் ஒரு கை நீளம் மல்துணி தரப்பட்டது.

வாசலில் நிற்கிற சிறுவர்களுக்கு ஒரு கூடை நிறைய பட்சணமும் பொரியும் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அந்தக் குழந்தைகள் அந்தக் கூடையைத் தூக்கிக் கொண்டு ஓடின. பங்கிட்டுக்கொண்டன.

மாயவரத்திலுள்ள எல்லா உயிர்களும் அவர்களை வாழ்த்தின.

அந்த ரயில்வே ஸ்டேஷனில் அப்பம், வடை, தயிர்சாதம் பொட்டலம் கொடுத்துவிட்டு யாரிடமும் காசு வாங்கவேயில்லை. அடிமட்ட ஊழியர்கள் விநியோகித்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் மேற்பார்வை பார்த்தார்.

விஸ்வநாதனும், பர்வதமும் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே தங்கிவிட, சாம்பசிவ சாஸ்திரிகள் நீலாயதாட்சியும் சதாசிவனோடு மாயவரத்துக்கு நடுவே குடியேறினார்கள். ஓட்டலை எப்படி நடத்தத் துவங்குவது என்று யோசித்தார்கள்.

அவர்கள் கல்யாணத்தின் போது ஊர் முழுவதும் கூடி, பட்டுப்பாயில் உட்கார்ந்து தாம்பாளம், தாம்பாளமாய்

வெற்றிலையும் பாக்கும் மென்றபடியே ஊர் விஷயம் பேசிற்று.

"பேப்பர் வியாபாரம் பண்ணலாம். மருந்து வியாபாரம் பண்ணலாம்கறார் சாம்பசிவ சாஸ்திரி. மகாகெட்டிக்காரர். எப்படி நகர்றது. எவ்வளவு வேகம் நகர்றதுன்னு அவருக்குத் தெரியும். யாருக்காவது தோணித்தாயா... ரயில்வே ஸ்டேஷன்ல அப்பம், வடை, தயிர்சாதம் விக்கணும்னு. பார் என்னமா காசு சம்பாதிச்சுட்டார். அதுமட்டுமா- எப்போ உள்ளே நகரணும்- எவனை வெச்சு நகரணும்னு பார்த்து உள்ளுக்குள்ளே ஏக்ளாஸ் இடம் பிடிச்சுப் போட்டுட்டார் பார்.

துணிஞ்சு, கட்டின வீட்டை அப்படியே செட்டியார் கிட்ட அடமானம் வெச்சு காசை வாங்கி அந்தக் காசுக்குக் கல்யாணம் நடத்தி அடேயப்பா... என்ன தைரியம். என்ன துணிச்சல். காசு வந்தா கல்யாணம் அப்படின்னு இருக்கற காலத்துல கடனை வாங்கிக் கல்யாணம் பண்ணியிருக்கார். கடனை அடைக்க முடியலையா வீட்டை வித்துட்டு மறுபடியும் ரயில்வே ஸ்டேஷன் போயிடுவேங்கறார்."

"அது மட்டுமில்லை ஓய். தாசில்தார் ஆபீஸ்ல ஆளைப் பிடிச்சு வெச்சுண்டு எங்கெங்கெல்லாம் பொறம்போக்கு நிலம் இருக்கோ. பட்டபட்டுனு பத்து ரூபாய்க்கும், பதினஞ்சு ரூபாய்க்கும் வாங்கிப் போடறான்யா."

"நல்ல நன்செய்யா வாங்கப்படாதோ... அப்படின்னு பல பேர் கேட்கறா. விக்கறேன்னு சில பேர் வரான். தொடறதே இல்லை. பொறம்போக்கு நிலம்தான் பிடிச்சுப் போடறார்."

"ஏன் அப்படி?"

"யார் போய் நின்னு நாத்து பார்த்து, நடறதப் பார்த்து, அறுப்புப் பார்த்து ஈடுபடறது? கடையில அரிசி கிடைக்கறது. அதை வாங்கறத விட்டுட்டு எதுக்காக வயல்ல நின்னு

ஜனங்களோட மோதணும்? செம்பனார்கோவில்ல இருக்கற வயலையும் வித்துடறதா முடிவாம்."

"சாப்பாட்டுக்கு வயல் வேண்டாமா?"

"வேண்டாங்கறார் சாம்பசிவ சாஸ்திரி. குவளையில் பால் கொண்டுவந்து கொடுக்கறபோது பசு மாடு என்னத்துக்கு வாங்கறதுன்னு கேட்கறார்."

"வேறென்ன பண்ணப் போறாராம்?"

"ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷன்லயும் இதே மாதிரி அப்பம், வடை, தயிர்சாதம் விக்கப்போறாராம்."

"இது யார் ஏற்பாடு?"

"அதான் மச்சினன்... விஸ்வநாத சாஸ்திரி ஏற்பாடு."

"அவன் பிரமாதமான ஆளா இருக்கான் போல இருக்குப்பா."

"ஆமாம்... ஜாஸ்தி பேசறதே இல்லை. சாம்பசிவ சாஸ்திரி கோடு போட்டுத் தரார். அவன்பாட்டுக்கு அதுல ராஜபாட்டை போட்டுண்டிருக்கான். மகா உழைப்பாளி."

"இருவது முப்பது பேர் வேலை செய்யறா போல இருக்கே."

"வேலை செய்தா போறாது. கூடவே வேலை செய்யறா ளான்னு பார்த்துண்டே இருக்கணும். விஸ்வநாதன் பெண்டாட்டியும் கண்குத்திப் பாம்பா கவனிச்சுண் டிருப்பா. அதை ஏன் எடுத்த, இதை ஏன் வெச்சேன்னு கேட்டுண்டேயிருக்கா."

"இந்த சதாசிவன் எப்படி?"

"அவனும் உழைப்பாளிதான்."

"சங்கரி சின்ன பொண்ணா இருக்கேடா."

"அதுவா, படுசுட்டி. அப்பத்துக்கு நடுவே பிறந்தது. அப்பம் தின்னுண்டே வளர்ந்தது. அவா பார்க்கறே வேலை அத்தனையும் சங்கரிக்கு அத்துப்படி."

"ஓய்... உம்மால ஓட்டல் நடத்த முடியுமா...?"

"முடியாது. திங்கத்தான் முடியும்."

ஒருவரையொருவர் கேட்டுச் சந்தோஷமாய் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் குடும்பம் முன்னும் பின்னும் கல்யாண வீடு வேலையில் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. எவ்வளவு கல்யாண வேலை இருந்தாலும் ரயில்வே ஸ்டேஷனில் சற்றும் வேலை தடைபடாது நடந்து கொண்டிருந்தது. போகும் வண்டிக்கும், வரும் வண்டிக்கும் அப்பம், வடை, தயிர்சாதம் இனாமாகத் தரப்பட்டன. மறுநாள் விலைக்கு விற்கப்பட்டன.

"ஓட்டலுக்குப் பேர் வெச்சு ஆரம்பிச்சுடலாமாடா சதாசிவா...?"

அப்பா கேட்டதுக்கு மகன் தலையசைத்தான்.

"என்ன பேர் மனசுல வெச்சுண்டிருக்கே?"

"சங்கரி பவன்."

"சங்கரி பவன்னு பொம்மனாட்டி பேரா. கொஞ்சம் மாத்திக்குவோமேடா. சங்கர பவன்னு வெச்சுக்குவோம். வாசல்ல ஆதிசங்கரருடைய சிலையை வெச்சுடுவோம். என்ன சொல்ற...?"

"ஆஹா... ஆஹா... உங்க இஷ்டம். எதுக்குப்பா ஆதிசங்கர ருடைய சிலை...?"

"அவர் என்ன சொன்னாரோ அதைப் பண்ணலை. அவர் காப்பாத்திக் கொடுத்த வேதத்தை நாம தூக்கிண்டு போகலை. குறைஞ்சபட்சம் அவர் படத்தையாவது, உருவச் சிலையாவது வெச்சு அப்பனே... மன்னிச்சுக்கோ.

என்னால அது ஆகலை. உன்னை நமஸ்காரம் பண்றதுக்கு மட்டுமே வெச்சுண்டிருக்கேன்னு ஒரு மன்னிப்பு கேட்கறா மாதிரி சிலையை வெச்சுடலாமே."

வீடு சரியென்று சொன்னது. சலவைக் கல்லில் இரண்டு முழங்கை உயரத்துக்கு ஆதிசங்கரர் சிலை வைக்க, மாய வரம் முழுவதும் வந்து அதைப் பார்த்துவிட்டுப் போனது.

சிலை நிறுவிய மறுவாரம் ஓட்டல் திறக்கப்பட்டது. லட்டும், அதிரசமும், பாதுஷாவும், பாஸந்தியும், கோதுமை அல்வாவும், ஓமப்பொடியும் தனி ஸ்டால் போட்டு விற்க, உள்ளே மசால்தோசை, அடை, அவியல், பூரி, உருளைக் கிழங்கு, ஊத்தப்பம், கத்தரிக்காய் கொத்ஸு, இட்லி மிளகாய்ப் பொடி எல்லாவற்றுக்கும் புதினா சட்னி, காரச் சட்னி, தேங்காய் சட்னி என்று தின்பண்டங்கள் தயாராகின.

அவை வெளியே எழுதப்பட்டுப் பார்வைக்கு வைக்கப் பட்டன. தெருமுனையில் ஒரு பலகை எழுதி வைக்கப் பட்டது. பல பேர் அந்தப் பலகையைப் பார்த்துவிட்டு ஓட்டல் வாசலில் நின்றுவிட்டு யாராவது தோசை சாப்பிட்டால் எட்டிப்பார்த்து விட்டுப் போனார்கள்.

"ஓட்டல்ல சாப்பிடலாமா, கூடாதா... ஓட்டல் விழுப்பா, மடியா?" என்றெல்லாம் கேட்டுக் கொண்டார் கள்.

பல பேர் இருட்டிய பிறகு ரகசியமாய் வந்து சாப்பிட் டார்கள். சாப்பிடுபவர் தலையில் தலைப்பாகை கட்டிக் கொண்டார்கள். கொஞ்சம் காரச் சட்னி போடு என்று கேட்டுக் கொண்டார்கள்.

கொல்லைப்புறம் வந்து வாழைச்சருகில் பூரி மசால் வாங்கிக் கொண்டார்கள். ஆற்றங்கரைக்குப் போய் சாப்பிட்டார்கள். இரவு பசும்பாலும், சப்பாத்தியும் போடப்பட்டன. அதற்குப் பெருங்கூட்டம் வந்து நின்றது.

ஓட்டல் வந்து நான்கு வருடங்கள் கழித்துப் பெண்களுக் கென்று ஒரு தனி அறை சாப்பிடுவதற்கு சாம்பசிவ சாஸ்திரிகள் கட்டினார்.

ஆண்களின் பார்வை படாமல் தரையில் உட்கார்ந்து பெண்கள் நிம்மதியாய் சாப்பிடுவதைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

விஸ்வநாதன் இளம் பையன்களை ரயில் வண்டி யிலேயே போய் தயிர்சாதமும், அப்பமும், வடையும் விற்பதற்கு ஏற்பாடு செய்தான். வெயில் நாளில் பெரிய அலுமினியச் சட்டியில் நீர்மோர் விற்றான். எல்லா ஸ்டேஷனுக்கும் நீர்மோர் இறக்கிப் பகல் பதினோரு மணிக்கு ஆரம்பித்து மூன்று மணி வரை வியாபாரம் களேஜோராய் நடந்தது.

நகரத்தின் மையத்திலிருந்து வந்து நீர்மோர் குடித்து விட்டுப் போனார்கள். கிராமத்து ஜனங்கள் தயிர்சாதம் வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள்.

"என் பேர் ரத்தினசபாபதி. தேவகோட்டை எங்கப்பா காசுக்கடை வெச்சு சம்பாதிச்சார். நான் நீங்க சொன்ன படி பட்டணத்துக்குப் போய் பேப்பர் வாங்கிவந்து கும்ப கோணத்துல போட்டிருக்கேன். மாயவரத்துலேயே ஒரு பிராஞ்ச் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். நீங்க ஆசீர்வாதம் பண்ணணும்."

ஒரு கட்டு பேப்பர் கொண்டுவந்து கொடுத்தான்.

"இது என்னத்துக்கு...?"

"பில் போடறதுக்கு."

"சின்னச் சின்னதா வெட்டிக் கொடு." என்று சொல்ல, ரப்பர் ஸ்டாம்பில் சங்கரபவன் என்று அச்சடித்து பில் புக் தயாராகிறது.

எந்த ஓட்டலிலும் பில் தருவதில்லை சங்கரபவனில் தான் பில் கொடுப்பார்கள் என்று மாயவரம் முழுவதும் பேச்சு நடந்தது.

"பரட்டைத்தலை முக்கால் ரூபா, சிலுக்கு ஜிப்பா ஒண்ணேகால்" என்று கல்லா உள்ளேயிருந்து கத்துவது தான் வழக்கம். ஆனால், சங்கர பவனத்தில் சாப்பிட்ட வுடன் என்ன சாப்பிட்டோம் என்று கணக்குப் போட்டு எழுதிக் கொடுப்பார்கள். சிலர் இதைக் கேட்டு வாங்கி பாக்கெட்டில் சொருகிக் கொண்டார்கள். நடுவே காசை எடுக்கும் போது அதையும் வெளியே எடுத்து வைத்துக் கொண்டார்கள்.

"என்னது இது?" என்று கேட்டபோது, "சங்கரபவனில் சாப்பிட்டேன். அந்த பில்." என்றார்கள்.

"சங்கரபவன்லயா சாப்பிட்டே... என்ன சாப்பிட்டே...?" என்று மற்றவர்கள் விசாரிப்பதைப் பெருமையாகக் கருதினார்கள்.

சங்கரி மலர்ந்தாள்.

இரண்டு கால்களையும் அகட்டி வேலைக்காரர்களை அதட்டி வேலை வாங்கும் சதாசிவனைப் பெருமை பொங்கப் பார்த்தாள். உழைத்து உரமேறிய அந்த உடம்பை ஏற்றுக்கொண்டாள். அவனுக்கு உற்சாகமூட்டினாள்.

"நீ யாரு எனக்கு ஆம்படையானா, இல்ல சதாசிவனா... எனக்கு ஒண்ணுமே புரியலை போ." என்று கட்டிக் கொண்டு கொஞ்சினாள்.

"நீ சங்கரி. நீ என் பொண்டாட்டி இல்லை. என் குட்டி சங்கரி." என்று அவளை அவன் கட்டிப்புரண்டு சந்தோஷப் படுத்தினான்.

அவர்கள் குழந்தை பெற்றார்கள்.

அங்கு தெரு முழுவதும் பூந்தி விநியோகம் நடந்தது.

"அடுத்த ஸ்டேஷன்ல கடை போடலாமா... அந்த ஸ்டேஷன்ல கடை போடலாமா..." என்ற விஸ்வநாதன் விசாரித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று தலையில் கல் விழுந்தது போல ஒரு சம்பவம் நடந்தது.

வாஞ்சிநாதன் என்கிற பிராமண இளைஞன், திருநெல் வேலி கலெக்டர் ஆஷ்துரையை மணியாச்சி சந்திப்பில் சுட்டுக்கொன்றான். தானும் சுட்டுக் கொண்டு செத்துப் போனான்.

15

இனி ரயில்வே ஸ்டேஷன் எளிதான இடமாக இல்லை. எல்லா ரயில்வே ஸ்டேஷனிலும் போலீஸ் போடப்பட்டது. தேவையற்ற விஷயங்கள் அகற்றப்பட்டன.

அப்பம், வடை, தயிர்சாதம் விற்பதற்கு அதிகாரி களுடைய அனுமதி எழுத்துப்பூர்வமாக தேவைப்பட்டது. குறிப்பிட்ட ஸ்டேஷனில் மட்டும்தான் கடை வைக்க முடியும் என்று உத்தரவிடப்பட்டது.

விஸ்வநாதன் அந்த அதிகாரியின் அனுமதி வாங்கு வதற்கு மதராஸுக்குப் போய் நடையான நடை நடந்து கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வந்தான்.

ரயில்வே விஷயத்தை விட்டுவிட்டு தானும் ஊருக்குள் கடை போடலாமா என்று யோசித்தான்.

ஆனால், தான் ஊருக்குள் கடை போட்டால் அது போட்டி கடையாக மாறிவிடும் என்று அஞ்சினான். என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினான்.

"இது ஒண்ணும் பெரிய விஷயமில்லைடா. பம்பாய்க்கு பிரிட்டிஷ் மன்னர் அஞ்சாம் ஜார்ஜும் குயின் மேரியும் வரத இங்க பெருசா கொண்டாடணுங்கறா. டெல்லியில தர்பார் நடக்கப் போறது. டெல்லி தர்பாரையும்

கொண்டானுங்கறா... டெல்லி தர்பாரின்போது பூந்தி கொடுத்துடு. நீ பூந்தி கொடுத்தேங்கறத வெள்ளைக் காரனுக்கு எழுதிப் போட்டுடு. அப்போ என்ன வேணும் னாலும் வாங்கிக்கலாம்." என்று ரயில்வே தலைமையகத் தில் உற்சாகமூட்டினார்கள்.

சென்னையிலும், மாயவரத்திலும், குடந்தையிலும் இன்னும் பிற இடங்களிலும், டிசம்பர் மாதம் டெல்லி தர்பாரின் போது விஸ்வநாதன் பல இடங்களில் பூந்தி விநியோகம் செய்தான். இலவசம் என்பதால், ஜனங்கள் கேட்டு வாங்கி மேல்துணியில் முடிந்து கொண்டார்கள். எங்கெல்லாம் பூந்தி விநியோகம் நடந்ததோ அங்கெல்லாம் அவனுக்கு கடை வைத்துக் கொள்ள அனுமதி தரப்பட்டது.

அவன் பேரில் கடை நடத்த பல பேர் முன்னுக்கு வந்தார்கள். அந்தக் கடையை அவன் வாடகைக்கு விட்டான். சென்னை கடையைத் தன்னிடம் வேலை செய்த, தெரிந்த பையனுக்குக் கொடுத்தான். எல்லோரிடமும் மாதாந்திர வாடகை வசூலித்து வந்தான். தரம் நன்றாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்தான்.

டெல்லி தர்பார்_ டெல்லி தர்பார்... என்று இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஜனங்கள் டெல்லிக்குப் போனார் கள்.

விஸ்வநாதன் பர்வதத்தோடு ஒரு முறை டெல்லிக்குப் போய் வந்தான். வெள்ளை முழுக்கை சட்டை பத்து தைத்துக் கொண்டான். பச்சைக் கடுக்கன், கட்டுக் குடுமி, வெள்ளைச் சட்டை என்று தோற்றம் மாறினான். மாறிய தோற்றத்திலேயே டெல்லி சுற்றிப் பார்த்தான். மறுபடியும் சென்னை வந்தான். சென்னையிலிருந்து மாய வரம் திரும்பினான். சென்னையைப் போல சொர்க்கமான ஒரு இடம் எதுவுமில்லையென்று சதாசிவத்திடம் விவரித் தான். சதாசிவத்திடம் விஸ்வநாதன் சென்னையைப் பற்றி

பேசுவதை சதாசிவத்தின் மகன் வைத்தீஸ்வரன் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

உயர்குல இந்துக்கள் தங்கள் வீடுகளில் அடிக்கடி கூடிக்கூடி பேசினார்கள்.

"செம்பனார்கோவில் ஐயரு சாம்பசிவ சாஸ்திரிகள் நிலம் முச்சூடும் விக்கறாராம். காசு கொடுத்தா நஞ்செய், புன்செய் இரண்டும் கொடுத்துடறாராம். யார் வாங்கப் போறான்னு கேட்கறாரு."

"ஏன் குத்தகைகாரனோட ஏதாவது தகராறா?"

"இல்லை... மாயவரத்துல பெருசா ஓட்டல் ஆரம்பிச் சுட்டாரு. அதே மாதிரி மெட்ராஸ்ல இன்னொரு ஓட்டல் போடணும்னு திட்டம் போடறாங்க. மெட்ராஸ்ல என்ன ஆரம்பிச்சாலும் ஓஹோன்னு வளரும்."

"எனக்குத் தோணலைடா... மெட்ராஸ் ஒரே நாத்தம் பிடிச்ச இடமா இருக்கு. இன்னும் கொஞ்சம் நாள்ல மெட்ராஸ் காவி ஆகுதா இல்லையான்னு பாரு."

"எப்படி? எதனால சொல்றீங்க?"

"உலக சண்டை நடக்குதாம். அந்த உலக சண்டை பெருசானாக்க டெல்லி, பாம்பே, கல்கத்தா, மெட்ராஸ் நாலு இடத்தையும் அடிச்சுட்டுப் போயிடுவேன்னு ஜெர்மன்காரன் சொல்லியிருக்கானாம்."

"அவன் எங்கயோ கிடக்கான். நாம எங்கயோ இருக் கோம். என்னாத்துக்கு மெட்ராஸை வந்து அடிக்கிறான்?"

"உனக்கு உலகம் தெரியலை. நாலு பனை உயரம், இருபது பனை நீளம், மூணு பனை அகலம் பெருங்கப்பல் வருது. ஒரு பெரிய எறும்பு புத்து நகர்ந்து வர்றா மாதிரி கப்பல்ல மனுஷங்களோட அது நகர்ந்து வருது.

உள்ள பீரங்கி வெச்சிருக்கான். அடி, செவிட்டி செவிட்டி அடிக்கான். கடற்கரைப்பக்கம் என்ன நின்னா

லும் தூள்தூளா ஆகுது. அப்படியே படகுல ஆளுங்க இறங்கராங்க. உள்ள வராக. எதிர்த்து எவன் நின்னாலும் சுடறாக. ரெண்டு நாள் மெட்ராஸை சுடுகாடா ஆக்கிட்டு மறுபடியும் படகுல ஏறி கப்பலுக்குப் போயி ஜெர்மனுக்கு போயிடுவாக. அத்தினி ஐயரும் துண்டைக்காணும்... துணியைக் காணும்னு மறுபடியும் இங்க மாயவரத்துக்கு ஓடிவராங்களா இல்லையான்னு பாரு."

"இப்போ பேச்சு அது இல்லை. செம்பனார் கோயில் சாம்பசிவ சாஸ்திரி ரெண்டரை வேலி நிலம் காசு கொடுத்தா கொடுக்கறேன்றார். பிரிச்சு விக்கறேன்றார். பிரிச்சு விக்காத யாராவது ஒரு ஆள் வாங்கினாலும் வித்துடறேன்றாரு."

தாத்தா, சின்னத்தாத்தா, அப்பா, பெரியப்பா, சித்தப்பா, அத்தை, மாமன், அண்ணன், தம்பிகள் என்று ஒற்றுமை யாக இருந்த ஒரு பெரிய படையாச்சி குடும்பம் தங்கள் வீட்டியுள்ள பெண்களின் நகைகளை மொத்தமும் எடை போட்டு குறித்துக் கொண்டு கணக்குப் போட்டது.

மஞ்சள் கயிற்றில் முடிந்திருந்த திருமாங்கல்யம் தவிர ஒரு காது தோடு தவிர ஒரு ஜதை கைவளையல் தவிர மற்றவகைளை விற்றுவிட்டு நிலம் வாங்கலாம் என்று முடிவு செய்தது.

"இது நல்லதுங்களா..." வீட்டிலுள்ள பெண்கள் பயந்தார்கள்.

ஒரே ஒரு பெண்மணி தைரியம் சொன்னாள்.

"கவலையே படாதிங்கோ, மெட்ராஸ் ஆளுங்கல்லாம் மறுபடியும் இங்க வரப்போறாங்க. அப்போ விலை மறுபடி யும் ஜாஸ்தியாகும். வேற எந்த வியாபாரமும் இல்லாமல் யுத்தம் வந்தா வயல் வேலைதான் பெருசாகும். நெல்லுக்கு தான் மரியாதை இருக்கும் கரும்பும் பயிரும் ரொம்ப முக்கியமா படும். மொத்தமா வாங்கிப் போடுங்க. ஒருத்தர்

பேருக்கு சாசனம், பண்ணிகிட்டு அந்த சாசனம் பண்ண வரு யார்... யாருக்கு என்ன பகுதின்னு எழுதி கையில கொடுத்துருங்க."

அவர்கள் மிகுந்த ஒற்றுமையோடு செயல்பட்டார்கள்.

"ஐயரு சொல்ற விலைக்குப் பாதிதான் தேறுது. மிச்சம் கொடுக்க முடியலையே."

"போய் கால்ல விழுவோம். கொஞ்சம் கொஞ்சமா கொடுத்துடறோம். அப்படின்னு சொல்லிடுவோம். நெல்லா, அரிசியா கொடுத்து தீர்த்துப்போம்."

"எவ்வளவு நாள் தீர்ப்பே...?"

"ஆறு வருஷம் தீர்க்க வேண்டியிருக்கும்."

"நல்லதுதான். ஆறு வருஷம் கண்ணைமூடி கண்ணைத் திறந்தா ஓடிப்போயிடும். போ... போய் சொல்லு... காசாவும் அரிசியாவும் திருப்பித் தரோம்னு சொல்லு."

பதினாறு பேர் கொண்ட குடும்பம் பெண்களோடு மாயவரம் போய் இறங்கியது.

வாசலில் கைகூப்பி நின்றது.

"எங்களுக்கு அந்த நிலத்தைக் கொடுத்துடணும் எல்லார் நகையும் வித்து இதைக் கொண்டு வந்திருக்கோம்." என்று சொல்ல, சாம்பசிவ சாஸ்திரிகள் ஆச்சிரியப்பட்டார்.

"நல்லது, இவ்வளவு ஒத்துமையா ஒரு குடும்பம் வந்திருக் கிறது. சந்தோஷமா இருக்கு. மிச்சம் எப்படித் தருவேள். எழுதிக் கொடுங்கோ."

எழுதிக் கொடுத்தார்கள்.

அவர் நிலத்தை அவர்களுக்கு பதிலுக்கு எழுதித் கொடுத்தார்.

காசை கொடுத்து வணங்கிவிட்டு அன்று அந்த ஓட்டலில் அவர்கள் வயிறு நிரம்ப சாப்பிட்டுவிட்டுப் போனார்கள்.

விஸ்வநாதன் உள்ளுக்குள் போய் கத்தைகத்தையாய் இருக்கிற ரூபாயையும், வெல்வெட் பையில் இருக்கிற வெள்ளிக்காசும் தொட்டுப் பார்த்து சந்தோஷமடைந்தான்.

"அத்திம்பேர்_ நிலத்தை வித்துட்டோமேன்னு தூக்கமா இருக்கா?"

"இல்லை. இனிமே வயலை வெச்சுண்டு நம்மால ஒண்ணும் பண்ண முடியாது. என் புத்தி நிலத்துலேர்ந்தும், அறுப்புலேர்ந்தும் விலகிப் போயிடுத்து. நிலத்தைப் போய் பார்க்கக்கூட எனக்கு மனசும் வரலை. நேரமும் இல்லை. என்னுடைய சொர்க்கம் மாயவரம் டவுன். இந்த இடம். இந்த ஓட்டல்."

சாம்பசிவ சாஸ்திரிகள் உற்சாகம் பொங்கச் சொன்னார்.

"மெட்ராஸ்ல ஓட்டல் போடப் போறேளாமே... என்கிட்ட கூட சொல்லவேயில்லையே."

"நினைச்சுண்டிருக்கேன். நல்ல நேரம் பார்த்துண்டிருக்கேன்."

"அதை யாருக்குக் கொடுப்பேள்?"

"ஏன்_ நானே போய் உட்காரலாம்."

"இந்த வயசுக்கப்புறமா."

"எனக்கென்னடா_ நன்னாதானே இருக்கேன். எத்தனை வயசானா என்ன, உட்கார்ந்த இடத்துல வேலை வாங்கறது கஷ்டமா...?"

சாம்பசிவ சாஸ்திரிகள் கம்பீரமாகச் சொன்னார்.

"நம்மகிட்டேயிருந்து அந்த படையாச்சி வாங்கியிருக்காளே அவருக்கு நல்லதா இது?"

"ரொம்ப நல்லது. அவங்க உழைப்பாளிகள். அந்த குடும்பத்துல நல்லவேளையா ஒத்துமையும் இருக்கு. உழைப்பாளிகள் ஒத்துமையா இருந்தா நிச்சயமா ஜெயிப்பா. நடுவில் சண்டை போடாத இருக்கணும்கறது தான் என் கவலை.

அது ஆத்துப் பாசனம். மழை நன்னா பெய்ஞ்சா மூணு போகம் நிச்சயமா அந்த நிலம் பலன் தரும். அந்த நிலம் வாங்கினாரே, அவர் மாங்காயும், தேங்காயும் வித்தே காசு சேர்த்தவர். இப்போ நன்செய் வாங்கிட்டாங்க. ஒரு தூக்கு தூக்கிடுவா பாரு. இன்னும் ஆறு, ஏழு தலைமுறைக்கு அவாளை அசைக்க முடியாது."

"அவாங்க மெட்ராஸுக்கு வந்தா சரிப்படாதா?" விஸ்வநாதனின் நண்பர் செட்டியார் கேட்டார்.

"இல்லை தாங்கமாட்டான். தோட்டத்துல கயித்துக் கட்டில் போட்டு படுக்கறவன். ஆத்துலயும் குளத்துலயும் நீந்தி குளிக்கறவன். நூறு சால் ஏத்தம் இறைச்சுட்டு அப்படியே நெட்டுகுத்தலா இணத்துல விழுந்து ஒரு மணி நேரம் தேய்ச்சு குளிச்சுட்டு வீட்டுக்குப் போய் கறிசோறு சாப்பிடறவன். மெட்ராஸ்ல திருவல்லிக்கேணி சந்துல இருந்தா செத்தே போவான்."

"இப்போ ரயில்வேல ரொம்ப கெடுபிடியாமே..."

"இருக்கட்டுமே ரயில்வேயை நம்பிண்டு நாங்க இல்லை. ஆரம்பிச்சுட்டோமேன்னு அங்க கடை வெச்சுண்டிருக்கேன். பசங்களைப் போட்டுதான் வியாபாரம் பண்ணிண்டிருக்கேன். சும்மா மச்சின்ன மேற்பார்வை பார்த்துண்டிருக்கான்."

"விசுவுக்காகத்தான் மெட்ராஸ்ல இடம் பார்க்கறீரோ_"

"ஆமாம்... ரயில்வேயை ரொம்ப நம்ப முடியாது. எப்படி மாயவரத்துல என் பிள்ளைக்காக போட்ட கடை சூடுபிடிச்சுடுத்தோ, அதேமாதிரி மெட்ராஸ்ல போட்ட கடையும் சூடுபிடிக்கும். மச்சினனையும் மாயவரத்துல கடை போடுன்னாக்க அது ஏட்டிக்குப் போட்டியாயிடும். மெட்ராஸ்ல ஒரு கடையும், மாயவரத்துல ஒரு கடையும்னாக்க இன்னும் சந்துஷ்டியா இருக்கலாம். ரொம்ப ஒத்துமையா இருக்கலாம். அதனால்தான் ஒரே இடத்துல கடைபோடாம வேற இடத்துல போடறேன்."

"சரி, திருச்சிராப்பள்ளி மாதிரி இடத்துல போடக் கூடாதா?"

"இல்லை. மெட்ராஸ் ஜனங்கள் வந்து போற இடம். ஓட்டல் சாப்பாடுங்கறது ரொம்ப சௌஜன்யமா போயிடுத்து. வீட்ல நன்னா வடிச்சுத் தின்னாலும் ஓட்டலுக்கு வந்து ஒரு முறுகல் தோசையும், ஒரு வாய் காபியும் குடிக்கற பழக்கம் வந்திடுத்து. திருச்சியில போடலாம். ஆனால், ஓட்டலுக்கு வர ஜனங்கள் கம்மி. மாயவரம் சொந்த ஊர்னு போட்டோம். இனி அடுத்தபடி மெட்ராஸ் அதுதான் நன்னாயிருக்கும்."

சாம்பசிவ சாஸ்திரிகள் விஸ்வநாதனின் நெருங்கிய நண்பரான ஒரு செட்டியாரிடம் விவாதித்துக் கொண்டிருந்தார்.

"சாம்பசிவ சாஸ்திரிகளே ஒரேயொரு கேள்வி..."

"கேளும்."

"வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுப்பான்னு நினைக்கறேளா?" என்று கேட்டார் செட்டியார்.

"சுதந்திரம் யாரும் எப்பவும் தரமாட்டான். தந்ததா சரித்திரம் இல்லை. எடுத்துக்கணும்... பிடுங்கி எடுத்துக் கணும் அடிச்சு எடுத்துக்கணும்."

"நம்மால அடிக்க முடியுமா? நம்ம ஜனங்கள் கோழையாச்சே..."

"வெள்ளைக்காரனை அடிக்க ஆரம்பிச்சுட்டா, ஐரோப்பால சண்டை... முதல் உலகப்போர் ஆரம்பிச்சுடுத்து. அடிபட்ட வெள்ளைக்காரன் இங்க வந்து நம்மள அடிப்பான். நமக்கு கோபம் வரும். நாம பதிலுக்கு அடிப்போம். இன்னும் மூணு நாலு வருஷத்துக்கு உலகத்துல மிகப்பெரிய கொந்தளிப்பு இருக்கு. நிறைய சாவு இருக்கு. கும்பல், கும்பலா ஜனங்கள் செத்துப்போகப் போறா.

"நீர் சொல்றது ஜோசியமா... இல்லை, நாட்டு நடப்பா?"

"ரெண்டும் கலந்ததுன்னு வெச்சுப்போமோ... அதைத் தாண்டியும் இருக்கும்." என்று அடிக்குரலில் சொன்னார்.

"என்ன அதைத் தாண்டியும் இருக்கு?"

"எப்போவெல்லாம் இந்திய தேசத்தை யாரெல்லாம் கஷ்டப்படுத்தறாளோ அப்போவெல்லாம் அவனுக்கு அடுத்த ஒரு ஆறேழு வருஷத்துல மிகப்பெரிய கஷ்டம் வரும்.

பத்து வருஷம் முன்னாடி இந்தியால நாயுடுகளையும், நாயக்கர்களையும் வெச்சு வரிவசூல் பண்ணி அடிச்சு இழுத்துக் கொண்டுபோய் ரொம்ப கடுமையா வெள்ளைக்காரன் நடந்துண்டான். இப்போ அதுக்கு பலன் ஐரோப்பாவில நடந்துண்டிருக்கு. போர் ஆரம்பிச்சுடுத்து.

இங்கிருந்து காசு பறிச்சுண்டுபோய் அங்க வெச்சுண்டு சும்மா இருக்க முடியாது. யுத்தம் ஆரம்பிச்சுதான் ஆகணும். யாராவது யுத்தம் ஆரம்பிச்சா உடனே பாய்ஞ்சுதான் ஆகணும். அந்த புத்திதான் வெள்ளைக்காரனுக்கு. இந்த வருஷம் நிறைய வெள்ளைக்காரா செத்துப்போகப்போறா."

"சரி, என் கேள்வியை இப்படிக் கேட்கறேன். பதில் சொல்லுங்கோ. என்னைக்காவது ஒரு நாள் நம்ம ஊருக்குச்

சுதந்திரம் கிடைக்குமா? நாம, நம்ம தேசம், நமது கொடி, நமது தலைவர்கள், நமது ஆட்சின்னு இருக்க முடியும்னு நினைக்கறேளா..."

"நிச்சயமாய் முடியும்னு நினைக்கறேன். ஆனா, கிட்டக்க இல்லை. ரொம்ப தூரத்துல இருக்கு."

"அதுவரைக்கும் நாமெல்லாம் உயிரோட இருப்போமா..."

"இல்லை இங்க உட்கார்ந்து இருக்கறவா யாரும் உயிரோட இருக்கப் போறதில்லை."

அவர்கள் அமைதியாக இருந்தார்கள். வானம் பார்த்தார்கள். தங்கள் நகம் பார்த்தார்கள்.

"சரி, கிளம்பறேன்." என்றார்கள்.

அன்று நள்ளிரவு சென்னைப்பட்டினத்தில் ஒரு ஜெர்மன் கப்பல் குண்டு போட்டுவிட்டுப் போயிற்று. சென்னைப்பட்டினம் அல்லோல கல்லோலப்பட்டது. குண்டு விழுந்த நாலாம் நாள் சென்னைப் பட்டினத்திலிருந்து மாயவரத்துக்கு வந்த ரயிலில் மூட்டை முடிச்சுக்களோடு பல குடும்பங்கள் இறங்கின.

"நாங்க எங்க கிராமத்துக்கே போயிடறதுன்னு முடிவு பண்ணிட்டோம். மெட்ராஸ் நிச்சம் அழியப் போறது." என்று எல்லோரும் சொன்னார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகளும், விஸ்வநாதனும் அடுத்து வண்டி பிடித்து சென்னைப்பட்டினம் போனார்கள். நான்கு நாட்கள் தங்கினார்கள்.

சென்னைப்பட்டினத்தில் வீடுகளின் விலை சரியத் துவங்கியிருந்தன. வந்த விலைக்கு விற்றுவிட்டு வெளியே போக எல்லோரும் தயாராக இருந்தார்கள்.

கடற்கரையிலிருந்து சற்று தொலைவில் எதிரே கோஷா ஆஸ்பத்திரியில் கொஞ்சம் தெருக்குத்தாய் மிகப்பெரிய ஒரு கட்டடத்தை விலைகொடுத்து வாங்கினார்.

"தெருக்குத்தா இருக்கே அத்திம்பேர்..."

"பரவாயில்லைடா. அது பெரிய தோஷமில்லை. தெரு எதிரே பிள்ளையார் கோவில் கட்டிடலாம். நம்மூர்ல கட்டிமுடிச்ச கையோட இங்க ஒண்ணு அஸ்திவாரம் போட்டுடலாம். வாசல்ல ஒரு ரூமை கோயிலா மாத்திடலாம். இது ரொம்ப சரியான இடம். ஜனங்கள் சாரை சாரையா கடற்கரைக்கு இப்படித்தான் போகறது. கடற்கரையில ஏகப்பட்ட மீட்டிங் நடக்கறது. மீட்டிங் முடிச்சுட்டு இப்படித்தான் கூட்டம் வருது. கொஞ்சம் யோசனை பண்ணா எல்லாரும் இங்கே வந்து இறங்கிடலாம். ஒண்ணும் கவலையில்லை."

"மாயவரத்தை விட்டுடலாங்கறேளா..."

"மாயவரத்துல லேசா ஒரு கால் வெச்சுண்டு. இந்தப் பக்கம் நகர்ந்துடலாமான்னுதான் படறது."

"எப்படி டக்குடக்குனு நகர முடிவு பண்றேள் அத்திம்பேர்?"

"டேய்... நமக்குன்னு ஒரு ஊர். நமக்குன்னு ஒரு மொழி இதெல்லாம் கிடையாதுடா" என்று சொன்னார்.

16

தமக்கை புருஷன் சாம்பசிவ சாஸ்திரிகள் எதிரே விஸ்வநாதன் நின்றுகொண்டிருந்தான். நெஞ்சுக்கு நேரே கைகள் கட்டிக்கொண்டு பேசினான்.

"என்ன சொல்றேள் அத்திம்பேர்...?"

"செம்பனார்கோவில்ல இருந்தோம். சௌகரியமா இருந்தோம். அப்போ ஒரு உத்தியோகம். மாயவரத்துக்கு வந்தோம். அங்கேயும் சௌகரியமா இருந்தோம். அங்க ஒரு உத்தியோகம். எல்லா இடத்தையும் அனுச்சரிச்சுண்டு இருக்கக் கத்துக்கணும்டா. என் மண்ணு, என் பூமி... இதைவிட்டுப் போக மாட்டேன்னு ரொம்ப பிடிவாதமா இருந்தா வளர முடியாது..."

"டெல்லி, பாம்பேனு கூப்பிட்டாக்கூட போயிடுவேளா அத்திம்பேர்..."

"அதுல என்னடா கஷ்டம்...? டெல்லிக்குப் போனா இந்தி பேசப்போறோம். பத்து நாள் உட்கார்ந்தோம்னா, இந்தி தட்டுத் தடுமாறி வந்துடும். ஒரு மாசம் இருந்தா பாஷை புரிஞ்சுடும். பேசறதுக்கும் முயற்சி பண்ணுவோம். ஆறு மாசம் இருந்தோம்னா. அற்புதமா பேசுவோம். ஆறு வருஷம் இருந்தோம்னா இந்தியில கவிதையே எழுது வோம். தமிழுக்குப் பதில், இந்தி, அரிசி சாதத்துக்குப் பதில் சப்பாத்தி. ஒண்ணும் தப்பில்லைடா..."

"அப்போ தமிழ்மொழியோ, தமிழ் தேசமோ முக்கியமே இல்லையா...?"

"பரதகண்டம் முக்கியம். பரத கண்டத்தின் ஒரு பகுதி - தமிழ் தேசம்..."

"பரதகண்டம் தாண்டிப் போகப்படாதுங்கறேளா...?"

"போகலாம்டா... யார் தடுக்கறா..?"

'போனா பாபம்னு சொல்றாளே..."

"போகப் பயந்தவன் சொன்னான். ஆசாரம் போயிடும்னு சொன்னான்..."

"ஆசாரம்கறது என்ன?"

"சுத்தம்... மனசு சுத்தம்... உடம்பு சுத்தம். இதுதான் ஆசாரம். நீ எந்த ஊருக்குப் போயும் மனம் சுத்தமா உடம்பு

சுத்தமா இருக்க முடிஞ்சா, அதுபோதும். உள்ளூர்லயே ஆசாரம்னு சாராயத்தைக் குடிச்சு, சாப்பிடக் கூடாததைச் சாப்பிட்டு இருந்தாக்க என்ன புண்ணியம்...?"

"மனசு சுத்தமா, உடம்பு சுத்தமா இருக்கறதுக்கு என்ன வழி அத்திம்பேர்..."

"வைராக்கியம்..."

"வைராக்கியம் எப்படி வரும் அத்திம்பேர்...?"

"காயத்ரி ஜபம் சொல்றவா அத்தனை பேருக்கும் வைராக்கியம் வரும்..."

"காயத்திரி ஜபம்கறது ஒரு வாக்கியம் தானே. இந்த வாக்கியத்தைச் சொன்னா, நான் வைராக்கியமா இருப்பேனா...? அப்படினு கேட்கறா..."

"இல்லை... அது மூச்சுக்காத்து வெளிவிடற விஷயம் சரியான வாக்கியம் ஒண்ணு இருக்கு. அது சொல்லச் சொல்ல, மூச்சு ஒரு பக்குவத்துக்கு வருது. மூச்சு ஒரு பக்குவத்துக்கு வந்தா, புத்தி ஒரு பக்குவத்துக்கு வந்துடும். புத்தி பக்குவமா இருந்தால் அது கண்ட வம்புல மாட்டிக்காது. பதற்றப்படாது. அதிராது. பதற்றப்படாமல் அதிராமல் ஆவேசப்படாமல் இருந்தாலே தப்பு பண்ண மாட்டோம். என்ன செய்யணும், எப்போ செய்யணும், எது செய்யணும் அப்படிங்கற தெள்ளத்தெளிவான எண்ணம் வந்துடும்.

ஒரு அமைதியான, ஆக்கப்பூர்வமான பலம் கிடைக்கும். நான் அன்னிக்குச் சொன்னதைத்தான் இன்னிக்கும் சொல்றேன். எந்த இடத்துல ஒட்டல் ஆரம்பிச்சாலும் கற்பூரக்கட்டி போடறதுக்கு முன்னாடி, இடுப்புல மடி வேட்டியோடு மேல துண்டு போர்த்திண்டு, அடுப்பு எதிரே உட்கார்ந்துண்டு இருபது நிமிஷம் காயத்ரி ஜபம் பண்ணு.

அப்புறம் கற்பூரக் கட்டி எடுத்து அடுப்புல போடு. உன்னைத் தோற்கடிக்க யாராலும் முடியாது. உன் கைவாகும் யாருக்கும் வராது."

"ரயில்வே ஸ்டேஷனை விட்டுட்டு இங்கே வந்துட்டமே மறுபடியும் குண்டு போட்டுட்டான்னாக்க... கடற்கரை கிட்டக்க இருக்கே..."

"இனிமே குண்டு விழாதுடா..."

"எப்படிச் சொல்றேன் அத்திம்பேர்...?"

"உள்ளே குருவி சொல்றதுடா... மனசு சொல்றது. செவ்வாய் இடம் மாறிட்டான். இனிமே இந்த இடத்துல யுத்த பீதி இல்லை. இனி எல்லா யுத்த பீதியும் ஐரோப்பா வின்மேல தான். இன்னும் இருபது வருஷம் போகட்டும்... இன்னும் பெரிய கூத்து இருக்கு..."

"புரியலையே அத்திம்பேர்..."

"ரயில் கண்டுபிடிச்சுட்டான்... கார் கண்டுபிடிச்சுட்டான்... கப்பல் கண்டு பிடிச்சுட்டான். ஏரோப்ளேன் கண்டுபிடிச்சுட்டான்_ சும்மா இருப்பானா_? கண்டுபிடிச்ச சந்தோஷம், பரபரப்பு வெள்ளைக்காரனுக்கு வந்துடுத்து. அதனால தான் பின்னங்கையைக் கட்டிண்டு என்னை மாதிரி உண்டா, பரம முட்டாள் என்னை மாதிரி உண்டா?ன்னு அலையறான். முட்டாள் பேரவஸ்தைப் படப்போறான்..."

"வெள்ளைக்காரனையா முட்டாள்ங்கறேள்...?"

"சர்வநிச்சயமா முட்டாள். அழியறதுக்குன்னே ஆரம்பிச்சு பஸ்மாசுரன் அவன். மத்தவாளையும் அழிச்சு, தானும் அழியப் போறான். குள்ளநரித் தந்திரம் அதிகம். நம்ம ஊர் அவனால கஷ்டப்படாத இருக்குமா...? கஷ்டப்படும். இவங்கிட்ட மாட்டிண்டு, ஒரு குறிப்பிட்ட காலம் அவஸ்தைப்படும். ஆனால் இங்கே ஏற்படப்போற

அவஸ்தை தாங்காத துண்டைக் காணும், துணியைக் காணும்னு ஊரைவிட்டு ஓடப்போறான்..."

"அத்திம்பேர், எனக்குக் குழந்தைகள் இருக்கே... சதாசிவனுக்குக் குழந்தைகள் இருக்கே அவாளையெல்லாம் என்ன பண்றது...? பொம்மனாட்டி குழந்தைகளைப் படிக்க வைக்கலாமா...? பசங்களை ஓட்டல்ல போடலாமா...? இல்லை... டாக்டருக்குப் படி, இன்ஜினீயருக்குப் படின்னு சொல்லலாமா...?"

"பொம்மனாட்டி குழந்தைகளை எட்டாவது வரைக்கும் படிக்க வை. அப்புறம் கல்யாணம் பண்ணிக் கொடுத்துடு. பெரியவனை ஓட்டல்ல போடு. அடுத்தவனை வக்கீலுக்குப் படிக்க வை. சதாசிவனின் குழந்தைகளை இங்கே கூட்டி வெச்சுண்டு, அவாளை டாக்டருக்கோ இன்ஜினீயருக்கோ படிக்க வை இங்கிலீஷ் கரைச்சுக் குடிக்கணும்னு கட்டளை போடு. சம்ஸ்கிருதம் ரொம்ப முக்கியம்னு சொல்லு. தமிழும் கத்துக்கட்டும்..."

"அத்திம்பேர், மெட்ராஸ்ல பிராமணாள் சாப்பிடும் இடம் தனியா போடணுமா...?"

"வேண்டாம். போட மாட்டேன்னு சொல்லிடு. எங்க வேணாலும் யார் வேணாலும் உட்காரலாம்னு சொல்லு. தைரியமா எல்லோருக்கும் ஒரே இடம்னு ஆரம்பி. மாயவரம் மாதிரி பெஞ்சு போடாதே. சலவைக்கல் மேஜை, மர நாற்காலி, அங்கங்க கண்ணாடி, நல்ல விளக்கு. சுவர் முழுக்கச் சித்திரங்கள் அப்படின்னு பிரமாதம் பண்ணு. ஊதுவத்திக் கொளுத்திவை. பசங்களைத் தினம் சாயந்திரம் இடத்தைப் பெருக்கி, மெழுகி வைக்கணும்னு சொல். ஓட்டல்ல துர்வாசனையே வரப்படாது.

"அந்த அளவுக்குக் காசு இருக்காதே அத்திம்பேர்... எல்லாத்தையும் கட்டடம் வாங்கறதுல விட்டுட்டோமே..."

"வழக்கம்போலக் கட்டடத்தை அடமானம் வைப்போம். ஒரு லட்சம் கடன் வாங்குவோம்..."

"அத்தனை தர்றதுக்கு இங்கே யார் இருக்கா?"

"இருக்கா... மார்வாடிகள் இருக்கா. சௌகார் பேட்டைன்னு ஒரு இடம் இருக்கு. காத்துண்டு உட்கார்ந்துண்டிருக்கா. நல்ல நாணயமான ஆட்கள் வரமாட்டாளான்னு பார்த்துண்டிருக்கா. அள்ளி அள்ளிக் கொடுத்துருவான்..."

அவர்கள் சௌகார்பேட்டைக்குப் போனார்கள். சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு மிக மரியாதையான வரவேற்பு அங்கு இருந்தது. காசு கிடைத்தது.

மாயவரம் வந்தவுடன், அவரை ஊர் சுற்றிக்கொண்டது.

"எம்டன் குண்டு போட்ட இடம் பார்த்தேளோ...?"

"ஆஹா... பார்த்தோம். தேர்வு நடக்கற இடம். எக்ஸாமினேஷன் ஹால்னு பேரு... அடிச்சு நொறுக்கியிருக்கான். அவன் இருந்தது எங்கேயோ... எங்கிருந்தோ மைல்கணக்குல குண்டு பாய்ஞ்சு வந்து விழுந்தது. ஸ்டேஷன்லேர்ந்து இங்க அடிச்சோம்னா, இந்த இடம் தூள்தூளாயிப் போயிடும். சொடக்கு நேரத்துல இந்த இடத்தை நாஸ்தி பண்ணிட முடியும்..."

"ஜெர்மன்காரன் உள்ளே வந்துருவானோ?"

"வரமாட்டான்யா... இனிமே வேற யாரும் இந்தியாவுக்குள்ளே வர முடியாது. வெள்ளைகாரன்தான் கடைசி..."

"என்ன... இவ்வளவு தெளிவா சொல்றீர்"

"பாரதமாதா ஜாதகம் என்கிட்ட இருக்கு. அதைப் பார்த்துட்டுத்தான் சொல்றேன்..."

ஒரு வருஷத்துக்குப் பிறகு கிராமத்துக்கு ஓடிய ஜனங்கள் மறுபடியும் சென்னைப் பட்டினத்துக்கு வந்தார்கள். மீண்டும் விலை ஏறியது. மிகக் குறைந்த விலையில் விற்று விட்டதாக அந்தக் கட்டடக்காரன் வந்து அழ, அவனுக்கு

மேலும் சிறிது காசு கொடுத்து விஸ்வநாதன் அனுப்பினான்.

தஞ்சாவூர் சமையல் என்று அறிவித்து, காகிதத்தில் அச்சடித்து திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் முழுவதும் விநியோகித்து, பதினைந்து நாட்களுக்குப் பிறகு பேண்டு வாத்தியத்துடன் நாதஸ்வரக் கச்சேரியுடன் ஓட்டல் துவங்கினான். மூன்றாவது பிள்ளையின் பெயரை ஓட்டலுக்கு வைத்தான். 'முரளி கபே' என்று அந்த ஓட்டலில், தமிழில் பெயர் எழுதப்பட்டது. ஆங்கிலத்தில் மரத்தால் செதுக்கி அமைக்கப்பட்டது.

நாள் தவறாமல் கூட்டம் சாய்ந்தது. எவ்வளவு பால் வாங்கியும், எவ்வளவு காபிப்பொடி வறுத்தும் போதவில்லை.

முரளி கபே காபி என்றால் தனி ருசி, மணம் என்று பெயர் பெற்றது. அலுவலகத்தில் வேலைக்குப் போகும் ஐயர்களிடம் காசு இருந்தது. அவர்கள் சாப்பிடத் தனியே இடம் வேண்டும் என்று கேட்ட போது, சாம்பசிவ சாஸ்திரிகள் பணிவாக மறுத்துவிட்டார்.

"அந்த மாதிரியெல்லாம் கேட்காதிங்கோ... முதலியார்களுக்கும், பிள்ளைமார்களுக்கும் இது ரொம்பக் கோபத்தைக் கொடுக்கும்." என்றார்.

உள்ளே வரமாட்டேன் என்று சூளுரைத்துப் போனவர்கள், அடுத்து மூன்றாவது வாரமே வெட்கமின்றி வந்து நின்றார்கள்.

இதனால் சென்னையிலுள்ள முதலியார்களுக்கும் சாம்பசிவ சாஸ்திரிகள் மீது ஒரு பிரியம் ஏற்பட்டது.

வியாபாரம் சூடுபிடித்தது.

விஸ்வநாதனின் குழந்தைகளும் சதாசிவனின் குழந்தைகளும் சென்னைக்கு வந்து, திருவல்லிக்கேணி இந்து ஹைஸ்கூலில் சேர்ந்தார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அங்குள்ள

ஆசிரியர்கள் தனித்த அக்கறையோடு பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களை வரவழைத்து மாதந்தோறும் விஸ்வநாதன் உபசரித்தான்.

"கொஞ்சம் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் அக்கறையா சொல்லிக் கொடுங்கோ" என்று வேண்டினான்.

"டியூஷன் வெச்சுடுங்கோ விஸ்வநாதன்..."

"எப்போ டியூஷன்...?"

"நான் கார்த்தால ஆறுமணிக்கு வந்துடறேன். குழந்தைகளை நான் உங்க வீட்டு மொட்டை மாடிக்குக் கூட்டிண்டு போய் யோகா சொல்லித் தரேன். இங்கிலீஷ் சொல்லித் தரும்போதே, தமிழும் சொல்லித் தரேன். நல்ல விஷயங்கள் சொல்லித் தரேன். பதிலுக்கு எனக்கு ஒரு உதவி செய்யணும்..."

"என்ன... என்ன செய்யணும்? சொல்லுங்கோ..."

"என் பொண்டாட்டிக்கு உடம்பு சரி இல்லை. அவளால சரியா சமைக்க முடியலை. எங்க ரெண்டு பேருக்கும் கொஞ்சம் ஓட்டலேர்ந்து சாப்பாடு அனுப்பிடணும்..."

"ஆஹா. அதைவிடப் பெரிய வேலை உண்டா. தினம் கேரியர்ல உங்களுக்குச் சாப்பாடு வந்துடும். கவலை வேண்டாம். என் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுங்கோ. அதுபோதும்..."

"நிறையச் சொல்லித் தரேன். ஏகப்பட்ட விஷயம் சொல்லித் தரேன்..."

அந்தக் குழந்தைகளுக்கு அற்புதமான ஆசான் கிடைத்தார். அந்த ஆசானின் சோற்றுக் கவலையை விஸ்வநாதன் சுமந்துகொண்டான்.

ஓட்டல் வைப்பது எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம் என நினைத்துக் கொண்டான்.

சாம்பசிவ சாஸ்திரிகளை மனதுக்குள் போற்றினான்.

ஆனால், சதாசிவனின் நிலைமை வேறாக இருந்தது. பிரிட்டிஷ் போலீஸார் நேரே வந்து, ஒவ்வொரு பெரிய ரயில்வே ஸ்டேஷனிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தினார்கள்.

டிக்கெட் இல்லாமல் பயணம் செய்பவர்களைக் கடுமையாகத் தண்டித்தார்கள். கீழே இறக்கிக் கன்னத்தில் அறைந்தார்கள். டிக்கெட் இல்லையா, பரவாயில்லை என்று சொல்லி, நாலு ஸ்டேஷன் தாண்டியதும் அங்குள்ள போலீஸாரிடம் கூப்பிட்டு ஒப்படைத்தார்கள். நடு ஸ்டேஷனிலேயே குண்டாந்தடியால் டிக்கெட் இல்லாத பயணிக்குச் சாத்துமுறை நடந்தது. மக்கள் கற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

"யாராவது வாலாட்டுனீங்க..." என்று ஒரு போலீஸ் காரன் மிரட்டிக்கொண்டு போக, அவனை எதிர்த்து எவராலும் பேசமுடியவில்லை.

சதாசிவனுக்குப் பத்து நாள் ரயில்வே கடை இல்லாமல் போயிற்று. மறுபடியும் ஒரு வைப்புத்தொகை கொடுத்தால் தான் கடை திறக்கமுடியும்' என்று சொல்லப்பட்டது. அவ்வப்போது வந்து சோதனை போடுவோம் என்ற எச்சரிக்கப்பட்டது.

ரயிலில் பயணிகள் சற்று குறைந்தார்கள். அந்த மாநாடு, இந்த மாநாடு என்று பலதும் இருக்கிற ஒரு ஊரில் திருவிழாக்களுக்குக்கூட மக்கள் ஒன்றுகூடுவது சிரமமாக இருந்தது. அங்கேயும் போலீஸ் கண்காணிப்பு அதிகமாக இருந்தது.

சதாசிவன் ரயில்வே கான்டீனை அதிகம் கவனிக்காமல், அதைத் தன் ஊழியன் ஒருவனிடம் கொடுத்துவிட்டு, மாயவரத்திலுள்ள ஓட்டலைக் கவனிக்கத் துவங்கினான்.

ஒருமுறை பட்டணத்துக்கு சங்கரியோடு போய்விட்டு வந்தான். திருவல்லிக்கேணியில் நடக்கிற விஸ்வநாதனின் ஓட்டலைப் பார்த்துத் திகைத்தான்.

காலை ஆறு மணிக்கு மிகப் பெரிய கூட்டம் போல நாற்பது, நாற்பத்தைந்து பேர் காபி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஐந்தேகால் மணிக்கு வந்து கதவு திறக்கும் முன்னரே, ஓட்டல் படியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

பிற்பகல் ஓட்டலில் இன்னும் கூட்டம் அதிகமாக இருந்தது. நின்று காத்திருந்து சாப்பிட்டுவிட்டு போனார்கள். சாப்பாட்டுக்குக் கொடுத்த பித்தளை டோக்கனை சாப்பிட்டுக் கொண்டிருப்பவர் மேஜையில் வைத்துவிட்டு ஓரமாக நின்றுகொண்டார்கள். அவர் போனதும் எச்சில் இலை முன்பு உட்கார்ந்து கொண்டார்கள். இலை எடுத்ததும் அவர்கள் இலை போட்டுச் சாப்பிட்டார்கள்.

ஒரு பெரிய அவசரம்... அதே நேரத்தில் ஓட்டல் மிக அவசியம் என்கிற ஒரு பரபரப்பு அங்கு இருந்தது. அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தன்னுடைய சங்கரபவன் வெறுமே முதுகு சொறிந்து கொண்டிருப்பதை சதாசிவன் உணர்ந்தான்.

'காலையில் ஒரு பத்துப் பேர் சாப்பிடுகிறார்கள். டிபனுக்கு ஒரு முப்பது, நாற்பது பேர் வருகிறார்கள். பிற்பகலில் ஒரு அறுபது இலை விழுகிறது. அதற்குப் பிறகு மாலை டிபனுக்கு நாற்பது பேர் வருகிறார்கள். இதற்குமேல் தாண்டவில்லை... ஊர்வலம், திருவிழா என்றால், அப்போது கொஞ்சம் கூட்டம் வருகிறது. இதற்கு ஓட்டல் நடத்த வேண்டுமா...?" என்று சதாசிவனுக்குக் கேள்வி வந்தது.

மகன் மாயவரத்துக்கு லீவுக்கு வந்திருந்தபோது, அவன் எதிரில் உட்கார்ந்து கொண்டான்.

"பெரியவனாய் ஆனபிறகு நீ என்ன பண்ணப் போற...?" என்று கேட்டான்.

"உன்னை மாதிரியே ஓட்டல்ப்பா... -அப்பா ஓட்டல் எடுத்துப் பெரிசா கட்டி, நன்னா கொண்டு வரணும்' அப்படினு தாத்தா சொல்லியிருக்காளே..."

"இல்லைடா... நீ ஓட்டலுக்கு வரவேண்டாம்.'

"ஏன்...?"

"ஓயாத வேலை..."

"அதனால என்னப்பா...?" -பதினைந்து வயது பிள்ளை வைத்தீஸ்வரன் கேட்டான்.

17

வயதுதான் சிறிதே தவிர, வைத்தீஸ்வரன் மிக மிக சூட்டிகையாய் இருந்தான். படிப்பு தவிர மனிதர்களை எடைபோடும் விஷயத்தைப் பழக்கப் படுத்திக் கொண்டிருந்தான். சிறுவயது வெகுளித்தனம் அறவே அவனிடம் இல்லை.

"உங்க அம்மாவுக்கு ஒழிச்சலே இல்லைடா. கோயில், குளமே போக முடியலை. என்னாலயும் ஓட்டலை விட்டுட்டு எங்கேயும் நடக்க முடியலை. ரெண்டு நாள் நகர்ந்தா ஏதாவது காணாமப் போகறது. ஜனங்களை நம்பி, வேலை செய்கிற ஆட்களை நம்பி, ஓட்டலை நடத்த வேண்டியிருக்கு. குறுக்கேயும் நெடுக்கேயும் போகறபோது முழுசா மூணுகோதுமை அல்வா வாயில போட்டுக்கறான். எவ்வளவுதான் கண்குத்திப் பாம்பா இருக்கறது. எனக்கு ஓட்டல் வரவர பிடிக்கலை. நீ ஓட்டலை நம்பாதே." என்றான் சதாசிவன்.

"வேற என்னப்பா பண்றது...?"

"திருவல்லிக்கேணியில வந்து சாப்பிடறவாள பார்த்தேண்டா, கோட்டு, தலைப்பாகை, கையில வாட்ச், கண்ல கண்ணாடி, அடா- அடா- என்னமா இங்கிலீஷ் பேசறா. பாண்ட் ஷூல்லாம் போட்டுக்கறாடா. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அந்த மாதிரி வேலைக்கு நீ போகக் கூடாதா-?"

"ஓட்டல்ல நிறைய காசு இருக்கேப்பா?"

"இல்லைடா. காசு வந்தாலும் பிடுங்கல் அதிகம். கம்பீரமாக போய் கோட்டையில உட்கார்ந்து அதே காசை நீ அள்ளிடலாம். நன்னா இங்கிலீஷ் படி. உன் இங்கிலீஷுக்கே வெள்ளைக்காரன் உன்னை கண்டேன், கண்டேன்னு கொத்திண்டு போயிடுவான்."

பிள்ளை சரி என்று தலையசைத்தான்.

ஓட்டல் வாசலில் உள்ள ஆதிசங்கரர் சிலைக்கு அன்றைக்கு புது வஸ்திரம் போட்டு புதுமாலை போட்டு சந்தனக் குங்குமம் இட்டு அப்பாவும், பிள்ளையும் நமஸ்கரித்தார்கள்.

"எங்களுக்குச் சோத்துக்கடை போதும்- வேற வேலை கொடு. நாங்க இஷ்டப்பட்ட கோட்டையில உத்தியோகம் கொடு-" என்று ஆதிகுருவைக் கைகூப்பி வேண்டினார்கள்.

பூ உதிர்ந்தது.

ஆங்கிலம் ஒன்றும் கடினமான மொழியாக இல்லை. இருபத்தாறு எழுத்துக்களில் எளிமையான இலக்கணத்தோடு அந்த மொழி பலமான கட்டமைப்போடு இருந்தது. அதன் கவிதைகள் கிறங்கடித்தன.

"நான் ஒரு மேகம் போல் அலையப் போகிறேன்." என்ற வேர்ட்ஸ் வொர்த் கவிதையொன்று டெஃபோடில்ஸ் என்ற பூக்களைப் பற்றி விவரித்தது. அந்தக் கவிதையைப் படித்து விட்டு வைத்தீஸ்வரன் வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

இந்தியாவில் நாற்றுக்கு நாற்பது ஆண்கள் மேகம் போலத்தான் எந்தப் பிடிப்புமின்றி அலைகிறார்கள். கஷ்டப்பட்டு உழைக்கச் சொன்னால் வல்லடியாய் பேசுவார்கள்.

உற்சாகப்படுத்தியவனை முகத்தில் கைவைத்துப் புறம்தள்ளிவிடுவார்கள். எங்கே சோறு போடுகிறார்களோ, அங்கே போய் நின்றுகொள்வார்கள். எங்கே கச்சேரியோ அங்கு போய் உட்கார்ந்து கொள்வார்கள். உணவும் சங்கீதமும், நாடகமும், ஊர்வம்பும் ரசனையோடு அனுபவிப்பார்கள். ஆனால், உத்தியோகம் மட்டும் அவர்களால் செய்ய முடியவில்லை.

வேலைக்கு அடிக்கடி தாமதமாக வந்தார்கள். லீவு கேட்டார்கள். வேலைக்கு வந்தபிறகு, சிரத்தையில்லாமல் செய்தார்கள். வாய் நிறைய வெற்றிலைப்பாக்குப் புகையிலை போட்டுக்கொண்டு கண்கிறங்க நின்றார்கள். மத்தியானம் உச்சி வெயிலில் தூங்கினார்கள். நிறைய தூக்கம். நிறைய பேச்சு, நிறைய சாப்பாடு என்று வாழ்ந்தார்கள். எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் வெறுமே தடித்தடியாய் வளர்ந்து வந்தார்கள். ஆனால், வெள்ளைக்காரனைக் கண்டால் பயந்து நடுங்கினார்கள். அவனைப் பார்த்தவுடன் 'யெஸ் சார்... நோ சார்..." என்று உளறினார்கள்.

மிகக் கெட்டிக்காரர்களான சில பேர் தன்னுடைய கூர்மையான மதியினால், அந்த வெள்ளைக்காரன் என்ன கேட்பான்- என்ன விரும்புவான் என்று தெரிந்துகொண்டு நிறைவேற்றி வைத்தார்கள். 'துரை நாலு தேக்குமரம் கட்டில் செய்ய வேணும்ங்கு கேட்கறான். அவன் ஜில்லா கலெக்டரய்யா. காசை கிசை கேட்டுறாத... அப்புறம் ஏதாவது அவன் லொங்கடா பண்ணி உன்னை மாட்டி விட்டுருவான். கொண்டுவந்து நாலு மரம் நீயே வண்டிச் சத்தம் கொடுத்து இறக்கி விட்டுடு."

கெட்டிக்காரர்கள் உழைப்பாளிகளை வளைத்துக் கொண்டார்கள்.

"உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்கோ. நான் துரைகிட்ட பேசி ஏற்பாடு பண்றேன். மயிலாப்பூர்ல திருவிழா நடக்கணும். அவ்வளவுதானே. அதுக்கு போலீஸ் பந்தோபஸ்து வேணும்... அவ்வளவுதானே. நான் ஏற்பாடு பண்றேன். கமிட்டியில் யார் யார் இருக்கா? என்னை சேர்மனா எல்லாம் போட்டுறாத. எனக்கு அவ்வளவு பெரிய பொறுப்பெல்லாம் தாங்காது."

ஜனம் புரிந்துகொண்டது. "நீங்கதான் இருக்கணும். நீங்கதான் இருக்கணும்." என்று கெஞ்சியது. அவரும் சரி என்று சொன்னார்.

உடனே அவரை சேர்மனாக்கி ஏகமனதாக மயிலாப்பூரின் கோயிலின் சர்வாதிகாரியாக நியமித்தார்கள். அவர் நேரம் பார்த்து நிலமை பார்த்து கலெக்டரிடம் போனார். "மிஸ்டர் விண்டன், ஒன் ஸ்மால் அப்ளிகேஷன்..." என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்தார்.

உறைபனி ஊரிலிருந்து வந்தவன் இந்த உச்சிவெயில் தாங்காமல் தவித்தான். முகம் சிவந்துபோனான். உடம்பெல்லாம் பொரிப்பொரியாக அரிப்புத்தாங்காமல் கத்தியால் கீறிக்கொண்டான்.

"இதுக்கு ஒரு லோக்கல் மெடிசன் இருக்கு." என்ற அவர் சந்தனத்தைப் பன்னீரில் தோய்த்து அவன் உடம்பெல்லாம் தடவினார். முதுகெல்லாம் தடவினார். மெல்லிய துணியை மேலே போர்த்தினார். அவன் அறையைச் சுற்றி நீரில் நனைத்த துணிகளைப் போட்டு அந்தத் துணிகளில் பன்னீரைத் தெளிக்கச் செய்தார். ரோஜாப்பூ மணம் அறையெல்லாம் வீசியது. அவன் மனைவியும், குழந்தைகளும் அந்தக் குளிர்விக்கப்பட்ட அறையில் உட்கார்ந்து கொண்டார்கள். பங்கா இழுப்பதற்கு மூன்று பேர் மாற்றி மாற்றி ஏற்பாடு செய்தார். பங்கா சத்தம் போடாமல்

இருக்க ஏணி போட்டு மசக்கு எண்ணெய் ஊற்றினார். குளுமையான வாசனை, வேகமான பங்கா. பெரிய அறை. உடம்பெல்லாம் சந்தனம். அவன் சந்தோஷமாக இருந்தான்.

"எனக்கு ஒரு ஸ்மால் அப்ளிகேஷன்..."

'டெல் மீ...'' அவன் புன்னகையோடு அவரை நோக்கினான்.

மயிலாப்பூர் திருவிழா பற்றியும், அதனுடைய முக்கியத்துவம் பற்றியும் கதை போலச் சொல்ல, அவன் மனைவியும், குழந்தைகளும் வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"வாட் இஸ் கரகாட்டம்..." பெண் கேட்க, அவர் கோட்டைக் கழற்றிவிட்டு எப்படிக் கரகாட்டம் ஆடுவதென்று ஆடிக்காண்பித்தார். அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

கலெக்டர் திருவிழாவுக்குச் 'சரி' என்று சொன்னான்.

அவர் தயாராகக் கொண்டுவந்திருந்த இரண்டு காகிதங்களை நீட்டினார். அவன் இரண்டிலும் கையெழுத்திட்டான்.

"என் மனைவி, மக்களை அங்கு கொண்டுபோய் வேடிக்கை காட்டிப் பத்திரமாகத் திருப்பி அனுப்ப முடியுமா...?"

"இதைவிடப் பெரிய வேலை எனக்கென்ன இருக்கிறது...? கபாலியைத் தூக்க என் நண்பர்கள் இருக்கிறார்கள். உங்கள் மனைவியையும், குழந்தையையும் கருடன் போல நான் தூக்கிக்கொண்டு போய் கபாலியைத் தரிசனம் பண்ண வைத்து மறுபடியும் வருகிறேன்..." என்றார்.

"வாட் இஸ் கருடன்...?" குழந்தை கேட்டது.

அவர்கள் எல்லோருமே கதை கேட்டார்கள். அவருக்கு மிக ஸ்நேகிதமாக மாறினார்கள்.

அந்த மயிலாப்பூரில் நூறுபேர் கொண்ட சபைக்கு முன்னால் அவர் கம்பீரமாக உட்கார்ந்தார்.

"துரை சாங்ஷன் கொடுத்துட்டான். நான் அகடவிகட மெல்லாம் பண்ணி சாங்ஷன் வாங்கிட்டேன்." -கூட்டம் எழுந்து நின்று கைத்தட்டியது.

வடமொழியும் தமிழும் பேசிக்கொண்டிருந்தவர்கள் வாழ்க்கையில் ஆங்கிலம் வேகமாகக் கலக்கலாயிற்று. ஆங்கிலம் பேசுவதில் அவர்கள் சுகம் கண்டார்கள்.

சதாசிவனின் மூத்த பிள்ளையான வைத்தீஸ்வரன், இந்த மனிதர்களைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தான். கலெக்டருக்கு அடுத்த படியாக இருக்கிற அந்த துபாஷின் பெருமை மயிலாப்பூர் முழுவதும் கொடிகட்டிப் பறப்பது, அவர் கலெக்டர் உபயோகித்து ஒதுக்கிய கோச் வண்டியில் கோட்டையை நோக்கிப் போவதும் ஒரு கச்சேரியில் எல்லோரும் தரையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்க, இவர் மட்டும் முன்வரிசையில் நாற்காலி போட்டு அமர்ந்து கேட்பதும் வைரக்கடுக்கன் மின்னிச் சிரிப்பதும் வெற்றிலைப் பெட்டி தூக்கவும், பணப்பெட்டி தூக்கவும் தனித்தனியாக இரண்டு ஆள் வைத்துக்கொண்டிருப்பதும், நாட்டியப்பெண்கள் அவரைச் சந்தனம் கொடுத்து வரவேற்றதும் கழுத்தில் மாலை அணிவித்ததும், தலையில் மலர் தூவியதும், அவருக்கு மஞ்சள், குங்குமம் இட்டதும் பார்த்து வியந்து போனான். தனக்கு இப்படி ஒரு யோக்கியதை வரவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

அவன் அப்பா சதாசிவன் 'ஓட்டல் வேலை வேண்டாம். கோட்டைக்கு அதிகாரியாகப் போய்விடு.' என்று திரும்ப திரும்பச் சொன்னதும் அவன் ஞாபகத்தில் இருந்தது.

விடியலில் எழுந்து ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தான். கவிதைகளைக் கால்புள்ளி அரைப்புள்ளியோடு மனனம் செய்தான்.

தமிழ் பேசத் தெரியும், படிக்கத் தெரியும். வடமொழியில் நல்ல புலமை. ஆங்கிலத்தில் அபாரத் திறமை. அவன் நண்பர்கள் அவனைக் கண்டு வியந்தார்கள்.

"இட்ஸோட அத்தனை கவிதைகளையும் மனப்பாடமா சொல்றியே... எப்படி...?" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

"ஏன், உனக்கு ஓட்டல் வேண்டாமா...?" வைத்தீஸ் வரனின் இருபது வயதிலும் கேள்வி கேட்டார்கள்.

'வேண்டாம்..."

"நிச்சயமாவா...?"

"நிச்சயமா..."

"இது என்னோடது இல்லைடா... உங்க கொள்ளுத் தாத்தா சொத்து..." விஸ்வநாதன் மறுபடி கேட்டார்.

"என்னுடைய கொள்ளுத்தாத்தா சொத்து ஓட்டல் இல்லை. சம்ஸ்கிருதமா இருக்கு. இங்கிலீஷா இருக்கு. படிப்பா இருக்கு. அந்தச் சாமர்த்தியத்துல துளி என்கிட்ட ஒட்டிண்டிருக்கு. அந்த ஞாபகச்சக்திதான் என்னை இந்த அளவுக்குத் தூக்கி நிறுத்தறது. நான் பி.ஏ.-வுல கோல்டு மெடல் வாங்கறதுக்குக் காரணமே தாத்தாதான்..."

"நீ எம்.ஏ. படிக்கப் போறயா...?"

"நிச்சயமா..."

"எதுக்குடா...? போய் வேலையில் சேர்ந்துடு... வயசாறதே..."

"பி.ஏ. படிச்சா வேலை கிடைச்சுடும். எம்.ஏ.வா. இருந்தாக்க, வெள்ளைக்காரன் மிரளுவான்..."

"உன்னால வெள்ளைக்காரனை மேக்கடிச்சு வர முடியும்னு நினைக்கிறயா...?"

"வந்தே ஆகணும். வேற வழியில்லை..."

"ஓட்டல் உனக்குப் பிடிக்காமப் போயிடுதாடா...?" விஸ்வநாதன் பேரனை மறுபடியும் கேட்டார்.

"இல்லை..."

"உன் அப்பா சதாசிவன் என்ன சொல்றான்...?"

"இத்தனை கஷ்டப்பட்டு இந்த ஓட்டல் வருமானம் தேவையில்லை. ஆத்துல இருக்கற பொம்னாட்டியெல்லாம் பேரவஸ்தைப் பட்டு, இந்தக் காசு சம்பாதிக்க வேண்டியிருக்கு. எப்போ வேணாலும் கவிழ்ந்து போகறது. எங்கேயோ வாஞ்சிநாதன் யாரையோ கூட்டுக் கொன்னுட்டான். இங்க நம்ம கடை மொத்தமும் காலியாயிடுத்து. அடுத்த வருஷம் கடை வைக்க முடியாமப் போயிடுத்து. அதனால பத்து மணி ஆபீஸ், அஞ்சு மணிக்கு வீடு அப்படிங்கற உத்தியோகம் போதும். இந்த உத்தியோகத்துல சம்பளமும் நிறைய, கிம்பளமும் நிறைய..."

"உத்தியோகம் போகறதுக்கு முன்னாடியே கிம்பளம் வாங்கறதா தீர்மானம் பண்ணிட்டியா..? வெள்ளைக்காரனுக்குத் தெரிஞ்சா கொன்னு, குழிவெட்டிப் புதைச்சுடுவான்."

"இல்லை. காசா வாங்கினாதான் அது லஞ்சம். வெள்ளைக்காரன் கட்டிலுக்கு நாலு தேக்குமரம் கேட்டான். ஒரு மரத்துல நாலு கட்டில் பண்ணலாம். அவர் ரெண்டு கட்டில் பண்ணி வெள்ளைக்காரனுக்குக் கொடுத்துவிட்டு, மிச்ச மரத்தையெல்லாம் ஆத்துக்கு எடுத்துண்டு போயிட்டார். நிலைப்படி, மேல்உத்திரம், பீரோ, கட்டில் மனைக்கட்டை அப்படினு நிறைய பண்ணிண்டார். காலணா செலவில்லாம இத்தனை விஷயமும் கிடைச்சுது..."

"செய்கூலி வேண்டாமா...?"

"ஆமாம்... அதையும் வெள்ளைக்காரன் கிட்டேயிருந்த வாங்கிக் கொடுத்துட்டார். ஒரு கட்டில் பண்றதுக்குத் தச்சன் பன்னண்டு ரூபா கேட்டான். ரெண்டு கட்டில் பண்ணட்டுமானு வெள்ளைக்காரனை இவர் கேட்டார். துரை சரின்னு சொன்னான். நூறு ரூபாய் ஆகுமே, பரவாயில்லையான்னு கேட்டார். அவ்வளவுதானே, எடுத்துக்கோன்னுட்டான்.

நூறு ரூபா காசு எடுத்துண்டு போய் நல்ல கடசல் கட்டிலா அவன்கிட்ட கொடுத்தவுடனே, அவன் அலண்டு போயிட்டான். தான் லண்டன் போறபோது இந்தக் கட்டிலையும் லண்டனுக்குத் தூக்கிண்டு போவேன்னான். அத்தனை வேலைப்பாடு. அத்தனை அழகு அந்தக் கட்டில்.

மாசா மாசம் அந்த மரவேலை செய்யறவருக்கு மயிலாப்பூர் உத்தியோகஸ்தர் ஏதாவது வேலை கொடுத்துண்டே இருந்தார். அந்தத் தொழிலாளி இப்போ வேலை செய்யறதே இல்லை. நாலு ஆள் வெச்சு வேலை செய்ய ஆரம்பிச்சு, அவன் சொந்த வீடு வாங்கிண்டுட்டான். ஆக வெள்ளைக்காரங்கிட்ட வேலை செய்யற துபாஷியும் பிழைச்சு, துபாஷி மூலமா ஒரு பத்துப் பேரும் பிழைக்கற ஒரு உத்தியோகம். நான் உத்துப் பார்த்துண்டேதான் இருக்கேன்..."

"உனக்கு ஓட்டல் கொஞ்சம் இளக்காரமா போயிடுத்தா...?"

"இல்லை தாத்தா. அதுதான் நம்மள உசரவெச்சுது. நீங்க ஆரம்பிச்சு அப்பாவுக்குக் கொடுத்தேள். அந்த ஓட்டல் உங்களுக்கு. அப்பா, ஓட்டல் எனக்குன்னா நான் மாயவரத்துக்குப் போய் உட்காரணும். எனக்கு மாயவரம் முக்கியமா படலை. இனி மாயவரத்துல ஒண்ணுமில்லை. நிலம், நீச்சு, தோப்பு தொறவுன்னு இருந்த போது மாயவரம்

நல்ல சென்டர். எல்லா நிலத்தையும் வித்துட்டு, மாயவரம் எங்க ஊருன்னா எப்படின்னே எனக்குத் தெரியலை..."

"அப்போ உன் ஊர் எது-? இந்த திருவல்லிக்கேணியா-?"

"இல்லை. திருவல்லிக்கேணியில நெரிசல். நான் கொஞ்சம் தள்ளி மயிலாப்பூருக்குப் போயிடப் போறேன். மயிலாப்பூர்தான் என் ஊர்..."

"உத்தியோகத்துக்கே போகலை. ஒரணா காசு சம்பாதிக்கலை. அதுக்குள்ளேயே மயிலாப்பூர்ல வீடு வாங்குவேன்னு எப்படிடா சொல்றே-? உன்னை நினைக்க நினைக்க ஆச்சரியமா இருக்கு-" விஸ்வநாதன் அதிர்ந்தபடி உட்காந்திருந்தார்.

"மயிலாப்பூருக்கு வடக்கே கச்சேரி ரோடுன்னு ஒரு இடம் இருக்கு. அங்க சின்னச் சின்னதா தோப்பும் தொறவும் இருக்கு. அஞ்சு நிமிஷம் வேகமா நடந்தா கோயில். அதே சமயம், கூட்டம் அதிகமில்லாத இடம். ராத்திரி ஆறு, ஏழு மணிக்குத் தெரு அடங்கிடும். நேரா போனோம்னா சந்தோம் சர்ச், படியிறங்கினா பெரிய பீச். வெள்ளைக்காரன் அந்த பீச்சுக்குத்தான் வாரான். திருவல்லிக்கேணி கூட்டங்களெல்லாம் இல்லாம, அமைதியா இருக்கு அந்த இடம்..."

"உனக்கு இப்பவே காசு தரட்டுமா...? ஒரு வீடு வாங்கிக்கிறியா...?"

"கொடுங்கோ தாத்தா- எனக்கு ஓட்டல் வேண்டாம்னு நான் எழுதிக் கொடுத்துடறேன்..." வைத்தீஸ்வரனுக்கு நோக்கம் தெளிவா இருந்தது.

18

நிமிர்ந்து உட்கார்ந்து வைத்தீஸ்வரன் அவன் அம்மாவின் அப்பாவை, விஸ்வநாத ஐயரை கூர்ந்து பார்த்தான்.

"ஆயிரம் ரூபா தரட்டுமா வைத்தீஸ்வரன்?"

"ஏதேஷ்டம்... அத்தனை செலவு ஒண்ணுமில்லை. அப்பாவைக் கேட்டாலும் காசு தருவா."

"டேய்... உன்னை நினைக்க ரொம்ப சந்தோஷமா இருக்கு. பத்தொம்போது வயசுல எவ்வளவு தெளிவா பேசற. எவ்வளவு திடமா பேசற. உனக்கு இன்னொரு சின்னவித்தை சொல்லித்தரேன். காயத்ரி ஜபம் விடாத பண்ணா ஆத்மபலம் பெருகும்னு என்னுடைய அத்திம்பேர் அதாவது உன்னுடைய கொள்ளுத்தாத்தா சொல்லுவா. இன்னைய தேதி வரைக்கும் அவர் திடமா இருக்கறதுக்கு அந்த ஜபம் ஒரு காரணம். நன்னா உத்துக் கவனிச்சேன்னா, அவர் வெறும் ஜபம் மட்டும் பண்ணலை. பிராணாயாமம் பண்றார். ஒரு நல்ல வாத்தியார்கிட்ட பிராணாயாமமும் ஹடயோகமும் கத்துக்கோ, நாள் தவறாத கார்த்தாலயும், சாயந்திரமும் பண்ணு.

ஹடயோகம் பண்ணி உடம்பை முறுக்கா வெச்சுக்கணும். அப்பதான் பிராணாயாமம் நன்னா பண்ண முடியும். நல்லபடியா பிராணாயாமம் பண்ணினா மனசு ஒருநிலைப்படும். ஒருநிலைப்பட்ட மனசோட காயத்ரி ஜபம் பண்ணா முகத்துல தேஜஸ் அதிகமாகும். நாலு பேர் உன்னைப் பார்த்து நமஸ்காரம் பண்ணும்படியா ஒரு அமைப்பு ஏற்படும். உன்னுடைய கெட்டிக்காரத்தனம் தன்னிச்சையா மேல எழும்பும். ஞாபகசக்தி பெருகும். எந்தச் சூழ்நிலையிலும் பதற்றமில்லாமல் இருக்கமுடியும். பதற்றம் இல்லாமல் இருந்தலே, பிரச்சனையை நன்னா பார்த்துடலாம். பிரச்சனையைப் பார்க்கத் தெரிஞ்சுட்டா, அதைத் தீர்க்கறது சுலபம்.

நான் ஜெயிச்சதுக்குக் காரணம் காயத்ரி ஜபம். உங்க தாத்தா அடுப்பு எதிர உட்கார்ந்து காயத்ரி ஜபம் பண்ணுவா. இன்னைய வரைக்கும் என் சமையல் நன்னா யிருக்கறதுக்குக் காரணம்— காயத்ரி ஜபம், செய்யற வேலை யில் இந்த ஜபம் கொடுக்கற பலம் சாதாரணமில்லை.

இந்த மயிலாப்பூர்லயே சாரி, சாரின்னு ஒருத்தர் இருக்கார். அவர்கிட்ட போய் பிராணாயாமம் கத்துக்கோ. மகா கெட்டிக்காரர். இதயத்தை மூணு நிமிஷம் நிறுத்திக் காண்பிப்பார். அல்வா, பாசந்தின்னா உயிர். ஆள்விட்டு வாங்கிண்டு வரச்சொல்லுவார். நான் நாலு பாசந்திக்கு, அஞ்சு பாசந்தியா அனுப்புவேன். என்னுடைய உப சாரம்னு சொல்லி அனுப்புவேன். முப்பத்தஞ்சு வயசுதான். ஆனா, பளிங்குச்சிலை மாதிரி இருக்கார். என் பேர் சொல்லு. என் பேரன்னு சொல்லு. ஆஹா, ஒஹோன்னு வார். வைத்தீஸ்வரா— நீ என்ன பண்ணினாலும் சரியா பண்ணுவேன்னு எனக்குத் தெரியும். உங்கப்பா உன்னை மெட்ராஸுக்கு அனுப்பறபோது, அவனை ஒட்டல்ல இழுத்துவிட்டுடாத கொஞ்சம் படிக்கட்டும்னு சொன் னான். நான் உன்னை ஒட்டலுக்குள்ள கூப்பிட்டதே இல்லை. நீ படிக்கறதுக்கு என்னவெல்லாம் வேணுமோ, அத்தனையும் பண்ணினேன்."

"ஆமாம் தாத்தா, நீங்க பெரிய சௌகரியம் பண்ணிக் கொடுத்திருக்கேள். மேல்மாடியில் எனக்குன்னு ரூம் ஏற்பாடு பண்ணிக் கூரை போட்டு என்னென்னமோ பண்ணிக் கொடுத்திருக்கேள். ஒரு வீடு இருந்ததுனாலதான் நான் சௌகரியமா இருந்தேன். நன்னா படிச்சேன். மாயவரத்துல இருந்தா இது நடந்திருக்காது. உங்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்."

"அது பெரிய வார்த்தைடா, அதுக்குப் பதிலா எனக் கொரு உதவி பண்ணு. என் ஃப்ரெண்ட் சுப்புராமன்னு ஒருத்தன் இருக்கான். திருவல்லிக்கேணியில ஜாகை. பெரிய தியாகி. இந்தியாவுக்குச் சுதந்திரம் வேணும்னு கூட்டத்துல

பேசி போலீஸ்கிட்ட நாயடி, பேயடி வாங்கியிருக்கான். அவனுக்குப் பொண்ணு இருக்கு. வாலாம்பாள்னு பேர். இடையாத்துமங்கலம் ஊர். ரொம்ப அழகு. மகா கெட்டிக்காரி. அவளைப் பார்க்கறபோதெல்லாம் உன் ஞாபகம்தான் எனக்கு வர்றது. அவளைக் கல்யாணம் பண்ணிக்கறயா? நாம சுதந்திரத்துக்காக ஒரு துரும்பு கூடக் கிள்ளிப் போடலேன்னாலும், சுதந்திரத்துக்காக ரத்தம் சிந்தினவாளுக்கு ஏதாவது பண்ணலாமே..." விஸ்வநாதன் கூர்மையாய் வைத்தீஸ்வரனைப் பார்த்தபடி கேட்டார்.

"அந்தப் பொண்ணு சுப்ரமணிய பாரதியார் பாட்டு ரெண்டு, மூணு மனசு உருகப் பாடறது. நான் கதறிட்டேன். 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்— என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'னு ரொம்ப நன்னா பாடறது. நான் ஜாதகப் பொருத்தம் பார்த்தேன். நன்னா இருக்குடா. அவளை நீ கல்யாணம் பண்ணிண்டா சௌக்கியமா இருப்பே. சுப்புராமனுக்கு ஒரே ஒரு பொண்ணுதாண்டா— மத்த ரெண்டும் பிள்ளைகள். அவ எட்டாவது படிச் சுருக்கா. நன்னா பாடறா. கோலம் போடறா. பின்னல் போடறா. வாய்க்கு ருசியா சமைக்கறா. உனக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?"

"இல்லை... பெரியவா நீங்க சொன்னா, எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை."

"உனக்கு வேற ஏதாவது ஆசை இருக்கா?"

"அந்தப் பொண்ணு நாலுபேரோட பேசிப் பழகத் தெரிஞ்சவளா இருந்தா நன்னாயிருக்கும். நான் கோட்டைக்கு வேலைப் போனா, என்னைத் தேடி வீட்டுக்கு வரவா கிட்ட என்ன விஷயம்னு பேசி, எழுதி வெச்சுக்கத் தெரியணும்."

"அட... நீ சொல்லிக் கொடுறா. அது கெட்டிக்காரக் குழந்தை. பிரியமா சொல்லிக் கொடுத்தா, நீ சொல்லிக் கொடுத்ததைவிடக் கூடவே வேலை செய்வா"

"எனக்குப் புரியறது. எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை. எங்கப்பாகிட்டேயும், அம்மாகிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லுங்கோ. முக்கியமாக கொள்ளுத்தாத்தா கிட்ட சொல்லுங்கோ."

தாத்தாவும் பேரனும் கல்யாணம் என்பது உத்யோகம் போலவும், ஒரு கடமை போலவும் மிகச் சாதாரணமாகப் பேசினார்கள். வெட்கப்படாமல், சூழ்ச்சிகள் இல்லாமல் நேரடியாக விவாதித்தார்கள். எந்த ஆசைகளையும் அறுத்து நிற்காமலும், அனுபவிக்கத் துடிக்காமலும் கடமையாக ஏற்றுக்கொண்டால் பிரச்சினைகள் வருவதில்லை.

"ஆனா, ஒரு விஷயம் தாத்தா. கோட்டையில இப்பவே போய் வேலைக்குச் சேர்ந்துடட்டுமா?"

"எதுக்குடா? படிக்கும்போதே கல்யாணம் பண்ணிக்கோ."

"ஏன் தாத்தா அவசரப்படறேள்."

"எனக்கு அவசரமில்லை. உன் கொள்ளுத்தாத்தாவுக்கு அவசரம். சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு அவசரம்."

"என்ன?"

"அவர் உடம்பு நன்னாயில்லைடா. மூச்சு வாங்கறது. வேகமாக நடக்க முடியலை."

"இங்க வந்தவுடனே நிறையச் சாப்பிட ஆரம்பச்சுட்டார். ஓவர் ஈட்டிங், வயசானா கொஞ்சம் சாப்பாட்டைக் குறைக்கணும். கார்த்தால கடற்கரைப் பக்கம் நடக்கணும். இதை நான் ரெண்டு, மூணு தடவை சொல்லிட்டேன்."

"இல்லை... அவருக்குச் சோம்பல் வந்துடுத்து. ஜெயிச்சுட்டோம்னு ஒரு மிதப்பு வந்துடுத்து. வாசல்ல உட்கார்ந்து

வரவன் போறவன்கிட்ட ஊர் நிலவரம் விசாரிச்சுண்டிருக்காரே தவிர, வெள்ளைக்காரன் எப்போ இந்தியாவை விட்டுப் போவான்னு கேட்டுண்டிருக்காரே தவிர, மத்த விஷயங்கள் அவருக்கு முக்கியமா இல்லை. உடம்பைக் கவனிச்சுக்க மாட்டேங்கறார்."

"ஆமா... ஆமா... நானும் கவனிச்சேன். மாயவரத்து லேர்ந்து யாராவது வந்துட்டா களகுழி. எப்படி நிமிர்த்திட்டேன் பார்த்தியா? எப்படி எல்லோரையும் நிமிர வெச்சுட்டேன் பார்த்தியா?ன்னு ஏகமா அலட்டிண்டிருக்கார்."

"செய்யட்டுமேடா... அவருடைய பிச்சைதானே இது அத்தனையும்."

"இல்லேன்னு சொல்லலை. தன் உடம்பைத் தான் பார்த்துக்க வேண்டாமா? ஒரு டாக்டர்கிட்ட கூட்டிண்டு போகலாமா? மயிலாப்பூர்லயே சுப்ரமணியம்னு ஒரு டாக்டர் இருக்கார். மகா கெட்டிக்காரர். நாடி பார்த்தே உடம்பு என்னன்னு சொல்லிடுவார்."

"குழந்தை வயசுக்கு வந்து மூணு வருஷம் ஆயிடுத்து. இதுக்குமேல் வெச்சுண்டா அசிங்கம்னு சொல்றான் சுப்பு ராமன். கல்யாணத்த அடுத்த மாசம் வெச்சுக்கலாமா?"

"எனக்கு ஆட்சேபணை இல்லை. கொள்ளுத்தாத்தா ஒரு கட்டளையா இதை எனக்குச் சொன்னா நன்னாயிருக்கு மேன்னு பார்க்கறேன்."

அன்று மாலை சாம்பசிவ சாஸ்திரிகள், வைத்தீஸ்வரனைச் சந்தித்தார். கட்டித் தழுவிக்கொண்டார். ஆசீர்வதித்தார்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் தகவல் போயிற்று. அவர்கள் எல்லோரும் பட்டணத்துக்கு வர, நிச்சயத்தார்த்தம் நடந்தது.

ஆறேழு கலந்த அன்னங்களோடு விருந்து நடந்தது. இனிப்பு ரவா கேசரி போடப்பட்டது.

வைத்தீஸ்வரனை வலது கோடியில் பெரியவர்களுக்கு நடுவே உட்கார வைத்து இலைபோட்டுப் பரிமாறினார்கள்.

ஒரு தட்டில் ரவா கேசரியைத் தனியாக எடுத்து வந்து வாலாம்பாள், அவள் இலையில் கவிழ்த்துவிட்டு ஓடினாள். கொல்லைப்புறத்துக்குக் கை அலம்ப வைத்தீஸ்வரன் போக, வாலாம்பாளை அங்கு சொம்பு ஜலத்தோடு அனுப்பினார்கள். கொல்லைப்புறத்தில்தான் கூச்சமின்றி வாலாம்பாளை ஆசையோடு வைத்தீஸ்வரன் பார்த்தான்.

"என்னைப் பிடிச்சிருக்கா?" என்று அடிக்குரலில் கேட்டான்.

"உங்களையும் பிடிச்சிருக்கு. உங்க பி.ஏ. குடுமியும் பிடிச்சிருக்கு." என்றாள்.

ஈரமான வலக்கையால் வாலாம்பாளின் இடக் கன்னத்தை வைத்தீஸ்வரன் கிள்ளினான். வாலாம்பாள் முகம் சிவந்தாள்.

"கல்யாணத்தை மாயவரத்துல வெச்சுக்கலாமே? மாயவரத்துலதானே நமக்குத் தெரிஞ்ச மனுஷா நிறைய இருக்கா,"

சதாசிவன் மெள்ள அத்திம்பேரைப் பார்த்துக் கேட்டான்.

"வேண்டாம்... மெட்ராஸ்ல வெச்சுப்போம்."

"எதுக்கு... கூடுதலா செலவாகும்..."

"செலவாயிட்டுப் போறது சதாசிவன். ஆனா மெட்ராஸ்ல நாம யாருன்னு காண்பிக்கணும்னா, இந்தக் கல்யாணம் மெட்ராஸ்ல விமரிசையா நடந்தாதான் நன்னாயிருக்கும். மயிலாப்பூர்ல இருக்கற அத்தனை

வக்கீலையும், ஜட்ஜையும் நான் கூப்பிடப்போறேன். எல்லா அரசாங்க அதிகாரிகளையும் வரச்சொல்லப் போறேன். திருவல்லிக்கேணி மாதிரி மயிலாப்பூர்ல ஒரு ஓட்டல் ஆரம்பிக்கப்போறேன். ரெண்டாவது பையனுக்கு ஒரு ஓட்டல் வேணுமோன்னோ. அவனும் தயாரா இருக்கானே."

விஸ்வநாதன் அழுத்தம் திருத்தமாகப் பேசினான்.

மந்தவெளிக்குப் போகும் பாதையிலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் பந்தல் போட்டுத் திருமணம் விமரிசையாக நடந்தது. எல்லா இடத்திலும் கோரைப்பாய் விரித்திருந்தது. சமையல் செய்ய கோட்டை அடுப்பு கட்டி பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது.

மாயவரத்திலிருந்து இறங்கியவர்களை சாரட் வண்டியிலும், மாட்டு வண்டியிலும் கொண்டு வந்து கல்யாணப் பந்தலில் இறக்கினார்கள். வசதியானவர்களை தனி வீடுகளில் தங்கவைத்தார்கள். மாடவீதியில் இருக்கும் இரண்டு, மூன்று வக்கீல்களின் வீட்டை வாடகைக்கு எடுத்து மாப்பிள்ளை வீட்டாருக்கும், பெண்வீட்டாருக்கும் தனித்தனியாக இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மூன்று நாள் கல்யாணம்... ஐந்து நாள் விருந்து. மாயவரமும், மயிலாப்பூரும் கைக்கோத்துக்கொண்டு சாப்பிட்டன. கும்பல் கும்பலாக சாந்தோம் கடற்கரைக்கும் மெரீனா கடற்கரைக்கும் போய்ப் பார்த்தார்கள்.

தினமும் பகல் கச்சேரி, இரவுக் கச்சேரி என்று அமர்க்களப்பட்டது. காலையில் நாதஸ்வரங்கள் செட்டு, செட்டாக முழங்கின. திருவீழிமிழலை, திருவாரூர், திருவையாறு என்று பல ஊர்களிலிருந்து நாதஸ்வரக்காரர்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொரு தெருவாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு செட்டாக ஊர்வலத்தில் நாதஸ்வரம் வாசிக்கப்பட்டது. கபாலி கோயிலைச் சுற்றிவர இரண்டு மணி நேரமாயிற்று. சோழ தேசத்து நாதஸ்வர இசையில்

மொத்த மயிலாப்பூர் மக்களும் சொக்கிக் கிறங்கிப்போனார்கள்.

சாப்பாடு அதைவிட சொக்க வைக்கும் விஷயமாக இருந்தது.

விஸ்வநாதன் சொந்தக்காரர்களும், சுப்புராமனின் சொந்தக்காரர்களும் தங்கள் குழந்தைகளுக்கு உபநயனம் செய்ய வேண்டுமென்று சொல்ல, மயிலாப்பூரில் உள்ள சில ஏழை அந்தண வீட்டுக் குழந்தைகளும் அப்படியே விண்ணப்பித்துக்கொள்ள, பதினாறு பேருக்குத் திருமணத்துக்கு முதல்நாள் உபநயனம் செய்வித்தார்கள். அத்தனை பேருக்கும் வேட்டியும் புடவையும் தங்கப் பூணூலும் வெள்ளிப்பூணூலும் விஸ்வநாதனே வாங்கிக் கொடுத்தார்.

மயிலாப்பூர் வக்கீல்கள் அத்தனை பேரும் சாம்பசிவ சாஸ்திரிகளைப் பார்த்துக் கைக்கூப்பினார்கள். சிலபேர் காலில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அட்சதை போட்டுக் கொண்டார்கள். சில பேர், அவருடைய சமஸ்கிருத அறிவை லேசாகப் பிடித்துப் பார்த்தார்கள். அவர் பதில் சொல்ல, சந்தோஷமடைந்தார்கள்.

மயிலாப்பூரைச் சுற்றி எல்லாக் கோயில்களிலிருந்தும் பிரசாதங்கள் தம்பதிக்கு வந்தன. எல்லாப் பிரசாதத்தையும் சாம்பசிவ சாஸ்திரிகள் ஆர்வமுடன் இட்டுக் கொண்டார்.

"டேய்... இங்க முண்டகக் கண்ணியம்மன் கோயில்னு ஒண்ணு இருக்கு. உள்ளுக்குள்ள போனா உடம்பு நடுங்கறதுடா. உள்ள அவ உயிரோட இருக்கா... பார்த்துச் சிரிக்கறா. அந்த இடத்துக்கு குழந்தைகளைக் கூட்டிண்டு போடா. இது, இந்த ஊர் காவல் தெய்வம். வடக்கு எல்லையைப் பாதுகாக்கற தெய்வம். அதனால நின்று கைகூப்பி, நமஸ்காரம் பண்ணிட்டு வா. உனக்கு மயிலாப்பூர்ல வீடு வேணும்... வீடு வேணும்னு கேட்டியோன்னோ... அதை இவளண்ட கேட்கணும். உன்னுடைய எல்லைக்குள்ள

எனக்கு வீடு கொடு. நல்ல வீடா கொடு. உன்னைத் தினம் வந்து பார்க்கற தூரத்துல கொடு. அப்படின்னு கேளு. நிச்சயம் தருவா. யார் வேணாலும் வீடு வாங்கலாம்டா. நல்ல வீடா, புதன்மனையா வாங்கணுமோன்னோ, அது இவ நினைச்சாதான் முடியும்."

பெண்ணைப் பெற்ற தியாகி சுப்புராமன் அதிர்ந்து போய்க் கிடந்தார். அவரிடம் யாரும் அதிகம் பேசவில்லை. குறிப்பாக, மயிலாப்பூர் வக்கீல்கள் ஒருவருக்கொருவர் ஜாடை செய்து, அவரிடமிருந்து விலகி நடந்தார்கள். நமஸ்கரித்தாலும் பதில் காட்டாது போனார்கள். வெள்ளைக்காரன் விரோதி, எங்களுக்கும் விரோதி என்றார்கள். வெள்ளைக்காரனை விரட்ட முடியுமா? என்றார்கள்.

19

வெற்றிலை, வாசனை, பாக்கு, சுண்ணாம்பு, பன்னீர், புகையிலை தட்டு தட்டாக கல்யாண கூடத்துக்கு வந்தன. வயது வித்தியாசமின்றி சகலரும் தொடை தடவி வெற்றிலை போட்டுக் கொண்டார்கள்.

மாயவரத்து ஜனங்களுக்கு சுப்புராமன்தான் ஹீரோ. அவரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டார்கள். அடிபட்ட தழும்புகளைத் தடவிப்பார்த்தார்கள்.

"சார், இந்த மெட்ராஸ் ஜனங்களைப் பார்க்கப் பார்க்கச் சந்தோஷமா இருக்கு. வந்து உட்கார்ந்தா தேச விவகாரம், பாரதியார் பாட்டு, திலகர், காந்தின்னு பேசறாளே தவிர, மத்த வீட்டு வம்பெல்லாம் இல்ல பார்த்தேளோ. ஆனா... எல்லோரும் இங்கிலீஷ்ல பேசறா. அதான் ஒண்ணும் புரியலை." மாயவரத்து ஆட்கள் விஸ்வநாதனிடம் பேச, அவர் தொண்டையைச் செருமி தன் அபிப்ராயம் சொன்னார்.

"இங்கிலீஷ் உள்ள புகுந்துடுத்துடா. இங்கிலீஷ்லே பேசினாத்தான் மரியாதைன்னு ஆயிடுத்து. அதனால்தான் அவாகிட்ட ஜாஸ்தி பேசறதேயில்லை. ஆனா சதாசிவா, உன் பிள்ளை பிச்சு உதர்றான். பள்ளிக்கூடப் பசங்களுக்கு இங்கிலீஷ் பாடம் எடுத்தான். நான் பக்கத்துல உட்கார்ந்து கேட்டுண்டே இருந்தேன். கண்ல கலகலன்னு ஜலம் வந்துடுத்து. என்ன ஞானம்டா. என்ன புத்தி. என்ன ஞாபக சக்தி. அதெல்லாம் பெரியவாளுடைய அனுக்கிரகம். சாம்பசிவ சாஸ்திரிகளுடைய வித்து. அவர் எத்தனை மனனம் பண்ணியிருப்பார். எத்தனை தபஸ் பண்ணியிருப்பார். அது வீணாகுமா?"

"குழந்தேளை பட்டணத்துக்கு அனுப்பறோமேன்னு பயந்தேன். என்னைவிடப் பொறுப்பா நீங்க வளர்த்திருக்கேள். உங்க ரெண்டு பையன்கள்ல ஒருத்தனையாவது நீங்க படிக்க வெச்சுருக்கலாம்." -சதாசிவன், விஸ்வநாதனை மனம் விட்டுப் பாராட்டினார்.

"இல்லை... எம்புள்ளைகளுக்கு இஷ்டம் இல்லை. ரெண்டு பேரும் கல்லாவில உட்கார்ந்துனுட்டா. இவன்தான் ஓட்டல் பக்கமே வராம நான் படிக்கப் போறேன். படிக்கப் போறேன்னு விடாப்புடியாக படிச்சுட்டான் என் பேரக்குழந்தைகளைப் படிக்க வைக்கணும்னேன். நான் பார்த்துக்குறேன் தாத்தான்னு வைத்தீஸ்வரன் சொல்லியிருக்கான். மாயவரத்துல ஓட்டல் எப்படிப் போறது."

"சுமாரா போறது."

"நல்லது... உனக்கு ஏதாவது காசு வேணும்னா நான் இங்கேயிருந்து அனுப்பறேன். சும்மா கட்டடமா வாங்கிப் போடு. டவுனுக்குள்ளேயே வாங்கிப் போடு. ஏதாவது வித்து வாடகை வாங்கிப்போம். ஓட்டலை மாயவரத்துல ரொம்ப நம்ப வேண்டாம். அதுதவிர அரிசி, பருப்பு, நாட்டுச் சர்க்கரைன்னு அங்கேயிருந்து நீ அனுப்பு. எனக்கு அது உதவியா இருக்கும். இங்க ஒண்ணுக்கு ரெண்டு விலையா சொல்றான்."

"ஆந்திரா பக்கத்து அரிசி நன்னாயிருக்காதோ."

"அது சாதத்துக்கு மட்டும். இட்லிக்கு நம்ம பக்கத்து அரிசிதான் நன்னாயிருக்கு."

"அப்பா என் கூட வரேங்கறார். நான் கூட்டிண்டு போகட்டுமா? மாயவரம் முழுக்க பார்க்கணும்னு இருக்கார்."

"கூட்டிண்டு போ. ஆனா ஒரு மாசத்துல திருப்பி அனுப்பிவிடு."

"ஏன்?"

"அவருக்கு உடம்பு அவ்வளவு நன்னாயில்லை. இங்க எனக்குத் தெரிஞ்ச டாக்டர்கள் இருக்கா. வாரா வாரம் செக் பண்றா. ரொம்ப அலைய வேண்டாம் அப்படிங்கறா. ஆனா இவர் சொன்னா கேட்டாதானே. ரிக்ஷாவில ஏறி ஊரெல்லாம் சுத்திண்டிருக்கார். இங்கிலீஷ் புரியறதோ, புரியலையோ... போய் மீட்டிங் கேட்டுண்டிருக்கார். மூணு மணி நேரம் அசையாத ஒரு மீட்டிங்ல உட்கார்ந்தா உடம்பு சூடு ஆயிடாதா. சொன்னா கேட்க மாட்டேங்கறார். மொட்டைமாடியில கட்டிலைப் போட்டுப் படுத்துக்கறார். அதுவும் சூடுதான்..." விஸ்வநாதன் குறைப்பட்டுக் கொண்டார்.

சாம்பசிவ சாஸ்திரிகள் அந்தத் திருமணத்துக்குப் பிறகு மாயவரம் போய் சோழ தேசத்தின் எல்லா கோயில்களுக்கும் போய்விட்டு வந்தார். திருவிடைமருதூர் மகாலிங்கத்தைப் பார்த்துக் கண்ணில் ஜலம் விட்டு அழுதார்.

"போதும். என்னை வேதம் படிக்க வெச்சுட்டு வியாபாரியா மாத்திட்டே. சோத்துக்கடை வைக்கப் பண்ணிட்டே. என் குழந்தேள் இதுலேர்ந்து தள்ளித் தள்ளிப் போயிண்டிருக்கா. பேரன் இங்கிலீஷ் படிக்கப் போயிட்டான். எப்போவாவது தமிழ்ல பேசறான். சமஸ்கிருதத்துல

விஷயம் சொன்னா புரிஞ்சுக்கறான். ஆனா ஜடபாரா யணம்ங்கற அற்புதமான விஷயம் என் தலைமுறையி லேர்ந்து போயிடுத்து. அதுக்கு நான் காரணம். இதுக் குண்டான தண்டனையை எனக்குக் கொடுத்துடு. ஆனா, என் குழந்தைகளைச் சௌக்கியமா வை. அதுகள என்ன படிச்சாலும் ஞானவான்களா இருக்கணும்னு உன்னைப் பிரார்த்தனை பண்ணிக் கேட்டுக்கறேன். என் வம்சத்தை நீதான் பாதுகாக்கணும். வருஷத்துக்கு ஒரு தடவை மாய வரம் வந்து திருக்கடையூர் அபிராமியையும் திருவிடை மருதூர் மகாலிங்கேஸ்வரரையும் நமஸ்காரம் பண்ணியே ஆகணும்னு நான் அவாளுக்குக் கட்டளை போடறேன். வைத்தீஸ்வரன் கோயில் மொட்டை நிச்சயம்னு சொல் றேன். என்னால் என்னுடைய குலம் திசைமாறிடுத்து. இதுக்குக் கோபப்படாம அவாளுக்கு எல்லா பாக்கியத்தை யும் அள்ளி அள்ளிக் கொடுக்கணும். நமச்சிவாயம் நமச்சிவாயம்" கண்களில் ஜலம் பெருக அழுதார்.

மறுவாரமே சென்னைக்குத் திரும்பினார்.

நாவல் பழத்தைச் சாப்பிட்டா உடம்பு கொஞ்சம் தெம்பாகும். இழந்த பலவீனத்தைப் பெறலாம் என்று யாரோ சொல்ல, நாவல்பழமும் கொட்டையை அரைத்தும் சாப்பிட்டார். அது சட்டென்று உள்ளுக்குள் போய் ஏதோ ஒரு ரசாயன மாற்றம் ஏற்படுத்தியது. வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. உடம்பிலுள்ள நீர் வற்றியது. டாக்டர்கள் உப்பும் சர்க்கரையும் கரைத்துக் குடிக்கக் கொடுத்தார்கள். ஆனால் குமட்டல் எடுத்தது. நீர் உள்ளே தங்காமல் ஏதோ ஒரு விஷவித்து உள்ளே போய் அவரை உபத்திரவப் படுத்தியது.

அவருக்குத் தன் அந்திமம் புரிந்துவிட்டது.

"எனக்கு மாரகன் கேது- அதனால உணவு விஷம்தான் சத்ருவாகப் போகும். இது கேதுவோட மைனஸ் பாயிண்ட் கேது மாரகன்றதுனால நான் சந்நியாசியாகச் சாவேன்.

இது கேதுவோட ப்ளஸ்பாயிண்ட். ஆபத்சந்நியாசத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கோ" தன்னைப் பார்க்க வந்த வக்கில் நண்பர்களைக் கேட்டுக் கொண்டார். விஸ்வநாதன் என்னவென்று தெரியாமல் விழித்தார்.

"மெல்ல மெல்ல தன்னுடைய அந்திமம் நெருங்கிடுத் துன்னு தெரிஞ்சுனுட்டார். அதனால இன்னொரு பிறவி எடுக்காமல் இருப்பதற்காக இப்பவே சந்நியாசம் வாங்கிண்டு செத்துப் போகப்போறார். அதாவது சாகறதுக்கு முன்னாடி சந்நியாசம் வாங்கிக்கப் போறார். சந்நியாசம் வாங்கிறதுன்னா பூணூலையும், சுடுக்களையும் கழட்டி எறிஞ்சுட்டு காவியைக் கட்டிண்டா எனக்குக் குடும்பம் இல்லை. எந்த பந்தமும் இல்லைன்னு அர்த்தம்."

"நன்னா இருக்கே. எங்க அக்கா இருக்காளே?"

"உங்க அக்காகிட்ட உத்தரவு கேட்டுட்டுத் தாண்டா அதைப் பண்ண முடியும். உத்தரவு கேட்காம பண்ண முடியாது."

சாம்பசிவ சாஸ்திரிகள் மனைவியை அருகே அழைத்துக் கைகூப்பி "இத்தனை நாள் என்னோடு குடித்தனம் செய்து என் சுக துக்கங்களில் நீ பங்கு பெற்றாய். உனக்கு என் நமஸ்காரம். நீ சௌக்கியமாக இருக்க வேண்டும். அடுத்த ஜென்மத்திலும் நீயே எனக்கு மனைவியாக வரவேண்டு மென்று சுவாமியைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். இப்போதைக்கு இந்த உடம்பு அவஸ்தையிலிருந்து விடுபடவும் மோட்சத்துக்கு நான் நேரடியாகப் போகவும் அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் அது சத்சங்கம் உள்ள இடத்தில் பிறக்கவும் விருப்பப்படுகிறேன். அதற்காக சந்நியாசம் வாங்கிக் கொள்ள விழைகிறேன். இதற்குப் பரிபூரண சம்மதம் நீ தரவேண்டுமென்று உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்ல, அவள் அழுது கொண்டே "சரி... சரி... சரி..." என்று மூன்று முறை சொன்னாள்.

புடவைத்தலைப்பால் வாயைப்பொத்திக் கொண்டு உள்ளுக்குள் ஓடிப்போய் ஓவென்று அழுதாள்.

அவரைத் திண்ணைக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். கிழக்குப் பார்த்து உட்கார வைத்தார்கள். தலையைச் சரித்து மொட்டையடித்தார்கள். காதுக் கடுக்கனைக் கிடுக்கிப்போட்டு அறுத்தார்கள். லேசாக ரத்தம் வந்தது. எல்லோரும் துடித்துப் போனார்கள். விஸ்வநாதன் அதிகம் கலங்கினார்.

பூணூலைக் கழற்றிப்போடச் சொன்னார்கள். அதற்குப் பதிலாக மேலே காவித்துணியைப் போத்தினார்கள்.

"இனி எந்தக் காரணம் கொண்டும் இல்லறத்தில் ஈடுபடமாட்டேன். இது சத்தியம்... சத்தியம்... சத்தியம்" என்று அவர் நீர் மீதும் நிலத்திலும் சத்தியம் செய்தார்.

"என்னமோ குளிக்கணும் போல இருக்குடா. கொஞ்சம் குளிப்பாட்டுங்கோடா." என்று கெஞ்சினார். மூன்று குடம் ஜலம் தலையில் ஊற்றினார்கள். ஜன்னி வந்து விட்டது.

ஆபத் சந்நியாசம் வாங்கின ஆறாம் நாள் சாம்பசிவ சாஸ்திரிகள் இறந்துபோனார். அவர் முக்தியடைந்தார் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள்.

விஸ்வநாதனுக்கு அழுகை வரவில்லை. பயம் வந்துவிட்டது. இனி யாரைக் கேட்டு எதைச்செய்வது என்று புரியாமல் ஒரு குழப்பம் ஏற்பட்டது.

"மாயவரத்துலேர்ந்து மனுஷா வரணுமா? அதெல்லாம் சரியா வராது. டக்குன்னு எடுத்துடுங்கோ. கோயில் இருக்கிற இடம்." என்று வக்கில்கள் எச்சரித்தார்கள்.

சாம்பசிவ சாஸ்திரிகள் இறந்த ஆறு மணி நேரத்தில் பயணப்பட்டார். முண்டகக் கண்ணியம்மன் கோயில் வழியாக மயிலாப்பூர் இடுகாட்டுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள்.

பன்னிரண்டடி உயரம் குழி தோண்டி, உப்பு, மஞ்சள், விபூதி பொடி போட்டு வாசனை திரவியங்கள் ஊற்றிய கோணிப்பையில் அவரை உட்கார வைத்து உள்ளே இறக்கி மண் சரித்தார்கள். கல் மூடி, மேலே சிவலிங்கம் வைத்தார்கள்.

இது நிறைவான வாழ்க்கை. நிம்மதியான வாழ்க்கை அர்த்தமுள்ள வாழ்க்கை. சாம்பசிவ சாஸ்திரிகள் தடம் மாறினாலும் ஜெயித்துவிட்டார். ஜெயிக்கும் வழிகாட்டினார். காலத்துக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொள்வதில் எந்தவிதக் கவலையும் படாமல் கம்பீரமாகச் செய்தார்.

"ஐயனே, நானும் அதுபோல் செய்ய வேண்டும் என் பேரக் குழந்தைகளுக்காக, நான் உயிரோடு இருந்து அவர்களுக்கு என்னால் ஆனதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்- எதைக் கற்க வேண்டுமோ அதைச் சொல்லிக் கொடுத்துவிட வேண்டும். என்ன உத்தியோகம் வேண்டுமானாலும் இருக்கலாம். எங்கு வேண்டுமானாலும் வாழலாம். ஆனால், அடிப்படையில் நல்ல விஷயங்கள் எதுவோ அதை மனப்பூர்வமாக இந்தப் பரம்பரை கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக்கொள்ள நீங்கள் சூட்சுமமாக இருந்து உதவ வேண்டும்."

விஸ்வநாதன் ஜோதிர்மயமான சாம்பசிவ சாஸ்திரிகளை நோக்கிக் கை கூப்பினார். திரும்பிப் பாராமல் வீட்டுக்கு வந்தார்.

"என்னப்பா ஆத்துக்குப் பெரியவனாயிட்டியா?" என்று வாசலில் நின்றவர்கள் துக்கம் விசாரித்தார்கள். சதாசிவன் மறுநாள் வந்து சிவலிங்கம் பார்த்துப் பதறினான். ஐந்தாவது நிமிஷம் மனம் சரிசெய்து கொண்டான்.

அழகும் இளமையும் வசதியும் உள்ள வைத்தீஸ்வரனும் அவன் மனைவியும் துள்ளலாக வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.

PUBLIC LIBRARY

கச்சேரி ரோட்டில் மூன்று கட்டு வீடு விஸ்வநாதன் வாங்கித்தர, தன்னுடைய அப்பா கொடுத்த காசில் உள்ளுக்குள் அலங்கரித்தான். கண்ணாடி பதித்த பெரிய தேக்குமரக் கட்டிலும் மரபீரோவும் டிரஸ்ஸிங் டேபிளும் செய்யச் சொன்னான். மனைவியின் அழகை இடையறாது கண்ணாடி முன் நிற்க வைத்து ரசித்தான்.

பத்து மணிக்கு சைக்கிளில் காலேஜுக்குக் கிளம்புவான். மூன்று மணிக்குத் திரும்புவான். அகோரமாய் பசிக்கும். வளைத்துச் சாப்பிடுவான். ஆறு மணி வரை அயர்ந்து தூங்குவான். பிறகு குளித்துவிட்டு புருஷனும் மனைவியும் கோயிலுக்குப் போவார்கள். சிவபுராணம் சொல்வார்கள். ராத்திரி எட்டரை மணிக்குச் சாப்பிட்டு விட்டு பாட்டு பாடுவார்கள். மெல்ல மாடிக்குப் போய் அங்குள்ள படுக்கை அறையில் தாழ்போட்டுப் படுத்துக்கொள்வார்கள். விடியலில் ஐந்து மணிக்கு எழுந்திருப்பார்கள்.

எந்த வருமானமும் இல்லாமல் தாத்தா கொடுத்த காசிலும் அப்பா கொடுத்த காசிலும் அமர்க்களமாக குடித்தனம் செய்து கொண்டிருந்தான் வைத்தீஸ்வரன். கல்லூரியில் ஆங்கில காதல் கவிதைகளைச் சொல்லிக் கொடுக்கிறபோது மனைவியை நினைத்துக்கொண்டான். அவளுக்கும் காதல் கவிதைகள் சொல்லிக் கொடுத்தான். அவளும் ஆங்கிலம் பேசக் கற்றாள்.

எம்.ஏ. முதல் வகுப்பில் பாஸ் செய்ததும் அவனுக்கு கோட்டையில் தலைமை குமாஸ்தா வேலை கிடைத்தது. ஒரு வருஷம் தலைமை குமாஸ்தா வேலை செய்தால் போதும், சப்-கலெக்டராகப் போட்டுவிடுவார்கள். சப்-கலெக்டராக மூன்று வருஷம் வேலை செய்தால் போதும், எங்கேனும் ஒரு ஊரில் கலெக்டராகப் போட்டு விடுவார்கள். எந்த ஊருக்கும் மாற்றாமல் பட்டணத்திலேயே இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று தோன்றியது.

"ஒரு வேளை ஆந்திரா பக்கமோ, பாலக்காடு பக்கமோ போட்டுவிட்டால் என்ன செய்வது?" அவன் மனைவி கவலையோடு கேட்டாள்.

"கால்கடுதாசி எழுதிக் கையில கொடுத்திட்டு போடா ஸ்ட்டான்னு வந்துருவேன்." என்று கம்பீரமாக பதில் சொன்னான் வைத்தீஸ்வரன்.

"வந்துடலாம்... சாப்பாட்டுக்கு..?"

"ஹிண்டு பேப்பர்ல வேலைக்கு போயிடுவேன். இல்ல, இங்கிலீஷ் டியூஷன் எடுத்துச் சம்பாதிப்பேன். உனக்கு வேணுங்கறது சம்பாத்தியம். நானாச்சு... கவலைப்படாதே."

ஆனால், கோட்டை அவனை இறுக்க அணைத்துக் கொண்டது.

அவன் அற்புதமான துபாஷியாக விளங்கினான். எப்போதுமே வெள்ளைக்கார கலெக்டர்களோடும் ராணுவ அதிகாரிகளோடும் கவர்னர்களோடும் இருந்தான். சென்னை மாகாண கவர்னருக்கு நேர் உதவியாளராக வெகு சீக்கிரம் நியமிக்கப்பட்டான்.

மயிலாப்பூர் அவனைக் கண்டு வியந்தது. சற்று மிரண்டது. அவன் எங்கு எப்போது போனாலும் எழுந்து நின்று மாகாண கவர்னரே வந்ததுபோல நமஸ்கரித்தது-

"திருவல்லிக்கேணியைவிட ஒரு நல்ல இடம் பார்த்துத் தரேன் ஓட்டல் வைக்கறேளா?" என்று விஸ்வநாதனைப் பார்த்துக் கேட்டார் வைத்தீஸ்வரன்.

"எங்கே?"

"மவுண்ட் ரோடு."

"மவுண்ட் ரோட்ல எந்த இடம்?"

"அசெம்ப்ளி நடக்கற இடம்... பெரிய குதிரை லாயம் ஒண்ணு இருக்கு. அதை நீங்க ஓட்டலா மாத்திக்கோங்கோ.

அந்த இடத்துல மட்டும் நானூத்துப்பத்து பேர் வேலை செய்யறா. அதுல நாப்பது பேர் சாப்பிட்டா போறாதா– என்ன சொல்றீர்?

விஸ்வநாதன் சரி என்று சொல்ல, விஸ்வநாதனின் இரண்டாவது பிள்ளை தன்னுடைய வியாபாரத்தை அந்த இடத்தில் துவங்கினான். அரசாங்க அதிகாரிகளும் அவர்களைத் தேடி வருகிறவர்களுமாய் மிகப்பெரிய தெரு கூட்டம் காலையிலிருந்து மாலைவரை இடையறாது அந்த ஓட்டலுக்கு வந்தது. காசு குவிந்தது.

20

தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து விஸ்வநாதன், வைத்தீஸ்வரனிடம் பேசினார்.

"வைத்தீஸ்வரா, ஓட்டல் போறும், நீ இல்லேன்னா, இந்த இடம் நிச்சயமா கிடைக்காது. இந்த இடம் கிடைக் கலேன்னா, வேற எந்த இடத்துல ஓட்டல் வெச்சாலும் அது மாயவரம் ஓட்டல் மாதிரி மக்கலாத்தான் இருக்குமே தவிர, பிரகாசமா இருக்குமா–? திரும்பத் திரும்ப அடுப்படி யில வேகறதைவிட, எண்ணெய் மூஞ்சியா இருக்கறதை விட, உன்னை மாதிரி பத்து மணிக்கு ஆபீஸ் போயிட்டு அஞ்சு மணிக்கு வர உத்தியோகத்துல இருக்கறதுதான் நல்லது.

நீ பார்த்து என் மூத்த பிள்ளை குழந்தேளையும் இரண்டாவது பிள்ளை குழந்தேளையும் படிக்க வெச்சுடு. பொம்மனாட்டிகளை எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படிக்க வை. அவா இங்கிலீஷ் பேசணும். உன் பொண்டாட்டி பேசறா பார், அந்த மாதிரி இங்கிலீஷ் பேசணும். திருவல்லிக்கேணி ஜாகையை நான் மயிலாப்பூருக்கு மாத்தலாம்னு இருக்கேன். சதாசிவனையும் விட்டுட்டு வந்துடறான்னு கூப்பிடலாம்னு இருக்கேன். ஓட்டு

மொத்தமா மயிலாப்பூர்ல ஒரு இடம் பார்த்துண்டு, மந்தவெளி போற வழியில இருக்கற பெண்ணாத்தூர் ஐயர் பள்ளிக்கூடத்துல சேர்த்துட்டு நிம்மதியா இருக்கலாம். ஓட்டல் போறும்டா– என்னோடயே நிறுத்தி இருக்கணும். என் பிள்ளைகள் மாட்டினுட்டா. வேற யாரும் மாட்டப் படாது–"

"என்ன படிக்க வைக்கலாம்னு நினைக்கிறேள்...?"

"டாக்டருக்குப் படிக்க வைக்கலாம். இன்ஜினீயருக்குப் படிக்க வைக்கலாம். வக்கீல் படிப்பு படிக்க வைக்கலாம். எனக்கு வக்கீலா நம்மாத்துல ரெண்டு பேராவது வரணும்னு ஆசைடா. மயிலாப்பூர்ல ஒவ்வொரு வக்கீலை யும் பார்த்தா புளூ ஜாக்கர் கடுக்கனும் வெள்ளை டர்பனும் வாயில் வெத்தலையும் பார்க்கவே லட்சணமா இருக்கா. இங்கிலீஷ் படிச்சாலும் தேஜஸ்வியா இருக்கா வக்கில் படிச்சா நல்லதுதானே... வருமானம் வரு மோன்னோ..."

"அற்புதமா வரும். ஊர்ல வெட்டுக்குத்து ஜாஸ்தியா யிடுத்து. சுதந்திரம் கேட்கறதுக்குப் போராடறா. இப்போ அந்த மாதிரி ஆட்களுக்கு ஜனங்களே காசு கொடுத்து வக்கீல் வைக்கறா. அந்த மாதிரி வக்கீல்கள் நல்ல சம்பாத்தி யம் மட்டுமில்லாமல் நல்ல மரியாதையும் கிடைக்கறது. உங்க முதல் பேரன் பள்ளிக்கூடம் ஃபைனலுக்கு வந்துட்டான் இல்லையா–?"

"ஆமாம்..."

"அவனை நான் பார்த்துக்கறேன். அவளை வக்கீல் ஆக்கிடலாம்..."

அவர்கள் திட்டமிட்டார்கள். குழந்தைகளை உற்சாகப் படுத்தினார்கள். எல்லோருமே அந்த வீட்டில் அதிகம் படித்து, பட்டதாரி ஆக முயற்சி எடுத்தார்கள்.

அவருக்கு மோகன்தாஸ் கரம்சந்த் கண்டி என்பது பெயர். இருபத்தொரு வருடங்கள் தென்னாப்பிரிக்காவில் வக்கீல் தொழில் செய்து, அங்குள்ள இந்திய பிரஜைகளுக்குப் பேருதவி செய்தார்.

சத்தியாக்கிரகம் என்கிற புதியமுறை போராட்டத்தை கண்டு பிடித்து, அங்குள்ள பிரிட்டிஷார்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கினார். அங்குள்ள இந்தியப் பிரஜைகள் இவரை மட்டுமே நம்பிக்கொண்டு வாழ்ந்தார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

அந்த ஆங்கிலக் கட்டுரை சிறிய புத்தக வடிவத்தில் இருந்தது. காந்தியைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள் என்று முக்கிய பேப்பரில் எழுத்துப் பிழைகளோடு ஒரு கட்டுரை அச்சிடப்பட்டு இருந்தது. அந்தக் கட்டுரையைப் பதினான்காவது முறையாக வைத்தீஸ்வரன் படித்துக் கொண்டிருந்தார்.

படிக்க ஆரம்பித்தவுடனேயே மற்ற பகுதிகளெல்லாம் நினைவுக்கு வர, முகத்தில் துண்டுபோட்டு அழுத்திக் கொண்டார். கண்களில் இருந்து ஜலம் வந்தது.

எப்பேர்ப்பட்ட அற்புதமான மனிதர். எங்கேயோ சுரங்கத்திலும், கரும்புத் தோட்டத்திலும் வயல்வெளி களிலும், கல்லுடைக்கும் மலைப்பகுதிகளிலும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மீது மிகுந்த பிரியம் வைத்து, நீ இந்தியனல்லவா... ஏன் இத்தனை வேதனைப் படுகிறாய்...? உனக்கு நான் விடுதலை வாங்கித் தருவேன். என்று கொத்தடிமையாக இருந்த அவனுக்கு நீதிமன்றத்தில் வழக்காடி விடுதலை வாங்கித் தந்தார். மறுபடியும் கப்பல் ஏற்றித் தமிழ் நாட்டுக்கு அனுப்பினார்.

அவரைத் தமிழ்க் குடும்பங்கள் தெய்வமாகப் போற்றின.

முகத்திலிருந்து துண்டை எடுத்து, வழியும் கண்ணீரை வைத்தீஸ்வரன் துடைத்துக் கொண்டார்.

நேற்றைக்குக் கடற்கரையில் மிக அருகே அமர்ந்து பார்த்தபோது, இந்தக் கட்டுரை வாசகங்கள் தான் ஞாபகம் வந்தன.

தோளில் ஒரு துண்டும் இடுப்பில் ஒரு துண்டுமாக அரைப் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கொண்டிருந்த இந்த மனிதரா இத்தனை அடிகளை வாங்கினார். இந்த மனிதரா, பிரிட்டிஷார் முன் தைரியமாக நின்றார். இந்த மனிதரா, 'நீ எத்தனை அடித்தாலும் பதிலுக்கு உன்னை அடிக்க மாட்டேன். நான் அடி வாங்கிக்கொண்டே இருப்பேன். இந்தப் போராட்டத்துக்குச் சத்தியாக்கிரகம் என்று பெயர். கை வலிக்கும்வரை நீ அடி. ஆனால், நான் சொன்னதைத் தான் சொல்லிக்கொண்டு இருப்பேன், என்று சொல்ல, அந்த இடத்து பிரிட்டிஷ் அதிகாரிகள் அவரிடம் பணிந்தார்கள்.

பிரிட்டிஷார் அடித்தபோது சிதையாத அவருடைய முகம் உருட்டுக்கட்டையால் ஒரு இந்தியன் அடித்தபோது படுகாயப்பட்டது. அந்தக் கிழவரையே உற்றுப்பார்த்து வைத்தீஸ்வரன் கைகூப்பிக் கொண்டிருந்தார். அரசு துபாஷியாக இருந்ததால், வைத்தீஸ்வரனுக்குத் தனியாக ஒரு நாற்காலி கடற்கரைக் கூட்டத்தில் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

"என்ன ஆச்சு...? இன்னிக்குக் காலையிலிருந்து இது மூணாவது முறை. இந்தச் சின்னப் புத்தகத்தைப் படிச்சுட்டுத் திரும்ப திரும்ப அழுதுண்டேயிருக்கேள்...? அப்படியென்ன இந்தப் புத்தகத்துல இருக்கு...?"

அவர் மனைவி வாலாம்பாள் அருகே நெருங்கி வந்து கேட்டாள்.

"ஒண்ணுமில்லை வாலாம்பா... இது மகாத்மா காந்தியைப் பற்றிய ஒரு சிறுகுறிப்பு. அவர் யார் என்று தெரிந்து கொள்வதற்காக, கடற்கரையில் இதை காலணா

வெளியீடாக விற்றார்கள். அதைத்தான் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருக்கிறேன்..."

"எல்லோரும் மகாத்மா காந்தியைப் பிரமாதமாகப் பேசிக்கொள்கிறார்கள். மகான் என்கிறார்கள். அதென்ன மகாத்மா..? அதற்கு என்ன அர்த்தம்..?"

"சாதாரண ஆத்மா இல்லை. மகா ஆத்மா. அற்புதமான பிறவி. கடவுள் அனுக்கிரகம் செய்த பிறவி. கடவுளால் அனுப்பிவைக்கப்பட்ட மனிதன் என்றெல்லாம்கூடப் பொருள் கொள்ளலாம்..." பரவசத்தோடு வைத்தீஸ்வரன் சொல்லிவிட்டுக் கைகூப்பினார்.

"என்னன்னு சொல்லி எனக்கு விளக்கி சொல்லிவிட்டு பரவசப்பட்டால், நானும் சேர்ந்து பரவசப் படுவேனல்லவா..?"

வாலாம்பாள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உனக்கு நிறைய விஷயங்கள் சொல்ல வேண்டும். வாலாம்பா... இருந்தாலும் எளிமையாகச் சொல்ல முயற்சிக்கிறேன்.

பாலசுந்தரம் என்றொரு தமிழர். தென்னாப்பிரிக்காவில் வேலை செய்தால் கைநிறையச் சம்பளம் என்று இங்குள்ள ஏஜெண்டுகள் வலைவிரித்து வெண்ணெயாகப் பேச, அங்கு அவர் போய் இறங்கினார். இறங்கிய பிறகுதான் ஏஜெண்டுகள் சொன்னது எல்லாம் பொய். கடுமையான வேலை -மிகக் குறைவான உணவு. மிகக் குறைவான சம்பளம். அந்தச் சம்பளத்தையும் எடுத்துக்கொண்டு போக முடியாது. வாழ்நாள் முழுவதும் இங்கேயே அடிமையாகக் கிடக்க வேண்டியதுதான் என்கிற நிலைமை புரிந்தது. சிறிதளவு படித்த அந்த பாலசுந்தரம் என்கிற தமிழர், தன்னுடைய அடக்கு முறையை எதிர்த்துத் தன்னுடைய முதலாளியிடம் பேச, முதலாளி தாறுமாறாக அடித்தான்.

உடம்பெல்லாம் ரத்த விளாறாக, முகம் சிதைந்து பரிதாபமான நிலையில் அவர் கோர்ட் வாசலில் நின்றிருக்க, மோகன்தாஸ் கரம்சந்த் கண்டி என்கிற இந்தக் குஜராத்தி மனிதர் அவரிடம் போய், 'நான் ஒரு வக்கீல், உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்..?' என்று கேட்டார்.

பாலசுந்தரம் அழத் துவங்கினார். அவர் காலில் விழுந்து பணிந்தார்.

"வழியே இல்லை என்று நினைத்து இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். தெய்வம் போல வந்தீர்கள். நான் ஐந்து வருடம் வேலை செய்துவிட்டேன். 'இன்னும் ஐந்து வருடம் வேலை செய்.. இல்லையென்றால் அடிப்பேன்.' என்று தினம் தினம் என்னைப் போட்டுத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து என் முதலாளியிடமிருந்து எனக்கு விடுதலை வாங்கித் தாருங்கள்" என்று சொல்ல, அவருக்கு நீதிமன்றத்தில் போராடி, காசு வாங்காமல் விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

அப்போது கொத்தடிமையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்றால், இருபத்தைந்து பவுண்டு தலைவரி கட்ட வேண்டும். ஆறு மாதம் உழைத்தால்தான் இருபத்தைந்து பவுண்டு அவர்களால் சேகரிக்க முடியும். இந்த வரியைக் கட்ட முடியாதவர்களை மறுபடியும் கொத்தடிமையாக்க வேண்டுமென்ற நினைப்போடே தென்னாப்பிரிக்க அரசாங்கம் இந்த வரியை விதித்திருந்தது.

தலைவரி கட்டுவது அடிமைத்தனம். இந்த வரியை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று காந்தி வற்புறுத்தினார்- போராடினார். இங்கிலாந்தில் மூன்று ஆண்டுகள் பாரட்லா படித்தவர். தென்னாப்பிரிக்காவில் வீடுகளில் வேலை செய்கிற ஆண்களும், பெண்களும் பெரும்பாலும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். நல்ல குடியில் பிறந்த தமிழர்கள். அவர்களைத் தென்னாப்பிரிக்க அரசாங்கம் கூலிகள் என்று வர்ணித்திருக்கிறது.

இந்தியர்கள் முயல்களைப் போல இடைவிடாது பிள்ளைகளைப் பெறுபவர்கள். ஆனால், இவர்களை முயல்களைக் கொள்வதுபோல் கொல்ல முடியவில்லையே... என்று வெள்ளைக்காரர் ஒருவர், அங்கு ஒரு கூட்டத்திலே பேசினார். உடனிருந்த வெள்ளைக்காரர்கள் கைதட்டினார்கள்.

இத்தனை கேவலமான வாழ்க்கை அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை காந்தி பார்த்து, என்ன விதமெல்லாம் தமிழர்களுக்கு உதவி செய்ய முடியுமோ, அத்தனையும் செய்திருக்கிறார். அந்த காந்தியினுடைய பேச்சை நேற்று கடற்கரையில் கேட்டேன்.

தென்னாப்பிரிக்காவில் சில பகுதிகளில் இந்தியர்கள் போகக்கூடாது என்று தடைவிதித்திருந்தார்கள். காந்தி அதை மீறினார். நூற்று இருபத்தேழு ஆணும் பெண்ணுமான தமிழர்களோடு சில பகுதிகளுக்கு அவர் உள்ளே நுழைந்தார். அப்போது தென்னாப்பிரிக்க அரசாங்கம் அவரையும் அவரைச் சார்ந்த மக்களையும் கைது செய்தது.

தில்லையாடி வள்ளியம்மை என்ற பதினேழு வயதுப் பெண். சிறைக் காவலர்கள் துன்புறுத்தலால் இறந்து போனாள். முதன்முதலில் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய போது, எனக்குத் துணையாக இருந்தவர்கள் தமிழர்களே என்று காந்தி பெருமையோடு சொல்கிறார் வாலாம்பா.

தென்னாப்பிரிக்காவில் பல்வேறு போராட்டங்களில் அவருக்குத் துணையாக நம்முடைய ஆட்கள்தான் இருந்திருக்கிறார்கள். தென்னாப்பிரிக்க அரசு பயந்துபோய், பல சட்டங்களைத் தகர்த்தது. காரணமாக இருந்தவர், இந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. அவரை மகாத்மா என்று வெள்ளைக்காரர்களே அழைக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பத்தில் கண்டி என்று தவறான உச்சரிப்புடன்

கூப்பிட்டவர்கள், பிறகு அது காந்தி என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

முகத்தில் என்ன ஒரு ஒளி. உதட்டில் எவ்வளவு ஒரு அழுத்தம்... கண்களில் எத்தனை தீட்சண்யம்... கைவிரல்கள் எவ்வளவு நீளம்... நடையில் எத்தனை துரிதம்... திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறபோது மனசு விண்டுபோகிறது. அன்பில் தோய்ந்து போகிறது. அவர் கூட்டத்துக்கு மேடையேறும் போது என்னை அறிமுகப்படுத்தினார்கள். கோட்டையில் கவர்னருக்கு துபாஷியாக இருக்கிறேன் என்று சொன்னார்கள்.

"காங்கிரஸில் இருக்கிறாரா...?" என்று உடனே சிரித்தபடி கேட்டார். நான் 'இல்லை' என்று சொன்னேன். வேலையை உதறிவிட்டு காங்கிரஸுக்கு வந்துடட்டுமா...? என்று கேட்டேன். 'வேண்டாம்... நல்லவர்கள் வெள்ளையர்கள் பக்கம் இருப்பது நல்லது. நமகு அது உதவும். நம்முடைய உண்மையான நிலை என்ன என்பதை நீங்கள் அவர்களுக்குச் சொல்லலாம் அல்லவா...? சைமன் கமிஷனைத் திரும்பிப் போ என்று கூக்குரலிடுவது, அவர்கள் காதில் தெளிவாக விழுவதற்கு யாரேனும் எடுத்துச் செல்ல வேண்டும் அல்லவா...? நீங்கள் துபாஷியாகவே இருங்கள்' என்று சொல்லிவிட்டுப் போனார். இந்தக் கட்டுரையைப் படிக்க ஆரம்பித்தேன். என்னால் தாங்கமுடியவில்லை. பலமுறை அழுதுவிட்டேன். என்ன ஒரு தியாகம்... எவ்வளவு உறுதி" -மறுபடியும் வைத்தீஸ்வரன் கண்களில் நீர் பெருகியது.

'சைமன் கமிஷனைத் திரும்பிப் போ என்றால் போய்விடுவார்களா...?'

'போகமாட்டார்கள். இப்போது வெளிப்படையாக சைமன் கமிஷனைப் போ என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, உள்ளே வெள்ளையனே வெளியேறு என்பதுதான் உண்மையான கோஷம். அது வெகு சீக்கிரம்

ஒலிக்கப்போகிறது. இந்தியர்களுடைய நலனைக் காக்க, ஒரு கமிஷனை பிரிட்டிஷ் அரசாங்கம் அமைத்திருக்கிறது. அந்த கமிஷனுக்குத்தான் சைமன் கமிஷன் என்று பெயர். அதில் ஒரு இந்தியர்கூட இல்லை. இது என்ன கமிஷன்...? நமக்கு என்ன நன்மை செய்துவிடும்...? இதனால்தான் இதைத் திரும்பிப் போ என்று சொல்கிறார்கள்..."

அன்று மாலை வண்ண வண்ணமான எம்ப்ராய்ட்ரி நூலில் மகாத்மா காந்தியின் உருவத்தைச் சங்கிலித் தையலால் வாலாம்பாள் பின்னத் துவங்கினாள். நாலே நாளில் சட்டமிட்டு வீட்டில் மாட்டினாள். அக்கம்பக்கத்தார் வந்து அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு போனார்கள்.

"செய்யற வேலை துபாஷி... வீட்டுல இருக்கறது காந்தி படமா...? இழுத்து விட்டுடறம் பார்..." -அலுவலகத்தில் கூடவே வேலை செய்தவர்கள் கொக்கரித்தார்கள்.

"எப்படா மாட்டுவீங்கன்னு காதுக்கிட்டிருக்கோமில்ல... கவுக்காம விடமாட்டோம்ல..." தொடை தட்டிச் சில அதிகாரிகள் பேசினார்கள்.

கோட்டைக்குள் சர்க்கார் அலுவலகத்துக்குள் வேலை செய்பவர்களிடையே இரண்டுவிதமான பிரிவு இருந்தது. பரஸ்பர வெறுப்பு இருந்தது. இந்தியாவின் வடக்கே இந்து-முஸ்லிம் பிரிவினை போல, இந்தப் பக்கம் வேறு விதமான ஒரு பிரிவு ஜனங்களை ஆட்டி வைத்தது.

"இனிமே எங்களை ஏமாத்த முடியாது. இங்க வராத. அங்க வராதன்னெல்லாம் சொல்ல முடியாது. ஓட்டல்ல தனி ரூம் போட்டு, நீங்க தின்ன முடியாது. நீங்க எங்க நின்னாலும் நாங்களும் அங்க நிப்போம். நீங்க எங்க நின்னாலும் நாங்களும் அங்க தின்போம். மனுஷனுக்கு மனுஷன் உயர்வென்ன, தாழ்வென்னய்யா...?

எங்களைப் பத்தி இழிவா பேசிட்டு, அந்த வெள்ளைக் காரன் முன்னாடி எட்டு மடிப்பா நிக்கிறீங்களே...

நியாயந்தானா...? மிலேச்சன் நாங்களா, அவனாய்யா...? மிலேச்சன்கிட்ட நீங்க வேலை செய்யலாமாய்யா...? ஊர்ல மத்தவங்களுக்கெல்லாம் உபதேசம் பண்றீங்களேய்யா... நீங்க எதுனா ஒரு கொள்கையை ஒழுங்கா கடைப்பிடிக்கிறீங்களாய்யா...?

கடல் கடந்து போகக்கூடாதுன்னு சொல்றீங்க... நீங்க போறீங்க. உங்க ஜாதி ஆளு வட்டமேஜை மாநாட்டுல கலந்துட்டு, இங்க வந்து பெரிய வைஸ்ராய் மாதிரி பேசறான். சட்டை போடக்கூடாதுன்னீங்க... கோட்டு வரைக்கும் போட்டுட்டீங்க. குடுமியை எடுக்கக்கூடாதுன்னீங்க. இப்போ ஊரை ஏமாத்தற ஒரு விரல் குடுமி வெச்சிருக்கீங்க எதுக்குய்யா இந்தப் பம்மாத்து...? வாங்க, நீங்களும் வேத புஸ்தகத்தை எடுத்துக்கோங்க. நீங்களும் வேதக்காரனா மாறிடுங்க..."

உரத்த குரலில் அவருக்குச் சவால் விடப்பட்டது.

"செஞ்சாலும் செய்வாங்கப்பா..." என்று வேறொருவர் சொல்ல, சிரிப்பலைகள் எழுந்தது.

ஆனால், ஆங்கிலேய ராணுவ அதிகாரிகளும் கவர்னர்களும் கவர்னர் ஜெனரல்களின் உதவியாளர்களும் மாவட்ட நிர்வாகிகளும் ஹைகோர்ட் நீதிபதிகளும் அட்டகாசமான வக்கீல்களும் வைத்தீஸ்வரன் போன்றவரையே வேலைக்கு வைத்துக் கொண்டார்கள்.

21

ஆங்கிலேய அதிகாரிகள், இந்திய உதவி அதிகாரிகளை அழைத்துக் கூட்டம் கூட்டி, இடுப்பில் கைவைத்துக் கம்பீரமாகப் பேசினார்கள்.

"நீ யார், என்ன மதம், என்ன ஜாதி... இதுபற்றியெல்லாம் எனக்குக் கவலை இல்லை. எனக்குத் தேவை திறமையான

ஆட்கள். பத்திலிருந்து ஐந்து வரை... நடுவே அரை மணி நேரம் ஓய்வு. எனக்கு உண்மையான ஊழியனாக இருந்துவிட்டால் போதும். எனக்கு உதவி செய்தால் போதும். மற்றபடி உன்னுடைய ஜாதி விஷயத்திலோ, மத விஷயத்திலோ, சடங்கு சம்பிரதாயத்திலோ நான் தலையிடவே மாட்டேன்..." -அவர்கள் உறுதி சொன்னார்கள். சொன்னபடி செய்தார்கள்.

"இந்தியா-பிரிட்டிஷாரின் கண். இங்கு விளையும் பொருட்கள் எங்களுக்குத் தேவை. மறுபடியும் இன்னொரு உலக யுத்தம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த நேரத்தில் உங்களையெல்லாம் நாங்கள் பகைத்துக் கொள்ள விரும்பவேயில்லை. நீங்களும் எங்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்..." என்று அவருக்கு எஜமானாக இருந்த பிரிட்டிஷ்காரன், ஒரு கவர்னரின் தலைமை அதிகாரி உரத்துச் சொன்னார்.

"சைமன் கமிஷனைத் திரும்பிப் போ என்று கூச்சலிட்டால் திரும்பிப் போய்விடுவார்களா...? மலபாரில் நடந்த அடிதடி ரகளைக்கே மசியாத நாங்கள், இதற்கெல்லாம் பயந்துவிடுவோமா...? ஆனாலும் நீங்கள் உங்களுடைய குரலை உயர்த்தி என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்று சொல்ல உங்களுக்கு உரிமை அளித்திருக்கிறோம். இது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருணை. எனவே, உங்கள் ஆர்ப்பாட்டத்தை நாங்கள் கலைக்கப் போவதில்லை. அது வன்முறைக்குப் போனால், அப்போது எங்களுடைய வேகமே வேறு..." என்று எச்சரித்தான்.

"இவனுங்க என்னய்யா சொல்றது, சைமன் கமிஷன் திரும்பிப் போன்னு. சைமன் கமிஷனே வா... வருக, வருக... மேதகு அரசரை இறைவன் காப்பாற்றட்டும்..." என்று காங்கிரஸுக்கு எதிர்க் கட்சியினர் பாட்டுப் பாடினார்கள்... வரவேற்றார்கள்.

'சென்னை துரோகம் செய்தது' என்று வட இந்தியாவிலிருந்து காங்கிரஸ்காரார்கள் கொதித்தார்கள்... இழிவாகப் பேசினார்கள்.

வைத்தீஸ்வரனுக்கு இந்த வார்த்தைகள் மிகவும் வலித்தன.

"நீங்க ஏன் எப்போ பார்த்தாலும் காங்கிரஸ்... எதிர்க்கட்சி, ஆபீஸ், வெள்ளைக்காரா, பூர்ண சுதந்திரம்னே பேசிண்டிருக்கேள்... வேற பேசறதுக்கே இல்லையா...? பால சுந்தரம்னு ஒருத்தர் தென்னாப்பிரிக்காவில அடிமையா இருந்து, ரத்த விளாறா அடிப்பட்டனார்னு சொன்னேளே... அதைவிட இந்த வாழ்க்கை எத்தனையோட மேல... யாரும் யாரையும் அடிக்கலை. ஏதோ ஒரு அபிப்பிராய பேதம். வெள்ளைக்காரன் நம்மள மரியாதையாத்தான் நடத்தறான். நாமளும் வெள்ளைக்காராள மரியாதையா நடத்தறோம். ஏதோ இருந்துட்டுப் போகவேண்டியதுதானே..."

வாலாம்பாள் நீதி சொன்னாள். அதே நீதியைப் பல பேர் பேசிக்கொண்டார்கள். கடைப்பிடித்தார்கள்.

பிரித்தாளும் சூழ்ச்சியைத் தன் ஆணிவேராகக் கொண்டிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம், தமிழகத்தில் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியை வேறு விதமாகக் கடை பிடித்தது.

வடக்கே மதவாதக் கலவரத்தைத் தூண்டி விட்ட பிரிட்டிஷ் அரசாங்கம், தெற்கே வகுப்புவாதக் கலவரத்தைத் தூண்டியது.

உப்புக்கு வரியை பிரிட்டிஷ் அரசாங்கம் வேண்டுமென்றே அதிகப்படுத்தியது. 'இயற்கை கொடுக்கும் உப்புக்கு வெள்ளைக்காரன் வரி போடுகிறான். இது நியாயம்தானா?' என்று மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி உரத்துக் கேட்க, மக்கள் விழித்துக் கொண்டார்கள்.

"என் மண்ணில், எனது ஆட்கள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவிக்கிற இந்த உப்புக்கு நீ என்ன வரி போடுவது..."

உப்பு இல்லாமல் யாரால் இருக்க முடியும்...? இடையறாது எங்களை மிதித்துக்கொண்டே இருக்க வேண்டும். எங்களை அவமானப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும் அப்படித்தானே...? நாங்கள் எல்லோருமே உப்பு காய்ச்சப் போகிறோம். எங்கள் வீட்டுக்கு உப்பு நாங்களே சேகரிக்கப் போகிறோம். வரி, பட்டை நாமம்தான்..." என்று இந்திய மக்கள் உரத்துச் சொல்ல, பிரிட்டிஷார் கோபப்பட்டார்கள்.

உப்புக் காய்ச்சின இடத்திலெல்லாம் மிருகத்தனமாக தடியடி நடத்தினார்கள். சத்தியாக்கிரகம் என்ற வார்த்தை திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. உப்பு சத்தியாக்கிரகம் என்று அது அழைக்கப்பட்டது.

"சத்தியாக்கிரகம்னா என்ன...?" -வாலாம்பாள் கேட்டாள்.

"அகிம்சை வழி. என்ன அடிச்சாலும், என்ன ஜெயில்ல போட்டாலும், பதிலுக்கு முரண்டு பிடிக்கலை. அதே சமயத்தில், போராடுவதை நிறுத்தவும் போறதில்லை. அவனா அலுத்துப்போய் தடியைக் கீழே போடறவரைக்கும் போராட்டம் நடக்கும்..." என்றான் வைத்தீஸ்வரன்.

"இப்படிப் பண்ணா விட்டுறுவானா...? அவனுக்குச் சுலபமா போயிடுச்சே... அடிச்சுக் கொன்னுடுவானே..."

அப்படித்தானே பிரிட்டிஷார் செய்தார்கள். மெரீனாவில் உப்பைக் கொட்டி, உப்பைக் காய்ச்சுகிறேன் என்று முயற்சித்த இளைஞர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினார்கள். வேதாரண்யம் அருகே அகத்தியன் பள்ளியில் உப்புக் காய்ச்சிய ராஜாஜியைக் கைது செய்து, இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். ஊரிலே பல பேர் கைதானார்கள்.

"ஏன்யா, எல்லாரும் வரிசையா நின்னு கோயிலுக்குப் போகறா மாதிரி ஜெயிலுக்குப் போறாளே... உள்ள போனா அடிக்க மாட்டானா...?"

"அடிப்பான். திமிர்னு நினைச்சுப்பான்... இத்தனை பேருக்குச் சோறு போட வேண்டியிருக்கே. அப்படிம்பா. இன்னிக்குச் சோறு கிடையாதும்பா... மறுநாள் சோறு போடுவான். சோறு போடறபோது உள்ளே புகுந்து சடேர் சடேர்னு அடிப்பான். இவா தின்னுண்டே அடி வாங்கிண்டிருப்பா."

"நிஜமாவா...?"

"பின்னென்ன... தினமும் ஒரு திருநாள், தினமும் ஒரு திருவிழா..."

ஜெயிலிலிருந்து வெளியே வந்தவர், ஜெயிலுக்குப் போகப் பயந்தவரைப் பார்த்துப் பேசினார்.

"எதுல அடிக்கறான்...?"

"பிரிட்டிஷ் ஆபீஸர் சவுக்குல அடிக்கறான்யா. நம்ம ஊரு ஆட்களே போலீஸ் ஆளா இருந்து பிரம்பு எடுத்து விளார், விளார்னு விளார்றான். ரத்தம் கசியற வரைக்கும் அடிக்கறத நிறுத்த மாட்டேன்றான். ஒருத்தனுக்குப் பத்துப் பன்னெண்டு அடி தாராளமா கிடைக்கறது..."

"ராஜாஜி, காமராஜர்... அவாளுக்கெல்லாம் கூட இதே மாதிரிதானா...?"

"இல்லை. அவாளுக்கெல்லாம் தனி செல்லு. அவா உட்கார்ந்துண்டு அடிக்காதிங்கோ, அடிக்காதிங்கோன்னு சொல்லிண்டிருப்பா. ஆனாலும் அவன் அடிப்பான். அடிச்சவாளுக்குப் பெரிய பெரிய தலைவர்கள் பக்கத்துல உட்கார்ந்து மருந்து தடவிக்கிற பாக்கியம் கிடைக்குமே... இதுக்காகவே அடிவாங்குவா..."

"மருந்து கொடுப்பானா வெள்ளைக்காரன்?"

"ஆமாம்... அடிச்சுட்டு மருந்து கொடுப்பான். செத்துப் போயிடக்கூடாது இல்லையா...? செத்துப்போயிட்டா, கொலைக்குத்தம் வந்துருமே..."

"எல்லாரும் ஒருவிதத்துல தர்மத்துக்குக் கட்டுப்படறாளு வெச்சுக்கோ..."

"இல்லை.. தர்மம் இல்லை. பிரிட்டிஷ்காரன்கிட்ட வெறி ஜாஸ்தியாயிடுத்து..."

மயிலாப்பூர் கபாலி கோயில் குளக்கரையில் உட்கார்ந்து அரசியல் அரட்டையடித்துக்கொண்டிருந்த வைத்தீஸ்வரன் உரத்துக் கூறினார். எல்லோரும் அவரையே திரும்பிப் பார்த்தார்கள்.

"பதினாலு வருஷம் கழிச்சு செவ்வாய் மறுபடியும் மாறுது. தப்பான இடத்துக்கு வரது. இது பிரிட்டிஷ் காரனுக்கு நல்லதில்லை. நான் இன்னிக்குக் காலையில கூட கவர்னர்கிட்ட சொன்னேன்..."

"என்ன சொன்னேள்?"

"மறுபடியும் யுத்தம் வரும்னு சொன்னேன்..."

"எப்போ..?"

"இன்னும் அஞ்சு வருஷத்துல..."

"இன்னும் அஞ்சு வருஷம் இருக்கே.. இப்போ என்ன கவலை..?"

"பெரிய யுத்தம். மிகப்பெரிய யுத்தம். பிரிட்டிஷ்காரன் நாயா அடிபடப் போறான். அவன் ஜனங்கள் பூச்சிப் புழுவா சாகப்போறது. எல்லார் தலையிலும் குண்டு விழப்போறது. ஆம்பளை, பொம்பளை, குழந்தேள் பார்க்காத துப்பாக்கி குண்டெல்லாம் சரமாரியா கடப்போறான்..."

"யார் யாரைச் சுடப்போறான்..?"

"ஜெர்மனிக்காரன் வந்துண்டிருக்கான்..."

"ஜெர்மனிக்காரனுக்கும் பிரிட்டிஷ்காரனுக்கும் ஆகாதோ..?"

"ஆகவே ஆகாது..."

"ஒருவேளை ஜெர்மன்காரன் இந்தியாவ ஆண்டா நன்னாயிருக்குமோ..?"

"அபத்தமா பேசாதய்யா.. நம்மள நாமதான் ஆட்சி செய்யணும்."

"ஏன் ஓய்.. இங்க உட்கார்ந்துண்டு கம்மா நாமதான் ஆட்சி செய்யணும்னு பேசிண்டிருக்கீரே... உம்ம ஆபீஸுக்குத் தெரிஞ்சா தூக்கி எறிஞ்சுட மாட்டானோ..?"

"எறியட்டுமே.. நஷ்டஈடு கொடுனு கேட்டு வழக்குப் போட்டு, நஷ்டஈடு வாங்கிண்டு வீட்டோட உட்கார்ந்துக் கப் போறேன். மயிலாப்பூர்ல யாராவது வக்கீல்கிட்ட இங்கிலீஷ் பேசற உதவியாளரா சேர்த்துக்கப் போறேன். வெள்ளைக்காரனுக்கு துபாஷியா இருந்த மாதிரி. ஐயங்காருக்கோ, ஐயருக்கோ துபாஷியா இருந்துட்டுப் போறேன்..."

"அப்பவும் காங்கிரஸ்ல சேர மாட்டீராக்கும்..."

''இருக்கறவாளே காங்கிரஸைவிட்டுப் பிச்சுண்டு போயிக்கிட்டிருக்கா. நான் சேர்ந்து என்ன ஆகப்போறது..?"

"இல்லை ஓய்.. இப்போதைக்கு காங்கிரஸ் பலமில்லாம இருந்தாலும், மறுபடியும் பலமா வரும்னு எனக்குத் தோண்றது. அஞ்சு வருஷம் கழிச்சு யுத்தம் வரப்போறதுன்னா, நாமெல்லாம் என்ன பண்ணணும்...? யுத்தத்துல சேரணுமா...? இங்க வந்து ஜெர்மனிக்காரன் குண்டு போடுவானா..?"

"இல்லை... இந்தியாவுல, குண்டே விழாது. சண்டையே நடக்காது. ஆனா, இங்கேயிருந்து சாமான்களெல்லாம் யுத்தம் நடக்கற இடத்துக்குப் போகும். டீ கிடைக்காது. சர்க்கரை கிடைக்காது. வெல்லம் கிடைக்காது. அரிசி கிடைக்காது. கோதுமை கிடைக்காது. அள்ளி அள்ளி எல்லாத்தையும் லண்டனுக்கு எடுத்துண்டு போயிடுவான்..."

"அப்போ என்ன பண்றது...? வெறும் ரூபாயை வெச்சுண்டிருக்கறதா...?"

"ரூபாய்க்கு மரியாதை குறையப் போறது..."

"அப்போ வீடா வாங்கிப் போடவா..."

"இல்லை... தங்கமா மாத்து. இப்பவே சவரன் பதிமூணு ரூபா விக்கறது ஓய்... அஞ்சு வருஷம் கழிச்சு நூறு ரூபா வரைக்கும் போகும். அப்போ என்ன பண்ணுவீர்...?"

"கையில காசு இல்லையே... எப்படித் தங்கம் வாங்கறது...?" ஒருவர் கேட்க, "கடன் வாங்கி தங்கம் வாங்கும். தங்கம் விலை கன்னாபின்னான்னு போகப் போறது. அப்போ அதை வித்துட்டுக் கடனை வட்டியோட அடைச்சுட்டு மிச்ச காசுக்கு மறுபடியும் தங்கம் வாங்கு."

திடீரென்று மயிலாப்பூர் நகைக் கடைகளுக்கு அவர்கள் படையெடுத்தனர். சௌகார்பேட்டைக்கு ஓடிப்போய் தங்க வில்லைகளாகவும் தாயக் கட்டைகளாகவும் தங்கம் வாங்கி வீட்டில் வைத்தார்கள்.

"ஐயருங்க எல்லாரும் ஏன் தங்கம் வாங்கறானுக...?" -மற்றவர்கள் கேட்டார்கள்.

"அஞ்சு வருஷம் கழிச்சு யுத்தம் வரப்போவுதாம்."

"பைத்தியக்காரப் பயலுவ... சும்மா ஏதாவது கிளப்பிவிட்டு கிட்டே இருக்காக... ஒரு வேட்டு வைக்கிறம் பாரு..."

"நீங்கள் குளக்கரையில் உட்கார்ந்து, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசுகிறீர்களாமே... உங்களைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதம் வந்திருக்கிறது..." -வைத்தீஸ்வரனின் அதிகாரி அதட்டினார்.

"முற்றுப்புள்ளி, கமா இல்லாமல் கடிதம் வந்திருக் கிறதா...?"

"ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"இதை யார் எழுதுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களுக்கு ஆங்கிலம் நன்கு தெரியாது. எப்போது கமா, எப்போது முற்றுப்புள்ளி என்று புரியாது. வைஸ்ராய்கூட ஸ்பெல்லிங் தப்பாக எழுதியிருப்பார்களே...?"

"ஆமாம்... அப்படித்தானே எழுதியிருக்கிறார்கள்..."

"இன்னும் தெளிவாகப் புரிந்து விட்டது. நீங்கள் ஏதேனும் விசாரணை நடத்தினால், நான் அதை ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்."

"ஒரு விசாரணையும் இல்லை... ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்றுதான் கேட்கிறேன்..."

"உங்களுக்கு தகவல் வேறெங்கிருந்து சொல்வது...? மக்கள் மனோநிலை எப்படி இருக்கிறது என்பதை நான் எப்படி உங்களுக்கு விவரிப்பது...? வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஆட்களை அனுப்பிக் கேட்டுப் புரிந்து கொள்ள முடியுமா...? அவர்கள் நடுவே உட்கார்ந்து கொண்டிருந்தால்தான் முடியும்..."

"நீங்கள் ஒற்றரைப் போலச் செயல்படுகிறீர்களா...?"

"கிட்டத்தட்ட அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்..."

வைத்தீஸ்வரன் சாமர்த்தியமாகப் பதில் சொன்னார். ஆனால், உள்ளுக்குள் கவலைப்பட்டார். எந்நேரமும் ஒரு கொதிப்பு உடம்பில் இருந்தது.

"அப்படியானால் சரி... உமக்குச் சம்பளம் கூடுதலாக தருகிறோம். உங்களை என் ஒற்றன் என்றே நான் ரகசியக் குறிப்பு எழுதி வைக்கிறேன்..."

அந்த பிரிட்டிஷ் அதிகாரி ரகசியக் குறிப்பு எழுதி வைத்தான். ஐந்து ரூபாய் சம்பளம் அதிகம் செய்தான்.

அந்த ரகசியக் குறிப்பை அவருக்கு எதிரானவரிடமும் படித்துக் காட்டினான். அவருக்கு எதிரானவர்கள் குளக்கரையில் வந்து, இவர் பிரிட்டிஷ் ஒற்றராகச் செயல்படுகிறார் என்று சொன்னார்கள்.

"என்ன ஓய்... குளக்கரையில் நடக்கிறதெல்லாம் கொண்டுபோய்க் கோட்டையில சொல்றேளாமே... என்ன விளையாடறீரா...? உம்மோட சங்காத்யம் எனக்கு வேண்டவே வேண்டாம்."

ஒருவர் உரத்துக் கத்த வைத்தீஸ்வரன் வாய்விட்டுச் சிரித்தார்.

"ஆமா... இவர் பெரிய வெடிகுண்டு விநாயகம். இவரைப் பத்தி பிரிட்டிஷ்காரன்கிட்ட சொல்லி, பிரிட்டிஷ்காரன் படையை அனுப்பி இவரையும் இவர் குடும்பத்தையும் கைது பண்ணிண்டு போய் எரவாடா சிறையில் வெச்சுடப் போறான். சும்மா உட்காருங்கோ... எவனோ போக்கத்தவன் போட்டுக் கொடுத்திருக்கான்னா, இதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படறேள்...?"

"நீங்க பிரிட்டிஷ்காரனுக்கு ஒற்றரா...?"

"நான் துபாஷி... அவன் கேட்கற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவன்..."

"அவன் குளக்கரையில நடக்கற மீட்டிங் பத்திக் கேட்பானா...?"

"ஆமா... கேட்பான்...?"

"இன்றைக்குப் பிரதோஷம்... சிவபெருமானுக்கு வில்வத்தாலயே அலங்காரம் பண்ணியிருந்தேம்பேன். வில்வத்துல எதுக்காக அலங்காரம் பண்றீங்க அப்படின்னு கேட்பான். அதுக்கு நான் பதில் சொல்வேன். பிரதோஷம்னா என்னன்னு கேட்பான். அதுக்கு விவரமா கதை சொல்வேன்..."

"மத்தபடி எங்க பேரெல்லாம் சொல்ல மாட்டீரே...?" -அவர்கள் பேசும்போதே பயந்தார்கள்.

22

"மயிலாப்பூர்ல இருக்கறவா பத்தி அவனுக்கு எந்த அக்கறையும் இல்லை..." -வைத்தீஸ்வரன் மயிலாப்பூர் அந்தணர்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்.

"ஏன்...?"

"உங்களால எந்த அபாயமும் இல்லைன்னு அவனுக்குத் தெரியும்..." -சிரித்தார்.

"மதுரை, தூத்துக்குடிதான் அவனுக்குப் பயம். அங்க தான் பட்டாக்கத்தி உருவிண்டு போராட்டக்காரர்கள் ஊர்வலம் போறாங்க..."

"ஆனா, அவாள கைது பண்ணலையாமே...?"

"விட்டு வெச்சுருக்கான். எப்போவாவது பண்ணுவான். அது, அடையாள ஊர்வலம்தானே அப்படின்னு பேசாம இருந்துட்டான்..."

"இதுதான் காரணமா...? இல்ல, வேற ஏதாவது காரணமா...?"

"அவா கத்தியும் ஈட்டியும் வீச்சரிவாளும் ஒண்ணும் பண்ணாது. முன்ன மாதிரி மருந்து போட்டுகிடிச்சு டொப், டொப்னு சுடற கொக்குத் துப்பாக்கி இல்லை... மெஷின் கன்னுன்னு ஒண்ணு வெச்சுருக்கான். பெல்ட் மாதிரி மூணு கெஜத்துக்கு துப்பாக்கி ரவை பொட்டியில் இருக்கு. அதை மெஷின் கன்ல வெச்சு அடிச்சான்னாக்க, நிமிஷத்துக்கு நாற்பது குண்டு வெளியே வருது. இப்படி வடக்கேர்ந்து தெற்கே பாதி திருப்பு திருப்பினான்னா, எதிரே இருக்கிற நூறு பேரும் க்ளோஸ். ரெண்டு நிமிஷத்துல நூறு பேரும்

செத்துப்போயிடுவா. அப்படிப்பட்ட ஆயுதங்களை கொண்டிருக்கிறவனுக்கு, உங்களைக் கண்டு என்ன பயம்...?"

"மோட்டார்ல மெஷின்கன் வெச்சுண்டிருக்கானா மேய்யா...?"

"ஆமா... மோட்டார்ல பீரங்கியே வெச்சுருக்கான்..."

"அதுக்கு வேற என்னமோ பேர் சொன்னாளே...?"

"டாங்க்னு பேர்..."

"டாங்க்னா தண்ணித்தொட்டி இல்லையோ...?"

"அதைக் கண்டுபிடிச்சவன், ஜனங்களுக்கு அது ஆயுதம்னு தெரியாம இருக்கணுங்கறதுக்காக அதைத் தண்ணித்தொட்டி அப்படினு சொல்லிட்டான். ஆனாலும் ஜெர்மன்காராளுக்கு, பிரிட்டிஷ்காராளுடைய டாங்க் என்ன பண்ணும்னு தெரிஞ்சுருக்கு..."

"டாங்க் என்ன பண்ணும்...?"

"எதிரே கபாலீஸ்வரர் கோயில் இருக்கோன்னோ..." -வைத்தீஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

"இருக்கு..." -மயிலாப்பூர் அந்தணர்கள் பதில் சொன்னார்கள்.

"இந்தக் குளக்கரையில் மேற்குப் பக்கம் ஒரு டாங்க் நின்று கபாலீஸ்வரர் கோயிலைப் பார்த்துப் பத்து தடவை சுட்டுதுன்னா, கபாலீஸ்வரர் கோயில் குப்பை மேடா போகும்..."

"பத்து குண்டுலயா...?"

"ஆமாம்!"

"அப்புறம்...?"

"அதுக்குப் பல்சக்கரம் இருக்கு. பல் சக்கரத்துமேல இரும்பு பெல்ட் போட்டிருக்கு. எதுல வேணாலும் இறங்கி, எதுல வேணாலும் ஏறும்..."

"இந்தக் குளத்துல இறங்கி ஏறுமா...?

"குளத்துல இறங்காதுய்யா... மேட்டுல ஏறும். பள்ளத்துல சறுக்கிப் பிடிப்பா இறங்கும். ரோடுனு அவசியமே இல்லை. அதுக்குச் சொல்ல வரேன்..."

"அடேயப்பா. இதைத் தவிர ஏரோப்ளேன்..."

"ஆமாம்."

"அதுலேர்ந்து வேற குண்டு போடறான்..."

"ஆமாம்."

"ஒண்ணுமே அவனை பண்ண முடியாதாய்யா...?"

"ஒண்ணும் பண்ண முடியாது."

"பிரிட்டிஷ்காரன் இந்தியாவைவிட்டுப் போகவே மாட்டானா...?"

"அவனா போனாத்தான் உண்டு..."

"அவனா எப்போ போவான்...?"

"வரப்போறதுய்யா... வரப்போறது."

"என்ன வரப்போறது...?"

"யுத்தம் வரப்போறது."

"இதையேதான் ரொம்ப நாளா சொல்லிண்டிருக்கேள்... திரும்பத் திரும்பச் சொல்றேள்..."

"பிரிட்டிஷ்காரன் அழியப்போற ஒரு நாள் வரப் போறது. ஐரோப்பா கண்டம் முழுக்கச் சாம்பலா போகப் போறது. இங்கே அவன் அடிச்ச அடி, இங்கே அவன் பண்ண பாபங்கள் மொத்தமும் அங்கே அவன் ஊர்ல

நிச்சயமா அனுபவிக்கப் போறான். இங்கேயிருந்து எடுத்துண்டு போன அத்தனை செல்வமும் வெடிகுண்டா மாறப்போறது. ஆனா, துருக்கி தேசத்துல உள்ளே புகுந்து, அந்தத் தேசத்தையே சர்வநாசம் பண்ணிட்டான்யா... யார் மதத்தலைவர், யார் ராஜா... எல்லாம் அவன்தான் தீர்மானம் பண்றான். நல்லவேளை, அந்த மாதிரி இங்கெல்லாம் பண்ணலை."

"மறுபடியும் கேட்கறேன்... சத்தியமா சொல்லு. கபாலி சத்தியமா சொல்லு... நீர் எங்களை வேவுபார்த்து பிரிட்டிஷ்காரன்கிட்ட மாட்டி விட்டுடுவீரா...?"

"உம்மை வேவு பார்த்து என்னய்யா ஆகணும்...? நீர் யார்... அவனுக்கு எதிரே ஒரு குப்பை... மண்புழு... வெறும் விட்டில்பூச்சி. நான் இல்லாத நீயா போய் கபாலீஸ்வரர் கோயில் உற்சவத்துக்கு பர்மிஷன் வாங்கிடு, பார்ப்போம்..."

"கோச்சுக்காதீங்கோ ஓய்... நீர்தான் வருஷா வருஷம் கபாலீஸ்வரர் கோயில் உத்ஸவத்துக்கு பர்மிஷன் வாங்கிக் கொடுக்கறேள்னு தெரியும். உம்ம பேர்ல பிரமாண்டமா நீர்மோரும் கதம்பச் சாதமும் போடறேனே..."

"நீரா ஏன் இதைத் தம்பட்டம் அடிச்சுக்கறீர்... தங்கம் வாங்கினீரா...?"

"வாங்கிட்டேன்... ஃபண்ட் ஆபீஸ்ல போட்டிருந்த அத்தனை காசும் ரொம்ப அவசரம்னு எடுத்து, அத்தனைக்கும் தங்கம் வாங்கிட்டேன்..."

"ரொம்ப சந்தோஷம்... மாசாந்திர செலவுக்கு என்ன பண்றீர்...?"

"பசங்களுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்துண்டிருக்கேன்..."

"இங்கிலீஷும் சொல்வித் தாரும். நீரும் இங்கிலீஷ் படியும்..."

"இங்கிலீஷுக்கு அவ்வளவு எதிர்காலமா...?"

"வேற எந்த மொழிக்கும் எதிர்காலம் இல்லை..."

"துபாஷியா போகறதுக்குத்தான் இங்கிலீஷா..."

"துபாஷியா வேண்டாம்... பாம்பேக்குப் போகலாம். மெட்ராஸ் மாதிரி பாம்பே குறட்டைவிட்டுத் தூங்கலை. அங்க வியாபாரம் பெருத்துண்டு வருது. உலகப்போர் வந்தா, பெரிய சந்தையா பாம்பே மாறிப் போயிடும். இந்தியாவில இருக்கிற எல்லா சரக்கும் பம்பாய்க்குப் போய், பம்பாயிலிருந்து பிரிட்டிஷ்காரனுக்கும் போகும். அப்போ அங்க நிறைய கம்பெனி தேவைப்படும். கணக்கு வழக்கு செய்யற குமாஸ்தாக்கள், கடிதம் எழுதுகிற மானேஜர்கள் அப்படிஙு நிறையப் பேர் தேவைப்படும். இப்போ உங்க பையனை இங்கிலீஷும் கணக்குப் படிக்க வெச்சுடும். பாம்பேக்கு அனுப்பிடும்... கத்த கத்தையா காசு சம்பாதிக்கலாம்..."

"இப்படித்தான் நடக்குமா...?"

"இதுதான் நடக்கும்..."

"நீர் வெள்ளைக்காரன்கிட்ட வேலை செய்றீர்னு ஒரு வருத்தம் இருந்தாலும் நீர் எங்களுக்குச் செய்யற உதவி இருக்கே, ரொம்பப் பரிசு ஓய்... ஒரு சபா ஆரம்பிக்கறதுக்கு கவர்னர்கிட்டேயிருந்து பர்மிஷன் வாங்கிக் கொடுங்கோளேன்..."

"ஆஹா. ஆரம்பிச்சுடலாமே... திருவல்லிக்கேணியில ஆரம்பிக்கலாமா, மயிலாப்பூர்ல ஆரம்பிக்கலாமா...?"

"திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ரெண்டும் சேர்த்து நடுவாந்திரமா ஒரு இடத்துல ஆரம்பிக்கலாம்..."

"சபா ஆரம்பிச்சு என்ன பண்றது...?"

"பாட்டுக் கச்சேரிதான், டான்ஸுதான்... வீணை வாசிக்கறவாளும் பாட்டுப் பாடறவாளும் டான்ஸ்

ஆடறவாளும் தஞ்சாவூர்ல ஏகப்பட்ட பேர் இருக்கா. நூறு ரூபா கொடுத்தனுப்பினா போதும்– இங்கே தங்க ஏற்பாடு பண்ணினா போதும். இருந்து நாலு நாள் சதிர்க்கச்சேரி நடத்திட்டுத்தான் போவா. குண்டு குண்டா சில பொண்கள் கோபாலகிருஷ்ணன் பாரதியார் பாட்டுக்கு அபிநயம் பிடிக்கறது பாரும்... ஆஹா! சொக்கிப் போயிட்டேன். அவாளே புதுசு புதுசா பதங்கள் உருவாக்கி, ரொம்ப நன்னா பண்றா. நாலு மணி நேரக் கச்சேரி– சோறு தண்ணியே தேவைப்படலை. அத்தனை சுகமா இருக்கு. போயேன்..."

அன்றைய சித்திரைத் திருவிழாவின் போது ஒரு சபா ஆரம்பிக்கப்பட்டு, சதிர்க்கச்சேரிகளும் பாட்டுக் கச்சேரி களும் வீணைக் கச்சேரிகளும் வைக்கப்பட்டன.

மயிலாப்பூர், திருவல்லிக்கேணியில் மிகப் பெரிய பங் களாக்களில் இந்தக் கச்சேரிகள் நடந்தன. திருவல்லிக் கேணியில் காலையில் ஆடிய பார்ட்டி, மாட்டுவண்டி ஏறி மயிலாப்பூருக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து, மாலையில் இன்னொரு கச்சேரி நடத்தியது.

வக்கீல்களும், அதிகாரிகளும், குமாஸ்தாக்களும், வியாபாரிகளும் முதல் வரிசையில் அமர்ந்து நாட்டியத்தை ரசித்தார்கள். பாட்டு கேட்டுச் சொக்கிப் போனார்கள்.

வடக்கே ஆங்கில ஆதிக்கத்தை ஜனங்கள் எதிர்த்த அளவுக்குத் தெற்கே எதிர்க்கவில்லை. ஊரே அமைதியாக இருந்தது.

ஆனால், வைத்தீஸ்வரன் சொன்னது போல யுத்தம் வந்தது. அந்த யுத்தத்துக்கு இரண்டாம் உலகப்போர் என்று பெயர் வைத்தார்கள். காங்கிரஸும் இந்திய மக்களும் அந்தப் போரில் பிரிட்டிஷார் பக்கம் துணையிருந்தார். ஆனால், ஜெர்மானியர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார் கள். முதலில் ஆஸ்திரியா கபளீகரம் ஆகியது.

வைத்தீஸ்வரனுக்குக் குழந்தைகள் பிறந்தன. நீலகண்டன் என்று முதல் மகனுக்குப் பெயரிட்டார். இரண்டாவது மகன் பிறந்த போது, சுப்ரமணிய சிவம் என்று பெயரிட்டார். மூன்றாவது பெண் பிறந்தபோது, கலிக்குயில் சரோஜினியின் நினைவாக சரோஜினி என்று பெயரிட் டார். அவர் மனைவி வாலாம்பாள், தன் உறவுகளிடம் உரக்க அலட்டிக் கொண்டாள்.

"நல்லவேளை. எனக்கு ஒரே பயம்– உங்கப்பா திலகர், கோகலே, கோவிந்த வல்லபந்த் அப்படினு பேர் வெச்சு வாரோனு. ஏதோ தென்னிந்திய பேரா வெச்சுருக்காரே– அதுவரைக்கும் சந்தோஷம் குளிரோ, வெயிலோ... கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்துடணும். பல்பொடி தரேன், எடுத்துக் கரகரன்னு பல் தேய்ச்சுடணும்.

தேய்ச்சுட்டு வாய் கொப்பளிச்சுட்டு, ஒரு உருண்டை வேப்பங்கொழுந்து விழுங்கணும். போய் கைகால் அலம்பிண்டு வந்து, கோதுமைக் கஞ்சி ரெண்டு டம்ளர் குடிக்கணும். மாடிக்குப் போய் அப்பா சொல்லிக் கொடுத்த யோகாசனம் பண்ணணும். கீழே இறங்கி, நீங்களா இணத்துலேர்ந்து தண்ணி இறைச்சுத் தலையில விட்டுக்கணும்– பொம்மனாட்டி பொண்ணுக்கு இறைச்சுக் கொடுக்கணும்.

இடுப்புல மடி வேஷ்டியைக் கட்டிண்டு, எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் பட்டை பட்டையா நெத்திக்கு இட்டுண்டு சந்தியாவந்தனம், காயத்ரி ஜபம் பண்ணணும். பொம்மனாட்டி பொண்ணு விளக்கேத்தி விட்டு, லலிதா சஹஸ்ரநாமம் சொல்லணும். பூஜை மாடத் துக்குக் கீழே எல்லோரும் ஒண்ணா நின்னுண்டு ரெண்டு தேவாரம், ரெண்டு திருவாசகம் சொல்லணும்.

அப்புறம் சமையக்கட்டுக்கு வாங்கோ. லைனா உட்காருங்கோ. பட்டுப் பட்டா தோசை வார்த்துப் போடறேன். தேங்காய் சட்னி, பிரண்டைத் தொகையல்,

நெய் மிளகாய்ப் பொடி மூணும் தரேன். வண்ணமா அஞ்சு தோசை, ஆறு தோசை சாப்பிடுங்கோ. போய்ப் படிக்க உட்காருங்கோ. ஒம்போது மணிக்கு அப்பா உரக்க பேப்பர் படிச்சுக் காண்பிப்பா. பேப்பர் படிச்சுக் காண்பிக்கும் போது, அதுல புரியாத வார்த்தை என்னன்னு அப்பா கிட்டே கேட்டுக்கணும். தினம் இருவது நிமிஷம் அப்பா பேப்பர் படிக்கறபோது கவனிக்கணும். லண்டன் என்ன ஸ்பெல்லிங் சொல்லு...?"

வாலாம்பாள் முதல் பிள்ளையை விசாரிப்பாள்.

"கமிஷன் என்ன ஸ்பெல்லிங், சொல்லு..."

அடுத்த பிள்ளையைக் கேட்பாள்.

"லோகோமோட்டிவ் என்ன ஸ்பெல்லிங்... சொல்லு..."

பெண்ணை விசாரிப்பாள்.

குழந்தைகள் ஒன்பதேமுக்கால் மணிக்கு கைரிக்ஷாவில் ஏறிச் சாய்ந்துகொண்டு, குளக்கரைக்கு அருகே இருக்கிற பள்ளிக்கூடத்துக்குப் போவார்கள். பிற்பகல் ஒரு மணிக்கு அதே கைரிக்ஷாவில் ஏறி, அவள் சாதம் கொண்டு போவாள். பையன்களுக்கு இரண்டு தனித்தனி டிபன் பாக்ஸில் கொடுத்துவிட்டு, அதே கைரிக்ஷாவில் வேகமாகப் பெண் பள்ளிக்கூடம் போவாள். அங்கு போய், பெண் குழந்தை சாப்பிடும்வரை காத்திருப்பாள். முகம் துடைத்துவிடுவாள். நெற்றிக்கு இட்டுவிடுவாள். தலைவாரி விடுவாள். பூ கொண்டு போனால் பூவும் வைத்துவிடுவாள்.

அங்கிருந்து திரும்பி, மறுபடியும் ஆண்கள் பள்ளிக் கூடத்துக்கு வந்து, அங்கிருக்கிற டிபன்பாக்ஸை வாங்கிக் கொள்வாள். அவர்கள் முகமும் துடைத்து நெற்றிக்கு இடுவாள். சில சமயம் சட்டை அழுக்காக இருக்கும் என்று தோன்றினால், கையோடு கொண்டுபோன வேறு சட்டையை மாட்டி, காலையில் கொண்டுபோன சட்டையைக் கொண்டுவந்துவிடுவாள்.

நான்கு மணிக்குக் குழந்தைகள் வந்துவிடுவார்கள். இருட்டும் வரை பாண்டி விளையாடுவார்கள். கல்லா, மண்ணா என்பார்கள். வீட்டைச் சுற்றி ஓடுவார்கள். தோட்டத்தில் போட்டிருக்கிற கம்பியைப் பிடித்துத் தொங்குவார்கள். மரத்தில் ஏறுவார்கள். மணலில் குதிப்பார்கள். ஆறு மணிக்கு அந்தி சாயும்போது மூன்று குழந்தைகளும் மறுபடியும் குளிப்பார்கள். நெற்றிக்கு இட்டுக்கொண்டு, பாட்டு வாத்தியாருடன் பாட்டுப் பாடுவார்கள்.

"குழந்தேளுக்குச் சங்கீதம் நன்னா வர்றது. வெறும் வாய்ப்பாட்டு மட்டும் வெச்சுக்காதீங்கோ... இவளுக்கு வீணை கத்துக்கொடுக்கலாம். ஒருத்தனுக்கு வயலின் கத்துக்கொடுக்கலாம். இன்னொருத்தன் மிருதங்கம் கத்துக்கட்டும். வீட்ல சங்கீதம் அமோகமா பொங்கிப் பெருகட்டும். மூணு பேருமே பாட்டும் கத்துக்கட்டும்..." என்று வாத்தியார் சொல்ல, அவள் சந்தோஷமாகத் தலையசைத்தாள். புருஷனிடம் விசாரித்தாள்.

"தாராளமா கத்துக்கட்டுமே... படிப்புப் பாழாகாத பார்த்துக்கோ..." என்று அவர் சொல்ல, "பசங்களை நான் கவனிச்சுக்கறேன். நீங்க அந்தக் கவலையே படாதீங்கோ... உங்களுக்கு இருக்கிற கவலை போதும்..." என்று ஆதரவு கொடுத்தாள்.

அடுத்த மாதமே தம்பூரா உட்பட தஞ்சாவூரிலிருந்து வாத்தியங்கள் வரவழைக்கப்பட்டன.

"வீணை அசுர வாத்தியம். குழந்தைக்கு இப்போதான் ஒன்பது வயது ஆகறது. எப்படி கைநீட்டி, எல்லா ஸ்வரக் கட்டையையும் தொடுவா...?"

"ஆரம்பத்துல கஷ்டமா இருக்கும். நன்னா ஊட்டமா வளங்கோ... பெண்குழந்தை நெகுநெகுனு வளரும். பெருசாயிட் டாள்னு வெச்சுக்கோங்கோ, வீணை நன்னா வசப்படும். ஒன்பது வயசுதான் வீணை கத்துக்கறதுக்கு

வயது. பதினஞ்சு வயசுல, ஒரு சோம்பேறித்தனம் வந்துடும். வீணை மனசுல பதியாது. கை, காப்புக் காய்ச்சுக் கெட்டிப் படட்டும்..." என்று பாட்டு வாத்தியார் சொல்ல, குழந்தைகள் ஆர்வத்தோடு கற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் கற்றுக்கொள்வதை அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து பார்த்தார்கள்.

மேலே வெறும் தளமாக இருந்த இடத்தை, பெரிய ஹாலாக மாற்றினார் வைத்தீஸ்வரன். சிவப்புத் தரை எழுதினார். சுற்றிப் பச்சை பார்டர் போட்டார். காற்றோட்டமாக ஜன்னல்கள் வைத்து, ஜன்னல்களுக்கு கலர் கண்ணாடிகள் வைத்து, நடுஹாலில் மேல்கூரையைச் சற்றுத் தூக்கி, அதிலும் கண்ணாடிகள் பதித்து வெளிச்சம் வரும்படியாகச் செய்தார்.

மழைநீரோ, வெயிலோ வராது. வெளிச்சம் மட்டும் ஹால் முழுவதும் கலர் கண்ணாடிகள் வழியாகப் பரந்து குளுமையாகப் பரவியிருக்கும். வீட்டைச் சுற்றி மரங்களும் செடிகளும் இருந்ததாலும் மாடி குளுமையாக இருந்தது.

குழந்தைகள் எவ்விதத் தொந்தரவும் இல்லாமல் சாதகம் செய்தார்கள்.

"அப்பா, எனக்கு இங்கிலீஷ் கத்துக்கணும்னு ஆசையா இருக்குப்பா. என்னை எட்டாவதோட நிறுத்திடாதப்பா..."

பெண் கெஞ்சியது.

"அடடே... யார் சொன்னா, உன்னை எட்டாவதோட நிறுத்தப் போறேன்னு...? வீணை நன்னா வாசிக்கறியே... வேணும்னா வீணையிலேயே மொத்தக் கவனமும் செலுத்தேன்னுதான் அம்மாகிட்ட பேசிண்டிருந்தேன். படிக்கணும்னா படி..."

"நான் படிப்பும் படிச்சுட்டு வீணையும் வாசிப் பேன்ப்பா..."

"பேஷா செய்... யார் வேண்டாம்னா...? பசங்களா... எப்படிறா இருக்கு சங்கீதம்...?"

பிள்ளைகளைக் கேட்டார்.

"படிப்பை விட்டுடலாம்னு தோண்றதுப்பா... எந்த நேரமும் வயலினும் வாய்ப்பாட்டோடயும் இருக்கலாமான்னு தோன்றதுப்பா..."

"வேண்டாம்... படிப்பு ரொம்ப முக்கியம். படிப்புதான் முக்கியம். இருக்கறது மொத்தமும் அஞ்சு சப்ஜெக்ட் தானடா... இங்கிலீஷ், தமிழ், கணக்கு, சயின்ஸ், சோஷியல் ஸ்டடீஸ்... இது படிக்கறது கஷ்டமா...?"

"கஷ்டம் இல்லைப்பா..."

"வேணா டியூஷன் வெச்சுடட்டுமா...?"

"அது நன்னா இருக்கும்ப்பா..."

"கார்த்தால கொஞ்சம் சீக்கிரமா எழுந்திருக்கும்படியா இருக்கும்..."

"எழுந்திருக்கோம்ப்பா..."

பிள்ளைகள் நாலு மணிக்கு எழுந்திருந்தார்கள். ஐந்து மணிக்கு எல்லா வேலைகளையும் முடித்தார்கள். ஐந்திலிருந்து ஆறு வரை சாதகம் செய்தார்கள். ஆறிலிருந்து எட்டு வரை டியூஷன் படித்தார்கள். ஒன்பதிலிருந்து குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கு ஓடினார்கள். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை முழுநேரச் சங்கீத வித்வான்களாக மாறினார்கள். பரீட்சை வரும்போது மும்முரமாகப் பாடம் படித்தார்கள்.

கூட்டுவட்டிக் கணக்கையும், அல்ஜீப்ராவையும் சொன்னவுடன் புரிந்துகொண்டார்கள். இருபதாம் வாய்ப்பாடு வரை திரும்பத் திரும்ப மனனம் செய்தார்கள். ஆங்கிலக் கட்டுரைகளை நெட்டுரு போட்டார்கள்.

"நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை..." என்றார்கள்.

23

வைத்தீஸ்வரனின் குழந்தைகள் விஞ்ஞானமும் படித்தார்கள். ஆனால், எல்லாப் படிப்பும் குமாஸ்தா படிப்பாகத்தான் இருந்தது.

வட இந்தியாவிலிருந்து வந்த ஒரு தமிழரை வைத்து அவர்களுக்கு இந்தி டியூஷனும் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

'கலம் கஹாங் ஹை.

கலம் மேஜ் பர் ஹை.

மேஜ் கஹாங் ஹை.

மேஜ் ஜமீன் பர் ஹை'

என்று பாடம் படித்தார்கள். அதற்குத் தனிப் பரீட்சை எழுதினார்கள்.

"கடையில் விக்கற கமர்கட்டோ, சர்க்கரை மிட்டாயோ வேண்டாம். அரிசிப் பொரி வாங்கிக்கோ. பலாப்பழம் வாங்கிக்கோ, தித்திப்பு வேணும்னா பால்கோவாவும் சர்க்கரைப் பொங்கலும் அம்மாவை பண்ணச் சொல்றேன். குஞ்சாலாடு பண்ணச் சொல்றேன். மாவுலாடு பண்ணச் சொல்றேன். வேணுங்கற அளவுக்கு எப்போ வேணாலும் உள்ளபோய் சாப்பிடலாம்.

தொன்னை நிறைய மிக்சர், டப்பா நிறைய முறுக்கு எடுத்துண்டு அப்படியே திண்ணையில உட்கார வேண்டியது. வேடிக்கை பார்த்துண்டே திங்க வேண்டியது.

என்ன வேணாலும் சாப்பிடு. ராத்திரி அரை ஸ்பூன் கடுக்காய்ப் பொடி போட்டுக்கோ, கார்த்தால வயிறு கலகலன்னு ஆயிடும்."

வைத்தீஸ்வரன் சொல்லிக் கொடுத்தார். உணவு வகைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்யச் சொன்னார்.

மிளகுரசம், வெந்தயக்குழம்பு, பாகற்காய் பிட்ளை, வாழைத்தண்டு ஜூஸ் என்று கவனமாக குழந்தைகள் வளர்க்கப்பட்டார்கள்.

உலக யுத்தம் மும்முரமான நேரத்தில் தன்னுடைய வேலையை வைத்தீஸ்வரன் ராஜினாமா செய்தார்.

கடும் தலைவலி என்றும் அடிக்கடி சோர்வு ஏற்படுகிற தென்றும் தன்னால் வெயிலில் நேரே வந்து பார்க்கமுடிய வில்லையென்றும் கண் கூசுகிறது என்றும் கைகள் நடுங்குகிறதென்றும் எழுதிக் கொடுத்தார்.

உண்மையான காரணம் என்ன என்று மேலதிகாரி கேட்டபோது, "ஜப்பான்காரன் ஜெர்மனிக்காரனுக்கு ஆதரவாகத்தான் இருப்பான். அப்படி ஆதரவாக இருந்தா அவன் பர்மா, மலேயா, சிங்கப்பூர் அப்படின்னு அடுத்தபடியா இங்கதான் நுழைவான். உங்களுடைய சாம்ராஜ்யத்தினுடைய ஆணிவேர் இந்தியாவிலதான் இருக்கு. இந்த இடத்தை அசைச்சான்னா உங்க லண்டன் பட்டுப்போயிடும். டீப்பொட்டலத்துக்கும் கோதுமைக்கும் பார்லிகுக்கும் சர்க்கரைக்கும் எங்க இந்தியாவைத்தான் நம்பிண்டிருக்கேள். கட்டி இழுக்க கயிறு வேணும்னா கல்கத்தா ஜூட்டுதான் வேணும். தென்னிந்தியாலேர்ந்து தான் கோதுமையும், சர்க்கரையும் ஏற்றுமதியாகணும். இந்த இடத்தை அசைச்சான்னா லண்டன் பத்து நாள்ல சரண்டர் ஆயிடும். இந்த இடத்தை ஜப்பான்காரன் அசைப்பான். அப்போ உங்கிட்டே நான் வேலை செய்ய முடியுமா? நான் நகர்றதே உத்தமம்."

"அவ்வளவு சீக்கிரம் இங்கே படையெடுப்பு வரும் என்று நினைக்கிறாயா?" அதிகாரி கவலையோடு வினவினார்.

"ரொம்ப நிச்சயமா. இன்னும் ஒரு வருஷத்துக்குள்ள படையெடுப்பு வரும். ஜப்பான்காரன் நுழைவான்."

"எதை வைத்து இப்படிச் சொல்கிறீர்கள்?" என்று அதிகாரி பயத்துடன் கேட்க, "பிரிட்டிஷ்காரர் ஜாதகம் எங்கிட்ட இருக்கு. உங்க ராஜா பட்டம் ஏத்துண்ட தினத்தை உங்க லண்டன்லேர்ந்து கணக்குப் போட்டு ஒரு ஜாதகம் தயார் பண்ணியிருக்கேன். அதை வெச்சுப் பார்த்தா உங்களுக்குத் தலையெழுத்து நன்னாயில்லைன்னு தான் படறது. அது தவிர, எங்க மகாத்மா யோசனை பண்றபடி உங்களுக்கு உழைக்காம உங்களைப் புறக்கணிக்கறது நல்லது."

நல்லவேளை உடல்நலம் சரியில்லையென்று காண்பித்து அதிகாரியும் அதை ஆதரித்து எழுதியதால் அவருக்கு விடுதலை கிடைத்தது. மறுபடியும் அவரை அழைத்துக் கொள்ளாமல் இருந்தார்கள்.

ஆனால், சென்னையில் வேலை செய்த இளம் அதிகாரி களை திருவனந்தபுரத்து இளைஞர்களை, மதுரைவாசி களை, ஆந்திராக்காரர்களை ஒட்டுமொத்தமாகக் கூட்டிக் கொண்டுபோய் டெல்லியில் உட்கார வைத்து அவர்களுக்கு அங்கு தனிப்பயிற்சி கொடுத்து நூற்று ஐம்பது பேரை பிரிட்டிஷ் அரசாங்கம் ராணுவ அதிகாரிகளுக்கு உதவி ஆட்களாக நியமித்தது.

கச்சேரித் தெருவிலிருந்து சுவாமிநாதன் என்கிற இருபத்து மூன்று வயது இளைஞன் காக்கி பாண்ட்டும் காக்கி முழுச்சட்டையும் பட்டை வைத்த தோளும் கொக்கி பெல்ட்டும் கறுப்பு பூட்ஸும் சரிந்த தொப்பியுமாக எல் லோரிடமும் வணங்கி நின்று விடைபெற்றுப் போனான்.

சென்ட்ரல் நிலையத்தில் ரயில் ஏறி பம்பாய்க்குப் போய் பம்பாயிலிருந்து விமானம் பிடித்து லண்டனுக்குப் போய் இறங்கினான். சென்னையில் ராணுவத்தில் கெடுபிடி அதிகமாகியது. வெளியே சண்டை நடக்க நடக்க, இங்கே ஊரடங்குச் சட்டமும் இரவு இருட்டடிப்பும் அங்கங்கே தடுப்புக் கட்டைகளும் யார் போனாலும் விசாரித்து அனுப்புவதும் நடந்தன.

மாலை நான்கு மணிக்கெல்லாம் கச்சேரிகள் துவங்கிவிடும். ஏழு மணிக்கு முடிந்துவிடும். கோயில்களை எட்டு மணிக்குச் சாத்திவிடுவார்கள்.

திண்ணையில் உட்கார்ந்து மயிலாப்பூர் மக்கள் உரத்த குரலில் பேசுவார்கள். எதிரெதிர் வீட்டில் நின்றபடி குரல் கொடுத்துக் கொள்வார்கள்.

"என்ன ஓய்_ என்னாச்சு நிலைமை?"

"ஜெர்மன்காரன் கபளீகரம் பண்ணிண்டுவரான். ஆஸ்திரியா விழுந்துடுத்து. ஐரோப்பாவில் பல இடங்களில் தீவிரமான சண்டை... ஜெர்மன்காரன் கைதான் ஓங்கியிருக்கு."

"அப்போ அடுத்த வருஷத்திலிருந்து ஜெர்மன் கத்துக்க வேண்டியதுதானா?"

"வேற வழி. ஜெர்மன் கத்துண்டாதான் பிழைக்க முடியும்னா ஜெர்மன் கத்துண்டுதான் ஆகணும்."

எதிர் வீட்டில் இருந்தவர் சொன்னார்.

"ஏங்க உள்ளபோய் நில்லுங்க. வாசல்ல நின்னு உரத்த குரல்ல பேசினா கைது பண்ணச் சொல்லி உத்தரவு."

போலீஸ்காரன் வந்து நின்றதும் தடதடவென்று உள்ளுக்குள் ஓடி 'தடேர்... தடேர்' என்று கதவைச் சாத்திக்கொண்டார்கள்.

ரவை இல்லை. அரிசி இல்லை. கோதுமை உடைந்தது தான் கிடைத்தது. அந்த உடைந்த கோதுமையில் அரசாங்கமே ரொட்டி செய்து கடையில் ரேஷனில் விற்றது. அந்த ரொட்டியைப் பிய்த்து உப்புமா பண்ண தமிழர்கள் தெரிந்து கொண்டார்கள்.

ஐரோப்பா முழுவதும் ரணகளம் ஆகிக் கொண்டிருக்க, இந்தியாவில் சிறு கிறல்கூட விழாமல் ஜனங்கள் சௌக்கியமாக வாழ்ந்தார்கள்.

"நான் சொல்லலையா, நம்மள படுத்தின பாட்டுக்குப் பிரிட்டிஷ்காரன் நாயா, பேயா அடிபடப் போறான்னு. இடைவிடாத குண்டு மழையாம். அத்தனை ஜனங்களும் கும்பல் கும்பலா செத்துப்போகறதாம். விஷப்புகை விடறானாம். நெருப்பா அடிக்கறதாம். ஒரு வீச்சுல நூறு பேர் பொசுங்கிப் போறாளாம். லண்டன்ல பாதி வீடு தரைமட்டமாம். ஆனா, அமெரிக்காக்காரன் இந்த யுத்தத்துல இறங்கினாதான் ஒரு வழி ஆகும். சாகட்டும். நம்மூர் பசங்களை எத்தனை பேரைச் சாகடிச்சுருக்கா. ஜாலியன் வாலாபாக் மறக்குமா. அப்பாவி ஜனங்களை மெஷின்கன் வெச்சுச் சுட்டுக்கொன்னானே... அன்னிக்கு 'உன் தலையில இடி விழ' அப்படின்னு அந்த ஜனங்கள் சபிச்சது உண்மையா போயிடுத்து. தினம் ராத்திரி நூறு இடி இருநூறு இடி விழறது.

ஜப்பான்காரன் வேற சிலுத்துண்டு அலையறான். பர்மாவுக்கு உள்ள புகுந்துட்டான்னு சொல்றா. இந்தியா என்ன கதி ஆகும்னு தெரியலையே.

ஜெர்மன் படிக்கறதா, ஜப்பான் படிக்கறதா... தங்கம் விலை ஜாஸ்தி ஆயிண்டே போறது. காசுக்கு மரியாதையே இல்லை. ஒரு ரூபாய்க்கு நாலுபடி வித்த அரிசி இப்போ ஒரு ரூபாய்க்கு ஒரு படின்னு விக்கறான். ரெண்டு கை அரிசிக்கு ஒரு கட்டு கொத்துமல்லி, ஒரு கட்டு கறிவேப்பிலை தருவா... இப்போ காலணா கொடுத்தாதான் கறிவேப்பிலைங்கறா."

"ஆமா. அவளும் ப்ரெட் வாங்கணுமோன்னோ. வேற என்ன பண்ணுவா பட்டணத்து ஜனங்கள் எப்படியோ பிழைச்சுக்கறது. கிராமம்தான் கஷ்டம்."

"என்ன ஓய் கஷ்டம்... விளையறது அங்க. அங்கயே உட்கார்ந்து சாப்பிட்டுண்டிருக்கலாம்."

"இங்க வரவே மாட்டேங்கறதே."

"வைக்கப்போருக்கு நடுவ, சவுக்குக் கட்டைக்கு நடுவ அரிசி மூட்டை வருதாம். தண்ணித்துறை மார்க்கெட்டுல போட்ல கொண்டு வராளாம். மாட்டுக்கு வைக்கா கொண்டுபோடறா மாதிரி அரிசி மூட்டையும் இறக்கறாளாம். ஒரு மூட்டை அரிசி இருவது ரூபா சொல்றா, அரிசி கல்லும் நெல்லுமா சுமாராத்தான் இருக்கு."

"வேற என்ன பண்றது... கொண்டு வந்து போடச் சொல்லு."

ஐரோப்பாவில் யுத்தம் நடந்ததால் தங்கம் அதிகவிலை ஆயிற்று. பத்து ரூபாய்க்கு ஒரு சவரன் என்று வாங்கிய நகைகள், நூறு ரூபாய் என்று மதிப்பாயின. கையிலிருந்த தங்கக் கட்டிகளை, காசுகளை வைத்தீஸ்வரன் விற்றுக் காசாக்கினார். தானியங்கள் வாங்கிப் போட்டார். எவரேனும் கேட்டால் அளந்து கொடுத்தார்.

நகரத்தின் முக்கிய இடங்களில் கஞ்சித்தொட்டி திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஏழைகளுக்குக் காலையில் கஞ்சி கொடுப்பது என்பது தீர்மானமாகியது. பெரிய தவலை நிறைய சாதம் வடித்து குழையக் குழைய காய்ச்சி சிறிதளவு பாலும் மோரும் விட்டுக் கலக்கி குவளை குவளையாக வாசலில் வந்து நிற்பவர்களுக்கு ஊற்றினார்கள்.

குழந்தைகள் எட்டு மணி ஆனதும் ஹரிக்கேன் விளக்கை ஏற்றி நடுவில் வைத்துக்கொண்டு வீணையும் வயலினும் மிருதங்கமுமாய் கச்சேரி செய்தார்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் வந்து காது குளிரக் கேட்டார்கள்.

எப்போதாவது சைரன் கேட்கிற போது விளக்கு ஒளியைக் குறைத்து விட்டு தொடர்ந்து கச்சேரி கேட்டார்கள். மயிலாப்பூர் இசைக் கச்சேரியை ஒரு நாளும் நிறுத்தவே இல்லை.

ஆனால் ஐரோப்பா பிய்ந்து சின்னாபின்னமாகியது.

தமிழ்நாட்டில் எல்லா பத்திரிகைகளும் யுத்தம் பற்றித்தான் பேசின. சினிமாவின் முன்னால் வார் ரீல் என்று பதினைந்து நிமிடத்துக்கு பிரிட்டிஷார் எதிர்த்துத் தாக்குதல் செய்வதையும் பிரான்ஸ் மெல்ல குலைந்து விழுந்ததையும் பாரீஸின் சதுக்கத்துக்கு நடுவே வீரநடை போட்டு ஜெர்மனி உள்ளே வந்ததையும் பாரீஸ் மக்கள் முகத்தைப் பொத்திக்கொண்டு விக்கி விக்கி அழுவதையும் காண்பித்தார்கள். அதற்குப் பிறகு படம் பார்க்கவே பலருக்குப் பிடிக்கவில்லை.

ஒருவர் இருவராக வெளியே வர எலிபென்ஸ்டன் தியேட்டர் வாசலில் பத்து இருபது பேர் ஒன்றாகக் கூடினார்கள். பிரெஞ்சு தேசப் பெண்கள் பலர் ஜெர்மானியர்களுடைய மிருகவெறிக்கு இரையானார்கள் என்று தொடர்ந்து வார் ரீல் ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டிருந்தது.

மக்கள் உறைந்துபோய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு தமிழிலும் வார் ரீல் தொடர்ந்தது.

"என்னமோ மனசே சரியில்லை. இந்த பிரிட்டிஷ் காரனைக் கண்டா எரிச்சலா வரது. தேவையில்லாம இங்க உட்கார்ந்துண்டு எழவு கொட்றானேன்னு தோண்றது. அதே சமயத்துல அவன் அங்க நாயடி பேயடி வாங்கறத பார்த்தா பயமா இருக்கு. ஜெர்மானியன் யூதர்களைக் கும்பல் கும்பலா சாகடிக்கிறானாமே."

"யூதர்கள் யார்?"

"அதுவொரு அலட்டல் கும்பல். உலகத்துல முதன் முதல்ல நாங்கதான் தோன்றினோம். எங்களுக்குத்தான் எல்லாம் தெரியும். நாங்க மகா கெட்டிக்காரன்னு நினைச் சுண்டிருக்கற ஒரு கும்பல். கடவுள் முதலில் அவங்களுக்குத் தான் தரிசனம் கொடுத்ததா கதைகள்லாம் இருக்கும். இவன் தன் ஜாதியைத் தவிர, தன் ஜனங்களைத் தவிர வேற யார்கிட்டயும் பேசமாட்டான். எந்தத் தொடர்பும் வெச்சுக்கமாட்டான்."

"அடடா... அடடா... ஐரோப்பிய அந்தணர்கள்னு சொல்லு."

ஒரு முதலியார் உரத்த குரலில் பேசினார். எல்லோரும் அவரைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஆமா, கிட்டத்தட்ட அப்படித்தான். ஒரு உயர்ஜாதிக்கார திமிர்தான்."

வைத்தீஸ்வரன் அடிக்குரலில் ஒப்புக் கொண்டார்.

"ஆனா, ஹிட்லர் பிச்சு எடுத்துட்டான் அவங்களை. அடியான அடி— உதையான உதை. எல்லா பொம்மனாட்டி யையும் துணியில்லாம நிக்க வெச்சு ஆம்பளைங்கள் குழி வெட்டச் சொல்லி அந்தக் குழிகள்ல எல்லோரையும் இறங்கச் சொல்லி சரமாரியா சுட்டு மண்ணு போட்டு மூடிட்டான். ஒரு குழியில நூறு பேர், இருநூறுபேர்... கும்பல் கும்பலா செத்துப்போறா. காஸ் சேம்பர்னு ஒண்ணு கொண்டுவந்திருக்கான். எல்லோரையும் ரூம்ல போட்டு விஷவாயுவைத் திறந்து விட்டுடறது. மூச்சுத்திணறி செத்துப்போயிட்ட பிறகு தூக்கிக் கொண்டுபோய் புதைச் சுடறது. புதைச்சா யாராவது சுண்டுபுடிச்சுடுவாளோன்னு எரிக்க ஆரம்பிச்சுட்டான். ஊர் முழுக்கப் பிண நாத்தம்."

"இதெல்லாம் எப்படி ஓய் தெரிஞ்சது.?"

"கச்சேரித் தெரு சுவாமிநாதன் லண்டன்லேர்ந்து லெட்டர் எழுதியிருக்கான் அவா அப்பாக்கு. அன்னிக்குப்

படிச்சுக் காண்பிச்சார். அதுதவிர, லண்டன்ல வெளியாற பேப்பர்ல எல்லாத்துலேயும் இது விலாவாரியா வருது."

"பிரிட்டிஷ்காரன் தோத்துடுவானா?"

"மாட்டான்."

"ஏன்?"

"பிரிட்டிஷ்காரன் நல்லவன்யா."

"செருப்புப் பிஞ்சிபுடும்."

வைத்தீஸ்வரனை நோக்கி ஒரு அந்தணர் வேகமாக வந்தார்.

"கும்மா அலட்டாதீங்கோ ஓய். போலீஸ்காரனப் பார்த்தா எவ்வளவு வேகமா ஓடுவேள்னு எனக்குத் தெரியாதா. என்னைப் பார்த்து எகிறுறீரே."

வைத்தீஸ்வரன் பதிலுக்கு முறைத்தார்.

"இருய்யா. என்ன சொல்றார்னு கேட்போம்."

முதலியார் சமாதானப்படுத்தினார். ஒரு நாயுடுவும், சைவப்பிள்ளைவாளும் இன்னும் நெருக்கமாக வந்து என்ன விஷயம் என்று கேட்டுக் கொண்டார்கள்.

"பிரிட்டிஷார் நம்முடைய மத விஷயங்கள்ல தலையிடலை."

"ஆனா, தூண்டிவிடுவான்..." இன்னொரு அந்தணர் கோபமாகப் பேசினார்.

"நீங்க அமைதியா இருந்தா அவன் அமைதியா இருப்பான். அதர்மமா அவன் எதுவும் பண்ணலை. ஆனால், இந்தத் தேசத்தை ஆட்சி செய்யணும். இங்கேயிருந்து எல்லா செல்வத்தையும் சுரண்டிப் போகணும்னு இருந்தான். நமக்குள்ள ஒத்துமை இல்லை. அதனால் ஆள விட்டுட்டோம்."

"நமக்குள்ள ஒத்துமை இல்லாததுக்குக் காரணம் நீங்க தான். நாலு வர்ணம்னு பிரிச்ச அந்த நாலு வர்ணத்துக் குள்ள ஏராளமா பிரிச்ச ஒருத்தரை ஒருத்தர் தொடக் கூடாதுன்னு சொல்வி..."

முதலியார் உரத்த குரலில் கத்தினார்.

24

முதலியார் கைகட்டி, கால் அகட்டி மவுண்ட் ரோடு பார்த்து நிற்க, வடக்கு பார்த்து வைத்தீஸ்வரன் நின்றார். முதலியாரின் கேள்விக்குப் பதற்றமில்லாமல் பதில் சொன்னார்.

"தொடக்கூடாதுன்னு சொன்னது உண்மைதான். நாலு வர்ணமா பிரிச்சது உண்மைதான். ஆனா, ஒருத்தரை யொருத்தர் வெறுக்கணும்னு சொல்லலை... இழிவு படுத்தணும்னு சொல்லலை..."

"இழிவு படுத்தலீங்களே...?"

"ஏதோ சில பேர் வேணும்னா அப்படி செய்திருக்க லாம்..."

"இல்லை... ஒட்டுமொத்தமா இந்த ஜாதியில பிறந்துட்டாங்கறதுக்காகவே அவன் மக்கோ, மடையனோ... அவனைச் சகிச்சுக்கணும்னு அடுத்த ஜாதி ஆளை வற்புறுத்த ஆரம்பிச்சுட்டீங்க. உங்க ஒழுக்கத்தை விட ஆரம்பிச்சுட்டீங்க. உங்க வேதப் படிப்பை விட ஆரம்பிச் சுட்டீங்க."

"ஆமாய்யா... அந்தப் படிப்புக்கு எவனும் சோறு போடலை. யாரும் காசு கொடுக்கலை. எல்லா ராஜாவும் ஓடி ஒளிஞ்சுட்டான். இங்க ராஜா வேற மதம், வேற ஜாதி. ஐயர் தன் படிப்பை எங்கே போய்க் காட்டுவான்...? படிப்பை விட்டுட்டுக் கணக்குப்பிள்ளை வேலைக்குப்

போனான். ஊர்ல நல்ல கணக்குப்பிள்ளை மந்திரியா வந்தான். மந்திரியா இருக்கறவன் நிர்வாகியா மாறினான். நிர்வாகத்துல இன்னும் உச்சிக்குப் போனவன் ஒட்டல் வெச்சான், வியாபாரம் பண்ணான்..." என்றார் வைத்தீஸ்வரன்.

"யூதர்களைப் பத்திச் சொல்லுங்கய்யா... இவங்களைப் பத்தி நமக்குத் தெரிஞ்சதுதானே..." - நாயுடு குடையைத் தரையில் அடித்துப் பேசினார்.

"அவங்க இன்னும் கெட்டிக்காரங்க. தன்னுடைய படிப்பை, தன்னுடைய பாஷையை, தன்னுடைய கடவுளை வேற யார்கிட்டேயும் தினிக்கலை. தனக்கே வெச்சுண்டிருந்தாங்க. ஆனால், ஐரோப்பாவினுடைய அத்தனை பொருளாதாரத்தையும் அவன் கெட்டியா பிடிச்சனுட்டான். அவன் வித்தாதான் ரொட்டி... அவன் வித்தாதான் கோட்டு... அவன் வித்தாதான் ஷூ... அதுவும் தயார் பண்றதில்லை வாங்கி விக்கறது.

தயார் பண்றவன்கிட்ட போய் மொத்தமாக காசைக் கொடுத்துடறது, தயார் பண்ணுன்னு சொல்றது. பத்து ரூபா ஷூவை நாப்பது ரூபாய்க்கு விக்கறது. ஆக, முப்பது ரூபா லாபத்துல பத்து ரூபா கவர்ன்மெண்ட்டுக்கு- இருபது ரூபா அவனுக்கு அந்த ஷூ விலையா நாப்பது ரூபான்னு கேட்கறதுக்கே நாதியில்லை. யாரும் கேட்கவிடாத பண்ணிடுவான். எதெல்லாம் முக்கியமோ, அத்தனையும் அவன்தான் வியாபாரம் பண்ணான்.

ஜெர்மன்ல இருக்கிற ஆர்யன் குரூப்புக்கு இது பிடிக்கலை. ஹிட்லர் இவங்களை ஒண்ணாக்கித் தூண்டி விட்டான். எங்கெல்லாம் யூதர்கள் இருந்தாங்களோ, அங்கெல்லாம் அடி, உதைனு வன்முறை... யூதர்களை முழுக்க முழுக்கத் தரையோட தரையா அவங்களைத் தேய்ச்சுச் சாகடிக்கணும்னு தீர்மானம் பண்ணான்."

"அப்படித்தான் உங்களைப் பண்ணியிருக்கணும். எல்லா ஜனங்களையும் கட்டுக் கொன்னுருக்கணும்" முதலியார் வேட்டியை மடித்துக்கொண்டு தொடைதட்டிப் பேசினார்.

"முட்டாள்... என்ன பேசறோம்னு நினைச்சுண்டு பேச. ஹிட்லர் என்ன பண்ணினான்...? ஜெர்மன்காரங்கள ஒண்ணாக்கி, ஒரே குடும்பமா பண்ணி, ஒரே குழுவா மாத்தி, அவர்கள் யூதர்களை எதிர்க்கும்படியா பண்ணான் இங்கேயிருக்கறவாளை ஒரே குழுவா, ஒரே யூனிட்டா, ஒரே ஜாதியா யாரு மாத்தறது...? நாயக்கரைக் கண்டா நாயுடுவுக்கு ஆகாது. நாயுடுவைக் கண்டா ரெட்டியாருக்கு ஆகாது. ரெட்டியாரை கண்டா முதலியாருக்கு ஆகாது. முதலியாரைக் கண்டா பிள்ளைவாளுக்கு ஆகாது. இவங்க எல்லோரையும் கண்டா, நாலாவது வர்ணத்து ஆசாமிக்கு ஆகவே ஆகாது. இத்தனை பிரிவு இருக்கறபோது, நீங்க எங்கேயிருந்து ஒண்ணா சேர்றது... யாரை வெளியே துரத்தறது...?" -வைத்தீஸ்வரன் உறுமலாகப் பேசினார்.

"ஐயோ... கடவுளே, தயவுசெய்து நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்காதீங்க. நாட்டு நிலைமையைப் பத்தித் தெளிவா சொல்லுங்க..."

நாயுடு மறுபடியும் குடையைத் தரையில் அடித்தார்.

"இந்தியா பாரம்பரிய மரபுகளில் மூழ்கிச் சிதறிக் கிடக்கிறது. மதத்தாலும், ஜாதியாலும் பிளவுபட்டுக் கிடக்கிறது. பிளவு நீங்கினாலொழிய, இந்தியா வல்லரசு ஆகாது. அடிமைப்பட்டுத்தான் கிடக்கும். முகலாயர்களிடமும் ஆங்கிலேயர்களிடமும் மிக எளிதாக இந்தியா அடிமைப்பட்டதற்கு இதுவே காரணம்..."

"பிரிட்டிஷ்காரன் சுதந்திரம் கொடுத்துட்டான்னா...?"

"அப்போ இருக்கு சோதனை..."

"என்ன ஆகுங்கறீர்..."

"உள்ளுக்குள்ள அடிச்சுண்டு திரிவோம். மொழிவாரியா அடிச்சுக்குவோம். மதவாரியா அடிச்சுக்குவோம். ஜாதி வாரியா அடிச்சுக்குவோம். இன்னும் அம்பது, அறுவது, எழுவது, வருஷமானாலும் நமக்குள்ள இருக்கற அடிதடி போகாது..."

"சுதந்திரமே கிடைக்காதுங்கறியா...?"

"இப்போ கிடைக்க வேணாங்கறேன்...?"

"எப்போ கிடைக்கலாம்னு சொல்ற ஐயரே...?"

"எல்லோருக்கும் ராணுவப் பயிற்சி வேணும். இந்தியாவை ராணுவ தளமா மாத்தினாதான் ஒரே குழுவா, ஒரே பலமா இயங்க முடியும்..."

"அப்போகூட சீக்கிய ராணுவம், கூர்க்கா ராணுவம், மெட்ராஸ் ரெஜிமெண்ட்ட அப்படித்தானே பிரிஞ்சிருக்கு. இந்திய ராணுவம்னு ஒத்துமையா இருக்க முடியுமா...?" நாயுடு கவலைப்பட்டார்.

"நான் சொல்றேன். ஐரோப்பா மாதிரி தனித்தனி நாடா பிரிஞ்சு போயிடணும் இந்தியா ஐரோப்பானு ஒண்ணா இருந்து உள்ளுக்குள்ள ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலின்னு பிரிஞ்சிருக்கிற மாதிரி நாமும் பிரிஞ்சுடணும். தமிழ்நாடு ஒரு தேசம். கேரளா ஒரு தேசம். கர்நாடகா ஒரு தேசம். ஆந்திரா ஒரு தேசம்னு பிரிஞ்சுடணும். தனித்தனி ராஜ்யமா அரசாளணும்..." முதலியார் கூவினார்.

"ரொம்ப சந்தோஷம். மகா கெட்டிக்காரத்தனமான யோசனை. கேரளாவை ஜெர்மன்காரன் பிடிச்சுப்பான். தமிழ்நாட்டை பிரான்ஸ்காரன் பிடிச்சுப்பான். ஆந்திராவை ஜப்பான்காரன் பிடிச்சுப்பான். கர்நாடகாவை போர்ச்சுக்கீசியன் பிடிச்சுப்பான். தனித்தனியா, அந்நிய தேசத்துக்கு அடிமையா இருப்போமே தவிர, அப்பவும் ஒண்ணும் சுதந்திரமா இருக்க மாட்டோம்..."

"என்னய்யா... எப்பவுமே எழவு கொட்டற பேச்சாவே பேசிக்கிட்டு இருக்கீங்க? இந்தத் தேசத்துல பாலும் தேனும் ஓடாதாய்யா...? ஒடிக்கிட்டு இருந்த தேசம்தான்யா இது. இந்தத் தேசத்துல பஞ்சம் வர்றதே இல்லையேய்யா. நாமளா ஏற்படுத்திக்கிற பஞ்சம்தான்யா அதிகம்..."

நாயுடு தலையில் கைவைத்து அலறியபடி பேசினார்.

எல்லோரும் நாயுடுவைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

"உமக்கு வெள்ளை மனசு ஓய். பளிச்சுனு கத்திப் பேசிட்டீர். எல்லோர் உள்ளுக்குள்ளேயும் இந்தத் துக்கம் தான் இருக்கு. முதலியார் வெடுவெடுன்னு பேசறாரே தவிர, அவருக்குள்ளேயும் தேசம் சுபிக்ஷமா இருக்கணும், அதுக்கு என்ன வழின்னுதான் யோசிக்கறார். யாரையாவது திட்டினா, தேசம் சரியாப் போயிடும்னு நினைக்கிறார். திரும்பித் திருப்பி ஒருத்தரையொருத்தர் திட்டிக்கறதுல என்ன லாபம்...?"

வைத்தீஸ்வரன் பின்கை கட்டிக் கொண்டு தொலை தூரம் பார்த்தபடி பேசினார்.

"இந்தத் தேசத்துல இப்போதைக்குப் பாலும், தேனும் ஓடாது. என் ஆயுசுல ஓடாது. உன் ஆயுசுல ஓடாது. உன் பிள்ளை ஆயுசுலேயும் ஓடாது. உன் பேரனும் ஆயுசுலேயும் ஓடாது. அதுக்குப் பிறகு ஒடினால் ஓடலாம்..."

முதலியார் இன்னும் கடுப்பாகப் பேசினார்.

"அதுக்கப்புறம் என்ன புதுசா முளைச்சிடும்...?"

"மூணாவது உலக யுத்தம் வரும். அப்போ நிறைய இடங்கள் காலியாகும். லட்சக்கணக்குல மனுஷன் செத்துப் போவான். மனுஷ மதிப்பு அப்போதான் ஜாஸ்தி ஆகும். மனுஷ மதிப்பு ஜாஸ்தி ஆனாதான் ஜாதி, மதம் ஒழியும்..."

"அப்படின்னா, இப்போ நடக்கற இரண்டாவது உலகப்போராலை என்ன மாத்தம் வந்துரும்...?" -நாயுடு கேட்டார்.

"பெண்கள் வாழ்க்கையில் உலகம் வெச்சுண்டிருந்த மரபு பிடுங்கிண்டு போயிடுத்துன்னு பிரிட்டிஷ்காரன் எழுதறான். எல்லா பொம்மனாட்டியும் தெருவுக்கு வந்துட்டா... பேசமுடியாத பொம்மனாட்டி பார்க்க முடியாத பொம்மனாட்டினு இப்போ யாரும் இல்லை. ராயல் ஃபேமிலினு யாரும் இல்லை. எல்லாம் இடுப்புப் பாவாடையோட நெஞ்சு பொத்திண்டு உயிரைக் காக்கறதுக்கு ஓடறது. பிரிட்டிஷைவிட ஜப்பான் ரொம்ப மோசம். ஜப்பான் பெண்கள் வாழ்க்கையே வேறவிதமா போயிடுத்து. தொழிற்சாலைக்கு வேலைக்கு வந்துட்டா. குண்டு பண்றதுக்கு, துப்பாக்கி பண்றதுக்குச் சொல்லிக் கொடுக்கறான். கழுத்துலேர்ந்து காலு வரைக்கும் போட்டுண்டிருக்கற சுவுனெல்லாம் தூக்கிப் போட்டுட்டு, குட்டிப்பாவாடையும் சட்டையுமா ஷூவைப் போட்டுண்டு டக்குடக்குனு ஆம்பளை மாதிரி வேலைக்கு வராளாம்..."

"நம்ம ஊர்ல இது வருமா...?"

"வரும்..."

"என்னத்த வரும்...? மயிலாப்பூர்ல எல்லா ஐயரு பொண்ணுங்களும் டான்ஸ் கத்துக்குதுங்க... தேவைதானா இது...?"

முதலியார் மறுபடியும் கத்தினார்.

"தேவைதான்யா... டான்ஸ் ஒரு விடுதலை. பொம்மனாட்டிக்கு விடுதலை. இந்த மாதிரி பல விடுதலை நீ கொடுத்துதான் ஆகணும்..."

"நாங்களெல்லாம் தரமாட்டோம்ப்பா..." - வேறொருவர் குறுக்கே குரல் கொடுத்தார்.

"கொடுக்கலேன்னா பிடுங்கி எடுத்துப்பாங்க. பொம்மனாட்டி தோள்ல பை மாட்டிண்டு வேலைக்குப் போற காலம் வரும்..."

"அதையும் இந்த ஐயரு பொண்ணுங்கதான் முதல்ல செய்யும்..."

"ஆமாம்... அதற்குப் பிறகு பத்து வருஷம் கழிச்சு, உங்க வீட்டுப் பொண்ணுங்களும் செய்யும். எங்கேயும் போயிட முடியாது..."

"ஜாதி ஒழியாதாய்யா...?"

இன்னொரு அந்தணர் கவலையோடு கேட்டார்.

"ஒழியாதுன்னுதான் தோண்றது..."

"எதனால அப்படிச் சொல்றீங்க...?"

"முதலியார் எப்பவும் முதலியாராத்தான் இருக்காரு. நாயுடு என்ன பேசினாலும் நாயுடுவாத்தான் இருக்காரு. என்னையும் என் புத்தியையும் மாத்த முடியலை. உள்ளுக்குள்ள நான் பிராமணன்தான். இந்தப் புத்திதானே என் பிள்ளைக்கும் இருக்கும்..."

"ஊரைவிட்டு ஊர் போனா வருமோ...?" இன்னொரு அந்தணர் கேட்டார்.

"கொஞ்சம் வரும். கிராமத்துலேர்ந்து கட்டுப்பெட்டித் தனம், கிராமத்துலேர்ந்து மரபு பட்டணத்துக்கு வரும் போது குறையறது. பட்டணத்துக்கு வந்த மரபு பாம்பேக்குப் போகறதுபோது குறையறது. பாம்பேக்கு வந்து மரபு அமெரிக்காவுக்குப் போனா குறையாதா...?"

"யார் போயிருக்கா அமெரிக்காவுக்கு...?"

"சுவாமிநாதன். கச்சேரி ரோடு சுவாமிநாதன். அவன் தாத்தா ஒரு சதுர்வேதி. அமெரிக்காவில ஒரு மேஜர் ஜெனரலுக்கு அவன் பி.ஏ.-வா இருக்கான். பெர்ல்

ஹார்பர்கிட்ட வொர்க் பண்றான். வாரா வாரம் அவன் அப்பாவுக்கு சௌக்கியமா இருக்கேன்னு நீளமா தந்தி அனுப்பறான். போன மாசம் இங்க வந்திருந்தான். ரெண்டு நாள் பயணம். பிரான்ஸ் வந்து, பிரான்ஸ்லேர்ந்து லிபியா வந்து, லிபியாலேர்ந்து டெல்லிக்கு வந்து, டெல்லிலேர்ந்து மெட்ராஸுக்கு வந்திருக்கான்.

தண்ணி போடறான். சிக்கன் சாப்பிடறான். இங்கிலீஷ்ல கொழ கொழன்னு பேசறான். அப்படியொரு வெளுப்பு. கன்னத்துல ஒரு செழுமை. கிட்டத்தட்ட அமெரிக்காக்காரன் கலரே ஆயிடுத்து. தலை செம்பட்டையா போயிடுத்து. ரொம்ப அழகா இருக்கான். அவன் அம்மா கால்ல விழுந்து கெஞ்சினா இங்கேயிருந்து ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டு போன்னு. 'முடியவே முடியாது. நான் அங்கே ஒரு பொண்ணு பார்த்து வெச்சிருக்கேன். இயூபாவைச் சேர்ந்த பொண்ணு. வாட்டசாட்டமா இருக்கா. நான் அதைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்னு திரும்பிப் போயிட்டான். கபாலி கோயிலைத் தூரத்துலேர்ந்து பார்த்துட்டு போதும்... பார்த்தது... உள்ள போக வேண்டாம் அப்படின்னுட்டுத் திரும்பிட்டான்..."

"அவன் ஒருத்தனுக்கு ஜாதி போச்சுன்னா, எல்லோருக்கும் போச்சா...?"

"யாரெல்லாம் வெளியூருக்குப் பிழைக்கப் போறாங்களோ, அங்கெல்லாம் கொஞ்சம் கம்மியாகத்தான் போகும். இத்தனை ஆவேசமா பேரைச் சொல்லிக் கூப்பிடற அபத்தம் இருக்காது. நீ முதலியார்னு தெரியுமே தவிர, உன் பேர் எனக்கு என்ன தெரியும்...? ஆறு வருஷமா பழகறோம். என் பேர் உமக்குத் தெரியுமா...? கச்சேரி ரோடு ஐயருன்னுதான் சொல்லிண்டிருக்க. நமக்குப் பேரே முக்கியமில்லை. ஜாதிதான் முக்கியம்."

"ஏங்க... யாரு வாசல்ல நின்னு பேசறது...? புதுசா இன்னொரு வார்ரீல் வந்திருக்கு. பார்க்கறீங்களா...? படத்தை நிறுத்திவிட்டு உடனே போடச் சொல்லி கவர்ன்மெண்ட் உத்தரவு..."

"வார் ரீல்ல என்ன சமாசாரம்...?"

"மகாத்மா காந்தி காண்பிக்கறான். ராஜகோபாலாச்சாரி காண்பிக்கிறான். கும்பல் கும்பலா பிணங்கள் எரிக்கறதைக் காண்பிக்கிறான். ரஷ்யாவை நோக்கி ஜெர்மன்காரன் படையெடுக்கறான்னு காண்பிக்கிறான்."

வார் ரீல் கொண்டு வந்த அந்தணர், மற்ற அந்தணரிடம் பேசினார்.

எல்லோரும் உள்ளே போனார்கள். படம் நிறுத்தப் பட்டது. விசில்கள் பறந்தன. எழுந்து பலபேர் சோம்பல் முறித்தார்கள். அந்த வார் ரீல் தமிழில் இருந்தது.

இருபது நிமிடம் வார் ரீலில் ரஷ்யப் படைகள் பின்வாங்குவதும், ஜெர்மனின் மகத்தான முன்னேற்றமும், பிரிட்டிஷ்காரர்கள் தாக்குப் பிடிப்பதும், அமெரிக்கா போரில் இறங்குவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று சொல்வதும், ஐப்பான் பர்மாவையும், மலேசியாவையும் சிங்கப்பூரையும் தாக்க நினைத்திருப்பதும், ஜெர்மன் துருப்புகளின் அணிவகுப்பும் காட்டப்பட்டன.

யூதர்களைச் சிறையில் வைத்திருப்பதும், அடிப்பதும், பெண்களை நிர்வாணமாகக் குழியில் இறக்குவதும் துப்பாக்கியால் சுடுவதும், தூரத்தே பிணங்கள் எரிக்கிற புகைபோக்கியையும், ஒரு ரயில் நிறைய கைதிகளை ஆடு மாடு போல் அடித்து இறக்குவதும், அடித்து ஓரம் நிற்க வைப்பதும் காட்டப்பட்டன.

"மகா கண்றாவியா இருக்கே... ஜெர்மன்காரன் மிருகம் மாதிரி இருக்கானேய்யா..."

"அதான் நான் அப்பவே சொன்னேன். பிரிட்டிஷ் காரனை ஆதரிச்சுப் பேசுங்கோன்னு..." -முதலியார் உரத்துப் பேசினார்.

"பிரிட்டிஷ்காரனை ஆதரிக்கணும்கறதுக்காகவே இந்த மாதிரி வார் ரீலை இந்தியா முழுக்க அனுப்பியிருக்கான். ஜெர்மன்காரன் உண்மையிலேயே நல்லவனா இருக்கலாம். இதெல்லாம் பொய்யா இருக்கலாம்..." என்ற இன்னொரு அந்தணர் எதிர்த்து உரத்துப் பேச, "இடுப்புல வேட்டி இருக்கான்னு தொட்டுப் பார்த்துண்டு பேசும். எப்பவுமே சந்தேகப்பட்டா என்ன அர்த்தம்...? ஜெர்மன்காரனைத் தயவுசெய்து யாரும் கொண்டாடாதிங்கோ. அவனைவிடக் கேவலமானவன் உலகத்துல யாரும் இல்லை. மனுஷாள சித்ரவதை பண்ணிச் சாகடிக்கிற ஒரு அயோக்கியன் அவன். பிரிட்டிஷ்காரனுக்கு நாம துணையா இருக்கறது நல்லது..."

அவர்கள் பேசிக்கொண்டே நடந்து மயிலாப்பூருக்கு வந்தார்கள். மயிலாப்பூரிலும் நின்று பேசினார்கள்.

25

மயிலாப்பூரில் நின்று பேசிவிட்டு வைத்தீஸ்வரன், முதலியார், நாயுடு நள்ளிரவு இரண்டு மணிக்குமேல் கலைந்தார்கள்.

விடியலில் அன்று சைரன் ஒலித்தது. மறுபடியும் ஒத்திகை ஆரம்பித்தது. எல்லா ஜனங்களையும் தெருவுக்கு வராமல் வீட்டுக்குள் போய் இருக்க உத்தரவிட்டார்கள்.

யுத்தம் இங்கு விளையாட்டாக இருக்க, ஐரோப்பாவில் இடையறாது விதி விளையாடிக்கொண்டிருந்தது. ஜனங்கள் விட்டில்பூச்சிகள் போல் செத்து விழுந்தார்கள்.

"வைத்தீஸ்வரன், உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்..." -முதலியார் படியேறி வந்தார்.

"என்ன... சொல்லுங்கோ, உட்காருங்கோ...?"

"நானும் பிள்ளைவாளும் பர்மாவுக்குப் போறோம். அங்கே போய் இந்திய தேசிய ராணுவத்துல சேரப் போறோம்..."

"என்னய்யா திடீர்னு...? உமக்குக் கை கால் வீசி ஒழுங்கா நடக்கக்கூடத் தெரியாதே... எப்பவும் கோணலாகத்தானே நின்னுண்டு, எதையாவது பிடிச்சுட்டு நிப்பீர்...? உம்மால ராணுவத்துல எப்படி...?"

"செய்யணும்னா செய்துதான் ஆகணும். சும்மா இந்த மயிலாப்பூர்லயே உட்கார்ந்துக்கிட்டு, குண்டுச்சட்டியிலே குதிரை ஓட்டறதுக்கு எனக்கு இஷ்டமில்லை..."

"அதுக்காக வேளை கெட்ட வேளையில், நேரங்கெட்ட நேரத்துல...பர்மால்லாம் தீப்பிடிச்சு எரியறதுன்னு சொல்றான்யா. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் எங்க இருக்கார்னு யாருக்குமே தெரியலையே..."

"நான் போய்த்தான் ஆகணும். போய் ஒரு முயற்சி பண்ணப்போறேன்..."

"ஓய்... செத்துட்டீர்னா...?"

"ஜாதகமெல்லாம் பார்த்தேன்யா... இப்போதைக்கு சாவு இல்லைன்றான். ஊரைவிட்டுப் போ, நல்லா இருப்பேன்றான். அதனாலதான் போறேன்..."

"யார் சொன்னது?"

"ஆடம் தெரு ஐயரு..."

"மறுபடியும் ஐயரைத்தானே நம்பற..."

"அவனுக்குத்தானே வேலை தெரியுது. டப்டப்புனு பழசையெல்லாம் புட்டு வெச்சான் இல்லை."

"யோசனை பண்ணுங்கய்யா..."

"இல்லை. என்னால மயிலாப்பூர்ல இருக்க முடியலை. ஒண்ணுமே இல்லையா... சும்மா இருக்கற பண்டத்தை வித்து வித்துச் சாப்பிட்டுண்டிருக்கோம். வேலை கிடைக்கலை... கோட்டைக்குப் போனா வேலை தர்றான். எனக்கு அவன்கிட்ட வேலை செய்யறதுக்குப் பிடிக்கலை..."

"சுதந்திரப் போராட்டத்துல ஈடுபடறது..."

"அதுவும் பண்ணமாட்டேன்..."

"அப்போ...?"

"எனக்கு காந்தியைவிட நேதாஜி ரொம்ப நிம்மதியா படுது. ஜப்பான் காரனோட கைகோத்துக்கிட்டாதான் இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கும். கச்சேரி ரோடு சுவாமி நாதன் அப்படிப் போனான்..."

"அவன் டெல்லிக்குப் போனான். டெல்லியிலேர்ந்து பிரிட்டிஷ் ராணுவத்துல சேர்ந்தான். பிரிட்டிஷ் ராணுவத்திலேர்ந்து அமெரிக்காவுக்கு ஆன் டெபுடேஷன் அனுப்பி வெச்சிருக்கா. அமெரிக்கா சம்பளம் அதிகம். பிரிட்டிஷ்காரன் சம்பளம் கம்மி. மரியாதையும் ஜாஸ்தி. அதனால், அங்கேயே தங்கிவிட்டான். அந்த ஜெனரலுக்கும் பிடிச்சுப் போச்சு..."

"நானும் அந்த மாதிரி அமெரிக்காவுக்குப் போகலாம்னு பார்க்கறேன்யா..."

"வேணாய்யா... நேரம் தப்பா இருக்கே..."

"இத்த விட்டா வேற எந்த நேரம் போக முடியும்...? ஆயிரம் வெள்ளி எடுத்துட்டுப் போறோம். மலேசியா போறோம். பினாங்குல இறங்கி, அங்கேயிருந்து பர்மாவுக்குப் போறோம். மலேசியாவிலேயே இந்திய ஏஜெண்ட் யாராவது இருந்தா, அவங்களோட போய் சேர்ந்துக்கறோம்..." என்றார் முதலியார்.

"கடுதாசி போடுவீரா...?"

"போடறேன்..."

"நான் என்ன பண்ணணும்...?"

"ஒரு சின்ன உதவி..."

"என்ன...?"

"பொண்டாட்டி, பிள்ளைங்க இங்கன இருக்கு. போகவர எட்டிப்பார்த்து 'நல்லாயிருக்கீங்களான்னு விசாரிச்சா போதும். காசு பணத்துக்குக் குறைச்சல் இல்லீங்கய்யா. ஆபத்துல எப்போதாவது துணையில்லாமப் பயப்படுவாங்க. நீ இருக்கேன்னு தெரிஞ்சா, நிம்மதியா என்னைப் போயிட்டு வானு சொல்வாங்க. வீட்டுக்கு வந்து ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா நல்லாயிருக்கும்..."

"என்னைக் கண்டாலே ஆகாது உனக்கு..." என்றார், வைத்தீஸ்வரன்.

"அப்படியெல்லாம் வெளிப்பார்வைக்குத்தான்யா. உண்மையில் உங்களை நம்பி என் குடும்பத்தை ஒப்படைச்சுட்டு, நான் எங்க வேணாலும் போகலாம்..."

"நான் பார்த்துக்கறேன். கவலைப்படாம வாரும்... உங்க முதலியார் அம்மாகிட்ட நான் சொல்றேன்..."

அவர்கள் இருவரும் இறங்கித் தெருவில் நடந்தார்கள்.

இரவு ரோந்துக்குப் போய்விட்டு பிள்ளை காக்கி உடையுடன் கனத்த மரகலர் பூட்ஸுடன் வீட்டுக்குள் நுழைய, அப்பா வைத்தீஸ்வரன் பேப்பரை மடித்துவிட்டு அவனைப் பார்த்தார்.

"நீலகண்டா, உங்க ஏர் ரெய்ட் புரோட்டக்ஷன் ஃபோர்ஸ்ல என்ன பேசிக்கறா...?"

"பர்மால அடிபட்ட பிரிட்டிஷ் சோல்ஜர்ஸ் எல்லோரையும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்திருக்கா. தனி விங்க். தனி மரியாதை... தனி நர்ஸ்...

தனி டாக்டர்ஸ். ராஜ வைத்தியம் நடக்கறது, வெட்டிவேர் தட்டியைத் தொங்கிவிட்டு, அதுல தண்ணி ஊத்தி குளுகுளுன்னு இடத்தைப் பண்ணிண்டிருக்கா.

நான் அவன்கிட்ட பேசினேன். அவன் சொல்றான். பிரிட்டிஷ்காரா நிச்சயமா ஜெயிப்பா. நான் கேட்டேன். பர்மாவில தோத்துட்டாளேன்னு. அது ரொம்ப டெம்பரரி தான். அமெரிக்கா இந்த ஒரு வருஷத்துக்குள்ள போர்ல இறங்கிடும். போர்ல இறங்கறதுக்குண்டான எல்லா ஏற்பாடும் நடந்துண்டிருக்கு. அமெரிக்கா போர்ல இறங்கிடுத்துன்னா, ஜெர்மன்காரனைப் பிளந்து கட்டிடுவான்..."

"ஏன் இன்னும் இறங்க மாட்டேங்கறான்..?"

"இறங்கறதுக்குக் காரணம் வேணுமில்ல.. வெறுமனே சப்போர்ட் பண்றதுக்காக போர்ல இறங்க முடியுமா..?"

"ஆனா, ஜெர்மன்காரன் அமெரிக்காக்காரனைச் சீண்டமாட்டானா..?"

"மாட்டான். அமெரிக்காக்காரன்னா ஜெர்மன்காரனுக்குப் பயம். பிரிட்டிஷ்காரன்னா ஒரு எளப்பம். பிரான்ஸைத் துவச்சு எடுத்துண்டிருக்கானாம். அப்படியே ஆப்பிரிக்கா வுல புகுந்துட்டானாம்..."

"இந்தியாவுக்கு யுத்தம் வர வாய்ப்பிருக்குனு சொல்றாளா..?"

"ஜப்பான்காரன் மூலமா இந்தியாவுக்கு வர வாய்ப்பிருக்குனு சொல்றா.."

"நீ என்னடா பண்ணப்போற..? முதலியார், பிள்ளை வாள்லாம் பட்டாளத்துல சேர்றா. அதுவும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ட்ரூப்ல சேரணுங்கறதுக்காகப் போன வாரம் கிளம்பிப் போயிட்டான். போய்ச் சேர்ந்துட்டேன்னு டெலிகிராமும் கொடுத்துட்டான். புத்தர்

டெம்பிளைப் பார்த்துட்டேன்னு ஒரு வாசகமும் அதுல இருக்கு. புத்தர் டெம்பிளைப் பார்த்துட்டேன்னா, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்கிட்ட சேர்ந்துட்டேன்னு அர்த்தம்.."

"நான் ராணுவத்துல சேரப்போகறதில்லேப்பா..." என்றான் நீலகண்டன்.

"மயிலாப்பூர்லயேவா அலைஞ்சுண்டிருக்கப் போற..?"

"இல்லை. ஒரு மேஜருடைய அப்பா பாம்பேலேர்ந்து அடிபட்ட பிள்ளையைப் பார்க்கறதுக்காக இங்க வந்திருக்கார். கூடவே, அந்தப் பையனோட தாயாரும் வந்திருந்தா. ரெண்டு பேரும் ரொம்ப நாளா பாம்பேல இருக்கறவா. புகையிலை வியாபாரம். வேற ஒண்ணும் இல்லை. புகையிலையை பதப்படுத்தி மரப்பொட்டியில வெச்சுக் காத்து புகாம மெழுகு வெச்சு அடைச்சு அனுப்பணும். நீளநீளமா மரப்பெட்டி மைசூர்லேர்ந்து வாங்கறான். மைசூர்லேர்ந்து சந்தன மரம் எடுத்துண்டு போறான். ஊதுவத்தி எடுத்துண்டு போறான்.

மெட்ராஸ்ல என்ன கிடைக்கும்னு கேட்கறான். கிராம்பு, லவங்கப்பட்டை, ஏலக்காய் கிடைக்கும்மான்னான். நான் கொத்தவால்சாவடிக்குக் கூட்டிண்டு போனேன். மிளகு, அரிசி, காபி, டீ, தேக்கமரம், உலர்ந்த திராட்சை, முந்திரிப்பருப்பு, பச்சைப்பருப்பு, பாதாம் பருப்பு.. இப்படி என்னென்னமோ லிஸ்ட் வெச்சுண்டிருக்காம்ப்பா.

எத்தனை நாளா ஏ.ஆர்.பியில இருக்கேன்னு கேட்டான். நான் ரெண்டு வருஷமா இருக்கேன்னு சொன்னேன். என் கூட பாம்பேக்கு வந்துடு. மாசம் ஆயிரம் ரூபா சம்பளம் தரேன். இந்தியாவில என்னவெல்லாம் கிடைக்கிறதா, அதெல்லாம் வாங்கி ஐரோப்பாவுக்கு அனுப்புவோம்னு சொன்னான். நான் சரின்னு சொல்லியிருக்கேன்."

"எப்போ போகறதா உத்தேசம்..?"

"நாளைக்கு வரச் சொல்றான்..."

"ஆடி மாசம் முடியட்டும். பாம்பேல மழை முடிஞ்ச பிறகு போ. எடுத்தவுடனேயே மழையில போய்ப் புது ஊர்ல மாட்டிக்காத. சமைக்கறதுக்கு பட்டாபினு ஒரு பையனை அனுப்பறேன். அவனையும் கூட்டிண்டு போ. பாலக்காட்டு பிராமணா நிறைய பேர் பாம்பேல வந்தாச்சு. அங்கே எங்கேயாவது அந்த ஏரியாவில இடம் பார்த்துக்கோ. மோட்டார் சைக்கிள் வாங்கிக்கோ. சம்பாதிச்ச இங்க அனுப்பணும்னு ஒண்ணும் இல்லை..."

"எதுக்குக் குழந்தையை பாம்பேக்கு அனுப்பறேள்...? இங்கேயே கோட்டையில ஒரு உத்தியோகம் வாங்கித் தரப்படாதா...? உங்களால் முடியாத ஒரு விஷயமா இது...?" என்று கேட்டாள் வாலாம்பாள்.

"தேவையே இல்லை. இன்னிய தேதிக்கு கிளார்க்கா போனா அறுபது ரூபா, எழுவது ரூபா சம்பளம். கலெக்டரா போனா முந்நூறு ரூபா சம்பளம். பாம்பே போனா ஆயிரம் ரூபா சம்பளம்டி... தனியா ஒரு கம்பெனி ஆரம்பிச்சு, அதை இவன் பொறுப்புல விட்டுட்டு, லாபத்துல பங்குத் தருவான்..."

"பாம்பேல ஒரு ரூம் வாடகை ஒரு மாசத்துக்கு நூறு ரூபாயாமே"

"இருக்கட்டுமே... சௌகரியமா இருக்கட்டுமே..."

"எனக்கு மனசு ஒப்பலை. அவன் இங்கேயே இருக்கட்டும்..." வாலாம்பாள் பிடிவாதம் பிடித்தாள்.

"இல்லை. இங்கே இனிமேல் நமக்கு எதிர்காலம் இல்லை. எல்லா ஜாதிக்காராளும் முழிச்சுனுட்டா. முன்ன மாதிரி நெஞ்சுக்கு நேரா கைய மடிச்சுக் கட்டிண்டு, நான் பெரிய ஜாம்பவான். உயர்ஜாதிக்காரன். எல்லாரும் என்னை நமஸ்காரம் பண்ணணும்னு எல்லாம் பேச முடியாது. உங்க பேச்சைக் கேட்கறதுக்கு இங்க யாரும்

தயாரா இல்லை. நீ என்ன பேசினாலும் எதிர்த்துப் பேசறதுக்க ஒரு குரூப் வந்துடுத்து. காக்கா கறுப்புன்னா இல்லை வெளுப்புங்கறான். வேணும்னே பேசறான். ரொம்ப கோபமா பேசறான்.

முதலியாரெல்லாம் நம்மமேல இருக்கற கோபத்தால தான் பட்டாளத்துலபோய்ச் சேர்ந்தான். ஜாதியை ஒழிக்கணும்னு நிறைய பேருக்குத் தோணிடுத்து. ஒழிக்கப் போறாளா, இல்லையாங்கறது அடுத்த விஷயம். ஆனா, நாம உயர்வா பேசிக்கறதை அவங்களால பொறுத்துக்க முடியலை. இதான் முக்கியம். பொறுத்துக்க முடியாத இடத்துல நின்னு போராடறதைவிட, வெளியே போயிடறது பெட்டர்..."

"அப்போ கோட்டை முழுக்க யாரு வருவா...?"

"யார் எதிர்த்துப் போராடினாளோ, அவாதான் வருவா..."

"அவங்களை எதிர்த்து யாரும் போராட மாட்டாளா...?"

"போராடுவா... அதுக்கொரு அம்பது வருஷமாகும். அந்த அம்பது வருஷம் வரைக்கும் நம்மளை எதிர்க்கறவா ராஜ்யம்தான் நடக்கும்..."

"நீங்க நீதிக்கட்சிக்காராளைச் சொல்றேளா...?"

"ஏதோ ஒரு கட்சி. ஆள் பேர் முக்கியமோ...? மனுஷாளுடைய குணம் மாறிண்டு வருது. நாம அதிகாரம் பண்ணிண்டு இனிமே திரிய முடியாது. நமக்கு வேதப்படிப்பு போயிடுத்து. வியாபாரம் வந்துடுத்து. இனிமே ஓட்டல் வியாபாரமும் அபத்தம். கோட்டை வேலை கேவலம். பாம்பேக்குப் போனா, எது வேணாலும் வியாபாரம் பண்லாம். எப்ப வேணாலும் வித்கலாம். எது வேணாலும் வாங்கலாம். வித்து, வாங்கறதுதான் இனி வியாபாரம்.

செய்து கடை பரப்புவது அல்ல. அது நச்சு. கமிஷன் ஏஜென்ட், சாமானையே பார்க்க வேண்டாம். அங்கேயிருந்து ஏலக்கா வாங்கி, இவன்கிட்ட கொடுக்கணும். இங்கேயிருந்து தோல் வாங்கி, அங்க இன்னொருத்தன்கிட்ட கொடுக்கணும். இது கைமாறுகிறபோது ஒவ்வொண்ணும் ஒண்ணுக்குப் பாத்தா குட்டி போடும்..."

"நம்ம பிள்ளையால பண்ண முடியுமா...?"

"அவனால இதுதான் பண்ண முடியும். வேறு எதுவும் பண்ண முடியாது..."

"என்னை ஏரோப்ளேன்லயே கூட்டிண்டு போறேன்னு சொல்லியிருக்கார்ப்பா..." என்றான் நீலகண்டன்.

மறுநாள் மறுபடியும் நீலகண்டன் ஓடிவந்தான்.

"இன்னிக்கே கிளம்பறியானு கேட்கறாம்ப்பா..."

"இன்னிக்கு நாள் நன்னாயிருக்கு, கிளம்பிடறியா...?"

"என்ன... இப்படிக் குழந்தையைத் திடீர்னு கழுத்தைப் பிடிச்சுத் தள்ளற மாதிரி..."

"சும்மாயிருடி... போறேங்கறவனைத் தடுக்காதே. அவன் ஜெயிக்கறதுக்காகப் போறான். போகட்டும்... கிளம்பு இன்னிக்கே கிளம்பு... இன்னிக்கு யோகம் நன்னாயிருக்கு. திதி நன்னாயிருக்கு. வடக்குத் திசையில இன்னிக்குப் போறவனெல்லாம் நிச்சயமா ஜெயிப்பான். கவலைப் படாதே... கிளம்பு... இப்பவே கிளம்பு..."

"பட்டாபிப்பா..."

"நான் மெல்ல அனுப்பறேன். நீ லெட்டர் எழுதின பிறகு, நான் ட்ரெயின்ல ஏத்தி அனுப்பறேன். முடிஞ்சா நானும் வரேன். பட்டாபியைக் கூட்டிண்டு வரேன்."

"சரிப்பா..."

காலைவரை வீட்டு வராண்டாவில் காலாட்டி பேப்பர் படித்துக் கொண்டிருந்த பிள்ளை, தெருவில் சைக்கிளில் வேகமாக மணியடித்து ஓடிக்கொண்டிருந்த பிள்ளை, பாண்ட்டும் சட்டையும் ஷூவும் டையும் கோட்டும் போட்டு, பாம்பே போகத் தயாரானான். முரசறிவிக்காமல்... எக்காளம் ஊதாமல்... துண்டுப் பிரசுரம் போடாமல்... நீலகண்டன் பம்பாய் போவது மயிலாப்பூர் மொத்த ஜனத்தொகைக்கும் தெரிந்தது.

26

நீலகண்டன் நெடுஞ்சாண்கிடையாக விஸ்வநாத சாஸ்திரிகளின் காலில் விழுந்தான்.

"என்னது...?" -விஸ்வநாத சாஸ்திரிகள் சற்றுத் திடுக்கிட்டவராகக் கேட்டார்.

நீலகண்டனையும், விஸ்வநாத சாஸ்திரியையும் சுற்றி அந்த வீடு நின்று கொண்டிருந்தது.

விஸ்வநாத சாஸ்திரிகளுக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருந்தார் சதாசிவம்.

அத்திம்பேர் விஸ்வநாத சாஸ்திரிகள் முகம் ஒரு பறங்கிப்பழம் போலத் தளதளவென்று இருந்தது. நன்றாக உண்டு, கடுமையாக வேலை செய்து, சட்டென்று வேலையெல்லாம் நிறுத்திதொண்டு கிழமான பிறகு உணவுப் பழக்கம் கட்டுப்பாடாக இல்லாததால் உடம்பு பிரமாண்டமாகப் பெருத்துவிட்டது. ஒவ்வொரு பேச்சுக்கும் மூச்சு வாங்கியது. உதடுகளிலிருந்து எச்சில் வழிந்தது. ஆனாலும் கண்ணில் ஒரு துறுதுறுப்பு, முகத்தில் ஒரு பரவசம். யாரைப் பார்க்கும் போதும் கொள்ளைப் பிரியத்தோடு பார்க்கிற பார்வை. என்னது... என்னது... என்று விசாரிக்கிற ஆவல். சகலமும் அவரை உயர்த்தி வைத்திருந்தன.

"மாயவரம் ஸ்டேஷனில் நெடு நெடுவென்று உயரமாக, உறுதியாக, இரண்டு கால்களையும் அகற்றி நின்று கொண்டு ஓட்டல் திறப்போம், ஜெயிப்போம் என்று விடாப்பிடியாகச் சொன்ன உடம்பா இது? கூடையிலிருந்த வெல்லப்பாகைக் கொட்டினது போல ஏன் இப்படி, இத்தனை கனத்தோடு இருக்கிறது...?

உணவு சமைக்கலாம், நாலு பேருக்குப் போடலாம். ஆனால், சமைப்பதாலேயே நாம் மனம் அடக்காமல் தின்றுவிடக்கூடாது. அத்திம்பேர் சாப்பிட்டுச் சாப்பிட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

நான் சாப்பிடாமல் இருப்பதை இனிமேல் யக்ஞமாக வைத்துக் கொள்ளப் போகிறேன்." சதாசிவம் அவரையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தார்.

"நீலகண்டன் நமஸ்காரம் பண்றான்..." வாலாம்பாள் உரக்கக் கத்தினாள்.

"அப்படியா நீர்க்காயுசா இருக்கணும்... என்ன விசேஷம்...?"

"பாம்பேக்குப் போறான்..."

"பாம்பேக்கா... எதுக்கு...?"

"அங்க உத்தியோகம் கிடைச்சுருக்கு..."

"எதுக்கு இவன் உத்தியோகத்துக்குப் போகணும்...?"

"இது நல்ல கேள்வியா இருக்கே...? புருஷன்னா உத்தியோகம் போக வேண்டாமா...?"

"அப்படியென்ன உத்தியோகம்...?"

"ஒரு கம்பெனியில மேனேஜரா போறான்..."

"கைகட்ற உத்தியோகமா...?"

"கைகட்ற உத்தியோகமில்லை. டைகட்ற உத்தியோகம்..."

"டை கட்டிட்டு, அப்புறம் கையும் கட்டிக்கணும் மோன்னோ...?"

விஸ்வநாத சாஸ்திரிகள் இளக்காரமாகச் சிரித்தார்.

"ஆயிரத்துநூறு ரூபா சம்பளம் எடுத்தவடனேயே..." என்றாள் வாலாம்மாள்.

"சம்பளம் இருக்கட்டும். மரியாதை இருக்குமா...? வசதி இருக்குமா...? அதெல்லவா பார்க்கணும்...? நிம்மதியில்லாத ஒரு உத்தியோகத்துக்குப் போய் மாட்டிப்பானேன்...?"

"என்ன உத்தியோகம்தான் நிம்மதிங்கறேள்...?"

"சுயமா செய்யற எந்த உத்தியோகமும் நிம்மதி. புரோகிதம் பண்றவன் யாருக்கும் கைகட்ட வேண்டாம். ஓட்டல் நடத்தறவன் யாருக்கும் கைகட்ட வேண்டாம். வக்கீல் தொழில் பண்றவன் யாருக்கும் கைகட்ட வேண்டாம். டாக்டரா இருக்கறவன் யாருக்கும் கைகட்ட வேண்டாம். விவசாயம் பண்ணா, யாருக்கும் கைகட்ட வேண்டாம். இப்படிக் கைகட்டாத உத்தியோகம் நிறைய இருக்கே..." என்றார் விஸ்வநாத சாஸ்திரிகள்.

"டாக்டர் தொழில் நீலகண்டனுக்குப் பிடிக்கலை. வக்கிலா இருக்க வேண்டாம்னு அவா அப்பா சொல்லிட்டா..."

"ஏன் சொன்னான்...?"

"சத்தியமும் பேசணும். சத்தியம் இல்லாததும் பேசணும். பொய் சொல்லி, காசு வாங்கணும். அதனால, அந்தத் தொழில் வேண்டாம்னு சொல்லிட்டா..."

"அப்புறம்...?"

"ஓட்டல்ல படற கஷ்டம் அதிகம். சம்பாத்தியம் கம்மி அப்படின்னு ஒரு அபிப்ராயம். விவசாயம் வேண்டாம்னு நாமளே வெளியே வந்துட்டோம். புரோகிதத்துக்கு

உண்டான படிப்பு படிக்கலை. அதனாலதான் பாம்பே போறான்..."

வாலாம்பாள் சகலமும் ஞாபகம் வைத்துக் கொண்டு கூர்மையாக விஸ்வநாத சாஸ்திரிகளிடம் பேசினாள்.

"நீ தயார் பண்ணிட்டியாக்கும், அந்த மாதிரி போகறதுக்கு...?" சட்டென்று திரும்பி வாலாம்பாளை, விஸ்வநாத சாஸ்திரிகள் பார்த்தார்.

"நான் என்ன தயார் பண்றது...? அவனா இப்படிப் போறேன், அப்பிடிப் போறேன்னான். ஏ.ஆர்.பி.எஃப்-ல மூணு மாசம் டிரெய்னிங் அப்பவே தெரிஞ்சது, இந்தப் பிள்ளை எங்கயோ வெளிதேசம்தான் போகப் போறதுன்னு. அதே மாதிரி, அவனுக்கு வெளியூர் போகறதுக்குண்டான ஆசை வந்துடுத்து. ஆசைக்கு ஏற்றபடி வாய்ப்பும் வந்துடுத்து. இளம்பிப் போயிண்டிருக்கான்..."

"வியாபாரி ஆயிட்டான்னு சொல்லு..."

"இவன் வியாபாரம் பண்ணலை. வியாபாரம் பண்றவன்கிட்ட வேலை பார்க்கிறான்..."

"அது, பாதி வியாபாரமில்லையோ...?"

"இல்லை... கணக்குப்பிள்ளை வியாபாரம். என்ன வித்திருக்கு, என்ன வாங்கியிருக்கு, என்ன வாங்கணும், என்ன விக்கணும்னு தீர்மானம் பண்ற வியாபாரம்... வேலை..."

"அது இருக்கட்டும். உன் பொண் குழந்தைக்கு எப்போ கல்யாணம்? யாருமே பேசாம இருக்காளே... குழந்தைக்குப் பதினாறு வயசு ஆயிடுத்தே."

"அவ காலேஜ் படிக்கணுங்கறா..."

"படிச்சு என்ன பண்ணப் போறா...? அவளும் வியாபாரம் பண்ணப் போறாளா, வியாபாரம் பண்றவாகிட்ட வேலைக்குப் போகப்போறாளா...?"

"இல்லை... இந்த காலத்துக் பொண்கள் படிக்கணும், இங்கிலீஷ் பேசணும்னு சொல்லிண்டிருக்கா."

"இங்கிலீஷ் பேசி, என்னடி பண்ணப்போறா...?" விஸ்வநாத சாஸ்திரிகள் வியப்போடு கேட்டார்.

"அவளும் டெல்லி, பாம்பேனு போகலாமோன்னோ... அங்க இருக்கிற பையனைக் கல்யாணம் பண்ணிண்டு செளக்கியமா இருக்கலாமோன்னோ... அங்க இருக்கிற போது இங்கிலீஷும் இந்தியும் பேசத் தெரிஞ்சுக்கணு மோன்னோ..."

"அப்போ மெட்ராஸ் வேண்டாம்னு சொல்லிட்டேளா...? மெட்ராஸ் உங்களுக்கெல்லாம் பிடிக்கலையா...?"

"உங்களுக்கு எப்படி மாயவரம் அலுப்பு வந்துடுத்தோ, அதே மாதிரி இந்தக் குழந்தேளுக்கெல்லாம் மெட்ராஸ் அலுப்பு வந்துடுத்து. மேற்கொண்டு ஜெயிக்கணும்னா, மெட்ராஸ்ல இருந்துண்டு முடியாது. பாம்பே பக்கம், டெல்லி பக்கம் தான் போகணும்..."

"ஏன்... ஏன் அப்படி...?"

"இந்த ஊர்ல ஜாதி வித்தியாசம் பார்க்க ஆரம்பிச் சுட்டா, பிராம்மணாள் மேல வெறுப்பு வந்துடுத்து, நாலு பேர் வெறுக்கிற இடத்துல நாம இருப்பானேன்...?"

"வெறுக்கும்படியா என்ன பண்ணிட்டோம்...?"

"என்ன பண்ணலை...?" வைத்தீஸ்வரன் இடைமறித்தார்.

"என்னன்னு சொல்லு...?"

"இழிவுபடுத்தினது அதிகமா போயிடுத்து. அதுமட்டு மில்லாமல், பிராம்மணாள் தன்னுடைய பலம் என்னவோ, அந்தப் பலத்தைச் சேர்த்துக்கவும் இல்லை..."

"புரியும்படியா சொல்லு..."

"வேதம் சொல்ற வரைக்கும் எல்லா ஜாதிக்காராளும் மரியாதையா நடத்திண்டிருந்தா. வெள்ளக்காரங்கிட்ட இங்கிலீஷ் பேசி, அவனுக்கு எடுபிடியா போகும்போது, மத்தவா வாழ்க்கையில இவா கால்வைக்கும்படியா ஆயிடுத்து. வெள்ளைக்காரனை முன்னாடி வெச்சு, கிட்டத்தட்ட அந்தணர்கள் ராஜ்ய பரிபாலனம் பண்ண ஆரம்பிச்ச போது எதிர்ப்புகள் அதிகமாயிடுத்து. அதிகாரத்துக்கு வராத வரைக்கும் பிரச்னையில்லை. அதிகாரத்துக்கு வந்த நாள்லேர்ந்து பிரச்னைதான். நீயா, நானா அப்படின்னு ஜனங்க மேல எழுந்துட்டா..."

"அதனால பயந்துண்டு பாம்பேக்கு ஓடறமாக்கும்...?"

"அப்படிச் சொல்வானேன்...? பயப்படாம இன்னும் தைரியமா இருக்கறதுக்குப் பழக்கப்படுத்திக்கறோம்னு சொல்லலாமோன்னோ..."

"பாம்பேல இந்த எதிர்ப்பு இருக்காதா, டெல்லியில இந்த எதிர்ப்பு இருக்காதா...?"

"இல்லை... வட இந்தியாவில இந்த எதிர்ப்பு வர்றதில்லை. பதிலாக, மரியாதை அதிகமாக இருக்கு..."

"அங்க போய் நமக்குண்டான உணவோட, நமக்குண்டான ஆசாரத்தோட இருக்க முடியுமா...?"

"ஆஹா... எங்க போனாலும் இருக்கலாம்..."

"அப்போ சந்தோஷமா போயிட்டு வா..." கைதூக்கி ஆசீர்வதித்தார்.

நீலகண்டன் திரும்பினான்.

"நீலகண்டா, இங்க வா... உனக்கு மரியாதை எதுன்னு தெரியுமா...? எப்போ வரும்னு தெரியுமா...? மத்தவா உன்னைப் பார்த்துக் கைகூப்பினால், அது மரியாதை. உன்னை வணங்கற மரியாதை, உனக்கு எப்போ வரும்...? உனக்கு வேலை தெரிஞ்சா வரும்.

உழைப்புக்குப் பயப்படாம இருந்தா வரும். இதுதான் முதல் தகுதி. விஸ்வநாதன் சாம்பார் சாதம் இளறினா, அது தேவாமிர்தமா இருக்கும் அப்படின்னு வாசல்ல ஒரு மணி நேரம் காத்திருந்து பட்டைச் சாதம் வாங்கிண்டு போவான். சனிக்கிழமை அடை அவியலுக்கு ஒரு பெரிய கூட்டம் தேடிண்டு வரும். சாப்பிட்டு முடிச்ச பிறகு, நாம நடந்து போறதைப் பார்த்தா நின்னு நமஸ்காரம் பண்ணிட்டுப் பாராட்டுவான். இது எப்படி ஏற்படும் தெரியுமா...? வேலை செய்யற ஒவ்வொரு விநாடியும் வேலையோடு இருப்பது. வேறு எது பற்றியும் யோசிக்காது இருப்பது. பாம்பேக்குப் போயிட்டு, மயிலாப்பூரையும் அம்மாவையும் அப்பாவையும் நினைச்சுண்டிருக்காதே... பாம்பேயே உன்னுடைய இடம். பாம்பேயே உன் வீடுன்னு வெச்சுக்கோ. நான் மாயவரத்தை விட்டுட்டு மெட்ராஸ் தான் எனக்குன்னு எப்படி வந்தேனோ... அதே போல, இந்த மண்ணை நன்னா உதறிட்டு, பாம்பேயை இறுகப் பிடிச்சுக்கோ. ஊரை கெட்டியா பிடிச்சுண்டா, உத்தியோகத்துல பிரியம் ஏற்படும். சொந்த ஊர் நினைப்பே இருந்ததுன்னா, உத்தியோகம் ஒட்டாது. உத்தியோகம் ஒட்டலைன்னா உயர முடியாது. உயரம் இல்லைன்னா, தாழ்த்தித்தான் பேசுவான். மண்மேல பாசம் வெச்சவன், மண்ணை விட்டுப் போகக்கூடாது. போறவன், பாசம் வைக்கப்படாது..."

"பெரியவாகிட்ட இன்னொரு விஷயமும் விண்ணப்பிச்சுக்கறேன்..." அருகே வைத்தீஸ்வரன் வந்து உட்கார்ந்தார்.

"என்ன... நாடகமா பேசற... சாதாரணமா சொல்லேன்..."

"பொண்ணுக்கு வரன் பார்த்திருக்கேன்..."

"ஆஹா... ரொம்ப சந்தோஷம்... யார் எந்தூர்...?"

"அவாளுக்கும் தஞ்சாவூர்தான் பூர்வீகம்..."

"பூர்வீகம்னா- இப்போ வேற இடத்துல இருக்காளோ-?"

"ஆமா, டெல்லியில் இருக்கா..."

"குழந்தைய அங்கே கொண்டு போய்க் கொடுக்கப் போறியா..?"

"கல்யாணம் இங்கதான் நடக்கும். ஆனா, பொண்ணு அங்கதான் குடித்தனம் பண்ணுவா..."

"உனக்குச் சரின்னு தோண்றதாடா... மூணு நாள் பயணமில்லையா..?"

"இல்லை- இப்போ ரெண்டரை நாளா குறுகிடுத்து. வண்டி இன்னும் வேகமா போறதாம்..."

"பாஷை தெரியாத ஊர்ல கொண்டு போய்க் கொடுக்கறியே-?"

"அதான், அவளை இங்கிலீஷ் படிக்க வெச்சுருக்கனே-?"

"இங்கிலீஷ் படிச்சா, அங்கே சரியா வந்துருமா..?"

"இந்தியும் கத்துண்டிருக்காளே."

"அந்த மனுஷா எப்படி, ஏதுனு தெரியுமா..?"

"நம்மளை மாதிரியே தஞ்சாவூர்லேர்ந்து மெட்ராஸுக்குப் பதிலா பெங்களூர் போய், பெங்களூர்லேர்ந்து டெல்லிக்குப் போயிட்டா. மூணு தலைமுறைக்கு முன்னாடி தஞ்சவூர்லேர்ந்து நகர்ந்து வந்திருக்கா..."

"அடிப்படையா என்ன தொழில்..?"

"கிராம முன்சீப், கணக்குப்பிள்ளை... அப்படித்தான் ஆரம்பிச்சுருக்கா. பெங்களூர்லயே கம்பெனி வேலைக்குப் போயிட்டா. வீட்ல இருக்கிற பொம்மனாட்டிகளும் இங்கிலீஷ்ல பேசறா. கம்பெனி வேலையைவிட இப்போதைக்கு மத்திய சர்க்கார்ல போய் உட்கார்ந்துக்கறதுதான் ரொம்பப் பொறுப்பான வேலை அப்படினு தெளிவா

தெரிஞ்சுண்டு, குழந்தைகளை மத்திய சர்க்கார் வேலைக்கு அனுப்பியிருக்கா. அந்தப் பிள்ளை, மத்திய சர்க்கார்ல உதவி செக்ரெட்டரியா இருக்கான்..."

"என்ன வயது ஆகறது..?"

"இருபத்தேழு"

"நம்ம குழந்தை ரொம்பச் சின்னவளாச்சேடா"

"பொண்ணு சரிங்கறா. பையன் ரொம்ப ஆசையா இருக்கான். அவா ஆத்துல இருக்கறவாளுக்கும் நம்ம வீடு ரொம்பப் பிடிச்சுருக்கு. பழைய பழக்கவழக்கங்கள் மாறிப் போகக்கூடாதுங்கறதுக்காகத்தான். பெங்களூர்லயோ, வேற இடத்துலயோ பொண்ணு எடுக்காம, மெட்ராஸ்லேர்ந்து பொண்ணு வேணும்னு கேட்டிருக்கா, ரொம்ப நாகரிகமாகவும் இருக்கப்படாது. மத்தியமா இருக்கணும்னு சொல்லிவிட்டு, நம்ம வீட்டை வந்து சுத்திச் சுத்திப் பார்த்துட்டு, ரொம்ப சந்தோஷமா திரும்பிப் போனா, என்ன இஷ்டமோ, அதைப் பண்ணச் சொல்றா..."

"குழந்தைக்கு பதினாறு வயசா..?"

"ஆமாம்."

"பதினோரு வயசு வித்தியாசம்... பரவாயில்லையா..? ஆம்பளைக்கு என்ன வயசு அப்படினுதானே சொல்வேள்..?"

விஸ்வநாத சாஸ்திரிகள் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"சரி, செய்துடு... எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் செய்துடு. அவா வேண்டான்னாகூட, நீ எதையும் நிறுத்தாதே... குழந்தைக்கு நிறைய நகை போடு. துணிமணிகள் அவா ஆத்து மனுஷா எல்லோருக்கும் வாங்கிக்கொடு. நம்ம பொண்ணுக்கு மரியாதை எப்போ

வரும் தெரியுமா...? நீ பண்ற சீர்ல, உன்னுடைய தாராள குணத்துல, நம்ம பொண்ணுக்கு மரியாதை கிடைக்கும்..."

"நம்மளையெல்லாம் டெல்லிக்கு வரச்சொல்றா... அப்படியா காசி, கங்கையெல்லாம், பார்க்கலாம்னு... கார் வெச்சுண்டு போகலாம்னு சொல்றா..."

"சரி, போயிட்டு வா..."

"போயிட்டு வான்னா நீங்க வரலையா...?"

"என்னால முடியாதுடா... இந்த உடம்பை வெச்சுண்டு பத்தடி நடக்க முடியாது. நான் எங்க காசி, கங்கைனு போறது...? இனி எல்லாம் இந்த மெட்ராஸ்தான். ஒரு தடவை மாயவரம் போகலாம் அப்படினு ஒரு ஆசை இருக்கு..."

"இப்போதானே போயிட்டு வந்தேள்...?"

"தனியலைடா... திரும்பத் திரும்ப மாயவரத்துமேல ஆசை இருக்கு..."

"இப்போதானே சொன்னேள் -மண்மேல பாசம் வைக்கப்படாதுனு..."

"மாயவரம்னா மாயவரம் கூட இல்லையா... மாயவரம் ரயில்வே ஸ்டேஷன். அதைப் பார்க்கிறபோது, உடம்பெல்லாம் பூத்து நிக்கறதுடா... மனசெல்லாம் குளுமையாயிடறது..."

விஸ்வநாத சாஸ்திரிகள் கண்கள் பழைய நினைவில் நிலைத்தன.

27

விஸ்வநாத சாஸ்திரிகளிடம், வைத்தீஸ்வரன் தனியே உட்கார்ந்து காதோடு கேள்வி கேட்டார்... "என்ன திடீர்னு ரயில்வே ஸ்டேஷன் மேல காதல்?"

"அங்கதான்டா நான் பெரியாளா மாறினேன். எத்தனை கூட்டுக்கோப்பா அத்தனை பேரும் ஒரு பெரிய போர்ல இறங்கற மாதிரி இறங்கினோம். எத்தனை வேலை செய்தோம்? நாள், கிழமை, பண்டிகை, ஞாயிறு, திங்கள் எதுவுமில்லை. எல்லா நாளும் வேலை. எல்லா நாளும் உழைப்பு. வெறிபிடிச்சா மாதிரி ஆத்துல இருக்கற பொம்மனாட்டிகள், குழந்தைகள் எல்லாரும் வேலை செய்தா. சதாசிவன் சின்னப் பிள்ளை. என்ன ஓட்டம் ஓடுவான். எத்தனை மாவை அரைப்பான். எவ்வளவு வடை தட்டிப்போட்டு எடுத்திருக்கான். அடுப்புலேர்ந்து பத்தடி தள்ளி கிழிசல் கோரைப்பாயை போட்டு அதுல சுருண்டு தூங்கிண்டிருப்பான். ஒரு படுக்கை வேணும்னு கூட தோணலைடா. அப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்தோம். அப்படி ஒரு உழைப்பு உழைச்சோம். என் பொண்டாட்டி மாதிரி உத்தமியெல்லாம் கிடைக்கறது ரொம்பக் கஷ்டம். நாம எதுக்கு வியாபாரம் பண்ணணும்... வேண்டாமே இப்படின்னு சொல்லமாட்டா. நீங்க என்ன பண்றேளோ அது சரி. நீங்க ஜெயிக்கணும்னு சொல்றேளா... ஜெயிச்சுடுவோம். நீங்க வெட்டி முறிக்கணும்னு சொல்றேளா... முறிச்சிடுவோம்." அப்படின்னு புருஷன் என்ன சொன்னாலும் கட்டுப்பட்டு நடந்தவ. எங்களுக்காவது கிழிசல் கோரைப்பாய் இருக்கும். அந்த பொம்மனாட்டிகளுக்கு அதுகூட இருக்காது. வாசப்படியிலயே தலையை வெச்சுப் படுத்துண்டிருப்பா. மெட்ராஸுக்கு வந்த பிறகுதான் அவளுக்கு உலகமே தெரியும்."

"நீங்க என்ன சொல்ல வரேள். எனக்குப் புரியலையே." வாலாம்பாள் தொலைதூரத்திலிருந்து குரல் கொடுத்தாள்.

விஸ்வநாத சாஸ்திரிகள் கண்கள் சுருக்கி வாலாம்பாள் இருக்கும் திசையைப் பார்த்தார்.

"வாலாம்பாளா... சொல்றேன். நான் உழைச்சா மாதிரி உன் பிள்ளை நீலகண்டன் உழைக்கணும். ராப்பகலா உழைக்கணும். என் பொண்ணாட்டி எனக்கு உறுதுணையா இருந்து உழைச்சா மாதிரி உன் பொண்ணு அவ புருஷனுக்கு உறுதுணையா இருந்து உழைக்கணும்."

"உழைக்கறதுக்கு அடிப்படையா என்ன வேணும்?" கூடத்திலிருந்த யாரோ கேட்டார்கள்.

"ஆசை வேணும். ஜெயிக்கணுங்கற ஆசை வேணும்."

"ஜெயிக்கணுங்கற ஆசை ஒருத்தருக்கு எப்போ வரும்?"

"புராணங்கள், இதிகாசங்கள் கேட்டா வரும். எல்லா புராணங்களும் இதிகாசங்களும், வளர்வதைப் பற்றி, வளர்ச்சியைப் பற்றிதான் சொல்லியிருக்கு.

ஜெயிக்கறதுக்கு ஒழுக்கம் வேணும். ஒழுக்கத்துக்கு அமைதி வேணும். அமைதிக்கு பிராணயாமம், தியானம்... தியானமும் பிராணாயாமமும் பண்றதுக்கு இன்னும் அடிப்படை காயத்ரி மந்திரம். அந்த ஜபம். இருந்தாதான் ஜெயிக்க முடியும்."

"அற்புதமா பேசறேள்– அற்புதமா பேசறேள்." விஸ்வநாத சாஸ்திரிகளின் கால்களைத் தடவி தலையில் வைத்துக் கொண்டார்.

"அப்போ உங்க உத்தரவோடு பொண்ணு கல்யாணத்தை முடிச்சுடறேன்."

"கல்யாணத்துக்கு நீலகண்டன் வருவானாடா"

"தெரியலை"

"சரி அது முக்கியமில்லை. அவன் வரலைன்னாலும் பரவாயில்லை. கல்யாணத்தை நீ நடத்து. இதே மயிலாப்பூர் தானே கல்யாணம்."

"ஆமாம். பெண்ணாத்தூர் பள்ளிக் கூடத்துலதான் பந்தல் போட்டு கல்யாணம்."

"ஜமாய்ச்சுடு."

"நீங்க மாயவரம் போகணும்னேளே."

"ஆமா, போகணும், கல்யாணம் முடிஞ்ச போறேன்."

வாலாம்பாளும் வைத்தீஸ்வரனும் போட்டி போட்டுக் கொண்டு அலைந்தார்கள். பிள்ளையின் தலையைத் தடவி இது பற்றி எதுவும் கவலைப்படாமல் நீ உன் வேலையை அங்கு பார்த்துக் கொண்டிரு என்று அனுப்பினார்கள். மிக முக்கியமான கட்டத்தில் பிள்ளை பக்கத்தில் இல்லாமல் வெகுதூரம் போகிறானே என்று தாய் அழுதாள்.

"நான் வேண்டுமானால் பம்பாய் போகாமல் நின்று விடட்டுமா?" என்று பிள்ளை கேட்டான். அப்பா அதட்டி அவனை விமானம் ஏற்றி வைத்தார்.

உறவுகளிடையே நீலகண்டன் விமானம் ஏறி பாம்பே போனது பெரும்பேச்சாக இருந்தது.

உலக யுத்தம் உச்சநிலைக்கு வந்தது. விளைபொருட்கள் யாவும் பதுக்கி வைக்கப்பட்டன.

ஒன்றுக்கு மூன்று விலையாகச் சொல்லப்பட்டன. ஏழை ஜனங்கள் ஒருவேளை கஞ்சிக்குத் தவித்தார்கள்.

டெல்லியிலிருந்து அந்தக் குடும்பம் விமானத்தில் வந்து இறங்கியது.

"ஆறுநாள் கல்யாணம். அஞ்சுநாள் கல்யாணம்னு இழுத்து விட்டுண்டு அவஸ்தைப்படாதீங்கோ. முதநாள் சாயந்தரம் ஜானவாசம், சாப்பாடு. மறுநாள் கார்த்தால

டிபன். முகூர்த்தம் முடிஞ்ச மத்தியானம் சாப்பாடு. சாயந்தரம் ஒரு கச்சேரி, டிபன் போறும்... அதுக்கு மேல உங்களுக்கு ஏதாவது கௌரவதைன்னு நினைச்சேள்னா அது பண்ணுங்கோ. இதைத்தாண்டி இந்த பஞ்சகாலத்துல எதுவும் பண்ண வேண்டாம்."

சம்பந்திகள் உரக்கப் பேசினார்கள். நடுநடுவே இந்தியில் பேசிக் கொண்டார்கள். ஆங்கிலத்தில் அலட்டிக் கொண்டார்கள்.

மாப்பிள்ளை செல்லப்பாவும் விமானத்தில் தனியே வந்து இறங்கினான். மிக அழகாக இருந்தான். பணிவாக இருந்தான். மரியாதையாக நடந்து கொண்டான். மயிலாப்பூர் காபீஸ்வரர் கோயிலை ஆசை ஆசையாகச் சுற்றி வந்தான். "எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது" என்றான். நூறு ரூபாய் எடுத்து குருக்கள் தட்டில் போட்டான்.

நீலகண்டன் லீவு கேட்கவில்லை. கேட்டால் கொடுத்திருப்பார்கள். ஆனால், சேர்ந்த இரண்டாம் மாதத்திலேயே லீவு கேட்பது சரியல்ல என்று அவனுக்குத் தோன்றியது. திருமணத்தன்று கோயிலுக்குப் போக ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டான். வெள்ளைக்கார துரை வியந்தான்.

"ஏரோப்ளேனில் போய் வந்திருக்கலாமே. எதற்காகப் போகாமல் இருக்கிறாய்?"

"மூன்று கப்பல்கள் காத்திருக்கின்றன. சாமான்கள் உள்ளே வரவேண்டியிருக்கிறது. நான் போனால் இங்கு பல வேலைகள் முடங்கிவிடும். நான் அப்படிப் போக விரும்பவில்லை. என்னுடைய தங்கையும் அவளது கணவனும் இங்கு வருவார்கள். அப்போது நான் அவர்களோடு ஊர்சுற்ற விரும்புகிறேன். எனக்கு அந்த நேரத்தில் மூன்று நாள் விடுப்பு கொடுத்தால் போதும்."

"தாராளமாக எடுத்துக்கொள்." என்று அவனுக்கு முன் கூட்டியே சொல்லப்பட்டது. அவன் தன் தங்கையின்

திருமணத்துக்குப் போகாதது வெகுவாய் பாராட்டப் பட்டது.

திருமணம் மிக விமரிசையாய் நடந்தேறியது. ஒரு வாரம் கழித்து தங்கையும், தங்கையின் புருஷனும் பம்பாய் சான்டாக்ரூஸ் விமான நிலையத்துக்கு வந்து இறங்கினார்கள். கம்பெனி கார் எடுத்துக்கொண்டு போய் அவர்களை நீலகண்டன் வரவேற்றான்.

முழுக்கை சட்டை தொளதொள பாண்ட், ஒட்ட வெட்டிய கிராப், தடிமனான அகலமான டை, கறுப்புநிற ஷூ என்று நீலகண்டன் இருக்க, கோட்டு சூட்டுடன் மாப்பிள்ளை இறங்க, பின்னால் பட்டுப்புடவையில் மிக அழகாக தங்கை வந்து இறங்கினாள்.

அண்ணாவை நமஸ்கரித்தாள். அண்ணா, தங்கையின் முகத்தைத் கையில் தேக்கிக் கொண்டான்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு, ரொம்ப சந்தோஷமா இருக்கு..." என்று கண்ணில் ஜலம் வழிய அழுதான்.

மைத்துனனை மாப்பிள்ளை தட்டிக் கொடுத்தார்.

"நீலகண்டன்... அவாள்ளாம் எவ்வளவு ஒத்துமையா இருந்திருக்கா. அதே மாதிரி நாமும் ஒத்துமையா இருக்கணும். மைத்துனன், மாப்பிள்ளைங்கற அலட்டலெல்லாம் இல்லாத வாழ்க்கையில முன்னேற்றத்துக்கு எத்தனை வகை உண்டோ, அத்தனை வகையாகவும் பார்க்கணும். எப்படியிருக்கு உன் உத்தியோகம்? எதாவது கஷ்டமா இருந்தா சொல்லு. டெல்லியில இன்னொரு வேலை வாங்கித் தரேன்."

"டெல்லி வேலை வேண்டாம். இந்த உத்தியோகத்துல நிறைய ஸ்கோப் இருக்கு. உண்மையில உங்க வேலையை நீங்க விட்டுட்டு இங்க வந்து உட்கார்ந்தேள்னு வச்சுக்கோங்கோ. ரொம்ப உசரத்துக்கு போயிடலாம்."

"எனக்கு அப்படியொரு எண்ணம் உண்டு_ ஆனால், என் உத்தியோகம் காக கம்மியே தவிர அதிகாரம் ஜாஸ்தி."

"எந்த டிபார்ட்மெண்ட்ல நீங்க இருக்கேள்?"

"கப்பல் போக்குவரத்தை கவனிச்சுண்டிருக்கேன். வெளியூர் இலாகாவும் பார்க்கறேன்."

"அடேயப்பா_ எங்களுக்கு கப்பல் போக்குவரத்துதான் பெரிய தலைவலியா இருக்கு. பம்பாய் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் வரணும்னா, அவன் கப்பல் வர டெல்லியில பர்மிஷன் கேட்கணும்" என்றவன், "பாம்பேல எங்கெல்லாம் போகணும்னு பிளான் பண்ணியிருக்கேள்?" என்று கேட்டான்.

"ஷீர்டி போகணும்னு சொல்லிண்டிருக்கா."

"அப்படியா... நானும் பாத்ததில்லை. ஏற்பாடு பண்றேன்."

சித்திவினாயகர் கோயிலுக்கும், அஷ்டலட்சுமி கோயிலுக்கும், மெரைன் டிரைவிங்குக்கும் அழைத்துப் போனான். கடற்கரை பக்கமிருந்த மிகப்பெரிய ஓட்டலில் தங்க வைத்தான். தங்கையும், செல்லப்பாவும் உள்ளுக்குள் போனபிறகு சந்தோஷமாகத் திரும்பி தன் அறைக்குப் போனான்.

மறுநாள் காலை கார் ஏற்பாடு பண்ணிக்கொண்டு அவர்கள் மூவரும் ஷீர்டி போனார்கள்.

செல்லப்பாவுக்கு ஷீர்டி பாபாவின்மீது மிகப்பெரிய மரியாதையும் மதிப்பும் இருந்தது. "பார்... பார்... என் குருநாதரைப் பார்" என்று மனைவியின் தோளை அணைத்தபடி அவளுக்கு ஷீர்டி பாபாவின் உருவச் சிலையைத் காட்ட, நீலகண்டனின் தங்கை கைகூப்பி பரவசமாகி கணவன் காட்டிய சத்குருவை நமஸ்கரித்தாள். வலம் வந்தாள். நெற்றிக்கு திருநீறு இட்டுக் கொண்டாள். பாடல்கள் பாடினார்கள். கோயிலிலேயே சாப்பிட்டார்

கள். மறுபடி இளம்பி பம்பாய்க்கு வந்தார்கள். தங்கையை ஓட்டலில் ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, இரண்டு பேரும் ஹார்பருக்குப் போனார்கள்.

நீலகண்டன் தன்னுடைய கம்பெனிக்கு அழைத்துப் போனான். வெள்ளைக்கார முதலாளியை அறிமுகப்படுத்தினான்.

"அரசு உதவி செக்ரெட்டரியா கப்பல் போக்குவரத்தா. அடடா... உங்களால் ஒரு உதவியாக வேண்டுமே" வெள்ளையன் மிக ஆவலாகப் பேசினான்.

அவன் நெடுநேரம் ஆள். பிரிட்டிஷாரிடம் அவனுக்கு மிகப்பெரிய மரியாதை இல்லை. மாறாக, லேசாக ஒரு கேலி இருந்தது. எனவே அவன் தன் விஷயங்களை இந்தியர்களை வைத்தே முடித்துக் கொண்டிருந்தான்.

தன்னுடைய ஊழியரின் உறவுக்காரர் டெல்லியில் இருப்பது அவனுக்கு மிகச் சௌகரியமாய் போய்விட்டது. பல்வேறு கேள்விகள் கேட்டு – செல்லப்பாவின் படிப்பையும் பதவியையும் கேட்டு சுவீகரித்துக் கொண்டான்.

"கப்பல் வாங்கி விடலாமா என்றிருக்கிறேன். ஒரு கப்பல் விலைக்கு வருகிறது. என்ன சொல்கிறீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டான்.

"இதுதான் மிக நல்ல தருணம். போர் மெல்ல மெல்ல ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஒரு அலைவீச்சில் ஜெர்மன் அழிந்துவிடும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். போருக்குப் பிறகு மிகப்பெரிய ஓய்வு ஏற்படும். அப்போது பழைய சாமான்கள் அதிகம் கிடைக்கும். நிச்சயம் கப்பல்கள் கிடைக்கும். வெளியே ஓட்டப்படாத கப்பல்கள் பலவற்றை நீங்கள் இப்போதே வலைவீசித் தேடுதல் நல்லது. ஐந்து வருடம், ஆறு வருடமுள்ள நல்ல கப்பல்களை வாங்கி அவற்றைச் சரக்கேற்றும் கப்பல்களாகச் சிறிய திருத்தங்கள் செய்து உடனடியாக தொழில் ஆரம்பிக்கலாம்.

பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளை, அமெரிக்க ராணுவ அதிகாரிகளை துணைக்குச் சேர்த்துக்கொள்ளுங்கள். அவர்களில் பல பேரிடம் நிறைய தங்கம் இருக்கிறது. பங்கு பத்திரங்கள் வெளியிடுங்கள். தங்கமாக வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள். பல ராணுவ வீரர்கள் வருவார்கள். தென்னிந்தியாவுடனான தொடர்பைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள். அங்குதான் உங்களுக்குத் தேவையான நல்ல பொருட்கள் இருக்கின்றன. அஸ்ஸாமில் டீ வாங்காதீர்கள். அங்கு போட்டி அதிகம். அஸ்ஸாம் டீயைவிட சிலோன் டீ உயர்வானது. போட்டி மிகக் குறைவு. போட்டியே இல்லையென்று கூடச் சொல்லலாம். கேரளாவில் காபி, கிராம்பு, ஏலம் -ஆந்திராவில் அரிசி, நீலகிரியில் பெப்பர். மதுரையில் மிளகாய், மஞ்சள் என்று பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. நல்ல சந்தன மரங்கள், தேக்குமரங்கள், யானைத் தந்தங்கள் மைசூரில் கிடைக்கும். பங்கு பத்திரங்கள் வெளியிடுவது எப்படி என்று தெரியுமா?

செல்லப்பா ஒரு திட்டம் போட்டுக் கொடுத்தான். அவன் பேச்சு நீலகண்டனுக்கு பிரமிப்பைக் கொடுத்தது.

"இன்று இரவு தாஜ் ஓட்டலுக்கு வருகிறீர்களா?

என் மனைவியை அறிமுகப்படுத்துகிறேன். அங்கு உங்களுக்காக இரவு டின்னர் ஏற்பாடு செய்திருக்கிறேன்." என்று நெற்றியை முதலாளியை செல்லப்பா வரவேற்றான்.

நீலகண்டன் நினைத்தான். ஆனால், வெளிக்காட்டவில்லை.

"மிக்க நன்றி. நான் என் மனைவியோடு மகனோடும் வருகிறேன்." என்று கைகுலுக்கினான், அந்த நெற்றியுக்காரன்.

இரவு அவர்களுக்கென்று ஒரு தனி ஹால் ஒதுக்கப்பட்டு மிகப் பெரிய மேசை போடப்பட்டு பல்வேறு வகையான உணவுகள் பரிமாறப்பட்டன.

"நான் மாமிசம் சாப்பிடுவதில்லை. இங்கு ஏற்பாடு செய்திருக்கிற அத்தனை மாமிச உணவுகளும் உங்களுக்காகவே செய்யப்பட்டவை. இதோ இந்த ஷாம்பெய்ன் முப்பது வருடப் பழையது. உங்களுடைய ஊரிலிருந்து வந்திருக்கிறது. இதை உங்களுக்குப் பரிசாகக் கொடுப்பதில் பெருமையடைகிறேன்." செல்லப்பா அந்த பச்சைநிற பாட்டிலை நெற்றியுக்காரனிடம் கொடுக்க அவன் குதூகலித்தான், அவன் வீடும் ஆனந்தப்பட்டது.

புடவையைச் செருகிக்கொண்டு நீலகண்டனின் தங்கை பரிமாறினாள். அதுதான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

28

'திருமணமான பத்தே நாளில் இந்த விஷயத்துக்குத் தன்னை எப்படி தங்கை பழக்கப்படுத்திக் கொண்டாள்? எங்கு கற்றுக்கொண்டாள்?' என்று உள்ளுக்குள் நீலகண்டன் வியந்துபோனான். தங்கையின் கணவரிடம் இதைக் குறிப்பிட்டான்.

"நானும் கொஞ்சம் பயந்துண்டிருந்தேன். நல்ல வேளையா உன் தங்கை கெட்டிக்காரி என்னுடைய வாழ்க்கை இப்படித்தான்னவுடனே, உங்களுக்கு எப்படியோ அப்படித்தான் எனக்கும் வாழ்க்கைன்னு மாறிண்டுட்டா. ஒரு வாரம் ஊட்டியில பிரிட்டிஷ் இளம்புலதான் தங்கவெச்சு எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்தேன். பளிச்சுனு பிடிச்சுனுட்டா, ரொம்ப கெட்டிக்காரி. எனக்கு வாழ்க்கையைப் பத்திப் பயமிருந்தது நீலகண்டா. உன் தங்கை வந்தபிறகு, எனக்குப் அந்தப் பயம் கத்தமா போயிடுத்து. அவ சமாளிச்சுப்பா. இன்னும் ஒரு வருஷத்துல பிரமாதமா என்னுடைய பல விஷயங்களை அவளே பார்த்துப்பா."

"எனக்கும்சொல்லிக் கொடுங்கோ..."

நீலகண்டன் கைகூப்பினான்.

"நீ கத்துக்க ஆரம்பிச்சட்டேன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. எப்போ நாங்க பேசறபோது எல்லாம் தெரிஞ்ச மாதிரி உள்ளுக்குள்ள நுழையாம கூர்மையா பார்த்துண்டிருந்தியோ, அப்பவே நீ கெட்டிக்காரன்னு தெரிஞ்சு போச்சு. எப்போ பேசணும், எப்போ பேசப்படாது, என்ன பேசணும், என்ன பேசப்படாதுன்னு ஒரு ஆளுக்கு நிச்சயம் தெரிஞ்சாகணும்.

இருவது வயசுல உனக்கு இந்த வித்தை தெரியறதுன்னா, நாற்பது வயசுல உன்னைஜெயிக்கறதுக்கு ஆளே இருக்காது. இப்படி என்ன பேசணும், என்ன பேசக்கூடாதுனு தெரியறதுக்கு அடிப்படையா என்ன குணம் இருக்கணும் தெரியுமா? உள்ளுக்குள்ள ஒரு நிதானம் இருக்கணும் கூர்மையான பார்வை இருக்கணும்.

நிதானம் இருக்கிற நிறைய பேருக்குத் தூக்கம் இருக்கும். தூங்கவும் கூடாது. தொந்தரவும் செய்யக்கூடாது. விழிப்பா, சுத்தி யார் என்ன பேசறா என்ன முகபாவம், எதுப்பத்தி பேசறா, அதைப் பத்தி வேறு என்ன விஷயம் தனக்குத் தெரியும் அப்படின்னு மடமடனு உத்துக் கவனிச்சுண்டிருக்கணும்.

உத்துப் பார்க்கறது அப்படிங்கறதே நிறைய பேருக்குத் தெரியாது. பாதிப் பாதியாத்தான் பார்ப்பா. எல்லா தெரிஞ்ச மாதிரிதான் பார்ப்பா. முழுக்கப் பார்க்கக் கத்துக்கோ. எந்த நேரமும் எதையும் முழுசா பார்க்கக் கத்துக்கோ. இவன் கெட்டவன், இவன் நல்லவன்னு எந்தப் பிரிவும் இல்லாமல் வெறுமே விஷயத்தைப் பார்க்க கத்துக்கோ. நமக்கு நல்லவாளாலேயும் உபயோகம் கெட்டவாளாலேயும் உபயோகம்.

இப்படிப் பார்க்கறது எப்படின்னு ஒரு கேள்வி வரும். ஒரு கல்யாண வீடு, ஒரு முக்கியமான இடம். இந்த மாதிரி

ஒரு ஓட்டல் லாபி, டின்னர் நடக்கற இடம்... இங்க உட்கார்ந்துண்டு சுத்தி இருக்கிறவா என்ன பண்றா, என்ன மூட்ல இருக்கா அப்படின்னு அவாளுக்குத் தெரியாம ரொம்பக் கூர்மையா கவனிக்கணும். ஒரு கோயில்ல உட்கார்ந்துண்டும் இதைக் கவனிக்கலாம். சுத்தி என்ன நடக்கறதுனு அலர்ட்டா இருக்கறது ஒரு நல்ல குணம்.

இதைக் கத்துனுட்டாலே மத்ததெல்லாம் எளிதா வந்துடும். உனக்கு வரும் நீலகண்டா. யாரும் சொல்லாமயே உனக்கு அந்தப் புத்தி கொஞ்சம் இருக்கு. இன்னும் அதிகப்படுத்திக்கோ. இன்னும் தெளிவுபடுத்திக்கோ. இன்னும் பிரகாசமா வருவே..."

"கப்பல் வாங்கச் சொல்றேளே...பங்கு பத்திரம் போடச் சொல்றேளே... நானும் காசு போடலாமா...?"

"சபாஷ். அப்படி ஒரு எண்ணம் இருக்கா...? அதுக்கு உண்டான காசு இருக்கா...?"

"எவ்ளோ காசு வேண்டியிருக்கும்?"

"ஒரு லட்ச ரூபா போடு..."

"ரிஸ்க் இருக்கா...?"

"நூறு சதவீதம் ரிஸ்க் இருக்கு..."

"எப்படிச் சொல்றேள்...? புரியலையே..."

"கடல் முழுக்க ஜெர்மன்காரன் வெடிகுண்டு மிதக்க விட்டிருக்கான். சரக்குக் கப்பலோ, பாய்மரக் கப்பலோ, படகோ மேல பட்டா டமார்னு வெடிக்கறது. சுக்கு நூறாகாறது. இன்னும் மூணு வருஷத்துக்குக் கப்பல் முன்ன பின்ன போறபோது, இந்த வெடிமருந்துல சிக்காத இருக்கணும். அதுக்குண்டான ஒரு பாதுகாப்புக் கப்பலோட போகணும். இப்படிப் போனாலும் சரக்குக் கப்பல் வெடிபடறதுக்கு வாய்ப்பிருக்கு.

திரங்கு பிடிச்சவனும் இரும்பு பிடிச்சவனும் சும்மா இருக்க மாட்டான்னு சொல்லுவா. துப்பாக்கி பிடிச்சவன் சும்மா இருப்பானா...? வழியில் மடக்கிக் கொள்ளை யடிப்பான். அப்படி ஒரு ரிஸ்க் இருக்கு. ஆனாலும் இதெல் லாம் தாண்டி லாபம் வர்றதுக்கும் வாய்ப்பு இருக்கு. நாலு ட்ரிப் போயிட்டு வந்தா போதும். கப்பல்ல போட்ட காசை எடுத்துடலாம் என்ன, தென்னிந்தியக் கோடியிலிருந்து இழக்கிந்தியக் கோடியிலிருந்து, ஸ்ரீநகர்லேர்ந்து சகல பொருள்களும் வரணும். குங்குமப் பூ- காஷ்மீர் குங்குமப்பூ வந்தா, அது பிரமாதமான வியாபாரம். காஷ்மீர்ல மட்டும் தான் கிடைக்கும்..."

"காஷ்மீர் போகலாமா?"

"கைகொடுறா... நான் நினைச்சுண்டே இருந்தேன். நீ சொல்றே" என்றார் தங்கையின் கணவர்.

"எப்போ போகப்போறேள்?"

"நேரா இங்கேயிருந்தே காஷ்மீர் போயிட வேண்டியது தான்..."

"நீங்க ஹனிமூன்தானே போறேள்...?"

"டேய்... வியாபாரமாகவும் இருக்கட்டும், ஹனிமூனாக வும் இருக்கட்டும். போகலாம், வா..."

"இவன்கிட்ட காஷ்மீர் போறேன்னு சொல்லலாமா...?"

"சொல்லாதே- என்கூட டெல்லிக்குப் போறேன்னு சொல்லு. பங்கு பத்திர மாடல் எல்லாம் இவனுக்குத் தரேன்னு சொல்லு..."

"அப்போ... காஷ்மீர்லேர்ந்து நாம டெல்லிக்குப் போறமா...?"

"ஆமாம்..."

"டிரெய்ன்லயா...?"

"இனிமே டிரெய்ன்ல போய் முடியாதுடா எல்லாம் ப்ளேன்..."

"என்கிட்ட இப்போ காசு இல்லையே"

"கணக்கு வெச்சுக்கறேன். பின்னாடி ரெண்டா பகிர்ந்துப்போம்... அப்போ நாளைக்குக் கிளம்பிடலா மாடா?"

"கிளம்பிடலாம். நான் போய் டிக்கட் ஏற்பாடு பண்ணிட்டு வரேன். அவன்கிட்ட ஏதாவது காசு கடன் கேட்கட்டுமா...?" என்று கேட்டான் நீலகண்டன்.

"வேண்டாம்... கடன் கேட்டா கொஞ்சம் பயம் மரியாதை குறைஞ்சிடும். என்கிட்ட காசு இருக்கு. கவலையே படாதே..."

அவன் டெல்லி போவதாகச் சொல்லிவிட்டு காஷ்மீர் போனான். தங்கையின் கணவருடன் பனி பொழியும் மலைகளைச் சுற்றி வந்தான். படகு ஓட்டினான். குங்குமப்பூ வியாபாரிகளையும் மற்ற வியாபாரிகளையும் சந்தித்தான்.

கம்பளம் நெய்பவர்களைப் பார்த்தான். விலாசமும் டெலிபோன் நம்பரும் குறித்துக் கொண்டான். டெல்லியில் உள்ள தங்கையின் கணவரின் டெலிபோன் நம்பர் கொடுத்தான். பம்பாயில் தன் விலாசமும் டெலிபோன் நம்பரும் கொடுத்தான். அவர்கள் பல பேரை அறிமுகப்படுத்திக் கொண்டு டெல்லிக்கு வந்தார்கள்.

டெல்லி நீலகண்டனுக்குப் பிரமிப்பாக இருந்தது. மிகப்பெரிய பரப்பில் குவியல் குவியலாக நகரம் இருந்தது. மத்திய சர்க்கார் அலுவலகத்து வாசல் முழுவதும் தமிழர் கள் நிரம்பியிருந்தார்கள். கான்டீன் முழுவதும் காபி மணத்தது. வெற்றிலைச் சீவலுக்கு நல்ல கிராக்கி இருந்தது.

நீலகண்டனின் முகம் பார்த்தவுடனே தமிழன் என்று தெரிந்துகொண்டார்கள். தாவி வந்தார்கள். கைகுலுக் கினார்கள்.

"எந்தூரு- மாயவரமா...? சபாஷ்" என்றார்கள். "கச்சேரி ரோட்ல வீடு இருக்கா...?" அடடா கபாலீஸ்வர் கோயில் பார்க்கணும்னு ரொம்ப நாள் ஆசை. எனக்குச் சொந்த ஊர் மதுரை- என்று அறிமுகப்படுத்திக்கொண்டார்கள்.

செகரெட்டரியாக இருக்கிற தங்கையின் கணவரின் ஆங்கிலேய அதிகாரியும், அவன் மனைவியையும் மக்களையும் செகரெட்டரிக்குக் கீழே இருக்கற பல அதிகாரிகளையும் அறிமுகப்படுத்திக் கொண்டான். ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் எல்லோருடைய விலாசமும் பதவியையும் டெலிபோன் நம்பரையும் அவரைப் பற்றிய குறிப்புகளையும் எழுதிக் கொண்டான். சிலருடைய பிறந்த நாள் தேதிகளையும் மறக்காமல் எழுதி வைத்துக்கொண்டான்.

தங்கையின் கணவர் அந்த நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தார். "சபாஷ்- சரியான வேலை. நான் இன்னும் சில பேருடைய பிறந்த நாள் தேதியை வாங்கித் தரேன். அது நன்னா வொர்க் அவுட் ஆகும். நீ பாம்பேக்குக் கிளம்பு-" என்று உத்தரவிட்டார். தங்கையிடம் விடை பெற்றுக்கொண்டு போனான். அவளுடைய கணவரைத் தனியாக நிற்கவைத்து நமஸ்கரித்தான்.

பம்பாய் வந்திறங்கி, அந்த நெதர்லாந்துக்காரனிடம் தனக்குத் தெரிந்த விஷயங்களை வரிசைப்படுத்திச் சொன்னான். உடனடியாகக் கப்பல் வாங்க அவனை இங்கிலாந்துக்கு அனுப்பினான். பங்கு பத்திரங்கள் இங்கிலாந்திலேயே அச்சடிக்கப்பட்டன. குறிப்பிட்ட தொகைக்குமேல் பங்கு பத்திரங்கள் வாங்கியவர்களுக்குக் கப்பல் பயணம் இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவில் உள்ள ஆங்கிலேய அதிகாரிகள் பல பேர் தங்கம் கொண்டு வந்து குவித்தார்கள். கரன்சியை அடுக்கினார்கள். கம்பெனியில் லட்சக்கணக்கில் காசு புரண்டது. இரவுபகலாக அதை நீலகண்டன் சரி செய்தான். அன்றன்று நாள் கணக்கை அன்றன்றே பதிவேட்டில் எழுதினான்.

மனைவியில்லை, குழந்தையில்லை, வேறு பிக்கல் பிடுங்கலில்லை. கண்ணெதிரே மிகப்பெரிய வியாபாரம். ஒரு உயர்ந்த ஓட்டலில் தினசரி சாப்பாடு. காலையில் கடற்கரையில் ஓட்டம் மாலையில் ஜபதபங்கள் என்று தன்னை மாற்றிக்கொண்டான்.

சென்னையிலிருந்தும் தஞ்சையிலிருந்தும் மதுரையிலிருந்தும் கோயம்புத்தூரிலிருந்தும் வந்த இளைஞர்களுக்கு வேலை போட்டுக்கொடுத்தான். ஆந்திர இளைஞர்களைப் பணப் புழக்கத்தில் நியமித்தான். கன்னடத்து இளைஞர்களை ஊர் சுற்ற அனுப்பினான்.

ஒரு பெரிய தென்னிந்தியப் பட்டாளம் அவனுக்குக் கீழ் வேலை செய்ய ஆரம்பித்தது. நல்ல உணவால், நம்பிக்கையால் அவன் உடம்பு அகலமாயிற்று- பலமாயிற்று.

யுத்தம் முடிந்தது. எல்லா விலைகளும் மடமடவென்று சரிந்தன. ஒன்றுக்கு மூன்று கப்பல்கள் வாங்கப்பட்டன. மூன்று கப்பல்களிலும் ஏகப்பட்ட சரக்குகள் ஏற்றப்பட்டுத் திணறத் திணறக் கப்பல்கள் இங்கிலாந்தைப் போய் அடைந்தன. பிராஞ்ஸைத் தொட்டன. முதல் ஒரு வருடம் கப்பல்கள் எந்த விபத்துமின்றி மிக சௌகரியமாகப் பல இடங்களுக்குப் போய் வந்தன. அந்த கம்பெனிக்கு நல்ல பெயர் ஏற்பட்டது.

பங்குகளின் விலைகள் உயர்ந்தன.

நீலகண்டன் அந்த கம்பெனியில் இருக்கிறவரையில் அந்த கம்பெனி நன்றாக இருக்குமென்று பங்குதாரர்கள் பேசிக்கொண்டார்கள்.

லாங்கிளாத்தும், மஸ்லின் துணியும், அராபியப் பருத்தியும், அரசு இயந்திரங்களும், மோட்டார் கார்களும், உதிரி பாகங்களும், வாசனைத் திரவியங்களும், மது வகைகளும், உல்லன் துணிகளும் இந்தியாவுக்கு வந்திறங்கின. வெள்ளை வெளேரென்ற பேப்பர் வந்தது. எழுதுகோல்கள்

வந்தன. மெழுகுவர்த்தி, லாந்தர் விளக்கு, பெட்ரோமாக்ஸ் என்று பம்பாயில் கடை விரிக்கப்பட்டது.

ஒரு கப்பலை ரயில்வே கம்பெனி குத்தகை எடுத்துக் கொண்டது. விதவிதமான கர்டர்கள் இங்கிலாந்திலிருந்து இறக்கப்பட்டன. அந்த கர்டர்கள், இந்தியாவின் பல பாகங் களுக்குப் போயின. பல பாகங்களிலிருந்து பொருட்கள் பம்பாய்க்கு வந்தன.

இரண்டு வருடங்களில் நீலகண்டன் மிகப்பெரிய ஆளாளானான். அவன் உழைப்பைவிட, உண்மைதான் நெதர்லாந்துக்காரனுக்குப் பிடித்திருந்தது. அன்றிரவு ஏர்மெயிலில் தங்கையின் கணவர் டெல்லியில் இருந்து கடிதம் எழுதியிருக்கிறார்.

'இந்தியாவுக்குச் சுதந்திரம் வெகுவிரைவில் கிடைத்து விடும். எனவே, தனியாக ஒரு கப்பல் கம்பெனி ஆரம்பிக்க முடியுமா?' என்று யோசிக்கச் சொல்லியிருந்தார்.

அந்த நெதர்லாந்து முதலாளி, நீலகண்டனைத் தன்னோடு இங்கிலாந்துக்கு அழைத்துப்போனான். நீலகண்டன் இங்கிலாந்துக்குப் போன மூன்றாம் நாள விஸ்வநாத சாஸ்திரிகள் மாயவரம் ரயில்வே ஸ்டேஷனில் கும்பத்தைப் பிடித்தபடி உட்கார்ந்து செத்துப் போனார். அவர் செத்துப்போனது நீலகண்டனுக்குச் சொல்லப் பட்டது. ஆனால், நீலகண்டன் அதை நம்பவில்லை.

"உங்க வீட்ல கொஞ்ச நாள் நாங்க குடியிருந்தோம்..."

சதாசிவம் அந்த வீட்டில் உள்ளவர்களைப் பார்த்துக் கைகூப்பினார்.

"தெரியும். நன்னா தெரியும். விஸ்வநாத சாஸ்திரி களுடைய மச்சினன்தானே நீங்க...? இங்கதானே ஒட்டல் ஆரம்பிச்சேள். கதை கதையா சொல்றாளே பக்கத்துல இருக்கறவா. டிரெயின் வந்துடுத்துன்னு சத்தம் கேட்டவுட னேயே தோள்ல அப்பம், வடையை வெச்சுண்டு ஓடுவீங்

களாமே... தலையெல்லாம் தயிர் வழியுமாம். குலுங்கக் குலுங்கத் தயிர்சாதப் பொட்டலாம் எடுத்துண்டு போய் வித்துட்டு வருவேளாம்...

இந்தப் பக்கம் தாண்டறபோதே வெல்ல வாசனையும் நெய் வாசனையும் அடிக்கும்னு சொல்லுவா. நீங்கள்லாம் இருந்து அந்த வீட்டை ராசியாக்கிட்டேள். இன்னிக்கு நாங்க டியூஷன் சென்டர் வெச்சுண்டிருக்கோம். எங்கப்பா வாத்தியாரா இருந்தார். நானும் டீச்சரா சேர்ந்தேன். பள்ளிக்கூடத்துல இருக்கிறதைவிட, டியூஷன் சென்டர் வெச்சா நன்னா வரும்னு தோணித்து, அப்பா. உங்க கடை பெஞ்சுகளையே வெச்சு டியூசன் சொல்லிக்கிட்டிருந்தார்.

இப்போதான் இந்த இடத்தை இடிச்சு பெரிசாக்கி மேல மாடி கட்டி, மாடிக்குமேல இன்னொரு மாடி கட்டி, ரெண்டு மாடியிலேயும் டியூஷன் சென்டர் வெச்சுண்டிருக் கோம். இதோ பாருங்கோ, இது உங்க கடை பெஞ்சு... சும்மா வரவா போறவா உட்கார்றதுக்காக வெச்சுண்டிருக் கோம். தேக்கு மரத்துல பண்ணினது... என்ன ஸ்ட்ராங்கா இருக்கு பாருங்கோ. இப்ப வர மரங்களெல்லாம் உளுத்தப் போறது-

"அது நான் பண்ணதில்லைமா... ரயில்வே ஸ்டேஷன் கிடங்குலேர்ந்து காசு கொடுத்து வாங்கிண்டு வந்தது. வேண்டாம்னு தூக்கிப்போட்டுட்டா. அதைக் கொண்டு வந்து இங்க போட்டுண்டேன் அம்பது வருஷத்துக்குமேல இருக்கும், இதுக்கு வயது..."

சதாசிவம் ஆறுதலாகத் தடவிக் கொடுத்தார். விஸ்வநாத சாஸ்திரிகள் காரில் இருந்தபடி அந்த வீட்டைக் கனிவோடு பார்த்தார். மெல்லக் கீழிறங்கினார். அவருக்கு உடம்பு நடுங்கியது.

29

"எதுக்குக் கீழ இறங்கணும்...? பிரமப்படாதீங்கோ..." அத்திம்போ விஸ்வநாத சாஸ்திரிகளை நோக்கிப் பேசினார் சதாசிவம்.

"வீடு பாக்கறதுக்கு இல்லைடா..ஸ்டேஷன் பார்க்கணும். கையப்பிடிச்சுண்டு ஸ்டேஷன் கூட்டிண்டு போ.."

அவர்கள் இருப்புப்பாதை தாண்டினார்கள். இரண்டு பக்கமும் பார்த்துப் படியேறி பிளாட்பாரத்தில் நின்றார்கள். பிளாட்பாரத்தில் ஏறிய விஸ்வநாத சாஸ்திரிகளை ஸ்டேஷன் மாஸ்டரும் டிக்கெட் செக்கரும் கைகொடுத்து வரவேற்றார்கள். காலைத் தொட்டு பணிந்தார்கள்.

"கேள்விப்பட்டிருக்கோம் சார் உங்களைப் பத்தி... உங்க சொந்தக்காராதானே இன்னிக்கும் கான்டீன் போடறது. கிச்சடிதான் பெஸ்ட் அயிட்டம். ரவையில் எது பண்ணாலும் இப்போ ஜனங்கள் ருசியா திங்கறா. குறிப்பா இந்த ஸ்டேஷன்ல ரவா தோசைக்கும் கீரை வடைக்கும் நல்ல பேர். குடிக்கறதுக்குன்னு ரசம் பண்றா சார். அடா... அடா.. அடா.. கொதிக்கக் கொதிக்க ரசம் டபரா டம்ளர்ல தரா. ஆத்தி, பாதி சூடுல சுகந்தம். வயித்துல ஒரு ஆனந்தம். நல்ல வித்தை கத்துக் கொடுத்திருக்கேள். சார் உங்க பரம்பரைக்கு..

பாராட்டினார்கள். ஏழு மணிக்கு முதல் வண்டி வந்து ஸ்டேஷன் கலவரமாகிக் கலைந்து அமைதியான நேரம். அடுத்த வண்டிக்குப் பரபரப்பாகிக் கொண்டிருக்கிற நேரம் விஸ்வநாத சாஸ்திரிகள் மெல்ல சதாசிவம் தோளைப் பிடித்துக்கொண்டு ஸ்டேஷன் முழுவதும் நடந்தார். எந்தக் கம்பத்துக்கு அருகே முதன்முதலில் கால் கால் அகட்டி நின்று ஓட்டல் ஆரம்பிக்கலாமா என்று கேட்டாரோ, அந்த இடத்தை வந்து தொட்டுப் பார்த்தார். மெல்ல அந்தக் கம்பத்தை அணைத்துக்கொண்டார்.

கண்ணிலிருந்து நீர் பெருகியது. "நான் தோத்துப் போயிருந்தால், நம்ம வீடு தோத்துப் போயிருக்கும். நீ தோத்துப் போயிருந்தாலும் வீடு குலைஞ்சு போயிருக்கும். வேதத்தைத் தொட்டுக்கூடப் பாக்காம சாப்பாட்டுக்கு வந்தோமே.. அப்போ நான் ரொம்பக் கவலைப்பட்டேன். உங்கப்பா அதைவிடக் கவலைப்பட்டார். அடாடா... எல்லாம் தாண்டி, ரொம்ப சௌக்கியமா காசு பணத்தோட நிலம்நீச்சோட பங்களாவோட ரொம்ப உசந்து வந்துட்டோம்டா. நேத்து வைத்தீஸ்வரன் எடுத்துக் காண்பிச்சான். கட்டுக்கட்டா காசு. நீலகண்டன் அனுப்பறானாம்.. மெட்ராஸ்லா நிலம் வாங்கிப் போடுங்கோ பெருசா தோட்டத்தோட பங்களா கட்டுங்கோன்னு சொல்லியிருக்கானாம்.

நாலாணாக்கு உங்கப்பா எத்தனை உரக்க மந்திரம் சொல்வார். எவ்வளவு தூரம் நடப்பார்? நாம பணக்காராளா ஆயிட்டோங்கறதே எனக்குப் பெரிய நிறைவு. ஒரு தொழில்லேர்ந்து இன்னொரு தொழில் ஆரம்பிச்சு, அதுல தோத்துப் போயிட்டோம்னாக்கூட ரொம்ப ரொம்ப இழிவா பேசுவா. நாம உழைச்சோம்டா.. கடுமையா உழைச்சோம். நம்மள காயத்ரிதேவி காப்பாத்திட்டா. நன்னா உழைக்கறதுக்கு காயத்ரி மந்திரம்தாண்டா உதவி. இது எனக்குத் தெள்ளத் தெளிவா தெரிஞ்சுப்போச்சு. ஒரு ஸ்டூல் கொண்டுவந்து போடுவியா.. இருக்குமா இங்க...?"

"ஒரு மரபெஞ்சு அங்க இருக்கு கொண்டுவந்து போடட்டுமா...?"

"கொண்டுவாயேன்.."

அந்த மரபெஞ்சை எடுத்துக்கொண்டு வந்து கம்பத்துக்குக் கீழே போட்டார்கள். விஸ்வநாத சாஸ்திரிகள் கனத்த சரீரத்தோடு உட்கார்ந்தார்.

வியர்வை பொங்கி வழிந்தது. அதை ஒற்றி எடுத்தார்கள்.

"கொஞ்சம் காயத்ரி ஜபம் பண்ணணும்னு தோண்ற துடா..."

"ஆத்துக்கு வந்து பண்ணுங்கோளேன். இங்க என்னத் துக்கு...? ரொம்ப வேகறதே... மழை வரும்போல இருக்கு..."

"பரவாயில்லைடா... இந்த இடம் பார்க்கப் பார்க்க எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இங்கேயிருந்து திசை திரும்பி நல்ல இடத்துக்கு வந்துட்டோம்னு நிறைவா இருக்கு. இந்த இடத்துல உட்கார்ந்து காயத்ரி ஜபம் பண்ணணும்..."

அவர் உட்கார்ந்து மெல்ல ஜபம் ஆரம்பித்தார். கண்கள் மூடிக்கொண்டார். மெல்ல கால்நீட்டிச் சாய்ந்துகொண் டார். கையிலிருந்து மணி மாலை அசைந்து கொண்டே இருந்தது. எழுந்து ஒரு முறை தொண்டையைச் செருமி க்கொண்டார். நெஞ்சை நீவிக்கொண்டார்.

"என்ன பண்றது...?" சதாசிவம் கேட்டார்.

"ஒண்ணும் பண்ண மாட்டேங்கறது. அதான் பிரச்சனை..."

"என்ன சொல்றேள்...?"

"ஒண்ணுமில்லைடா... சௌக்கியமா இரு..."

திடீரென்று அவர் இப்படிப் பேசியது சதா சிவனுக்குக் கவலையாயிற்று.

"ஏதாவது சிரமமா இருந்தா சொல்லுங்கோ... காரை இந்தப் பக்கம் கொண்டுவரச் சொல்றேன். நேரா ஆத்துக்குப் போயிடலாம்..."

"எங்கடா...? ஆத்துக்குப் போனாலும் போய்த்தானே ஆகணும்..."

"என்ன சொல்றேள்...?"

"சந்தோஷமாக இருக்குடா... ரொம்ப நிறைவா இருக்கு. நான் நன்னா வாழ்ந்துட்டேன்டா. அது பெரியவா புண்ணியம். நம்முடைய மூத்தோர் புண்ணியம். காயத்ரி ஜபத்தினுடைய பலன. டேய்... உன்னால முடிஞ்ச அளவுக்கு நம்ம குழந்தேள அத்தனை பேருக்கும் காயத்ரி ஜபம் பண்ணச் சொல்லித் திரும்பத் திரும்பச் சொல்லு. அதட்டி, உருட்டி, பணிவா, பண்பா, கொஞ்சலா, சாமதான பேத தண்டமா இந்த விஷயத்தைச் சொல்லு. நம்ம குடும்பம் இதைக் கைவிடவேப் படாது. கடைசிவரைக் கும் காயத்ரி ஜபத்தைக் காவலா வெச்சுண்டிருக்கணும்..."

"சரி, சொல்றேன்... நீங்க ஜபம் முடிச்சுட்டேளா... போகலாமா...."

"இல்லை... இப்போதான் முடிக்கப் போறேன். முடிச்சுடட்டுமா...?"

"முடிங்கோளேன்..."

"சரி, முடிக்கறேன்..."

சிரித்தார். மறுபடியும் ஜபம் செய்ய ஆரம்பித்தார்.

தொலைதூரம் பார்த்துக் கொண்டிருந்த சதாசிவனை யாரோ பார்த்து வணங்கினார்கள். சதாசிவனுக்கு ஏனோ மனசு கலங்கியது.

"எப்படியிருக்கார் பெரியவர்...?" என்று விசாரித்தார்கள்.

"காபி சாப்பிடறேளா...?" என்றார்கள்.

வி.எல். ஆரிலிருந்து அவருடைய மூன்றாவது இளைப் பையன் காபி கொண்டுவந்து நீட்டினான். "இச்சடி சாப் பிடறேளா...?" என்று வாழையிலையில் மூடிக்கொண்டு வந்து கேட்டான்.

"பெரியவா சாப்பிடுவாளா...?" என்று கேட்டான்.

பெரியவர் சற்றுக் கோணலாக ஜபம் செய்து கொண்டிருந்தார். காபியைக் குடித்து முடித்த பிறகு, மறுபடியும் விஸ்வநாத சாஸ்திரிகளைப் பார்த்தபோது சதாசிவனுக்குத் திடுக்கென்றது. மெல்லக் கை வைத்து அழைத்தார். விஸ்வநாத சாஸ்திரிகள் கண்விழித்தார்.

"இனிமே எழுப்பாதடா..." என்றார்.

"ஏன்... என்ன பண்றது...?"

"நான் தூங்கணும்டா..."

"வாங்கோ... வீட்டுக்கு வாங்கோ... தூங்கலாம்..."

"இல்லை... இங்க தூங்க ஆரம்பிசுட்டேன். என்னைத் தொந்தரவு பண்ணாதே..."

"என்ன சொல்றேன்...?"

"ஒரு பத்து நிமிஷம் சும்மா இரு..."

"ஏன்...?"

"முடிச்சுடறேன்டா..."

மறுபடியும் அயர்ச்சியோடு கண்மூடிக்கொண்டார்.

சதாசிவனுக்கு, இவர் வேறு ஏதோ முயற்சி செய்து கொண்டிருக்கிறார் என்று பட்டது. மேலும் கைவைத்து எழுப்ப முயற்சி செய்தபோது, மனம் வேண்டாம் என்று தடுத்தது.

இவர் வேறு ஏதோ தீர்மானம் செய்து, ஏதோ ஒரு வழியில் நகர்ந்து கொண்டிருக்கிறார். இவரைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று உள்ளுணர்வு உறுத்தியது.

அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுற்றி ஆட்கள் சேர்ந்தார்கள்.

"மெல்லத் தூக்கிண்டு போயிடலாமா...?" என்று கிசுகிசுத்தார்கள்.

உட்கார்ந்து கொண்டிருந்த விஸ்வநாத சாஸ்திரிகள் கும்பத்தைப் பற்றி சடேரென்று சாய்ந்தார். சுருண்டு விழுந்தார். அந்தக் கும்பத்துக்குக் கீழ் ஒருக்களித்துக் கிடந்தார். வாரிப்போய்த் தூக்கினார்கள்.

அவர் கண் மேலே நிமிர்ந்து பார்த்தது. கும்பத்தின் உச்சியில் நிலைகுத்தியது. ஒரு சிரிப்புக் கமறலோடு தொண்டையிலிருந்து எழுந்தது. தலை தடக்கென்று சரிந்தது. விஸ்வநாத சாஸ்திரிகளின் நெஞ்சில் கைவைக்க, கடைசி 'லப்டப்' சதாசிவனால் உணரப்பட்டது. விஸ்வநாத சாஸ்திரிகள் இறந்து போய்விட்டார் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

வாரிக்கொண்டு மாயவரத்து ஊருக்குள் போனார்கள். மெட்ராஸுக்குச் சொன்னார்கள். டெல்லிக்குச் சொன்னார்கள். பாம்பேக்குச் சொன்னார்கள். எல்லாத் திக்குக்கும் ஆள் அனுப்பினார்கள். எல்லோரும் வந்து மாயவரத்தில் சேர்ந்தார்கள்.

டெல்லியிலிருந்து செல்லப்பாவும் செல்லப்பாவின் மனைவியும் வந்திறங்கினார்கள். ஆனால், நீலகண்டன் மட்டும் இங்கிலாந்தில் குங்குமப்பூ சாம்பிளை விலைபேசிக் கொண்டிருந்தான்.

ஒரு கிராம் பத்து ரூபாய் வீதம் மூன்று டன் குங்குமப்பூ வேண்டும் என்று இங்கிலாந்து கேட்டது. அவன் உடனடியாக அனுப்புவேன் என்று சொன்னான்.

அவனுக்குத் தகவல் கிடைத்தபோது நெதர்லாந்துக்குப் போயிருந்தான். நெதர்லாந்திலிருந்து பிரான்ஸுக்குப் போனான். பிரான்ஸிலிருந்து அமெரிக்கத் துருப்புகளாலும் கைப்பற்றப்பட்ட ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தான்.

யுத்தத்தின் பேரழிவு அவனுக்குத் தெரிந்தது.

அமெரிக்காவுக்குப் போகும் இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், உதறிவிட்டு ஜெர்மனியில் இருந்து, பாம்பேக்கு வந்திறங்கினான். இப்படி ஊர் சுற்றியதில் ஒரு லட்ச ரூபாய் கடன் ஏற்பட்டது. கடனை எப்படி அடைப்பது, என்ன வியாபாரம் செய்வது என்று யோசித்துக் கொண்டு கம்பெனிக்குப் போனபோது விஸ்வநாத சாஸ்திரிகள் இறந்துபோனது அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மாயவரம் போவதா அல்லது பம்பாயிலேயே இருந்துவிடுவதா என்று யோசித்தான்.

மாயவரத்தில் என்ன இருக்கிறது...? எதுவுமில்லை. பம்பாய்தான் இனி சகலமும் மெட்ராஸிலேயேகூட இனி இருக்க முடியாது. பம்பாய்விட்டு நகர முடியாது. இது வரைச் சுற்றி அலைந்து திரிந்த வேலைகளைச் செயலாக்க இதுதான் நல்ல சந்தர்ப்பம்.

அவன் தனியே ஒரு கம்பெனி துவங்கினான். அந்த கம்பெனி ஐரோப்பா முழுவதும் குங்குமப்பூ வியாபாரம் செய்யத் துவங்கியது.

நெதர்லாந்து ஆள் நாலாவது கப்பல் வாங்கினான். யுத்தம் முடிந்துவிட்டதாகத் தெள்ளத்தெளிவாக அறிவிக்கப் பட்டது. யுத்தம் முடிந்தால் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதும் துரிதமாகும் என்று சொல்லப்பட்டது.

அவன் செல்லப்பாவிடம் இன்னும் ஒரு லட்ச ரூபாய் கடன் வாங்கி, பம்பாயில் கடற்கரையோரம் ஒரு அடுக்கு மாடியில் மூன்றாவது தளத்தில் நாலாயிரம் சதுர அடி அலுவலகம் வாங்கினான். மாடர்ன் ஷிப்பிங் கார்ப்ப ரேஷன் என்று அதற்குப் பெயரிட்டான். இம்போர்ட், எக்ஸ்போர்ட் என்று அதற்குக் கீழே எழுதினான்.

தங்கையும் அவள் கணவன் செல்லப்பாவும் அதில் பாகஸ்தர்கள் ஆனார்கள். கம்பெனியை அவன் வந்து பார்க்கவில்லையே என்று யாருமே சொல்லவில்லை. அவன் வளர்ச்சியைச் சகலரும் வியப்போடு பார்த்தார்கள்.

தம்பியையும் கம்பெனிக்கு அழைத்துக் கொண்டான்.

சென்னையிலுள்ள அவன் வீடு செல்வச் செழிப்பில் மிதந்தது. மிக நிச்சயமாக இந்த வருடம் சுதந்திரம் கிடைத்து விடுமென்று செல்லப்பா உறுதியாகச் சொல்ல, தங்கத்தின் விலை மறுபடியும் குறைந்தது. அப்பாவைத் தங்கம் வாங்கச் சொன்னான். வாங்கின தங்கத்தை கம்பெனியில் எடுத்து முதலீடு பண்ணச் சொன்னான்.

நெதர்லாந்து முதலாளி, தன்னுடைய கம்பெனியை விற்கப் போகிறேன் என்று சொன்னபோது, வேறொரு வருக்கு அந்த கம்பெனியை விற்க கொடுத்தான்.

"பெரியவர் செத்துப்போனதுக்கு என்னால் வரமுடியலை. அதுக்கு அப்புறம் நடந்த காரியங்களுக்கும் தலை காட்ட முடியவில்லை. பாம்பே என்னை விழுங்கிடுத்து. நான் மெட்ராஸுக்கு வர்றதே சிரமமா இருக்கு. மெட்ராஸ்லேர்ந்து டிரெயின் ஏறி மாயவரம் வரணும். ஒரு நாள் ஆகும். மெட்ராஸ்லேர்ந்து கார்ல போயிட்டு வரலாம்னா, ரோடும் அவ்வளவு பக்காவா இல்லை. ஆனா, பெரியவருக்கு ஏதாவது பண்ணலாம்னு எனக்குள்ள ஒரு ஆதங்கம் இருக்கு. போகாமப் போயிட்டேன்னு ஒரு வருத்தம் இருக்கு. சாவிடா பெரியவருக்கு நான் ஏதாவது பண்றேன். சம்ஜய்..." என்று மெட்ராஸ் வந்திருந்த போது சொன்னான் நீலகண்டன்.

மயிலாப்பூரிலுள்ள நாலைந்து உறவினர்கள் அவன் நிற்பதையும் நடப்பதையும் பேசுவதையும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெண்கள் அடுக்களையிலிருந்து வேடிக்கை பார்த்தார்கள்.

"ஒரு வேதபாடசாலை ஆரம்பிச்சுடலாம். அவர் நினைப்பா ஒரு ரெண்டு பேருக்கு வேதம் படிக்கறதுக்குக் காசு கொடுக்கலாம்..." -யாரோ சொன்னபோது, அவன் கண்களை மூடி நிதானமாகத் திறந்தான்.

"எனக்கு இதுல அவ்வளவு சம்மதமில்லை. ரெண்டு பேர் வேதம் படிக்கறதுக்கக் காசு கொடுக்க மாட்டேன்னு சொல்லலை. அதைவிட உண்மையா, அதைவிடப் பெருசா ஏதாவது பண்ணணும்..."

"அதைவிட உண்மையா என்னடா பண்ணமுடியும்...?" -வைத்தீஸ்வரன் கேட்டார்.

"மெட்ராஸ்ல இருக்கிற பசங்களை பாம்பேக்கு வரத் தகுதியாக படிக்க வைக்கணும். அப்படியொரு துடிப்பான பள்ளிக்கூடம் வேணும்..."

"அப்படியானா- திருவல்லிக்கேணி ஹிண்டு ஹைஸ்கூல் நொடிஞ்சு போயிருக்குடா. அதுக்கு ஏதாவது காசு கொடு. அதுக்குக் கட்டடம் கட்டறதுக்கு ஏதாவது வழிபண்ணு. மாடிப்படியெல்லாம் உளுத்துப் போயிருக்கு. மழை பெய்ஞ்சா உள்ள ஒழுகறது. அந்தக் கட்டடத்தைச் சரி பண்ணி பெயிண்ட் பண்ணா பசங்களுக்கு வசதியா இருக்கும்..."

"ஓயெஸ். பண்ணித் தரேன்..."

அவன் முதல் தவணையாக லட்சரூபாய் அந்தப் பள்ளிக்கூடத்துக்குக் கொடுத்தான். அதை மேற்பார்வையிட மூன்று பேர் அடங்கிய குழு ஏற்பாடு செய்தான். அந்தப் பள்ளிக்கூட வாத்தியார்களுக்கும் ஊரிலுள்ள பெரிய மனிதர்களுக்கும் கச்சேரி ரோட்டில் விருந்து வைத்தான். வீட்டின் மொட்டைமாடியில் ஒரு சிறிய கூட்டம் நடந்தது.

30

"மெட்ராஸ்ல ஒண்ணுமில்லை சார். மெட்ராஸ் கிராமம் மாதிரி இருக்கு. ஒண்ணு பாம்பேக்கு அனுப்புங்கோ... இல்லை, டெல்லிக்கு அனுப்புங்கோ. கல்கத்தா பரவாயில்லை- ஆனால், தயவுசெய்து மெட்ராஸ்லயே இருந்துடலாம்னு முடிவு பண்ணாதீங்கோ.

நாப்பது ரூபா சம்பளம், அம்பது ரூபா சம்பளமெல்லாம் வேஸ்ட். எடுத்தவுடனேயே நூறு ரூபா சம்பளம் பாம்பேல. நூத்தியிருபது ரூபா டெல்லியில. கல்கத்தாவுல இதைவிடவும் கூடத் தர்றா. ஊர்விட்டு ஊர் போனா ஆசாரம் போயிடும்னு சொல்றதெல்லாம் முட்டாள்தனம்.

உங்களுடைய ஆசாரத்தையெல்லாம்விட பக்தி ரொம்ப முக்கியம். உங்களையெல்லாம்விட பாம்பேயிலேயும், டெல்லியிலேயும், கல்கத்தாலேயும் பக்தி உள்ளவா அதிகமா இருக்கா. கிணத்துத் தவளை மாதிரி மெட்ராஸ்லயே இருக்கறதுல எந்த லாபமும் இல்லை.

ஒரு வருஷத்துக்குப் பத்து பதினைந்து கப்பல் கம்பெனி பாம்பேல உருவாயிண்டிருக்கு. விதவிதமா சாமான் வந்து இறங்கறது. இறங்கற ஒவ்வொரு சாமானுக்கும் ஒவ்வொரு கம்பெனி இருக்கு. இந்தியா முழுக்க மருந்து போகணுமோன்னோ- இந்தியா முழுக்க அத்தரும், பீர் பாட்டிலும், பிராந்தி பாட்டிலும் போகணுமோன்னோ... அதனால, லட்சக்கணக்குல வாங்கி வெச்சு சில்லறையா விக்கறா. எல்லார்கிட்டேயும் காசு இருக்கு.

பசங்களை அனுப்பினா கெட்டுப் போயிடுவாளேன்னு இங்க யாரோ ஒருத்தர் கேட்டார். கெட்டுப் போறவன் மந்தைவெளியிலயும் கெட்டுப் போகலாம், மயிலாப்பூர்லயும் கெட்டுப் போகலாம். பாம்பேலயும் கெட்டுப் போகலாம். ஒழுக்கமா இருக்கறவன் எங்க வேணாலும் ஒழுக்கமா இருக்கலாம்.

பி.ஏ. முடிச்சு இருவது வயது ஆச்சுன்னா, அந்தப் பையனை என்கிட்ட அனுப்பிடுங்கோ. நான் பாம்பேல உடனடியா ஒரே நாள்ல வேலை வாங்கித் தரேன். வர லெட்டரைப் பிரிச்சுப் பார்த்து என்னன்னு புரிஞ்சுண்டு, அதுக்குப் பதில் லெட்டர் எழுதணும். எத்தனை சாமான்

வந்திருக்கு, எவ்வளவு போயிருக்குன்னு ஒரு கணக்கு வெச்சுக்கணும். கொஞ்சம் இங்கிலீஷ், கொஞ்சம் கணக்கு, நிறைய உண்மை..இது போதும்.

மதராஸிகள் பொய் சொல்ல மாட்டா.. திருடமாட்டான்னு அங்க இருக்கிற பனியாக்களுக்கும் வெள்ளைக்காரனுக்கும் பஞ்சாபிகளுக்கும் ஒரு நம்பிக்கை. ராஜஸ்தான், குஜராத்துல இருக்கிறவாள்லாம் பெரும் பணக்காரன். கட்டிக் கட்டியா தங்கம் வெச்சுண்டு, அதைக் காசா மாத்திண்டு தொழில்ல போட்டுண்டிருக்கான். பத்து தலைமுறை, இருபது தலைமுறையா வந்து தங்கக் கட்டிகளை வித்து வியாபாரத்துல போட்டுண்டிருக்கான். வெறும் தங்கமா இருந்த இந்தியா செல்வநிலை காகிதமா, கரன்ஸியா மாறுது.

வடக்கே இருக்கிறவாளுக்கு நெய் முக்கியம். நெய் காசு கொடுத்து வாங்கிக் கட்டுப்படியாகாது. நெய்க்கு அடுத்தபடியா வனஸ்பதினு ஒரு விஷயம் இருக்கு. அந்த வனஸ்பதி கம்பெனியை ஒரு வெள்ளைக்காரனோடு சேர்ந்து ஒரு குஜராத்தி ஆரம்பிக்கப் போறான்.

தாவரத்துலேர்ந்து கொழுப்பு எடுத்து, அதை விக்கப்போறான். மஞ்சள் டின்ல பச்சை எழுத்துப் போட்டு, ஒரு தாவரநெய் வரப்போறது. அந்த வனஸ்பதியை வாங்க வைக்கணும். இந்தியாவில இருக்கிற அத்தனை குடும்பங்களையும் சாப்பிட வைக்கணும். வடக்கே இருக்கிற சப்பாத்தி திங்கற ஜனங்கள் வாங்கிடும். தெற்கே இருக்கிற வாளையும் சாப்பிட வைக்கணும்... அப்படி இந்தியா முழுக்க இருக்கிற ஜனங்கள் சாப்பிட்டா கம்பெனி எங்கேயோ போயிடும்.

அதே கம்பெனி, அதே தாவரக் கொழுப்புலேர்ந்து சோப்பு பண்ணப்போறது. பல் தேய்க்கிற பேஸ்ட் பண்ணப் போறது. அதைக் கொண்டு வந்து விக்கணும். இனி விக்கிறவன்தான் ராஜா. தயாரிக்கிறவன் அல்ல... வாங்கி விக்கறவன்தான் ராஜா.

காஞ்சிபுரம், தறியில பட்டுப்புடவையோட பாடு படறவனைவிட, அந்த பட்டுப்புடவையை வாங்கி விக்கப் போறான் பார்.. அவன் மகா கெட்டிக்காரன் ஆயிடுவான்.

வனஸ்பதியாவது திங்கற பண்டம். எப்படியாவது வித்துடலாம். சோப்பு விக்கமுடியாதே... இந்தியாவில இருக்கிற ஜனங்கள் சோப்பு போட்டுக் குளிச்சுப் பழக்கமில்லையே... என்ன செய்யறது..?' அப்படின்னு மயங்கப் படாது. சோப்பு விக்கறதுக்கு எத்தனை வழி உண்டோ, அத்தனையும் பண்ணலாம்.

சோப்பு அடக்க விலை நாலணா ஆகறது. நியாயமா பார்த்தா, அதை ஒரு ரூபான்னு விக்கணும். அவன் எட்டணாவுக்குத்தான் விக்கறான். அப்போ கொஞ்சம் நஷ்டமில்லையா. அந்த நஷ்டத்தை வனஸ்பதியில சரிபண்றான். ஒரு ரூபா வனஸ்பதியை நாலு ரூபாய்க்கு விக்கறான். டிரெயின்ல போடறதைவிட, லாரியில போடறதைவிட, கப்பல்ல போடறது சுலபமோன்னு நினைக்கிறேன்.

பாம்பேயில இறங்கின சரக்கு கோவாவுக்குப் போறது. கோவாலேர்ந்து கொச்சினுக்குப் போறது. கொச்சின்லேர்ந்து தூத்துக்குடிக்கு வர்றது. தூத்துக்குடியிலேர்ந்து மெட்ராஸ் வரும். மெட்ராஸ்லேர்ந்து விசாகப்பட்டினம் போகும். புவனேஸ்வர்லேர்ந்து கல்கத்தா போகும். பிறகு அந்தமான் போகும். பிறகு சிலோன் போகும். சிலோன்லேர்ந்து சுத்தி, மறுபடியும் பாம்பேக்கு வரும்.

கையில வாகனம் இருக்கு. ஒரு வருஷத்து சரக்கைக் கொண்டுவந்து ஊர்ல இறக்கிவிடுவான். நீங்க வித்துக் காட்டணும். விளம்பரத்துக்காக விதவிதமா செலவு பண்ணலாம்கறான். எங்கெல்லாம் கூட்டம் கூடறதோ, அந்தஇடத்துல எல்லாம் சோப்பு விளம்பரம் வேணும். வெள்ளை வெளேர்னு ஒரு பொம்மனாட்டி போட்டு, என் மாதிரி பளிச்சுனு அழகா இருக்கணும்னா, நீங்க

எங்க சோப்பை உபயோகிக்கணும்னுவா... என்று நீண்ட உரை நிகழ்த்திய நீலகண்டனை, மயிலாப்பூர் கூட்டம் அசையாமல் கேட்டது. தங்கள் குழந்தைகளை பம்பாய்க்கு அனுப்ப, அங்குள்ள பெரியவர்கள் முடிவு செய்தார்கள்.

"நிறைய இங்கிலீஷ் படி. கொஞ்சம் இந்தி படி. இந்தி இஸ் மஸ்ட்..." என்று சொன்னார்கள்.

"நூறு ரூபாய்க்கு ஒரு அணாவட்டி என்றால், லட்ச ரூபாய்க்கு எத்தனை ரூபாய் வட்டி...? அந்த வட்டிக்கு அரையணா வட்டி என்றால், ஒரு வருடத்தில் எத்தனை காசு கொடுக்கவேண்டும்...?" என்று கணக்குச் சொல்லித் கொடுத்தார்கள். இந்தக் கணக்குதான் அலுவலகத்திலும் வரும் என்று சொன்னார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்துவிடும். அப்போது எல் லோர் வாழ்க்கையும் சுபிட்சமாகும். வியாபாரம் செழித் தோங்கி வளரும் என்று எல்லோரும் நம்பினார்கள்.

"ஆனா, பாம்பேல ஒரே கலாட்டாவாமே... கடற்படைக் கும் பிரிட்டிஷ்காராளுக்கும் சண்டையாமே...? பிரிட்டிஷ் சோல்ஜர்ஸ் கடற்படையில வேலை செய்யற இந்தியர் களை வாங்கு வாங்குன்னு வாங்கிட்டாளே...?" என்று நீலகண்டனைக் கேட்டார்கள்.

"இல்லை. இங்க மதராஸ்ல இருக்கறவாளுக்கு அங்க என்ன நடந்ததுன்னு சரியா தெரியலை. ரொம்ப அற்புதமான ஒரு விஷயம். வெளியே யாருக்கும் தெரியாம நடந்திருக்கு. ராணுவம் வேலை நிறுத்தத்துல ஈடுபடக் கூடாது. ராணுவத்துல இருக்கறவா வேலைநிறுத்தம் செய்தா, அது கொலைக்குத்தம். தூக்குல போடறதுக்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கலாம். அப்பேர்ப்பட்ட விஷயத்தைக் கடற்படை ஆரம்பிச்சது. விமானப்படை தொடர்ந்து நடத்தித்து. பொது மக்களுடைய ஆதரவும் இருந்ததுனால பொது வேலைநிறுத்தம் பாம்பேல நடந்தது-" என்றான் நீலகண்டன்

"இதுதான் எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயமாச்சே- இதுல ரகசியமா ஏதோ இருக்குன்னு சொல்றேளே- அது என்ன...?"

நீலகண்டன் பேச்சுக்குக் கச்சேரி ரோட்டில் நன்றாகச் சம்பாதிக்கும் வக்கில் ஒருவர் குறுக்குக் கேள்வி எழுப் பினார்.

"அந்த ரகசியம் உங்களுக்கு மட்டுமில்லை- பிரிட்டிஷ் காரனுக்கே போன மாசம்தான் புரிஞ்சுது. அரசாங்கத்துல நிறைய இந்தியர்களைத் தன்னை அறியாமல் பிரிட்டிஷ் காரன் சேர்த்துட்டான். குறிப்பா, ராணுவத்துலயே இந்தியர்கள் அதிகமாயிட்டா. சமைக்கறது, பெருக்கறது, தந்தி- நபால் அனுப்பறது, துணு துவைக்கறது, தைக்கறது- மோட்டார் காரை ஓட்டறதுலேர்ந்து ஒயர்லெஸ் ஆபரேஷன்லேர்ந்து ஏகப்பட்ட விஷயங்களை இந்தியர்கள் செய்யறா.

சாப்பாடு நன்னாயில்லைன்னு ஸ்டிரைக் ஆரம்பிச்சது. பிரிட்டிஷ் ட்ரூப்புக்கும் இந்திய ராணுவத்துக்கும் கைகலப்பு ஆரம்பிச்சுது. பிரிட்டிஷ்காரனைப் போட்டு அடி அடின்னு அடிச்சுட்டா. ஒண்ணும் பண்ண முடியாமப் போச்சு. இவன் ஸ்டிரைக் ஆரம்பிச்சு மெட்ராஸ், கல்கத்தா, பூனா, கொச்சின் எல்லா இடத்துலேயும் தெரிய, அங்கேயும் ஸ்டிரைக் ஆரம்பிச்சுது. விமானப்படையும் ஸ்டிரைக்ல கலந்துண்டது. மேல ஒரு விமானம் பறக்கணும்னா, கீழே பதினஞ்சு இந்தியர்கள் வேலை செஞ்சாதான் பறக்க முடியும்கற உண்மை பிரிட்டிஷ்காரனுக்குத் தெரிஞ்சுது.

ராணுவத்துல வேலை செய்யறதுனால, தனக்கு விசுவாசமா இருக்கிற இந்தியர்கள் அப்படின்னு அவாளை நினைச்சுண்டிருந்தான். இந்தியர்களுக்கு விசுவாசம், இந்திய சுதந்திரத்துலதான் இருக்கு... பிரிட்டிஷ்காராகிட்ட இல்லைன்னு அவனுக்குப் புரிஞ்சுது. ராணுவத்துல ஒரு பகுதி எதிர்க்கறதுன்னா, நாம் இங்க பலவீனமா இருக்

NEMARA PUBLIC LIBRARY

கோம்னு பிரிட்டிஷ்காரனுக்குத் தெரிஞ்சுபோச்சு. அதனால தான் சொல்றேன்... இந்த வருஷத்துக்குள்ள அல்லது ரொம்ப சீக்கிரமா இந்தியா சுதந்திரமடைந்துவிடும்..."

நீலகண்டன் அந்தக் கச்சேரி ரோடு கூட்டத்தில் உரத்துச் சொல்ல, அங்குள்ள வக்கீல்களும் குமாஸ்தாக்களும் அரசாங்க அதிகாரிகளும் கைதட்டினார்கள்.

"ஏம்ப்பா... ராஜாக்கள் எல்லோரும் சேர்ந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்காதே... நாங்க பிரிட்டிஷ் ராணிக்குத் தான் விசுவாசமா இருக்கோம்னு எழுதிக் கொடுத்திருக்காளாமே?"

"ஆமாம்... ஆனாலும் ராஜாக்கள்மேல பிரிட்டிஷாருக்கு எந்த மரியாதையும் இல்லை. கூட்டமாவர ஜனங்களைக் கண்டுதான் பயப்படறான்..."

"பிரிட்டிஷ்காரன் திடீர்னு வெலவெலத்துப் போனதுக்கு என்ன காரணம்...?"

"அவனுடைய மொரேல் உடைஞ்சு போயிருக்கு..."

"மொரேல்னா என்ன...?"

"மனஉறுதி, வைராக்கியம், திமிர்... இந்த மாதிரி ஏதாவது சொல்லிக்கலாம். அவனுடைய அதிகார ஆவேசம் ரொம்பக் குறைஞ்சிருக்கு..."

"என்ன காரணம்...?"

"இரண்டாம் உலகப்போர்ல நாயடி பேயடி பட்டிருக்கான். ஐரோப்பா தன்னைச் சரி பண்ணிக்க இன்னும் இருபது வருஷமாகும். விஷவாயு சாவு, அணுகுண்டு சாவு, புல்லட் சாவு, பெட்ரோல் குண்டு சாவுன்னு நிறையப் பார்த்துட்டான். நிறைய வாலிபர்கள் செத்துப் போயிட்டா. ஆட்சி செய்யறதுக்கு அடுத்த தலைமுறை இருக்கணுமோன்னோ... இங்கிலாந்துல அது காலி. எல்லாம் கிழடுகட்டைகளா இருக்கு. போர்முனைக்குப் போகாம

ஃபேன் போட்டுண்டு கீழே உட்கார்ந்துண்டு யோசனை பண்றபோது, எதுக்கு இந்தச் சனியனைக் கட்டிண்டு... விட்ருவோமேன்னு தோண்றது..."

"எதைச் சனியன்னு சொல்றீர்...?"

"இந்தியாவை..."

"சுதந்திரம் ரொம்பச் சுலபமா கிடைச்சிடும் போலிருக்கேய்யா... ஒண்ணும் போராட்டமே இல்லாம அவனா கொடுத்துட்டுப் போகற மாதிரி இல்லே இருக்கு..."

"அப்படித்தான் இருக்கும்..."

"இப்போ ஐதராபாத்ல நவாப்தானே ஆட்சி?"

"என்ன நவாப்... மருந்து போட்டு இடிக்கிற துப்பாக்கியை வெச்சுண்டு டொப்பு டொப்புனு சுட்டுண்டிருப்பான். பிரிட்டிஷ் ராணுவத்துல ரொம்பத் திறமையான இந்தியர்கள் இருக்கா. ஒடிண்டே மெஷின்கன்னால சுடறதுக்கு அவாளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கு. பீரங்கித் தாக்குதல் நடந்த அவாளுக்குத் தெரியும்.

நவாப் வாலாட்டினா, பிரிட்டிஷ் ராணுவம் நுழையும், பிரிட்டிஷ் ராணுவம்னு பேரே தவிர, உள்ளுக்குள்ள நடக்கப் போறவா அத்தனை பேரும் இந்தியர்கள். சர்தார்ஜி, பஞ்சாபி, மராட்டி, தமிழன், தெலுங்கன், கேரளத்தான் அப்படின்னுதான் வரப்போறா உள்ள..."

"கேட்கறதுக்குக் காது குளுகுளுன்னு இருக்கய்யா, வல்லமை பொருந்திய பிரிட்டிஷ்காரன் போயிட்டான்னா, நம்மால ஆட்சி செய்ய முடியுமா...? இன்னும் காங்கிரஸ் கட்சின்னா கூச்சலா இருக்கு. நமக்குள்ளயே ஏகப்பட்ட ஜாதிச் சண்டைகள் இருக்கு. நாம ஒத்துமையா இல்லையேய்யா. பிரிட்டிஷ்காரன்கிட்ட இருக்கிற ஒத்துமையில நூத்துல ஒண்ணுகூட நம்மகிட்ட கிடையாதே..."

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி, இதில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி..."

நீலகண்டன் உரத்த குரலில் பேசினான்.

"எல்லாம் சரிதான். இந்த ஜாதி சண்டாளம்தான் நம்மளைக் குழிதோண்டிப் புதைக்கப் போகறது. முதல்ல முஸ்லிம்களோடு சமரசம் பண்ணிக்க முடியுமா...?"

"எனக்கு அது சந்தேகமா இருக்கு..."

"பாம்பேயில முஸ்லிம்கள் அதிகமா...?"

"இல்லை மாராட்டியர்கள் அதிகம். மராட்டியர்கள் முஸ்லிம்களைவிட ரொம்பக் கோபக்காரர்கள். பிள்ளையார் ஊர்வலம் ஒண்ணு நடத்த ஆரம்பிச்சுட்டா. வருஷா வருஷம் லட்சோப லட்சம் ஜனங்கள் கலந்துக்கறா. அதைப் பார்த்து அங்க இருக்கற முஸ்லிம்களெல்லாம் வாயைப் பொத்தினுட்டா..."

"தென்னிந்தியாவில் எந்த மாற்றமும் நடக்காதாய்யா...?"

"சினிமா இருக்கே... பாட்டுக் கச்சேரி இருக்கு. சதிர்க் கச்சேரி இருக்கு. நம்ம பாட்டுக்குக் கேட்டுண்டிருப்போம். சுதந்திரம் வந்தாகூட ரெண்டு கச்சேரி கேட்போம். அவ்வளவுதானே...?"

நீலகண்டன் இளக்காரமாகப் பேசினான். ஆனால், யாரும் அதைக் குத்தலாக எடுத்துக்கொள்ளவில்லை. அது உண்மைதானே என்பது போல அவனைப் பார்த்தார்கள்.

போளியும், மசால்வடையும் பொங்கலும் சாப்பிட்டார்கள். ஏ க்ளாஸ் பசும்பால் டிகிரி காபி குடித்தார்கள். உணவைப் பாராட்டிவிட்டுக் கலைந்துபோனார்கள்.

"பாம்பேல்லாம் போனா பாதுகாப்பா இருக்கலாமா சார்...?"

நடுத்தெரு ஐயர் ஒருவர் அருகில் வந்து கிசுகிசுப்பாகக் கேட்டார்.

"மயிலாப்பூர் மாதிரி பரமநிம்மதியா இருக்கறதுங்கறது பாம்பேயில கொஞ்சம் கஷ்டம்தான். ஆனா, இங்க பத்து ரூபா சம்பளதுத்துக் கிளார்க்கா இருக்கறதைவிட, பம்பாயில நிறையச் சம்பாதிக்கலாம். இங்க பத்து ரூபா சம்பளம்னா, அங்கு நூறு ரூபா சம்பளம்..."

"ஆனா, நாற்பது ரூபா செலவு இருக்குமே...? வீட்டு வாடகை ஜாஸ்தியாச்சே...?"

"அப்படியும் அறுவது மிஞ்சறதே... இருவது வயசுக்கு பம்பாய்க்கு வந்துடணும், கல்யாணம் பண்ணிண்டு பொண்டாட்டியோட வர்றது, இன்னும் உத்தமமான காரியம். ஆம்படையாள், பொண்டாட்டியா பம்பாய்க்கு வந்து மாதுங்கால ஒரு சின்ன ஃப்ளாட்ல குடித்தனம் வெச்சு, எலெக்ட்ரிக் டிரெயின்ல ஆபீஸுக்குப் போகவர வெச்சுண்டு காசு சேர்த்தா போதும்.

பொண்டாட்டி கூட எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணியிருந்தா ஆபீஸராகவே ஆயிடலாம். அப்படி ஆபீஸ் போகறதுக்கு இஷ்டமில்லையா, காஞ்சிபுரத்துலேர்ந்து பட்டுப் புடவை வரவழைச்சு சில்லறை விலைக்கு வித்தா போதும். நூறு ரூபா பட்டுப்புடவையை நூத்துநாற்பது ரூபாய்க்குச் சுலபமா விற்கலாம்..."

"நம்மாத்துப் பொம்மனாட்டியால வியாபாரமெல்லாம் பண்ண முடியுமா...?"

"வரணும், வந்து பண்ணணும். வெறுமனே அடைமாவு, தோசைமாவு, இட்லி மாவுன்னு திங்கற பண்டமா செய்து தின்னுண்டிருந்தா போதாது. வாழ்க்கை வேறவிதமா மாறிண்டிருக்கு. முதல்ல இந்த மடிசார் புடவையை விட்டுட்டு, மாம்பழக் கட்டி கட்டறதுக்குத் தெரிஞ்சுக்கணும்..."

"விட்டா, நீங்க நம்மாத்துப் பொம்மனாட்டிகளுக்கு கவுனே போட்டுடுவேள் போலிருக்கே."

"அப்படியும் ஒரு காலம் வரத்தான் போகறது..."

நீலகண்டன் உறுதியாகச் சொன்னான். சுற்றியுள்ளவர்கள், வாய் பிளந்தார்கள்!

31

"சரி நீலகண்டா, நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போற- கவுனா, மாம்பழக்கூட்டா, மடிசாரா...?"

சதாசிவம் அடிக்குரலில் விசாரிக்க, நீலகண்டன் வாய் விட்டுச் சிரித்தான்.

"நீங்க யாரைச் சொல்றேளோ, அவளைக் கல்யாணம் பண்ணிக்கறேன்..."

"நிஜமாவா." -சதாசிவம் வியந்தார்.

"ஆமாம்..."

"இல்லைடா- அந்தத் தப்பு பண்ணாதே. இங்கேயிருந்து எவளாவது ஒருத்தியைக் கூட்டிண்டு போய், அங்கே மாத்தறேன்னு சொல்லி, அவ மனசைப் பதறடிக்காதே.. அங்கே இருக்கிற பொண்ணாவே பார்த்துக்கோ..."

"அங்கே நிறைய பாலக்காட்டுக்காராதான் இருக்கா... தஞ்சாவூர்க்காரர் கம்மி. நம்ம வீட்டுக்குச் சரியா வருமா...?"

"உனக்கு சரியா வருமான்னு பார்..."

"தஞ்சாவூர்க்காராளுக்கும் பாலக்காட்டுக்காராளுக்கும் சரியா வராது. சம்பிரதாயங்கள் எல்லாம் வித்தியாசம்னு சொல்லுவாளே, அதுக்காகக் கேட்டேன்..."

"நீ என்ன சம்பிரதாயத்தோட வாழறே, விட்டுப் போகறதுக்கும் மத்ததுக்கும்- நீ போகற வேகம் இங்கே இருக்கிற பொம்மனாட்டிகளுக்குத் தாங்காது..."

"என் தங்கை தாங்கினாளே- அவபுருஷன் அவளை ஒரு வாரத்துல மாத்திக் காண்பிச்சாரே"

"அது பெரிய அதிர்ஷ்டம்டா... அவ எப்படி மாறினாள்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு. எல்லாப் பொம்மனாட்டிகளும் அந்தமாதிரி மாறமாட்டா. உன் தங்கையை நினைச்சுண்டு இங்கேயிருந்து பொண்ணு எடுக்காத- நம்ம வீடு கொஞ்சம் வித்தியாசமான வீடு. எல்லாத்துக்கும் அனுசரணையா போன வீடு. உங்கப்பாவும் உங்கம்மாவும் கெட்டிக்காரா. அதனால, உன் தங்கைக்கு மாறுகிற ஒரு புத்தியும் மனோபாவனையும் இருந்தது.

இன்னும் பசுஞ்சாணியை வெச்சுண்டு எச்சில் இட்டுண்டிருக்கா. இது வேண்டாம். நீ உனக்கு அனுசரணையா இருக்கிற பொண்ணைப் பண்ணிக்கோ..."

'அப்பா என்ன சொல்வார்னு தெரியலையே..?"

"உங்கப்பன்தான் என்கிட்ட சொன்னான். உன்கிட்ட சொல்லச் சொல்லிச் சொன்னான்..."

"நானா பொண் தேடினா மரியாதையா இருக்காதே."

"செல்லப்பாவை விட்டுப் பேசச் சொல்லு. டக்குனு கிடைச்சிடும்..."

"சதாசிவம் தாத்தாவா அப்படிச் சொன்னார்... ஆச்சரியமா இருக்கே. செல்லப்பா வியந்தான்.

"உங்க வீட்டினுடைய பலமே, மூத்த தலைமுறை, அடுத்த தலைமுறைக்கு ரொம்பச் சுலபமா வழிவிடறதுதான். போன பாதையிலேயே மத்தவாளும் வரணும்னு உங்க குடும்பத்துல யாரும் நினைக்கலை. உன்னுடைய வழி

என்ன, நீயே தேர்ந்தெடுன்னு சொல்றது எல்லார் வீட்லேயும் கிடைக்காது.

நான் சினிமாவே பார்க்கறதில்லை. என் பிள்ளையும் சினிமா பார்க்கப்படாது அப்படின்னு கோயம்புத்தூர் பிராமணர் ஒருத்தர் என்கிட்ட சொன்னார். அட முட்டா ளேன்னு நினைச்சுண்டேன். நீ தடுக்கத் தடுக்க, உங்க பிள்ளை சினிமா அதிகம் பார்ப்பான், ஏன்... சினிமாவி லேயே வேலை செய்வான்னு நினைச்சுண்டேன். வீட்ல விசாரித்துல, அந்தப் பையன் சினிமாவில் சேரணும்னு துடிக்கிறானாம்.

உங்க வீடு, உன் கல்யாணத்தை நீயே பார்த்துக்கோன்னு சொல்றதே... அது எவ்வளவு பெரிய கொடுப்பினை.

பாலக்காட்டுக்காராளுடைய தமிழ்தான் ஒரு மாதிரியா இருக்கும். மத்தபடி, அவாளுடைய ஆசாரங்களும் கெட்டிகாரத்தனமும் காசு பணத்துல குறியா இருக்கறதும் ரொம்ப சந்தோஷமா இருக்கும். பெண்கள் அழகா இருப்பா. எப்பவும் பளிச்சுனு உடுத்திண்டிருப்பா.

தஞ்சாவூர்க்காராளுக்கு எப்படி பாலக்காட்டுக்கார னைப் பத்தி ஒரு எதிர்ப்பு இருக்குமோ, அதேபோல பாலக் காட்டுக்காராளுக்கும் தஞ்சாவூர்க்காராள்னா ஒரு சின்ன இளப்பம் இருக்கும். சோம்பேறிகள், சுறுசுறுப்பு போறாது... அப்படின்னு ஒரு குறை இருக்கும். அதே சமயம், தஞ்சாவூர்க்காராளக் கேட்டா, காசுக்காக பாலாக்காட்டுக் காரன் பண்ற தடாலடியை என்னால பண்ண முடியாது. எனக்கு நியாயம், தர்மம் முக்கியம்னுடுவான்.

எப்பாடுபட்டாவது காசு சம்பாதி, சிக்கனமா சேர்த்து வை. பூஜை, புனஸ்காரங்களுக்குச் செலவு பண்ணு. வண்ணமா சாப்பிடு. நன்னா உடுத்து. இந்த வருஷம் ஒரு லட்ச ரூபா சம்பாதிச்சியா... அடுத்த வருஷம் இது ரெண்டு லட்சமா மாறணும். அதுக்கு அடுத்த வருஷம் இன்னும் கூடுதலா போகணும்.

உனக்கு நான் டெல்லியில பொண்ணு பார்க்கறேன். சென்ட்ரல் கவர்ன்மெண்ட்ல நிறையப் பேர் வேலை செய்யறா. அதுவும் மிலிட்டரியில சிவில் சைடா நிறையப் பேர் வேலை செய்யறா..."

செல்லப்பா வாக்குறுதி அளித்தார். ஒரே மாதத்தில் நீலகண்டனை டெல்லிக்கு வரவழைத்து, டெல்லியில் பலபேரைப் பார்த்துத் தேர்வு செய்து, ஜாதகம் வாங்கி பொருத்தம் பார்த்து ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து வந்திருந்தார்கள்.

லெப்டினல் கர்னல் பத்மநாபனுடைய பெண் பார்வதியை அவனுக்குப் பிடித்துப் போயிற்று. அதிரடிக்கிற அழகு பார்வதியிடம் இருந்தது. பெண் பார்க்கப் போனபோது, கூடதாரில் தோட்டத்தில் மேஜை, நாற்காலி போட்டு டீ பார்ட்டிக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந் தாள்.

நீலகண்டனைப் பார்த்தும் கைகூப்பி நமஸ்கரித்தாள். இங்கு உட்காருங்கள் என்று ஒரு நாற்காலி போட்டாள். சரளமாக உத்திரப்பிரதேசத்து இந்தி பேசினாள்.

"உங்களுக்கு என் பெண்ணைப் பிடித்திருந்தால் திரு மணத்தை எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ள லாம். கன்யாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை நீங்கள் எங்கு திருமணம் நடத்த வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அங்கு உங்கள் உறவினர்களோடு மிகக்கவனமாக, கம்பீர மாகத் திருமணம் நடத்தித் தரப்படும்..." என்று லெப்டினல் கர்னல் வாக்களித்தார்.

அந்த வீட்டில் எல்லோரிடமும் ஒரு சின்ன அலட்டல் இருந்தது. நான் செய்வேன், என்னால் பண்ணமுடியும். எனக்குத் தெரியும் என்கிற கர்வம் இருந்தது.

அந்தப் பெண் பார்வதி வீணை வாசித்தாள்.

"அற்புதமாக வாசிக்கிறீர்களே...?" என்று பாராட்டிய போது, "அவள் கடுமையான உழைப்பாளி..." என்று மகளைப் பற்றி கர்னல் சொன்னார்.

கடவுளுடைய அருள், குருவினுடைய கிருபை என்றெல் லாம் அந்த வீட்டில் ஒலிக்கவேயில்லை.

நீலகண்டனுக்கு அந்த அழகு பற்றித்தான் சற்றுத் தயக்கம் இருந்தது. தன் பக்கத்தில் நின்றால், அவ்வளவு லட்சணமாக இராதோ என்ற பயம் இருந்தது. சரோஜினி அதைச் சுத்தமாகத் துடைத்தெறிந்தாள்.

"ஆம்பளைக்குக் காசுதாண்டா அழகு. அப்படி அழகான பொண்டாட்டி வந்துட்டா, இன்னும் நன்னா சாம்பாதிக்கலாம். பயப்படாதே... கல்யாணம் பண்ணிக்கோ..."

"நம்ம வீட்டுக்குச் சரியா வருமா சரோஜினி...?" மறுபடி யும் நீலகண்டன் கேட்டான்.

"இவளைக் கூட்டிண்டு மாயவரத்துக்கா போகப் போறே...? இல்லை, மெட்ராஸுக்குக் கூட்டிண்டு போகப் போறயா...? அவ பாம்பேயில குடித்தனம் பண்ணப் போறா. டெல்லியில பிள்ளை பெத்துக்கப்போறா. எப்பவோ ஒரு தடவை குழந்தைக்கு மொட்டை அடிக்கறதுக்கு மெட்ராஸுக்கு வரப்போறா. அவ்வளவுதானே... இவளை வேண்டாம்னு சொல்லிடாதே... இவளைக் கல்யாணம் பண்ணிண்டா, உன் வாழ்க்கையே மாறிப்போயிடும்..."

"உன் வாழ்க்கை மாறிப்போயிடுத்தா சரோஜினி...?" அவன் ஆவலோடு கேட்டான்.

"ஆமாம்... சேர்ந்தாப்போல என்னால பத்து நாள் மதராஸ்ல இனிமேல் இருக்க முடியாது. பிள்ளை பொறப் புக்குக்கூட அம்மாவை இங்கே வரவழைச்சுடப்போறேன்..." -தங்கை சரோஜினி வேகமாகப் பேசினாள்.

நீலகண்டன் விழி உயர்த்தினான்.

"ஆமாம்! நான் குளிக்காம இருக்கேன்... ரெண்டு மாசம்..."

"அதான், டெல்லியில பொண் பார்க்கப் போகும்போது வாந்தியெடுத்தியா...?"

"ஆமாம்... அந்தப் பொண்ணு பார்வதி கண்டுபிடிச் சுட்டா. மெல்லக் கொல்லைப் பக்கம் கூட்டிண்டு போய், ஒரு மிலிட்டரி ஜீப்பைத் திறந்து, இதை முகர்ந்து பாருங்கோ, முகர்ந்து பாருங்கோன்னு இன்ஜின் காண்பிச்சா. இன்ஜின் லேர்ந்து ஒரு டீசல் வாடை வந்தது. அதை முகர்ந்து பார்த்தபோது, பளிச்சுனு வாந்தி அடங்கிடுத்து. ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணுடா அவ. கடைசி வரைக்கும் யார்க்கிட்டேயும் சொல்லவேயில்லை.

அம்மாகிட்ட சொன்னியா, நான் வாந்தியெடுத் ததை...ன்னு கேட்டேன். இல்லை... நான் மறைச்சுட்டேன். நீங்களே சொன்னாதான் இதெல்லாம் நன்னாயிருக்கும். நான் சொல்லக்கூடாது. அது உங்களுக்கு ஏதாவது சங் கடத்தை ஏற்படுத்திடும் அப்படின்னா. எனக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு அவளை. பயப்படாம தயங்காம அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ..."

நீலகண்டன் கல்யாணம் பம்பாயில் நடந்தது. காலையில் முகூர்த்தம் ஆரம்பித்து, ஒன்பது மணிக்குத் தாலி கட்டி, பன்னிரண்டு மணிக்குச் சோறு போட்டு, மூன்று மணிக்குக் கட்டுச்சாதக் கூடை கட்டிக் கொடுத்து விட்டார்கள். ஐந்து மணிக்குக் கல்யாண மஹாலைவிட்டு வெளியேறிவிட்டார்கள். அன்றிரவே மதராஸ் கூட்டம் ரயிலில் திரும்பிவிட, மறுநாள் விமானம் ஏறித் தேனில வுக்கு நீலகண்டனும் பார்வதியும் காஷ்மீர் போனார்கள். ஒரு படகு வீட்டில் தங்கினார்கள்.

"இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தால், இந்தப் பூலோக சொர்க்கம் காஷ்மீர் அழிந்து போகும். வெள்ளைக்காரர் களுக்காகவே கடவுள் உருவாக்கிய ஊர் இது. ராஜாக்கள்

அனுபவிக்கவேண்டிய இடம் இது. இதை இந்தியர்கள் குப்பைமேடாகப் பண்ணி விடுவார்கள்..." என்று படகோட்டி சொன்னான்.

நீ யார்? நீ இந்தியன் இல்லையா... என்று கேட்டதற்கு, அவன் தன்னை முஸ்லிம் என்று சொன்னான். நீலகண்டனுக்கு அவன் பேச்சில் இருந்த பிரிவினை கலவரத்தை ஊட்டியது. முஸ்லிம் தலைவருடைய பேச்சுக்கள் இந்தப் படகோட்டிகளைக்கூடப் பாதித்திருந்தன.

அவர்கள் தங்களுக்கென்று தனி தேசம் என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். பிரிவினை, அவர்கள் நெஞ்சிலே வித்திட்டுவிட்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்குமோ, கிடைக்காதோ... தேசம் இரண்டாகிப் போகும் என்பது மட்டும் தெரிந்தது.

அவர்கள் தேனிலவு முடித்து மதராஸுக்கு வந்தபோது நேரடி நடவடிக்கை என்று முஸ்லிம் தலைவர்கள் உரக்கக் கத்தினார்கள்.

வங்காளத்தில் பெரும்பான்மையாக இருந்த ஒரு கட்சி வெகுநாள் திட்டமிட்டுப் பல குழுக்களாகப் பிரிந்து ஆயுதங்களையெல்லாம் நிதானமாகச் சேகரித்து மிகப் பெரிய கலவரத்தில் இறங்கியது. மதராஸ்தான் பத்திரமான இடமோ என்று நீலகண்டனுக்குத் தோன்றியது.

ஆனால், பார்வதி பேப்பர் படித்துவிட்டு வேறுவிதமாகச் சொன்னாள். பம்பாய்விட்டுப் போகாதே என்றாள்.

எல்லாப் பத்திரிகைகளும் வங்காளம் பற்றியெரிந்ததைக் கதை கதையாகப் போட்டிருந்தன.

முகமது அலி ஜின்னா, ஷகில் சக்ரவர்த்தி என்பவனை நேரடியான நடவடிக்கைக்குத் தலைவனாக நியமித்திருந்தார். வங்கத்தின் ஆட்சியில் இருந்த அந்த மனிதன், போலீஸ் அதிகாரிகள் எச்சரித்தும் சிறையிலுள்ள குண்டர்களை வெளியே அனுப்பினான். எல்லா போலீஸ் ஸ்டேஷனிலும் தன்னுடைய ஆட்களை அதிகாரியாக நியமித்தான்.

தாக்குதல் பற்றிப் புகார் வந்தால், யார் புகார் கொடுத்தார்களோ அவர்களைத் தாக்கச் சொன்னான். அவனுடைய குண்டர் படை, செஞ்சிலுவைக் கொடியை ஏந்திவந்து தெருத்தெருவாகக் கொலை, கொள்ளை முயற்சிகளில் தாராளமாக ஈடுபட்டது. தடுப்பார் இல்லாமல் ஆடியது.

இரண்டாம் உலகப்போரில் கடுமையாகத் தாக்கப்பட்ட இங்கிலாந்து பிரிட்டிஷ் அரசுக்கு வாலிபர் இல்லாத அந்த வயோதிகக் கும்பலுக்கு எதிராக இந்தியாவைத் தூக்கி நிறுத்துவது கடுமையான காரியமாக இருந்தது.

ஒரு எரிமலையின்மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இவர்களுக்குச் சுதந்திரம் கொடுத்து நகர்ந்துவிடுவதே நல்லது என்று தோன்றியது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு. ஜூன் மாதத்துக்குப் பிறகு சுதந்திரம் கொடுக்கலாம் என்று பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால், இந்த மதக்கலவரங்கள் சுதந்திரம் கொடுப்பதை இன்னும் விரைவாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துக்குத் தள்ளின.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு, ஜூன் மாதம் தேதி லார்ட் மௌண்ட்பேட்டன், பத்திரிகையாளர்க்கிடையே நடந்த கூட்டத்தில் சுதந்திரம் பற்றிக் கேட்ட கேள்விகளுக்குத் தீவிரமாக யோசித்தார். மறுபடியும் அவரிடம் பதில்பெறும் வண்ணமாகக் கேள்வி கேட்கப்படவே, ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு ஜூன் மாதம் அல்ல... இந்த ஆண்டே வெகுநிச்சயமாக இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்படும் என்றார்.

பத்திரிகையாளர்கள் விடவில்லை... குறிப்பாகத் தேதியைச் சொல்லுங்கள் என்று திரும்பத் திரும்ப மௌண்ட்பேட்டனைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

லார்ட் மௌண்ட் பேட்டனுக்கு எப்போது சுதந்திரம் கொடுக்கப்போகிறோம் என்று எந்தத் திட்டவட்டமான எண்ணமும் இல்லை. சட்டென்று ஆழ்ந்து யோசித்து, இந்த வருடம் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆகஸ்ட் பதினைந்து ஒரு முக்கியமான நாளாக லார்ட் மௌண்ட் பேட்டனுக்குப் பட்டது.

ஏனெனில், ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி ஜப்பான் நேச நாடுகளிடையே சரணடைந்தது. அந்தச் சரணடைந்த தேதியே நல்ல தேதி என்று லார்ட் மௌண்ட் பேட்டன் நினைத்து இதைப் பத்திரிகையாளர்களிடம் சொல்ல... எல்லாப் பத்திரிகைகளும் அதை வெளியிட்டன.

ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி வேண்டாம். பலவிதக் கிரகச் சேர்க்கையினால் மோசமான நாள் அது என்று ஜோதிடர்கள் சொல்லியபோதும் தேதி மாற்றப்பட வில்லை.

பதினாலாம் தேதி நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்குச் சில நிமிடங்கள் கழித்துச் சுதந்திரம் பிரகடனம் பண்ணட்டும் என்று ஜோதிடர்கள் சமாதானம் கூறினார்கள்.

பதினாலாம் தேதி நள்ளிரவு- ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி காலையில் இந்தியாவில் சுதந்திரம் உதயமாகும் என்று முடிவு செய்யப்பட்டது.

நீலகண்டன் மனைவி பார்வதி கர்ப்பமானாள். அவளுடைய தந்தை, பஞ்சாபின் கலவரப் பகுதிக்கு அனுப்பப்பட்டார். தாயும் உடன் போயிருந்தாள். சகோதரர்களின் வீட்டுக்குப் போயிருக்க பார்வதிக்குப் பிரியமில்லை. மதராஸைவிட பம்பாய் கூடுதலான

பரபரப்போடும் தினமும் ஒரு கொலை, கொள்ளைச் சமபவத்தோடும் கண் விழித்தது.

"என் அம்மா உனக்குப் பிள்ளைப்பேறு செய்வாள். போய்விடுகிறாயா என்று நீலகண்டன் கேட்டபோது, எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. உங்கள் அம்மாவுக்கு என்னால் தலைவலி வராமல் இருந்தால் சரி" என்று பார்வதி சொன்னாள். சென்னைக்குக் கிளம்பினாள்.

32

இந்தியாவிலுள்ள ஐந்நூற்று அறுபத்திரண்டு சமஸ்தானங்களை ஒன்றாக இணைக்கிற முயற்சிகள் நடந்தன. சர்தார் வல்லபாய் படேல் ஒவ்வொரு மன்னரையும் சந்தித்து, இந்திய யூனியனோடு சேர்ந்துவிடும்படி சொன்னார்.

திருவிதாங்கூர் மகாராஜா தான் சுதந்திரமாக இயங்கப் போவதாக அறிவித்திருந்தார். அதை எதிர்த்து அங்கு பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அந்த சமஸ்தானத்தின் பிரதமர் ஆர்ப்பாட்டக்காரர்களால் கத்தியால் குத்தப்பட்டார். அதைக்கண்டு மிரண்டுபோன திருவிதாங்கூர் மகாராஜா இந்திய- யூனியனில் சேர்ந்துகொள்ளச் சம்மதித்தார்.

ஆகஸ்ட் ஆரம்பத்தில் வங்காளத்தில் அவசரச் சட்டமும், பஞ்சாபில் ஊரடங்குச் சட்டமும் விதிக்கப்பட்டிருந்தன.

பம்பாய் பங்கு மார்க்கெட் ஸ்தம்பித்துக்கிடந்தது. வியாபாரம் எதுவும் சரியாக நடைபெறவில்லை. கராச்சியிலுள்ள இந்துக்களின் கடைகள் சூறையாடப்பட்டதுபோல் பம்பாயிலும், பூனேயிலும், குஜராத்திலும் உள்ள முஸ்லிம்களின் சொத்து இந்துக்களால் சூறையாடப்படும் என்று முஸ்லிம்கள் பயந்தார்கள். கலவரத்தில் ஈடுபட்ட சிலரைத்

தவிர, மற்றவர்களெல்லாம் இந்தியாவிலேயே இணக்கமாக வாழ விருப்பம் தெரிவித்தார்கள். இந்துக்களை அண்டி அபயம் கேட்டார்கள். காஷ்மீரிலுள்ள குங்குமப்பூ தோட்டங்களுக்குத் தொடர்பாளராக பம்பாயில் ஒரு முஸ்லிம் இருந்தார். கராச்சியில் நடக்கும் கோரங்களைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டார்.

"உன் மனைவி மதராஸ் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா...?" என்று மெல்ல நீலகண்டனிடம் அந்த முஸ்லிம் வியாபாரி பேச ஆரம்பித்தார்.

"நான் மராட்டியர்கள் வசிக்கும் பகுதியில் இருக்கிறேன். மராட்டியப் பெண்கள் கோதுமை மாவு பிசைந்த கையை தண்ணீரில் நனைத்து சுத்தமாகக் கழுவி அதை என்மீது ஊற்றுகிறார்கள். என் வீட்டுப் பெண்களைக் கொன்று விடுவதாக மிரட்டுகிறார்கள். காறி உமிழ்கிறார்கள். நான் மாதுங்கா வந்துவிடட்டுமா? இங்கு தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்லவர்கள். முஸ்லிம்கள் மீது அதிகமான வெறுப்பு இல்லாதவர்கள். உன்னுடைய வீட்டில் வந்து சிறிது நாள் தங்கிக்கொள்கிறேன். இந்த வருட இறுதியில் தானே உன் மனைவி வருவாள். அதுவரை நான் இருக்கலாமா?" என்று மிகப் பணிவாகக் கேட்டார். என்ன வாடகை சொன்னாலும் கொடுத்துவிடுவதாகச் சொன்னார்.

நீலகண்டன் யோசித்தான். அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் பேசினான். அவர்கள் சம்மதிக்கவே அந்த இஸ்லாமியரை தன் வீட்டுக்கு வரவழைத்தான்.

"சுற்றி அந்தணர்கள் இருப்பதால் நாங்கள் இங்கு இருக்கும்வரை மாமிசம் சமைப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம். அவசியமானால் கடையில் போய் வாங்கிக் கொள்கிறோம். எனவே, எந்த வாசமும் வீசாது..." என்று அவர் உத்தரவாதம் கொடுத்தார். அவர் வீட்டுப்

பெண்கள் பஞ்சாபிகளைப் போல் உடையணிந்து வலம் வந்தார்கள்.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் விமானம் பிடித்து மதராஸுக்கு நீலகண்டன் பறந்துவந்தான். நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மனைவியை அணைத்துக் கொண்டான்.

"பதினஞ்சாம் தேதிக்கு அப்புறந்தான் பிறக்கும் அப்படிங்கறா. சுதந்திரம் கிடைச்ச பிறகுதான் வருவான் போலிருக்கு..." என்று அம்மா சந்தோஷமாகச் சொல்ல, அம்மா எதிரிலேயே நீலகண்டனின் மனைவி பார்வதி அவன் மடியில் படுத்துக் கொண்டாள். படுத்துக்கொண்டிருந்த மனைவிக்கு, அம்மா விசிறுவது பார்த்து நீலகண்டன் நெகிழ்ந்து போனான்.

"உனக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டேனாம்மா..." என்று கேட்டான்.

"போடா... என்ன சிரமம். இவா அம்மாகிட்டேயிருந்தும், அப்பாகிட்டேயிருந்தும் இவளுக்கு லெட்டர் வந்திருந்தது. படிச்சுப் பார்த்தோம். கத்தை கத்தையாக பல கதைகள் எழுதியிருக்கா. விடிஞ்சா உயிரோட இருப்போமான்னு தெரியாதுங்கற இடத்துல அவாரெண்டு பேரும் வேலை செய்துண்டிருக்கா. இந்தக் குழந்தைய நாம பார்த்துக்க வேண்டாமா...?

எந்தக் கவலையும் படவேண்டாம். என் சொந்தப் பொண்ணா பார்த்துக்கறேன்னு நான் என் கைப்பட இவா அம்மாக்கு எழுதியிருக்கேன். நேத்து ராத்திரி டெலிபோன்ல அம்மாவும் பொண்ணும் ஒரே அழுகை. பேசிப் பேசி அழுகை. தினமும் கார்த்தால சுவாமியை நமஸ்காரம் பண்றபோது நான் உங்களுக்கும் பண்றதா நினைச்சுக்கறேன் அப்படின்னு அவா அம்மா சொல்றா. எனக்கு என்னவோ மாதிரி ஆயிடுத்து போ..." என்று பெருமை பொங்கச் சொன்னாள்.

அம்மா வெகுநாள் ஆசைப்பட்ட ப்ளூஜாக்கர் கம்மலை பதினெட்டு, பதினெட்டு கற்கள் இருக்கிற பெரிய தோடுகளை நீலகண்டன் வாங்கிக் கொடுத்தான். இருட்டில் வைத்துப் பார்த்தாலும் அந்த வைரங்கள் டால் அடித்தன.

அம்மா அதை கச்சேரிகளுக்கு போட்டுக் கொண்டு போனாள். பல பெண்களுக்கு நடுவே ராணியைப் போல விளங்கினாள். வடஇந்தியாவில் பல பகுதிகள் ரத்தக் களறியாகமாற, மயிலாப்பூரில் எந்தக் கலவரமும் இல்லை. எந்தச் சண்டையும் ஏற்படவில்லை. ஆண்கள் எல்லோரும் பார்க்குக்குப் போய் ரேடியோவில் செய்திகேட்டார்கள். பெண்களுக்கு வந்து சொன்னார்கள்.

வாரப்பத்திரிகைகள் சுதந்திரம் நிச்சயம் கிடைத்துவிடும் என்று தலையங்கம் எழுதின. தேனாறும், பாலாறும் பொங்கும் என்று சொல்லின. ஒற்றமையாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தின. ஆங்கிலேயருக்கு ஆதரவு தராதீர்கள் என்று கேட்டுக் கொண்டன.

பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அடுத்தபடி சர்தார் வல்லபாய் படேல்தான் அதிகம் பேசப்பட்டார். மாவீரன் என்று போற்றப்பட்டார். 'இரும்பு மனிதர்' என்று அழைக்கப்பட்டார்.

இனி இந்தியா சுதந்திர நாடு. இந்தியாவினுடைய அரசியல் விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொண்டு தலையிடாது. இந்தியா தனது தலையெழுத்தைத்தானே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். மொத்தமாக விட்டு விட்டுப் போகாமல் அதிகார வழிகாட்டியாக- கவர்னர் ஜெனரலாக மௌண்ட்பேட்டன் பிரபு இருப்பார். அதே அதிகாரிகளை வைத்து அவர்களை எந்தப் பழிவாங்குதலும் செய்யாமல் புதிய இந்திய அரசாங்கத்தை நடத்திவர வேண்டும். மக்களுக்கு அடிப்படையான பாதுகாப்பை தரவேண்டும் என்ற உடன்படிக்கை வாசகங்கள் இருந்தன. இந்த உடன்படிக்கைகளில் பல தலைவர்கள் கையெழுத்திட்டார்கள்.

"நிஜமாகவே சுதந்திரம் கிடைச்சுடுமா..?" மயிலாப்பூர் ஜனங்கள் முன்னும்பின்னும் ஓடிஓடிப் பேசிக்கொண்டார்கள். வந்தேமாதரம் என்று உரக்கக் கூவினார்கள்.

"வேண்டாண்டா... பிரிட்டிஷ்காரன் திடீர்னு பின்வாங்கினாலும் வாங்கிடுவான். இது ஏதாவது ராஜதந்திரமா இருக்கும். சத்தம் போட்டு இப்போதைக்கு வந்தேமாதரம் சொல்ல வேண்டாம். சுதந்திரம் கிடைக்கட்டும். வாய்நிறையக்கத்து... யார் வேண்டாங்கறா...?" என்று பெரியவர்கள் கத்தியவர்களை ஆறுதல் படுத்தினார்கள். அமைதிப்படுத்தினார்கள்.

தென்னிந்திய முஸ்லிம்களுக்கு இந்துக்கள் மீது பயம் இருந்தது. அதே சமயத்தில் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது.

கராச்சிக்குப் போயிடலாமா என்று நவாப்களின் உறவுகள்யோசிக்க, சிலபேர் இந்தியாதான் வளமான தேசம் என்பதைப் புரிந்துகொண்டு இங்கேயே இருக்க தீர்மானித்தார்கள்.

பம்பாய் வியாபாரம் ஸ்தம்பித்திருந்தது. எந்தப் பண்ட மாற்றமும் ஏற்படவில்லை. அரிசி மூட்டைகள் பதுக்கப்பட்டன. உணவுப்பொருட்கள் குறைவாகச் சந்தைக்கு வந்தன.

பதினாலாம் தேதி பாகிஸ்தானுக்கு சுதந்திரம் என்று அறிவிக்கப்பட்டது. அதன் கவர்னர் ஜெனரலாக முகமுது அலி ஜின்னா பதவியேற்றார். மதத்தில் மீது நம்பிக்கையே இல்லை என்ற சொன்ன முகமதுஅலி ஜின்னாவுக்கு மதம் சார்ந்த, மதரீதியாகப் பிரிந்த ஒரு தேசம் கிடைத்தது. மதம் மீது மிகுந்த நம்பிக்கையுள்ள மகாத்மா காந்திக்கு மதச் சார்ப்பற்ற ஒரு அரசாங்கம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் உண்டாயிற்று.

பார்வதிக்கு வலியெடுத்தது. மருத்துவச்சிகள் வர வழைக்கப்பட்டார்கள். லெப்டினல் கர்னல் பத்மநாபன் உத்தரவிட, பரங்கிமலையிலிருந்து ஒரு ஆங்கிலோ லேடி டாக்டர் பார்வதியை வந்து பார்த்தாள். 'இன்று அல்லது நாளை நிச்சயம் பிரசவமாகிவிடும்' என்று சொன்னாள்.

"இன்றைக்கு வேண்டாண்டி, நாளைக்கு வச்சுக்கோடி... நாளைக்கு வச்சுக்கோடி..." என்று நீலகண்டனின் அம்மா கெஞ்சினாள்.

"நீ கவலையேபடாதே... நாளைக்குத்தான் பிறப்பான்..." என்று வைத்தீஸ்வரன் உரத்துச்சொன்னார்.

டெல்லி குதூகலமாக இருப்பதாக டெலிபோனில் செல்லப்பா சொன்னார். சரோஜினியும் பேசினாள். எல்லா இடங்களிலும் ராணுவம் சுற்றிக்கொண்டிருக்கிறது. கண்காணிக்கிறார்கள் என்று டெலிபோனில் சொன்னார்கள்.

அதே செய்தி பேப்பரிலும் மாலை வந்தது ரேடியோவிலும் சொல்லப்பட்டது.

"நீ எப்போ ஊருக்குப் போகணும் நீலகண்டா...?" -அப்பா விசாரித்தார்.

"குழந்தை பிறந்த பிறகு, சுகப்பிரசவம்னு தெரிஞ்ச பிறகு நான் ஊருக்குப் கிளம்பறேன். டெல்லி போயிட்டு, அங்கிருந்த பாம்பே போவேன்..." என்று அவன் விவரித்தான்.

அன்றிரவு முழுவதும் ரேடியோ நேரடி ஒலிபரப்பு செய்து கொண்டிருந்தது. இரவு பன்னிரண்டு மணிக்கு சுதந்திரம் பிரகடனப்படுத்தப்படும் என்று பத்திரிகைகள் எழுதின. டெல்லியில் பார்லிமெண்ட் கூடியது. நள்ளிரவு பன்னிரண்டு மணி ஆன இரண்டு நிமிடம் பொறுத்து, மௌண்ட்பேட்டன் பிரபுவால் இந்தியாவின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது.

வானொலியைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எகிறிக் குதித்தார்கள்.

வைத்தீஸ்வரன் உடம்பு நடுங்க எழுந்திருந்தார். முகம் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்.

"எத்தனைபேர் செத்து போயிருக்காடா. தெய்வமே... நம்ம தேசத்துக்கு சுதந்திரம் கிடைச்சதுடா. வந்தே மாதரம்... வந்தே மாதரம்" என்று உரக்கக் கத்தினார். குலுங்கிக் குலுங்கி அழுதார். எல்லோரையும் ஆரத்தழுவிக் கொண்டார். தெருவில் ஓடினார். குதித்தார். துண்டைத் தூக்கி மேலே போட்டார். அவரைப் பார்த்து பலபேர் அழுதபடியே தெருவில் இறங்கினார்கள்.

"ஆடுவோமே... பள்ளு பாடுவோமே... ஆனந்த சுதந்திரம் அல்டந்துவிட்டோமே." என்று அமரரான மகாகவி பாரதியின் பாடல்களைப் பாடினார்கள். உடனடி ஊர்வலம் போனார்கள்.

யாரோ ஒருவன் எல்லோரையும் அமைதிப்படுத்திவிட்டு 'வந்தே மாதரம்... பாரத மாதா கி ஜே..." என்று கத்தினான். எல்லோரும் அவனுடன் சேர்ந்து பலமுறை மயிலாப்பூர் முழுவதும் நடந்து முழக்கமிட்டார்கள். மயிலாப்பூர் கபாலி கோயில் மணி இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தது.

நீலகண்டனின் அம்மா அவசர அவசரமாகச் சர்க்கரைப் பொங்கல் செய்தாள். மந்தாரை இலை வாங்கி வந்து தெருவில் நடந்து போவோருக்கு வினியோகம் செய்தாள்.

நீலகண்டன் லாலா கடைக்குப்போய் லட்டும் பாதுஷாவும் வாங்கி வந்தான். கூடை கூடையாக வைத்து யார் கேட்டாலும் கொடுத்தான். பையன்களும் தொழிலாளர்களும் வழிப்போக்கர்களும் வரிசையில் நின்று வாங்கினார்கள். வாய்நிறையப் போட்டுக்கொண்டு மென்றார்கள். 'மகாத்மாகாந்தி கி ஜே' என்றார்கள்.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நீலகண்டனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. பார்வதி அதிகம் அவஸ்தைப் பட்டாள். டாக்டர்கள் போராடி குழந்தையையும் தாயையும் பிரித்தார்கள். இருவரும் சுகம் என்று சொன்னார்கள்.

குழந்தை பிறந்த வீட்டு தீட்டு என்பதால் வேறொருவர் வீட்டில் கூட்டம் நடந்தது. வழக்கமாக கூட்டத்தைக் கண்டால் முறைத்துப் பார்க்கிற போலீஸ்காரர்கள் கூட்டத்துக்கு வந்து, கூட்டத்தின் தலைவர் யாரென்று கேட்டு சல்யூட் அடித்தார்கள். பந்தோபஸ்து வேண்டுமா..? என்று கேட்டார்கள்.

"இப்போ நீ எந்தப் பக்கம் காங்கிரஸ் பக்கமா, பிரிட்டிஷ் காரன் பக்கமா..?" என்று போலீஸ்காரரை நோக்கி ஒரு அந்தணர் வினவ எல்லோரும் சிரித்தார்கள்.

"நீங்களெல்லாம் எந்தப் பக்கமோ அந்தப் பக்கம்தான் நாங்களும். நாங்களும் மனுஷாள் தானேய்யா..." என்று ஒரு நாயுடு போலீஸ்காரர் தெலுங்கு கலந்த தமிழில் சொன்னார்.

"அது இன்னிக்குத்தானே தெரியுது. இதுக்கு முன்னாடி மனுஷாளாவே எங்களை நீ பார்த்ததில்லையே..." என்று மறுபடியும் அந்தணர் சொல்ல, போலீஸ்காரர்கள் வெட்கி விலகிக் கொண்டார்கள்.

மறுபடியும் தலைமையேற்ற ஒரு வக்கீலைப் பார்த்து சல்யூட் அடித்துவிட்டு கூட்டத்தைவிட்டு விலகி நின்று கொண்டார்கள்.

'மகாத்மா காந்திக்கு ஜே. பண்டித ஜவஹர்லாலுக்கு ஜே. சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு ஜே.' என்று பலபேருக்கு ஜே போடப்பட்டது.

கூட்டத்தில் யாரோ ஒருவர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பிக்க "தமிழில் பேசுய்யா. கொயகொயன்னு இங்கிலீஷ்ல பேசிக்கிட்டு... அதான், பிரிட்டிஷ்காரனே

போயிட்டானே... நீ என்னத்துக்கு இங்கிலீஷை கூட்டிக்கிட்டு மாரடிக்கறே..?" என்று ஒருவர் கத்தினார்.

"எனக்குத் தமிழ்ல பேச வராது..." என்று பேச ஆரம்பித்தவர் சொன்னார்.

"அப்போ உட்கார் நீ பேச வேண்டாம்" என்று சொல்ல, தமிழ் தெரிந்த இன்னொருவர் எழுந்து சுதந்திரத்தினுடைய அருமை பற்றிப் பேசினார்.

மக்கள் அமைதியாக ஆனந்தமாகக் கேட்டார்கள்.

33

"பார்த்தியா... இங்கிலீஷ் டபுக்குனு சாஞ்சிடுத்து பார்த்தியா. இதுவரைக்கும் இங்கிலீஷ் பேசாதேன்னு யாருமே சொல்லலை. இப்போ சொல்ல ஆரம்பிச்சுட்டான் பார்த்தியா."

நீலகண்டனுக்கு வைத்தீஸ்வரன் கூட்டிக் காட்டினார்.

"இதெல்லாம் சும்மா. வெறும் கூச்சல் இங்கிலீஷ் இல்லாம ஒண்ணும் நடக்காது. இங்க இவர் எப்படிக் கத்தறாரோ அதே மாதிரி பம்பாயிலும், டெல்லியிலும் மீகார்லேயும், லக்னோவிலும், இந்தியில பேசுன்னு கத்தப்போறாங்க. எப்பவோ கத்தியும் முடிச்சு இந்தியில பேச ஆரம்பிச்சுட்டாங்க. இனிமே நீங்க இங்கிலீஷ்லேயும் பேச முடியாது. தமிழ்லேயும் பேச முடியாது. நம்ப பசங்க பாடு திண்டாட்டம்தான்" வைத்தீஸ்வரன் சொன்னார்.

"என்ன திண்டாட்டம்?" நீலகண்டன் கேட்டான்.

"இங்கிலீஷ்மும் படிக்கணும்- உலக மொழி. தமிழ் படிச்சாகணும்- தாய்மொழி. இந்தி- தேசியமொழி. மூணு மொழியையும் படிச்சு அவஸ்தைப்படப் போறான்."

"அதெல்லாம் இப்போதைக்கு வராது."

"இப்போதைக்கு என்ன வரும்கற?"

"உணவுத் தட்டுப்பாடு வரும். மறுபடியும் வகுப்புக் கலவரம் வரும். வெளி மாகாணத்துலேர்ந்து கோதுமை வந்தாதான் வடஇந்தியா பிழைக்கும். கோதுமை வரலைன்னு வச்சுக்கோ, ஆந்திராலேர்ந்து அரிசி எடுத்துண்டு வடக்க போயிடுவான். ஆந்திராலேர்ந்து அரிசி வடதேசத்துக்கு போயிடுத்துன்னா, தென்னிந்தியாவுல திங்கறதுக்கு ஒண்ணும் இருக்காது. இதுல ரொம்ப பாதிக்கப்படப் போறது கேரளாதான்."

"அப்போ கோதுமை வராதா?"

"பாகிஸ்தான் பிரிஞ்சுடுத்தே. சிந்துதேசம் கோதுமை தருவானா, மாட்டானான்னு தெரியலையே?" என்று நீலகண்டன் கவலைப்பட்டான்.

"கோதுமை வரதைப் பொறுத்துத்தான் பாம்பே வியாபாரமே இருக்கு. கோதுமை நல்லபடியா உள்ளுக்குள்ள பாம்பே வரைக்கும் வந்துடுத்துன்னா, மற்ற வியாபாரங்களும் படுவேகமா ஆரம்பிச்சுடும்" என்றான்.

அன்று இரவு மாமனாரும் கணவரும் அருகருகே உட்கார்ந்திருக்க, சிரமப்பட்டு பார்வதி எழுந்து உட்கார்ந்தாள். குழந்தையை எடுத்து அவர்களிடம் நீட்டினாள்.

"நல்லபடியா பெத்துப் பிழைச்சேம்மா. எனக்கு ரொம்ப சந்தோஷம். உங்கப்பாவுக்குத் தந்தி போய் சேர்ந்திருக்கும்னு நினைக்கிறேன். ராத்திரி எந்த நேரமும் போன் வரலாம். போனை இங்க கொண்டுவந்து தரேன். நீ பேசு உங்கப்பாகிட்ட. உங்கப்பாவுக்குச் சந்தோஷமா இருக்கும்."

அவள் மாமனாரின் முழங்கால்தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

"உங்களுடைய ஆசீர்வாதம்தான் நான் பிழைச்சது. உங்காத்து பெரியவாள்லாம் சேர்ந்துதான் என்னை காப்பாத்தியிருக்கா. மாயவரத்துல இருக்காரே சதாசிவம் தாத்தா.. அவருக்குத் தகவல் அனுப்பிட்டேளா?"

"போயிடுத்தும்மா. ஆள்விட்டே அனுப்பியிருக்கேன். ஜோசியர்கள்கிட்ட ஜாதகம் போட்டுக்கொண்டு வரச்சொல்லியிருக்கேன்.

"நீங்க எப்போ ஊருக்குப் போகப் போறேன்? எல்லா இடமும் சரியா இருக்கோன்னோ." அவள் கவலையோடு நீலகண்டனிடம் கேட்டாள்.

"நான் இன்னிக்கு ராத்திரி டெல்லி கிளம்பறேன். டெல்லியில் சரோஜினியோட நாலு நாள் தங்கிட்டு அங்கேயிருந்து பாம்பே போவேன். நீ நிதானமா வா. உடம்பைப் பார்த்துக்கோ. நான் அடிக்கடி வந்து போயிண்டிருக்கேன்" என்ற பதில் சொன்னான்.

டெல்லியில் செல்லப்பாவின் மதிப்பு கூடியிருந்தது. பண்டித ஜவாஹர்லால் நேருவை நேரே சந்தித்துப் பேசுகிற வாய்ப்பு பலமுறை அவருக்குக் கிடைத்தது. புதிய பொருளாதாரத்தை நீங்கள் கவனித்துக்கொள்கிறீர்களா? என்று செல்லப்பாவிடம் கேட்கப்பட்டது. செல்லப்பா சந்தோஷமாகச் சரியென்று ஒப்புக்கொண்டார். அதற்கு நியமனப்பத்திரம் தரப்பட்டது.

"நீ எப்போவெல்லாம் எங்க வீட்டுக்கு வர்னேயா அப்போவெல்லாம் எனக்கு ஒரு முன்னேற்றம் கிடைக்கறதுடா. உனக்கும் எனக்கும் நடுவில ஏதோ ஒரு நல்ல தொடர்பு கிடைக்குது" செல்லப்பா கண் சிமிட்டிய படியே நீலகண்டனைக் கட்டிக் கொண்டார்.

"எனக்கு இன்னொரு பிரச்னை இருக்கு. கார்த்தா லேர்ந்து சாயந்திரம் வரைக்கும் அதிகாரிகளோடு போராடி, பேப்பர் படிச்சுப் படிச்சு, ஃபைல் பார்த்துப்

பார்த்து உச்சந்தலை, முதுகுத்தண்டு எல்லாம் சூடாப் போயிடுத்து. உடம்பே கொதிக்கறது. வந்தா நன்னா தூங்கிடறேன். தூங்கறதுக்கு கொஞ்சம் லிக்கர் சாப்பிட றேண்டின்னா உன் தங்கை கூடாதுங்கறா. அவளையும் அனுசரிச்சுண்டு போக வேண்டியிருக்கு. மீறி சாப்பிட்டா முகத்தை தூக்கி வெச்சுக்கறா. ஒரு வாரத்துக்குப் பேச மாட்டேங்கறா நீ கொஞ்சம் சொல்லப்படாதா?" என்று அலுத்துக் கொண்டார் செல்லப்பா.

"ஆமா இன்னிக்கு குடிம்பேள். நாளைக்கு மாமிசம்பேள். நாளான்னிக்கு பொம்மனாட்டிம்பேள். எல்லாத்துக்கும் நான் சரிசரின்னு தலையாட்டிண்டு இருக்கணுமா? நீங்க ஒழுக்கமா இருந்தா போதும். அது ரொம்ப முக்கியம்" என்றாள் சரோஜினி.

"நீங்க குடிக்க வேண்டாம். குடிச்சா உங்க மதிப்பு போயிடும். நீங்க அஞ்சாம் நம்பர். ஹஸ்த நட்சத்திரம். ஒரு விஷயத்துல மாட்டிண்டேள்னா வெளியே வரது ரொம்பக் கஷ்டம். நீங்க இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக்காம இருக்கறது நல்லது. உங்களுக்காக நான் ஷீர்டி பாபாகிட்ட வேண்டிக்கறேன். ஷீர்டிலேர்ந்து சலவைக்கல்லுல செய்த பெரிய உருவச் சிலையைத்தரேன். தினமும் அதுக்கு பூப்போட்டு நீங்களும், சரோஜினியும் பூஜை பண்ணுங்கோ. மனசு அமைதியா இருக்கும்" என்றான் நீலகண்டன்.

டெல்லியில் கொண்டாட்டங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவன் பம்பாய்க்கு வந்தான். பம்பாயில் வியாபாரம் சூடுபிடிக்கத் துவங்கியிருந்தது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு ஏலக்காய் வேண்டுமென்று அந்த முஸ்லிம் நண்பர் கேட்க, மதுரை செட்டியார்களிட மிருந்தும், கேரளத்து நாயர்களிடமிருந்தும் ஏலக்காயை பெட்டிபெட்டியாக வாங்கிக் கொடுத்தான். அந்த முஸ்லிம் ஏற்றுமதி, சட்ட மறந்து பற்றியெல்லாம் கவலைப்படாமல்

பெரிய டீசல் லாஞ்சில் அந்தப் பெட்டிகளை ஏற்றி குவைத் துக்கு அனுப்பி, குவைத்திலிருந்த மற்ற இடங்களுக்கும் சரக்குகள் அனுப்பிக் கொண்டிருந்தார். குவைத் வியாபாரி கள் காசு கொண்டு வந்து கொட்டினார்கள். முஸ்லிம் நண்பர் குவைத் ஏஜெண்ட்டுகளை அறிமுகப்படுத்த, நீலகண்டன் இன்னொரு ஏலக்காய் ஏஜென்சியை ஆரம்பித்தான். வருடத்துக்கு இத்தனை ஏலக்காய் தருகிறேன் என்று அந்த வருடமே காசு வாங்கினான்.

சென்னையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும், திருச்சிராப் பள்ளியிலிருந்தும் பல இளைஞர்கள் வந்து அவன் கம்பெனியில் சேர்ந்தார்கள். பம்பாயில் அவன் கம்பெனி மிகப் பெரியதாக வளர்ந்தது.

அவன் சொன்னபடி பார்வதியை போய்ப் பார்க்க முடியவில்லை. மறுபடியும் சென்னை போக அவனுக்கு இரண்டு மாதம் தேவைப்பட்டது. பார்வதி முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டாள். "என் மீது அக்கறையே இல்லை" என்று வருத்தப்பட்டாள்.

"செல்லப்பா குடிக்கறாராமே. சரோஜினி இங்கவந்து அழுதுட்டுப் போனா, அந்த மாதிரி நீங்களும் எதுனா ஆரம்பிச்சுட்டேளா? ஆத்துலயே ஒரு பார் ஓப்பன் பண்ணி சாயந்திரம் ஆனா ரெண்டு டம்ப்ளர், மூணு டம்ப்ளர் சாப்பிடறாராம். அப்பா சமாமதானப்படுத்தினார். இதுக்கெல்லாம் சண்டை போட்டுண்டு இருக்காதேன்னு சொன்னார். உங்கம்மாவுக்கு முண்டகக் கண்ணியம்மன் கோயிலுக்குப் போய் பிரார்த்தனை பண்ணிட்டு வந்தா. எனக்கு உங்களைப் பத்தி கவலை ஆயிடுத்து" என்று சொன்னாள்.

நீலகண்டன், தான் நாள் தவறாமல் காயத்ரி ஜபம் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னான். அதில் பார்வதி சமாதானமடைந்தாள்.

சிந்து மாகாணத்திலிருந்து கோதுமை நல்ல விலை கொடுத்து குஜராத் வியாபாரிகளால் வாங்கப்பட்டது. பாகிஸ்தானில் கோதுமை போக்குவரத்து குறைந்து இந்தியாவுக்குத் திசை திரும்பியது. கோதுமை வரவு நன்றாக இருந்ததால் மற்ற வியாபாரங்களும் சூடுபிடித்தன. தங்கம் விலை அதிகமாயிற்று.

வியாபாரிகளின் உன்னதமான நேரம் அது. யாரிட மெல்லாம் காசு இருந்ததோ அவர்களெல்லாம், தைரியமாக நிலத்திலும், கட்டடங்களிலும் முடக்கினார்கள்.

நீலகண்டன் கடன் வாங்கினான். மனைவியின் நகைகளையெல்லாம் விற்றான். அப்பாவை கடன் வாங்கி காசு அனுப்பச் சொன்னான். பம்பாயின் புறநகர்ப் பகுதியில் நிலம் வாங்கிப் போட்டான். நகருக்கு நடுவே அடுக்குமாடிக் கட்டடத்தின் ஈசான்ய மூலையாகப் பார்த்து அங்கே தன் பெயருக்கும், தன் மனைவி பெயருக் கும் பதிவு செய்து கொண்டான். பம்பாயை நோக்கி வடக்கேயிருந்தும், கிழக்கேயிருந்தும் நிறைய ஆட்கள் வருவார்கள் என்பதைப் புரிந்துகொண்டான்.

ஆங்கிலம், தாய்மொழியாகியது. இந்தி, வேலையாட் களோடு பேச உதவியது. தமிழ் வார்த்தைகள் பலசமயம் மறந்துபோயின. இதற்கு தமிழ்ல என்ன சொல்றது என்று மனைவியைக் கேட்டு தெரிந்து கொள்வான்.

பாகிஸ்தானில் இருந்து அகதிகள் கொண்டுவந்த தங்கத்தை குஜராத்திகள் வாங்கினார்கள். பதுக்கி வைத்தார் கள். பம்பாயிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களின் இடங்களை மராட்டியர்கள் பிடித்துக் கொண்டார்கள். ஆனாலும் பம்பாயில் குஜராத்திகளின் கைகளே ஓங்கியிருந் தன. சிந்திகளிடம் காசு இருந்தது. அவர்களும் நிலங்களை யும் இடங்களையும் வாங்கிப்போட்டார்கள்.

தனக்குக் கீழே இருக்கிற இளைஞர்கள் பம்பாயில் இடம் வாங்கச் சொன்னான். ஒன்றிரண்டு பேரே வாங்கினார்கள்.

மற்றவர்களெல்லாம் காசு வாங்கி மறுபடியும் மதராஸுக் குப் போகும் எண்ணத்தில்தான் இருந்தார்கள்.

"மதராஸ்ல என்ன இருக்கு. இதுதான் இடம். இதுதான் வாழத் தகுதியான இடம். இந்த இடத்தை விட்டுட்டுப் போவாளா? அப்படிப் போகணும்னா டெல்லிக்குப் போ. மதராஸ்ல ஒண்ணுமே இல்லையே?"

நீலகண்டன் சொன்னதை பலபேர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"நீங்க சொல்றது வாஸ்தவம் சார். இங்கதான் சம்பாதிக் கணும். இங்க சம்பாதிச்சுட்டு அங்கதான் சார் போய் செத்துப்போகணும். இங்க செத்துப்போகறதுக்கு எனக்குப் பிடிக்கலை சார்" ஒருவன் தைரியமாகச் சொன்னான். நீலகண்டன் லேசாகத் திகைத்தான்.

"சந்தோஷம். ரிட்டயர்மெண்ட் லைஃபை அங்க வச்சுக்கணும்னு நினைக்கறயா. எனக்குப் புரியறது."

அவனுடைய அறிவுப்படி தமிழர்கள் இரண்டு விதமாக இருந்தார்கள். ஊரின் மீது மாறாக் காதல் உள்ளவர்கள், இன்னொன்று எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான் என்று ஊரை ஒதுக்கிவிட்டு உழைப்பதற்கு வெறியாக இருப்பவர்கள். ஆனால், உழைக்கத் தயாராக இருந்தவர் களும் அதிகம் தங்களை உபத்திரவப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. சனியும், ஞாயிறும் ஓய்வு வேண்டும் என்று சொன்னார்கள். சனிக்கிழமை அரைநாள்தான் என்று திட்டமிட்டார்கள். பிற்பகலில் நேரே கிளம்பி வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு குப்புறப்படுத்துக் கொண்டு தூங்கினார்கள். ஞாயிற்றுக்கிழமை முழுவதும் லுங்கி கட்டிக்கொண்டு வீட்டு வேலைகளைக் கவனித்தார் கள்.

குஜராத்திகளும், சிந்திகளும் வியாபார கம்பெனிகள் ஆரம்பிக்கும்போது மதராஸிகளைத்தான் தேடினார்கள்.

மதராஸிகள் என்று தெலுங்கர்களுக்கும், கன்னடக்காரர் களுக்கும், கேரளியர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒட்டு மொத்தப்பேராக விளங்கியது. இதில் பாலக்காடு அந்தணர் களுக்கு முதல் இடம் இருந்தது. தெலுங்கு பேசுகின்ற ஆட்களுக்கு இரண்டாம் இடம் இருந்தது. மூன்றாவது தமிழ் பேசுகின்ற தஞ்சாவூர் மனிதர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டது. ஆனால் வேலை இல்லை என்று எவரும் இல்லை. யார் வந்தாலும் பம்பாயில் வேலை கிடைத்தது. கைநிறைய சம்பளம் கிடைத்தது. ஆடவும், பாடவும், கிகட்டுப்போகவும் வசதிகள் இருந்தன. அடைமழை பொழிகின்ற ஒரு இருபத்தோரு நாளைத் தவிர பம்பாயில் வாழ்க்கை வெகுசுகமாக இருந்தது.

நீலகண்டனுக்குக் கீழே வேலை செய்கின்ற ஒரு பையன் சம்பளம் வாங்கியதும் காசை சுருட்டிப் பையில் வைத்துக் கொண்டு கிராண்ட்ரோடு எனப்படும் இடத்துக்குப் போய்விடுவான். விபசார விடுதிகள் அதிகமிருக்கும் அந்த இடத்தில் தங்கி வெறும் காலிப்பையோடு திரும்பி வருவான். அவனை மடக்கித்திருத்த முயற்சிக்கிறபோது "கவலைப்படாதீங்க சார்... இன்னும் மூணு நாலு மாசத்துல நான் சரியாயிடுவேன். எனக்குப் போதுங்கற அளவுக்கு இதுல ஈடுபட்டுட்டா வெளிய வந்துடுவேன். தங்கையோட தாவணியை எடுத்து கழுத்துல சுத்திண்டேன்னு சொல்லி எங்கப்பா... என்னை விறகுக்கட்டையால அடிச்சார். பொம்மனாட்டி புடவைய தொடலாமா தப்பில்லையா அப்படின்னு மிரட்டினார். பொம்மனாட்டியத் தொட ணும்னு ஆசை இருக்கறதுனாலதாண்டா பொம்மனாட்டி புடவைய தொடற அப்படின்னு மிரட்டினார். இங்க பாருங்க சார். பதினைந்து ரூபாய்க்கு பொம்மனாட்டி கிடைக்கறா. ஒரு ராத்திரி முழுக்க என்கூட இருக்கா சார்" வெட்கமில்லாமல் பேசினான்.

"கெட்டுப்போயிடப் போறடா. வியாதி வரப்போகற துடா" பலவிதமாக நீலகண்டன் எடுத்துச் சொல்லியும் அவன் கேட்க மறுத்துவிட்டான்.

அவனுக்கு திருநெல்வேலி பக்கம். பெயர் நாராயணன். நல்ல உயரம். நல்ல அகலம். இயல்பாகவே அலட்சிய சுபாவம் கொண்டவன். முடியாது என்றால் செய்வேன் என்று அடம்பிடிப்பவன். பத்து நிமிடத்தில் நீலகண்டன், நாராயணனை எடை போட்டு இறக்கினான்.

"நாராயணா... உன்னுடைய ஆசைக்கு என்னால சம்பளம் கொடுக்க முடியாதே? இன்னும் அதிகமா சம்பாதிக்கணுமே, என்ன பண்ணப்போற?"

"தனியா போட் ஓட்டப் போறேன் சார்"

ஹார்பரில் நீலகண்டனுக்குக் கீழே வேலை செய்து கொண்டிருந்த நாராயணன் மீன்பிடி படகு வாங்கினான். பாகிஸ்தானுக்கும், வளைகுடா நாடுகளுக்கும் அந்த மீன் பிடி படகில் பயணப்பட்டான்.

சுங்கம் கடுமையா இல்லாத அந்த நாட்களிலேயே சுங்கத்தீர்வை இல்லாமல் மது வகைகளும், வாசனைத் திரவியங்களும் மின்சார உபயோகத்துக்கான விளக்கு களும், துணிகளும், தின்பண்டங்களும் கொண்டுவந்து கொடுத்தான். ஆயிரக்கணக்கான ஓவல்டின் டப்பாக்கள் அவன் மூலம்தான் விநியோகிக்கப்பட்டன. ஆயிரம் பத்தாயிரம் என்று ஆரம்பித்து லட்சக்கணக்கான ரூபாய்கள் அவனிடம் புழங்கியது. கல்லிடைக் குறிச்சியில் பிறந்த நாராயணன், பம்பாயில் தாதாவானான். அவன்மீ து பல கொலைக்குற்றங்கள் இருந்தன. பம்பாய் போலீஸ் அவனைக்கண்டு பயந்தது. தாராவி என்கிற இடம் அவன் பேச்சுக்குக் கட்டுப்பட்டது.

பம்பாயில் தாதாவும் தமிழனாக இருந்தான். அதிகாரி யும் தமிழனாக இருந்தான். அலுவலகத்தைத் தூக்கி

நிறுத்துகின்ற உழைப்பாளியும் தமிழனாக இருந்தான். மேல்மட்டத்தில் வியாபாரிகளும் தமிழனாக இருந்தார்கள்.

மராட்டியர்களின் மெத்தனத்தை, மொழியை தமிழர்கள் கேலி செய்தார்கள். இகடே... திகடே... என்று கூப்பிட்டார்கள். 'டேய்... கும்மாயிருடா' என்று அதட்டினார்கள். ஒரு மராட்டிக்காரன் தமிழனைத் தாக்கிவிட்டான் என்றால், அந்த மராட்டிக்காரனைத் தாக்கத் தமிழர்கள் ஒன்று இரண்டார்கள். அடித்து நொறுக்கினார்கள். தமிழர்களுக்கு துணையாகத் தெலுங்கர்களும், கன்னடர்களும், அதிகம் கேரளியர்களும் இருந்தார்கள். பம்பாயிலுள்ள பாலக் காட்டுக்காரர்களும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தன்னை தமிழனாகவும், கேரளியனாகவும் காட்டிக் கொண்டார்கள். பிரச்னை அதிகமானால் நாள் இந்தியன் என்று உரத்து முழங்கினார்கள். பாலக்காட்டிலிருந்து மிகப்பெரிய பட்டாளம் ஒன்று பம்பாயை முற்றுகையிட்டது. தஞ்சாவூர்க்காரனை கேலி செய்தது. தெலுங்கனைப் பார்த்து தலையில் அடித்துக்கொண்டது. கன்னடக் காரனை தத்தி என்றது. கேரளத்தின் மற்ற பகுதியிலிருந்து வருகின்ற மலையாளிகளை அணைத்துக் கொண்டது.

ஆனால், இந்த உள்சண்டை புரியாமல் இவர்கள் எல்லாரையும் மதராஸிகள் என்று மராட்டிகளும், குஜராத்திகளும், சிந்திகளும் நினைத்துக்கொண்டிருந்தார்கள். 'ஏய்... நீ என்னவாக்கும் சொல்றாய்?' என்கிற தமிழ் தான் பம்பாயில் அதிகம் கேட்க முடிந்தது.

"எங்காத்து மாப்பிள்ளை நீலகண்டன் தஞ்சாவூர்க் காரன்தான். ஆனா, பசையுள்ளவனாக்கும் லட்ச லட்சமா சம்பாதிக்கிறான். பம்பாய்க்கு வந்து இறங்கின மூணாம் நாள் உனக்கு வேலை வாங்கிக்கொடுத்துருவானாக்கும்" என்று நீலகண்டனை கொண்டாடியது. அந்தப் பாலக் காட்டுக்காரர்களின் தொடர்பால் இன்னமும் பணத்தின் மீது குறியுள்ளவனாக நீலகண்டன் மாறினான்.

தன்னிடம் வேலைசெய்த நாராயணன் பத்துவருடம் கழித்து மிக உச்சாணி நிலையில் பெயர் சொன்னாலே பலபேர் நடுங்குகிற வகையில் வாழ்வதைக்கண்டு நீலகண்டன் வியந்தார். திருப்பதி, பழனி, மயிலாப்பூர் பிரசாதத்துடன் அவனைப் பார்க்கப்போனார்.

"என்ன சார். நீங்கள் வந்துட்டீங்க கூப்பிட்டு அனுப்பியிருந்தா நான் வந்திருக்க மாட்டேனா?"

"ஏம்ம்பா... கூப்பிட்டு அனுப்பற மாதிரியா நீ இருக்க... உங்கிட்ட ஒரு உதவிகேட்டு வந்திருக்கேன்ப்பா" என்று பவ்யமாக நீலகண்டன் பேசினார்.

"என்ன வேணும் சொல்லுங்க சார் செய்யறேன்" அந்த நாராயணன் மரியாதையுடன் கேட்டான்.

34

"எத்தனை நாள் இந்த மாதிரி சட்டத்துக்கு விரோதமாக அடிதடி, ரகளையோட வியாபாரம் பண்ணமுடியும்? நீ பண்ற வியாபாரத்தையே சட்டப்பூர்வமா பண்ணலாம்னு நான் நினைக்கிறேன். ஓவல்டின் ஏஜென்ஸி எடுக்கலாம்னு நினைக்கிறேன்" என்றார் நீலகண்டன்.

"தாராளமா எடுங்க சார்... எனக்கு ஒண்ணுமில்லை. நானே இதைக் கீழே போட்டுடணும்னு நினைச்சுட்டிருக்கேன்." என்றான் நாராயணன்.

"ஏன்... ஏன் கீழே போடணும்னு நினைக்கிறே...?"

"போக்குவரத்துச் செலவுக்கும் அடியாளுக்கும் காசு கொடுத்து லாபம் பார்க்கறது கஷ்டமா இருக்கு சார். இங்கேயிருந்து கொண்டுபோய் அங்கே விக்கறோம் பாருங்க, அதான் லாபம். வரும்போது வெறுமனே வராம, ஏதையோ வாரிக்கிட்டு வரேன்..."

"வேற என்ன வியாபாரம் பண்ணலாம்னு நினைக்கிறே...?"

"பேப்பர், பெட்ரோலியப் பொருட்கள், மருந்து ரசாயன உரம்... இப்படி நிறைய விஷயங்கள் அங்கே இருக்கு சார். ஐரோப்பாலேர்ந்து வளைகுடாவுக்கு வருது. வளைகுடாலேர்ந்து நாம வாரிட்டு வந்துடலாம். ஏன் சார், நிங்க நினைச்சா ஐரோப்பாலேர்ந்தே கொண்டுவர முடியாதா...?"

"நல்லாயிருக்கு நீ சொல்றது... ஒரு தடவை வளைகுடாவுக்குப் போயிட்டு வந்துடறேன். என்னவெல்லாம் கிடைக்குதுனு பார்த்துட்டு ஐரோப்பாவுக்குப் போறேன்..."

நீலகண்டன் தன் திட்டத்தை விவரித்தார். நாராயணன். அவர் செய்யும் தொழிலில் தானும் பங்குபெற வேண்டும் என்று விரும்பினான்.

"பெரிய தொழிற்சாலை ஆரம்பிங்க சார். இங்கே ஆரம்பிக்காதீங்க... பூனேல ஆரம்பிங்க. பூனே ஒரு அற்புதமான இடம் நெரிசல் இல்லாத பெரிய நிலப்பரப்பு கிடைக்கும்.

"நூறு ஏக்கர், நூத்தம்பது ஏக்கர் வாங்கணுமே... முடியுமா...?"

"நான் வாங்கித் தரேன் சார்..." நாராயணன் தொடை தட்டிக்கொண்டு இறங்கினான். பூனே முழுவதும் வளைத்துப் போட்டான். தமிழர்கள் பூனேவிலும் குடியேறினார்கள்.

சரளமாக ஆங்கிலமும் கணக்கும் தெரிந்தால் மத்திய சர்க்கார் உத்தியோகத்தில் அவர்களுக்கு முதலிடம் கிடைத்தது.

இட்லியும், மசால்தோசையும், டிகிரி காபியும் வட இந்தியாவிலும் கிடைத்தன. ஆந்திராவின் மாங்காய் தொக்கும், கோங்கரா சட்னியும், தோசையும், கேரளத்து அவியலும் முக்கிய நகரங்களில் கூவி விற்கப்பட்டன.

ஒரே வருடத்தில் இந்தி பேசிப் பழக முடிந்ததால், இரண்டாம் வருடத்தில் கவிதை எழுத முடிந்ததால், மூன்றாம் வருடத்தில் கஜல் பாட்டு கேட்டு மயங்க முடிந்ததால் தமிழர்கள் மெல்ல மெல்ல பம்பாய் மண்ணோடு இரண்டறக் கலந்தார்கள். அவர்கள் குழந்தைகள் ஆங்கிலம் பேசின. இந்தியில் விளையாடின. மராட்டி, குஜராத்தி பாடல்களைப் பாடின. கோபம் வரும்போது கெட்ட வார்த்தை பேச மட்டும் தமிழைப் பயன்படுத்தின.

பம்பாயிலும் டெல்லியிலுமுள்ள குழந்தைகளுக்குத் தமிழ் அந்நியமாயிற்று. ஆங்கிலம் தாய்மொழியாயிற்று. இந்தி சகோதர மொழியாயிற்று. குஜராத்தி வியாபார மொழியாயிற்று. உருது கவிதை மொழியாயிற்று. மராட்டி சிரித்துப் பேச, நகைச்சுவைக்காகப் புரிந்த மொழியாயிற்று.

சென்னையில் வளரும் பையனைவிட திருநெல்வேலியில் உழலும் பிள்ளையைவிட மாயவரம், மன்னார்குடியில் அலையும் குழந்தைகளைவிட... பம்பாய், டெல்லியிலுள்ள குழந்தைகள் பிரகாசமானார்கள்.

இரண்டாம் உலகப்போரின்போது ஐரோப்பாவுக்குப் போன சுவாமிநாதன், அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போய் பியர்ல் ஹார்ப்பர் தூள்தூளாக்கப்பட்டபோது பதுங்கியிருந்து உயிர் தப்பி, அங்கு போராடிக் கொண்டிருந்தவர்களுக்கு உதவிகள் செய்து, அமெரிக்கர்களின் நன்மதிப்பைப் பெற்று, அங்கேயே குடியுரிமை வாங்கி, கியூபா தேசத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

உனது ராணுவ சேவை போதும். சொந்த வாழ்க்கையைக் கவனித்துக்கொள் என்று அவனை நல்ல தொகையோடு வெளியுலகுக்கு அமெரிக்கா அனுப்பிவைத்தது.

அந்த அமெரிக்க அதிகாரி, தன்னுடைய சுயசரிதையில் சுவாமிநாதன் இல்லாவிட்டால், தான் உயிரோடு இருந்திருக்க முடியாது என்று நன்றி தெரிவித்திருந்தார்.

சுவாமிநாதன் மனைவியோடு ஊருக்குத் திரும்பினான். தான் பிறந்துவளர்ந்த இடங்களை அவளுக்குக் காட்ட விரும்பினான். பம்பாயில் இறங்கியதும் நீலகண்டனைத் தேடி, அவன் எதிரே சல்யூட் அடித்து நின்றான். 'என்னை ஞாபகமிருக்கா?' என்று கேட்டான்.

நீலகண்டன் அவனைத் தாவி அணைத்துக் கொள்ள, சந்தோஷமானான்.

"பியர்ல் ஹார்ப்பர்லயா இருந்தே...? நிஜமாவா...?" -நீலகண்டன் நம்ப முடியாமல் கேட்டான்.

"ஜப்பான்ல அணுகுண்டு போட்ட இடத்தை போய்ப் பார்த்துட்டு வந்தேன். ஹிரோஷிமா, நாகசாகி ரெண்டு இடமும் போயிட்டு வந்தேன். இந்தியா அதிர்ஷ்டம் பண்ண தேசம். நானூறு வருஷத்து அடிமை சாசனத்தை ரொம்ப சுலபமா கிழிச்சுப் போட்டுடுத்து. அதிகம் செல வில்லாமல் ஜெயிச்சுடுத்து. சுதந்திரமா இருந்த ஐரோப்பா, தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பத்திக்கறதுக்கு எவ்வளவு செலவு பட்டிருக்கு...? எத்தனை உயிர் இழந்திருக்கு...? எத்தனை அவஸ்தைப்பட்டிருக்கு...? அஞ்சு வருஷம்... அஞ்சு வருஷம்... நாடே உருக்குலைஞ்சு போச்சு. கலாசாரமே அழிஞ்சு போச்சு. ஜெர்மனி பண்ண அட்டகாசத்துல ஆஸ்திரியா, பிரான்ஸ், ஹங்கேரி போன்ற இடங்கள் குப்பைமேடா போச்சு. உலகத்தையே ஆளப்போறதுனு நினைச்ச ஜெர்மனி, ரெண்டு துண்டாப் போயிடுத்து. மகா கெட்டிக்காரான்னு நினைச்ச ஜப்பான்காரன் மண்டி போட்டுத் தேம்பித் தேம்பி அழறான்.

நம்ம தேசத்துல இந்த இம்சையெல்லாம் இல்லை. நேத்திக்கு பேப்பர் படிச்சேளா...? ரெண்டு சதவிகிதம்தான் சுதந்திரப் போராட்டத்துல கலந்துண்டா. பாக்கி தொண்ணூத்தெட்டு சதவிகிதம் சாப்பிட்டுத் தூங்கி, மாரியம்மன் கோயில்ல கூழ் ஊத்தி வடை, பாயசத்தோட கல்யாணத்துல சோறு தின்னுண்டு, ஷேக்ஸ்பியரை உரக்கக்

கத்தி மனப்பாடம் பண்ணிண்டு உபயோகமில்லாத வேலை செய்துண்டிருக்கா. இனி, இப்படி உட்கார்ந்து தின்னமுடியாது நீலகண்டன்.

யுத்தத்துக்குப் பிறகு ஐரோப்பா வேகமா மாறுது. டிரான்ஸ்போர்ட் பெருசாகப்போறது. வாகனங்கள் அதிகமாகப் போறது. எல்லா ஊருக்கும், எல்லா இடத்துக் கும் போகறதுக்கு உண்டான சௌகரியம் வரப்போறது. சில நாள் இங்கிலாந்துக்குப் போகறதுக்கு கப்பல்ல பயணப் பட வேண்டிய அவசியமெல்லாம் இல்லை. பதிமூணு மணி நேரத்துல போயிடலாம். முப்பத்தாறு மணி நேரத்துல அமெரிக்காவுக்குப் போயிடலாம். இருபது மணி நேரத்துல பிரான்ஸுக்குப் போயிடலாம்.

இந்தியாவுல உட்கார்ந்து புண்ணியமில்லை. உன் குழந்தேளை வெளியூருக்கு அனுப்பு. அங்க படிக்கவை அல்லது இங்க படிச்சு முடிச்ச பிறகு வெளியூருக்குப் போகணும்கற ஆசையை இப்பவே விதைச்சு வெச்சுடு.

எல்லா ஊர்லயும் குறை இருக்குடா. நம்ம ஊர்ல ஜாதிவெறி இருக்கு. கறுப்பன்னா இளக்காரம். ஆனா, அத்தனை கறுப்பனும் கச்சை கட்டிண்டு, அதை எதிர்த்துப் போராடிண்டிருக்கா. நான் மெட்ராஸ் போகலாமா...? போனா, ஜனங்க ஏத்துப்பாளா...? இவளைப் பார்த்துக் கேலி பண்ணுவாளா...? நீ என்ன நினைக்கிறே...?" -குரலில் நடுக்கத்தோடு சுவாமிநாதன் கேட்டான்.

விநாயகர் கோயிலுக்கும் லட்சுமி கோயிலுக்கும் நீல கண்டனோடு போய் வந்தான். மனைவிக்குக் கோயிலைப் பற்றி விளக்கினான்.

சுவாமிநாதன் சென்னைக்குப் போன மாலை மகாத்மா காந்தி சுடப்பட்டார். உலகம் துக்கத்தில் ஆழ்ந்தது.

"காந்தியைக் கொன்னுட்டாளா...? மகாத்மா காந்தி யைக் கொன்னுட்டாளா...? எங்க அப்பாவைக் கொன்னுட்

டாளா...?'' -சதாசிவம் பித்துப் பிடித்தவர் போல் அலறினார்.

"சண்டாளப் பாவிகளா... என்னையும் சுட்டுக் கொன்னுடுங்கடா. உலகத்துல யாரையும் வாழ விடாதீங்கோடா. நல்லவாளே இருக்கப்படாதுடா..." என்று தொடர்ந்து நிலைகொள்ளாமல் தவித்தார்.

"எங்களுக்கு எது சுதந்திரம்... நாங்க கேட்டோமா...? இருந்து, நன்னா ஆண்டு அனுபவிக்க வேண்டியதுதானே... ஏன் எங்களை விட்டுட்டு போனே... ஒரு சித்த புருஷர் ராஜாவா இருந்தார்னு திருத்தொண்டர் புராணத்துல படிச்சுருக்கேன். அந்த மாதிரி, நம்ம தேசத்துக்கு ஒரு ரிஷி ராஜாவா இருப்பார் அப்படினு நினைச்சுண்டிருந்தேன். சுட்டுப் பொசுக்கிட்டாளேடா... இந்தத் தேசத்துக்கு விடிமோட்சமே இல்லையா...? அதான்... கிழக்கு மேற்குனு உனக்குப் பிரிச்சுக் கொடுத்தாச்சே... இன்னும் என்ன சண்டை...? காஷ்மீர் வேணுமா... ஏன், டெல்லி வரைக்கும் எடுத்துக்கோயேன். எல்லாத்தையும் நீயே வெச்சுக் கோயேன். காந்தியைத் திருப்பிக் கொடுத்துடறா..." -சதாசிவம் தொடர்ந்து அலறினார்.

"மாமா, காந்தியைக் கொன்னது முஸ்லிம் இல்லை... இந்து"

"இல்லைடா... இந்துவுமில்லை, முஸ்லிமுமில்லை... கெட்டவா... ராட்சஸா... அவாதான் காந்தியைச் சுட்டுக் கொன்னுருக்கா, உலகம் மேலயும் போகும். கீழேயும் போகும். ராமர் ஒரு தடவை ஜெயிச்சாரோன்னோ... ராவணன் ஒரு தடவை ஜெயிச்சுட்டான். ராமர்தோத்துப் போயிட்டார்..."

என்ன மாமா சொல்றேள்...?"

"அது அவதாரப் பிறவிடா... உங்களுக்குத் தெரியலை. அதுவும் சொல்லலை. தெய்வாம்சம். அதை கடைசி

வரைக்கும் நீங்க ஏத்துக்க மாட்டேள். இருநூறு வருஷம் பொறுத்து, அவர் அவதாரம்னு ஒருத்தன் சொல்வான். அப்போ ஒத்துப்பேள்டா... அப்போவும் அவர் தோத்த கதையை எழுதுவேள்..."

"மாமா என்னமோ உளர்றார்..."

"ஆமாண்டா... நான் உளர்றேன். எனக்குப் பைத்தியம் பிடிச்சுடுத்து. ஊர் முழுக்கத் தண்டோரா போட்டுச் சொல்லிடு. எவ்வளவு பெரிய நஷ்டம்னு இந்தியாவுல இருக்கிற யாருக்கும் தெரியலைடா. சுதந்திரம் வாங்கின ரெண்டாம் வருஷம் ராவணன் ஜெயிச்சுட்டானோன்னோ, இனி இந்தியா பேரவஸ்தை படப்போகறது. காந்தியைக் கொன்னதுனுடைய பலன், நீங்க அனுஅனுவா அனுபவிக்கப்போறேள்.

சத்தியாமாத்தான் இருப்பேன்னு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடந்தவரை பலி கொண்டதுனுடைய பலன், உங்களைச் சுத்தி எப்போ பார்த்தாலும் அசத்தியம்தான் இருக்கும். சொல்லவொண்ணாத பாபங்கள் பெருகும். ஜனங்கள் நாயா, பேயா கஷ்டப்படுவா, தொட்டதுக் கெல்லாம் அடிதடி நடக்கும். இது ஒரு மனுஷன் பண்ண கொலை இல்லைடா. இது ஒரு தலைமுறை பண்ண கொலை.

மதம் பத்திக் கடுகளவும் தெரியாம, கடவுள் பத்தி எந்தக் கவலையும் படாத ராட்சஸர்கள் பண்ண கொலை. எதுக்கு எனக்கு ஊசி போடறே...? நான் இதுவரைக்கும் ஊசியே போட்டுண்டதில்லை. எனக்கு ஊசி போடாதே..." -அவர் கத்தினார். அவர் அமைதியாவதற்கு, மயங்கித் தூங்க வேண்டும் என்பதற்கு ஊசி போட்டார்கள்.

மாயவரம் முனிசிபல் ஆஸ்பத்திரியில் இரும்புக் கட்டிலில் தலைக்குக் கல்போல் ஒரு தலைகாணியை வைத்துக்கொண்டு கட்டைபோல நீட்டிப்படுத்தவர், பிறகு எழுந்திருக்கவே இல்லை. மயங்கிச் சரிகிறபோது. "நான்

போறேன்டா... நானும் காந்தியோட போறேன். அவருக்கு மனுஷாள் வேணமோன்னோ...'' என்று திடமாக, தெளிவாகச் சொல்லிவிட்டு சதாசிவம் தகளத்தில் கலந்து கொண்டார்.

ஊர் அவரைச் சூழ்ந்துகொண்டது. 'இனி, இந்தி அரசியல் என்னாகும்...?' என்று கேட்டது.

''நேரு முன்னால் வந்துடுவார். அவர் குடும்பம் பின்னாடி வரும். ஏற்கனவே குஜராத்திகள் இந்தியா முழுக்கக் கடை பரப்பிண்டிருக்கா. பம்பாயில அகமதாபாத்காராளுக்கு அடியாய செல்வாக்கு. நல்ல கட்டுக் கோப்பு. நான் தனியாளா, ஒரு தமிழன் திண்டாடிண்டிருக்கேன்...''

"பாம்பேல வேற தமிழ் ஆளே இல்லையா...?"

"இருக்கா... கிளார்க்கா, ஆபீஸரா... விட்டாக்க எடுபிடி வேலைக்காராளா, பெயிண்ட்டரா, பிளம்பரா, எலெக்ட்ரீஷியனா இருக்கா. காசு கொண்டுவந்து கொட்டறதுக்கு குஜராத்தியாலும் சிந்தியாலும் தான் முடியறது. தங்கம் மார்வாடிகிட்ட இருக்கு. தெற்கே இருக்கற பணக்காரா யாரும் பம்பாய்க்கு வரலை. இது பெரிய ஆபத்து."

"புரியலையே நீங்க சொல்றது..." -நீலகண்டன் பேச்சுக்குச் சுற்றியுள்ளவர்கள் கேள்வி கேட்டார்கள்.

"காந்தி செத்துட்டா உலகம் நின்னு போயிடுமா...? எல்லாமும் தொடர்ந்து நடக்கும். வடக்கே இருக்கற வாளுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே கங்கை பக்கமெல்லாம் செழிப்பான இடம். உத்தரப் பிரதேசம், பீகாரெல்லாம் கண்ணுக்கு எட்டினவரைக்கும் கோதுமை வயல். எல்லாக்கிராமத்துக்கும் கரண்ட் கொண்டு வரது. தொழில் நடத்தறது, பாதை போடறதுனு வடக்கேதான் எல்லாருடைய சுவனமும் இருக்கும்.

தெற்கே மதராஸ் பட்டினம் வரைக்கும் பேர் சொல்லுவான். அதுக்கப்புறம் வெறுமனே காடுதான் இருக்குள்ளு நினைச்சுண்டிருக்கான். மாயவரம் பத்தி, மாயவரம் தாண்டியிருக்கிற ராமநாதபுரம் பத்தி, அதைத் தாண்டியிருக்கிற கன்யாகுமரி பத்தி யாருக்கும் ஒண்ணும் தெரியலை. யாராவது அடிப்பேன், உதைப்பேன்னு குரல் கொடுத்தாதான் வடக்கே இருக்கிறவன் திரும்பிப் பார்ப்பான். இலைன்னா... சமாதானப்படுத்து, சமாதானப்படுத்துறு ஏமாத்திட்டுப் போயிடுவான்..."

"இங்கேயே சிலபேர் அதுமாதிரி பேச ஆரம்பிச்சுட்டாளே..."

"யாரது...?"

"பெருசா தெரியலை... அங்கங்க முணுமுணுப்பு வந்தக்கிட்டிருக்கு. ஆனா, அவங்க முதல் கோஷமே— பிராமணன் ஒழியணும்கறதுதான்..."

"ஏன் ஒழியணுமாம்...?"

"அவனை முன்னேறவிடாம நாமதான் தடுக்கறமாம்..."

"முன்னேறணும்னு ஆசைப்பட்டவாளை யார் தடுக்க முடியும்...?"

"எதிர்ப்பு ஜாஸ்தி ஆகிண்டிருக்கு..."

"ஆகட்டும்..."

"நீங்க சொல்ற மாதிரி வடக்கேதான் வேலை அதிகமா இருக்கு. தெற்கே வேலைகளே இல்லை. பெரிய தொழிற்சாலையே இல்லை."

"வடக்கே வந்துருங்கோ..."

"இந்தக் காவேரிக்கரையை விட்டுப் போகறதுக்கு மனசு ஒப்பவே இல்லை."

"காவேரி உனக்குச் சொந்தமா...? அது, மைசூர்காரன் போடற பிச்சை. இங்கே தமிழ் வாழ்கன்னா, அவன் கன்னடம் வாழ்கம்பான். சொல்றதோட மட்டுமில்லை... கன்னடம் வாழறதுக்காக காவேரிக்குக் குறுக்கே அணை கட்டிண்டிருக்கான். அந்த அணை கட்டியாச்சுன்னா, காவேரி ஜலம் வராது. மாண்டியா முழுக்க வயலாகப் போறது. தஞ்சாவூருக்கு வறட்சி வரப்போறது..."

"என்ன சார் அடிக்கிற மாதிரி சொல்றேள்...?"

"வடக்கே வந்துருங்கோ சார். இங்கே என்ன இருக்கு...? இருவது வருஷம் கழிச்சு மறுபடியும் மெட்ராஸுக்கு வந்து வீடு வாங்கிண்டு செளக்கியமா இருங்கோ...?"

"இல்லை... உங்க குழந்தைகள் வளைகுடா போகணும். வளைகுடா பூமிலேர்ந்து எண்ணெய் எடுக்கறான். உன் பிள்ளைக்கு ஒரு வயசா...? ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுவதுல அவனை வளைகுடாவுக்கு அனுப்பிடு. கண்மண் தெரியாத காசுன்னா அதுதான். கேரளாக்காரன் இப்பவே இளம்பிட்டான். பாலக்காட்டுக்காராள்ளாம் கல்ஃப், கல்ஃப்புனு சொல்றான்.

"உங்க பிள்ளை என்ன சார் பண்றான்...?"

"கி.ஏ. சார்ட்டாட் அக்கௌண்டண்ட்..." என்றார் நீலகண்டன்.

"நல்ல படிப்பா சார் அது..."

"நிறைய வரவு, நிறைய செலவு... ஒழுங்கு பண்ண ஆள் வேண்டாமா...? ஒழுங்கு பண்ணதைத் தணிக்கை பண்றதுக்கு ஆள் வேண்டாமா...? மகாதேவன் பி.ஏ. படிச்சு முடிச்சுட்டு, அஞ்சு வருஷம் பாம்பேல என் கம்பெனியில இருந்துட்டு, அப்புறம் கல்ஃப் போயிடுவான்..."

"சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட்டுக்கு கல்ஃப்ல என்ன சம்பளம் இருக்கும்...?"

"இருவதாயிரம் ரூபாய்."

மாயவரம் அந்தணர்கள் பிரமித்துப் போய் நின்றார்கள்.

"அங்க செலவும் அதிகம் இருக்குமோ...?"

"இல்லை... தங்கறதுக்கு இடம் ஃப்ரீ, பள்ளிக்கூடத்துக் குழந்தைகளுக்குப் படு சீப்... என்ன, இந்தியாலேர்ந்து காய்கறி வரணும். கொஞ்சம் காஸ்ட்லி மீறிச் செலவு பண்ணாக்கூட ரெண்டாயிரம்தான் செலவாகும். மிச்சம் பதினெட்டாயிரம் இந்தியாவுக்கு அனுப்பலாம்.

"மாமிசம் ஒரு குழி நிலம் வாங்கலாமே மாயவரத்துல..."

மாயவரத்துல எதுக்கு நிலம் வாங்கறது...? அதுவும் வயல்வெளியை வாங்கறது...? மாம்பலத்துல ரயில்வே லைன் தாண்டினதும் மேற்கு மாம்பலம்னு பெருசா ஒரு இடம். ரொம்பப் பிரமாதமா இருக்கு. மழை பெய்ஞ்சா தண்ணி தேங்கறது. மெட்ராஸ்ல மழை பத்துநாள்தானே... மத்த நாளெல்லாம் நல்ல தண்ணி கிடைக்கறது. ரெண்டு கிரவுண்டு பதினெட்டாயிரம் ரூபா. இருவத்தஞ்சு வயசுல போயிட்டு, முப்பத்தஞ்சு வயசுல திரும்பி வந்தா போதும். மேற்கு மாம்பலத்துல பெரிய பங்களா கட்டிக்கலாம்."

"அப்போ கோட்டையில உத்தியோகம்...?"

"தூக்கிக் குப்பையில போடு. டாக்டர், இன்ஜினியர்னு படிச்சா, தனியா பிராக்டீஸ் பண்ணு. கவர்ன்மெண்ட் ஆபீஸுக்குப் போகாதே..."

"ஏன் வேண்டாங்கறேள்...?"

"கவர்மெண்ட்டுக்கு உன்னைப் பிடிக்கலையே... மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம். எங்கே மதிக்கிறானோ, அங்கோ போ..."

"கல்ஃப்ல மதிக்கிறாளா...?"

"ரொம்ப ரொம்ப மதிப்பான்..."

"கல்லீல எந்த இடம்...?"

"குவைத், சவுதி அரேபியா..."

"ஓரே பாலைவனம், ஒட்டகப் பாலுன்னதானே சொல்றா..."

"வாஸ்தவம்... ஆனா, எல்லா வீடும் ஏ.வி. பண்ணித்தான்."

"அப்போ பிழைக்க வெளிதேசம் போயித்தான் ஆகணுமா...? மாயவரத்துலயே கெடைக்காதா...?"

"கெடைக்கும். முன்னேற முடியாது. இதே அழுக்கு வேட்டியும் பரட்டைத்தலையும் செருப்பில்லாத காலும் கடன் வாங்கித் தின்ன வெத்தலைப் பாக்கும் ஓசி ஓசி புகையிலையும் ரெக்காட்ட போடறா... ரெக்காட்ட போடாது ஓட்டல் வாசல்ல நின்னு வந்த கோவிலம் பாட்டுக் கேக்கறதுமா நேரத்தினுடைய அருமை தெரியாமப் போயிடும்.

வெள்ளை வெளேர்னு வேஷ்டி, ஜிப்பா, க்ரோம் வெதர் ஷூ, தங்க ரிஸ்ட்வாட்ச், லைட் மோதிரம், மைனர் செயின் அப்படிங்ற நிறைய விஷயங்கள் இருக்கு."

"நாம மட்டும் போயிட்டு, வீட்டை இங்கே வெச்சுட்டா...?"

"ஆறா. வருஷத்துக்கு ரெண்டு மாசம் லீவு. டிசம்பர்ல வெள்ளைக்காரன் போகணும்பான், நீ தீபாவளிக்குப் போயிடு. அக்டோபர், நவம்பர் தமிழ்நாட்டுக்கு வந்துடு. தூளாரில பொங்கல். அதை வளைகுடாவிலேயே சமைஞ்சு சும்மாயே கொண்டாடிக்கோ, டிசம்பர் கல்லீல் குளுகுளுன்னு இருக்கும். ஏப்ரல், மேதான் வெயில் பின்னும். நீ வர நேரத்துக்குத் தமிழ்நாட்டுல நல்ல மழை. இங்கேயும் குளுகுளுன்னு இருக்கும்.

பொண்டாட்டியோ, மாமனாரோ கேட்டுக்காரனா இருந்தா, விஷயங்கள் வாயில் நிர்வாகம் பண்ணலாம். நீ காசை அனுப்பிண்டே இருக்கலாம். அலுப்பானா பொண்டாட்டிய கட்டிண்டு போயிடு. குழந்தைனா மாமனார்கிட்ட விட்டுடு. நீ காச சம்பாதி மறுபடி தானா வருவா.

நீலகண்டன் மூன்று நாட்கள் இருந்து உபதேசித்தி, பலபேர் விழித்துக் கொண்டார்கள். 'தமிழ் வாழ்க' என்ற கூச்சல் பலமாகப் போது, சரளமான ஆங்கில அறிவோடு வெளிநாடு செல்லத் தயாரானார்கள்.

35

"எங்கப்பா நீலகண்டன் எங்க செத்துப் போனார் தெரியுமா...? ஏரோப்ளேன்ல நடுவானத்துல வண்டன் வோத்து பாம்பே திரும்பி வந்தார். நல்லா தூங்கப் போறேன், என்னைத் தொந்தரவு பண்ணாதிங்கோனு கூட வந்த பி.ஏ. கிட்டேயும் மானேஜர்கிட்டேயும் சொன்னார். எக்ஸிகியூடிவ் இலாஸ்ல பக்கத்து சீட் காலி. நடுவுல இருக்கற கை வெச்சுக்கறதை நிமித்தி வெச்சுட்டு, ரெண்டு சீட்லயும் கருண்டு படுத்துண்டிருந்தார். ஏர்ஹோஸ்டஸ் நடுவுல எழுப்பினா வேண்டாம், தான் தூங்கறேன்'னு தலையைத் தூக்கிச் சொல்லிட்டுப் படுத்தார்.

ஏதாவது சாப்பிடுங்க அப்படின்னு சொல்லியிருக்கா ஏர்ஹோஸ்டஸ். வேணுங்கறதைச் சாப்பிட்டாச்சு. இனிமே தூக்கம்தான். அதுதான் எனக்கு இல்லை அப்படின்னு சிரிச்சண்டே சொல்லி, தலைகாணி கேட்டு வாங்கி தலைக்கு வெச்சண்டு, சௌகரியமா படுத்துத் தூங்கினார். கை நழுவி விழுந்தாப்ல இருக்கவே, ஏர்ஹோஸ்டஸ் போய் மறுபடியும் அவர் கையைச் சரியா வெச்சிருக்கா. மறுபடியும் நழுவி விழுந்திருக்கு.

உடம்பு சில்லுனு இருக்கவே சந்தேகப்பட்டு உள்ளேயே இருக்கற டாக்டரைக் கூட்டி வந்து காண்பிச்சா. பத்து நிமிஷம் இருக்கும் செத்துப்போயின்னு டாக்டர் சொல்லிட்டார். ஒரு வலியில்லை. ஒரு முக்கல் முனகல் இல்லை. ஒரு கெட்ட வாசனை இல்லை. சின்னச் சிரமம்கூட இல்லை. நடுவானத்துல பூ மாதிரி உயிர் பிரிஞ்சுடுத்து."

ஷங்கரிடமும் சுபத்ராவிடமும் சென்னைக்கு காரில் திரும்பி வரும்போது விவரித்துக்கொண்டு வந்தார் மகாதேவன்.

"எனக்குத் தெரிஞ்சு பாம்பேல பத்துப் பதினஞ்சு கம்பெனி லீவு விட்டுட்டா. இவருடைய கம்பெனி ஆறேழு ராப்பகலா தொடர்ந்து வேலை பண்ணித்து. அரசியல் தலைவருக்கு நடந்த மாதிரி பிரமாதமான ஊர்வலம். கடற்கரைகிட்டக்க தகனம். அஸ்தியைக் கொண்டுபோய், இந்தியாவுல இருக்கற அத்தனை ஊர்லேயும் கரைச்சா. மாயவரம் காவேரியில கரைக்கிறபோது ஊர்ஜனம் மொத்தமும் கதறியடுத்து. ஒண்ணா, ரெண்டா... ஆயிரத்து சொச்சம் பசங்க பாம்பேலயும் டெல்லியிலேயும் ரொம்ப நன்னா இருக்கறதுக்கு அப்பாதான் காரணம்.

சாகற வயசில்லை... அம்பத்தஞ்சு வயசுதான். ஆனா, அயராத உழைப்பு. ஓய்வே இல்லாத உழைப்பு. அவர் அளவுக்கு என்னால உயர முடியவில்லை. அவர் அளவுக்கு என்னால உழைக்க முடியலை. ரெண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் முழுக்க முழுக்க கம்பெனியைப் பார்த்துண்டா. தங்களுக்குள்ள சொத்துக்களைப் பிரிச்சுண்டா. எனக்கும் கொடுத்தா. ஆனாலும் அப்பா மாதிரி அவாளால வியபாரம் பண்ண முடியலை. வியாபாரம் எல்லாருக்கும் வராது. வெகு சிலருக்குத்தான் வரும்.

நல்ல கவிஞனாக இருக்கறது எப்படி ஒரு கொடுப்பினையோ, அதே மாதிரி நல்ல வியாபாரியாக இருக்கறதும் ஒரு கொடுப்பினைதான். லட்சம் பேர் கவிதை எழுதினா,

பத்துப்பேர்தான் சுமாரா எழுதுவா. ஒருத்தன் தான் பிரகாசமா இருப்பான். வியாபாரமும் அப்படித்தான். அப்பா லட்சத்துல ஒருத்தர். அவர் மாதிரி வியாபாரம் பண்ண முடியாது.

அப்பா செத்துப்போனபோது, எனக்கு இருபத்துநாலு வயசு. கல்யாணம் ஆயிடுத்து. அப்பா எனக்கா டெல்லியிலேர்ந்து பொண்ணு கொண்டு வந்தார். எங்க அத்தைக்குத் தெரிஞ்ச குடும்பம். நான் பொண் பார்க்கப் போகலை. உமா பாம்பேக்கு வந்தா. உமா மட்டுமே வந்தா- எங்காத்துலயே தங்கி, என்கூட ரெண்டு நாள் பேசிட்டு, நிறைய புடவை, துணிமணி வாங்கிண்டு டெல்லிக்குப் போனா.

உமா இந்தியில கவிதையெல்லாம் எழுதுவா. எங்க கஜல் நடந்தாலும் ஓடிப்போய்க் கேட்பா. உருதுகூடத் தெரியும். அதே நேரத்துல, தியாகராஜர் கிருதி, பிரபந்தம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ்னு பாடுவா. கிட்டத்தட்ட ஆறேழு லாங்வேஜ்ல பாடுவா. டெல்லியில் ஒரு மகிளா மன்றம் ஆரம்பிச்சு, ஒரே ஸ்ருதியில் ஒரே குரல்ல அற்புதமா பாடுவா. காந்தி சமாதி, நேரு சமாதி எல்லாம் இவா போய் க்ரூப்பா பாடிட்டு வந்துடுவா. மெட்ராஸ்லேர்ந்து டெல்லிக்கு பெரிய பாடகிகள் யார் வந்தாலும் உமா ஆத்துலதான் தங்குவா. அந்த வீட்ல இருக்கற பெண்களுக்குச் சங்கீதமும் சமையலும் முக்கியமான விஷயம். ஆண்களுக்குச் சம்பாத்தியமும் தத்துவமும் முக்கியமான விஷயம்.

எங்க அத்திம்பேருக்கு அறுபத்துமூணு வயசு. இன்னும் இருக்கார். டெல்லியில டாப் ரேங்க் ஆபீஸரா இருந்துட்டு ரிட்டயர் ஆனார். 'என் அபிப்ராயம்'னு ஏகப்பட்ட கட்டுரைகள், ஏகப்பட்ட விஷயங்களைப் பத்தி எழுதியிருக்கார். அற்புதமான இங்கிலீஷ். ஆழமான சிந்தனை..." என்று சொன்னார் மகாதேவன்.

"நல்லவேளை, வளைகுடால பெட்ரோலியத்தை பிரிட்டிஷ்காரன் கண்டு பிடிச்சதுனால, நாம பிழைச்சோம்' அப்படின்னா அத்திம்பேர். ஏன் அப்படிச் சொன்னார்னு புரியலை. ஆனா, அவர் ஒரு கட்டுரை எழுதினார். வளைகுடால பெட்ரோல் கிடைச்சதுனால வளைகுடாவில் இருக்கற அந்த இஸ்லாமிய சமூகம் வேற தேசத்துக்குப் படையெடுத்துப் போகலை.

பெட்ரோல்ல ஏகமா காசு வந்து, அந்தக் காசுனால சுகம் வந்து, அந்தச் சுகத்துனால சோம்பல் வந்துடுத்து, சோம்பல்னால வலிமையில்லாத ஒரு அமைப்பா வளைகுடாப் பக்கம் மாறிடுத்து. நானூறு வருஷத்துக்கு முன்னாடி அவன்கிட்ட இருக்கற படையெடுப்பு வலிமை இப்போ அறவே இல்லை அப்படினு சொன்னார்.

பெட்ரோல் கண்டுபிடிச்சா போதுமா...? பெட்ரோலை வெச்சுண்டு என்ன பண்ணணும்னு தெரியணுமே... அது அவனுக்குத் தெரியலை. அது தெரிந்த ஐரோப்பாவும் அமெரிக்காவும் ஜெர்மனியும் மடமடன்னு பெருசா யிடுத்து.

எனக்கு குவைத்துல வேலை, மூணு வாரம் வேலை. ஒரு வாரம் லீவு. ஒண்ணாந்தேதி சம்பளம் கொடுத்து, ஏழாம் தேதி கணக்கு முடிச்சுட்டா... எட்டாம் தேதியிலிருந்து பதினாலாம் தேதிவரைக்கும் ஆபீஸ் போக வேண்டாம். பதினஞ்சாம் தேதி கார்த்தால உள்ளுக்குள் வந்துடணும். சனி, ஞாயிறு பார்க்காம தொடர்ந்து அக்கௌண்ட்ஸை சரிபண்ணி கையில கொடுத்துடணும். மறுபடியும் கடைசி வாரம்தான் வேலை அதிகமாக இருக்கும். மூணாவது வாரம் ஜாலியா உட்கார்ந்துண்டு டேப்ரிக்கார்டர்ல பாட்டுக் கச்சேரி கேட்டுண்டிருப்போம்.

மெட்ராஸ்ல ஒரு மானேஜருக்கு மூவாயிரம் ரூபா சம்பளம். பாம்பேல பத்தாயிரம் ரூபா சம்பளம். அப்போ நான் அங்கே எழுபதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிண் டிருந்தேன். எல்லாப் போக்குவரத்து வசதியும் ஃப்ரீ.

ஷங்கர் டெல்லியிலதான் பிறந்தான். டெல்லியிலதான் வளர்ந்தான். அஞ்சு வயசு மணி பார்க்கத் தெரியாது. ஆனா, மூணு ரிஸ்ட் வாட்ச் அவன்கிட்ட இருந்தது. பாலைவனத்துல எல்லா இடத்துலேயும் வேலை கஷ்ட மில்லை. குவைத்தெல்லாம் ரொம்ப இனிமையான மக்கள் இருக்கற இடம். அவங்க மதத்துல நாம தலையிடறது இல்லை. நம்ம மதத்துல அவங்க தலையிட மாட்டாங்க. வேலையைச் செய்து முடிச்சுடுவாங்கங்கற நம்பிக்கை ஒப்படைச்சுட்டு சுவிட்ஸர்லாந்துல போய் உட்கார்ந்துண் டிருப்பான். பர்மால கல்யாணம். புருஷேல நிச்சயதார்த் தம்னு அலைஞ்சுண்டிப்பான்.

பாலன்ஸ்ஷீட் பார்க்கறதோட சரி. அந்த பாலன்ஷீட் லாபம் காண்பிக்கற வரைக்கும் அவனுக்கு எந்தக் கவலையும் இல்லை. அவன் கம்பெனியை ஒரு ஆறு பேர் நிர்வாகம் பண்ணினோம். ரெண்டு பிரிட்டிஷ்காரன். மூணு இந்தியர்கள். ஒரு பாகிஸ்தானி. நான் அக் கௌண்ட்ஸ் பார்த்துண்டேன். பிரிட்டிஷ்காரன் ரெண்டு பேரும் எண்ணெய்க் கிணறு பார்த்துண்டான். பூமி யிலேர்ந்து பிரிச்சு பெட்ரோல் எடுக்கறதை ஒரு இந்தியன் பார்த்துண்டான். பாகிஸ்தானி பர்சனல் மானேஜர். செம டூம் அது கடுமையான உழைப்புன்னு சொல்ல முடியாட்டாலும், ரொம்ப நேர்மையான உழைப்பு. ஒரு இருபது கையெழுத்துப் போட்டு நானே வவுச்சர் தயார்பண்ணி இருநூறு டாலர், முந்நூறு டாலர்னு எனக்கே ஒதுக்கிக்க முடியும். ஆனா, கண்டுபிடிச்சான்னா தூணு முகத்துல துப்பி வெளியே அனுப்பிடுவான். அப்புறம் குவைத்துல ஒரு இடத்துலயும் வேலை கிடைக்காது. நடுநடுவுல அந்த மாதிரி சோதனையெல்லாம் பண்ணிப் பார்ப்பான். ஒரு சுவர்ல பத்தாயிரம் டாலர் போட்டுக் கொண்டுவந்து டேபிளுக்கு அடியில வெச்சுடுவான். நான் கொண்டுபோய், என் காசு இல்லைனு சொல்லி பிரிட்டிஷ்காரன் டேபிள்ல போட்டுட்டு வந்துடுவேன். மூணு, நாலு தடவை சோதனை பண்ணி, இவன் சரியான

ஆளனு தீர்மானம் பண்ணிட்டா, எது எதுக்கோ என்னென்னமோ பரிசுகள் கிடைக்கும்.

அவனுக்குப் பிறந்தநாள்னா எனக்கு கார். அவனுக்குக் குழந்தை பிறந்ததுன்னா, எனக்கு செயின் அப்படினு ரொம்பப் பிரியமா நடந்துப்பான். என் அண்ணா, தம்பி, என் தங்கை புருஷன் எல்லாருமே வளைகுடாவில வேலைக்கு வந்துட்டாங்க. சவுதி அரேபியாவில செட்டில் ஆயிட்டாங்க. குவைத்ல முன்னமாதிரி வேலை கிடைக்கலை. குவைத்ல வேலை கிடைச்சவன் சீக்கிரம் போவானா..? போகமாட்டான். அதுவும் தவிர, குவைத் சின்ன தேசம்.

அந்த ஷேக்குக்கு உலகம் பூரா வியாபாரக் கிளைகள். அங்கெல்லாமும் கணக்கு சரிபார்க்க அனுப்பினான். நீ மட்டும் தனியா போகாதே.. உன் பொண்டாட்டியையும் கூட்டிண்டு போன்னு செலவுக்குப் பணம் கொடுத்தான். நான் கால் பதிக்காத தேசமே இல்லை. ஒரு சம்மர் லீவுக்குக் குழந்தேகளோட நான் ஆஸ்திரியா போய், மூணு வாரம் தங்கிட்டு வந்தேன். உமா, அங்க மூணு மேடையில பாட்டுப் பாடினா. மூணு இடத்துலயும் லெச்சர் கொடுத்தா. மியூஸிக் பத்தி இவ்வளவு தெரியறதுன்னு பாராட்டு. நான் ஒண்ணுமே இல்லை. ரொம்ப சோட்டா. என்னைவிடப் பெரிய ஆளெல்லாம் அங்க இருக்கா அப்படின்னு இந்தியாவைப் பத்தி ஒரு பெரிய மதிப்பை ஆஸ்திரியாவில ஏற்படுத்திட்டு வந்தோம். கிடார், சாக்ஸபோன், பியானோ, ஆர்கன் இதெல்லாம் வெச்சு 'முதாகராத்த மோதஹம்' பாடினோம். பாடினதை ரிக்கார்ட் பண்ணினோம். இண்டியன் மியூஸிக், இண்டியன் மியூஸிக்னு அந்த கிராமபோன் பிளேட் அற்புதமா வித்துது.

ஐரோப்பாவில பாடறவாளுக்கு மதிப்பு அதிகமி வில்லை. கம்போஸருக்குத்தான் மதிப்பு. அதை கம்போஸ் பண்ணவன் பெரிய சினிமா டைரக்டர் ஆயிட்டான்.

கோடி கோடியா சம்பாதிச்சான். அதுக்குக் காரணம் முதாகராத்த மோதஹம்... அப்படிங்கற விநாயகர் பாட்டுன்னு சொல்லி ஒவ்வொரு புத்தாண்டுக்கும் பரிசு அனுப்புவான். வாழ்த்து அனுப்புவான்.

என் வாழ்க்கையில் துக்கம்னா ஒண்ணே ஒண்ணு.. அது எங்கப்பா போனது. ஒரு வார்த்தைகூடச் சொல்லாமப் போனது. யார்கிட்டேயிருந்து எவ்வளவு காசு வரணும்னு எங்களுக்குத் தெரியவே இல்லை. எது எங்க சொத்துனு புரியறதுக்கே எங்களுக்கு ஆறு மாசமாச்சு" மகாதேவனுக்கு குரல் கரகரத்தது. ஷங்கரும் சுபத்ராவும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்க, அவர் தொடர்ந்தார்.

"ஒரு வயித்தெரிச்சலைச் சொல்லட்டுமா..? கடற்கரைப் பக்கத்துல நிலமும் பங்களாவும் வாங்கிப் போட்டிருக்கார் அப்பா. யார்கிட்டேயும் சொல்லலை. அந்தப் பத்திரத்தை அந்த பங்களாக்குள்ளேயே பூட்டி வெச்சுருக்கார். அந்த வாட்ச்மேன் மூணு வருஷம் பார்த்துட்டு, அந்த பங்களா என்னதுன்னு சொல்லிட்டான். பத்திரம் காணாமப் போச்சுன்னு சொல்லி, இந்தச் சொத்துக்கு வேற யாராவது இருக்காளானு...? நோட்டீஸ் அடிச்சு ஒட்டி, யாரும் இல்லாது போகவே... அவனே அந்த வீட்டை எடுத்துனுட்டான். இது எனக்கு ஏழு வருஷம் கழிச்சுத்தான் தெரியும். அவன் தம்பி, அந்தச் சொத்துல பங்கு கேட்க... அவன் மாட்டேன்னு சொல்ல, அவன் தம்பி எங்களுக்கு எழுதிப் போட்டப்பதான் தெரியும். இந்த மாதிரி எத்தனை சொத்து போயிருக்கோ... எத்தனை காசு போயிருக்கோ... தெரியாது. ஆனாலும், அடுத்த வருஷமே கடல் அந்த வீட்டுக்குள்ளேயே வந்துடுத்து. கடும் மழையில் பங்களா சாய்ஞ்சு உட்கார்ந்துடுத்து. இன்னிக்கும் அந்த வீடு இடிபாட்டோடதான் இருக்கு. யாரும் வாங்கவும் முடியலை. வாங்கினா உருப்படவும் முடியலை.

மெட்ராஸ்ல கோட்டை வேலை. எல்லாரும் பத்து மணிக்குத்தான் போவா... பத்து மணின்னு சொல்லிட்டு பத்தரை மணிக்குத்தானே நுழைவா... குவைத்ல கார்த்தால எட்டு மணிக்கு வேலை. நானும் உமாவும் கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்துடுவோம். பல் தேய்ச்சு கை, கால் சுத்தம் பண்ணிண்டு, ஒரு மணி நேரம் தியானம் பண்ணுவோம். கண் விழிக்கும்போது பரமசுகமா இருக்கும். குளிச்சுட்டு வந்தவுடனே நன்னா பசிக்கும். இட்லியோ, தோசையோ சாப்டுட்டு ஆபீஸ் போய் உட்கார்ந்தா... வீடு, உலகம் எல்லாம் மறந்துவிடும்.

யார் பாக்கி தரணும், எவ்வளவு தரணும், என்ன டிலே, டிலே ஆனதுனால என்ன வட்டி... இப்படினுதான் கணக்குப் போயிண்டிருக்கும். அரைநாள் தாமதிச்சதுனால, ஒரு நாள் வட்டி தரணும்னு நான் சத்தம் போட்டிருக்கேன்.

ஒரு மணிக்கு கார் எடுத்துண்டு வீட்டுக்கு வந்துடுவேன். சாப்பிடுவேன். நாலு மணிவரைக்கும் தூங்குவேன். திருப்பியும் கார் எடுத்துண்டு வர்றது. வந்தா, டி.வி. பார்ப்போம். வெளியே சேர் போட்டு உட்கார்ந்துண்டு இந்தியர்களெல்லாம் பேசிண்டிருப்போம். பத்து மணிக்கு எந்த ராஜா, எந்தப் பட்டணத்துக்குப் போனாலும் நாங்க தூங்கப் போயிடுவோம்.

வெள்ளிக்கிழமை லீவு. அன்னிக்கும் நான் போய் தபால் பார்த்துட்டு வந்துடுவேன். நான் குவைத்ல இருந்த அந்த இருபது வருஷத்துல பாம்பே ரொம்ப பெருசா வளர்ந்துடுத்து. ஏகப்பட்ட டிராஃபிக், ஏகப்பட்ட அடிதடி, ஏகப்பட்ட அண்டர்கிரவுண்ட் ஆட்கள் அப்படினு இருந்தது. நமக்கு பாம்பே சரிப்படாது. குவைத் மாதிரி அமைதியா இருக்கணும்னா, மெட்ராஸ்தான் சரியான இடம்னு சொல்லி, இங்க வந்து நிலம் வாங்கி, ஆறு மாசம் லீவு போட்டு, கே.கே. நகர்ல வீடு கட்டிண்டேன்.

மூணு கிரவுண்ட் வாங்கி, ஒரு கிரவுண்ட் தோட்டத்துக்கு விட்டுட்டு, ரெண்டு கிரவுண்ட்ல வீடு எழுப்பினேன். என் ரெண்டு குழந்தேளும் என்கூடவே இருக்கணும்னு ஆசைப்பட்டேன். வந்தா போனா தங்கணும்னு முதல் மாடியையும் ரெண்டாம் மாடியையும் கட்டிண்டேன். ஏண்டா இவ்வளவு பெருசா கட்டினோம்னு இப்போ பயமா இருக்கு. மெயின்டெய்ன் பண்ண முடியலை. மூணு வருஷத்துக்கு ஒரு தடவை பெயிண்ட் பண்ணாலும் லட்ச ரூபாய் ஆகறது.

சரியா அம்பத்தோரு வயசுல வேலை பண்ணதுபோதும் அப்படினு இங்க வந்துட்டேன். அதுக்கப்புறம் வேலை செய்யலை. நிறைய சம்பாதிச்சு, நிறைய சேமிச்சு, சேமிப்பை அங்கங்க சரியான இடத்துல கொண்டுபோய்க் கொடுத்து, அந்த வட்டியிலதான் குடும்பம் இப்போ ஓடிண்டிருக்கு. எனக்கு எவ்வளவு வட்டி வரும்னு நினைக்கறே...? -சுபத்ராவிடம் கேள்வி கேட்டார்.

சுபத்ரா "தெரியவில்லை..." என்றாள்.

ஷங்கர் குறுக்கிட்டு, "ஒரு லட்சத்து பதினாறாயிரம் ரூபா வட்டி வருது..." என்றான்.

"கிழக்கு தாம்பரத்துல நிலம் வாங்கிப் போட்டிருக்கேன். நான் ஒரு வேலையும் செய்யறதில்லை. வேலை செய்ய முயற்சிக்கறதேயில்லை. கார்த்தால எழுந்துக்கறது, ஜபம் பண்றது, தியானம் பண்றது, டிபன் சாப்பிடறது, அப்புறம் தூங்கறது, தூங்கி எழுந்து 'ஹிண்டு' பேப்பர் படிக்கறது, திரும்ப சாப்பிடறது, சாப்பிட்டுத் தூங்கறது, எழுந்து அப்படியே வாக் போறது. கச்சேரி கேட்கறது, சினிமா பாக்கறது, மறுபடி தூங்கறது... இவ்வளவுதான் என் வாழ்க்கை.

காசுக்குக் குறைவேயில்லை. காசு இல்லையேன்னு நான் அழுததே இல்லை. அயர்ந்ததே இல்லை. இருபத்தஞ்சு வருஷம் உழைச்சது போதும். ஒருத்தருக்கு எப்போ

உழைக்கணும், எப்படி உழைக்கணும்னு தெரியணும். அது தெரிஞ்சா ஜெயிச்சுடலாம்.

நம்ம ஊர்ல நிறையப் பேருக்கு உழைக்கத் தெரியலை. ஒரு ஆம்பளைக்குக் காசு சம்பாதிக்கத் தெரிஞ்சிருக்கணும். எங்க போனா காசு கிடைக்கும், என்ன பண்ணா சம்பாதிக்கலாம்னு தெரிஞ்சு வெச்சுக்கறதுதான் ஆம்பளையோட லட்சணம். இது தெரியாதவன் ஆம்பளையே இல்லைங்கறது என் அபிப்ராயம்.

கொடுத்த காசை எவ்வளவு சிக்கனமா செலவு பண்ணலாம், எதுக்குச் செலவு பண்ணலாம், எதுக்குச் செலவு பண்ணக்கூடாதுனு ஒரு பொம்மனாட்டிக்குத் தெரியணும். இது தெரியாதவ பொம்மனாட்டி இல்லை..." என்றார் மகாதேவன்.

"நாங்க ஜெயிச்சதுக்கு என்ன காரணம்னு நினைக்கறே...?" காரில் இடது பக்கம் உட்கார்ந்திருந்த மகாதேவனின் மனைவி உமா, முன்ஸீட்டில் ஷங்கருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுபத்ராவிடம் கேட்டாள்.

"பெரியவா ஆசீர்வாதம்..."

"சரி இல்லைன்னு சொல்லலை. பெரியவா ஆசீர்வாதம் மட்டும் போதுமா...? யோசனை பண்ணிச் சொல்லு. அவசரப்படாதே..." -உமா அவளை வழிப்படுத்தினாள்.

சுபத்ரா ஒட்டுமொத்தமாக அந்தக் குடும்பத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்.

குவைத்துக்குப் போய் குடிக்கக் கத்துக்கலையே... குவைத்துக்குப் போய் மாமிசம் சாப்பிடக் கத்துக்கலையே குவைத்துக்குப் போய் வேற ஆட்டம் எதுவும் போடலையே மாயவரத்துலேர்ந்து மெட்ராஸ் வந்தபோதும் சரி... மெட்ராஸ்லேர்ந்து பாம்பே போனபோதும் சரி, டெல்லிக்குப் பரவின போதும் சரி... குவைத்துக்குப் போனபோதும் சரி... அவர்கள் வேறு எந்தப் பக்கம்

போகாமல் உறுதியாகத் தங்கள் வாழ்க்கையில், தங்கள் குடும்பக் கௌரவத்தில், தங்கள் பாரம்பரிய விஷயங்களில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.

காசு இருந்தது என்று தலைகீழாக ஆடவில்லை. ஊருக்கு ஒரு பெண் வைத்துக்கொள்ளவில்லை. தங்களை உயர்த்திப் பேசிக்கொள்ளவில்லை. அடக்கமாக இருந்திருக்கிறார்கள். அமைதியாக இருந்திருக்கிறார்கள். ஆரவாரமற்று வாழ்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன...?

பெரியவர்கள் கொடுத்த அறிவுரை.

என்ன அறிவுரை கொடுத்தார்கள்...?

சட்டென்று அவளுக்குத் தியானம் பற்றிய ஞாபகம் வந்தது. திரும்பி மகாதேவனைப் பார்த்துச் சிரித்தாள். அவள் முகத்தில் தோன்றிய பொலிவு அவருக்குப் பிடித்திருந்தது.

"கண்டுபிடிச்சுட்டேன்னு நினைக்கிறேன்..." மகாதேவன் புருவத்தைச் சுருக்கிக்கொண்டு சொன்னார்.

"கண்டுபிடிச்சுட்டேன். ஆனாலும் இன்னும் கொஞ்சம் யோசனை பண்ணிச் சொல்றேன்..." -அவள் மீண்டும் ஒரு ஐந்து நிமிட நேரம் கேட்டு எடுத்துக் கொண்டாள்.

"உங்க பரம்பரையிலேயே எல்லாருடைய வெற்றிக்கு காரணம்- ஒழுக்கம், தியாகம்..." என்று சொல்லி நிறுத்தினாள்.

36

மகாதேவனும் உமாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மகாதேவன் சிறிது நேரம் பொறுத்து, "நீ சொன்னது புரியலையே..." என்று சொன்னார்.

"இல்லை... யார் ஜெயிக்கணும்னாலும் ரெண்டு விஷயம் முக்கியம். ஒண்ணு ஒழுக்கம். இன்னொண்ணு தியாகம். கையில காசு இருக்கு. எது வேணா வாங்கித் திங்கலாம். எப்போ வேணா திங்கலாம். எவ்வளவு நேரம் வேணாலும் தூங்கலாம். எப்படி வேணாலும் அனுபவிக்கலாம் அப்படினு ஒரு வசதி இருந்தபோது, அதையெல்லாம் புறக்கணிப்பது மிகப்பெரிய தியாகம்.

தவறுகள் தித்திக்கிற விஷயங்கள். திமிருக்குத் தீனி போடுகிற விஷயங்கள். ஆனாலும் அவற்றிலிருந்து ஒதுங்கியிருக்க ஒருவருக்கு முடிகிறதென்றால், அவர் அந்தச் சந்தோஷத்தை இழக்கிறார் என்றுதானே அர்த்தம்... அதற்குத் தியாகம் என்றுதானே பொருள்... அப்படித் தியாகம் செய்து, மனதை ஒரு நிலைப்படுத்தி இடது பக்கம், வலது பக்கம் பார்க்காமல், தனக்குக் கிடைத்தது எதுவோ, அதை மட்டும் அனுபவித்துக்கொண்டு, உலகத்தில் எது நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதை மட்டும் ஸ்வீகரித்துக்கொண்டு, மற்றதை ஏறிட்டும் பார்க்காத ஒழுக்கத்துக்குத்தான், உங்கள் வீட்டில் உள்ள அத்தனைப் பேரும் முதலிடம் கொடுத்திருக்கிறதென்றும் நான் புரிந்துகொண்டுவிட்டேன்..." என்றாள் சுபத்ரா.

மகாதேவனின் மனைவி உமா, அவளைப் பார்த்து "வெரிகுட்" என்று சொல்லித் தலையாட்டினாள்.

"என்ன புரிஞ்சுண்டே, சொல்லு..." -மேலும் உற்சாகப் படுத்தினாள்.

சுபத்ரா ஆங்கிலத்தில் தொடர்ந்தாள்.

"ஒழுக்கம் என்பது உங்களுக்கு வரக் காரணம்... இப்போது மாமா சொன்னாரே, அந்த விடியற்காலை எழுதல், யோகப் பயிற்சி, மந்திர ஜபம், தியானம். இங்கிருந்துதான் அவை ஆரம்பிக்கின்றன. எழுந்த பிறகும் தூங்குகிறவனுக்கு உடம்பில் மதமதப்பு ஏற்பட்டு விடுகிறது. அந்த மதமதப்பு, மூளையை மந்தப்படுத்துகிறது. மந்த மூளை

எதிர்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல், தன் விருப்பத்தைப் பற்றியே யோசிக்கிறது. ஆராய்ந்து அலசாமல், ஒருவழியாகவே உலகமாக ஒடுகிறது. எனவே மூளையின் மந்தம்தான் செயல்களின் தவறுக்குக் காரணம்.

மூளை மந்தமில்லாமல் இருக்க, உற்சாகமாக இருக்க, எல்லாப் பக்கமும் உற்றுப் பார்க்க ஒரு வேட்டைநாயைப் போல் விறைப்பாகத் தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று தன்னைத்தானே சோதித்துக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அதற்கு விடியலில் எழுதலும் மந்திர ஜபமும் தியானமும் உதவுகின்றன."

"சபாஷ்... சபாஷ் சுபத்ரா, நான் உன்னைப் பத்தி என்னமோ நினைச்சேன். ரொம்ப அழகாக புரிஞ்சுனுட்டே இன்னும் டீப்பா போகலாம். மந்திர ஜபம்னா, ஏதோவொரு மந்திர ஜபம் அல்ல. காயத்ரி ஜபம். காயத்ரி ஜபம்னா, திரும்ப திரும்ப ஒரே வார்த்தையைச் சொல்றது அல்ல. அதுவொரு சாக்கு. ஒரு பயிற்சிக்கான முறை. அதைச் சொல்லச் சொல்ல, ஆழ்மனதுக்கு மனம் போய் அமர்ந்து கொள்ளுதல் நடக்கிறது. இதை யாரும் சொல்லித் தர்றதே இல்லை.

ஜபம் பண்ணுன்னு சொல்லி விட்டுறா. ஜபம் பண்ணுன்னு சொல்லி விட்டுடத்தான் முடியும். ஜபம் என்ன பண்றது. ஜபம் பண்ணினவனுக்குத்தான் தெரியும். அதை எத்தனை முயற்சி பண்ணாலும் சொல்லமுடிகிறதில்லை. ஆனா, நான் சொல்ல ட்ரை பண்ணிண்டிருக்கேன். யாரும் ஜபம் பண்ணமாட்டேங்கறாளே அப்படினு ஒரு கவலையில, அதைப் பண்ணனும் சொல்லி வாழும் வகைன்னு ஒரு புத்தகம் எழுதிண்டிருக்கேன்.

எப்போதும் வேலை செய்துகொண்டிருக்கிற மனசுக்கு, ஓய்வுதான் எக்ஸர்சைஸ். அது ஓய்வா ஒரு இடத்துல உட்காரவிடறதுக்குப் பேர்தான் மந்திர ஜபம்.

திரும்பத் திரும்ப மந்திர ஜபம் செய்துகொண்டிருக்கும் போது, அந்த ஜபமும் நகர்ந்துபோய், மனம் ஒன்றுமே செய்யாமல் அமைதியாக இருக்கும். உள்ளே போய் சுருண்டு உட்கார்ந்துக்கும். கிட்டத்தட்ட ஒரு தூக்கம் மாதிரி இந்த தூக்கத்துக்குப் பேர் அறிதுயில். அதாவது, அறிந்தபடியே தூங்குவது.

நாம் தூங்குகிறோம். நம் மனம் அமைதியாக இருக்கிறது. நம் மனம் தூங்குகிறது என்று தெளிவாகத் தெரிந்தே, மனதின் தூக்கத்தை மனதே பார்த்துக் கொண்டிருக்கிறது. மனதின் அமைதியை, மனதே கவனித்துக்கொண்டிருப்பது

"எத்தனை நேரம் தூங்கணும்...?"

"மூணு நிமிஷம் தூங்கினாப் போதும், மனம் ஆழ்ந்து ஒரு அமைதியான, மிகச் சுகமான, மிக சௌந்தரியமான ஒரு இடத்தில் வெறுமே மூன்று நிமிஷம் இருந்தால் போதும். ரொம்பப் பெரிய எனர்ஜி உள்ளே வந்துடும். அஞ்சு நிமிஷம், பத்து நிமிஷம் இருக்கக் கத்துனுட்டோம்னா, நம்மை எந்த விஷயமும் பாதிக்கிறதில்லை.

அப்பாவோட சொத்து நிறைய போச்சு, எங்களுக்குக் கவலையே இல்லை. எங்களுக்குக் கவலையே இல்லை. எங்கண்ணா கொஞ்சம் புலம்பினான்... ஆஹா... அப்பா மாதிரி இருக்க முடியலையேன்னு. அதுவொரு பொய். ஒரு பீத்தல். உண்மையிலேயே அந்தப் பொறுப்புலேர்ந்து கழண்டுண்டு, அதுக்குப் பதிலா வெளியூர்ல வேலைக்குப் போனதுதான் சரியாச்சு..."

"அந்த சுவாமிநாதனைப் பிராம்மணனா சேர்ந்துண்டாளா...? நீங்க சொல்லவே இல்லையே..." -சுபத்ரா கேட்டாள்.

"இல்லை. சேர்த்துக்கலை. தங்கத்துல பசுமாடு கொடு, மனுஷா உருவம் பண்ணிக்கொடு அப்படின்னா. அவன் போடா, போன்னு சொல்லிட்டுப் போயிட்டான். 'நான்

திரும்பி வரவே இல்லை. நான் அமெரிக்காவிலேயே செத்துப்போறேன், போ அப்படின்னு நகர்ந்துட்டான். கல்கத்தாவுக்குப் போய் மதர் தெரசாவுக்கு ஒரு லட்சம் டாலர் கொடுத்துட்டு, அப்படியே நியூயார்க் போய் செட்டில் ஆயிட்டான். அவன் பரம்பரை இன்னும் இருக்கு. ஒரு பையன், இந்தியப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கான்..."

"சுவாமிநாதன் இருக்காரா...?"

"இல்லை- போன வருஷம்தான் செத்துப்போனார். 'ஒரு தமிழனின் உலகப்போர் நினைவுகள்'னு எழுத ஆரம்பிச்சான். அவனுக்குத் தமிழ் மறந்துபோச்சு. சரியா வரலை. அறுபது பக்கம் எழுதிட்டு, அப்படியே நிறுத்திட்டான். அந்த அறுபது பக்கமும் காணாமப் போயிடுத்து-"

"அடடா..." -சுபத்ரா வருத்தப்பட்டாள். அந்த வருத்தத்தை உமா குறித்துக் கொண்டாள்.

"நீலகண்டனோட அப்பா வைத்தீஸ்வரன் என்ன ஆனார்...?"

"அவருக்கு சர்க்கரை வியாதி. அதுக்குக் காரணம். இந்திய தேசிய காங்கிரஸ். காங்கிரஸைக் கலைச்சுடுன்னு சொன்னா, கலைக்கலை... இந்த காங்கிரஸ் பேயாட்டம் ஆடிண்டிருக்கு அப்படிங்கற வருத்தம் அவருக்கு நோயைக் கொண்டு வந்து கொடுத்தது. அப்போ காங்கிரஸ் படு தோல்வியா, மெட்ராஸ்ல திராவிட முன்னேற்றக் கழகத்து கிட்ட தோத்துப் போனபோது இடிஞ்சே போயிட்டார்.

காந்தி, நேரு எல்லாரும் கேலியா போயிட்டாளே அப்படின்னு வருத்தப்பட்டார். கால்ல அடிபட்டு ரத்தம் வந்து, அந்தப் புண் ஆறாம கணுக்கால் வரைக்கும் வெட்டி, பிறகு முழங்கால் வரைக்கும் வெட்டி, நல்ல ஜ்வரம் வந்து, மகாத்மா காந்திக்கு ஜேன்னு கத்திண்டே செத்துப் போனார்..."

"அவருக்கு நீங்க சொல்ற ஜபம் ஏன் கை கொடுக்கலை...?"

"ஜபம் பண்ணலை... மயிலாப்பூர்ல உட்கார்ந்துண்டு அரட்டையும் பேச்சுமாகத்தான் போச்சே தவிர, ரேடியோ நியூஸ் கேக்கறதே தவிர, ஜபம் பண்ற தன்மை அவருக்கு வரலை. மயிலாப்பூர்ல அவருக்குச் சேர்ந்த க்ரூப் அப்படியிருந்தது. எங்க பாட்டி கத்துவா. அவ பேர் சொன்னேனே, ஞாபகம் இருக்கா...? வாலாம்பா... அஞ்சரை மணிக்கு காபி குடிக்கறதுக்காகவே வந்து, என்ன நியூஸ்...? அப்படின்னு கேட்பார். ஒரு அரட்டைக் கும்பல் அவரைச் சுத்தி இருந்தது.

மெட்ராஸ்ல சொந்த வீடு நிறைய இங்கிலீஷ் கையில காக. மல்லாக்க உட்கார்ந்துனுட்டார். அப்பா நீலகண்டன் மட்டும் தலைதூக்கிக் கொடிகட்டிப் பறக்கலைன்னா நாங்க இன்னும் கீழேதான் இருந்திருப்போம். நடுவில அப்பா சக்குனு ஒரு உயரத்துக்கு தூக்கிண்டு போயிட்டார். அந்த உயரத்துக்கு எங்களால போக முடியாம, நாங்க கொஞ்சம் கீழே விழுந்துட்டோம்...'

"இப்போ ஷங்கர் எப்படி இருக்கணும்னு நீங்க நினைக்கறேள்...?"

"அடியே... என் ராஜாத்தி..." -பாய்ந்து அவள் தலை முடியைக் கொத்தாகப் பிடித்து, மகாதேவன் ஒரு உலுக்கு உலுக்கினார். முகவாய்க்கட்டையை அழுத்திப் பிடித்து விட்டார்.

"அச்சச்சோ... பொம்மனாட்டிக் குழந்தை வெட்கப்படப் போறா..." -மனைவி உமா அவரை மெல்லக் கண்டித்தாள்.

"இல்லை... எனக்கு வெட்கமில்லை. எங்கப்பாகூட... இந்த மாதிரி கழுத்தைப் பிடிச்சு, காதைப் பிடிச்சுத் திருகுவார், தலையைப் பிடிச்சு உலுக்குவார். எனக்கு அப்பா தொடற மாதிரிதான் இருக்கு..." என்று சுபத்ரா சொன்னாள்.

"இதுதான் கேள்வி. இப்போ ஷங்கர் என்ன பண்ணணும்...? எப்படி வாழணும்...?"

"இதை ஷங்கர்கிட்டயே கேட்டுடுவோம். அவனுக்குப் புரியறதான்னு பார்ப்போம்..." என்றார் மகாதேவன்.

"எந்த ஊர் போனாலும் நம்ம வேர் இங்கதான்ப்பா இருக்கு. வேற ஊர்ல போய் சுவாமிநாதன் மாமா செட்டில் ஆகறமாதிரி செட்டில் ஆகமுடியாது. பாவம், உள்ளுக்குள்ளே அவருக்கு ஏக்கம் இருந்திருக்கும். அந்தப் பொண்ணு சமையல் அவருக்குப் பிடிச்சதோ, பிடிக்கலையோ... சாப்பிட வேண்டியிருக்கும். நல்ல மசால்தோசையும், டிகிரி காபியும், புளியஞ்சாதமும் எலுமிச்சம்பழம் சேவையும் கேட்டு நாக்கு ஏங்கியிருக்கும். உள்ளுக்குள்ளே ஒரு ஆசை பொங்கியிருக்கும். பேசியாவது அதைத் தீர்த்துண்டிருப்பார். அல்லது, இங்கே வந்தபோது கேட்டு வாங்கிச் சாப்பிட்டிருப்பார். அல்லது, ஒருவேளை சுத்தமா எல்லாத்தையும் துடைச்சுட்டுத் தள்ளை கியூபென் அமெரிக்கனா பண்ணிண்டிருப்பார். அந்த மாறுதல் ரொம்பப் பெரிய வேதனை.

அப்படி மாறாமல் உள்ளே இந்தியனாவே இருந்துண்டு, வீட்டை இந்தியாவாகவே வெச்சுண்டு, வாழ்க்கையினுடைய இறுதிக் கட்டத்துல இந்தியாவில வந்து இறங்கிடணும்னு தீர்மானம் பண்ணிட்டு, அமெரிக்காவை ஒரு ஹாஸ்டலா, ஒரு ஓட்டலா நினைச்சுண்டு அங்கே கடுமையாக உழைச்சு, காசு பார்த்து இங்கே வந்துடணும்.

உலகம் சுருங்கிடுத்துப்பா. ரெண்டாவது உலகப்போர்ல ஒரு தமிழன் அங்கே இருந்திருக்கான்னு யாருக்குமே தெரியலை. அவன் என்ன அவஸ்தைப்பட்டான்னு இங்கே கேள்வியாகவும் இல்லை. ஆனால், ரெண்டாம் உலகப்போர் பத்திக் கச்சேரி ரோட்ல உட்கார்ந்து, இடைவிடாம ரேடியோவில கேட்டுண்டிருக்கா. ஜெர்மன்

முன்னேறுது. பிரிட்டிஷ் பின்வாங்கறதுனு உட்கார்ந்து பேசிண்டிருக்கா. இப்போ அதைவிடவும் வேகமாயிடுத்து.

மிகப்பெரிய சமாசாரம் இன்டர்நெட். இன்டெர் நெட்டுக்குள்ளே புகுந்தாதான், இனிமேல் மனுஷன் நாகரிகமா இருக்க முடியும். கம்ப்யூட்டர் தெரியலைன்னா வாழ்க்கை முழுசா இருக்காது. முக்காலா, அரையா, அரைக்காலா இருக்கும். மதுராந்தகமோ, மன்னார் குடியோ, தூத்துக்குடியோ, ராமநாதபுரமோ, தொண்டை நாடோ, சோழ தேசமோ, பாண்டியனோ, சேரனோ... நீ யாராக இருந்தாலும் சரி, கம்ப்யூட்டர் தெரிஞ்சாதான் மனுஷன். இல்லைன்னா, வெறும் மக்கடை ஆள். சாணி மிதிக்கிற பொம்பளை. உயிரோட இருக்கியேனுதான் அர்த்தமே தவிர, முழுசா இல்லையேனு ஆயிடும்.

பேப்பர் படிக்கத் தெரியாதவன் போன தலைமுறையில் தவிச்சா மாதிரி. கம்ப்யூட்டர் தெரியாதவன் இந்தத் தலைமுறையில் தவிப்பான். நீ வேலைக்குன்னு வெளியே போகணும்னா, கம்ப்யூட்டரோடு உனக்குச் சங்காத்யம் வேணும். அடேங்கப்பா..என்ன கூத்தெல்லாம் அடிக்கறது அது. ஒரு விஷயத்தைக் கத்து முடிச்சுண்டு வெளியே வர்றதுக்குள்ளே, அது பழசாயிடறது.

அதனால, நீ எப்பவும் கத்துண்டே இருக்கணும். வேலை செய்துண்டே இருக்கணும். வேலைக்குப் படிச்சுண்டே இருக்கணும். எப்பவும், விழிப்பா இருக்கணும். விழிப்பா இருக்கணும்னா, சித்த முன்னாடி இவ சொன்னாளே... ஒழுக்கமா இருக்கதுனு, அது ரொம்ப முக்கியம். ஒழுக்கமா இல்லைன்னா, விழிப்பா இருக்க முடியாது. தூக்கமாகத் தான் இருக்க முடியும்.

சாயந்திரம் ஆச்சுன்னா சாராயம் குடிக்காம கை நடுங்குதுன்னா, முடிஞ்சு போச்சு... செத்துப் போயிட்டான் னனே அர்த்தம். உயிரோட இருக்கணும்னா, குடிக்காம

இருக்கணும். நாளைக்கு என்ன வேணும்கற தெளிவோட இருக்கணும். புரிஞ்சுக்கற அறிவோட இருக்கணும்.

இந்த கம்ப்யூட்டர்லேயும் ஏமாத்து வேலை வந்துடுத்து. ரொம்ப அடிப்படையா கத்துண்டு, கம்ப்யூட்டர் இன்ஜினீ யர்னு பொய் சொல்லிண்டிருக்கான். கம்ப்யூட்டர் இன்ஜினீயர்னா கைதேர்ந்த சிற்பி, பாலம் கட்டற ஆள், கட்டடம் கட்டற மேஸ்திரி, கோயில் கட்டற மன்னன், சுரங்கம் தோண்டுகிற உழைப்பாளி.

கம்ப்யூட்டர் விஷயம் விரிஞ்சுண்டே போகறது. பெருசாயிண்டே போகறது. முடிவே இல்லாம இருக்கு அது. நீ ஜெயிக்கணும்னா, முதல் ஆளா வரணும்னா, உன்னை ரொம்ப முக்கியம்னு உலகம் நினைக்கணும்னா, நீ அஞ்சு வயசுலேர்ந்து உன்னைத் தயார் பண்ணிக்கணும்.

பி.காம். படிக்கற வரைக்கும் ஊர்ல ஓடற அத்தனை சினிமாவும் பார்த்துட்டு, பி.காம். முடிச்ச பிறகு எங்கேயாவது வேலை கிடைக்கும்னு நினைச்சா, நடக்காது. அந்த நாள் முடிஞ்சுபோச்சு, கூப்பிட்டுக் கூப்பிட்டுக் கோட்டையில வேலை கொடுத்த காலம் மலையேறிப் போச்சு.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் யுத்தத்தால ஆட்கள் தேவைப்பட்டது. இந்தியாலேர்ந்து போனா... ஜெயிச்சா. இப்போ, உலகத்துல சாவு விகிதம் கம்மியா இருக்கு. எல்லா இடத்துலயும் மக்கள் தொகை ஜாஸ்தி ஆயிண்டிருக்கு. இந்தியாவிலே இருந்தா, சோத்துக்கடை லெச்சுக்கூட ஜெயிக்க முடியாது. வெளியே போய்த்தான் ஆகணும். வெளியே போகணும்னா, யு.கே.ஜி.லேர்ந்து தன்னை அவன் தயார்ப்படுத்திக்கணும்.

தமிழ் வாழ்க... சரி, ஆனா, இங்கிலீஷ் ஒழிகனு சொன்னா, ஒழிகன்னு சொன்னவன் ஒழிஞ்சான். வாழ்கன்னு சொல்றபோதே, இங்கிலீஷ் ஒழிகனு சொல்ற ஒரு த்வனி அதுல இருக்கு. அது வந்திருக்கக்கூடாது.

இங்கிலீஷ் ஒழிஞ்சாதான் தமிழ் நன்னாயிருக்கும்கறது ஒரு தப்பான கணக்கு.

உலகம் சுருங்கிடுத்து. கம்ப்யூட்டர்தான் உலகத்தினுடைய ஒரு தொடர்பு சாதனமாயிடுத்து. அப்போ கம்ப்யூட்டருடைய லாங்வேஜ் என்ன- அதுதான் உலகத்தினுடைய லாங்வேஜ். உன்னுடைய லாங்வேஜ். இன்னிய தேதிக்கு கம்ப்யூட்டருடைய லாங்வேஜ் இங்கிலீஷ்.

நீ விஞ்ஞானியோ, வியாபாரியோ, ஓவியனோ, சினிமாக்காரனோ, ஆடறவனோ, பாடறவனோ... உனக்கு இங்கிலீஷ் தெரியலைன்னா கம்ப்யூட்டர் தெரியாது. கம்ப்யூட்டர் தெரியலைன்னா வாழ்க்கை தெரியாது. ரொம்பப் பயங்கரமான இடத்துல வந்து நின்னுட்டோம். கொஞ்சம் அசைஞ்சா தட்டிட்டுப் போகறதுக்கு நிறையப் பேர் காத்துண்டிருக்கா.

எனவே, ஒழுக்கம்தான் முக்கியம். ஒழுக்கமும் தியாகமும் சொன்னாளே, அற்புதமான வார்த்தை ஒழுக்கத்தை விவரிச்சுச் சொன்னா. நீங்க சொல்ற மந்திர ஜபம் தியானம், குறைவான சாப்பாடு, குறைவான தூக்கம், குறைவான பேச்சு இதெல்லாம் முக்கியம்.

ஏன் குறைவா சாப்பிடணும்...?

ரொம்பச் சாப்பிட்டா, மூளை மந்திச்சுப் போகும். தூக்கம் வரும். தூக்கம் வந்தா, ஒரு பகல் பொழுதினுடைய முக்கியமான நேரம் வீணாப்போகும். ஒரு முக்கியமான நேரம் வீணாப்போனா, வாழ்க்கையில தோல்வி நிச்சயம்.

ஏன் குறைவா பேசணும்...?

நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளணும்னா, குறைவா பேசினாதான் நல்லது. தேவையே இல்லாம பேசிப் பேசி நேரத்தை வேஸ்ட் பண்றதைவிட, மத்தவா நேரத்தைப் பாழடிக்கறதைவிட, அமைதியா உட்கார்ந்து

நம்ம வேலை என்ன, அடுத்த வேலை என்னன்னு பார்க்கலாம்.

தன்னுடைய வேலை என்ன, தன்னுடைய வேலை என்னன்னு தெளிவாகறதுக்கு, ஒரு பையனுக்கு ரொம்ப ஞானம் வேணும். ரொம்பப் பிடிவாதம் வேணும். ரொம்ப அக்கறை வேணும். எனக்கு ஒரு வாய்ப்பும் கிடைக்கலை அப்படின்னு சொல்றவன் முட்டாள். எங்க வாய்ப்பு இருக்கோ, அங்க போகணும். அவன்தான் புத்திசாலி, அவன்தான் உழைப்பாளி.

எனக்கு அமெரிக்காவில தான் வாய்ப்பு. நான் அங்கதான் போவேன்..." என்றான் ஷங்கர்.

"கல்யாணம் பண்ணிண்டு போகறயா...? போயிட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கப் போறயா...?" -மகாதேவன் கேட்டார்.

"ஒரு வருஷம் ஆகும்பா... ஒரு வருஷம் பேச்சிலரா அங்கிருந்து என்னை முழுக்க அதுல ஈடுபடுத்திக்கறேன். அதே மாதிரி, சுபத்ராவும் தன்னை ஒரு வருஷத்துக்குள்ளே பல்வேறுவிதமா தயார் பண்ணிக்கட்டும். இண்டீரியர் டெகரேஷன், கார் ஓட்டறதுன்னு நிறைய விஷயம் கத்துக்கட்டும். அப்புறம் இங்க வந்து கல்யாணத்தை முடிச்சு, விருந்து சமாசாரங்கள் முடிச்சு, நான் சுபத்ராவைக் கூட்டிண்டு மறுபடியும் அங்க போயிடுவேன். அமெரிக்காவுக்கு நான் ரொம்பத் தேவை, ரொம்ப முக்கியம்கற மாதிரி வளர்வேன்..."

"மாமா..." -சுபத்ரா திரும்பி மகாதேவனைப் பார்த்தாள்.

"காயத்ரி ஜபம் ஷங்கர் மட்டும்தான் பண்ணணுமா...? நானும் பண்ணக்கூடாதா...?"

"ஆஹா தாராளமா பண்ணலாமே. எத்தனையோ விதமான மந்திரங்கள் இருக்கு. மகாகணபதி மந்திரம், பாலா திரிபுரசுந்தரி மந்திரம், பஞ்சதசி, ஷோடசி,

உச்சிஷ்ட மகாகணபதி அப்படின்னு நிறைய மந்திர ஜபங்கள் வரிசையாகவே கத்துக்கலாம். வீட்ல நேரமிருந்தா இடைவிடாம சொல்லலாம். கார் ஓட்டிண்டே சொல்லலாம். கடைக்குப் போகும்போது சொல்லலாம். மனசு குளுமையாக, மென்மையான, தெளிவா இருக்கும். நாம மந்திரஜபம் சொன்னா நன்னா வரலாம்னு சொன்னோம். இந்த மந்திர ஜபம்கிற விஷயத்துக்கு யார் காரணம்னு சொசல்லு..."

"நம்ம பெரியவா காரணம்..."

"கரெக்ட். எங்க வீட்டுக்கு சாம்பசிவ சாஸ்திரிகளும், விஸ்வநாத சாஸ்திரிகளும் காரணம். அதுக்கு முன்னாடி இருக்கற பெரியவா யாருனு நமக்குத் தெரியலை. ஆனா, பரம்பரை பரம்பரையா கொஞ்சம்கூட விடாமல் இந்த ஜபதபங்களை நாம செய்துண்டு வரோம்.

சுபத்ரா, நாளைக்கு உனக்குக் குழந்தை பிறந்தாலும் — அது இங்கிலாந்துல பிறந்தாலும், அமெரிக்காவில் பிறந்தாலும், இந்தியாவில பிறந்தாலும்— அந்தக் குழந்தைக்கு அஞ்சாவது வயசுலேர்ந்து நீ மந்திர ஜபம் கத்துக் கொடுத்துடணும். கத்துக் கொடுக்கிற யோக்கியதை உனக்கு வந்துடணும். இது குலச்சொத்து. இதுதான் அடிப்படை பலம்- இதுதான் அஸ்திவாரம்.

என்னவானாலும் எந்த இடம் வந்தாலும், எந்த மாற்றம் வந்தாலும் மனசுல அதை லயிக்கச் செய்து, அந்த மாற்றத்தை ஏத்துக்கச் செய்து, அந்த மாற்றத்துக்கு நம்மளைத் தகுதியா மாத்தி, அதே நேரம் அடிப்படையான விஷயத்தை இறுக்கி வெச்சுக்கறது இந்த மந்திர ஜபம்தான்.

புரோஹிதரா இருந்தவர் அப்பம், வடை, தயிர்சாதம்னு வித்தார். அந்த விஷயத்தை ரொம்ப சத்தியமா பண்ணார். உண்மையா பண்ணார். நீ செய்யற வேலையை உண்மையா, சத்தியமா, நேர்மையா பண்ணணும். வேலை செய்யறதே ஏமாத்துறதுக்கு— எவனோ காசு கொடுக்கறான்—

நாம வேலை செய்யவேண்டிய அவசியம் என்ன அப்படிங்ற அலட்டல் இல்லாம, வாங்கின காசுக்குத் துரோகம் பண்ணாம இருக்கறதுக்கு ஒரு புத்தி வேணும்னா, இந்த ஜபம் முக்கியம்.

நான் பண்ணின அப்பம், நான் பண்ணின வடை, நான் கலந்த தயிர் சாதம்... சாப்பிடு, சௌக்கியமா இருப்பேன்னு கூடையில போட்டுண்டு வித்திருக்கார். சாப்பிடறவன் நன்னா இருக்கணும்னு வித்திருக்கார். அதுதான் காசு கொண்டுவந்து கொடுத்தது. சாப்பிடறவன் மனசு குளிரணும், வயிறு வலிக்கப்படாதுனு கவலைப் பட்டிருக்கார். அதுதான் அவரை மேல தூக்கி நிறுத்தியது.

டேய்... சொல்லுடா, வாயைத் திறந்து சொல்லு— எப்படி வித்திருப்பா...? ரயில்வே ஸ்டேஷன்ல எப்படி வித்திருப்பா...? சொல்லு..."

"அப்பம்... வடை... தயிர்சாதம்..." -மகாதேவன் கட்டளைக்குக் கீழ்ப்பட்டு ஷங்கர் நீட்டி முழக்கி, சுமோவில் கூவினான். சுபத்ராவும் அதை வாங்கி எதிரொலித்தாள். திரும்பி மகாதேவனைப் பார்த்தாள்.

அவள் கண்களில் நீர் கட்டிக் கொண்டிருந்தது.

"ஏன்... ஏன் அழறே சுபத்ரா...?"

"எனக்கு நாளைக்குக் குழந்தை பிறந்தா, அவனுக்கும் நீங்க சொல்லிக் கொடுக்கணும் மாமா..."

"எது... காயத்ரி ஜபமா...?"

"ரெண்டும்..."

"என்னது ரெண்டும்...?"

"காயத்ரி ஜபமும் சொல்லித் தரணும்... அப்பம், வடை, தயிர்சாதம்னு அவன் தோள்ல கூடையை வெச்சுண்டு கூவிப் போகவும் சொல்லத் தரணும்..."

சட்டென்று சுபத்ரா முகத்தைக் கையால் பொத்திக் கொண்டு விசும்பத் துவங்கினாள். அந்த அழுகையில் நன்றி பொங்கிற்று.

அந்த வீடு அமைதியாக இருந்தது. தெளிவாக இருந்தது. மலர்வாக இருந்தது. தங்களுடைய முன்னோர்கள் மீது பிரியத்தோடு இருந்தது. தன்னுடைய அடுத்த தலைமுறையை ஆவலோடு எதிர்பார்த்தது. அவர்கள் எப்போதும் ஜெயிக்கிற குடும்பம் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டு பயணப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

24 AUG 2011

(முற்றும்)

CPL 565142

P-368
5/2/09

CHEMARA PUBLIC LIBRARY
5 - FEB 2011